
# வரலாற்றில் வல்வெட்டித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில்

# வல்வெட்டித்துறை

பா. மீனாட்சிசுந்தரம்

வெளியீடு
அரும்பொருள் காப்பகம்,
வல்வெட்டித்துறை,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | வரலாற்றில் வல்வெட்டித்துறை |
| ஆசிரியர்கள் | - | பா. மீனாட்சிசுந்தரம் |
| பின்னிணைப்பு | - | என். சிவரட்ணம் |
| பதிப்புரிமை | - | அரும்பொருள் காப்பகம், வல்வெட்டித்துறை |
| முதற்பதிப்பு | - | 2006 May |
| வெளியீடு | - | அரும்பொருள் காப்பகம், வல்வெட்டித்துறை |
| பக்கங்கள் | - | 236 + XIII |
| பிரதிகள் | - | 500 |
| அச்சிட்டோர் | - | Smart Printers<br>717, கே.கே.எஸ் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| விலை | - | ரூபா 500.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

வல்வெட்டித்துறை மண்ணின் இருப்பை, அதன் பாரம்பரியம், பண்பாடு, கலை, சமூக ஊடாட்டம் என்பவற்றைக் கட்டிக்காப்பதிலும், எம் மண் தொடர்பான தகவல்கள், கட்டுரைகள், அரும்பொருட்கள் என்பனவற்றைச் சேகரிப்பதிலும், அவற்றை ஒழுங்குபடுத்தி உரியமுறையில் பாதுகாத்து ஆவணப்படுத்துவதையும் அடிப்படை இலட்சியமாகக் கொண்டு தோற்றம் பெற்ற எமது அரும்பொருட் காப்பகம் தனது முதற்பணியாக எமது மண்ணின் மைந்தனும், இத்துறையில் தனது இளமைக்காலம் முதலே தீவிர தேடலில் ஈடுபட்டு வருபவருமான திரு.பா. மீனாட்சிசுந்தரம் அவர்களின் "வரலாற்றில் வல்வெட்டித் துறை" என்ற நூலை வெளியிட்டு வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது.

இந்நூல் ஒரு ஆவணமாகவும் எதிர்காலத்தில் எம்மண் தொடர்பாக எழும் ஆய்வுகளிற்கான தரவாகவும், எதிர்கால சந்ததிக்கு உன்னத தகவலாயும் அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்நூலில் பின்னிணைப்பாக எம்மண்ணின் சமகால நிகழ்வுகளின் தரிசனமாக ஆதிகோவிலடி ஜெயத்தின், பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இது எமது முதற்பிரசவம். இதன்பலம், பலவீனம் யாவற்றையும் மதிப்பிட்டு எங்கள் பணி தொடர உங்கள் ஆசிகளையும், ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

**மாவீரர் வீதி,**
**முருகையன் கோவிலடி,**
**வல்வெட்டித்துறை.**

**ந.சிவரத்தினம்**
**காப்பாளர்**
**வல்வை அரும்பொருட் காப்பகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்


கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி
பிரம்மஸ்ரீ
ப. மனோகரக் குருக்கள்
பிரதமகுரு
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி
தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை.
☎ 021-2263337

'Kriya Krama Jothy', 'Kriya Kalapa Mukthamani'
BRAHMASRI
P. MANOHARA KURUKKAL
CHIEF PRIEST
VALAMBIGA SAMETHA
VAITHEESWARA SWAMI TEMPLE
VALVEDDITHURAI.


25 - 04 - 2006

# ஆசியுரை



வரலாற்று சிறப்புமிக்க வீரம் செறிந்த வல்வெட்டித்துறையின் பதிவேடுகளை வரலாற்றில் தடம் பதித்த நிகழ்வுகளை எல்லாம் சிறப்பாக தொகுத்து அனைவருக்கும் பயன்படத்தக்க வகையிலும் குறிப்பாக எதிர்கால சந்ததியினருக்குக் கைகொடுக்கத் தக்க வகையிலும் மிகவும் சிறப்புற "வரலாற்றில் வல்வெட்டித்துறை" எனும் நூல் வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

அந்த வகையில் இந்நூல் சிறப்புற அமைவதற்கும், அதனைத் தொகுக்கின்ற அன்பர் சாமாதன நீதவான் பா. மீனாட்சிசுந்தரம் அவர்களின் அரிய முயற்சி சிறப்படையவும் எல்லாம் வல்ல வாலாம்பிகாதேவி பாக வைத்தீஸ்வரநாதரின் தாள் பணிந்து எனது ஆசீர்வாதங் களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரம்மஸ்ரீ. ப. மனோகரக்குருக்கள்
பிரதமகுரு,
சிவன் கோவில், வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# அகில உலக சைவக் குருமார் சம்மேளனம்

(வேதாரணிய குரு பரம்பரை சைவக்குருமார் அர்ச்சகர்களின் நிறுவகம்)

## INTERNATIONAL FEDERATION OF HINDU [SAIVA] PRIESTS

( Institution of Vetharaniya Paramparai Saiva Priests)
[Registered No : HA/4/JA/269]


"ANNAI ILLAM"
Vannichchy Amman Kovilady,
Valvetty, Valvettithurai.

Tel : 021 - 2263185
0602 - 212267

............24...04...2006...

வல்லை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும்
சிவாச்சாரிய பீடாதிபதியுமான சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் ஜே . பி
அவர்களின்

# ஆசிச் செய்தி



ஒவ்வெரு ஊருக்கும் தனித்துவமானதும் சிறப்பானதுமான வரலாறுகள் காணப்படுவது இயல்பானதே ஆனாலும் வல்வெட்டித் துறை என்னும் இந்த ஊருக்கு மிகவும் சிறப்பான மிகவும் வித்தியாச மான வரலாற்றுச் சிறப்புக்கள் இருப்பதை நாம் உணர முடிகிறது.

வல்வைக்கு இரண்டு கண்கள் போல அமைந்திருக்கும் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், ஸ்ரீ வலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர ஆலயம் ஆகிய இரண்டும் வரலாற்று சிறப்பு வாய்ந்தவை. அதிலும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அருள் மழை பொழிந்து கொண்டிருக்கும் அம்பிகை தென்னிந்தியாவிலிருந்து (கோடிக்கரை) வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

இதே போன்று துறைமுக நகராக விளங்கும் வல்வைநகர் கப்பல் கட்டுவதிலும் கடல் வாணிபம் செய்வதிலும் ஈழத்திலேயே சிறப்புப் பெற்று விளங்கியதை அனைவரும் அறிவார்கள். அத்துடன் சமயம் சார்ந்த துறைகளிலும் சிறப்பானவர்களாகவும் விளங்கு கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக உலகத் தமிழ் மக்களின் தலைவனை ஈன்றெடுத்த மண்ணாகவும் இந்த ஊர் விளங்குகிறது. இவையெல்லாம் ஆராய்ந்து வரலாற்று ஆவணமாகக் காப்பதற்கு எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திரு. பா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் வெளியிடும் வரலாற்றில் வல்வெட்டித்துறை என்ற இந்த நூல் உதவும் என்பதில் சந்தேகமில்லை. திரு.பா. மீனாட்சிசுந்தரம் அவர்களின் இந்த முயற்சிக்கு எனது வாழ்த்துக் களையும், பாரட்டுக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

சர்வமங்களாளி பவந்து

"சிவாகம சித்தாந்த ஞானதேசிகபானு", பிரதிஷ்டலங்கார
சித்தாந்த ஸாகரம", "பிரதிஷ்டா சிரோமணி"
**சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்**
பிரதமகுரு, ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



இலங்கைத் திருநாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற ஊர்களிலொன்றாக வல்வெட்டித்துறை விளங்குகின்றது. பழங்காலந்தொட்டே தனக்கென்று ஒரு பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு என்பன வற்றைக் கொண்டுள்ளதாய் இருக்கின்றமையால் இவ்வூர் பல வகைகளிலும் சிறப்புற்று விளங்குகிறது. இவ்வூர் மக்கள் கோயில்களை மிகவும் புனிதமாகவும், தூய்மையாகவும் வைத்திருப்பதோடு, சமயப்பற்றுமிக்கவர்களாகவும் விளங்குகிறார்கள். இதனால் தான் சுத்தானந்த பாரதியார் அவர்கள் இவ்வூரை வல்வெட்டித்துறை என்று அழைப்பதோடு "சிவபுரம்" எனவும் அழைக்கவேண்டும் என்று கூறிச் சென்றுள்ளார். இவ்வூர் மாலுமிகள் வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிச் சென்றுள்ளார்கள். இவ்வூர் மேத்திரிமார்கள் பாரிய கப்பல்களைக் கட்டி திரைகடல் ஓடி திரவியம் குவிப்பதற்கு வழி சமைத்துள்ளதோடு அப்படித் தேடிக்குவித்த திரவியங்களைக் கொண்டு ஆலயங்கள், கல்லூரிகள், வைத்தியசாலை போன்றவற்றை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். கல்வியிலே சிறந்த பல புலவர்கள், அறிஞர்கள் போன்றோர் வாழ்ந்துள்ளார்கள். வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள்.

இத்துணை பெருமைமிக்க வல்வெட்டித்துறையின் வரலாறு பற்றி என்னுடன் சிதம்பரக் கல்லூரியில் ஒன்றாகக் கல்வி பயின்றவரும் கப்பல் கட்டும் கலையில் கைதேர்ந்த மேத்திரிமார் சந்ததியில் வந்தவருமான திரு. பா. மீனாட்சிசுந்தரம் நூல் ஒன்றினை வெளியிட்டு வைப்பதையிட்டு பாராட்டுவதுடன், மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

நாடென்ற ஒரு பெரிய விருட்சத்தின் மூலவேர் கிராமங்கள், நகரங்கள் என்பனவாகும். இந்தக் கிராமங்கள் அல்லது நகரங்கள் என்பவற்றின் பக்க வேர்களாகத் திகழ்வன அங்கே அமைந்துள்ள ஆலயங்கள், கல்லூரிகள், சனசமூக நிலையங்கள், வைத்தியசாலை போன்றவையாகும். ஒரு பிரதேசத்தின் வளர்ச்சி அப்பிரதேச மக்கள் ஒவ்வொரு துறையிலும் ஈடுபாடு கொண்டு புரிந்துள்ள சாதனைகள் அவர்கள் எத்துணை அனுபவ சாலிகளாகவும், துணிச்சல் மிக்கவர்களாகவும், தியாக உள்ளம் கொண்டவர்களாக வும் விளங்கியுள்ளார்கள் என்பதிலுமேயே தங்கியுள்ளது. அத்துடன் அந்தப் பிரதேசம் பிற்காலத்தில் மேலும் வளர்ச்சியடைய வேண்டுமாயின், அந்தப் பிரதேச மக்கள் அதன் வரலாற்றையும் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் இந்த வரலாற்று நூலில் இவ்வூர் மக்கள் ஒவ்வொரு துறையிலும் ஈடுபாடு கொண்டு புரிந்துள்ள சாதனைகள் இலைமறைகாய் போல் மறைந்து கிடக்கும் பல சிறப்புக்கள் பற்றிய, தகவல்களையும் திரட்டித் தந்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குறிப்பிட்டதுபோல இந்நூல் பல்கலைக்கழக மாணவர்கள், ஆலயங்கள் மற்றும் இதர துறைகள் சம்பந்தமான ஆய்வுக் கட்டுரைகள் தயாரிப்பதற்கு மிகவும் உதவியாக இருக்குமென நம்புவதோடு எமது வருங்கால சந்ததியினர் இதனைப் படித்துத் தமது பிரதேசத்தின் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாப்பதோடு அபிவிருத்திக்கும் பங்காற்றுவார்களெனவும் திடமாக நம்புகிறேன். இவ்விடயத்தில் நூலாசிரியரின் வல்வை சம்பந்தமான ஆழமான ஆய்வுகள் எவராலும் பாரட்டப்பட வேண்டியவை ஆகும்.

இதுபோன்று ஏனைய கிராமங்கள் நகரங்கள் என்பவற்றின் வரலாற்று ரீதியான சம்பவங்கள், காணப்படும் வளங்கள் பற்றிய தகவல்கள் இத்துறையில் ஆர்வமுள்ளவர்களால் வெளிக்கொணரப்பட இயலுமாயின் அப்பிரதேசங்களின் பெருமைகள் கட்டிக் காப்பாற்றப்படுவதோடு அபிவிருத்திப் பாதையிலும் செல்ல வழி திறக்கும் என நம்புகிறேன்.

நண்பன் மீனாட்சிசுந்தரத்தின் பணி மென்மேலும் வளர்வதற்கு எனது நல்லாசிகள்.

**அன்புடன்**
**கந்தையா கணேஷ்**
**யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும்,**
**மாவட்டச் செயலரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



நாடுகள், தேசங்கள் பற்றி மாண் (Macro) நிலையில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு அவை நூல் வடிவமாக உருப்பெற்ற போக்கு, பின் பிரதேச மட்டத்திலும் இன்று நகர, கிராம மட்டங்களிலும் இடம் பெற்று வருகின்றது. நகரம் அல்லது கிராமத்தின் வரலாறு, அதன் பழம் பெருமை, செயற்பாடு, பொருளாதாரம், கலை, கலாச்சாரம் போன்ற இன்னோரன்ன விடயங்களை ஆவணமாகப் பதிவு செய்யும் போக்கு மேற்கு நாடுகளில் மட்டுமன்றி இன்று எமது நாட்டிலும் வளரத் தொடங்கி யுள்ளது என்பதற்கு "வரலாற்றில் வல்வெட்டித்துறை" என்னும் இந்நூல் தக்க சான்றாக உள்ளது.

கடந்த கால நூற்றாண்டு காலத்தில் வட - கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற யுத்தம் காரணமாக பல நகரங்களும், கிராமங்களும் பெரு அழிவுக்குட்பட்டுள்ளன. மக்கள் யாவரும் இடம்பெயர்ந்த நிலையில் காங்கேசன்துறை போன்ற பல நகரங்கள் அழிவுக்குட்பட்டு, மக்களற்ற இடங்களாக விளங்குகின்றன. மேலும் இடம் பெயர்ந்த மக்கள் பலர் தாம் பிறந்த மண்ணை விட்டு, உலகில் பல பகுதிகளுக்குச் சென்று வாழ்கின்றனர். இவ்வாறு தாம் பிறந்து, வாழ்ந்த தமது நகரங்கள், கிராமங்கள் இன்று அழிவுற்றிருக்கும் நிலையில், அவற்றின் வரலாறு, பெருமை, புகழ் ஆகியவற்றைப் பதிவு செய்து வைக்க வேண்டும் என்ற உணர்வு தமிழ் மக்களிடையே தலைதூக்கி நிற்கின்றது. மேலும் தமிழ் மக்கள் தங்களின் ஆதி வரலாற்றைத் தெளிவாகவும், ஒழுங்காகவும் பதிவு செய்யும் வைக்காமையும், தம் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்து வைக்காமையும், அவர்களின் இருப்புக்கு உறுதியான ஆதாரங்கள் இல்லாத நிலையைத் தோற்றுவித்துள்ளது. இதனால் அண்மைக் காலங்களில் எமது வரலாற்றைப் பதிவு செய்து வைக்க வேண்டும் என்ற நோக்கில், பிரதேச, நகர, கிராம மட்டங்களில் அவற்றின் வரலாறு, செயற்பாடுகள் போன்ற பல சிறப்பம்சங்களை உள்ளடக்கிய நூல்கள் வெளிவருகின்றன. இப்பின்னணியில் தான் "வரலாற்றில் வல்வெட்டித்துறை" என்னும் இந்நூலும் தோற்றம் பெற்றிருக்கின்றது.

வல்வெட்டித்துறை அன்று கடல் வாணிபத்திலும் அதனோடு தொடர்புடைய பல செயற்பாடுகளிலும், பொருளாதாரம், கலை, கலாச்சாரத்திலும் சிறந்து விளங்கிய நகரமாகும். வாணிப, துறைமுகச் செயற்பாடுகளினால் பெரும் செல்வம் ஈட்டிப் புகழ் பெற்றிருந்த இந்நகர் யுத்தத்தால் பெரும் பாதிப்புக்குட்பட்டு, படிப்படியாகத் தன் சிறப்பம்சங்களை இழந்து நிற்கின்றது. நகரின் அன்றைய, இன்றைய நிலைகளைக் கண்ணுற்ற ஊர்ப்பெரியோர் தமது நகரின் வரலாற்றையும், பெருமைகளையும் பற்றி எழுத விழைந்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் ஆரம்பத்தில் வல்வெட்டித்துறை நகரின் ஆதி வரலாறும், இதன் பெயர்க் காரணமும் விரிவாகவும், விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. பல பயனுள்ள சரித்திரச் சான்றுகளும், சம்பவங்களும் விளக்கப்பட்டுள்ளன. மேலும் இங்குள்ள அருள்பரப்பும் ஆலயங்கள், கல்வியறிவு ஊட்டிய கல்வி கூடங்கள், வைத்தியசாலைகள், உள்ளூராட்சி சபைகள் பற்றியும், நகரின் ஒரு சில அறிஞர்கள், சாதனையாளர்கள், கல்விமான்கள், பிரமுகர்கள் பற்றியும், தமிழர் அரசியல் குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவாக்கத்தில் வல்வையின் பங்களிப்பு, போராட்ட வரலாற்றில் வல்வையின் மைந்தர்கள் பற்றியும், கடல் வாணிபத்திற்கு ஆதாரமாக விளங்கும் கப்பல்கள், கப்பல் கட்டும் கலை குறிப்பாக அன்னபூரணிக் கப்பல் கட்டல், கடல் ஓடிகள், வல்வைத் துறைமுகம், கடல் வணிகம் பற்றியும் வரலாற்று ரீதியாகப் பல சுவையான சம்பவங்களுடன் விளக்கப் பட்டுள்ளது. மேலும் வல்வை வரலாற்றில் பதியப்பட வேண்டிய முக்கிய சம்பவங்கள், அறிஞர், மகான்களின் விஜயம் ஏனைய அரசியல் வாதிகள், விடுதலைப் போராட்ட வீரர்கள், பிரமுகர்களின் விஜயம், சனசமூக நிலையங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. மேலும் நூலின் பின்னிணைப்பாக "ஆதி கோவிலடி ஜெயம்" என்ற புனைபெயரில் இலங்கை வங்கி, யாழ் மேற்றரக் கிளையின் பிரதான முகாமையாளர் ந. சிவரட்ணம் என்பவரால் எழுதப்பட்டு, பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளும் கடந்தகால, சமகாலப் போராட்டத்துடனும், வல்வெட்டித்துறையுடனும் சம்பந்தப்பட்டவையாக உள்ளன.

வல்வெட்டித்துறை நகரின் பொருளாதாரம், குறிப்பாக துறைமுக கடல், வணிகம், சமயம், கல்வி, சுகாதாரம், அரசியற் பங்களிப்பு போன்ற பல விடயங்களில் பதிவு செய்யப் பட்ட ஆவணமாக "வரலாற்றில் வல்வெட்டித்துறை" என்னும் நூல் விளங்குகின்றது. இது காலத்தின் தேவையாகவும் உள்ளது.

இந்நூலின் உருவாக்கத்திலும் வெளியீட்டிலும் முன்னின்று உழைத்த யாவரும் பாராட்டுக்குரியவர்கள்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**மூத்த புவியியல் பேராசிரியர்,**
**முன்னாள் துணைவேந்தர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

1960 காலப்பகுதியில் கொழும்பில் கடமைபுரிந்து வரும் சமயம் உயர்நீதிமன்ற நீதியரசரும் எனது உறவினருமான திரு.ந.யோகசிகாமணி அவர்களைச் சந்தித்து உரை யாடுவது வழக்கம். ஒரு தடவை அவர் "சுந்தரம் உனது அப்பா கட்டிய பர்வதபத்தினி என்னும் கப்பலைப் பற்றிய விபரம் இந்திய வெளியீடான நூல் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார். நான் உடனேயே கொழும்பு பொதுநூலகத்திற்கு சென்று அந்நூலிலுள்ள விபரங்களைக் குறித்துக் கொண்டேன். கப்பல் பற்றிய விபரங்களையும் எனது ஊரான வல்வெட்டித்துறையைப் பற்றியும் போதிய விபரங்களை சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்ற அவா எனது மனதில் அப்போதே துளிர் விட்டது. போதிய கால அவகாசம் கிடைக்காமையால் எனது இந்த எண்ணம் நிறைவேறவில்லை.

1982ல் வவுனியாவுக்கு மாற்றலாகி வந்தும், நூலகத்துக்கு சென்றும் நண்பர்களிடம் இருந்து சரித்திரநூல்களைப் பெற்றும் ஓரளவு விபரங்களை திரட்டிக்கொண்டதோடு ஊருக்கு வரும் சமயங்களில் எனது தாய்மாமனாரான திரு. செங்கல்வராசா அவர்களிடமும் பழைய சம்பவங்களை திரட்டிக் கொண்டேன். இவ்விபரங்கள் யாவும் ஒரு பதிவேட்டில் குறிப்பிடப்பட் டிருந்தன. 1990ம் வருடம் வவுனியாவில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது எனது இருப்பிடத்திற்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. 3 மாதங்களின் பின்னர் இருப்பிடம் செல்ல அனுமதி கிடைத்த போது அங்கு என்னால் திரட்டி வைக்கப்பட்டிருந்த விபரங்கள் அடங்கிய பதிவேடு கறையான்களால் சேதமாக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

மனதைத் தளரவிடாமல் மீண்டும் விபரங்களை சேகரிக்கத் தொடங்கியதும்1991இல் சேவையில் இருந்து இளைப்பாறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இளைப்பாற்றம் பெற்று வல்வைக்குவந்ததும் போதிய கால அவகாசம் கிடைந்ததோடு போதிய சரித்திரநூல்களை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைத்தது. இதனால் பழையபடி மீண்டும் விபரங்களைப் பெற்றுக் குறித்துக் கொள்ள முடிந்தது. இச்சந்தர்ப்பத்தில் 1996ல் எனது உறவினர் ஒருவர் தனது நண்பர் ஒருவரை அழைத்து வந்து அவருக்குக் கப்பல் பற்றிய விபரங்கள் தேவைப் படுவதாகவும் என்வசமுள்ள ஆவணங்களைத் தந்துதவுமாறும் கேட்டுக் கொண்டார். அதற் கிணங்க என்னால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சகல விபரங்களுமடங்கிய பதிவேடு எனது உறவினரின் நண்பரது கைக்குமாறியது. இதனைப் பார்வையிட்ட அவர் இவற்றை வைத்துக் கொண்டு எத்தனையோ நூல்கள் எழுதலாம் என்று கூறியதோடு எனது பதிவேட்டினை மூன்று நாட்களுக்குள் திருப்பித்தருவதாகவும் வாக்களித்துச் சென்றார். ஆனால் இன்று வரை அந்தப்பதிவேடு என்கைக்கு வந்து சேரவில்லை.

எனது பதிவேடு எனது கைக்குத் திரும்பி வராது என்பதை உணர்ந்து கொண்டதும் மீண்டும் சளைக்காமல் விபரங்களைச் சேகரித்துக் கொண்டேன். இந்த விபரங்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களையும் ஒரு நூலாக வடிவமைக்கவுள்ளேன் என்பதனைத் தெரிந்து கொண்ட எனது நண்பர்கள், உறவினர்கள் என்னை உற்சாகமூட்டியமையும், பல்கலைக் கழக மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகள் தயாரிப்பதற்காக என்னிடம் வந்து விபரங்களைக் கேட்டறிந்தமையும் இந்தநூலினை துரித கதியில் ஆக்கவேண்டுமென்ற அவா என்னுள் ஏற்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணம் இலங்கை வங்கியின் முகாமையாளரும் எனது நண்பருமான திரு. ந.சிவரத்தினம் (ஆதிகோயிலடி ஜெயம்) அவர்கள் நூலினை அச்சிடுவதற்கான செலவினைப் பொருட்படுத்த வேண்டாமெனவும் அதற்கான ஒழுங்குகளை செய்யலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நூலினை மேலோட்டமாகப் பார்த்த திரு.ந.சிவரத்தினம் அவர்கள் தன்வசம் சில முக்கிய நிகழ்வுகளின் குறிப்புக்களும் சில புகைப்படங்களும் உள்ளதாகத் தெரிவித்தார். அவரிடமுள்ள குறிப்புகளை அவரது ஆக்கமாகத் தயாரித்துத்தரும்படி கேட்டுக்கொண்ட தற்கிணங்க அதற்குச் சம்மதம் தெரிவித்து அதனைத் தயாரித்துத் தந்துள்ளார். அவரது இந்த ஆக்கம் இந்நூலின் இறுதியில் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. திரு.ந. சிவரத்தினம் அவர்கள் அமெரிக்காவுக்கு அன்னபூரணிக் கப்பலைக் கொண்டு சென்ற மாலுமிகளில் ஒருவரான திரு.ஐ. இரத்தினசாமி அவர்களைப் பற்றி "ஆழக்கடல் வென்றவர்கள்" என்ற ஒரு நூலை 1995ல் வெளியிட்டதோடு வல்வையின் முக்கிய நிகழ்வுகள் தொடர்பான பல கட்டுரைகளையும் பிரபல பத்திரிகைகளில் வெளியிட்டு வைத்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் இந்த நூலைச் சுவைபடக் கூறியுள்ளேனோ என்ற ஐயப்பாடும் என்னுள் எழுகின்றது. வரலாற்று ஆய்வு நூலில் எதனையும் முடிந்த முடிபாகக் கொள்ள முடியாது என்பதனை வாசகர்கள் அறிவர். காலத்துக்குக் காலம் வெளிவரும் பல புதிய தகவல்களின் பிரகாரம் பலமுடிவுகள் மாற்றப்படவேண்டும். அல்லது மீளாய்வு செய்யப்பட வேண்டும் அல்லது நிராகரிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் தயாரிப்பதற்கு ஏதுவாக ஏற்கனவே கூறப்பட்ட தகவல்களில் சில மீண்டும் மீண்டும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இந்நூல் தொடர்பான கருத்துக்கள், அபிப்பிராயங் கள், மறுதலிப்புகள், குறிப்புரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

வாசகர்களாகிய உங்கள்முன் சமர்ப்பிக்கும் இன்னொரு விண்ணப்பம் யாழ்ப் பாணச் சரித்திரத்தையும், தமிழர்களின் சரித்திரத்தையும் விபரிக்கும் பல பழைய நூல்கள் தற்காலம் கிடைப்பது அரிதாகவுள்ளது. இவற்றுள்:

01. வையாபுரி ஐயரின் - வையா வசனம்
02. முதலியார் செ. இராசநாயகம் எழுதிய - யாழ்ப்பாணச் சரித்திரம்
03. சுவாமி ஞானப்பிரகாசரின் - தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்
04. சுவாமி ஞானப்பிரகாசரின் - தமிழரின் ஆதி இருப்பிடமும் பழம் சீர் திருத்தமும்
05. முத்துராசக்கவிராசரின் - கைலாயமாலை
06. சி. பாலசுப்பிரமணியசர்மா எழுதிய - யாழ்ப்பாண வைபவம்
07. எஸ்.ஜோன் எழுதிய - யாழ்ப்பாணச்சரித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் - யாழ்ப்பாணச் சரித்திரம்

09. முதலியார் சீ. இராநாயகம் எழுதிய - *Ancient Jaffna*

10. *Dr.P.E. Peiris* எழுதிய - *Kingdom of Jaffna pattam*

11. *Simon Casic Chetty* யின் - *On the History of Jaffna from the earliest period to the Dutch conquest*

12. *C. Brito* அவர்களின் - *Yalpana Vaipava Malai or the History of the Kingdom of Jaffna.*

போன்ற நூல்கள் ஒரு சிலவாகும். இந்தப் பழைய நூல்களைத் தேடிக் கண்டு பிடித்து மறுபிரசுரம் செய்ய வேண்டியது சரித்திர ஆர்வலர்களின் கடமையாகும்.

இந்தநூல் தற்போது உங்கள் கைகளில் தவழ்வதற்கு காரணகர்த்தாக்களாகிய பின்வருவோருக்கு எனது நன்றிகள் பலப்பல.

இதனை ஆக்குவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எனது நண்பர்கள் உறவினர்களுக்கும், இதனை வெளியிடுவதற்கான செலவினங்களைப் பெற்றுக் கொள் வதற்கு ஒழுங்குகளை மேற்கொண்ட நண்பர் ந. சிவரத்தினம் அவர்களுக்கும், இதனை அச்சிடுவதற்காக கையெழுத்துப் பிரதியை யாழ்ப்பாணம் அச்சகத்தாரிடம் கையளித்து புரூப் பார்ப்பதற்காக வல்வைக்கு அனுப்பிவைத்த எனது வவுனியா நண்பரும் தற்காலம் இலங்கை வங்கியில் கடமை பார்க்கும் திரு. எஸ். நடராஜா மற்றும் திரு. தி. தங்கத்துரை ஆகி யோருக்கும், புரூப் பார்த்துத் திருத்தங்கள் செய்துதந்த எனது மருமகனும் கிராம சேவை யாளருமாகிய திரு. இ. யோகச்சந்திரன் மற்றும் நண்பர் கு. அப்பாத்துரை அவர்களுக்கும் ஆசியுரை வழங்கிய பிரம்மஸ்ரீ.ப.மனோகரக்குருக்கள், சிவஸ்ரீ.சோ. தண்டபாணிகதேசிகர் ஆகியோருக்கும், அணிந்துரை வழங்கிய திரு.க.கணேஷ் (மாவட்ட செயலர்), பொ.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர்) ஆகியோருக்கும், அட்டைப் படத்தினை வடிவமைத்து உதவிய ஓவியர் ரமணி அவர்களுக்கும், மற்றும் இந்நூலினை அழகுற அச்சிட்டுத் தந்த Smart Printers ஸ்தாபனத்தினருக்கும் எனது நன்றிகள் பல.

**பா. மீனாட்சிசுந்தரம்**

**சிவன்கோவிலடி,**
**வல்வெட்டித்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வல்வெட்டித்துறை | 01 - 06 |
| 2. | வல்வெட்டித்துறை பெயர் எவ்வாறு ஏற்பட்டது | 07 - 12 |
| 3. | அருள்பரப்பும் ஆலயங்கள் | 13 - 82 |
| 4. | கல்வியறிவு ஊட்டிய கல்விக் கூடங்கள் | 83 - 90 |
| 5. | வைத்திய வசதிகளும் வைத்தியசாலையும் | 91 - 93 |
| 6. | உள்ளூராட்சி சபை | 94 - 97 |
| 7. | வல்வை மண் பெற்றெடுத்து மறைந்து விட்ட ஒருசில அறிஞர்கள், சாதனையாளர்கள், கல்விமான்கள் பிரமுகர்கள். | 98 - 119 |
| 8. | தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியதில் வல்வையரின் பங்களிப்பு | 120 - 124 |
| 9. | போரட்ட வரலாற்றில் வல்வையின் மைந்தர்கள் | 125 - 129 |
| 10. | கப்பல் கட்டும் கலை | 130 - 137 |
| 11. | கடல் ஓடிகள் (மாலுமிகள்) | 138 - 150 |
| 12. | வல்வைத் துறைமுகம் | 151 - 160 |
| 13. | கடல் வணிகம் | 161 - 164 |
| 14. | வரலாற்றில் பதியப்படவேண்டிய முக்கிய சம்பவங்கள் | 165 - 176 |
| 15. | அறிஞர்கள் மகான்களின் வல்வை விஜயம் | 177 - 178 |
| 16. | அரசியல்வாதிகள் இதர பிரமுகர்களின் விஜயம் | 179 - 181 |
| 17. | வல்வையில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம் | 182 |
| 18. | சனசமூக சேவா நிலையங்கள் | 183 - 187 |
| 19. | பேச்சு வழக்கில் கையாண்ட சொற்கள் | 188 - 191 |
| 20. | கட்டிட முறைமையும் வீடுகளின் அமைப்பும் | 192 - 193 |
| 21. | பின்னிணைப்புகள் | |
| | ஆழக்கடல் வென்றவர்கள் | 195 - 205 |
| | ஆன்மீகப் பணியில் வல்வைச்சிவன் ஆலய திருக்கல்யாண மண்டபம் | 206 - 209 |
| | “கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்” எம்மவரால் 1859ல் ஸ்தாபிக்கப்பட்ட வரலாறு | 210 - 212 |
| | 30 வருடங்களாக ஓடிக்கொண்டு இருக்கிறேன். | 213 - 217 |
| | அமெரிக்காவுக்கு “மைலாய்” இந்தியாவுக்கு “வல்வை” | 218 - 224 |
| | வல்வை மண் மீண்டும் எழும்! | 225 - 230 |
| | தாய்நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த நீச்சல்வீரன் நவரத்தினசாமி | 231 - 233 |
| | உசாத்துணை நூல்கள் | 234 - 235 |
| | பின்னுரை | 236 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை

தற்காலம் ஸ்ரீலங்கா என அழைக்கப்படும் இலங்கைத் தீவானது ஈழநாடு, இலங்காபுரி, இரத்தினதுவீபம், சிங்களதுவீபம், தப்ரபேன், சிலோன், சைலான், செரண்டிப், லங்கா எனப் பல பெயர்களாலும் பண்டைக் காலங்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இவ்விலங்கைத் தீவின் வடபால் இந்து சமுத்திரத்தில் தீவின் சிகரமென அழைக்கப்படும் யாழ்ப்பாணம் வீணா கானபுரம், வடவிலங்கை, சிங்கைநாடு அல்லது சிங்கைநகர், மணவை அல்லது மணற்றி, மணிபல்லவம், உத்தரதேசம், தமிழ்ப்பட்டினம், நாகதீபம், நாகநாடு, சம்புத்தீவு, ஈழம் (பண்டைய நாட்களில் வட இலங்கை இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டதாகவும் சில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன) எனப் பல பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடபால் இந்து சமுத்திரத்தின் பாக்குநீரிணையால் அணைக்கப்பட்ட சிறு நகரம் வல்லிபட்டித்துறை, வல்லுவெட்டித்துறை, வல்வெட்டித்துறை யாகும்.

கோவிற் சிறப்பு மடச்சிறப்
போடை குளச் சிறப்புக்
காவிற் சிறப்புப் புராணச்
சிறப்புக் கனிந்தவருட்
பாவிற் சிறப்பு வெண்ணீற்றுச்
சிறப்பிசைப் பண்சிறப்பாற்
பூவிற் சிறப்பு முற்றும் வல்வை
யூரிற் பொலிந்தனவே.

கலைச்செல்வம் வணிகச் செல்வங்
கொடைச் செல்வங் காணிச் செல்வஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலச் செல்வந் தானதருமச் செல்
வங்கல்விச்சாலைச் செல்வங்
குலச் செல்வ மக்கண் மனைச் செல்வஞ்
சீர்ச்செல்வங் கொண்டதபோ
பலச்செல்வமாய் வல்வையூருக்கு
முற்றும் பலித்தனவே.

மருத்துவசாலை தண்ணீர்ப் பந்த
ரானிரை வைப்பு நிரைத்
தருத்திகழ் நீழல் வழியா
வணமன்ன சத்திரநோய்
விருத்தரனாதர் பிணியினர்
சாலைமிகக் குழுமக்
கருத்தொடு கண் புய்க்கலாதுறும்
வல்வைக் கடி நகர்க்கே.

கந்தவனநடு வாம்பருத்
தித்துறை காணுங் கிழக்
கந்தணலர்ப் பொழில் வல்வை
குடக்கிலணி விளைத்துச்
சிந்துவின்றென்கரைப்பாலுற்ற
மூன்று மெய்ச்சீர் பயக்கு
மிந்தவகை நயமேனை யெந்
நாட்டிலி சைத்ததுவே.

நாணாளுஞ் செந்தமிழ் வாணருக்
கேற்பன நல்கியிசை
பூணாவணிந்து சிவபத்தி
யேறிப் பொறை முதல
கோணாதணிந்து தருமமன்
றாகிக்கு லவியிடு
மாணாவு லோபரைக் காணாத
வல்வை வள நகரே.

என உடுப்பிட்டி சிவசம்புப் புலவரவர்கள் பாடியது போன்று பல்வகைச் சிறப்புக் களும் பெற்றுப்பொன்றாப் புகழுடன் பொலிந்து விளங்குகின்றது இவ்வல்லை நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செந்தமிழின் மங்கை சிறந்துகுடி கொண்டு
மகிழ்
வந்தவியாழ்ப் பாணம் வடபுடையில் -
முந்துசிவ
புண்ணியமே யாசாரம் பூண்டு வழிவழியே
மண்ணில் விளங்கும்வளர்சைவ -
நண்ணுகின்ற
வல்வை நகர்................"

என நீர்வேலியைச் சேர்ந்த தமிழ் சமஸ் கிருதப் புலவரும், பாவலரும் நீர்வேலியில் ஓர் ஆரிய திராவிட கிரந்தக் கல்லூரியையும் நிறுவி நடத்தி வந்தவருமான திரு.ச. சிவப்பிர காச பண்டிதர் 1892ம் வருடம் எழுதிய "கலி வெண்பா"வின் முதல் சில அடிகளில் வல் வையின் சிறப்புப் பற்றிக் கூறியுள்ளார்.

"புலிக்கொடியை நடுக்கம்பத்தில் ஏற்றி கப்பலோட்டிய தமிழன் உயர்ந்து வளர்ந்த வல்வெட்டித்துறை" என்று முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் திரு.க.ஜெயக்கொடி அவர் களினால் பாராட்டப்பட்டது இந்த வல்வை நகர்.

பல வழிபாட்டுத்தலங்களையும், பாட சாலைகளையும், படிப்பகங்களையும், கப்பல் கட்டுபவர்களையும், அஞ்சாநெஞ்சம் கொண்ட கப்பல் ஓட்டுனர்களையும் இலங்கைத் தமிழர் களின் விடுதலைப் போருக்குத் தலைமை தாங்கி சாதனை படைத்து உலக வரை படத் தில் வல்வெட்டித்துறை முத்திரை பதிப்ப தற்குக் காரணமாக இருந்த உலகம் போற் றும் உத்தமராம் நம் தேசியத் தலைவரைப் பெற்றெடுத்த பெருமையையும், பல விற்பன் னர்களையும், அறிவாளிகளையும், துணிவு மிக்க ஆற்றல் வாய்ந்தவர்களையும், தொழில் வளத்தால் நுட்பமிகு வரலாற்றையும் கொண் டது இவ்வல்வை நகரமாகும்.

ஆதியில் இவ்வூரில் குடியேறியவர்கள் ஊர் காவலுக்காக இந்தியாவிலிருந்து வர வழைக்கப்பட்ட போர் வீரர்களாவர். இவ்வீரர் கள் கடற்படை, தரைப்படை இரண்டிலும் சேர்ந்திருந்தவர்கள். இராமனாதபுரம் பாஸ்கர சேதுபதி மீதும், பாண்டித்துரைத் தேவர் மீதும் பிரபந்தங்கள் பாடிச் சென்று திரு.ரா.இராக வையங்கார் முதலிய பல வித்துவான்கள் முன்னிலையில் அரங்கேற்றிப் பரிசில் பெற்ற வரும் இளம் பிராயத்திலிருந்தே கவிபாடு வதில் வல்லவராய் விளங்கியவருமான உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் அவர்கள் "வல்வைக் கலித்துறை" என்னும் பெயரில் பாடிய செய்யுட்கள் இவ்வூரவர்களை "ஊர்க் காவலர்" என்று குறிப்பிட்டது கவனிக்கப்படக் கூடியதொன்றாகும். அக்கவி வருமாறு :

கார்க்காமர் கண்டத்து நம்
வயித்தியேசர் கருணையினாற்
றீர்க்காயுளு மிட்ட சித்தியு
மெய்திச் செறிந்தகுள
நீர்க்காலெலா முத்தச் சங்கின
மூர்ந்து நிறைந்த வல்வை
யூர்க்காவலர் வைகிலெங்களுக்கே
பெரிதூதியமே.

இன்னும் சங்கிலி குமாரன் யாழ்ப்பா ணத்தை அரசு செய்துவரும் நாளில், 1619ம் வருடம் இந்தியாவின் தஞ்சாவூர் நாயக்கன் ஒருவன் பறங்கியரை வெற்றி கொள்ளும் நோக்குடன் ஒரு சேனையை அனுப்பி வைக்க அச்சேனை ஒரு குளக்கரையில் பாளையமிட் டிருந்ததென "யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பறங்கியருடைய இரண்டாம் நாள் போரின் போது நெடுந்தீவில் வந்திறங்கிய போர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையுடன் போர்தொடுக்கும் முகமாக வல் வெட்டித்துறையில் பாளையமிட்டிருந்த வேளக்காரப்படையை நல்லூருக்கு அழைப் பித்ததாகவும் இந்த வேளக்காரப்படைக்கு சமரபாகுதேவன் என்பவன் தளபதியாக இருந்துள்ளான் என்பதும் தெரியவருகிறது. கல்லிடைத்தேவன் என்பவனது படையணி பருத்தித்துறையில் பாளையமிட்டிருந்தது. மேலும் கரையாரத்தலைவன் தஞ்சாவூரி லிருந்து ஒரு பலத்த சேனையை இட்டுக் கொண்டு வந்து இராச்சியத்திலெல்லாம் அதிகம் போராடும் குணமுள்ளோரான மீன் பிடிக்காரர் சேரியில் தங்கியிருந்து போர்த்துக் கேயரைத் தாக்கும் நோக்கோடு புறப்பட்டான் என "யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என் னும் நூல் கூறுகிறது. சண்டையிற் கைவந் தோரான "கரையாரைத்" துணைகொண்டு முதலிமார்கள் சங்கிலி மன்னனுடன் போராட சங்கிலியும் தஞ்சாவூர் நாயகனுக்கு ஆளனுப்பி துணைப்படையொன்றை அழைப்பித்து முதலி மார்களுடன் போருக்கெழுந்தான். இப்படை யும் "வருணகுலத்தான்" என்னும் கரையாரத் தலைவன் கீழ்ப் போராடியது என யாழ்ப் பாண வைபவ விமர்சனம் மேலும் தெரிவிக் கிறது.

மேலே குறிப்பிட்ட "கரையார்" எனப்படு வோர் "குருகுலத்தார்" என்னும் பிராமண வர்க்கத்திலிருந்து வந்தவர்களென்றும் சாதி நிர்ணய புராணம் தெரிவிப்பதாகப் பிரபல ஆய்வாளர் திரு. டி. சிவராம் அவர்கள் கூறி யுள்ளதோடு வல்வெட்டித்துறை மக்கள் "கரை யார்" என்னும் வகுப்பைச் சேர்ந்தவர்களென் றும் அவர்களில் கடலோடிகள் என்று ஒரு பிரிவினரும் மற்றையோர் கரையார் என்றும் (இரு பிரிவினரும் கரையோரங்களில் வசிப்ப வர்கள்) இரு பிரிவாக இருக்கிறார்களென்றும் தெரிவித்துள்ளார். மேலும் திருகோணமலை யிலிருந்து வெளிவரும் "சிவநெறி" என்னும் சஞ்சிகை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குருகுல குடும்பத்தார் என அழைக்கப்படு கின்ற சந்ததியினரால் திருகோணமலை மடத் தடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மூல மூர்த்தி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என இவ்வூரவர்களை "குருகுலத்தார்" எனக் குறிப்பிடுகின்றது. மேலும் யாழ்ப்பாண வைபவ கௌமுதி என் னும் நூலை எழுதிய திரு.க.வேலுப்பிள்ளை குருகுலத்தவர் எனப்படுபவர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். யாழ்ப்பாணப் பட்டினத்தில் பறங்கியர் காலந்தொட்டு நிலத் தரசர்களாகவும், அரசாட்சி உத்தியோகங் களிற் பலவற்றை வகிப்போராயுமிருக்கின்ற ஒரு பகுதியினரான இவர்கள் தென் இந்தியா வின் கரைதுறைப் பட்டினங்களினின்று வந்த மையால் "கரையார்" என்னும் பெயரில் சொல்லப்படினும் நுழையர் செம்படவரோடு சமநிலைப்படுத்தி நோக்கப்படக் கூடாத நாட் டாண்மைக்காரராவார். தென் இந்தியாவின் குருகுலத் தலைவர்கள் தமிழரசர் காலத்தி லும் யாழ்ப்பாணச் சேனைக்குப் பலகாலும் உபபலமாய் வந்ததுண்டு. 1619ம் வருடம் தஞ்சாவூர் நாயக்கன் பறங்கியருக்கெதிராய் அனுப்பிய சேனையும் குருகுலத் தலைவ னின் கீழேயே வந்தது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சீவகன் என்னும் அரசன் குருகுலத்தவ னென மதுரைத் தமிழ்ப் பேரகராதியும், சதானிகன் என்னும் அரசன் சைந மத நூல் களிற் கூறப்படும் ஐவகைக் குலங்களில் ஒன்றான குருகுலத்தவனெனவும், இந்தக் குலத்தினில் பிறந்தமையாற்தான் சதானிகன் குருகுலத்தரசனெனவும், இந்தச் சதாநிகன் என்பவனின் மகனான உதயணனென்பவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு குலக்குருசில், குருகுலத்திறை எனப் போற்றப்படுவதாகவும் பழம் பெரும் நூலாகிய "அபிதான சிந்தாமணி" தெரிவிக்கின்றது. மேலே குறிப்பிடப்பட்ட உதயணன் என்பவனே பெருங்கதையின் கதாநாயகன் எனப் பழம்பெரும் நூல்கள் கூறுகின்றன.

வல்வெட்டித்துறைக்கு அயலில் உள்ள சமரபாகுதேவன் குறிச்சி, வென்றிபாகு தேவன் குறிச்சி, கல்லிடைத் தேவன் குறிச்சி என அழைக்கப்படும் பகுதிகள் அந்தந்தக் குறிச்சிகளில் யுத்தவீரர்கள் இந்தியாவிலிருந்து வந்து குடியேறினவர்களென்பதை வலியுறுத்துவதோடு இந்த யுத்தவீரர்களின் தேவை இல்லாது போகவே பணம் படைத்தவர்கள் கப்பல்கள் கட்டுவித்து கப்பல்களிற் சென்று பொருளீட்டத் தொடங்கினார்கள் என்பதையும் தெரிவிக்கின்றது. இதில் கடற்படையிலிருந்தவர்கள் கப்பல் கட்டும் தொழில், கப்பலோட்டும் தொழில் ஆகியவற்றில் ஈடுபட தரைப்படையிலிருந்தோர் வேளாண்மை, வியாபாரம் முதலிய தொழில்களில் ஈடுபடலாயினர்.

1946ம் வருடம் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி வல்வெட்டித்துறையில் 5035 இந்து சமயத்தவர்களும், 85கிறிஸ்தவ சமயத்தவர்களும் இருந்துள்ளார்கள். தொண்டைமானாறு, பொலிகண்டியில் ஒரு பகுதி ஆகியன உள்ளடக்கப்பட்ட பின்னர் 1999ம் வருடம் வல்வை நகராட்சிப் பிரிவில் மதிப்பிடப்பட்ட சனத்தொகை 18000 ஆகும். இலங்கையின் சனத்தொகை வீதத்தில் மட்டக்களப்புக்கு அருகேயுள்ள காத்தான்குடி என்ற பட்டினத்துக்கு அடுத்து இரண்டாவது சனத்தொகை வீதத்தில் கூடிய பட்டினமாக வல்வைப் பட்டினம் விளங்கிய போதும் தற்காலம் இடப்பெயர்வு காரணமாக கணிசமானோர் இடம் பெயர்ந்துள்ளமையால் முன்னர் இருந்த சனத்தொகை வீதம் தற்போது இல்லாதுள்ளது.

ஒரு காலத்தில் மதுரை அரசு நாயக்க மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தபோது அவ்வரசர்களின் யுத்தவீரர்களாக இருந்தவர்கள் "மறவர்" குலத்தவர்கள். இந்த மறவர் குலஷத்திரியர்களிற் பலரை யாழ்ப்பாணத்தரசர்கள் குடும்ப சகிதமாய் அழைத்து வந்து யாழ்ப்பாண நாட்டிற் குடியேற்றினார்கள். இந்த மறவரின் பெயரினாலேயே யாழ்ப்பாணத்தின் சில பாகங்கள் மறவராட்சி என அழைக்கப்பட்டு, மராட்சியெனத் திரிந்து பின்னர் வடமராட்சி, தென்மராட்சியென அழைக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. இந்த வடமராட்சிப் பகுதியிலேயே வல்வெட்டித்துறை இருக்கின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட மன்னர் காலத்திலும் அதற்குப் பின்னரும் வட இலங்கையின் முக்கிய துறைமுகப்பட்டினங்களில் ஒன்றாகவும், தமிழகத்தின் கோடிக் கரைக்கும் வட இலங்கைக்கும் பாலமாகவும் அமைத்து திரைகடல் ஓடித் திரவியம் குவித்த மறவர்கள் வாழும் பூமிதான் வல்வெட்டித்துறையாகும்.

கி.பி 1790ம் வருடம் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பில் யாழ்ப்பாணத்தில் 15,170 வெள்ளாளரும், 3009 கரையாரும், 1667 செட்டிமாரும் இருந்துள்ளதாக Early settlements in Jaffna என்னும் நூல் கூறுகிறது. செட்டிகள் என்போர் தமிழ் வணிகர் என்றும் கடல் வணிகம் என்பது அவர்களின் தனித்திறன் என்றும் கூறுவதோடு யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல முத்துக் குளியல் ஒப்பந்தக்காரரான வைத்திலிங்கச் செட்டியார் என்பவர் இவர்களில் ஒருவர் என்றும் அந்த நூல் தெரிவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. பெரும்பாலான ஆலயங்கள், கல்லூரிகள் என்பன அமைப்பதில் இந்தச் செட்டிகள் என்போர் ஈடுபட்டிருந்ததோடு கடல் வணிகம் நலிவுற்றதோடு இந்த செட்டிகள் என்னும் சாதி வழக்கில் இல்லா தொழிந்தது எனவும் அந்நூல் மேலும் கூறுகிறது.

மேலே குறிப்பிட்ட வைத்திலிங்கச் செட்டியார் என்பவரே வல்வைச் சிவன் கோயில் வசந்த மண்டபத்தைக் கட்டிக் கொடுத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள இதர கோயில்கள், பாடசாலைகள் என்பவற்றை அமைத்துக் கொடுப்பதற்கு வேண்டிய பொருளுதவி களைச் செய்துள்ளதும் தெரியவருகிறது. வல்வைச் சிவன் கோயில் ஸ்தாபகர் வெங் கடாசலபிள்ளை அவர்களும், கடல் வணிக ராகவும், காலனித்துவ அரசு ஒப்பந்ததார ராகவும் இருந்த ஞா.சங்கரப்பிள்ளை அவர் களும் இந்த வைத்திலிங்கச் செட்டியாருடன் இணைந்து கடல் வணிகத்திலும், சங்கு வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

மேலை நாட்டவரின் வருகையின் பின் னர் பெரும்பாலான கரையோரப் பிரதேசங் களின் தமிழ்ப் பெயர்கள் ஆங்கில மொழி யில் வேறு விதமாகப் பெயர்மாற்றம் செய்யப் பட்டன. பருத்தித்துறை என்பது *Point Pedro* எனவும், சிலாபம் *Chillaw* என்றும், நீர் கொழும்பு *Negombo* என்றும், காலி *Galle* என்றும், மட்டக்களப்பு *Batticaloa* என்றும், திருகோணமலை *Trincomalee* என்றும், யாழ்ப்பாணம் *Jaffna* என்றும் பெயர் மாற் றம் பெற்றது. ஆனால் வல்வெட்டித்துறை என் பது அப்படியே ஆங்கிலத்தில் *Valvettiturai* என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை என்ற சொல் இன்றும் வழக் கில் இருந்து வருவதற்கு (உ ம்: இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி என்பன) தமிழ் தலைவர்களால் தடுத்து நிறுத்தப் பட்டது போன்று வல்வெட்டித்துறையும் மேலைத்தேயத்தவருடைய வாயில் நுழைய முடியாமல் இருப்பதற்கு வல்வை முன்னோர் களின் முயற்சி இன்றும் தொடரப்படுகின்றது.

**ஈழநாட்டின் கொடியினை சோமர்வில்லி (Somerville) நகராளுமன்றத்தில் ஏற்றி ஈழத்தமிழர்களின் இதய தாகங்களை உலகிற்கு அறிவித்த சோமர்வில்லி நகரமேயர் பீ. ஜோஜி (P. Georgi) அவர்கட்கும், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் திரு. புறூணி அவர்கட்கும் வல்வெட்டித்துறை நகரசபையின் சார்பில் நன்றி தெரிவிக்கும் பிரேரணையொன்று 18.08.1980ல் நடைபெற்ற மன்றத்தின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.**

**பா. மீனாட்சிசுந்தரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை பெயர் எவ்வாறு ஏற்பட்டது

வல்வை என்றும், வல்வெட்டித்துறை என்றும் தற்காலம் அழைக்கப்பட்டு வரும் இவ்வூர் வல்காவநகர், வல்லுவெட்டித்துறை, வல்லிபட்டித்துறை எனப் பல பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இந்த ஊருக்கு வல்வெட்டித்துறை எனப் பெயர் எவ்வாறு ஏற்பட்டதெனப் பல விதமான காரணங்கள் கூறப்பட்டுள்ளன.

1. வல்லி என்னும் பிரபல கால்நடை வியாபாரி பட்டி அமைத்துக் கால்நடைகளை வைத்திருந்த இடமாதலால் "வல்லிபட்டி" என அழைக்கப்பட்டு துறைமுகம் ஏற்பட்ட பின்னர் "வல்லிபட்டித்துறை" என வழங்கி வந்து "வல்லிவெட்டித்துறை" என திரிவுபட்டு தற்காலம் "வல்வெட்டித்துறை" என வழங்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

2. ஆதியில் இவ்வூரில் இருந்த வல்லிச் செடிகளை (வல்லு) வெட்டிக் குடியிருப்புகள் அமைத்த காரணத்தால் வல்லு + வெட்டி = வல்வெட்டி ஆனது எனவும் கூறப்படுகிறது. வல்லிச்செடி என்பது படர்ந்து வளரும் ஒரு கொடியாகும். இந்த வல்வெட்டி என்னும் ஊருக்கு அருகாமையில் இருந்த கடற்றுறை "வல்வெட்டித் துறை" ஆனது என்றும் கூறப்படுகிறது.

3. வேற்று நாடுகளில் இருந்து கப்பல்களில் கொண்டு வரப்படும் "வெல்வெட்" என்னும் துணி இவ்வூரிலுள்ள களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்டு அதன் பின்னர் உரோமாபுரி, எகிப்து, கிரேக்கம் ஆகிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் இப்படியான "வெல்வெட்" டிற்குப் பெயர் போன இடமாகத் திகழ்ந்தமையால் "வெல்வெட்டித்துறை என அழைக்கப்பட்டு நாளடைவில் "வல்வெட்டித்துறை" எனப் பெயர் மாற்றமடைந்ததாகவும் இன்னொரு ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முன்னொரு காலத்தில் வடமராட்சிப் பகுதியில் வென்றிபாகுதேவன்- சேற்கொடி தேவன், வல்லிபாகுதேவன், வதிரிபாகு தேவன் என்னும் குறுநில மன்னர்கள் பரம்பரையைச் சேர்ந்த "வல்லியத்தேவன்" என்பவன் தான் குடியேறிய பகுதிக்குத் தனது பெயரை இட்டு வழங்கலானான். யாழ்பாடி என்ற பாணனுக்கு "மணற்றி" என்ற இடம் வாலசிங்க மகாராசாவினாற் பரிசாக அளிக்கப்பட்டதும் யாழ்பாடி யாழ்ப்பாணத்துக்கு வந்து குடியேற முற்பட்ட போது தான் அழைத்து வந்த ஐந்து வகைத் தேவர் குலத்தவருள் வல்லியத் தேவன் என்பவனை வல்வெட்டித்துறைப் பகுதியில் குடியமர்த்தினான். வல்லியத் தேவனுக்கு அளிக்கப்பட்ட இடமே வல்வெட்டித்துறையாகும். இவ்வல்லியத் தேவனுக்கு ஆடு, மாடுகள் பட்டியாக இருந்ததெனவும், இவ்விடத்தில் படகுகள் கட்டும் துறையும் இருந்தமையாலும் வல்லி + பட்டி + துறை = வல்லிபட்டித்துறை என வழங்கிக் காலப்போக்கில் வல்வெட்டித்துறையாயிற்று என கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் தான் எழுதிய இலங்கை இடப்பெயர் ஆய்வு என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். தென் இந்தியாவில் 'பல்லவர்' ஆட்சி நடைபெற்ற போது அவர்களில் ஒரு பிரிவினரான வல்லவர் என்போர் இங்கு வந்து தாமே வெட்டி உருவாக்கிய துறையே வல்வெட்டித்துறையாயிற்று எனவும்ஆனால் இதற்கான ஆதாரங்கள் இலங்கையிலோ, இந்தியாவிலோ இல்லையெனவும் அவர் தனது நூலில் மேலும் குறிப்பிட்டுள்ளார். வல்லியர் என்பதன் பொருள் மனவலிமையுடையோர், வன்மையுடையோர் என்பதாகும். வல்லியம் என்பது புலி அல்லது இடையரூர் எனப்பொருள்படுவதோடு சோழ மன்னர்களின் இலச்சினை புலியென்பதும் நோக்கற்பாலது. பருத்தித்துறையில் மேலே குறிப்பிடப்பட்ட "வென்றிபாகு தேவன்" என்பவனது பெயரை நினைவூட்டக் கூடிய வகையில் ஒரு குறிச்சி "வென்றிபாகுதேவன் குறிச்சி" எனவும் அழைக்கப்படுகிறது.


தேவன் என்ற பெயர் சேரர், சோழர், பாண்டியர், பல்லவர் எனத் தென் இந்தியாவில் இராச்சியம் செய்த மன்னர்கள் யாவருக்கும் ஒரு பொதுப் பெயராக விளங்கியமை அவ்வரசர்களின் சாசனங்கள் மூலம் தெரியவருவதாகவும் 'நரசிங்க தேவன்" என்பவன் "புறவரி நாயகம்" என்னும் முக்கியமான உத்தியோகத்தை வகிப்பதற்கே அழைத்து வரப்பட்டவனெனவும் இவன் யாழ்ப்பாண ஆரிய மன்னர் அரசியலாரம்பத்தில் கி.பி 13ம் நூற்றாண்டில் வந்து குடியேறினவன் என்றும் "தண்டிகைக் கனகராயன் பள்ளு" என்னும் நூல் குறிப்பிடுகிறது. ஆனால் மேலே குறிப்பிட்ட வல்லியத்தேவன் அதிகாரம் செய்த இடம் "வல்லிபுரம்" என திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் தனது யாழ்ப்பாணச்சரித்திரம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

5. கி.பி. 263 தொடக்கம் 285 வரை தென் பகுதியினை அரசு செய்த வொஹொறக்க திஸ்ஸ (Vohoraka thissa) என்பவனது சகோதரனான அபயநாக (Abayanaga) என்பவன் தனது சகோதரனின் மனைவியுடன் தகாத தொடர்பு வைத்திருந்தமை சகோதரனுக்குத் தெரியவரவே தனது உதவியார்களுடன் வட இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்தை வந்தடைந்ததாக "மகாவம்சம்" கூறுகிறது. பண்டைய யாழ்ப்பாணம் என்னும் ஆங்கில நூலை எழுதிய முதலியார் சீ. இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அபயநாகன் வந்து இறங்கிய இடம் "பல்லதித்த" (Bhalla thiththa) என்றும் அதுவே தற்போதைய வல்வெட்டித்துறை ஆகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். முதலாம் விஜயபாகு மன்னன் (கி.பி 1054 - 1109) யாழ்ப்பாண அரச குமாரியை மணந்ததன் காரணமாக யாழ்ப்பாணத்தில் இரண்டு விகாரை களைக் கட்டுவித்தானென்றும் அதில் ஒன்றான "பல்லத்தக்க" (Bhallathaka) விகாரை கட்டப்பட்டது வல்வெட்டித்துறை யிலாக இருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். "தித்த" என்பது "பாளி" மொழிச் சொல்லெனவும் அதன் பொருள் "துறை" எனவும் கொள்ளப்படும்.

"அபயநாக" மன்னன் "பல்லதித்த" என்ற துறைமுகத்திலிருந்தே தனது கடற் பயணத்தைத் தொடங்கியதாகப் பாளி நூல்களில் அதற்கான சான்றுகளைத் தனது யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலில் எடுத்துக் காட்டும் முதலியார் இராசநாயகம் இக்குறிப்பு வல்வெட்டித் துறைத் துறைமுகத்துக்குரியதாகக் கூறினாலும் கூட "பல்லத்தித்த"வை வல்லிபுரத்துடன் இணைத்துப் பார்ப்பது கூடப் பொருத்தமாகத் தெரிகிறது எனத் திரு.சி.க. சிற்றம்பலம் அவர்கள் தனது "யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு" என்னும் நூலில் குறிப்பிட்டதோடு வல்லிச் செடிகள் காணப்பட்ட இடமாகையால் "வல்லிபுரம்" எனப் பெயர் ஏற்பட்டது எனவும் கூறியுள்ளார். சமீபத்தில் லண்டனிலிருந்து டாக்டர். எஸ். தியாகராஜா என்பவர் 2.11.2003 வீரகேசரி இதழில் எழுதிய கட்டுரையொன்றில் மேலே திரு.சிற்றம்பலம் அவர்கள் குறிப்பிட்டது போல் "பல்ல தித்த' என்ற துறையை வல்லிபுரத்துடன் இணைத்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்பதனைத் தாமும் ஏற்றுக் கொள்வதோடு அன்றைய "பல்லவத் துறை" அல்லது "பல்லதித்த" இன்றைய "பல்லப்பை"யாகும் எனவும் தெரிவித் துள்ளார். இந்தக் கட்டுரையுடன் அவர் வெளியிட்ட கி.மு. 500 - கி.பி. 300 காலப் பகுதிக்கான வரைபடம் வருமாறு :




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரைபடத்தில் அவர் குறிப்பிட்ட "பல்லவத்துறை"யும் வல்லிபுரமும் பருத் தித்துறை நகருக்கு மேற்குப் புறத்தில் காட்டப்பட்டுள்ளதோடு இவையிரண்டும் வியாபாரிமூலை, புலோலி மேற்கு கிராம சேவகர் பிரிவுகளில் அமைந்துள்ளதையும் அறிய முடிகிறது. ஆனால் வல்லிபுரம் பருத்தித்துறைக்கு தென் கிழக்கிலும் வங் களா விரிகுடா கடலுக்கு மேற்குப் பகுதி யிலும் அமைந்துள்ளது. டாக்டர் எஸ். தியாகராஜா குறிப்பிடும் "பல்லப்பை" என்பது புலோலி கிழக்கிற்கும், புலோலி வடகிழக்கிற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்திருப்பதோடு இவ்வூர் கடலுடன் எதுவித தொடர்பும் அற்றதாகவே உள்ளது. இவ்வூருக்குக் கிழக்குப் பகுதியில் அமைந் துள்ள பகுதி முழுவதும் கற்கோவளம் கடலை அண்டிய பகுதியாகவே உள்ள தும் கவனிக்கப்பட வேண்டியதொன்று.

எனவே "பல்லதித்த"வை வல்லிபுரத் துடனும், பல்லப்பையுடனும் இணைத்துப் பார்ப்பது என்பதை சரித்திர ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

6. விசயராசன் வம்சத்திலுள்ள உக்கிர சிங்கன் என்பவன் கி.பி. 794ல் பெரிய சேனையுடன் வந்து இலங்கையின் அரை வாசியைப் பிடித்து தற்காலம் கந்தரோடை என அழைக்கப்படும் கதிரமலையில் இருந்து அரசாண்டு வரும் காலத்தில் சோழ அரசனுடைய புதல்வியாகிய மாரு தப்புரவல்லி என்பவள் கீரிமலைக்கு வந்து தீர்த்தமாட தன் நோய் நீங்கப்பெற்று இருக்கும் பொழுது உக்கிர சிங்கன் அவளுடைய பேரழகைக் கண்டு தனது மனைவியாக்கினான். பின்னர் தனது கதிர மலை இராசதானியை விட்டு "செங்கடக நகரியை" இராசதானியாக்கி ஆண்டு வந் தான் எனவும் இச்செங்கடக நகரி வல் வெட்டித்துறை எனச் சிலர் அபிப்பிராயப் படுகிறார்களெனத் திரு. மு. இளையதம்பி அவர்கள் தான் எழுதிய இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மாருதப்புரவீகவல்லி தனது திருமணத் தின் பின் தலைநகரை மாற்றவேண்டி யதன் அவசியத்தைத் தனது தந்தை யாகிய சோழமகராஜாவுக்கு அறிவித்த போது அந்த யோசனையை அவன் வரவேற்று அதன்பிரகாரம் காவிரிப்பூம் பட்டினத்துக்கு மிக அணித்தாக இலங்கை யின் வடபகுதியில் பருத்தித்துறைக் கடற் கரையில் அமைக்கப்பட்டது தான் இச் செங் கடக நகரம் என "யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்" என்னும் நூலை எழுதிய பண்டிதர் பொ. ஜெகன்னாதன் கூறியதோடு "சிங்கை" நகரென்பது நல்லூரில் அமைக்கப்பட்டதென்றும் கூறு கின்றார். உக்கிரசிங்கன் தனது இராச தானியை செங்கடக நகரிக்கு மாற்றினான் என யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப் பாண வைபவ கௌமுதி ஆகிய இரண்டும் கூறும் அதேவேளை "கதிரமலைக் காவலன் தனது அரசதானியைக் கதிரமலையி லிருந்து "சிங்கை நகருக்கு மாற்றிக் கொண்டான். கடற்கரையிலே அழகுமிக்க துறைமுகமாகவும் கலிங்கர் வாழ்ந்து கொண்டிருந்ததுமான "சிங்கை நகராக"த் துலங்கிய இடமே இன்று வல்லிபுரம் என அழைக்கப்படுகிறது என "சீர்பாதகுல வர லாறு" என்னும் நூல் கூறுகிறது. யாழ்ப் பாண வைபவமாலையில் குறிப்பிடப்பட் டுள்ள "சிங்கை நகர்" என்னும் பெயரினை மயில்வாகனப் புலவரோ அல்லது அவருக்குப்பின் எழுதிய எவரோ ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செங்கடக நகர்" என மாற்றி விட்டனர் என யாழ்ப்பாண வைபவ மாலையின் குறிப் புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு அதனையே வலியுறுத்தி முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "பண்டைய யாழ்ப்பாணம்" "யாழ்ப் பாணச் சரித்திரம்" என்னும் நூல்களிலும் குறிப்பிட்டுள்ளார். ''பொங்கொலி நீர்ச் சிங்கை நகர்"எனக் கேகாலை மாவட்டத்து ''கோட்டகம'' கல்வெட்டின் பொருள் "பொங்கும் கடலலைகள் மோதுகின்ற சிங்கை நகர்" என்றமையால் உக்கிர சிங்கன் மாற்றிய இராசதானி சிங்கை நக ரேயென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கதிரமலையில் வாழ்ந்தோரில் ஒரு பகுதி யினர் தொண்டைமானாற்றைக் கடந்து சிங்கை நகர் என்ற வல்லிபுரப்பகுதியில் ஏற்கனவே குடியிருந்தோருடன் சேர்ந்து கொண்டார்கள் எனவும் சிங்கைநகர் (வல்லிபுரம்) தலைநகராக விளங்கிய போது நல்லூர் பல துறைகளிலும் சிறப்புற் றோங்கி வருவதாயிற்று என "நல்லை நகர் நூல்" குறிப்பிடுகின்றது.

வையாபுரி ஐயரால் இயற்றப்பட்ட "வையா பாடல்" உக்கிரசிங்கன் தனது இராசதானி யை முல்லைத்தீவில் உள்ள "வாவெட்டி யில்'' அமைத்ததாகக் கூறுகின்றது. அதேவேளை யாழ்ப்பாண வைபவமாலை செங்கடக நகரி எனக் குறிப்பிட வையா பாடல் அதனை "வாவெட்டி" என அழைக் கிறது என "யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு" என்னும் நூல் கூறுகிறது.

உக்கிர சிங்கனது மகன் வாலசிங்கனை "கரையோட்டமாக மரக்கலம் போட்டுனைக் காண வந்தால்" எனவும் "அலையடைத்த வெற்புயத் தாதித்தா" எனவும் யாழ்ப்பாடி பாடியுள்ளமையால் செங்கடகநகர் / சிங்கை நகர் கடற்கரையை அண்டியே அமைந்திருந்தது தெளிவாகின்றது.

சிங்கை நகர் நல்லூரில் அமைக்கப் பட்டிருந்ததென யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும் எனனும் நூல் கூறும் அதேவேளை வல்லிபுரம் தவிர்நத இலங் கையின் ஏதாவது ஒரு கடற்கரையில் அமைந்திருந்தாலும் 'பொங் கொலி நீர்ச் சிங்கை நகரென" சாசனத்தில் குறிக்கப் பட்டிருக்கலாம் எனவும் கூறுகின்றது. அதேவேளை வட இலங்கையில் சிங்கை நகர் என்னும் நூல் தமிழரின் ஆரம்பத் தலைநகரான சிங்கை அல்லது சிங்கை நாடு யாழ்ப்பாணத்திற்கு வெளியே வன்னிப் பிராந்தியத்தில் பூநகரியில் இருந் ததெனக் கூற முடியும் எனத் தெரிவிக் கின்றது. உக்கிரசிங்கன் வன்னிப் பிரதே சத்தில் உருவாக்கிக் கொண்ட தலைநகர் சிங்கை நகராகும். தமிழரின் ஆரம்பத் தலைநகரான சிங்கை நகரென்பது யாழ்ப் பாணத்துக்கு வெளியே வன்னிப் பிரதே சத்தில் குறிப்பாகப் பூநகரிப் பகுதியில் இருந்ததெனக் கூறமுடியுமெனவும் வல்லி புரப் பகுதியிலேயும் நல்லூருக்கு அருகில் இருந்தது எனவும் வரலாற்றாசிரியர்கள் கொள்வது ஏற்றதாக இல்லையெனவும் "யாழ்ப்பாண அரசர் பரம்பரை" என்னும் நூல் தெரிவிக்கின்றது. யாழ்ப்பாணக் கடல்நீரேரி அன்று பொங்கு கடலாகவே விளங்கியதென அந்நூல் மேலும் தெரிவிக் கின்றது.

மேலே குறிப்பிட்டவைகளை நோக்கு மிடத்து செங்கடக நகரி, சிங்கைநகர் ஆகிய இரண்டு இராசதானிகளும் யாழ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டுக்கு வெளியே வன்னிப் பெரு நிலப்பரப்பில் இருந்ததெனக் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் யாழ்ப்பாணப் பகுதியில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட இராசதானிகள் அமைந்திருந்ததற்கான பல சான்றுகள் கிடைத்துள்ளமை பற்றிப் பல வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள். அப்படி இராசதானிகள் இருந்துள்ளமை உறுதியானால் செங்கடகநகரி, சிங்கை நகர் இரண்டும் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்திருக்க வேண்டும். அதில் ஒன்றான சிங்கை நகர் இருந்ததென உறுதியாக்கும் பட்சத்தில் செங்கடக நகரி வல்வெட்டித்துறையில் இருந்ததென இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும் என்னும் நூல் கூறுவதை ஓரளவிற்கு ஏற்றுக் கொண்டாக வேண்டும். வல்வெட்டித்துறையிலோ அதற்கு அண்டிய ஒரு பகுதியிலோ ஒரு இராசதானி அமைந்திருந்ததற்கான சான்று திரு.ஆ.முத்துத்தம்பிள்ளை அவர்கள் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலில் குறிப்பிட்ட விபரம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அது வருமாறு :-

“கி.பி 1410ல் குணவீர சிங்கை ஆரியனின் தம்பி அரசனானதும் தென்பகுதி அரசனான அழகேசுவரனுடன் (6ம் பராக்கிரமபாகுவுடைய சேனாதிபதி) போருக்கு அறை கூவி கொழும்பிலும், பாணந்துறையிலும் தனது சேனைகளை இறக்கியதும் அழகேசுவரனுடைய சேனைகளை எதிர்த்துப் போர் புரிய முடியாமையினால் புறமுதுகிட்டு ஓடி வந்து யாழ்ப்பாணத்தை அடைந்து தொண்டைமானாற்றுக்கு அருகிலுள்ள பிலத்துவார மண்டபத்தில் ஒளித்திருந்தான். இப் பிலத்துவார வாயிலிலே ஒரு மண்டபமும் சிறு மாளிகையும் இருந்தன. இதன் உள்வாய் சுண்ணந் தீற்றிச் சித்திரம் எழுதப்பட்டிருந்ததோடு பிற்காலத்தில் அவை சிதைக்கப்பட்டனவாயினும் பிலம் இன்றும் இருக்கின்றது. அது மண்டபம் என்னும் பெயரால் வழங்குகிறது. பிலத்துவாரம் என்பதன் பொருள் நிலவறை அல்லது பாதாள வழி என்பதோடு பிலம் என்பதற்குக் குகை என்றும் பொருளாகும். இந்த நிலவறை அல்லது பாதாளவழி ஒரு நகர் அல்லது இராசதானியின் பாதுகாப்பிற்கு அமைக்கப்பட்டது என்பது உறுதியாகுமாயின் “செங்கடக நகரி” இந்தப் பாதாள வழிக்குச் சமீபமாக வல்வெட்டித்துறையில் அமைந்திருந்தெனக் கொள்ள முடியும். இந்தப் பிலத்துவாரத்துக்குச் சமீபமாக உள்ள தொண்டைமானாறு முன்னர் “வல்லி ஆறு” என அழைக்கப்பட்டதாக தொண்டைமானாறு செல்வச் சந்நிதிக் கந்தன் திருத்தலபுராணம் கூறுவதோடு போராசிரியர்களான ஆ. வேலுப்பிள்ளை, அ.சண்முகதாஸ் ஆகியோரும் குறிப்பிட்டுள்ளார்கள். இப்படி “வல்லி ஆறு” எனப் பெயர் சூட்டப்பட்டதற்கு ஏதோ ஒரு ஆதாரம் இருந்திருக்க வேண்டும். அது அருகாமையில் இருந்த இராசதானியாகிய செங்கடக நகரியின் பட்டத்துராணி மாருதப்பிரவீக வல்லி என்ற பெயரில் உள்ள “வல்லி” என்ற இறுதிப் பதத்தினைக் குறிக்கும் சொல்லுடன் சேர்ந்து “வல்லி ஆறு” எனப் பெயர் பெற்றிருக்கலாம். இது போலவே “வல்லி” என்ற பதத்துடன் “வல்லி + பட்டி” இணைந்து “வல்லி பட்டித்துறை” யாகி இருக்கலாம். மதுரைத் தமிழ்ப் பேரகராதி அபிதான சிந்தாமணி, யாழ்ப்பாண வைபவ கௌமுதி போன்ற நூல்களும், பாண்டிச்சேரியிலிருந்து வெளியாகும் “ வித்தகம்” என்னும் பத்திரிகையும் “வல்லிபட்டித்துறை” என்றே குறிப்பிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் பரப்பும் ஆலயங்கள்

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. ஒரு கிராமத்தின் சிறப்பினை வெளியார்க்கு எடுத்துக் காட்டுவது அக்கிராமத்திலே அமைந்திருக்கும் ஆலயங் களும் ஒன்றாகும். வல்வை மக்கள் தமது ஊரில் மாத்திரமன்றி தாம் வாழ்ந்த இடங்களி லெல்லாம் கோயில்களை எழுப்பி தமது இறைவழிபாட்டினை நடத்தி வந்துள்ளார்கள். இந்த வகையில் 1859ம் வருடம் கொழும்பு செக்கடித் தெருவில் யாழ்ப்பாணத்தார் கதிர்வேலாயுத சுவாமி கோயில் பர்மா தேசத்திலுள்ள ரங்கூன் நகரில் ஒரு முருகன் கோயில் என்பன திரு மேனியார் குழந்தைவேற்பிள்ளை அவர்களாற் கட்டப்பட்டன. கீரிமலையில் அமைந்துள்ள ஆறுமுகன் கோயிலைக் கட்டியவர் கோ.கந்தசாமி என்பவராகும். நாவாய் சாத்திரம் பயின்று பாய்க்கப்பலைக் கட்டிய வடிவேலு மேத்திரியாரால் கீரிமலையில் கட்டப்பட்டது ஸ்ரீகிருஷ்ணன் கோயிலாகும்.

தாம் வாழ்ந்த இடங்களிலெல்லாம் கோயில்கள் கட்டியதோடு நின்றுவிடாமல் அவ்வூரிலுள்ள இதர கோயில்களுக்கு விக்கிரகங்கள் சுவாமிகள் எழுந்தருளும் வாகனங்கள் போன்றவற்றையும் செய்து வழங்கியுள்ளார்கள். இந்த வகையில் செல்வச்சந்நிதி வேலனைத் தேரில் காணவேண்டுமென்ற ஆர்வம் கொண்டு 1925இல் வல்வை ஞா.சண்முகம்பிள்ளை என்பவர் கட்டுத்தேர் ஒன்றை அமைத்துக் கொடுத்ததன் பேரில் செல்வச்சந்நிதியில் தேர்த் திருவிழா நடைபெறத் தொடங்கியது. இதன் பின்னர் வல்வை சின்னத்தங்கம் அவர்களால் அடுத்த தேர் உருவாக்கிக் கொடுக்கப்பட்டது. சந்நிதிக் கந்தனுக்கான சப்பரமும் வல்வை சி. குழந்தைவேற்பிள்ளை அவர்களினால் செய்து கொடுக்கப்பட்டது. திருகோணமலை மடத்தடி ஸ்ரீமுத்தமாரி அம்மன் கோயில் மூலமூர்த்தி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குரு குல குடும்பத்தார் என அழைக்கப்படுகின்ற சந்ததியினரால் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் கொண்டுவரப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது என திருகோணமலையிலிருந்து வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும் சிவநெறி என்னும் சஞ்சிகையிற் குறிக் கப்பட்டுள்ளது. பொலிகண்டி கந்தசுவாமி கோயிலில் உள்ள வள்ளி தேவானை சகித ஆறுமுகப் பெருமான் உற்சவமூர்த்தியையும் ஆலயத்தின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள மடத்தையும் 1902ல் அமைத்துக் கொடுத்தவர் வல்வை திரு.நாஆ.வேலுப்பிள்ளை அவர் கள் ஆகும். நாவலப்பிட்டி முத்துமாரி அம்மன் கோவில் எழுந்தருளி அம்மனை வழங்கிய வர் வல்வை கு.ச. அருளம்பலம் ஆகும். நாகர்கோயில் நாகதம்பிரான் உற்சவ காலங் களில் நடைபெறும் கப்பல் திருவிழா பிரபல்ய மானது. இந்தத் திருவிழாவின் போது சுவாமி எழுந்தருளி வீதி வலம் வரும் 'வல்வை நாயகி' என்னும் கப்பலை வல்வை சி. ஆறுமுகம் மேஸ்திரியாரைக் கொண்டு கட்டுவித்துக் கொடுத்தவர் வல்வையைச் சேர்ந்த சின்னக் கிளி என்று அழைக்கப்படும் க.தாமோதரம் பிள்ளை என்பவராகும். நயினை நாகபூஷணி அம்மன், வல்லிபுர ஆழ்வார், யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் ஆகியவற்றின் தேர்த்திரு விழா அன்று தேர்வீதியுலா வரும் சமயம் தேரோட்டிகளாகச் செயற்பட்டவர்கள் வல்வை வாசிகளான வ.இராமசாமிப்பிள்ளை, க.சோம சுந்தரம் போன்றோர்.

வல்வையின் முக்கிய கோயில்களான நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயில், ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் கோயில், ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் ஆகியவற்றில் வருடாந்த மகோற் சவத்துடன் விசேட உற்சவங்கள் பூசைகள் என்பன இடம்பெறும். ஒரே ஊரில் சிவன் கோயில் அம்மன் கோயில் ஆகிய இரண்டும் அருகருகே அமைந்திருப்பது சிறப்பான அம்சமாகும். ஏனைய ஊர்களில் இவ்விதம் அருகாமையில் அமைந்திருந்தாலும் கோபு ரங்கள் சகிதம் இவ்வூரில் அமைந்திருப்பது போல் இல்லையென்றும் சொல்லப்படு கின்றது.

வல்வையில் அமைந்துள்ள கோயில் கள் மிகவும் துப்பரவாகவும் தூய்மையாக வும் வைத்திருக்கப்படுவதோடு பூசை நேரங் களிலும் உற்சவ காலங்களில் சுவாமி வீதி வலம் வரும் போதும் ஒரு ஒழுங்கு முறை யைக் கடைப்பிடித்து ஆண்கள் ஒரு புறமும், பெண்கள் ஒரு புறமும் நின்று தரிசனம் செய் வதைக் காணலாம். அத்துடன் ஆண்கள் மேலங்கி அணிந்து கொண்டோ காற்சட்டை அணிந்து கொண்டோ கோவில் உட்பிரகா ரங்களுக்குள் செல்வதை தவிர்த்துக் கொள் வதையும் காணக்கூடியதாக இருக்கும். கோயிலின் வாசல் பக்கமாக வாகனங்களில் குறுக்காக செல்வதையும் இங்கு காண முடியாது. இந்த நியதி முற்காலந் தொட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. வல்வையி லுள்ள சிவாலயம், மற்றும் இதர ஆலயங் களின் அமைப்பையும் அருமை பெருமை களையும் நடைமுறைகளையும் இவ்வூருக்கு வருகை தந்த சமயம் நேரிற் கண்ட கவி சுத்தானந்த சுவாமிகள் இவ்வூரை இனிமேல் வல்வெட்டித்துறை என்று அழைப்பதோடு 'சிவபுரம்' எனவும் அழைக்கவேண்டுமெனக் கூறியதையும் நினைவில் கொள்ளல் வேண் டும்.

மார்கழி மாதம் முழுவதும் வைகறை யில் சங்கொலியும், மணியொலியும் ஊரை விழித்தெழச் செய்கிறது. திருவெம்பாவைக் காலங்களில் அனேகர் அந்நேரமே நித்திரை விட்டெழுந்து நீராடித் தூய ஆடை அணிந்து அவரவர் மனதுக்கு உகந்த கோயில்களுக் குச் செல்வதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நிகழும் மகாமகத்தன்றும் மகோ தயம், அர்த்தோதயம் ஆகிய காலங்களிலும் அதிகாலையில் வல்வை வைத்தீஸ்வர சுவாமி, ஸ்ரீ முத்துமாரி அம்மன், நெடியகாட்டு திருச் சிற்றம்பலப் பிள்ளையார், புட்டணிப்பிள்ளை யார், கப்பலுடைய பிள்ளையார், ஆதி வைர வர், வல்வெட்டி வீரகத்தி விநாயகர், வன்னிச்சி புவனேஸ்வரி அம்மன், பொலிகண்டி உப்புத் தண்ணிப் பிள்ளையார் ஆகியோர் ஊறணி சமுத்திரத்தில் ஒன்றாக தீர்த்தமாடுவது கண் கொள்ளாக் காட்சியாகும்.



## நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்

இக் கோயில் வல்வை பருத்தித் துறைச்சாலையில் வல்வைச் சந்தியிலிருந்து முந்நூறு யார் கிழக்கே அமைந்துள்ளது. இதன் நீளம் 161 அடி அகலம் 121 அடியாகும். இரண்டு பிரகாரங்களையுடைய இக்கோயி லின் மேற்குத் திசையில் வெளிப்பிரகாரத் தில் திருக்குளம் அமைக்கப்பட்டிருப்பதோடு இத்திருக்குளத்தின் மேற்கே பருத்தித்துறை பிரதான வீதியும் அமைந்துள்ளது. உட்பிர காரத்தின் வடபகுதியில் நந்தவனமும், சிறிய தாமரைத் தடாகமொன்றும் அமைந்துள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் பிள்ளையார் வைர வர் என்று அழைக்கப்படும் ஒரு சைவ ஆசார சீலர் கோயிலின் தென்பகுதியில் தற்போ தைய கோயில் பூசகரின் வீட்டுக்கு அருகா மையில் அமைக்கப் பெற்றிருந்த மடத்தில் பிள்ளையாரை எழுந்தருளச் செய்து வேதார ணியத்திலிருந்து கணபதி ஐயர் என்னும் பெயருடைய சைவக்குருக்களை அழைத்து வந்து பூசைகளை நடப்பித்து வந்தாரெனத் தெரியவருகிறது. இக்கணபதி ஐயருக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் தியாகையர் கோயில் பூசைகளை நடாத்தி வந்தார். யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆலயங்கள் தொடர்பாகப் பேணப்பட்டு வரும் பதிவேட்டில் இக்கோயில் 1848ம் வருடம் வல்வை மக்களால் கற்கட்டடமாகக் கட்டப் பட்டதெனவும், இப்பதிவேடு தயாரிக்கப்பட்ட காலமாகிய 1892ம் வருடம் தாமர் செல்லையா என்பவர் கோயில் மணியமாக இருந்தா ரெனவும், 10 நாட்கள் உற்சவம் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்கு வீதியின் மடத்தில் எழுந்தருளி யிருக்கும் விநாயகரைத் தற்காலத்தில் களஞ் சியமாக இருக்குமிடத்தில் எழுந்தருளச் செய்து உற்சவமூர்த்தி ஒன்றினைச் செய்து சதுர்த்தி உற்சவத்தை ஆரம்பித்து வைத்தவர் 1892 இல் கோயில் மணியமாக இருந்த தாமர் செல்லையாவின் பேரனான நாகர் என்றும் 1840ம் வருடம் விநாயகரைத் தற்போது இருக் கும் இடத்துக்கு மாற்றிப் பெரிதாக அமைத்து 10 நாட்கள் உற்சவத்தை ஆரம்பித்து வைத்த வர் தாமர் செல்லையாவின் சகோதரரான தாமர் கதிர்காமர் என்றும் சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

முற்காலத்தில் கப்பல் வணிகம் தெடங்கப்பெற்று செவ்வனே நடைபெற்று வந்ததால் கப்பல்தொழிலில் ஈடுபட்ட எல் லோரிடத்தும் மகமைகள் வசூலிக்கப்பட்டு கோயிலுக்குச் சேர்க்கப்பட்டு வந்தன. 1.2.1846ல் பிரசித்த நொத்தாரிசு கதிர்காமர் சிதம்பர நாதர் முன்னிலையில் எழுதப்பெற்ற உறுதி யாலும், 6.5.1868ல் பிரசித்த நொத்தாரிசு கே.கணபதிப்பிள்ளை முன்னிலையில் எழுதப் பெற்ற உறுதியாலும் மகமைத் தொகையில் என்ன விழுக்காடு நெடிய காடுத் திருச்சிற்றம் பலப்பிள்ளையார் கோயிலுக்குக் கொடுக்கப் பட வேண்டுமென்ற விபரம் காட்டப்பட்டிருக் கிறது எனவும் இவ்வூரிலுள்ள பல பிரமுகர் கள் முடித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று இன்னுமொரு அறிக்கை தெரிவிக்கின்றபடி யால் 1846ம் வருடத்துக்கு முன்னர் அல்லது அந்த ஆண்டிற்குச் சமீபமாக இக்கோயில் கட்டப்பட்டது எனக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட மகமைகளை வசூல் செய்வதும், செலவுகள் செய்வதும் திருமேனியார் வெங்கடாசலம்பிள்ளை உட் பட ஐவர் கொண்ட குழுவினரிடம் ஒப்படைக் கப்பட்டது. இக்காலப்பகுதியில் ஆறுமுகம் முருகுப்பிள்ளை என்பவர் கோயிலின் மணிய மாக இருந்தார். திருமேனியார் வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் 1867ம் வருடம் வல்வை சிவன் கோயிலின் சங்குஸ்தாபனம் செய்யப் பெற்று வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமையால் இரண்டொரு வருடங்களில் மேலே கூறப்பட்ட மகமைகள் வசூலிப்பது தொடர்பான பணி கள், முத்துமாரி அம்மன் கோயில் மணிய மாக இருந்த பொறுப்புக்கள் ஆகியவற்றி லிருந்து விலகிக்கொண்டார். இச்சமயத்தில் கந்தக்குட்டியார் வேலுப்பிள்ளையென்பவர் கோயில் மணியமாக நியமிக்கப்பட்டார். இக் கந்தக்குட்டியார் வேலுப்பிள்ளை என்பவர் வல்வையிலுள்ள நான்கு ஆலயங்களுக்கு (வல்வை முத்துமாரி அம்மன், நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார், புட்டணிப் பிள்ளையார், வைகுண்டப்பிள்ளையார்) ஒரே தடவையில் மணியமாயிருந்த தாமர் செல் லையா என்பவரின் சகோதரனான கதிர்காமர் என்பவரின் பேரனாவார். இவர் பொறுப்பேற்ற தும் முடிந்தவரை பிள்ளையாரை ஆகம விதிப் படி அமையப்பெற்ற கோயிலில் எழுந்தருளப் பண்ண வேண்டுமென்ற நோக்கோடு மூலஸ் தானம், தம்ப மண்டபம், மதில் முதலியவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கட்டி பிள்ளையாரை மூலஸ்தானத்தில் எழுந்தருளச் செய்து 1884ம் வருடம் பிரதிஷ்டாபிஷேகம் செய்வித்தார்கள். இவருக்கு ஆண்பிள்ளைகள் இல்லாத காரணத்தினால் தன் சகோதரி மகளின் கணவன் சண்முகம் பிள்ளையைத் தனது திருப்பணி வேலைகளுக்குச் சேர்த்துக் கொண்டார். திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து தம்பம் நிறுவப்பட்டுத் தேரும் செய்விக்கப்பட்டது. 1892-1912 ஆண்டு காலப்பகுதியில் மஹோற்சவம் தொடங்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்துள்ளதென்றும் எந்தக் குறிப்பிட்ட ஆண்டில் மஹோற்சவம் தொடங்கியதென்பதைச் சரியாகக் கூறமுடியாதுள்ளதென்பதைச் சில அறிக்கைகள் தெரிவிக்கின்ற போதிலும் 1892ல் யாழ் கச்சேரியில் பேணப்பட்ட பதிவேட்டில் 10 நாள் உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதென்பதைக் குறிப்பிட்டுள்ளபடியால் 1892ம் வருடமோ அல்லது அதற்கு ஒரு சில வருடங்களுக்கு முன்பதாகவோ மஹோற்சவம் தொடங்கியிருக்கலாம்.

கந்தக்குட்டியார் வேலுப்பிள்ளையவர்கள் 1912ம் வருடமளவில் கோயில் பொறுப்புக்களிலிருந்து விலகிவிட இவரின் சகோதரனான கந்தக்குட்டியார் கதிரிப்பிள்ளை என்பவரின் இரண்டாவது புதல்வன் நடராசா என்பவரிடம் கோயில் மேற்பார்வை ஒப்படைக்கப்பட்டது. இவர் தம்பமண்டபம், கோபுரம் ஆகியவற்றோடு ஒட்டிய மண்டபத்தைக் கட்டி முடித்தார். இவர்காலத்தில் கோயில் குருக்கள் தியாகையர் காலமாகி விட அவர் மகன் செல்லையாக் குருக்கள் பிரதம பூசகரானார். கதிரிப்பிள்ளை நடராசா அவர்களின் காலத்தில் திருச்சிற்றம்பலப்பிள்ளையார் மீது ஊஞ்சல், பராக்கு எச்சரிக்கை என்பன வல்வை சி.வி. அருணாசலம் பிள்ளையவர்களால் இயற்றுவிக்கப்பட்டு 1916ம் வருடம் மதுரையில் பதிப்பிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. இவ்வூஞ்சலின் மறுபிரசுரம் 1981ம் வருடம் சுப்பிரமணியம் சிவக்கொழுந்து அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது. 1918ம் வருடம் க.க.நடராசா அவர்கள் கோயில் மேற்பார்வையிலிருந்து விலகிக் கொள்ள இவரது தமையனான க.க. அருளம்பலம் வசம் கோயில் பரிபாலனம் ஒப்படைக்கப்பட்டது. இவர் தமது கப்பல் வியாபார விடயங்களை முக்கியமாகக் கவனித்து வந்தமையால் கோயில் பரிபாலனத்தையும் பணிகளையும் செய்ய முடியாத நிலமை ஏற்பட்டு 1928 ம் வருடம் கோயிற் பரிபாலனம் சி.இராசமாணிக்கம் என்பவரிடம் மாற்றப்பட்டது. இவர் 1928 தொடக்கம் 1930 வரை பரிபாலனம் செய்த காலத்தில் 1929ம் வருடம் ஒரு புனராவர்த்தன சம்புரோட்சண கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1930, 1933 காலப்பகுதியில் திருவாளர்கள் செல்லையா தில்லையம்பலமும் ஆறுமுகம் விஸ்வலிங்கமும் ஒருவர் பின் ஒருவராக கோயிலைப் பரிபாலித்து வந்தார்கள். இதன் பின்னர் திரு.க.க. அருளம்பலம் அவர்களால் கோயில் பரிபாலனம் தொடர்பான உரிமைப்பிரச்சினை எழுந்ததன் காரணமாக ஒருவித இணக்கப்பாடு ஏற்பட்டு அருளம்பலம் அவர்கள் கோயில் மணியமாகவும் அவர் நியமிக்கும் இரு உறுப்பினர்கள், ஊர் பொது மக்கள் நியமிக்கும் நான்கு உறுப்பினர்கள் ஆக மொத்தம் ஏழு பேர் கொண்ட ஒரு சபை மூலம் கோயில் பரிபாலனம் மேற்கொள்ளப்படவேண்டுமென பருத்தித்துறை நீதிமன்றத்தின் 4ம் இலக்க வழக்கில் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒழுங்கு 1937ம் வருடம் வரை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் செவ்வனே நடைபெறாத படியால் திரு.ம.சாம்பசிவம் அவர்கள் 1937இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியமாகினார்கள். இவரது காலத்தில் கோயில் சுற்று மதில் வேலை பூர்த்தியாக்கப் பட்டது. 1945ல் திரு.ம.சாம்பசிவம் அவர்கள் விலகிக்கொள்ள திரு.பொ.தங்கவேலாயுதம் அவர்கள் மணியமானார்கள். இவரது காலத்தில் கோபுரத்தின் கீழ்ப்பகுதி திரு.ச.கார்த்தி கேசுவினாலும் பெண் ஞானசகுந்தலையம் மாவாலும் கட்டி முடிக்கப்பட்டது.

1950ம் வருடமளவில் திரு.நா.செல்ல மாணிக்கம் அவர்கள் மணியமாகப் பொறுப் பேற்றார். இவரது முயற்சியின் பயனாக ஊர்ப் பிரமுகர்கள், பொது மக்கள் ஆகியோரின் பங்களிப்புடன் கோயிற் கட்டடங்கள் யாவற் றையும் திருப்பணி வேலைகளை ஆரம்பித்து செப்பனிடத் தொடங்கினார்கள். கர்ப்பக்கிரகம், திருச்சபை, வள்ளிதெய்வானை சமேத முருகப்பெருமான் ஆலயம் புதிதாக அமைக் கப்பட்டும் நாகதம்பிரான் ஆலயத்தின் மேற் பகுதி பதுமபீட விமானவேலை, தீர்த்தக் கிணறு திருத்தியமைத்தல், கிழக்கு தெற்குப் பிரகாரங்கள் புதுப்பித்தல், முகப்புக்கோபுரம், கொடித்தம்பம், தம்பமண்டபம், மணிக்கோ புரம், வைரவர் ஆலயம், சண்டேசுரர் ஆலயம், கிழக்கு வாசலின் அலங்கார மண்டப முகப்பு, தெற்கு வாசல் முகப்பு போன்ற சகல வேலை களும் செய்து முடிக்கப்பட்டன. இவ்வேலை கள் யாவும் நிறைவெய்தியவுடன் புனராவர்த் தன சம்புரோட்சண கும்பாபிஷேகம் 7.6.1970 இல் சிறப்புற நடந்தேறியது.

**இக்கும்பாபிஷேகத்தின் பின்னர்கோயிலின் நிலையும், திருப்பணி செய்தவர்களின் பெயர் விபரங்களும்.**

1. கர்ப்பக்கிரகம்
   ஆ.செல்லத்துரையும்,
   பெண் தங்கரத்தினமும்
2. திருச்சபை
   வ.இராசாமிப்பிள்ளையும்,
   பிள்ளைகளும்.
3. நிருத்தமண்டபம்
   1. வ.இராமசாமிப்பிள்ளையும்,
      பெண் இராசம்மாளும்.
   2. நா.செல்மாணிக்கமும்,
      பெண் வள்ளிநாயகியம்மாளும்
4. நாகதம்பிரான் ஆலயம்,
   க.பொன்னம்பலமும்,
   பெண் அன்னப்பிள்ளையும்.
5. 1968 - 1970 இல் புதிதாய் கட்டி முடிக்கப் பட்ட முருகன் ஆலயம்
   1. அ.துரைராசாவும்
      பெண் இராஜேஸ்வரியும்
   2. அ.சிற்றம்பலமும்
      பெண் பார்வதிப்பிள்ளையும்
6. வயிரவர் ஆலயம்
   சரவணப்பெருமாளும்
   பெண்பொன்னன் அம்மாவும்
7. யாகசாலை
   ம.சாம்பசிவமும் பிள்ளைகளும்
8. வசந்தமண்டபம்
   வே.இராம.வேலுப்பிள்ளையும்
   பெண் இராசரெத்தினமும்.
9. பூந்தோட்டக்கிணறும் தண்ணீர்த் தாங்கி யும்.
   செ.காஞ்சிமாவடி வேலும்
   பெண் சவுந்திரிஅம்மாளும்
10. மணிக்கோபுரம்
    சு.வயிரமுத்துவும்
    பெண் நாகபூசணிஅம்மாளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தீர்த்தக்கிணறு
அ.மாரிமுத்துவும்
பெண் நாகம்மாளும்

12. மடப்பள்ளிக்கிணறு
மு.மா.பாலசிங்கம்

13. பூங்காவன மண்டபம்
செ.வி.நடராசா,
சி.பரஞ்சோதி, ஐ.காத்தாமுத்து

14. உட்பிரகாரம் ஒரு பகுதி
திருமதி.நாகரெத்தினம்.

15. கோயில் முகப்பு
நா.அ.மார்க்கண்டு சகோதரர்கள்

16. இராசகோபுரம்
1. அடிப்பாகம்.ச.கார்த்திகேசுவும்
பெண் ஞானசகுந்தலை அம்மாவும்.
2. மேற்பாகம்
செ.கந்தசாமித்துரையும்,
ஊர்ப்பொதுமக்களும்.

17. தேர்முட்டி
அ.சி.விஷ்ணு சுந்தரம்

18. வெளிக்கிணறு
சா.வனிதா ஞாபகார்த்தமாக
தா.சண்முகதாஸ்

19. கிழக்கு வீதி மடமும் காணியும்
நன்கொடை
ஓவசியர் கனகசபை
பொன்னம்பலம்

**1970 இல் நடைபெற்ற கும்பாபிசேகத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருப்பணி வேலைகள்.**

1. மோர்மடம்
தியாகராசா தேவசிகாமணி 1978 இல்

2. வன்னிமரப்பிள்ளையார்
ச.ஞானமூர்த்தி 1979ல்

3. பஞ்சமுகப்பிள்ளையார் உற்சவமூர்த்தி
பூ.க.முத்துக்குமாரசுவாமியும்
பிள்ளைகளும்

4. பெரியபிள்ளையார் உற்சவமூர்த்தி
ஆ.செல்லத்துரைத்தண்டயல்

5. ஆறுமுகசுவாமி உற்சவமூர்த்தி
வடிவேல்சிவஞானவேல் 1987 மாசி

6. மகாவிஷ்ணு உற்சவமூர்த்தி
பொ.பாலசுந்தரம்

7. நவக்கிரக ஆலயம்
சவுதி வாழ் வல்வைவாசிகள் 1984இல்

**ஏற்கனவே இக்கோயிலில் இருந்த உற்சவ மூர்த்திகள்.**

1. ஆதிப்பிள்ளையார் இந்தப் பிள்ளை யாரை கந்தக்குட்டியார் வேலுப்பிள்ளை என்பவர் செய்து கொடுத்துள்ளதாகச் சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால் சில அறிக்கைகள் 1890இல் நாகர் என்பவர் செய்து கொடுத்ததாயும், அப்படியல்ல நாகர் என்பவரது மகன் தாமர் (1892ல் மணியமாக இருந்த செல்லையாவின் தந்தை) செய்து கொடுத் தாகச் சில அறிக்கைகளும் தெரிவிக் கின்றன. 1892இல் செல்லையா என்பவர் கோயில் மணியமாக இருந்துள்ளார். இவ ருக்குப் பிற்பட்ட காலப்பகுதியிலேயே கந்தக் குட்டியார் வேலுப்பிள்ளை என்பவர் மணியமாக இருந்துள்ளார். 1892ம் வருட மளவில்லேயே 10 நாட்கள் உற்சவம் நடை பெறத் தொடங்கியதால் வேலுப்பிள்ளை என்பவருக்கு முன்னோரான நாகர் அல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லது அவரது மகன் தாமர் என்பவரால் செய்து கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமான் - பொ.தங்கவேலாயுதம்

**பரிவார மூர்த்திகள் - சிலா விக்கிரகங்கள்.**

அ. வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமான்
ஆ. வைரவப் பெருமான்
இ. நாகதம்பிரான்
ஈ. சண்டேஸ்வரர்
உ. நவக்கிரகம்
ஊ. வன்னிமரப்பிள்ளையார்

**உற்சவ மூர்த்திகள்.**

அ. ஆதிப்பிள்ளையார்
ஆ. எழுந்தருளிப்பிள்ளையார்
இ. வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமான்
ஈ. வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகசுவாமி
உ. பாமா, ருக்மணி சமேத மகாவிஷ்ணு
ஊ. பஞ்சமுகப்பிள்ளையார்
எ. நம்பி ஆண்டார் நம்பி.

**சம்புரோட்சண கும்பாபிஷேகம்.**

1990ம் வருடம் ஆவணி மாதம் நடாத்தப்படவேண்டிய மஹோற்சவம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலமை காரணத்தினால் நடாத்த முடியாது போய்விட்டது. இதனை 1991 தைமாதம் நடாத்துவதற்கு எத்தனித்தும் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொடர்குண்டு வீச்சின் காரணத்தினால் அம் மாதத்திலும் நடாத்தமுடியாது போய்விட்டது. 24.06.1991ல் சம்புரோட்சண கும்பாபிஷேகம் ஒன்று நடைபெற்று அதனைத் தொடர்ந்து அதேவருடம் ஆவணிமாதம் மஹோற்சவமும் நடைபெற்றது.

**பாலஸ்தாபன கும்பாபிஷேகம்.**

கடைசியாக நடைபெற்ற மகாகும்பாபிஷேகம் 30 வருடங்களுக்கு முன்னர் 1970ல் நடைபெற்றமையால் திருப்பணி வேலை களை மேற்கொள்ளும் நோக்கோடு 31.10.1999ல் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம்.**

31.10.1999ல் நடைபெற்ற பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 7.7.2000 அன்று வெள்ளிக்கிழமையும் உத்தர நட்சத்திரமும் சிம்மலக்கினமும் கூடிய சுபவேளையில் விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இக்கும்பாபிஷேகத்துடன் ஆறுமுகசுவாமி (உற்சவமூர்த்தி)க்கான ஆலயம் குணசுந்தரமும் பெண் செல்லப்பாக்கியம் புத்திரர்களினால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மூன்று வாசல் கொண்ட சப்பறம் ஒன்று அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு புதிய சப்பறம் 30.08.2001 அன்று வெள்ளோட்ட விழா நடைபெற்றது.

**தற்கால ஆலய பூசைகள் உற்சவங்கள்.**

**அ. நித்திய பூசை:**

உதயப்பூசை வைகறைப் பொழுதிலும் காலைப் பூசை 10.30 மணியள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலும், உச்சிக்காலப் பூசை நண்பகல் 11.15 மணி அளவிலும் இரவுப் பூசை மாலை 6.00 மணிக்கு அபிஷேகத்தைத் தொடர்ந்தும் நடைபெறும்.

**ஆ. மாதப்பூசை :**

மாதப்பிறப்புப் பூசை உற்சவம் ஆகியன ஒவ்வொரு மாதப்பிறப்பன்றும் காலையில் நடைபெற்று சுவாமி வீதி யுலா இடம்பெறும். சதுர்த்தி உற்சவம் பிரதி மாதமும் சதுர்த்தி (வளர்பிறை) திதியில் இரவும், கார்த்திகை உற்சவம் கார்த்திகை நட்சத்திரத்தன்றும் நடை பெற்று சுவாமி வீதி உலா இடம்பெறும்.

**இ. வருடாந்தப்பூசை/உற்சவங்கள் :**

வைகாசி மாத விசாக நட்சத்திரத் தன்று ஆறுமுக சுவாமிக்கு உற்சவம் நடைபெறும். கும்பாபிஷேகம் நடை பெற்ற ஆனிமாத உத்தர நட்சத்திரத் தன்று 1008 சங்குகள் கொண்டு மூல மூர்த்திக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பரிவார மூர்த்திகளுக்கான அபிஷேகமும் நடைபெறுவதோடு இரவு விநாயகப்பெருமான் பூந்தண்டிகையில் வீதிவலம் வந்து திருவூஞ்சல் என்பனவும் இடம்பெறும். ஆவணி மாதத்தில்வரும் தேய்பிறை அட்டமி திதியில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவமும், அதேமாதம் மஹோற்சவமும் நடைபெறும். ஆவணி மாதம் வரும் வளர்பிறை ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பூரணை நாளன்று ஊறணி சமுத்திரத்தில் பரி வாரமூர்த்திகள் சகிதம் தீர்த்த மாடி முடிந்த பின்னர் சிவன்கோயில் வந்த டைந்து பகல் அங்கு தங்கியிருந்து இரவு ஆலயம் திரும்பி கொடியிறக்க உற்சவம் இடம்பெறும். கொடியிறக் கத்தைத் தொடர்ந்து மறுநாள் வன்னி விநாயகர் பொங்கல், வசந்தோற்சவம், பிராயச்சித்த அபிஷேகம், வயிரவர் மடை என்பன இடம்பெற்று மகோற்சவம் நிறைவு பெறும். புரட்டாதி மாதத்தில் நவராத்திரி பூசை, ஐப்பசி மாதத்தில் தீபாவளியன்று விசேட அபிஷேகம் பூசை என்பனவும் இதனைத் தொடர்ந்து கந்தசஷ்டி பூசை என்பனவும் அதே மாதம் பௌர்ணமி தினத்தன்று அன்னா பிஷேகமும், கார்த்திகை மாதம் சர்வாலய தீபமும் இடம்பெறும். மார்கழி மாதத்தில் வரும் ஷஷ்டி நாளை இறுதி நாளாகக் கொண்டு 21 நாட்கள் விநாயகர் ஷஷ்டி பூசை கஜமுகாசுரன் போர், பாறணைப் பூசை என்பனவும் அதேமாதம் சுவர்க்க வாயில் ஏகாதசி திருவெம்பாவை, திருவாதிரை உற்சவம் என்பன இடம் பெறுவதோடு மாசிமாதத்தில் மகா சிவராத்திரி பூசையும் இடம்பெறும். சித்திரை ஐப்பசி மாதங்களில் வரும் பரணி நட்சத்திரத்திலும் தைமாதத்தில் வரும் முதற் செவ்வாய்க்கிழமையிலும் வைரவ சுவாமிக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

**வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் மீது**
ஆசிரியர் ஸ்ரீமத் அருணாசலம்பிள்ளை
அவர்களாற் பாடப்பெற்றதாகிய

**ஊஞ்சற் பா**

சீரோங்கு மணிமாடஞ் சிறந்து தோன்றுந்
திறனோங்கு பல்வளனுஞ் செறியும்வல்வைப்
பேரோங்கு நெடியவனத் தைங்காரத்துப்
பெட்போங்கு திருச்சிற்றம் பலத்தேமீறு
பாரோங்கு மூஞ்சலிசை பண்பாயோதப்
பரவோங்கு கலைமாதென் னாவிலோங்கக்
காரோங்கு கரிமுகத்தங் குசபாசத்தோன்
கழலோங்கு சரணமலர் கருதுவோமே.

சீர்பூத்த நாதவிந்து கால்களாகச்
சிவம்பூத்த சக்தியொளிர் விட்டமாக
ஏர்பூத்த சிவகாமநூ லிழையதாக
வெழில்பூத்த மறைநான்கும் கயிறதாகப்
பேர்பூத்த வுபநிடதம் பலகையாகப்
பிரணவமோர் பீடமா மதனிலேறித்
தேர்பூத்த திருநெடிய காட்டில் வாழுந்
திருச்சிற்றம் பலத்தேவே யாடீரூஞ்சல்.

பொன்னுலகத் தாமரர்பஞ்ச தாருவீன்ற
புதியநறு மலர்பொழிந்து புகழ்ந்துபோற்ற
மன்னுமல ரயனரியா மிருவர்தாமு
மறைகளெடுத் துதாத்தவிசை மருவச்சாற்ற
துன்னுமுனிக் கணங்கண்மமிழ்ந் தன்பினீடச்
சுத்தவே தாந்தநிலை துலங்கித்தோற்றச்
சின்னமதிர் திருநெடிய காட்டின்மேவுந்
திருச்சிற்றம் பலத்தேவே யாடீரூஞ்சல்.

பத்தியொடு மிரவிமதி கவிகைதாங்கப்
பனிக்கவரி தனைவச்ர பாணிவாங்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தியொடு பிங்கலன்கை யடைப்பையோங்கச்
சூராரும் வாளேந்திக் காலன் வீங்கத்
தத்துதிரை யாசன்கொள் சிவிறிதூங்கத்
தரநிருதி கோடிகங்கை தாங்கித்தேங்கச்
சித்திதரு திருநெடிய காட்டில்வாழுந்
திருச்சிற்றம்பலத்தேவே யாடீரூஞ்சல்.

துங்கமுறு நாரதர்யா ழிசைகள்பாடச்
சூர்க்கணங்கொ டுமுரசத் துழனிநீடத்
தங்குமடி யவர்நின்று தாளம்போடச்
சாற்றுசிவ கணநாத ரன்பிற்கூடப்
பொங்கொழிலா ரம்பைமுதன் மாதராடப்
பூமகணா மகனாகி புகன்றுநாடத்
தெங்குமிகு திருநெடிய காட்டில்வாழுந்
திருச்சிற்றம்பலத்தேவே யாடீரூஞ்சல்.

கருதருமுச் சகக்காவல் புரிமாலுக்குக்
கண்டபணி யுருமாற்றுங் கருத்தனாரே
தருமருவு மேருவிற்போர்ப் பாரதத்தைத்
தான்பொறித்த கூர்ங்கோட்டுத் திருத்தனாரே
கருமருவா வகையமார் வினைகள்பாறக்
கருதுசதி யுறநடித்த நிருத்தனாரே
திருமருவு திருநெடிய காட்டில்வாழுந்
திருச்சிற்றம் பலத்தேவே யாடீரூஞ்சல்.

நீர்மேவுந் திருமுடியின் மகுடமின்ன
நேர்ந்ததொரு திருநுதலிற் பட்டமின்னத்
தார்மேவு புயத்தின்மணி வலையமின்னத்
தக்கதிரு மார்பினூல் பதக்கமின்னப்
பேர்மேவு திருவடியிற் கழல்கண்மின்னப்
பீடார்ந்த கிம்புரிப்பூ ணினிதுமின்னச்
சீர்மேவு திருநெடிய காட்டில் வாழுந்
திருச்சிற்றம் பலத்தேவே யாடீரூஞ்சல்.

பாதிமதி நதியரவப் பணிகள் பூண்ட
பரனிரதங் குலைத்தவரே யாடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுபுரி ராவணனைப் பந்தாவீசிக்
கககனமதி லலைத்தவரே யாடீரூஞ்சல்
சேதுதனைப் பரவையகத் திட்டராமன்
சேர்ந்தபழி தொலைத்தவரே யாடீரூஞ்சல்
தீதுதெறு திருநெடிய காட்டில்வாழுந்
திருச்சிற்றம் பலத்தேவே யாடீரூஞ்சல்

வல்வை நல்லா ணாயகரே யாடீரூஞ்சல்
மாதவரெண் ணாயகரே யாடீரூஞ்சல்
அலகில்கணப் படையாரே யாடீரூஞ்சல்
அங்குசமெய்ப்படையாரே யாடீரூஞ்சல்
இலகுமொரு கோட்டாரே யாரூஞ்சல்
இனியருளக் கோட்டாரே யாடீரூஞ்சல்
திலகநிலத் திருநெடிய காட்டில்வாழுந்
திருச்சிற்றம் பலத்தேவே யாடீரூஞ்சல்

காசகனன் மணிமுடியீ ராடீரூஞ்சல்
கமலவயன் பணியடியீ யாடீரூஞ்சல்
வீசுமுறக் சாதினரே யாடீரூஞ்சல்
மிலையிதழிப் போதினரே யாடீரூஞ்சல்
பாசமது பரித்தவரே யாடீரூஞ்சல்
பாலமதி தரித்தவரே யாடீரூஞ்சல்
தேசுதரு திருநெடிய காட்டில் வாழுந்
திருச்சிற்றம் பலத்தேவே யாடீரூஞ்சல்

வேதமோடு சிவாகமங்கள் வீறிவாழ
வெண்ணீறு மணிபஞ்சாக் கரமும்வாழ
மாதர்கற்பு மடிமெய்ம் மகமும் வாழ
மாதமும்மா ரிகன்பொழிந்து மங்குல்வாழ
கோதில்பசு குலவேந்தர் செங்கோல்வாழ
கூறுமிவ்வல் வையினன்மை குழுமிவாழ
சீதமலர்த் திருநெடிய காட்டில்வாழுந்
திருச்சிற்றம் பலத்தேவே யாடீரூஞ்சல்.

## எச்சரிக்கை

சீரார் நெடுவனம்வாழ் முதற்றேவே யெச்சரீக்கை
திருமாலுக் கொருமருகா வருளுருவே வெச்சரீக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரார் சசிநீசம் பெறவறைந்தோ யெச்சரீக்கை
அருண்மும்ம தம்பொழிமா முகத்தானேயெச்சரீக்கை
கண்ணேகண் ணின் மணியே ரசக்கனியே யெச்சரீக்கை
கரியான யன்மகவான் றொழுங்கழலோ யெச்சரீக்கை
தண்ணார் மதிபுனையுஞ் சிவன்றனையா வெச்சரீக்கை
சர்ப்பப் பணியணியுந் திருத்தலைவா எச்சரீக்கை.

### பராக்கு

திருநெடிய வனத்திலுறை செல்வா பராக்கு
திருச்சிற்றம் பலநாமத் தேவே பராக்கு
அரியபவப் பிணியகற்று மமுதே பராக்கு
ஐந்துகரத் தந்திமுகத் தையா பராக்கு
வேந்தனுக்கொ ராறளித்த மெய்யா பராக்கு
வேதமுத லானவனே விமலா பராக்கு
சார்ந்தெனகத் தென்றுமுறை தலைவா பராக்கு
தங்கும்விழி மூன்றுடைய தந்தீ பராக்கு.

### மங்களம்

மூஷிக வாகனருக்கு மங்களம் - எங்கள்
மோதக கரத்தருக்கு மங்களம்
நீடுமரு ளாளருக்கு மங்களம் - துய்ய
நித்திய வானந்தருக்கு மங்களம்
ஆடியருக் கருள்பவர்க்கு மங்களம் - அருள்
அம்பிகைதன் பாலருக்கு மங்களம்
படியில்வினை தீர்ப்பவர்க்கு மங்களம் - செய்ய
பரமனருண் மெய்யருக்கு மங்களம்.

### லாலி

திருநெடிய வனத்திலுறை சிந்துரானனே
செப்புதமி யேங்குறையொ டிடர்கடீர்ப்பவனே
கருகுகய முகத்தவுணற் கடிந்தமரர்க் கருளுங்
கத்தநித்த சுத்தமுத்த காரண பூரணனே லாலி - லாலி
சர்வசுர சேவிதபா தாம்புயசர் வேசா
சதகோடி பாஸ்கர சொரூபப் ப்ரகாசா
நிர்மல நிராமய நிரஞ்சனநின் னாம
நிஷ்களசி தானந்த நேர்ந்தவடி வுடையோய். (லாலி - லாலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமி கோயில்

இக்கோயில் வல்வை காங்கேசன் துறைசாலையில் வல்வைச் சந்தியிலிருந்து 300 யார் தொலைவில் மேற்குத் திசையில் முத்துமாரி அம்மன் கோயிலுக்குத் தென் திசையில் "இராசிந்தான் கலட்டி" என்று சொல்லப்படும் காணியில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் வரலாறை எழுதும் முன்னர் இதன் ஸ்தாபகர் வெங்கடாசலம்பிள்ளை அவர்களைப் பற்றி முதலில் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். இப் பெரியோரைப் பற்றியும் அவர் மீட்டெடுத்த கப்பலைப் பற்றியும் பிறிதொரு இடத்தில் குறிப்பிட்டிருந்தாலும் கூட கோயிலைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பல்கலைக்கழக மாணவர்கள் தயாரிப்பதற்கு ஏதுவாக அவற்றின் சுருக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு.வெங்கடாசலம்பிள்ளையவர்களின் தந்தையாரான திருமேனியாரின் தந்தையார் ஐயம்பெருமாள் வேலாயுதர் என்பவர் அரசாட்சியினரால் "அடப்பன்" என்ற பதவி வழங்கப்பெற்றவர். இது நெய்தல் நிலத் தலைவனைக் குறிப்பதாகும். யாழ்ப்பாணப் பகுதியில் அக்காலம் வாழ்ந்த முன்னணிப் பிரமுகர் வரிசையில் வல்வெட்டித்துறையைச் சார்ந்த மேற்குறிக்கப்பட்ட ஐயம்பெருமாள் வேலாயுதர் என்பவரைப் பற்றியும் அவரது புத்திரர்கள் பற்றிய விபரமும் வசாவிளான் க.வேலுப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேலாயுதர் அவர்களின் புத்திரர்களில் ஒருவரான புண்ணியமூர்த்தி என்பவர் வல்வை முத்துமாரி அம்மன் கோயிலைக் கட்டியவர் இன்னொரு புத்திரரான திருமேனியார் மேற்படி முத்துமாரி அம்மன் கோயிலுக்குத் தர்மகர்த்தாவாக இருந்தவர். திருமேனியாரின் புத்திரர்களில் ஒருவரான குழந்தைவேற்பிள்ளை என்பவர் கொழும்பிலுள்ள யாழ்ப்பாணத்தார் கதிர்வேலாயுதசுவாமி கோயிலையும் பர்மாவில் ஒரு முருகன் கோவிலையும் ஸ்தாபித்தவர். இன்னொரு புதல்வரான பெரியதம்பியார் அல்லது பெரியவர் என அழைக்கப்படும் வெங்கடாசலம்பிள்ளை என்பவரே மேலே கூறப்பட்ட வைத்தீஸ்வர சுவாமி கோயிலை ஸ்தாபித்தவர். கடலில் மூழ்கிய 'அத்திலாந்திக் கிங்' (Brig Atlantic King) என்னும் கப்பலை மூழ்கிய நிலையிலேயே விலை கொடுத்து வாங்கி அதனை மீட்டெடுத்து வேண்டிய திருத்தங்கள் செய்து அதன்மூலம் கடல் வணிகம் செய்து கிடைத்த செல்வத்தில் ஒருபகுதியைக் கொண்டே இக் கோயிலைக் கட்டினார். இக் குடும்பத்தவர் இத்தோடு நின்று விடாமல் வல்வையிலுள்ள ஏனைய கோயில்களான திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில், முத்துமாரி அம்மன் கோயில் ஆகியவற்றினைக் கட்டுவித்தலிலும், புதுப்பித்தலிலும், பராமரித்தலிலும் மற்றைய பிரமுகர்களுடன் சேர்ந்து பங்காற்றியிருக்கின்றார்கள். வெங்கடாசலம்பிள்ளையவர்கள் இவ்வூரிலுள்ள கோயில்களுக்கான மகமைகளைப் பொறுப்பேற்று செலவு செய்து கணக்குகள் தயாரிப்பதற்குப் பொறுப்பாக இருந்ததோடு முத்துமாரி அம்மன் கோயிலுக்குத் தர்மகர்த்தாவாகவும் இருந்தவர்.

வெங்கடாசலம் பிள்ளையவர்கள் முத்துமாரி அம்மன் கோயிலுக்குத் தர்மகர்த்தாவாக இருக்கும் காலத்தில் கம்பர்மலையைச் சார்ந்த அன்பர் ஒருவருடன் மாலை வேளைகளில் காலாற உலாவி வருவது வழக்கம். இப்படி நடந்துவரும் நாளில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் அம்மன் கோயில் பக்கமிருந்து தெற்கு நோக்கி வரும் சமயம் பற்றைக்காடாக மஞ்சள் பூச்செடிகள் நிறைந்த பகுதியில் நெருப்பு எரிவது போன்ற ஒரு ஒளி தென்பட்ட தாகவும் இருவரும் அப்பகுதிக்குச் சென்று பார்த்தபோது அவ்விடத்தில் மாட்டுச் சாணம் தெரிந்ததாயும் மறுநாள் இவரின் தந்தைய ரான திருமேனியார் கனவில் தோன்றி அவ் விடத்தில் சிவனுக்கு ஆலயம் எடுக்கும்படி பணித்தார் என்றும் தெரியவருகிறது. தமக்குப் பரம்பரையாக வந்த தோட்டங்கள், வயல்கள் ஆகியவற்றைத் திருத்திப் பயிரிட்டும், பல புதிய காணிகளை விலைக்கு வாங்கியும் செல்வத்தைக் குவித்து அத்தோடு கப்பல் களுக்கு அதிபதியாகி கடல் வணிகஞ் செய் தும் செல்வத்தைக் குவித்தார். அம்மன் கோயிலுக்குத் தெற்குப்பகுதியிலிருந்த மடத்திலிருந்து கொண்டே அம் மடத்துக்குத் தென்பக்கமாக இருந்த 60 பரப்புக் காணியை விலைகொடுத்து வாங்கினார். ‘இராசிந்தான் கலட்டி‘ என அழைக்கப்படும் இக்காணி யைத் துப்பரவு செய்து 1867ம் வருடம் அத்தி வாரம் இடுதலாகிய சங்குத்தாபனம் செய் வித்தார். இக்கோயிலைக் கட்டுவதற்காக இவரின் தம்பிமார்களாகிய குழந்தைவேற் பிள்ளையும், இராமசாமியும் தங்கள் செல்வ மெல்லாவற்றையும் வழங்கியிருந்தார்கள்.

இந்தியாவிலிருந்து வரவழைக்கப் பட்ட சிறந்த சிற்பிகள் பலவகைக் கம்மியர்கள் கோயில் கட்டுமான வேலைகளைத் திறம் படச் செய்தனர். கோயில் கட்டத்தொடங்கிய 1867ம் வருடம் தொடக்கம் சிவபதமெய்திய 1900 வருடம் வரை கோயில் எசமானர்களுக்கு கோயில் கட்டுவதற்கும் பூசைக் கிரமங்களுக்கு வேண்டிய அறிவுரைகளையும் சரீர உதவி களையும் வல்வை இயற்றமிழ்ப் போத காசிரியர் ச.வைத்திலிங்கம் பிள்ளையவர்கள் வழங்கி வந்துள்ளார்கள். இக்கோயிலுக் கான இலிங்கத்தையும், ஆவிடையாரையும் காசிவரை சென்று அக்காலத்தில் பிரபுவா யிருந்த ஆ. விஸ்வநாதபிள்ளை என்பவர் கொண்டு வந்தார். கொழும்பிலுள்ள சிவஸ்ரீ நா.குமாரசாமிக்குருக்களுடன் திரு. குழந்தை வேற்பிள்ளையவர்கள் தொடர்பு கொண்டு அவரை வரவழைத்து சுபானு வருடம் 8.6.1883ல் நூதனப்பிரதிட்டா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இவ்வாலயத்து லிங்கம் ‘பாணலிங்கம்’ என்று சொல்லப்படு கிறது. விஸ்வநாதபிள்ளையவர்கள் லிங்கத் துடன் உற்சவமூர்த்திகளாகிய நடேசர், சந்திரசேகர் ஆகியவற்றைக் கொண்டு வந்து கொடுக்க இவரது மகன் சரவணமுத்துப் பிள்ளையவர்கள் சுவாமி கோயிலுக்குத் தங்கத் தகடு மருவிய தூபி முடியை இயற்று வித்துக் கொடுத்துள்ளார். நடந்து முடிந்த கும்பாபிஷேகத்துக்கு பருத்தித்துறை, வண்ணார்பண்ணை, நல்லூர், வல்வெட்டி, உடுப்பிட்டி, கம்பர்மலை, சரசாலை, மீசாலை, மந்துவில், கற்கோவளம், தொண்டை மானாறு, மயிலிட்டி, காங்கேசன்துறை, தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, காரைதீவு, திருகோணமலை, கொழும்பு ஆகிய பகுதி களிலுள்ள அடியவர்களும் நாட்டுக்கோட்டை செட்டிமார்களும் கும்பாபிஷேகக் கிரியை களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் நிதியுதவி என்பனவற்றை வழங்கியிருந்தார் கள். கும்பாபிஷேகத்தையடுத்து முறையாக ஆறுகாலப் பூசைகள் நடைபெறலாயின. முதன்முதலாகப் புலோலியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ. சண்முகநாதக்குருக்கள் பிரதம பூசகராயிருந்து பூசைகளை நடாத்தி வந்தார். ஆறுகாலப் பூசையுடன் நித்தியோற்சவம் நித்தியாக்கினி என்பனவும் நடைபெறத் தொடங்கின.

கும்பாபிஷேகத்துக்கான பொருளுதவி போன்றவற்றை வல்வையைச் சராத பிற ஊர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சேர்ந்த அடியார்கள் செய்தது போல மஹோற்சவங்களையும் வல்வையின் அயற் கிராமங்களான வல்வெட்டி, கம்பர்மலை, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, மயிலிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அடியார்கள் ஏற்று நடாத்தி வருவது ஒரு சிறப்பான அம்ச மாகும். கும்பாபிஷேக தினத்தன்று மயிலிட்டி யைச் சேர்ந்த அடியார் ஒருவர் அதில் கலந்து கொள்ளும் நோக்கோடு வல்வை வந்து கோயில் வாசலில் உள்ள கிணற்றில் கால் அலம்பிவிட்டு உள்ளே செல்லமுற்பட்ட சமயம் கோயில் வாசலைச் சுத்தம் செய்து கொண்டிருந்த ஒருவர் இந்த அடியாரை நோக்கி உமது காலின் பிற்பக்கம் அலம்பப் படவில்லையென்று கூறியிருக்கின்றார். அச் சமயம் வாசலைத் துப்பரவு பண்ணிக் கொண்டிருந்தவர் இடுப்பில் ஒரு சிறிய துண்டை மட்டும் கட்டிக் கொண்டிருந்தமை யால் வந்தவர் அவருக்கு அலட்சியமான வார்த்தைகளைக் கூறிவிட்டு உள்ளே சென்று விட்டார். கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம் பமாகி எசமானுக்கு சங்கற்பம் செய்யும் போதுதான் தான் அலட்சியமான வார்த்தை களைக் கூறியவர் தான் இக் கோயிலின் எசமான் என்பதனை அறிந்து கொண்டதோடு கிரியைகள் யாவும் நிறைவுற்றதன் பின் எசமானரான வெங்கடாசலம்பிள்ளையவர் களிடம் வந்து மன்னிப்புக் கோரியதோடு இதற்குண்டான தண்டனை எதுவோ அதைத் தான் ஏற்றுக் கொள்வதாயும் கூறினார். இச் சந்தர்ப்பத்தில் எசமான் அந்த அன்பரிடம் சிவனின் கொடியேற்றத்திருவிழாவை ஏற்று நடாத்தும்படி கேட்க அந்த அன்பரும் அதனை ஏற்று நடத்துவதற்குச் சம்மதத்தை தெரிவித் தார். இச்சம்பவமே மயிலிட்டி அன்பர்கள் கொடியேற்ற விழாவினை ஏற்று நடத்துவதற் காக அமைந்ததென எமது முன்னோர்கள் மூலம் அறிந்து கொண்டதாகும்.

இக் கோயிலின் நித்திய நைமித்திய பூசை செலவுக்காக வல்வையிலுள்ள வியா பாரிகள் முதலானோர் பல வகையான ஏற்பாடுகளைச் செய்து மகமைப் பொருள் களை வழங்கி வந்துள்ளார்கள். வே.வைர முத்துப்பிள்ளையென்னும் பிரபல வர்த்தக ரொருவர் தான் கொடுக்கும் மகமைப் பொருட்களை செவ்வனே கொடுத்து வந்த தோடு மட்டக்களப்பில் நெல்லுக்கிள்ளுத லாகிய ஒரு ஏற்பாட்டைத் தாமே உண்டு பண்ணி அதில் கிடைக்கும் வருவாயை கோயிலுக்கு வழங்கி வந்துள்ளார். இந்தப் பிடி நெல்லுக்கிள்ளும் ஏற்பாட்டைத் தவிர இவ்வூரவர்கள் பிடி அரிசி கிள்ளுதல், உண்டிகைப் பெட்டி மகமை, வியாபார மகமை, கூலி மகமை, சம்பள மகமை ஆகிய வற்றையும் ஏற்பாடு பண்ணி வந்துள்ளார்கள்.

திரு.வெங்கடாசலம்பிள்ளையவர் கள் 24.10.1892ல் சிவபதமடைய இவரின் சகோதரர்களில் ஒருவரான திருமேனியார் குழந்தைவேற்பிள்ளையவர்கள் எசமான் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவரது காலத்தில் வட்டுக்கோட்டை கிழக்கு சித்தங் கேணியைச் சேர்ந்த யாழ்குடாநாட்டின் கண் உள்ள பிரபுக்களில் ஒருவரான காசிநாதர் வயித்திலிங்கம் என்பவர் 1901ம் வருடம் வசந்தமண்டபத்தினைக் கருங்கல்லினால் கட்டிக்கொடுத்துள்ளார். இவர் யாழ் குடா நாட்டிலுள்ள அனேக கோயில்கள் பாடசாலை என்பவற்றுக்குப் பல தர்மகாரியங்கள் செய்த வர். திரு.குழந்தைவேற்பிள்ளையவர்கள் 1905 வரை கோயில் எசமானாக இருந்து சிறப்புற நடாத்திவந்துள்ளார். இவருக்குப் பின் திரு.வெங்கடாசலம்பிள்ளையவர்களின் இளைய சகோதரர் இராமசாமி அவர்கள் எசமான் பொறுப்பை ஏற்று 1912ம் வருடம் வரை பணியாற்றினார். இராமசாமி அவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களுக்குப் பின் கோயில் ஸ்தாபகர் வெங்கடாசலம்பிள்ளையவர்களின் இரண்டாவது புத்திரரான சின்னத்துரை என அழைக்கப்படும் திருமேனிப்பிள்ளையவர்கள் கோயில் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். இவரது காலத்தில் பல திருப்பணி வேலைகள் இடம் பெற்றன. இந்தியாவைச் சேர்ந்த தெலுங்கு தேச வர்த்தகரான காரஞ்சேடு ஏர்லக்கட்டர் அரங்கநாயுடுகாரு என்னும் பிரபு முன்வாயில் மண்டபத்தையும் கோபுரஅடிப்பாகத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளார். இந்த வர்த்தகர் பல கப்பல்களுக்கு அதிபதியாக இருந்ததுடன் தனது கப்பல்களுக்கெல்லாம் வல்வைவாசிகளையே தண்டயல்களாகவும் இதர மாலுமிகளாகவும் பணிக்கமர்த்தியவர். வல்வைப்பிரபுவாகிய விஸ்வநாதர் சரவணமுத்துப்பிள்ளை என்பவர் நடராஜர் மண்டபத்தை அமைத்துக் கொடுத்ததோடு கோயில் வாயில் பெருவீதிக்கும் தனது நிலத்தின் ஒரு பகுதியைக் கொடுத்து உதவினார். கம்பர்மலையைச் சேர்ந்த வல்லியப்பர் வேலுப்பிள்ளையும் பெண் பாறுவதிப் பிள்ளையும் வேறு சில திருப்பணி வேலைகளைச் செய்து கொடுத்துள்ளார்கள்.

1908ம் வருடமளவில் காசியில் இருந்து வந்த காசிப கோத்திரத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்களின் மகனும் நீர்வேலியில் ஜனனமும், கோப்பாயில் வாசம் செய்தவரும், ஆரிய திராவிட மொழிகளில் திறமை உடையவரும், கிரியாவிற்பன்னரும், குருலட்சணமும் நிறைந்தவருமான பிரம்மஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள் பிரதம பூசகரானார்.

திருமேனிப்பிள்ளையவர்கள் எசமானராக இருந்த காலத்தில் நொத்தாரிசு சபாரெத்தினம் முகதாவில் 8.3.1921ல் 4889 இலக்கம் கொண்ட கோயிலின் பொறுப்பாளி நியமிப்புச் சாதனத்தில் சுவாமியின் பெயர் வைத்தீஸ்வரர் என்றும் அம்பிகையின் பெயர் தையல்நாயகி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1883ம் வருடம் இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை வைத்திலிங்கம்பிள்ளையவர்கள் பாடிய ஊஞ்சல் பதிகத்திலும் அம்மையின் பெயர் தையல்நாயகி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 4889 இலக்க சாதனத்தில் கோயிலுக்கான அசைவுள்ள சொத்துக்கள், அசைவற்ற ஆதனங்கள் யாவற்றையும் தன்னுடன் சேர்த்துப்பராமரிப்பதற்காக அறங்காவலர்களாக தனது மூத்த சகோதரன் வேலுப்பிள்ளையின் மகன் திருவேங்கடத்தையும், இளைய சகோதரரின் மகன் களான அருணாசலம் வேங்கடாசலம், அருணாசலம் சபாரத்தினம் ஆகிய மூவரையும் நியமிப்பதோடு மூத்தவரான வேலுப்பிள்ளை திருவெங்கடமே மற்றைய இருவரையும் ஒருப்படுத்தி முதன்மையுடையவராக இருந்து சகல செய்கைகளையும் செய்து வரவேண்டுமெனவும் குறித்த மூவரும் சீவிய காலத்தின் பின் அவர் அல்லது அவர்களின் ஆண் சந்ததியாரே கோயிலைப் பராமரிக்க வேண்டுமென்றும் குறித்த மூவருக்கும் அல்லது அவர்களின் வழித்தோன்றல்களில் ஆண் சந்ததி இல்லாமற்போனால் தனதும் தனது சகோதரர் களினதும் பெண்சந்ததியாரில் வரும் ஆண்சந்ததியாருமே கோயிலையும் இதர ஆதனங்களையும் பராமரித்து வரவேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த அறங்காவலர்கள் கோயிலைப் பராமரிப்பதிலும், கணக்குக் காட்டுவதிலும் ஒழுங்கீனங்கள் ஏற்பட்டால் அதனை விசாரிப்பதற்காக ஒன்பது பேர் கொண்ட விசாரணைகர்த்தாக்களும் நியமிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமேனிப்பிள்ளையவர்கள் காலத்தில் 1919ம் வருடம் அமிர்தானந்த சுவாமிகள் என்னும் அந்தணப் பெரியார் இவ்விடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து ஊரவர்கள், அயலூரவர்கள் ஆகியோருடைய பொருளுதவியோடு புனராவர்த்தனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் ஒன்றினை நடாத்திவைத்தார். பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் காலத்தில் அவரது விருப்பப்படி சிறியதந்தையாரான மாப்பிள்ளைக்குருக்கள் என அழைக்கப்படும் இராமலிங்கக் குருக்கள் பிரதான ஆசாரியாக இருந்து இக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடாத்தி வைக்கப்பட்டது. இக்கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்வதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் வல்வை ச.செல்வவிநாயகம், திரு.ஆ.வேலுப்பிள்ளை ஆகியோர்.

1921ம் வருடம் திருமேனிப்பிள்ளையவர்கள் சிவபதமடைய இவரது இளைய சகோதரனான அருணாசலத்தின் மூத்தமகன் வெங்கடாசலம் அவர்கள் எசமானாகப் பொறுப்பேற்று நடாத்தி வந்து சிறிது காலத்தின் பின் தனது தம்பியாரான சபாரத்தினம் அவர்களிடம் கோயில் பொறுப்புக்களை ஒப்படைத்தார். சபாரெத்தினம் அவர்கள் 1923 தொடக்கம் 1956 வரை கோயிலை நிர்வகித்து வருங்காலத்தில் இராஜகோபுரத்தை 1939ம் வருடம் வல்வைப் பெரியார் சி.செல்லத்துரைப்பிள்ளையவர்களும், தேவி வாசல் மண்டபத்தை ஆசிரியர் வே.வ.சிவப்பிரகாசம் அவர்களும், மணிக்கோபுரத்தை திரு.ச.துரைராஜா அவர்களும், வசந்த மண்டபப் பூச்சு வேலையை திரு.சி.குமாரசாமி அவர்களும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். மணிக்கோபுரத்தில் அமைப்பதற்கான மணியினை திரு.ம.இராமசாமி என்பவர் வழங்கியுள்ளார்.

பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் பிரதம குருக்களாக இருந்துவரும் காலத்திலே மகன் சின்னப்பா குருக்கள் என அழைக்கப்படும் நீலகண்டக் குருக்கள் தகப்பனுடன் கூட இருந்து பூசைகளை நடாத்தி வர உதவினார். பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் 1930 இல் இறைவனடி சேர்ந்ததைத் தொடர்ந்து உதவியாளராக இருந்த நீலகண்டக்குருக்கள் பிரதம பூசகரானார். இக் காலத்தில் ஆலய மேற்கு வாசல் கோபுரம் அமைப்பதற்கான வேலைகள் திரு.சி.நாகரெத்தினம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு ஓரளவு பணிகள் நிறைவேற்றப்பட்ட சமயம் இடையில் ஏற்பட்ட தடங்கலினால் கோபுர வேலை முற்றுப்பெறாமல் போய் விட்டது. பிரம்மஸ்ரீ நீலகண்டக் குருக்கள் பிரதம பூசகராக இருக்கும் காலத்தில் 1942 இல் அவரது மகன் பரமேஸ்வரக் குருக்கள் பூசைகளை நடாத்துவதற்கு உதவி செய்து வந்தார். இச் சந்தாப்பத்தில் 1954ம் வருடம் நீலகண்டக் குருக்கள் இறைவனடி சேர்ந்ததைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் பிரதம பூசகரானார். இக்காலகட்டத்தில் 1956ம் வருடம் கோயில் எசமான் சபாரத்தினம் அவர்கள் சிவபதமடைய இவரது தமையன் வெங்கடாசலம் அவர்களின் மேற்பார்வையில் சபாரத்தினம் அவர்களது மூன்றாவது மகன் சின்னத்துரை அவர்கள் கோயில் ஸ்தாபகர் திரு. வெங்கடாசலம்பிள்ளை அவர்களின் ஆண்வாரிசுகள் எண்மரின் சார்பாக 1956ல் கோயில் எசமானார் ஆனார். கோயில் கும்பாபிஷேகம் நடத்தக் காலம் தாழ்த்தியதால் வல்வையிலுள்ள சிவநேயப் பிரபுக்களான திருவாளர்கள் சி.விஷ்ணுசுந்தரம், அ.துரைராசா, ச.ஞானமூர்த்தி, க.சோமசுந்தரம் ஆகியோர் ஒன்று கூடித் திருப்பணிக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு 25.4.1966இல்பாலஸ்தானம் செய்யப் பெற்றது. கோயில் பூச்சு வேலைகளுக்கான பூச்சு மைகள் யாவும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு திருப்பணிகள் யாவும் நிறைவெய்திய பின் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் பிலவங்க வருடம் வைகாசி மாதம் 28ம் திகதி திருதியைத் திதியும் புனர்பூச நட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திரமும் கூடிய சுபவேளையில் (11.6.1967) பிரம்மஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள் அவர்களினால் நிறைவேற்றி வைக்கப்பட்டது. இக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு குடமுழுக்கு விழா மலர் ஒன்று வெளியிட்டு வைக்கப் பட்டதோடு கோயில் வாசலையும், பருத்தித் துறை உடுப்பிட்டி வீதியையும் இணைக்கும் புதிய வீதி திறக்கப்பட்டு அதற்கு 'சிவபுர வீதி' எனவும் நாமம் சூட்டப்பட்டது.

இரண்டாம் பிரகாரத்தின் வசந்த மண்டபத்தின் தென்பகுதி 1970ல் பெருப் பித்துக் கட்டப்பட்டு ஓடுகள் வேயப்பட்டன. இப்பணிக்கு வல்வைப் பெரியார் வி.சுப்பிர மணியம், அவர் மைத்துனர் எஸ்.சண்முகம் ஆகியோர் வேண்டிய பொருளுதவிகளைச் செய்தார்கள். 1977ம் வருடம் திரு.மா.குமார சாமி அவர்களினால் பஞ்சலோகத்திலான வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுக சுவாமி உற்சவமூர்த்தி செய்விக்கப்பட்டு தைப்பூசத்தன்று பிரதிட்டை செய்யப் பட்டது. தேர் உற்சவத்தினை நடத்திவரும் வல்வெட்டி அடியார்களினால் சித்திரத்தேர் ஒன்றும் செய்து முடிக்கப்பட்டது. வல்வைப் பெரியார் எஸ்.வைரமுத்து அவர்களினால் வெள்ளி இடப வாகனம் செய்து கொடுக்கப்பட்டது. திரு.வடிவேல் (கார்வண்ணசாமி) அவர்களி னால் 1978ல் பஞ்சலோகத் திலான ஸ்ரீதேவி பூதேவி சமேத மகாவிஷ்ணு உற்சவமூர்த்தி செய்து கொடுக்கப்பட்டு பிரதிட்டை செய்யப் பட்டது. 26.6.1985ல் பரமேஸ்வரக்குருக்கள் சிவபதமெய்தவே அவருக்கு உதவியாக இருந்த அவரது மகன் பிரம்மஸ்ரீ மனோகரக் குருக்கள் பிரதம பூசகரானார்.

1987ம் வருடம் மே மாதம் இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட லிப ரேசன் ஒப்பரேசன் போது கோயில் எசமா னாக இருந்த திரு. சின்னத்துரை அவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனதையடுத்து இவரது தமை யனார் இராமசாமி அவர்கள் கோயில் எச மான் ஆனார். திரு.கு.இரத்தினசிங்கம் அவர்களினால் மூலமூர்த்திகளான சரஸ்வதி, பிராம்மி, மாகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி ஆகியவை பிரதிஸ்டை செய்விக்கப்பட்டன. உற்சவமூர்த்தியான பிட்சாடன மூர்த்தியில் சில குறைபாடுகள் ஏற்பட்டமையால் புதிய உற்சவமூர்த்தி ஒன்று பஞ்சலோகத்தினால் ஆக்கப் பெற்று 9.2.1998ல் பிரதிஸ்டா கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது.

1985, 1986, 1987ம் வருடங்களில் ஊரிக்காடு இராணுவ முகாமிலிருந்தும், பலாலி இராணுவ முகாமிலிருந்தும் ஏவப் பட்ட ஆட்லறி ஏவுகணைகளினாலும், விமா னக் குண்டுவீச்சுகளினாலும் கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்களுக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. 1991ம் வருடம் தை மாதம் கோயிலையும் கோயில் சுற்றாட லையும் நோக்கி வீசப்பட்ட விமானக் குண்டு களினால் கோயிலுக்கும் அதனை அண்டி யிருந்த மடங்களுக்கும் பாரிய சேதங்கள் ஏற்பட்டன. கோயில் தூபிகள் கலசங்கள், மண்டபங்கள் கூரைகள் என்பனவற்றிற்கும் திருக்குளம், நந்தவனம் என்பவற்றிற்கும் ஏற்பட்ட சேதங்கள் அளவிலடங்கா. கோபுரத் துக்கு தென்கிழக்குப் பகுதியில் புட்டணி கோயிலுக்கு அருகாமையிலிருந்த மடம் 1987ல் புல்டோசர் கொண்டு சிதைக்கப் பட்டது. இம்மடம் 1893ம் வருடமளவில் சி.சந்திரசேகரம் அவர்களால் கட்டப்பட்ட தாகும். கோபுத்துக்குக் கிழக்குப் பக்கமாகத் திரு.பொ.தங்கவேலாயுதம் அவர்களால் கட்டப்பட்ட இன்னொரு மடம் 1991 தை மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆகாய விமானத் தாக்குதலால் முற்றாகச் சேதமாக்கப்பட்டது. கோயிலின் மூன்றாம் பிரகாரத்தில் தென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குப் பகுதியில் தெட்சணாமூர்த்திச் செட்டியார் என்பவரால் கட்டப்பட்ட இன்னொரு மடம் இயற்கையினால் ஓரளவு சிதைவுற்றிருந்தது. இந்த மடமும் விமானக் குண்டு வீச்சினால் தரைமட்டமாக்கப்பட்டது. திரு.நா.வேலுப்பிள்ளை எனப்படும் கெச்சுத் தண்டயலினால் கோயிலுக்கு மேற்குப் புறமாக 1898ம் வருடம் ஒரு மடம் கட்டப்பட்டது. இந்த மடத்தில் தான் திருக்கல்யாண உற்சவ தினத்தன்று பகல் அம்பாள் எழுந்தருளி வந்து தவக்கோலத்தில் இருக்கும் உற்சவம் இடம்பெறுவது வழக்கம். இந்த மடம் வைரக்கற்களால் ஆக்கப் பெற்றமையால் சிறிதளவு சேதங்கள் மட்டுமே ஏற்பட்டன.

1989ம் வருடம் ஆடிமாதம் தேவி மஹோற்சவம் ஆரம்பமாகி ஒன்பதாம் நாள் தேர் உற்சவ தினத்தன்று இந்திய இராணுவத்தினரால் தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமையால் இறுதி நாள் உற்சவங்கள் பூரணமாக நடாத்த முடியாத நிலை ஏற்பட்டது.

22.09.2001 அன்று இரவு 9.45 மணியளவில் ஊரங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் கோயில் இரண்டாம் பிரகாரத்தின் அக்கினி மூலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் அப்பகுதிக் கூரைமுழுவதும், பெறுமதிமிக்க இரண்டு மின்பிறப்பாக்கிகள், திருவாடுதண்டுகள், மற்றும் பல தரப்பட்ட கம்புகள் என்பன தீயில் முற்றாக எரிந்து சேதமாகியன. பொதுமக்கள் திரண்டு வந்து தீயை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமையால் இதர பகுதிகளுக்குப் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டது.

ஆலயத்தில் 1967ம் வருடம் கடைசியாக நடாத்தப்பட்ட கும்பாபிஷேகத்தின் பின்னர் அடுத்த கும்பாபிஷேகத்தை நடத்துவதற்குப் பல தரப்பட்ட இடைஞ்சல்கள் ஏற்பட்டன. இவற்றுள் நாட்டில் ஏற்பட்ட இனப் பிரச்சினையினால் அத்தியாவசியமான கட்டடப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. சுமூகநிலை ஏற்பட்டு பொருட்கள் ஓரளவு தட்டுப்பாடின்றிக் கிடைக்கப் பெற்றதும் திருப்பணிகளை மேற்கொண்டு கும்பாபிஷேகத்தை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 4.02.2004 அன்று கும்பாபிஷேகத்தை வைத்துக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டு 7.05.2003 அன்று பாலஸ் தாபனம் செய்யப்பட்டது. அடியார்கள் பலரின் உதவியுடன் திருப்பணி வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு தைமாதம் 21ம் நாள் 4.02.2004 அன்று புதன்கிழமை பூர்வபட்சமும், திரயோதசித் திதியும், புனர்பூச நட்சத்திரமும், சித்த யோகம் கூடிய சுபவேளையில் வைத்தீஸ்வரப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சிவஸ்ரீ.ப.மனோகரக்குருக்கள் அவர்களினால் மஹாகும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பட்டது. இக்கும்பாபிஷேக நிகழ்வில் தென் இந்தியா, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில் வேதவாத்தியார் ஜீ.ஶ்ரீநிவாச சாஸ்திரிகள் சர்வசாதகாசிரியராகப் பங்கேற்றுக் கொண்டது சிறப்பான அம்சமாகும்.

இக்கும்பாபிஷேகத்துடன் குண்டு வீச்சுகளில் சேதமாக்கப்பட்ட இரண்டாம் பிரகாரத்திலமைந்த வசந்தமண்டபத்தின் நிலப்பகுதி பளிங்குக் கல்லினால் மாற்றியமைக்கப்பட்டதோடு கோயிலின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்து சேதமாக்கப்பட்ட மடங்கள் இரண்டும் உரிமையாளர்களினால் புதுப்பித்துக் கட்டப்பட்டன. அத்தோடு மூன்றாம் பிரகாரத்தின் தெற்கு, மேற்கு, வடக்குத்திசைகளில் உட்பக்கச்சுவர்கள் புதிதாக அமைக்கப்பட்டதுடன் ஆலய வட திசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் அமைந்திருந்த திருக்குளமும் புனரமைக்கப்பட்டது. இரண்டாம் பிரகாரத்தில் வல்வை நடராஜா பெண் வள்ளியம்மாள் அவர்களினால் 1989 பங்குனி மாதம் கட்டப்பட்ட திருக்கல்யாண மண்டபம் மேலும் 20 அடிகள் நீட்டிக் கட்டப்பட்டது. கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை ஆலய பிரதம குருவின் வதிவிடமும் புதிதாகக் கட்டப்பட்டது. மகா கும்பாபிஷேகத்தையொட்டி ஆதீனகர்த்தர்களினால் மகா கும்பாபிஷேக சிறப்பு மலரொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஆலயத்தில் வருங்காலத்தில் முக்கியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுள் மேற்குப் பகுதிக் கோபுரம் அமைக்கப்படுதல், தேவிவாசல் கோபுரம் புதிதாக அமைக்கப்படுதல், தெற்குப் பகுதியில் அமைந்துள்ள திருக்குளம் ஆழமாக்கப்படுதலோடு சேதமாக்கப்பட்ட பகுதி புனரமைக்கப்படுதலுமாம்.

### கோயில் எஜமானர்கள்

திருமேனியார் வெங்கடாசலபிள்ளை
1883 - 1892

திருமேனியார்குழந்தைவேற்பிள்ளை
1892 - 1905

திருமேனியார் இராமசாமி 1905 - 1912

வெங்கடாசலபிள்ளை திருமேனிப்பிள்ளை
1912 - 1921

அருணாசலம் வெங்கடாசலம் 1921 - 1923

அருணாசலம் சபாரெத்தினம் 1923 - 1956

சபாரெத்தினம் சின்னத்துரை 1956 - 1987

சபாரெத்தினம் இராமசாமி
1987 - இன்று வரை

### கோயில் பிரதம பூசகர்கள்

பிரம்மஸ்ரீ சண்முகக்குருக்கள்
1883 - 1908

பிரம்மஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள்
1908 - 1930

பிரம்மஸ்ரீ கா. நீலகண்டக்குருக்கள்
1930 - 1954

பிரம்மஸ்ரீ. நீ. பரமேஸ்வரக்குருக்கள்
1954 - 1985

பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள்
1985 - 1989 ஆவணி வரை

பிரம்மஸ்ரீ கிருஷ்ணமகாதேவக்குருக்கள்
1989 - 1990 ஐப்பசி

பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக்குருக்கள்
1990கார்த்திகை - 1991 இறுதிப்பகுதி

பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள்
1991 - இன்று வரை

## தற்கால பூசைகள் உற்சவங்கள்

**அ) நித்தியபூசை:**

தினமும் ஆறுகாலப்பூசைகள் இடம்பெறும். அதில் உதயப் பூசை காலை 5.30க்கும் காலை சந்தி பகல் 9.30க்கும், உச்சிக் காலப்பூசை மதியம் 11.30 மணிக்கும், சாயரட்சைப்பூசை மாலை 5.30 மணிக்கும், இரண்டாம் காலப்பூசை மாலை 6.30 க்கும், அர்த்த சாமப்பூசை இரவு 7.00 மணிக்கும் இடம் பெறும். உதயப்பூசையின் போது இறைவனைத் துயில் எழுப்பி மூலஸ்தானத்தில் ஆரோகணிப்பதைத் தொடர்ந்து பூசைகள் இடம்பெறும். காலை சந்தியிலும், இரண்டாம் காலப் பூசையின் போதும் நித்தியாக்கினி, நித்தியோற்சவம், நித்திய பலி என்பனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும். உச்சிக்காலப்பூசையின் போது இறந்தவர்களுக்கான மோட்சதீபம் ஏற்றி வழி பாடு இடம்பெறும். அர்த்த சாமப்பூசையின் போது சுவாமிக்கும் அம்பாளுக்கும் பூசை முடிவுற்றதும் உதயப்பூசையின் போது பள்ளியறையில் இருந்து கொண்டு வரப்பட்ட இறைவனை பல்லக்கில் அமரச் செய்து திராவிடகானம் இசைத்துவர வீதிவலம் வந்து பள்ளியறையில் அமரச் செய்து பூசை இடம் பெற்ற பின்னர் வைரவப் பெருமானுக்கான பூசை முடிந்த பின்னர் நித்தியபூசைகள் நிறைவு பெறும்.

**ஆ. வாராந்த பூசை, உற்சவம்:**

(சுக்கிரவார உற்சவம்) ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் இரண்டாம் காலப் பூசையைத் தொடர்ந்து நித்தியோற்சவம் முடிந்தபின் அம்பாளுக்கு விசேட பூசை நடை பெற்று இரண்டாம் பிரகாரத்தில் வீதியுலா இடம்பெறும்.

**இ. பட்ச உற்சவம்:**

(பிரதோச உற்சவம்) பிரதிமாதமும் வளர்பிறை, தேய்பிறை திரயோதசி திதியன்று மாலையில் விசேட அபிஷேகம் பூசை என்பன நடைபெற்று உற்சவம் நடைபெறும். சனிக் கிழமைகளில் பிரதோச உற்சவம் வந்தால் சுவாமி வெள்ளி ரிஷப வாகனத்தில் வீதியுலா வருவார்.

**ஈ. மாதாந்த உற்சவங்கள்:**

1. **கார்த்திகை உற்சவம்:**

ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்தன்று முருகப்பெருமானுக்கு நடைபெறுவது. கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தன்று விசேட அபிஷேகம், பூசை என்பன இடம்பெற்று மயில்வாகனத்தில் மூன் றாம் பிரகாரத்தில் வீதியுலா இடம் பெறும்.

2. **சதுர்த்தி உற்சவம்**

பிரதிமாதமும் வளர்பிறை சதுர்த்தி யன்று வினாயகருக்கு விசேட அபிஷே கம், பூசை என்பன இடம்பெற்று வீதி யுலா இடம்பெறும். ஆவணி மாதத் தில் வரும் சதுர்த்தியில் மூன்றாம் பிரகாரத்தில் வீதியுலா இடம்பெறும்.

**உ. வருடாந்த உற்சவங்கள், பூசைகள், அபிஷேகங்கள்:**

1. **வருடப்பிறப்பு புண்ணியகால தீர்த்தம்:**

சித்திரை வருடப்பிறப்பன்று மூலமூர்த்தி, அம்பாள் ஆகியோருக்கு விசேட அபிஷேகம் பூசை என்பன இடம்பெறுவதோடு தீர்த்தக் கிணற்றடி யில் அஸ்திரதேவருக்கும் அபிஷேகம் இடம்பெறும்.

2. **நாவுக்கரசர் குருபூசை:**

சித்திரை மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தில் இடம் பெறுவது.

3. **வைகாசி விசாகம்:**

வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்தன்று ஆறுமுகப் பெருமானுக்கு பூசை இடம்பெற்று வீதியுலா இடம் பெறும்.

4. **சம்பந்தர் குருபூசை:**

வைகாசி மாதத்தில் வரும் மூல நட்சத்திரத்தில் இடம் பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. மாணிக்கவாசகர் குருபூசை :**

ஆனி மாதத்தில் வரும் ஆயிலிய நட்சத்திரத்தில் இடம் பெறுவது.

**6. ஆனி உத்தரம் :**

ஆனிமாத உத்தர நட்சத்திரத்தில் நடராஜர், சிவகாமி ஆகியோருக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன இடம் பெற்றதைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஆலய தீர்த்தக் கிணற்றடிக்கு எழுந்தருளிச் சென்று அஸ்திரதேவருக்கு அபிஷேகம் நடைபெற்றபின் வீதியுலா இடம்பெறும். வீதியுலாவின் போது நடராசப்பெருமான் நடனமாடுவதற்கு ஏதுவாக விஷேடமாகப் பொறிமுறையில் தயாரிக்கப்பட்ட இருக்கையில் நிர்த்தனம் ஆடி வரும் போது அடியார்களின் பண்ணிசையுடன் மூன்றாம் பிரகாரத்தில் வீதியுலா இடம் பெறும்.

**7. தஷிணாயன புண்ணிய கால தீர்த்தம்**

ஆடி மாதப்பிறப்பன்று சூரியன் வடதிசையில் இருந்து தென் திசைக்குச் சஞ்சரிக்கும் காலமாகிய தஷிணாயன காலத்தில் அஸ்திர தேவருக்கு அபிஷேகம் (தீர்த்தம்) நடைபெறும்.

**8. தேவி மஹோற்சவம் :**

ஆடி மாதத்தில் வரும் பூர நட்சத்திரத்தை இறுதிநாளாகக் கொண்டு பத்துத் தினங்கள் வருடாந்த உற்சவம் இடம்பெறும். பத்தாம் நாளாகிய பூர நட்சத்திரத்தன்று அம்பாளுக்கு விஷேடமாக பூரகர்மம் இடம்பெற்று ஊறணி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெற்று கொடியிறக்க வைபவம் இடம் பெறும்.

**9. சுந்தரர் குருபூசை :**

ஆடி மாதத்தில் வரும் சுவாதி நட்சத்திரத்தன்று இடம் பெறுவது.

**10. கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்:**

ஆவணி மாதத்தில் வரும் தேய்பிறை அட்டமி திதியில் மகாவிஷ்ணுவுக்கு விஷேட பூசை என்பன இடம் பெற்று ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக வீதியுலா இடம்பெறும்.

**11. பள்ளியறை மணவாளக் கோல உற்சவம் :**

ஆவணி மாதத்தில் வரும் சித்திரை நட்சத்திரத்தன்று இடம்பெறுவது.

**12. ஆவணி மூல உற்சவம்:**

ஆவணிமாத மூல நட்சத்திரத்தன்று விசேட பூசையைத் தொடர்ந்து குதிரை வாகனத்தில் சிவபெருமான் எழுந்தருளி வந்து கோபுர வாசலில் அமைக்கப்பட்ட காவேரி அணையில் சிவபெருமான் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண்சுமந்து அரசனிடம் பிரம்படிபடுவதாக நடந்த வரலாறு பாவனையாக இடம்பெற்று வீதியுலாவரும் சமயம் பிட்டுக்காகச் சுமந்த மண்ணை ஆலயத்தின் வடபகுதியில் உள்ள திருக்குளத்தில் கரைத்து விடும் நிகழ்வு இடம்பெறும்.

**13. நவராத்திரி பூசை :**

புரட்டாதி மாதத்தில் வரும் பிரதமை முதல் தசமி வரை நடைபெறுவது. முதலாம் பிரகாரத்தில் இதற்கென அமைக்கப்பட்ட கொலு மண்டபத்தில் அம்பாள் எழுந்தருளி விஷேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகம், கொலுப்பூசை என்பன இடம்பெறும். முதல் மூன்று நாட்கள் துர்க்கையாகவும், அடுத்த மூன்று நாட்கள் மகாலெட்சுமியாகவும், அதற்கடுத்த மூன்று நாட்கள் சரஸ்வதியாகவும் பூசைகள் இடம்பெற்று வழிபாடு நடைபெறும். பத்தாம் நாளாகிய தசமி தினத்தில் சிவபெருமான் அம்பாள் சகிதம் குதிரை வாகனத்தில் எழுந்தருளி நெடியகாடு திருச்சிற்றப்பலப் பிள்ளையார் கோயில் சென்று வட திசையில் நடப்பட்டிருக்கும் கன்னி வாழையை அழிக்கும் காட்சி இடம் பெறும்.

**14. கேதாரகௌரி விரதம் :**

ஐப்பசி மாதத்தில் வரும் அமாவாசை நாளை இறுதி நாளாகக் கொண்டு 21 தினங்கள் அனுட்டிக்கப் படுவது. இந்த 21 நாட்களும் அம்பாளுக்கு விசேட பூசை என்பன இடம் பெறுவதுடன் அமாவாசை தினமான 21ம் நாள் அன்று அம்பாளுக்கு விசேட அபிஷேகம் பூசை என்பன நடைபெற்று இரண்டாம் பிரகாரத்தில் அம்பாள் வெள்ளி இடப வாகனத்தில் எழுந்தருளி விசேட பூசை இடம்பெற்று நோன்பு இருப்பவர்களுக்கு காப்பு வழங்கப்படும்.

**15. அன்னாபிஷேகம் :**

ஐப்பசி மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தில் காலைப் பூசை முடிவடைந்ததும் மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகள் ஆகியோருக்கு அன்னத்தினால் அபிஷேகம் இடம்பெறும்.

**16. ஐப்பசிப் பரணி :**

ஐப்பசி மாதத்தில் வரும் பரணி நட்சத்திரத்தில் இரவு வைரவ சுவாமிக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன இடம்பெறும்.

**17. தீபாவளி பூசை :**

தீபாவளியன்று அதிகாலை மூல மூர்த்தி, பரிவார மூர்த்திகள் ஆகியோருக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று புத்தாடை புனைந்து தோசையும் ரசமும் நிவேதனம் செய்யப்பட்டு விசேட பூசை நடைபெறும்.

**18. கந்த ஷஷ்டி உற்சவம் :**

ஐப்பசி மாதத்தில் வரும் பிரதமை தொடக்கம் ஷஷ்டி வரையிலான ஆறு நாட்களும் மாலையில் விஷேட அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து பூசைகள் இடம்பெற்றபின் முருகப் பெருமான் வீதிவலம் இடம்பெறும். ஆறாம் நாள் ஆறுமுகப் பெருமான் இந்திர விமானத்தில் எழுந்தருளி தாரகாசுரன், சிங்கமுகாசுரன், சூரபன்மன் ஆகியோரை வதம் செய்வர். சூரபன்மன் சக்கரவாகப் பட்சியாக மாறி போர் புரிவது இதற்கென உருவாக்கப்பட்ட பிரமாண்டமான பட்சி பொறிமுறையில் இயங்கும் காட்சியைக் காணப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கூடுவது இவ்வாலயத்தில் ஒரு சிறப்பான அம்சமாகும். ஏழாம் நாள் அதிகாலையில் முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன இடம்பெறுவதோடு இரவு சண்முகப் பெருமானுக்கு திருக்கல்யாண உற்சவம் இடம் பெற்று ஊஞ்சல், வீதிவலம் என்பன இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**19. சோமவார உற்சவம் :**

கார்த்திகை மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளில் மூலமூர்த்திக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன இடம்பெறுவதோடு சுவாமி அம்பாள் சகிதம் இடப வாகனத்தில் வீதிவலம் வருவர்.

**20. சர்வாலய தீபம் :**

கார்த்திகை மாத பூரணை தினத்தில் சுவாமி அம்பாள் சகிதமாக இடப வாகனத்தில் எழுந்தருளி வந்து சொர்க்ககிரி என்னும் வடிவத்தை எரித்த பின்னர் வீதியுலா இடம் பெறும்.

**21. திருவெம்பாவை :**

மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவை நாட்களில் முதல் ஒன்பது நாட்களும் அதிகாலையில் பூசைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து நடராஜப் பெருமானின் வாசலில் மணிவாசகப் பெருமானை எழுந்தருளச் செய்து திருவெம்பாவைப் பாடல்கள் இசைக்கப் பெற்ற பின் மணிவாசகப் பெருமான் வீதியுலா இடம்பெறும். ஒன்பதாம் நாள் மாலையில் நடேசர் ஊஞ்சல் இடம்பெறும். பத்தாம் நாள் அதிகாலையில் திருவாதிரை நட்சத்திரத்தில் மூலமூர்த்தி, நடேசர், சிவகாமி ஆகியோருக்கு விசேட அபிஷேகம், பூசை, திருவெம்பாவைப் பாடல்கள் என்பன இசைக்கப் பெற்றதன் பின்னர் நடேசர் உள்வீதி வலம் வரும் போது தீர்த்தக் கிணற்றடியில் அஸ்திர தேவருக்கு அபிஷேகம் இடம்பெறும். வெளி வீதி உலாவரும் சமயம் நடேசர் பொறி முறையில் நிர்த்தனமாடி வருவது இக் கோயிலில் இடம்பெறும் சிறப்பான காட்சியில் ஒன்றாகும்.

**22. உத்தராயண புண்ணியகால தீர்த்தம் :**

தைமாதப் பிறப்பன்று விசேட பூசை என்பன இடம்பெற்று அஸ்திர தேவருக்கு தீர்த்தக் கிணற்றடியில் அபிஷேகம் நடைபெறும்.

**23. தைப்பூச உற்சவம் :**

தைமாதத்தில் வரும் பூச நட்சத்திரத்தன்று மாலையில் முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன இடம்பெற்று ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சகிதம் திரு வீதியுலா இடம்பெறும்.

**24. சங்காபிஷேகம் கும்பாபிஷேக தினம் :**

தைமாதத்தில் வரும் புனர்பூச நட்சத்திரத்தில் காலையில் மூலவருக்கு 1008 சங்கினால் அபிஷேகமும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகமும் நடைபெற்று விசேட பூசையும் இடம் பெறும். இரவுப் பூசையைத் தொடர்ந்து சிவன் அம்பாள் ஆகியோருக்கு விசேட பூசை நடை பெற்று ஊஞ்சல் இடம்பெற்ற பின்னர் பூந்தண்டிகையில் வீதியுலா இடம் பெறும்.

**25. மாசி மக அபிஷேகம் :**

மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திரத்தில் விசேட அபிஷேகம், பூசை என்பன இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26. மஹா சிவராத்திரி :**

மாசிமாதத்தில் வரும் அமாவாசைக்கு முந்திய இரவு எட்டு மணிக்கு இரண்டாம் காலப்பூசை நடைபெற்று முடிந்த பின் ஒன்பது மணியளவில் 1ம் சாமப்பூசையும், 10.00 மணிக்கு இரண்டாம் சாமப் பூசையும், 11.30க்கு மூன்றாம் சாமப் பூசையும், 3.00 மணிக்கு நாலாம் சாமப் பூசையும் அதனைத் தொடர்ந்து அர்த்த சாமப் பூசையும் இடம்பெறும். இந்தப் பூசைகளின் போது சிவன், அம்பாள் ஆகியோருக்கு விசேட அபிஷேகமும். இலிங்கோற்பவ காலமாகிய 12.00 மணிக்கு இலிங்கோற்பவருக்கு அபிஷேகம், பூசை என்பன இடம்பெற்று சிவன் அம்பாள் சகிதம் வெள்ளி ரிஷப வாகனத்தில் வீதிவலம் வருவார். 1ம் சாமம், 2ம்சாமம், 3ம் சாமம், 4ம் சாமப் பூசைகளின் போது சகஸ்ரநாம அர்ச்சனையும், சிவராத்திரி புராணப் படிப்பும் இடம் பெறும்.

**27. மஹோற்சவம் :**

பங்குனி மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தை இறுதி நாளாகக் கொண்டு 16 தினங்கள் நடைபெறும். மஹோற்சவம் தொடங்குவதற்கு முன்னதாக இவ் ஆலய மஹோற்சவகுரு அருகாமையில் அமைந்துள்ள கிராம தேவதையான முத்துமாரி அம்பாளுக்கு விசேட பூசை நடாத்தி வைப்பார். இதர பூர்வாங்கக் கிரியைகள், மணிவாசகர் ஊர்வலம் என்பனவற்றைத் தொடர்ந்து கொடியேற்றம் நடைபெற்று முதல் மூன்று நாட்களும் விநாயகப் பெருமானுக்கும், அடுத்த மூன்று நாட்களுக்கு முருகப் பெருமானுக்கும் யாகம் நடைபெற்று உற்சவம் இடம்பெறும். ஏழாம் நாள் சிவனுக்கு யாகம் தொடங்கப் பெற்று பரிவார மூர்த்திகள் சகிதம் வீதியுலா இடம் பெறும். 12ம் நாள் திருக்கல்யாண உற்சவம், 15ம் நாள் ரதோற்சவம், 16ம்நாள் ஊறணி சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெற்று அன்று இரவு திருமணக் கோலக்காட்சியுடன் ஆலயம் திரும்பி கொடியிறக்கம் இடம்பெறும். 16ம் நாள் தீர்த்தமாடப் புறப்படுவதற்கு முன்னர் நடராஜப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை, திருவீதியுலா என்பன இடம் பெறும். 17ம் நாள் பகலில் ஊடல் திருவிழாவும், இரவு அம்பாள் உற்சவமும், 18ம் நாள் சண்டேஸ்வரர் உற்சவமும், அதனையடுத்து பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று அன்றைய இரவு வைரவ சுவாமிக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன நடைபெற்று மஹோற்சவம் நிறைவு பெறும்.

**உ. விசேட நடேசர் அபிஷேகம் :**

சித்திரை மாதத்தில் வரும் திருவோண நட்சத்திரம் ஆவணி புரட்டாதி மாசி ஆகிய மாதங்களில் வரும் பூர்வபக்க சதுர்த்தசி திதி ஆகியவற்றில் பகலில் விசேட அபிஷேகம் நடைபெறும். ஆனி உத்தரம், மார்கழி திருவாதிரை ஆகிய தினங்களில் விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து திருவீதியுலா இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிவார மூர்த்திகள்**

| | | |
|---|---|---|
| நிர்த்தகணபதி | சனீஸ்வரன் | திருப்பள்ளி |
| லிங்கோற்பவர் | ஆறுமுகசுவாமி | நாகேஸ்வரர் |
| தெட்சணாமூர்த்தி | வைரவசுவாமி | சண்டேஸ்வரர் |
| பிரம்மா | சந்திரர் | துர்க்கை |
| நவக்கிரகம் | சூரியர் | சரஸ்வதி |
| நால்வர் | மஹாவிஷ்ணு | மஹாலட்சுமி |
| விநாயகர் | தெண்டாயுதபாணி | ஸ்ரீராஜராஜேஸ்வரி |
| பஞ்சலிங்கங்கள் | சோமஸ்கந்தர் | மாஹேஸ்வரி |
| முருகன் | நடராஜர் | கௌமாரி |
| சந்திரசேகரர் | | பிராஹ்மி, வைஷ்ணவி |


## விஷேட அம்சங்கள், சிற்பங்கள்

பெரும்பாலான கோயில்களில் முருகனது வாகனமாக மயில் இடது பக்கம் நோக்கியே அமைந்திருப்பதைப் பார்க்கலாம். சிவன் கோயில் மூலவரான முருகனின் மயில் வாகனம் வலது பக்கம் நோக்கிய நிலையில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இப்படி வலது பக்கம் நோக்கிய நிலையில் அமைக் கப்பட்டிருப்பது ஒரு விதிவிலக்கான அம்ச மாகும் என்று சொல்லப்படு கின்றது.

அடுத்து கோயிலின் வடபகுதியில் வெளிப்பிரகாரத்தில் திருக்குளத்துக்கு முன்ப தாக முத்துமாரி அம்மன் கோயிலின் தேவ சபைக்கு நேர் எதிரே அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவு. இந்த அலங்கார வளை வில் நடுப்பகுதியில் இராமலக்ஷ்மணர், சீதை, அனுமாருடன் உள்ள சிற்பமும், இரு மருங்கிலும் விநாயகர், முருகன் சிற்பங் களும் அமைந்துள்ளன. இந்த அலங்கார வளைவில் இராமர், சீதை முதலானோரு டைய சிற்பங்கள் அமைக்கப்பட்டமைக்கு சரியான விளக்கம் பெற முடியாதுள்ளது. சிவன் கோயிலுக்கு அருகாமையில் முத்து மாரி அம்மன் கோயில் இருப்பதனால் இந்த முத்துமாரி அம்மனின் சக்தி கூடுதலாக இருக்கும் காரணத்தினால் இந்த கூடுதல் சக்தியைக் கட்டுப்படுத்தும் வல்லமை அனு மாருக்கு உள்ளமையினால் இந்த இராம லக்மணர் அனுமானுடைய சிற்பம் அமைக் கப்பட்டிருப்பதாக தெரிவிக் கப்படுகிறது.

கோபுரத்தில் அமைந்துள்ள சிற்பங் கள் பல புராணக்கதைகளை புலப்படுத்து கின்றதோடு ராஜகோபுரம் ஐந்து தளங் களையும் கொண்டுள்ளது. இராஜகோபு ரத்தில் நடராஜர் கால்மாறி ஆடிய வரலாறு, அர்சுனன் பாசுபதாத்திரம் பெறுவதற்காக தலைகீழாகத் தவம் செய்தல், பிச்சாடன மூர்த்தியை மோகினி மயக்கியது, வியாக்கிர பாதர் வடிவம், சிவன் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமப்பது போன்ற புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்களும், மகாத்மா காந்தியின் சிலை போன்றவற்றை உள்ளடக் கிய 400க்கு மேற்பட்ட சிற்பங்கள் அமைந் துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
கணபதி துணை

## வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர்
## ச.வைத்திலிங்கம்பிள்ளை அவர்கள் பாடிய வல்வை வைத்தியேசர்

## ஊஞ்சல் பாட்டு

காப்பு

சீரேறு பணிலங்க ளீன்ற முத்தைத்
திரை கொணர்ந்து வீசுகடல் வடபாலார்
நீரேறு செஞ்சாலி கழையினோங்கி
நிறைவயல்தென் பாலார விடையின் மேவும்
பேரேறு வல்வையென்னும் பதியில் வாழும்
பெண்ணையிடங் கொண்டவைத்தி யேசர்மீது
வாரேறு முஞ்சலிசை பாடவாங்கு
யானை முகவனடி வாழ்த்துவாமே.

நூல்

திருமேவு மாணிக்கக் கம்பம் நாட்டிச்
சிறந்தவயி டூரியவுத் திரமும் நீட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமேவு கிளிச்சிறைப்பொற் கயிறு பூட்டிக்
குணமேவு மரகதப்பொற் பலகை மாட்டித்
திருமேவு பொன்னுலக மகளிர் கூட்டித்
தகுசுருதியிசைபாடியாட்ட வாம
மருமேவு தையல்நாயகியி னோடு
வல்வை வைத்தியேசரே ஆடீரூஞ்சல்.

பொன்னாரும் நாதவிந்து கால்களாகப்
பொலிவாரும் சக்திசுடர் விட்டமாக
சின்னாரும் தந்திரங்கள் இழையதாகத்
திருவாருஞ் சதுர்மறையும் கயிறதாக
மின்னாரும் உபநிடதம் பலகையாக
விளங்குபிரணவபீட மீதின் மேவி
மன்னேரார் தையல்நா யகியினோடு
வல்வை வைத்தியேசரே ஆடீரூஞ்சல்.

கண்ணன் விழி நீர்சொரிந்து களிப்பாலாட
கமலமல ரயன்வேதம் பாடியாட
விண்ணிலுறை யமரர் மலர் தூவியாட
விஞ்சையர்யா ழிசைபாடி நீடியாட
மண்ணிலுறை முனிவர்மிக வாழ்த்திட
வானிலூர் வசிமுதலோர் மகிழ்வோடாட
வண்ணமுறு தையல்நா யகியி னோடு
வல்வை வைத்தியேசரே ஆடீரூஞ்சல்.

சாந்தியா தீதகலை சாந்தி வித்தை
தக்கபிர திட்டையொடு நிவிர்த்தி யென்ன
ஆய்ந்தகலை முடிமுகநெஞ் சோடு குய்ய
மகில்சானுப் புவனமுரோ மம்வன்னந் தோல்
ஏய்ந்திடுமந் திரஞ்சோரி பதநரம்போ
டெண்ணிடுதத் துவந்தசையா மூர்த்தங் கொண்டு
வாய்ந்தவருட் டையல்நா யகியினோடு
வல்வை வைத்தியேசரே ஆடீரூஞ்சல்.

முனி மகனை வெகுண்டுவரு காலன் தன்னை
முன்னுதைத்த வடியுடையீ ராடீரூசல்
பனிவரை மான் பாணிவிரற் பிறந்த கங்கை
பத்தடக்கு முடியுடையீ ராடீ ரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனமுனிவருளங் கறுத்தோர் மகமியற்றி
வரவிடுத்த துடியிடையீ ராடீரூஞ்சல்
மனமுறுநற் றையல்நா யகியினோடு
வல்வை வைத் தியேசரே ஆடீரூஞ்சல்.

செஞ்சடைமேல் நதியாட மதியுமாடச்
செங்கையில்மான் மறியாட மழுவுமாட
நெஞ்சிலணி சிரமாலை பணியொடாட
நீள் புலித்தோ லுடையரையி னெறியொடாட
செஞ்சரண மதிற்சிலம்பு கழலொடாடத்
தேனாடு நறியமலர் திகழ்வாடும்
வஞ்சியன தையல்நா யகியினோடு
வல்வை வைத்தியேசரே ஆடீரூஞ்சல்.

விடமேறும் கண்டரே யாடீரூஞ்சல்
விடையேறுங் கண்டரே யாடீரூஞ்சல்
நடமாடும் நாதரே யாடீரூஞ்சல்
நாகாடுங் காதரே யாடீரூஞ்சல்
மிடலார்பா லத்தரே யாடீரூஞ்சல்
விழியார்பாலத்தரே யாடீரூஞ்சல்
மடமானோர் தையல்நாயகியி னோடு
வல்வை வைத்தியேசரே ஆடீரூஞ்சல்.

அருவநான் குருவநான் கரூபா ரூப
மாமேறி யொன்றாக நவபே தங்கொண்
டொருவாறு நடித்துயிர்கள் நாதியாக
வுறுமாண வாதிமல நீக்கம் பெற்றே
திருவான சிற்சத்தி யோடா னந்தஞ்
சேர்ந்திடவே யருள்புரிமா தேவரேமன்
வரமேவு தையல்நா யகியி னோடு
வல்வை வைத்தியேசரே ஆடீரூஞ்சல்.

ஐம்பூத மதியருக்க னான்மா வாகு
மட்டவடி வானவரே யாடீரூஞ்சல்
செம்பாத சேவைபுரி யன்பருள்ளம்
செறிசோதி யானவரே யாடீரூஞ்சல்
அம்பாக நெடுமால் வில் மலையாக் கொண்டே
யவுணர்புர மட்டவரே யாடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வம்போதித் தையல்நா யகியினோடு
வல்வைவைத் தியேசரே ஆடீரூஞ்சல்

ஆவாழ வேதசிவா கமங்கள் வாழ
வருமறையோர் வாழமறை வாழநீர்சூழ்
பூவாழ விக்கோவி லியற்றுவித்த
புகழ்வேங்க டாசலன்றான் சுற்றத்தோடு
மேவாழ மெய்யடியார் கூட்டம் வாழ
வெழிற்புலவர் வாழவிவண் இனிதுமேவி
மாவாழத் தையல்நா யகியினோடு
வல்வைவைத் தியேசரே ஆடீரூஞ்சல்

### எச்சரிக்கை

சீரார் வல்வைத் தேவகோட்டஞ் சேரும் வயித்யேசா
ஏரார் தையல்நாயகிதன் நேசா எச்சரீக்கை
சோதீயுமை பாதி செழுஞ் சுடரே சுடர் விளக்கே
ஆதீதிருப்பூதீயணி யமலா எச்சரீக்கை
மணியே பெரும் பணியார்சடை மனனேயெம தன்னே
அணிசேர் வல்வைத் திருக்கோயில் வாழ் அரனே எச்சரீக்கை
பித்தாபிறைசூடி பெருமானே யருளாளா
நித்தா மறைமுதலாகிய நிமலா வெச்சரீக்கை

வேங்கடா சலேசன் றொழும் விண்ணோரதிபதியே
நீங்காவருட் தொழிலைந்தெனும் நிருத்தா எச்சரீக்கை
சத்தோடு சித் தானந்தமாம் தக்கவடிவுடைய
அத்தாவல்வை யுறையும்மல முத்தா வெச்சரீக்கை
அடியாருள்ளும் வடிவோடுவந் தருளும் பரசிவனே
முடியாவள நிறைவல்வையின் முதலே யெச்சரீக்கை
எருக்கோடறு கிதழித்தொடை யெழிலார் மதியரவு
பெருக்காறணி நிமிர்புன்சடைப் பெம்மானெச்சரீக்கை

### பராக்கு

ஏராரும் வல்வை வயித்தியேசா பராக்கு
இந்தணியும் செவ்வேணி யிறைவா பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காராரும் மாலமணி கண்டா பராக்கு
கையில்மான் கன்றேத்து கர்த்தா பராக்கு
வெண்ணீறு புனைந்தருளு மெய்யா பராக்கு
வேதாவரியறியா விமலா பராக்கு
மண்ணாதி தத்துவமேல் வரனே பராக்கு
மாமறையுங் காணரிய மணியே பராக்கு
அரவா பரணமணி ஐயா பராக்கு
அடியவருக் கருள் புரிய மன்னே பராக்கு
மருவாருங் கொன்றையணி வரதா பராக்கு
வாலாம்பிகா சமேத மன்னே பராக்கு

## லாலி


வானவர்கள் புகழ்கின்ற வல்வைவயித்யேசா
மாலொடய னறியாத வன்னவழற் றேசா லாலி லாலி
தானவன தொருகலையைச் சடையிலணி யரனே
தையல்நாயகியம்மை தனையமரும் பரனே லாலி லாலி
முனிமகனை வெகுண்டசமன் மொய்ம்பிலுதை பாதா
முனிவருள வனசமதில் முந்தியமர் நாதா லாலி லாலி
குனிவிலென மேருவரை குழைத்தருள்சங் கரனே
கூவுமா னொடுமழுவைக் கொண்டருள்சங் கரனே லாலி லாலி

## மங்களம்

வல்வையில்வாழ் தேவனுக்கு மங்களம் எங்கள்
வயித்தியலிங் கேசனுக்கு மங்களம்
கல்லை வில் லாய்க் கொண்டவற்கு மங்களம் லோக
காரணக ருத்தனுக்கு மங்களம்
அரியயற் கரியவற்கு மங்களம் - நல்ல
அன்பருக்கெ ளியவற்கு மங்களம்
துரியமுங் கடந்தவற்கு மங்களம் - மிகத்
தூரதூர மானவற்கு மங்களம்
எங்கும் நிறைந்தவற்கு மங்களம் - சரு
வேசுர னானவற்கு மங்களம்
நங்கட்க ருள்பவற்கு மங்களம் தையல்
நாயகி பங்கனுக்கு மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில்



பறங்கியர் காலத்துக்கு முன்னும் அவர்களுக்குப் பின் நீராவிக் கப்பல்கள் வரும் வரைக்கும் தென் இந்தியாவுக்கும், வட இலங்கைக்குமான தொடர்புகள் விசேடமாக வல்வெட்டித்துறைத் துறைமுக வழியாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இலங்கைக்கு மிகவும் கிட்டவுள்ள இந்திய பாகம் கோடிக் கரையாகும். கோடிக்கரைக்கும் வல்வெட்டித் துறைக்கும் ஒழுங்கான தோணிப் போக்கு வரத்து இருந்து வந்துள்ளது. தென் இந்தியத் தபால்கள் கோடிக்கரையில் வள்ளத்தில் ஏற்றப்பட்டு வல்வெட்டித்துறை வந்தடையும். சிவன் கோயிலுக்குச் சொந்தமான பெரிய கப்பல்கள் கட்டும் தளமான வாடியடிக்கு நேரே உள்ள 'வான்' ஊடாக தபால் பொதி கள் கரைக்குக் கொண்டு வரப்பட்டு இறக்கப் படும். வான் என்பது முருகைப்பாரிலுள்ள சிறிய இடைவெளியாகும். இந்த இடை வெளிக்கூடாகவே கப்பல்கள், வள்ளங்கள் கரையை நோக்கி வந்து செல்லும். இவ்வித மாகக்கொண்டு வரப்பட்ட தபால்பொதிகள் நெற்கொழு வைரவர் கோயிலுக்கு அருகா மையிலுள்ள பாதைவழியாகச் சென்று, தொண்டைமானாற்றினைக் காலாற் கடந்து சென்று இடைக்காடு அம்மன் கோவில் இருக்கும் இடத்திற் கணித்தாய் கரையைக் கடந்து அச்சுவேலி மார்க்கமாக யாழ்ப்பாணம் அதாவது நல்லூர் சென்றடைந்ததாகச் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் பாதை கள் (Road) இல்லாததோடு வண்டிப்பாதை களும் மிகவும் குறைவு.

இப்படியாகத் தென்இந்தியத் தபாற் போக்குவரத்து நடைபெறும் காலத்தில் ஒரு நாள் கோடிக்கரையிலிருந்து தபால்கள் வள்ளத்தில் ஏற்றப்பட்டு வள்ளம் புறப்படும் சமயம் ஒரு வயோதிப மாது வள்ளக்காரன் முன் தோன்றி தன்னையும் வள்ளத்தில் ஏற்றிக் கொண்டு சென்று இலங்கைக் கரையில் விடும் படி கேட்டனராம். வள்ளக் காரன் வயோதிப மாதுவுக்கு இலங்கைக் கரையில் பணிவிடையென்ன, வயோதிபத் தினால் புத்தி பேதலித்து விட்டதா என்று கிழவியை ஏற்றிச் செல்ல மறுத்து விட்டானாம். கிழவி விடாமுயற்சியுடன் திரும்பத் திரும்ப வற்புறுத்தவே வள்ளக்காரர்களில் ஒருவன் இலங்கைக் கரையில் எங்கே போகிறாயென வும் உனது ஊர்ப் பெயர் என்ன என்றும் கேட்டனன். கிழவி வல்வெட்டித்துறைக்குப் போக வேண்டுமெனவும் எனது ஊர்ப்பெயர் கயிலைமலை மாதரசி எனவும் கூறினர். என்ன காரணத்திற்காக போகிறாயென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் கேட்டபொழுது கிழவி பதில் பகர வில்லை. கடைசியாக வள்ள மோட்டிகள் கிழவியையும் வள்ளத்தில் ஏற்றிக் கொண்டு வல்வெட்டித்துறைக்கு வந்து சேர்ந்தனர். கரையில் இறங்கியதும் கிழவி வள்ளக் காரருக்கு ஆசிகூறிப் பிரிந்து சென்றனர்.

இது நடைபெற்ற இரண்டொரு நாட்களுள் தற்கால முத்துமாரி அம்மன் கோயில் கர்ப்பக்கிரகம் இருக்கும் இடத்தில் இரவிற் சில நேரங்களில் ஒரு ஒளி தென்பட்ட தாம். இப்பகுதி அக்காலப்பகுதியில் பற்றைக் காடாகவும் ஒற்றையடிப்பாதையை மட்டும் கொண்டுள்ளதாயும் இருந்தது. இப்படியான வெளிச்சத்தினைப் பல தடவை கண்ணுற்ற வல்வை வாசியொருவர் அவ்விடத்தில் உள்ள வேப்பமரத்தடியில் ஒரு கொட்டிலமைத்து வழிபட ஆரம்பித்தனர். இதுவே முத்துமாரி அம்மன் கோயிலுற்பத்தியெனக் கருதப்படு கின்றது.

வல்வெட்டித்துறைக்கு மிகச் சமீப மாக தென் இந்தியக் கடற்கரையின் கோடி யாக்கரையில் ஒரு முத்துமாரி அம்மன் கோயில் நெடுங்காலமாய் அழிந்து கிடக் கிறது. வல்வையில் கோயில் உற்பத்தியான காலத்திலேயே அக்கோயில் கைவிடப்பட்டு அழிந்து போயிருக்கலாமென ஊகிக்க கூடிய தாக இருக்கிறது.

துர்க்காதேவியை மறவர்குலத்த வரும் சகல தமிழரசர்களும் வணங்கி வந் துள்ளார்கள். அத்தோடு தங்கள் பாதுகாவற் றெய்வமாகவும் இவர்கள் துர்க்காதேவியை வணங்கி வந்துள்ளனர். இதன் காரணமாகவே நல்லூர் அரசர்களும் வீரமாகாளியம்மன் கோயிலை அங்கே ஸ்தாபித்து வணங்கி வந்தனர். மறவர் குலத்தவர்கள் குடியேறிய பாகங்களிலும் துர்க்கை கோயில்கள் ஸ்தாபிக் கப்பட்டன. பருத்தித்துறையில் சாமுண்டி யம்மன், வல்வெட்டித்துறையில் முத்துமாரி அம்மன், தொண்டைமானாற்றில் வீரமாகாளி யம்மன் மற்றும் இடைக்காடு, மாதகல், அராலி, நயினாதீவு, முதலிய இடங்களிலுள்ள அம்மன் கோயில்களெல்லாம் இந்நோக்க மாகவே உண்டாகின. அம்மன் கோயில்களே யாழ்ப்பாணத்தில் எங்கும் முதன் முதலாய் ஸ்தாபிக்கப்பட்டன வாய் தெரிகிறது. எனவே இக்கோயில்களெல்லாம் பறங்கிய காலத் தின் முன்னதாக நல்லூரரசர் காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும். அத்தோடு நல்லூரரசர்களுக்கும் மதுரையரசர்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்ததி னால் அவர்கள் காலத்திலேயே தபாற் போக்குவரத்துகளும் இடம் பெற்றிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. கூழங்கைச் சிங்கையாரியன் வந்த காலம் 1048ம் ஆண் டாகும். ஆனால் சில சரித்திர ஆசிரியர்கள் 1248 என்றும் கூறுகின்றனர். பறங்கியர் யாழ்ப்பாணம் வந்த காலம் 1617ம் ஆண்டாகும். ஆகையால் வல்வையில் முத்துமாரி அம்மன் வணக்கம் இக்காலங்களுக்கிடையில் ஆரம் பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

முதலில் இக்கோயில் மேலே கூறப் பட்டதன் பிரகாரம் வேப்ப மரத்தடியில் சிறிய கொட்டகையாகவே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். கற்கட்டடமாக அமைக்கப்பட்டி ருப்பின் பறங்கியர் காலத்தில் அழிக்கப்பட்டி ருக்கும். கற்கட்டடமாக அமைக்கப்பட்டி ருப்பின் அதற்கான அறிகுறிகளோ, அழிக்கப் பட்டிருக்குமேயானால் அதற்கான தடயங் களோ காணப்படவில்லை. கற்கட்டடம் ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரே அமைக்கப்பட்டதாகவே எண்ணக் கூடியதாக இருந்தாலும் 1400ம் ஆண்டில் கர்ப்பக்கிரகத்தில் அம்பாள் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டு நந்தி, பலிபீடம் என்பன நிறுவப்பட்டதுடன் தற்காலம் மணல் கிணறு என அழைக்கப்படும் கிணறே அம்பாளின் அபிஷேகத்துக்கு உபயோகிக்கப்பட்டதுடன் அர்ச்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டு காலை, மாலை இரு வேளைகளிலும் பூசைகள் நடை பெற்றதாகவும் சில அறிக்கைகள் தெரிவிக் கின்றன.

ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய 1795ம் ஆண்டு வேலாயுதர் புண்ணியர் என்பவரால் இக் கோயில் இராசிந்தான் மணல் என்னும் காணியில் வைரக் கற்களால் கட்டப்பட்டதாகவும் இவரே இக்கோயிலின் மணியமாக அக் காலப் பகுதியில் இருந்ததாகவும் தெரிய வருகிறது. 1796, 1864,1884ம் ஆண்டுகளில் அரசினரால் கோயில்களைப் பற்றிய விபரங்ளைக் குறித்து வைக்கப்படும் பதிவேடும் இந்த விபரத் தையே தெரிவிக்கின்றது. இப்புண்ணியர் என்பவர் எழுந்தருளி அம்மன், பிள்ளையார், சுப்பிரமணியர் விக்கிரகங்களை செய்வித்து சித்திரை மாதத்தில் 15 நாட்கள் உற்சவத்தி னையும் நடாத்தி வந்தார். இவர் அம்மன் கோயிலுக்குத் தென் கிழக்கில் ஒரு மடத்தை யும் கட்டியவரெனத் தெரிய வருகிறது.

1846ம் வருடம் பெப்ரவரி மாதம் 1ம் திகதி வடமராட்சிப் பிரசித்த நொத்தாரிசு கதிர்காமர் சிதம்பரநாதர் என்பவரால் முடிக் கப்பட்டு பதியப்பட்ட மகமை உறுதியில் இராசிந்தான் மணல் முத்துமாரி அம்மன் கோயில் நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றிற்கு கொடுக்கப்படவேண்டிய மகமை வீதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மகமை என்பது அக்காலத்தில் கப்பல் மாலுமிகளின் ஊதியத் திலிருந்து திரட்டப்படும் நிதிகளில் ஒன்றாகும். இந்த மகமை உறுதியில் பட்டம் கட்டி உடை யார், வைரவநாதர் வேலாயுதர், ஆறுமுகத் தார் விஸ்வநாதன், கந்தர் கதிர்காமன், கதிர்காமர் நாகமுத்து, வேலாயுதர் முருகன், திருமேனி குழந்தைவேலு, ஐயம்பிள்ளை ஆதிமூலம் இன்னும் நானூறு பேர் கைச் சாத்திட்டதோடு வல்வெட்டி விதானையாரும் தொண்டமானாறு விதானையாரும் சாட்சி களாகவும் கையொப்பமிட்டனர். இது தவிர நொத்தாரிசு கே.கணபதிப்பிள்ளையினால் 6.5.1868ல் முடிக்கப்பட்ட மகமை உறுதியில் நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலப்பிள்ளை யார் கோயில், இராசிந்தான் மணல் முத்து மாரி அம்மன் கோயில் பிட்டணிப்பிள்ளை யார் கோயில், வைகுந்தப்பிள்ளையார் கோயில் என்பவற்றிற்குத் கொடுக்கப்பட வேண்டிய மகமை வீதங்கள் திருமேனியார் குழந்தைவேற்பிள்ளை, வேலுப்பிள்ளை மயில்வாகனம், ஆறுமுகத்தார் விஸ்வ நாதன், கந்தப்பர் வாரித்தம்பி, சிற்றம்பலம் ஐயாச்சாமி, நாகமுத்து சோமநாதி இன்னும் இருபத்தி மூவர் கைச்சாத்திட்டுள்ளனர். மேற்படி மகமையை வசூலிப்பது செலவு செய்வது இவற்றுக்கான கணக்குகளைக் காட்டுவது போன்றவற்றை திருமேனியார் வெங்கடாசலம்பிள்ளை, சுப்பர் சண்முகம், கந்தப்பர் வேலுப்பிள்ளை, பெரியதம்பியார் ஆறுமுகம், வேதவனந்தார் வல்லிபுரம் ஆகிய ஐவர் நியமிக்கப்பட்டிருந்தனர். இக்காலத்தில் மேலே குறிப்பிட்ட நான்கு கோயில்களின் மணியமாக ஆறுமுகத்தார் முருகுப் பிள்ளை யென்பவர் இருந்துள்ளார். இந்த மணியத்திட மிருந்து கோயில் நகைகளையும் பொருட் களையும் மேலே கூறப்பட்ட ஐவர் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை பொறுப்பேற்க வேண்டுமென்றும் மணியம் ஒழுங்கான கணக்குகளை காட்ட வேண்டுமென்றும் மணியத்தை மாற்றி யமைக்கும் உரிமை இச்சபைக்கு இல்லை யென்றும் கோயில் சிப்பந்திகள் விலக நேரிட் டால் அவர்கட்குப் பதிலாக புதியவர்களை நியமிக்கும் பொறுப்பு சபைக்கு உரித்துண் டெனவும் மேற்படி சாசனம் தெரிவிக்கிறது. சிப்பந்திகளின் சம்பளம் முதலியவற்றை சபையே நிர்ணயித்துக் கொள்ள வேண்டு மென்றும் எல்லா விஷயங்களும் வருடாந்தம் மகாசபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டு மென்றும் இச்சாசனம் மேலும் தெரிவிக் கின்றது.

புண்ணிய மணியகாரனுக்கு அடுத்த படியாக வேலாயுதர் திருமேனியார் என்பவர் மணியமாகப் பொறுப்பேற்றார். இத்திரு மேனியார் புண்ணிய மணியகாரன் எனப் படும் புண்ணியமூர்த்தி என்பவரது சகோதர னாகும். திருமேனியார் சிவபதமடைய இவரது தமையனான ஞானமூர்த்தி என்ப வரது மகன் சங்கரியார் என்று அழைக்கப் படும் சங்கரப்பிள்ளையென்பவர் மணிய மாகப் பொறுப்பேற்றார். இவரே தற்போதும் பாவனையிலுள்ள சப்பரத்தைச் செய்வித்த வராவர். சங்ரப்பிள்ளையென்பவர் சிவபத மடைய பெரியவர் அல்லது 'பெரிய தம்பி' என அழைக்கப்படும் திருமேனியார் வெங்கடா சலம்பிள்ளை அவர்கள் 1840ல் மணியமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் ஆலயத் துக்கு தென் புறத்தில் திருக்குளமொன் றையும் புண்ணிய மணியகாரன் கட்டிய மடத்திற்கு மேற்குப் புறமாக ஒரு மடத்தை யும் உண்டு பண்ணி கோயிலைப் பராமரித்து வந்தார். இவரே கோயிலின் சுற்று மதிலையும் அமைத்தவர். 1867ம் வருடம் வல்வை சிவன் கோயிலுக்கு சங்குஸ்தாபனம் செய்து கட்டட வேலைகள் தொடங்கிய காலத்தில் அவ் வேலைப் பொறுப்பின் காரணமாக மேலே கூறப்பட்ட ஆ. முருப்பிள்ளையென்பவரிடம் கோயில் பொறுப்புக்களை 1868ம் வருடம் ஒப்படைத்தார்.

திரு.ஆ. முருகுப்பிள்ளையென்ப வருக்குப் பின் யார் மணியமாக இருந்துள் ளார் என்பது தெரியவரவில்லையாயினும் 1884ம் வருடம் யாழ் கச்சேரியில் பேணப் படும் பதிவேட்டில் அந்த வருடம் தாமர் செல்லையா என்பவர் மணியமாக இருந் துள்ளார். இவரும் மேலே குறிப்பிட்ட ஆ.முருகுப்பிள்ளை என்பவர் போல் நான்கு கோயில்களுக்கும் ஒரே நேரத்தில் மணிய மாக இருந்துள்ளார். இவருக்குப் பின் சில காலம் பெ.கதிர்காமத்தம்பி என்பவர் மணிய மாக இருந்துள்ளார். முன்னர் நான்கு கோயில்களுக்கும் ஒருவரே மணியமாக இருந்து வந்தாலும் பின்னர் முத்துமாரி அம்மன் கோயில் நெடியகாடு திருச்சிற்றம் பலப்பிள்ளையார் கோயில் ஆகியவற்றிற்குத் தனித் தனியே மணியம் நியமிக்கப்பட்டமை தெரியவருகிறது.

கதிர்காமத்தம்பி என்பவருக்குப் பின்னர் சு.க.தம்பிப்பிள்ளை என்பவர் சில வருடங்கள் மணியமாக இருந்தார். 1904ம் ஆண்டளவில் சம்புரோட்சண கும்பாபிஷேகம் நடைபெறவேண்டியிருந்தமையால் இதற் கான வேலைகளைச் செய்து முடிப்பதற்காக ஆ. நாகமுத்து என்பவர் மணியமாக நியமனம் பெற்றார். கும்பாபிஷேகம் நடந்து முடிந்த தன் பின்னர் மீண்டும் சு.க. தம்பிப்பிள்ளை அவர்கள் மணியமாகினார். இவருக்குப் பின்னர் நா.கனகசுந்தரம் என்பவரும் அவரைத் தொடர்ந்து ஆ.வேலுப்பிள்ளை என்பவரும் மணியமாகினார்கள். ஆ.வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மணியமாக இருக்கும் காலத்தில் கோயிலின் உட்பிரகாரத்துக்கு ஊர் மக்களின் உதவியோடு ஒரு பகுதிக்கு கொட்டகை போடப்பட்டது. இதற்கு முன்னர் உட்பிர காரம் வெளியாய் இருந்தது. திருவிழாக் காலங்களில் மாத்திரம் தற்காலிகமாக பந்தல் போடப்பட்டு உற்சவம் நடைபெற்று வந்தது. ஆ.வேலுப்பிள்ளை அவர்களுக்குப் பின்னர் வி.ச.செல்வவிநாயகம் அவர்களும் அவரையடுத்து இ.முத்துவேலு என்பவரும் இவருக்குப் பின் வி.ச. சோமசுந்தரம் அவர் களும் மணியமாக இருந்துள்ளார்கள். ஆ.நாகமுத்து என்பவர் மணியமாக இருக்கும் காலத்தில் 1905ம் வருடம் பெரிய எழுந்தருளி அம்மனின் விக்கிரகம் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதாகத் தெரிய வருகிறது.

1933ம் வருடம் வ.வ.இராமசாமிப் பிள்ளை அவர்கள் மணியமாக நியமிக்கப் பட்டார். இவர் மணியமாக நியமிக்கப்பட்ட வுடன் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பழைய கட்டடங்கள் யாவும் இடிக்கப்பட்டு புதிதாக திருப்பணி வேலைகள்ஆரம்பிக்கப்பட்டன.

**திருப்பணி வேலைகளைச் செய்தவர்களும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட திருப்பணி வேலைகளும்.**

(01) கர்ப்பக்கிரகமும் அர்த்த மண்டபமும்:
சி. செல்லத்துரையும்
பெண் வள்ளியம்மாளும்.

(02) மகாமண்டபமும் தரிசன மண்டபமும்:
வல்வைப் பொதுமக்கள்

(03) தேவசபை:
வ.வ.இராமசாமிப்பிள்ளையும்
பெண் இராசம்மாளும்.

(04) வசந்த மண்டபம்:
வே.வ. சிவப்பிரகாசம்
மு. விஸ்வலிங்கம் ஆகியோர்.

(05) விநாயகராலயம் :
பொ. தங்கவேலாயுதமும்
பெண் இராசரெத்தினமும்.

(06) சுப்பிரமணியராலயம் :
சி.ஆனந்தமயிலும்
பெண் விசாலாட்சியும்.

(07) சண்டேஸ்வரி ஆலயம்
ஆ. செல்லத்துரையும்
பெண் தங்கரெத்தினமும்.

(08) நந்தி,பலிபீடம் :
மா. இராசா

(09) தீர்த்தக்கிணறு
தா.சின்னத்தம்பியும்
பெண் தங்கப் பொன்னுவும்.

(10) யாகசாலை
வி.செல்வவிநாயகமும்
பெண் விசாலாட்சியும்.

(11) பூந்தோட்டக்கிணறு
வல்வைப் பொதுமக்கள்.

(12) உள்வீதிக் கொட்டகையில் ஓர் பகுதி
வல்வைப் பொதுமக்கள்.

மேற்படி திருப்பணி வேலைகள் யாவும் நிறைவெய்தியதும் 1935ம் வருடம் ஆனிமாதம் 24ம் திகதி திங்கட்கிழமை காலை அத்த நட்சத்திரத்தில் வேதாரணியம் சு.சோமசுந் தரக்குருக்கள் அவர்களால் சம்புரோட்சண கும்பாபிஷேகம் சிறப்பாக நடாத்தி வைக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே உள்பிரகாரத்தில் போடப் பட்டிருந்த ஒரு பகுதி கொட்டகை போக எஞ்சியிருந்த பகுதியில் 1952ம் வருடம் செ.வி.நடராஜா அவர்களினால் மேற்குப் பகுதியில் ஐந்து தூண் இடைவெளி முழு வதும் வெ.ம.இராமசாமி அவர்களினால் தேவசபையின் வாயிற் பகுதி முழுவதும் போட்டு முடிக்கப்பட்டது.

1943ம் வருடம் வல்வைப் பொது மக்களின் பங்களிப்புடன் மணிக்கோபுரமும், பெரிய மணியும் அமைக்கப்பட்டது. இந்த மணியில் வெடிப்பு ஏற்பட்டமையினால் புதிய தாக மணி ஒன்று வார்க்கப்பட்டு 1959ல் மணிக்கோபுரத்தில் பொருத்தப்பட்டது. வாகன சாலையும் இதே ஆண்டில் கட்டப்பட்டது. தேர் முட்டியும் சேதமடைந்திருந்தமையால் சி.விஷ்ணு சுந்தரம் அவர்களினால் புதிதாகக் கட்டிக் கொடுக்கப்பட்டது. வெகு காலமாகப் பாவனையில் இருந்த சிறிய மணியைப் பொருத்துவதற்கு ஏதுவாக கோபுரத்தின் தென்பகுதியில் இன்னொரு மணிக்கோபுர மும் அமைக்கப்பட்டது.

1957ம் வருடம் பழைய கோபுரத்தை இடித்து புதியதாக ஒன்றைக் கட்டுவதற்காக இவ்வாலயத்தில் 12ம் திருவிழாவை நடாத்து பவர்கள் முன் வந்தமையால் ஆரம்ப வேலை கள் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பழைய கோபுரமானது அழகு அம்சம் கொண்ட கட்டடக்கலையோடு இந்திய ஆலயங்களில் அமைக்கப்பட்டது போன்று இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது கோபுரம் என்றும் சொல்லப்படுகின்றது. வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டகருங்கற்கள், வெள்ளைக் கற்கள் என்பன புதிய கோபுரம் அமைப்பதற் காக பாவிக்கப்பட்டு கோபுர வேலைகள் நிறைவுற்றன.

மேலே குறிப்பிட்ட வேலைகள் யாவும் சிறந்த முறையில் பொதுமக்களின் பங்களிப் போடு செய்து முடிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 26.1.1967ல் பூச நட்சத்திரத்தில் அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சம்புரோட்சண கும்பாபிஷேகம் வேத ராணியம் சிவஸ்ரீ.வே. தியகராசாக் குருக்கள் அவர்களினால் நடாத்தி வைக்கப்பட்டது. வ. இ. வயித்திலிங்கம் அவர்களினால் காத்த லிங்கம் ஆலயம் வெள்ளைக்கல் திருப்பணி வேலைகள் இதே காலப்பகுதியில் மேற் கொள்ளப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது .

முத்துமாரி அம்பாளுக்கு சித்திரத் தேர் ஒன்று அமைக்க வேண்டு மென்ற வல்வை மக்களின் ஆவல் 1977ம் வருடம் கை கூடியது. 14.9.1977ல் இதற்கன வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1979ம் வருடம் பூர்த்தியாக் கப்பட்டது. தேர்த்திருப்பணிக்கான வேலை கள் கா.சண்முகம் ஸ்தபதியினது தலைமை யில் மேற் கொள்ளப்பட்டன. திருப்பணி வேலைகள் முடிவுற்று 9.5.1979ல் புதிய தேர் வெள்ளோட்ட விழா சிறப்பாக நடந்தேறிய துடன் இதன் நினைவாக சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. பிள்ளையார், முருகன் ஆகியோருக்கான சித்திரத் தேர் களைச் செய்து கொள்வதற்கு பொது மக்கள் முன்வந்தமையால் அம்பாளுடைய தேரை விட சிறியதாக இரண்டு தேர்கள் 1980ல் அமைக்கப்பட்டன. அம்பாளுடைய தேர் ரூ.194,000 அளவிலும் பிள்ளையார் முருகன் இருவரது தேர்கள் ரூ110,000 அளவிலும் செலவு செய்து அமைக்கப்பட்டன. பூங்காவன மண்டபமும் வல்வைப் பொது மக்களினால் கட்டிக் கொடுக்கப்பட்டது.

1978ம் வருடம் சி.வேலும் மயிலும் ஐயர் அவர்களினால் மின் இணைப்பினைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்படுத்துவதற்கான சிறிய அறையொன்று வசந்த மண்டபத்துக்கு அருகில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

திரு.வ.இராமசாமிப்பிள்ளை அவர்கள் தான் ஆற்றி வந்த சேவையை சிலர் 1969ம் வருடம் ஆட்சேபிக்கத் தொடங்கி அவருக்கு எதிராக சில குற்றச்சாட்டுகள் அடங்கிய எழுத்து வடிவிலான முறைப்பாட்டினை 14.10.1969ல் யாழ்ப்பாண அரச அதிபருக்குச் சமர்ப்பித்தனர். இதனை விசாரிப்பதற்கு ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் அறிக்கை 9.9.1970ல் அரச அதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதோடு அந்த அறிக்கையில் முத்துமாரி அம்மன் கோயில் யாழ் மாவட்டத்தில் தலை சிறந்த கோயில்களில் ஒன்றாகுமென்றும் இக் கோயிலில் இருக்கும் ஏராளமான வாகனங்களும் மற்றும் உபகரணங்களும் யாழ்ப்பாண வட்டாரத்திலுள்ள வேறெந்தக் கோயிலிலும் காண இயலாதெனப் புகழ்ந்து கூறலாமென்றும் இவ் வேலைகள் அனைத்தும் 1938ம்ஆண்டுக்குப் பின்னரே கோயில் மணியத்தினாலும் வல்வை வாழ் அடியார்களினாலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கின்றதென்பதை ஆதார பூர்வமாய்க் கருத வேண்டியுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை நிறைவேற்றி வைத்த பெருமை மணியத்தையும் தன்னலங்கருதாது அன்பளிப்புச் செய்த வல்வை வாழ் மக்களையும் சார்ந்ததாகும். நீதிமன்றத்தின் அங்கீகாரத்தின் பொருட்டு ஒரு முகாமைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு 11.8.1976ல் மாவட்ட நீதிபதியால் அங்கீகரிக்கப்பட்டது மேற்படி மாவட்ட நீதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்திட்டத்தின் பிரகாரம் தேவஸ்தானத்தின் மகாசபை அங்கத்தவர் பட்டியல் ஒன்றினைத் தயாரிப்பதற்கும், மகாசபையின் ஆரம்பக் கூட்டத்தை நடாத்தி அக் கூட்டத்தில் தலைவர், செயலாளர், பெருளாளர் உட்பட தர்மகர்த்தா உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்காக நீதி மன்றத்தினால் ஆணைக் குழு நியமிக்கப்பட்டு 3.9.1978ல் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டது. இக் கூட்டத்தில் தலைவராக வ.இராமசாமிப்பிள்ளையவர்களும் செயலாளராக பொ. பாலவடிவேல் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு கோயில் காரியங்கள் நடைபெற்றதோடு அடுத்த மகாசபைக் கூட்டம் 1983ம்வருடம் புரட்டாதி மாதத்தில் கூட்டப்பட்டு புதிய தர்மகர்த்தாசபை தெரிவு செய்யப் பட்டது. மகாசபை அங்கத்தவராவதற்குத் தகுதிவாய்ந்த ஆயிரமாயிரம் அடியார்கள் இருந்தும் 94 உறுப்பினர்கள் கொண்ட ஒரு பட்டியல் தான் செயலாளரினால் நீதிஸ்தலத்தில் ஒப்படைக்கப்பட்டு 1983ம் வருடம் நடந்து முடிந்த மகாசபைக் கூட்டத்தில் 60 அங்கத்தவர்கள் தான் சமூகமளித்து தலைவர் பதவிக்கான பெரும்பான்மை பலத்தைப் பெறத்தவறி 1983ம் வருடம் புரட்டாதி மாதத்திலிருந்து வெளியேறினேன்.

மேற்கண்டவாறு திரு.வ.இராமசாமிப்பிள்ளை அவர்கள் 1984ம் வருடம் சித்திரை மாதம் 5ம் திகதி வெளியிட்டுள்ள 'வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் சரித்திரம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். எனினும் ஆணைக்குழுவினரால் கீழ்வரும் அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டதை இங்கு குறிப்பிடவேண்டும்.

(அ) 29.4.1946ம் வருடம் பிரசித்த நொத்தாரிசு கு.இரத்தினசிங்கம் அவர்களால் முடிக்கப்பட்ட 745ம் இலக்க உறுதிப்படி பிரதிவாதியான மணியம் வ.இராமசாமிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையவர்கள் ஏக தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்ட விடயம். ஆனால் கூட்டக் குறிப்பின்படி ஏகமனதாக கோயில் மணியமாக நியமிக்கப்பட்டாரேயன்றி ஏக தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட வில்லை. 1933ம் ஆண்டு தொடக்கம் மணியமாக இருந்தாலும் இதுதான் முதன் முறையாக உறுதிமூலம் முடிக் கப்பட்ட நியமனப்பத்திரமாகும்.

(ஆ) கோயில் வரவுகள், நன்கொடைகட்கு பற்றுச்சீட்டுக் கொடுப்பதில்லை. செலவு செய்யப்பட்ட பணத்திற்கு ஆதாரமாக சாதனம் செலவுச் சிட்டைகள் காட்டப்பட வில்லை. காசுப்புத்தகம் பேரேடு மற்றும் நம்பிக்கை தரக்கூடிய கணக்குப் புத்த கங்கள் எதுவும் முறைப்படி எழுதப்பட வில்லை. கணக்குகள் பரிசோதிக்கப்பட வில்லை

(இ 1933க்குப் பின் 1938ல் கூட்டப்பட வேண் டிய மகாசபை 1941ல் தான் கூட்டப் பட்டது.

(ஈ) 1951ல் நடைபெற்றிருக்க வேண்டி மகா சபைக் கூட்டம் 1955ல் தான் நடந்தது.

(உ) 1960ல் நடந்திருக்க வேண்டிய மகா சபைக் கூட்டம் 1962ல் தான் நடந்தது.

(ஊ) 1967ல் கூட்டப்பட வேண்டிய மகாசபை 1970ல் தான் கூட்டப் பட்டது.

(எ) 1933ம் ஆண்டு தொடக்கம் 5 வருடங் களுக்கு ஒரு தடவை கூட்டப்பட வேண் டிய மகாசபைக் கூட்டங்கள் ஒழுங்கு விதிப்படி நடைமுறையிலில்லை. 1933ம் ஆண்டு தொடக்கம் வ. இராமசாமிப் பிள்ளை தன்னைக் கோயிலின் நிரந்தர மான ஒரு மணியமாக எண்ணங் கொண்டு விட்டார் என்பதற்கு எவ்வித சந்தேகமுமில்லை. அங்கத்தவர்களும் விரும்பியோ விரும்பாமலோ ஆட்சேப னையின்றி ஒத்துக் கொண்டு வந்திருக் கிறார்கள் என்பது தெளிவாகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

1983ம் வருடம் புரட்டாதி மாதம் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வ. இராமசாமிப்பிள்ளை அவர்கள் மணியம் பொறுப்பிலிருந்து வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து சி.வே.சிவசுப்பிரமணியம் அவர் கள் மணியமாகப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் கோயிலில் முக்கியமன திருப் பணி வேலைகளோ இதர வேலைகளோ நடைபெற்றதாகத் தெரியவில்லை. இக் கால கட்டத்தில் ஊரிக்காடு இராணுவ முகாமி லிருந்து எறிகணை வீச்சுக்கள் மற்றும் கெடு பிடிகள் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து ஆலயத்தின் மேற்குப் பகுதியில் வசித்த மக்க ளும், ஆலயத்தைச் சூழ இருந்த மக்களும் இடம் பெயர்ந்து பிற இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. சி.வே. சிவசுப்பிர மணியம் அவர்கள் தொடர்ந்தும் மணிய மாகச் செயற்பட முடியாத காரணத்தினால் 16.3.1986ல் நடைபெற்ற மகாசபைக் கூட்டத் தில் க.இராசசுந்தரம் அவர்கள் மணியமாகத் தெரிவு செய்யப்பட்டார். இவரது காலத்திலும் குறிப்பிடத்தக்கதாக வேலைகளெதுவும் மேற் கொள்ளப்பட்டதாக இல்லை. இவரது காலத் தில் 1987ம் வருடம் மேற்கொள்ளப்பட்ட லிபரேசன் ஒப்பரேசன் இராணுவ நடவடிக் கையின் போது கோயிலுக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. இதன் பொருட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21.8.1987ல் பிராயச்சித்த கும்பாபிஷேகம் ஒன்று நடைபெற்றது.

16.3.1986ல் கூடிய மகாசபை முன்னர் மாவட்ட நீதிபதியால் 11.8.1976ல் அறிமுகப் படுத்தப்பட்ட முகாமைத்திட்டத்தில் குறிப் பிட்டது போல் ஒரு சில மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்கள் மட்டும் பொதுச்சபை (மகா சபை) உறுப்பினர்களாக அல்லாது கோயிலைப் பொதுஸ்தாபனமாக்கி புதியதொரு முகாமைத் திட்டத்தை உருவாக்கி அதன் பிரகாரம் நிர்வாகம் மேற்கொள்ளப்பட வேண்டு மெனத் தீர்மானித்தது. இதன் பிரகாரம் 19.4.1987ல் நடைபெற்ற மகாசபைக் கூட்டத் தில் புதியதாகத் தயாரிக்கப்பட்ட முகாமைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டது.

29.1.1989ல் கூடிய மகாசபை வ.இ.நடனசிகாமணி அவர்களை மணிய மாகத் தெரிவு செய்தது. அத்தோடு பாலஸ் தாபனம் செய்யப்பட்டு புனரமைப்பு வேலை கள் மேற் கொள்ளப்படுவதற்கு ஏதுவாகப் புனரமைப்பு சபை ஒன்றும் அமைக்கப்பட்டது 1991ம் வருடம் தை மாதம் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆகாய விமானத் தாக்கு தல்கள், எறிகணை வீச்சுக்கள் என்பனவற்றால் பலத்த சேதங்கள் ஏற்பட்டதுடன் சண்டேஸ் வரி ஆலயம் முற்றாகத் தரை மட்டமாகியது. அதிஷ்டவசமாக சண்டேஷ்வரி விக்கிரகத்துக் கோ, இதர விக்கிரகங்களுக்கோ சேதமெது வும் ஏற்படவில்லை. சீமெந்து, மற்றும் இதர பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவி யமையால் பாரிய திருத்தங்கள் ஒன்றும் உடனடியாக மேற்கொள்ளப்படவில்லை. பொதுமக்களின் உதவியுடன் சேதமாக்கப் பட்ட ஓடுகள் சுவர்களின் உடைவுகள் அப் புறப்படுத்தப்பட்டு திருத்தங்கள் மேற் கொள் ளப்பட்டு பூசைகள் தொடர்ந்து மேற்கொள் ளப்பட்டன. 1993ம் வருடம் வ.இ.நடனசிகாமணி அவர்கள் பதவி விலகியதைத் தொடர்ந்து 2001 வைகாசி மாதம் சு.குகப்பிரசாதன் அவர்கள் தலைவராகத் தெரிந்தெடுக்கப் படும் வரை ஐந்து பேர் வரை ஒருவர் பின் ஒருவராக தலைமைப்பதவியை ஏற்றார்கள். இக் காலப்பகுதியில் பாரிய வேலைகள் எதுவும் நடைபெறவில்லையாயினும் 1991ல் விமானக் குண்டு வீச்சினால் சேதமாக்கப் பட்ட சண்டேஸ்வரி ஆலயம் ஆ.செல்லத் துரைத் தண்டயல் அவர்களது குடும்பத்தி னரால் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டு 22.3.1995ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1996ம் வருடம் சித்திரை மாதம் மஹோற்சவ ஆரம்ப நாளன்று அதிகாலை யிலே அரசினரால் கால வரையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. மஹோற்ச வத்தை ஆரம்பிப்பதோ ஒத்திப்போடுவதோ என ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டது. பொதுமக்களின் விருப்பத்தின் படி மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பெரும்பாலான ஊர்மக்கள் ஊரைவிட்டு இடம் பெயர்ந்து சென்றதோடு தர்மகர்த்தாசபை உறுப்பினரில் ஒரு பகுதி யினரும் இடம் பெயர்ந்து சென்றனர். மஹோற்சவ 3ம் நாளன்று கோயிலுக்குச் சமீபமாக ஆகாய விமானக் குண்டுத் தாக்கு தலும் இடம் பெற்றது. ஆலய வீதிகள் சுவாமி வீதிவலம் வரமுடியாத நிலை கூட ஏற்பட்டது. யாழ் நகரிலிருந்து இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இராணுவம் முன்னேறி வந்து கொண்டிருந்த நிலையிலும் தொடங் கிய மஹோற்சவம் பாரிய இடையூறின்றி நடைபெற்றதோடு அம்பாள் ஊறணி சமுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரத்திற்குச் சென்று தீர்த்தமாடி ஆலயம் திரும்பி வரும்வரை நடைபெற்று முடிந்தது.

28.1.2001ல் கூடிய மகாபைக் கூட்டத்தில் மா.நடனசிகாமணி அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து பாலஸ்தானம் நடாத்தப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்குவதென தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 7.6.2001 அன்று வியாழக்கிழமை அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் அவர்களினால் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடாத்தி வைக்கப்பட்டது. இதற்கிடையில் மா.நடனசிகாமணி அவர்கள் பதவி விலகியதைத் தொடர்ந்து சு.குகப்பிரசாதன் அவர்கள் தர்மகர்த்தா சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் நிதியுதவி குறைவின்றிக் கிடைத்ததும் திருப்பணிவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆலய வெளிப்புறச் சுவர், வசந்த மண்டபம், களஞ்சிய அறை, யாகசாலை, மடப்பள்ளி, குருக்கள் அறை, சிறிய களஞ்சிய அறை, வாகனசாலை என்பன உடைக்கப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. உட்பிரகார நிலம் முழுவதும் புதிதாகப் போடப்பட்டது. யாகசாலை மணிக்கோபுரம் இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதி தென்பக்கமுள்ள சிறிய களஞ்சிய அறையிலிருந்து வாகனசாலை வரையான பகுதி என்பன சீமெந்தினால் மேல் தளமிடப்பட்டு அலங்காரமாக அமைக்கப்பட்டது. இராஜகேபுரத்திற்குத் தென்புறமாக உள்ள மணிக்கோபுரத்தில் புதிய மணியொன்று பொருத்தப்பட்டது. ஆலய விமானங்கள் கோபுரம் என்பன பழுதடைந்திருந்தமையால் விமானங்கள் புதிதாய் அமைக்கப்பட்டதோடு கோபுரம் பழுதுகள் சரிபார்க்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டன. ஆலய முன்பக்கத்திலுள்ள மடத்தின் ஒரு பகுதி இடிக்கப்பட்டு புதிய வாகனசாலையொன்றும் அமைக்கப்பட்டது. தம்பமண்டபத்தில் உள்ள பலிபீடத்தின் முன்பாக உள்ள நந்திக்குப் பதிலாக சிங்கம் மாற்றி அமைக்கப்பட்டது. இவ் வேலைகள் யாவும் நிறைவெய்தியதும் 7.6.2002 வெள்ளிக்கிழமை அச்சுவினி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் துவாதசித்திதியும் கூடிய சிங்க இலக்கின சுபமுகூர்த்த வேளையில் அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் அவர்களால் கும்பாபிஷேகம் நடாத்தி வைக்கப்பட்டது.

**திருப்பணி உபய விபரங்கள் வருமாறு.**

01) மூலஸ்தானமும் அர்த்த மண்டபமும்
செ. அருட்பிரகாசமும்பிள்ளைகளும்.

02) பிள்ளையார் ஆலயம்
தங்கவேலாயுதம் தங்கத்துரை.

03) முருகன் ஆலயம்
ஆனந்தமயில் சரவணமுத்து

04) காத்தலிங்கம்ஆலயம்
வ.இராமசாமிப்பிள்ளையும்
புத்திரர்களும்.

05) தம்பப்பிள்ளையார் தம்பம்
ஆ. பாலசுப்பிரமணியம்.

06) சண்டேஸ்வரி ஆலயம்
தங்கவடிவேல் இராசகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) எழுந்தருளி மண்டபம் (சபை)
இராமசாமிப்பிள்ளையும்
புத்திரர்களும்.

08) உள்வீதி தம்பமண்டபத்தடி
வில்லுப்பந்தல் புதியது
மதனசுந்தரம் ஸ்ரீதரன்.

09) தெற்கு வாசல் முகப்பு அலங்கார வளைவு
பாலசுப்பிரமணியம்
கமலசுந்தரி அம்மா குடும்பம்.

10) இராசகோபுரம்
12ம் திருவிழா உபயகாரர்கள்.

11) வசந்தமண்டபம் மாபிள்வேலை,
பித்தளை அலங்காரம்
தி.விஜயரத்தினம் குடும்பம்.

12) மணிக்கோபுரம்
கனடா வாழ் வல்வை மக்கள்.

13) வைரவசுவாமி ஆலயம்
க.முருகமூர்த்தி.

**தற்காலப் பூசைகள் உற்சவங்கள்.**

**(அ) நித்தியபூசை :-**

தினமும் நான்கு காலப்பூசைகள் இடம் பெறும்.

i) உதயப்பூசை:

அதிகாலை 5.45 மணிளவில் மூல மூர்த்தி உற்சவ மூர்த்தி ஆகியோருக்கு.

ii) காலைப்பூசை :-

பகல் அபிஷேகத்தைத் தொடர்ந்து விநாயகர், அம்பாள், உற்சவமூர்த்தி, முருகன், தம்பப்பிள்ளையார் சிம்மம் பலிபீடம் காத்தலிங்கம் சண்டேஸ்வரி ஆகியோருக்கு இதன் பின்னர் வெளிப் பிரகாரத்தில் அமைந்துள்ள வைரவ சுவாமிக்கு

iii) உச்சிக்காலப்பூசை :-

நண்பகல் 11.00 மணிக்கு மூல மூர்த்தி, சிம்மம் பலிபீடம், உற்சவ மூர்த்தி களுக்கு.

iv) இரவுப்பூசை :

அபிஷேகத்தைத் தொடர்ந்து 6.00 மணியளவில் விநாயகர், அம்பாள், உற்சவமூர்த்திகள், முருகன், தம்பப் பிள்ளையார், சிம்மம், பலிபீடம், காத்த லிங்கம், சண்டேஸ்வரி ஆகியோருக்கு.

**ஆ) வாராந்தபூசை, உற்சவம் :-**

சுக்கிரவாரம் :-

இரவுப்பூசையைத் தொடர்ந்து அம்பா ளுக்கு விஷேடபூசை இடம் பெறுவ துடன் வீதிவலம் வருதலும்.

**இ) வருடாந்தபூசை, உற்சவம் :-**

i) மஹோற்சவம் :-

சித்திரை மாதப் பௌர்ணமி நாளை இறுதி நாளாகக் கொண்டு 15 தினங் கள் நடைபெறும் முதல் நாள் உற்ச வம் பஞ்சகிருத்தியங்களில் ஒன்றான படைத்தற் தொழிலை உணர்த்தும் கொடியேற்ற விழா. பகல் சூரியப்பிர பையில் இரவு சந்திரப்பிரபையில் வெளி வீதியுலா எட்டாம் நாள் வேட்டைத் திருவிழாவும், 10ம் நாள் பகல் அம்பாள் சிவலிங்கப்பூசை செய்கின்ற பாவனை யில் பூந்தொட்டியிலும், இரவு பூத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டிகையிலும் வீதியுலா. 11ம் நாள் பகல் வசந்தோற்சவம், 13ம் நாள் சப்பரம், 14ம் நாள் சித்திரத்தேரில் வீதியுலா. 15ம் நாள் ஊறணி சமுத்திரத்தில் தீர்த்தம். இரவு இந்திர விழா நிகழ்ச்சிகள் முடிவுற்றதும் ஆலயம் திரும்பி கொடியிறக்க உற்சவம். தீர்த்தோற்சவம் முடிவடைந்து அடுத்து வரும் திங்கள் அல்லது வெள்ளிக்கிழமை குளிர்த்தி அபிஷேகமும் இரவு கற்பூரத்திருவிழாவும் .

ii) வைகாசிப் பொங்கல் :-

வைகாசி மாதத்தில் வரும் பௌர்ணமியை அண்மித்த திங்கட்கிழமையில் நடைபெறுவது.

iii) சங்காபிஷேகம் கும்பாபிஷேகதினம் :

கும்பாபிஷேகம் இடம் பெற்ற வைகாசி மாத அச்சுவினி நட்சத்திரத்தில் மூல மூர்த்திக்கு 1008 சங்கினாலும், பரிவார மூர்த்திகளுக்கு விஷேட அபிஷேகமும் இடம்பெறும். இரவு சிங்க வாகனத்தில் வீதிவலம் வந்து ஊஞ்சல் பாட்டுடன் விழா நிறைவு பெறும்.

iv) ஆடிப்பூரம் :-

ஆடிமாதத்தில் வரும் பூர நட்சத்திரத்தில் காலையில் ருது சாந்திக் கருமம் நடைபெறும். இரவுப் பூசை முடிந்ததும் அம்பாள் ஆலய வாசலில் எழுந்தருளி வந்திருந்து ஊறணியில் தீர்த்தமாடி விட்டு திரும்பிவரும் வாலாம்பிகா என்னும் பார்வதியாகிய அக்காவை வரவேற்ற பின் வீதிவலம் வருவர்.

v) ஆவணிச் சதுர்த்தி :

விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேகம் , பூசை என்பன முடிவுற்ற பின் வீதியுலா இடம் பெறும்.

vi) நவராத்திரி பூசை :-

ஒன்பது நாட்கள் கொலுப்பூசை இடம் பெறுவதோடு ஒன்பதாம் நாள் மகிடாசுர சம்காரமும் பத்தாம் நாள் விஜய தசமி அன்று அரக்கர்களை அழித்தருளும் பாவனையாக வன்னிமரக்கிளையையும், கன்னி வாழையையும் வெட்டி வீழ்த்தும் நிகழ்வு இடம் பெறும். இது நிறைவுற்றதும் ஆலயம் திரும்பி வந்து வாசலில் இருந்து கொண்டு வைத்தீஸ்வர பெருமான் மானம்பூ உற்சவத்தை முடித்துக் கொண்டு திரும்பிவரும் போது அவரை வரவேற்று உபசரிப்பு இடம் பெறும்.

vii) தீபாவளி விசேடபூசை :-

தீபாவளியன்று அதிகாலை அபிஷேகம் இடம் பெற்று புத்தாடை புனைந்து தோசையும் ரசமும் நைவேத்தியமும் வைக்கப்பட்டு விசேட பூசை இடம் பெறும்.

viii) கந்த ஷஷ்டி பூசை :-

ஐப்பசிமாதத்தில் முருகப் பெருமானுக்கு ஆறு நாட்கள் விசேட அபிஷேகம், பூசை என்பனவும் ஏழாம் நாள் அதிகாலையில் பாறணைப் பூசையும் இடம் பெறும்.

ix) திருக்கார்த்திகை :-

கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தில் முருகப் பெருமானுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட அபிஷேகம் பூசை என்பன நடைபெறுவதோடு வீதியுலாவும் இடம் பெறும்.

x) சர்வாலயதீபம் :-

கார்த்திகை மாதத்துப் பௌர்ணமி யன்று அம்பாளுக்கு விசேட பூசை இடம் பெற்றதன் பின்னர் எழுந்தருளி வந்து வாசலில் அமைக்கப்பட்டிருக் கும் சொர்க்ககிரி என்னும் வடிவத்தை எரித்த பின்னர் வீதியுலா இடம் பெறும்.

xi) திருவெம்பாவை உற்சவம் :-

மார்கழி மாதத்தில் திருவாதிரை நாளுக்கு முந்திய ஒன்பது நாட்களும் அதிகாலையில் விஷேட அபிஷேகம் பூசை என்பன இடம் பெற்று திருவெம் பாவை பாடல் இசைக்கப் பெற்ற பின்னர் அம்பாள் வீதி வலம் வருவார். பத்தாம் நாள் விசேட அபிஷேகம் பூசை என்பன முடிந்த பின்னர் திருவெம் பாவை பாடல் இசைக்கப் பெற்று அம் பாள் பரிவார மூர்த்திகள் சகிதம் இந் திர விமானத்தில் வீதி வலம் வருவர்.

xii) மாரி தேவி உற்சவம் :-

பங்குனி மாதத்தில் வைத்தீஸ்வரப் பெருமானுடைய மஹோற்சவம் ஆரம் பிப்பதற்கு முன்னர் பெரும்பாலும் வெள்ளி அல்லது திங்கட்கிழமையில் அவ்வாலய பிரதமகுரு அம்பாள் ஆலயத்துக்கு வருகை தந்து மூல மூர்த்தி, உற்சவமூர்த்தி ஆகியோ ருக்கு விசேட பூசை நடத்தி வைப்பர். இது நிறைவெய்தியதும் அம்பாள் சிங்க வாகனத்தில் வீதி வலம் வருவர்.

பரிவார மூர்த்திகள்.

1) விநாயகர்
2) சுப்பிரமணியர்
3) தம்பபப்பிள்ளையார்
4) காத்தலிங்க சுவாமி
5) சண்டேஸ்வரி

**ஆலயத்தின் அசையாச் சொத்துக்கள்.**

ஆலயத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள குருக்கள் தங்கும் இடம் வ.இராமசாமிப்பிள்ளை அவர்களால் வாங் கப்பட்டு ஆலயத்துக்குத் தர்ம சாதனமாக எழுதப்பட்டுள்ளது. இந்தக் காணியின் பரா மரிப்பாளராக (trustee) அவரது மூத்த மகன் ஆனந்தவேல் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள தாக தெரியவருகிறது. இது தவிர ஆலயத் துக்கு கிழக்குப் புறமாக உள்ள மடம் 1975ல் நா.அ.மார்க்கண்டு சகோதரர்களால் தர்ம சாதனமாக எழுதப்பட்டுள்ளது. வடபகுதியில் முன்னர் தபாற்கந்தோர் அமைந்திருந்த காணியும் தர்மசாதனமாக எழுதப்பட்டுள் ளது. ஆலயத்தின் வடமேற்குப் பகுதியில் குளத்துடன் ஐந்து பரப்புக் கொண்ட ஒரு காணியும் சமரபாகுக் குறிச்சியில் முப்பது பரப்பு கொண்ட ஒரு காணியும் தருமசாதனம் செய்யப்பட்டுள்ள போதிலும் அதன் பராமரிப் பாளர் யார் என்பது போன்ற முழு விபரமும் அறியமுடியாதிருக்கின்றது. இதைவிட வவுனியா வைரவர் புளியங்குளம் பகுதியில் இரண்டு ஏக்கர் கொண்ட இன்னொரு காணி முத்து மாரி அம்மன் கோயிலுக்கும், நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயிலுக்கும் தர்மசாதனஞ் செய்யப்பட்டு அதன் பராமரிப் பாளராக தர்மசாதனஞ் செய்தவரின் உறவி னரான ஐயாமுத்து அவர்கள் நியமிக்கப்பட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தார். இந்தக் காணி பெறுமதி மிக்கதொன்றாகவும் இதன் மூலம் நிறைய வருமானம் பெறக்கூடியதாக இருந்த போதிலும் ஆலயம் இரண்டுக்கும் எதுவித வருமானமும் கிடைப்பதில்லை.

## ஆலயத்தில் நிறைவேற்றப்படும் நேர்த்திக் கடன்கள்.

இவ்வாலயத்தில் அடியார்கள் நேர்த்தி வைத்து தீக்குளிப்பு, கரகம், பாற்செம்பு, எடுத்தல் என்பனவற்றை நிறைவேற்றி வைப்பர். இது தவிர சூரியனது கடும் வெப்பத்தினால் சின்னமுத்து, பொக்கிளிப்பான், செங்கண்மாரி போன்ற நோய்களாற் பீடிக்கப்பட்டிருக்கும் காலங்களில் நேர்த்தி வைத்து நீர்ச்சாதம் போன்றவற்றை அம்பாளுக்கு நைவேத்தியம் வைத்துக் கொள்வர். இன்னும் சில அடியார்கள் மடிப்பிச்சை எடுத்து வந்து ஆலயத்தில் காணிக்கை இடுவர். வேறு சிலர் நேர்த்தி வைத்துப் பொங்கலிடுவர். உற்சவ காலங்களில் சில அடியார்களினால் அங்கப் பிரதட்சணம் மேற்கொள்ளப்படும்.

## முத்துமாரி அம்மன் உற்பத்தி மூர்த்தி விஷேடம்.

முன்னொரு காலத்தில் கைலயங்கிரி நாதனாகிய சிவபிரான் தமது பாகத்திலிருந்த பாலாம்பிகை அம்பிகையைப் பார்த்து தமது மேனியினின்றும் விபூதியை எடுத்துக் கொடுத்து இதனைக் கொண்டு உலகில் ஐந்தொழில்களையும் நிகழ்த்தி வருக என்று பணித்தார். உமாதேவியார் தம்மில் இருந்து ஏழு பேரைத் தோற்றுவித்துத் தம் பணியைத் தொடரலானார். அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட எழுவரில் ஒருவரே முத்துமாரித் தாயார் என்று கூறப்படுகின்றது.

முத்துமாரி அம்மன் கிழவி ரூபமாக கோடிக்கரையினின்றும் வந்து வல்வையில் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருளுகின்ற மூர்த்தியாதலினால் இம் மூர்த்தியைப் பலராலும் போற்றபடுகின்ற சுயம்பு மூர்த்திக்கு ஒப்பாக போற்றுதலும் பொருத்தமாகும். அம்பாள் வலது பக்கக் கரங்களிலே வாளும் உடுக்கையும் இடது பக்கக் கரங்களிலே கபாலமும் சூலமும் பொருந்திய நான்கு கரங்களுடன் வலது திருப்பாதத்தைத் தொங்க விட்டு இடது திருப்பாதத்தை மடித்து வீற்றிருக்கின்றார். ஏந்திய வாளும், உடுக்கையும் மனித குலத்திற்கு துன்பத்தைச் செய்கின்ற கெட்ட ஆவிகளின் வலிமையை அடக்கி அவற்றினை நிலைகுலையச் செய்யும் பேற்றினை உணர்த்தி காத்தற்றொழிலை சிறப்பாக விளக்குகின்றது. கபாலத்தை ஏந்திய கரமானது பழியைச் செய்கின்றவர்களுக்கும் இரக்கமற்ற சிந்தனையுடைய மிருகங்களைப் போன்றவர்களுக்கும் தெய்வீக சிந்தனையற்றவர்களுக்கும் திருந்தும் படியாக அவர்களின் மனதைத் திருத்தி பக்தராக்கி உருகச் செய்கின்ற திருச்செயலை உணர்த்துகின்றது. மானின் பார்வையைப் போன்ற கண்கள் வருத்தமுடன் வருகின்ற அடியார்கள் பால் கருணையைச் சொரிகின்றன. தாயாரின் மருட் பார்வையானது அடங்காப் பிடாரிகள் ஒடுங்க அவர்களை அடக்கியே வைப்பாள் என்பதை உணர்த்துகின்றது. தாயார் எப்பொழுதும் நாகபடத்தை தனது திருமுடிமேல் சூடியிருப்பது தினமும் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் சூரிய சந்திரர்களது ஒளி தமது திருமுடியின் பிரகாசத்தில் மழுங்காதிருக்க வேண்டுமென்ற கருணையினாலேயாகும்.

அக்காலத்தில் வாழ்ந்த கொடியவனான அரச குல மன்னனாகிய மகிஷாசூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவனோடு போர் புரிந்து அவன் சேனை களை அழித்து அவனோடு சண்டையிட்டு அவனை வீழ்த்தி அவனுடைய மார்பில் சூலத்தாற் குத்தி அவனை அழித்தார். அதன் காரணத்தினாலேயே அம்பாள் மகிஷாசுர மர்த்தனி என்றும் பெயர் பெற்றார். மழைக்கு மாரி என்றும் பெயர் உண்டு. மக்களாகிய உயிர்கள் மீது அம்பாள் கருணையை மாரி போலப்பொழிந்து அவைகள் கலக்கமடையா வண்ணம் காப்பாற்றுகின்ற காரணத்தினால் அம்பாள் மஹாமாரி எனப்படுகின்றாள். மஹாமாரன் என்ற ஓர் அசுரன் தனது சக்தி யால் மருந்தால் நீக்க முடியாத வைசூரி என்ற நோயை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டி ருந்தான். இதன்காரணத்தால் அவனை வதம் செய்ய அம்பாள் மஹாமாரி என்ற மாபெரும் ரூபத்தை எடுத்து அந்த அசுரனைக் கொன்று வைசூரியைத் தீர்த்து வைக்கின்ற காரணத்தி னாலும் மஹாமாரி எனப்படுவதுடன் கிராம தேவதையாகவும் போற்றப்படுகின்றாள். அம் பாள் அக்கினி ஜுவாலை போல் மேல் நோக் கிய கூந்தலை உடையவளாகவும் இருக்கின் றாள். அம்பாளின் கருவறையைச் சுற்றிவர வெளிப்பக்கமாக இருக்கும் கற்சுவர்களின் ஓரத்தில் ஒரு அடி அகலத்தில் மூன்று பக்க மும் கட்டப்பட்டிருக்கும் குழிவான தேக்கத் தில் நீர் நிறைத்து வைக்கப்பட்டிருப்பதை யாவரும் அறிவர். அம்பாள் குளிர்ந்து ஜிலு ஜிலுப்பான காற்றை அனுபவித்துக் கொண் டிருக்க வேண்டுமென்ற காரணத்தினால் இப்படிக் கட்டப்பட்டு நீர் நிறைக்கப்பட்டிருக் கின்றது.

**வல்வை மகன் என்ற உணர்ச்சியே எனது வெற்றிக்குத் திறவுமகால தன்னம்பிக்கை ஒன்றுதான் எனது வெற்றியின் ரகசியம். எனது உடல் தளர்ந்து போன நேரங்களில் கூட எனது மனம் தளர்ந்து போன தில்லை. அதனால் நான் வெற்றிக் கம்பத்தைப் பிடித்திருக்கின்றேன்.**

**ஆழிக்குமரன் ஆனந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வை சரவணமுத்து சுந்தரமூர்த்தி அவர்கள்.
## வல்வை முத்துமாரி அம்மன் மீது பாடிய
## ஊஞ்சல்.

திருமேவும் மாணிக்கக் கால்களாக
சிறந்தனவாம் வைரங்கள் விட்டமாக
குலனோங்கும் வெண்டரங்கள் கயிறதாக
குணமேவும் மரகத பொற் பலகையாக
பாரோங்கும் ஊஞ்சல்மிசை பரிந்துபாட
பண்ணோங்கும் நாமகள் என்நாவில் ஓங்க
வலனோங்கும் திருவல்வைதனில் வாழும்
வல்வை முத்துமாரியம்மை ஆடீர்ஊஞ்சல்

விண்ணவர்கள் ஐந்துருவின் மலர்கள்தூவி
விழுநீரை மிகப்பொழிந்து வேண்டி ஏத்த
தவமறையோர் தூபமொடு தீபம் காட்ட
தாழ்ந்த கணநாதர் புகழ்மாலை சூட
மண்ணு மலராயனொடு கணத்தார் எல்லாம்
மறையிசையும் யாழ் இசையு மிழற்றிநிற்க
மண்ணிலுயர் முனிவர்களும் வாழ்த்திஆட
மகாமுத்துமாரி யம்மே ஆடீர் ஊஞ்சல்

கொம்பினொடு துடிமுரசு முளவமோங்க
குடைகளொடு ஆலவட்டம் குழுமி ஓங்க
தும்புரு நாரதர் வேதகீதம் பாட
தொண்டர்கள் மகிழ்ந்து சுபவாழ்வு பெற
வம்பவிழு மலர்மாரி அமரர் பெய்க
வரமுனிவர் அடிபரவி ஆசிகூற
நம்பும் அடியவர்க்கருளி வல்வை வாழும்
நாராயணன் தங்கை ஆடீர் ஊஞ்சல்.

கோலமுறு வைரமணிச்சுட்டி ஆட
குலவுமெழில் மாணிக்கத் தோடும் ஆட
வாலிய முத்தாரமொடு மதாணி ஆட
வழங்குமெழில் தொடியுட னங்கமுதம் ஆட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலவொளி பாடகமும் சிலம்பும் ஆட
தண்டையொடு பாதசரம் தயங்கி ஆட
ஞாலமுகமென விளங்கி வல்வை வாழும்
அருள்முத்து மாரியம்மே ஆடீர் ஊஞ்சல்

ஆரணியே அம்பிகையே ஆடீர் ஊஞ்சல்
அம்பிகையே சவுந்தரியே ஆடீர் ஊஞ்சல்
பூரணியே புங்கவியே ஆடீர் ஊஞ்சல்
புராதனியே புராந்ததியே ஆடீர் ஊஞ்சல்
அலமலந்தார்க் கருள்மதியே ஆடீர் ஊஞ்சல்
அருவிரதர்க் கருள்பவளே ஆடீர் ஊஞ்சல்
நாரணியே நாயகியே ஆடீர் ஊஞ்சல்
நல்லமுத்து மாரியம்மே ஆடீர் ஊஞ்சல்.

## எச்சரிக்கை

சீராரும் வல்வை நகர்த் தாயே எச்சரிக்கை
இறை சிவனார் தெய்வவல்லித் தாயே எச்சரிக்கை
எல்லோர்க்கும் தாயான அம்மாளே எச்சரிக்கை
எங்கள்துயர்துடைக்கும் தூயவளே எச்சரிக்கை
மடலவிழும் கமலமுத்து மாரியே எச்சரிக்கை
மலையரசன் மகளென வந்தாயே எச்சரிக்கை
அருளால் ஒளியளிக்கும் அன்னையே எச்சரிக்கை
அகிலாண்ட கோடிமுத்து மாரியே எச்சரிக்கை

## பராக்கு

உலகம்கடந்து நின்ற ஒளியே பராக்கு
ஓதற்கரியவளே உற்றாய் பராக்கு
அருளால் ஒளியகற்றும்அன்னே பராக்கு
அரியபவப் பிணியகற்றும் அமுதே பராக்கு
மனக்கவலை நீக்கியருள் மாரி பராக்கு
மருவுமங்குசபாசக் கரத்தாய் பராக்கு
எங்கணுமே மங்களமாய்ப் பொலிவாய் பராக்கு
எங்கள் குலத்தாயாரே ஈஸ்வரியே பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

லாலி லாலி சுப லாலி லாலி எல்லோர்க்கும்
தாயரே லாலி லாலி
விண்ணுறையும் தேவரெல்லாம் லாலி லாலி
வேண்டிய சேவைகள் செய்வாய் லாலி லாலி
மண்ணிலுள்ள மாந்தரெல்லாம் லாலி லாலி
மாரியென் றடிபணிய லாலி லாலி
எங்கணுமே மங்களமாய் நிறைவாய் லாலி
எங்கள் முத்துமாரியம்மே லாலி லாலி.

## வாழி

ஆவாழி வேத சிவாகமங்கள் வாழி
ஆவனைய அந்தணர் வானவர்கள் வாழி
பூவாழி மழைவாழி பொய்கை வாழி
புலவரரிவையர் வாழச் செங்கோல் வாழி
தாவில் குலமங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய அறமும்தழைத்து வாழி
பாடிய சுந்தரம் புகல வல்வை தன்னில்
பரமேஸ்வரித் தாயே வாழி வாழி.

## மங்களம்

மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம் மங்களம்
தும்பிமுகத்தைங்கரர்க்கும் சுப்பிரமண்ய வேலருக்கும்
காவலாய் இருந்திலங்கும் காத்தலிங்க சாமிக்கும்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம் மங்களம்
தெய் வவிடைக்கொடிசேர் தேவி முத்துமாரிக்கும்
திருத்தொண்டு சேவை செய்யும் பக்தர்கள் அனைவருக்கும்
மங்களம் மங்களம் நித்திய சுப மங்களம் மங்களம்
திங்கள் அணியும் கங்கை திருச்சடையோன் பாகம்
தங்கிடும் எங்கள் வல்வை தாசிந்தா மணலாள்கும்
மங்களம் மங்களம் நித்ய சுபமங்களம் மங்களம்
அடியவர்க் கருள்பவர்க்கும் அம்பிகைதன் பாலருக்கும்
மங்களம் மங்களம் நித்ய சுபமங்களம் மங்களம்
பாடுபவர்க் கருளளிக்கும் பார்வதித் தேவியர்க்கும்
மங்களம் மங்களம் நித்ய சுப மங்களம் மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## யாழ் - வல்வைமாநகர்
## ஸ்ரீ முத்துமாரியம்மை திருப்பொன்னூஞ்சல்

### காப்பு

மலைமேவு பராபரனும் உமையும் பெற்ற
மைந்தனே ஐங்கரனே வேத வாக்கு
நிலைமேவு கிரிவிளங்க வரைந்த, ஞான
நிருமலனே நிகரரிய பிரண வத்தின்
தலைமேவு முதற்பொருளே விக்ன ராஜா
தவமேவு வல்வைமுத்து மாரித் தாயின்
கலைமேவு பொன்னூஞ்சல் கனிந்து பாடக்
கணபதியே நின்திருத்தாள் காப்பதாமே.

### நூல்

தேவரெல்லாம் கருணைமலர் மாரி பெய்ய
திருக்கரக மீதமர்ந்து சிவனை வேண்டி
சீவரெலாம் வாழ்வுபெற வைத்த தாயே
சிங்கத்தி லமர்ந்துலகில் தரும நீதிக்
காவலெலாம் புரிந்தவளே பரவும் தொண்டர்
கருத்தினிலே குடியிருக்கும் கலை விளக்கே
மூவரெல்லாம் தொழும்வல்வை நகரில் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

மருவுசதுர் மறைகளுயர் தூண்களாக
வளம்பூத்த சிவாகமங்கள் நாண்களாக
பெருகுமுப நிடதங்கள் விட்டமாக
பிரணவமே யகிலாண்ட வட்டமாக
அருளுமெண் ணெண்கலைகள் மாடமாக
அகராதி யட்சரங்கள் பீடமாக
முருகெழுபூம் பொழில்வல்வை நகரில் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

அத்திமுக னாறுமுகன் அழகு பார்க்க
அம்பலத்து நாயகனார் உவகை பூக்க
சக்திகளெல்லாம் தூப தீபம் காட்ட
தாமோதரன் வாகை மாலை சூட்ட
பத்தியொடு ஜயைவிஜயை கவரி நீட்ட
பாரதியும் திருமகளும் வடந்தொட் டாட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துமணி பொலிவல்லை நகரின் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

ஆதிபரா சக்தியென அண்ட மெல்லாம்
ஆடுகின்ற பூரணியே கம்பை யாற்றில்
வேதநெறிப் பூசைபுரிந் தறம்வளர்த்த
விமலியே மென்முலைப்பா லமுதமூட்டி
ஓதுதிரு முறைவெள்ளம் பெருக வைத்த
உத்தமியே தொண்டர்தமக் கொரு மருந்தே
மோதுகடல் சூழ்வல்லை நகரின் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

தக்கனுக்கு மகளாகித் துயர் களைந்தாய்
தங்குமலைப் பார்வதியாய்க் குகனைத் தந்தாய்
மிக்கமணித் தோட்டுமதி காட்டி நின்றாய்
விறற்சும்பன் நிசும்பனைச்சங் கரித்து வென்றாய்
எக்கணமும் தொழுமடியார் தம்மைக் காக்க
இராஜரா ஜேஸ்வரியாய் இருப்பா யம்மா
முக்கண்ண னொடுவல்லை நகரின் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீரூஞ்சல்

பெருகுதுறைக் கோடிக்கரை தனிலிருந்து
பிறங்கியபாய்க் கப்பலிலே நாரைமூதாட்டி
அருளுருவ வடிவுடனித் துறையிறங்கி
அரியநிழல் வேம்பின்கீழ் இளைப்பு நீக்கிக்
கருணைமுக நகைகாட்டிக் காண்பவர் வேண்டும்
கருதுநல வரங்கொடுத்துக் கோயில் கொண்டாய்
முருகமக துறைவல்லை நகரின் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

மெய்வழங்கும் ஐந்தெழுத்துகள் வகர மாகி
மேலான சிதாகாச துவாத சாந்தச்
செய்வெளியில் நடுகின்ற சுருட மாகிச்
சித்தாந்த வேதாந்தத் தத்துவத்தின்
உய்பரம வித்தாகி உணர்வார் காணும்
ஒளிவிளக்காய் நிற்பவளே உம்பர் போற்றும்
மொய்பவள மதில்வல்லை நகரில் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனப்பொற் றிருமேனி சிவந் துலக்க
சங்கரமங் கலநாணில் அருள் செழிக்க
சுந்தரச்செஞ் சடைப்பாரம் கலை பரப்ப
சொல்லழகுச் செந்துவர்வாய் மறை சுரப்ப
சந்தமணிச் சிலம்பாரம் பண்ணிசைக்க
தனியபய வரதகரம் வரம்கொடுக்க
முந்துதமிழ் வளர்வல்வை நகரின் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்.

மின்னாரும் சடையாட மகுட மாட
மிளிர்சோதித் தோடாடக் கரங்களாட
பொன்னார்பூண் முலைமருவு மாலையாட
புனிதமுக் கணியாட தண்டையாட
பன்னாகக் குடையாடச் சிங்கமாட
பயிலுடுக்குப் பிரம்புதிருக் கலசமாட
முன்னோர்கோ புரவல்வை நகரின் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீ ரூஞ்சல்

உற்றசிவன் மகிழ்விருந்தே யாடீரூஞ்சல்
ஓங்காரப் பெருமருந்தே யாடீரூஞ்சல்
கற்றவருண் ணுங்கனியே யாடீரூஞ்சல்
கலாஞான நிரஞ்சனியே யாடீரூஞ்சல்
நற்றவநாற் கதிதருவாய் ஆடீரூஞ்சல்
நமனணுகா கெதிர்வருவாய் ஆடீரூஞ்சல்
முற்றறிவோர் தொழுவல்வை நகரின் மேவும்
முத்துமாரி யம்பிகையே ஆடீரூஞ்சல்

பொன்பெருகு மாகமங்கள் மறைகள் வாழி
புராணங்கள் திருமுறைகள் பொலிந்து வாழி
இன்பமுயர் அறம்செழித்த செல்வம் வாழி
இறைமை மனு நெறிவளரும், கல்வி வாழி
ஒன்பது கோள் சுகம்பெருக்க உலகு வாழி
ஒற்றுமையும் செந்தமிழும் உயர்ந்து வாழி
அன்புவளர் வல்வெட்டித்துறை அடியார் வாழி
அன்னைமுத்து மாரியருள் வாழி வாழி.

**பாடியவர்: சீ.வினாசித்தம்பிப் புலவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வல்வை
# இராசிந்தான்மணலின் மேவும் முத்துமாரியம்மை
# ஊஞ்சல்

திராவிட பண்டிதர் க.சின்னத்தம்பி
உபாத்தியாயர்

01. கடல்புடைசூழ் வல்வைநகர்க் கண்ண தாகிக்
கவினிரா சிந்தான் மணலின் மேவும்
மடலவிழுங் கமலமுக முத்து மாரி
மங்கைமீ தூஞ்சலிசை வழாது பாட
விடலரிய மும்மதநால் வாய்நன் முக்கண்
விமலனடிக் கமலமலர் விதி வழாது
உடலமனம் வாக்கெனுமுக் கரணத் தாலே
ஓயாமெய் யன்பொடுவந் தனைசெய் வாமே.

02. இந்திரநீ லத்தியற்றுஞ் சிகர மேவும்
இனியமணி மண்டபத்தி னிலங்குகின்ற
பந்தமிலாச் செம்பவளத் தூண்கணாட்டிப்
பணிதிகழ்நன் மரகதவுத் திரமேன் மாட்டிச்
சுந்தரசாம் பூனதத்தின் றொடர்கள் பூட்டித்
துலங்குமா ணிக்கமணிப் பலகை கூட்டி
அந்தணர்கள் புடைதனினின் றன்பி னாட்ட
அமலைமுத்து மாரியே யாடீ ரூஞ்சல்.

03. தோற்கருவி துளைக்கருவி துலங்குகின்ற
சோதிசேர்ந் திடுகஞ்சக் கருவி யோடு
பாற்படுநல் லிசைநரம்புக் கருவி திவ்ய
பண்பாடு முயர்மிடற்றுக் கருவி யார்ப்ப
மேற்படுதுந் துபிமுழங்க விழுமி தான
மெய்யன்பர் தமிழ்வேத மினிதி னோத
ஏற்றுமுறு வல்வைநக ரினிது வாழும்
இறைவிமுத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல்

04. அற்புதசின் மயனந்த சர்வஞ் ஞத்வ
அகிலாண்ட தேவிநிஷ் களசொரூப
சிற்பரவி யோமபர தத்வா தீத
தெளிவளர்நற் படிகக்குன் றன்ன தூய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பவகா ரணமுடைய வுலக வன்னே
ஓங்குசச்சி தானந்த வுருவ மின்னே
முற்படுநல் லிராசசிந்தான் மணலின் மேவும்
முதல்விமுத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

05. உமைகலையா யுற்றவரே யாடீ ரூஞ்சல்
ஓங்குபர வீட்டாரே யாடீ ரூஞ்சல்
நமைநிதமுங் காப்பவரே யாடீ ரூஞ்சல்
நம்பனடி யார்முதலே யாடீ ரூஞ்சல்
சுமையுடலத் தொண்டுகொள்வீ ராடீ ரூஞ்சல்
தூயகரு ணைக்கடலே யாடீ ரூஞ்சல்
இமையவர்போற் றும்வல்வை யினிது மேவும்
இறைவிமுத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

06. அன்பரகங் குழைப்பவரே யாடீ ரூஞ்சல்
ஆரணங்கள் போற்றுமம்மே யாடீ ரூஞ்சல்
துன்பமலந் துடைப்பவரே யாடீ ரூஞ்சல்
துகடபுகூ லப்படையீ ராடீ ரூஞ்சல்
மன்பதைக்கட் கருள்பவரே யாடீ ரூஞ்சல்
மடங்கல்வா கனத்தாரே யாடீ ரூஞ்சல்
இன்பவல்வை ராசசிந்தான் மணலின் வாழும்
இறைவிமுத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

07. ஆரணநூ புரத்தாரே யாடீ ரூஞ்சல்
அடியரிடர் தீர்ப்பவரே யாடீ ரூஞ்சல்
காரணங்கற் பனைகடந்தீ ராடீ ரூஞ்சல்
கருதுவார்க் கெளியாரே யாடீ ரூஞ்சல்
ஏருறுபா சக்கரத்தீ ராடீ ரூஞ்சல்
எல்லோர்க்குந் தாயாரே யாடீ ரூஞ்சல்
ஈரமலர்ச் சோலைசூழ் வல்வை வாழும்
இறைவிமுத்து மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

08. தெருளுமனத் தீபகமே யாடீ ரூஞ்சல்
தேறுமனத் திருப்பவரே யாடீ ரூஞ்சல்
அருளுருவங் கொண்டவரே யாடீ ரூஞ்சல்
ஆகமங்கேட் டருள்பவரே யாடீ ரூஞ்சல்
பொருளுணர்வோ ருண்கனியே யாடீ ரூஞ்சல்
பொற்பமருங் கற்பகமே யாடீ ரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளுநிழற் பொழில்சூழும் வல்வை வாழும்
இறைவிமுத்து மாரியம்மே யாட ரூஞ்சல்.

09. அரம்பையர்கள் கவரிபுடை நின்று வீச
அமரர்நீ டாலவட்ட மசைத்து நிற்பச்
சுரந்திடுமன் புடையவர்க டுதிப்பா வோதத்
தும்புருநா ரதர்களிசைத் தேன்கா தூற்ற
நிரம்பியகற் பகமலர்கள் நெடிது பெய்க
நிகரிலந் தணர்மறைக ளோதி யார்ப்ப
வரம்பெறுநல் லிராசசிந்தான் மணலின் மேவும்
மகாமுத்து மாரியம்மே யாட ரூஞ்சல்.

10. கல்விதே ரந்தணர்கள் கதித்து வாழி
கரகக்கா வடியெடுப்போர் களித்து வாழி
மல்குகடற் பிரயாணஞ் செய்வோர் வாழி
மன்னவர்செங் கோலறங்கள் கற்பு வாழி
தொல்லைமுகின் மும்மாரி பொழிந்து வாழி
துலங்குமுயி ரானினங்கள் மறைகள் வாழி
பல்குவள மிகுவல்வைப் பதியில் வாழும்
பாவைமுத்து மாரியருள் வாழி வாழி.

## எச்சரிக்கை

11. தங்குசூ லங்கபாலந் தரிப்பா யெச்சரிக்கை
தாரணியி னோர்வணங்குத் தாயே யெச்சரிக்கை
பங்கமில்வாள் பாசநன்கு பரிப்பா யெச்சரிக்கை
பரங்கருணை பொழியுமுயர் பரையேயெச்சரிக்கை
சிங்கத் துவசமுறு தேவீ யெச்சரிக்கை
தினமுவந் திக்கவருள் செய்வா யெச்சரிக்கை
மங்கையுமை மதிக்கு மகளே யெச்சரிக்கை
வல்வைப் பதியின்முத்து மாரி யெச்சரிக்கை

## பராக்கு

12. தேன்பொழியுஞ் சோலைவல்வைத் தேவீ பராக்கு
திகழுஞ்சிந் தான்மணலின் தேனே பராக்கு
வேண்டு மடியார்மன விளக்கே பராக்கு
வேதப்பொருள்விரிக்கும் வித்தேபராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகங் கடந்துநின்ற வொளியே பராக்கு
ஓதற் கரியவிய லுற்றோய் பராக்கு
அருளா லுலகளிக்கு மன்னே பராக்கு
ஆனந்த நித்தியமுத்து மாரீ பராக்கு.

### லாலி

13. அன்னேலாலி வல்வை யமர்வோய்லாலி - தெய்வ
மின்னே லாலி யெங்கள்விமலைலாலி
பொன்னேலாலி பரம் பொருளேலாலி -யாரு
முன்னே வணக்கஞ்செயு முதல்வி லாலி
தாயேலாலி களை கண்ணேலாலி - தகும்
வேயே நிகருந்தோண்மெல் லியலே லாலி
வல்வைச்சிந்தான் மணலின் வருவார்க்கருள் புரியும்
மல்குங் கிருபைமுத்து மாரி லாலி.

### மங்களம்

14. மங்களம் மங்களமே நித்யசுப மங்களம் மங்களமே.
திங்க ளணியுந் திருச்சடை யோன்பாகம்
தங்கு முமைமகலை யாகித் தயங்கிய
எங்கள் முத்துமாரி யாகு மிறைவிக்கு
சிங்காச்சிந் தாமணன் மேவிய தேவிக்கு
மங்களம் மங்களமே நித்யசுப மங்களம் மங்களமே.
தெய்வ விடைக் கொடிசேர் எங்கள்
தேவியாய்த் தெள்ளமுதா யிங்கு
சேர்ந்து வணக்கஞ்செய் தேவர்க்கு மனிதர்க்கும்
பொங்குங் கருணை பொழியு மிறைவிக்கு
மங்களம் மங்களமே நித்யசுப மங்களம் மங்களமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புட்டணிப் பிள்ளையார் கோயில்.

இக்கோயில் 1800ம் வருடம் வல்வை வாசிகளினால் கட்டப்பட்டதாக யாழ் கச்சேரிப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. வல்வை சிவன் கோயில், முத்துமாரி அம்மன் கோயில், தீருவில் முருகன் கோயில் ஆகியவற்றிற்கு இடையில் அமைந்துள்ளது. 1884ம் ஆண்டில் தாமர் செல்லையா என்பவர் மணியமாக இருந்துள்ளார். சிவன் கோயில் ஸ்தாபகர் தி. வெங்கடாசல பிள்ளையவர்களினால் திருப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தினமும் ஒரு வேளைப் பூசை நடை பெறும் இக் கோயிலில் மாசி மகத்தை இறுதி நாளாகக் கொண்டு பத்துத்தினங்கள் அலங் கார உற்சவம் நடைபெற்று வீதியுலா இடம் பெறுவதோடு இறுதி நாளன்று தீர்த்தோற் சவத்தைத் தொடர்ந்து வசந்தோற்சவ விழா இடம் பெற்று பிரம்மஸ்ரீ சிவ. பஞ்சாட்சரக் குருக்கள் அவர்களினால் இயற்றப்பட்ட ஊஞ்சல் இடம் பெறுவதோடு கலை நிகழ்ச்சி களும் இடம் பெறும்.

### ஊஞ்சல்

உ
சிவமயம்

### புட்டணிச் சித்திவிநாயகர் திருவூஞ்சல்

#### காப்பு.

நீர்கொண்ட திரைமுத்தைத் துகிரைச் சங்கை
நிரைமணியை வீசு கடல் வடபாலார
வேர்கொண்ட பொழில்வாவி சூழச் செந்நெ
லெழும்பணைதென் பாலார விடையின் மேவுஞ்
சீர்கொண்ட வல்வைப்புட் டணியிற் கோயிற்
சித்திவிநா யகக்கடவு ளூஞ்சல் பாடக்
கார்கொண்ட கரடதட விகட முக்கட்
கணபதியம் போருகத்தாள் காப்ப தாமே.

#### நூல்.

சீரேறு நாதவிந்து கால்க ளாகச்
சிவமேறு சத்திபொளிர் விட்ட மாகப்
பேரேறு சிவாகமநூ லிழைய தாகப்
பெருமையுறு சதுர்மறையுங் கயிறதாக
வேரேறு மறையுளர்த்தம் பலகை யாக
வெழிலார்ந்த வோங்கார பீட மேறித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரேறு வளத்தளிப்புட் டணியில் வாழுஞ்
சித்திவிநா யகதேவே யாட ரூஞ்சல்.

பூவாருங் கடுக்கையணி சூடு முச்சிப்
புதுமணிக ளிழைத்திடுபொற் கிரீட மின்னக்
கோவாருந் திருநுதலி னோடை மின்னக்
கொம்பொன்றிற் கிம்புரியு மருவி மின்ன
மாவாரு முரத்திடையே மதாணி மின்ன
வலயமுநாற் புயத்திடையே மேவி மின்னச்
சேவாரு நிலயப்புட் டணியில் வாளுஞ்
சித்திவிநா யகதேவே யாட ரூஞ்சல்.

ஏற்றமிகு முனிவர்மறை யோதி யாட
விமையவர்மெய்த்தோத்திரங்கள்கூறி யாடத்
தோற்றமுள கந்தருவர் பாடி யாடச்
சுகமொழியூர் வசிமுதலோர் நடனமாட
நீற்றுமணி கொள்ளுமுடம் பன்பராட
நிறைந்தகுறட் படைவீரர் ஞாங்கராடத்
தேற்றமுறு புதர்புகழ்புட் டணியில் வாழுஞ்
சித்திவிநா யகதேவே யாட ரூஞ்சல்.

வாரணிந்த பூண்முலைவல் லபையை முன்னர்
மணந்தருளி யிருத்துமிடப் பாகத் தாரே
போரணிந்த கயமுகன்மு னாகு வாகப்
பொற்புறச்சென் றூர்ந்தருளும் வாகத் தாரே
கூரணிந்த வெண்மைநிற மணிகொள் பூணார்
கோடுமுக மதிலொளிரு மேகத் தாரே
தேரணிந்த மறுகவிர்புட் டணியில் வாழுஞ்
சித்திவிநா யகதேவே யாட ரூஞ்சல்.

மணிகொழிகா விரிநதியைக் காக மாகி
வாசவன்கா வோட்டினரே யாட ரூஞ்சல்
பணிபொதுளி ராவணன்கை லிங்கங் கீழேழ்
பார்நிலைக்க நாட்டினரே யாட ரூஞ்சல்
கணிபொலிபா ரதப்பெரும்போர் மேருக் குன்றிற்
கருத்திலகத் தீட்டினரே யாட ரூஞ்சல்
திணிபொலத்த வரண்சூழ்புட் டணியில் வாழுஞ்
சித்திவிநா யதேவே யாட ரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரவுத் தியிலையன் முறைக ளெல்லாம்
வண்கையெடுத் தோச்சினரே யாட ரூஞ்சல்
தகரநிறை தில்லையிற்றே வாரவேடு
தங்கிடஞ்சொல் பேச்சினரே யாட ரூஞ்சல்
சுகரமுள தவத்தருளந் தேங்க முன்னாட்
டொடர்பருணீர் பாய்ச்சினரே யாட ரூஞ்சல்
சிகரமதி கதிர்தோய்புட் டணியில் வாழுஞ்
சித்திவிநா யகதேவே யாட ரூஞ்சல்.

கயமுகனை யாகவத்தொர் மருப்பாற் செற்ற
கணபதியே கற்பகமே யாட ரூஞ்சல்
பயமவலிக் குறுபலவ ரம்பை சூத
பலத்துடன்மோ தகங்கொள்வீ ராட ரூஞ்சல்
வயமிகுவேற் கரனைவள்ளி யம்மை சேர
வருயவேழ வடிவினரே யாட ரூஞ்சல்
செயமிளிர்வல் வைநகர்ப்புட் டணியில் வாழுஞ்
சித்திவிநா யகதேவே யாட ரூஞ்சல்.

ஆலமுறு கண்டனுமை தன்னைக் கூடி
யன்றருண்முற் புத்திரரே யாட ரூஞ்சல்
பாலளக்கர் மேலரவிற் பள்ளி கொள்ளும்
பரந்தாமன் றன்மருகீ ராட ரூஞ்சல்
சாலவக ரர்ச்செகுத்த கதிரை யூர்வாழ்
சண்முகற்கு முன்னவரே யாட ரூஞ்சல்
சீலநிதி யுறையுட்புட் டணியில் வாழுஞ்
சித்திவிநா யகதேவே யாட ரூஞ்சல்.

ஈரநில வணிமுடியீ ராட ரூஞ்சல்
இமையவர்முன் றொழுமடியீ ராட ரூஞ்சல்
ஆரகியாங் கச்சாரே யாட ரூஞ்சல்
அடையுமுயிர்க் கச்சாரே யாட ரூஞ்சல்
காரமின்செஞ் சடையாரே யாட ரூஞ்சல்
கருதலர் நெஞ் சடையாரே யாட ரூஞ்சல்
தீரமலி வளத்திருப்புட் டணியில் வாழுஞ்
சித்திவிநா யகதேவே யாட ரூஞ்சல்.

வான்வாழ வேதசிவா கமங்கள் வாழ
மறையவர்முன் னாங்குலத்தோர் மலிந்து வாழக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோன்வாழ வளங்களுட னறமும் வாழக்
குலவுமகந் தவத்துடனே கூடி வாழ
ஆன்வாழப் பூதிமணி யினிது வாழ
வரனடியா ரொடுகூறைந் தெழுத்தும்வாழத்
தேன்வாழ மலர்விரிபுட் டணியில் வாழுஞ்
சித்திவிநா யகதேவே யாடீ ரூஞ்சல்.

எச்சரிக்கை.

முறைவாழ்வல்வைத்துறை வாழ்வுறுமீறைவாவெச்சரீக்கை
முன்னாகுவிற்றுன்னாவவிர்மன்னாவெச்சரீக்கை

உறலார்வயக்குறளாம் படைத்திறலாயெச்சரீக்கை
ஓதாதுணர்போதாமுறக்காதா வெச்சரீக்கை

மகவான் றொழத்தகவானருள் பகவானெச்சரீக்கை
வானாய்வளி தானாய்ப்பிறவானா யெச்சரீக்கை

மந்தாகினிமைந்தா வொருதந்தா வெச்சரீக்கை
மருவாறிழிந் தொருவாவுகத்தருவா யெச்சரீக்கை

திருமாலரவுருமாற்றிய பெருமானெச்சரீக்கை
தெளியாரணவளியார் மதுக்களியா யெச்சரீக்கை

வரையாமறையுரையாசுராரையா வெச்சரீக்கை
மணியே கண்ணின் மணியேவிண்ணின்மணியே யெச்சரீக்கை

அன்பார்மனத்தின் பாயுறைமுன்பா வெச்சரீக்கை
ஐயாவைந்துகையாவருண் மெய்யா வெச்சரீக்கை

பணியேர்செல்புட்டணியேயொளிர்மணியே யெச்சரீக்கை
பத்தாமுடிக்கொத்தாற்கருண் முத்தா வெச்சரீக்கை

கலையானவை நிலையாக்கிபத்தலையா யெச்சரீக்கை
காலாரகிநூலாருரமேலா வெச்சரீக்கை

நிரைபாரதமுரைமேருவின் வரைந்தா யெச்சரீக்கை
நிதியேயொளிர்கதியேயருட்பதியே யெச்சரீக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பராக்கு.

தும்பிமுகத்துத்தமனே தூயா பராக்கு
சொலிவல்வைப்புட்டணியிற்சோதி பராக்கு

நம்புமடியார்க்கருளுநாதா பராக்கு
நான்மறையுந்தேடரியநம்பா பராக்கு

வல்லபையைமணந் தமணவாளா பராக்கு
வலியபெருச்சாளியிவர்வாகா பராக்கு

சத்தமறையுட் பொருளாஞ்சாமி பராக்கு
தவளமருப்பொன்றுடையதலைவா பராக்கு

ஈரமதிக்கீறுபுனையறைவா பராக்கு
இலகுவிழிமூன்றுடையவீசா பராக்கு

மாபாரதம்வரையில் வரைந்றாய் பராக்கு
மங்கையுமைசங்கரற்குமைந்தா பராக்கு

மாயனிடர்தீர்த்தருளும்வள்ளா அல் பராக்கு
மறைமுதலோம்வடிவமெனவந்தாய் பராக்கு

மிசையாத்தியறுகிதழிமிலைவாய் பராக்கு
வியாளவரைக்கச்சணியுமேலா பராக்கு

வல்லரக்கலிங்கமகிவைத்தாய் பராக்கு
மதியன்பர்பவப்பிணிதீர்மருந்தே பராக்கு
அத்தமதின்மோதகங்கொளத்தா பராக்கு
ஆறுமுகவேலவருக்கண்ணா பராக்கு.

### மங்களம்.

வாரணமுகத்தருக்குமங்களம் - செய்ய
மாதவரகத்தருக்கு மங்களம்.

மோதககரத்தாருக்கு மங்களம் - செம்பொன்
மோலிகொள்சிரத்தருக்குமங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதகணநாதருக்குமங்களம் - குழைப்
பொற்புமுறக்காதருக்குமங்களம்

செங்கமலபாதருக்குமங்களம் - வர
சித்தியருள்போதருக்கு மங்களம்

கார்த்திகேயன்முன்னவர்க்குமங்களம் - ஊருங்
களதபரிமன்னவர்க்குமங்களம்

கூராரோர்கொம்பருக்குமங்களம் - கையங்
குசபாசவும்பருக்குமங்களம்

ஐந்துகரத்துய்யருக்குமங்களம் - ஞான
மண்டுமருண்மெய்யருக்குமங்களம்

முத்திதருமுதல்வருக்குமங்களம் - சம்பு
மூர்த்தியுமைபுதல்வருக்குமங்களம்

புட்டணியில்வாசருக்குமங்களம் - அக்ர
பூசிதகணேசருக்கு மங்களம்

திவ்யவன்பர்நேசருக்குமங்களம் - அருள்
சித்திவிக்நராசருக்கு மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வல்வை
# புட்டணிப்பிள்ளையார் பேரில் பதிகம்.

## வல்வையம்பதியிலுள்ள முதியோர் செய்துவைத்தது.

திங்கள் கொன்றை யணிசிவ னம்பிகை
சிறந்து தந்தருள் சேர்திரு மைந்தனை
யங்கு சுந்தரித் தேவட நீழலி
லமரு மைங்கர னேயெனை யாளையா
சங்கு வீணை குழலிசை மத்தளந்
தப்பு நாக சுரந்துடி வாத்தியம்
பொங்குபுட்டணி யம்பதி வந்துறை
புதுமையுள்ள புகர்முகப் பிள்ளையே.

புரத்தை யட்டுப் பொடியாக்க எண்ணியே
புராரி ஏறிய பூமியந் தேரச்சு
மரத்தை அன்றிறிந் தேதடை பண்ணிய
வல்ல பைக்குரி யாயெனை யாளையா
வரத்தை வாங்க வுனைத்தொழு வோர்வினை
வந்து வந்து முன் சூழ்விதி யால்வரும்
சுரத்தை மாற்றவொர் புட்டணி யம்பதி
துரத்து வந்துறை தும்பிமுகத்தனே.

கஞ்ச னான்முக னிந்திரன் மற்றுள
கடவு ளர்கள் துதிசெய் கயமுகா
அஞ்சை எட்டு அமரரைக் காத்திடு
மாகு வாகன னேயெனை யாளையா
வஞ்சி சண்பகை மாதுளை மல்லிகை
வன்னி கோங்கு வளர்திரு வாத்தியும்
இங்கு சூழ்ந்திருப் புட்டணி யம்பதி
யிருந்து வாழு மிபமுகப் பிள்ளையே.

சிவனு மம்மனு மாடிய சூதினிற்
சிந்தை நொந்திடப் பொய்க்கரி செப்பியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவன முண்டிடு மால்பெற்ற பாம்புருப்
போக்கு மேரம்ப னேயெனை யாளையா
பவனன் வந்துவு லாவிப்பு னிதமாய்ப்
பன்னீர் சந்தனம் பாளிதம் வீசவே
அவனி ரங்கிய புட்டணியம் பதி
அமர்ந்து றைந்திடு மைங்கரப்பிள்ளையே.

கயிலை யங்கிரி தன்னிற்சி வன்முன்னே
கையில் மோதக மேந்திநி ருத்தமே
பயிலு முன்னைப் பழித்திடு சோமனைப்
பார்த்துக் கண்டவர் பாதக ராகியே
துயில்வ ரென்று சபித்தவ ரென்வினைத்
துன்பம் நீக்கி யடிமை கொண் டாளையா
குயில்கள் கூவ மயிலாடும் புட்டணி
குலாவி வந்துறை குஞ்சரப் பிள்ளையே.

மறைமு னிதந்த மாங்கனி வாங்கியே
மைத்த லம்வல மாய்வந்த மைந்தற்கு
இறைய வன்தரு வோமென்று செப்பிட
விசைந்து வேல ருலகை வலம்வரக்
கறைமி டற்றர னோடுக வுரியைக்
கருணை யால்வலம் வந்து கனிகொண்டாய்
பறைமி டத்தொனி யம்பிகை புட்டணிப்
பதியில் வந்துறை பஞ்சக ரத்தனே.

இலக்க ணம்செறி சுந்தரி யென்பவ
ளிசைந்து நோன்பு பிடித்திடை விட்டதால்
விலக்கி விட்டனன் விக்கிர மாதித்தன்
வெகும னைபுகுந் தாள்வெறுத் தோட்டினா
ரலக்க ணுற்றுப்பி னௌவை மனைசென்று
அவளும் நோன்பனுட் டித்துத்து திசெய்தாள்
துலக்க மெய்திய புட்டணி யம்பதி
துரந்து வந்துறை தும்பி முகத்தனே.

பங்க மாகிய தோல்தசை யென்புடன்
பத்தி லாத நரம்பு துரோணிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கு மூளை பொருந்திய ஆக்கிய
புவியில் விட்டனன் பொற்பதஞ் சேரவே
எங்கு மாகி யுளன்று திரிகின்ற
ஈசர் தன்தூத னேயெனை யாளையா
தெங்கு சூழ்திருப் புட்டணி யம்பதி
சிந்து ரத்திரு வச்சிரப் பிள்ளையே.

அன்னை யார்த னகட்டினி லுற்பவித்
தவனி மீது தவழ்ந்து நடந்துபின்
கன்னி மார்தன் கல்வியிற் சிக்யே
கள்ளுக் காமங் கொலைசெய் களவினை
உன்னை யேசெய் துளன்று திரிகின்ற
வூத்தை யேனெனக் குன்பதந் தந்திடாய்
கன்னல் சூழ்புனல் சூழ்திருப் புட்டணி
கவின வந்துறை கற்பகப் பிள்ளையே.

அடியர் கேட்ட வரமளித் தன்புட
னால நீழ லமர்ந்துறை யைங்கரா
முடிவி லாதவோங் காரப்பி ரணவா
மூர்த்தி யேயெந்தன் முன்வினை மாற்றியே
படியின் மீது பிறந்துழ லாமலே
பாது காத்துன் பதமளித் தாளுவாய்
கடிகள் பூம்புனல் சூழ்ந்திருப் புட்டணி
காண வந்துறை கற்பகப் பிள்ளையே.

தந்தி மாமுகன் வாழ்க சிவனுடன்
சத்தி வாழ்கவச் சண்முகர் வாழ்ந்திட
விந்து மேர்முதற் கன்னியர் கற்புற
விராச மாமனு நீதி விளங்கவே
யந்த ணர்பெருத் தாவினை மல்கிட
வவனி மாதமும் மாரி பொழிந்திடச்
சுந்த ரந்திகழ் புட்டணி மாநகர்
துன்னி யைங்கர னைத்தொழ வாழியே

**முற்றிற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதி வைரவர்.

இக்கோயில் 1825ம் வருடம் வல்வைப் பொதுமக்களால் கட்டப்பட்ட தாக யாழ் கச்சேரி பதிவேடுகள் தெரிவிக்கின்றன.

தினமும் மூன்று வேளை பூசை நடைபெறும் இக்கோயிலில் ஆடிப் பூரணையை இறுதி நாளாகக் கொண்டு பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் இடம்பெறும். தீர்த்தோற்சவத்தையடுத்து பகலில் பிராயச்சித்த அபிஷேகமும் இரவில் கற்பூரத்திருவிழாவும் இடம்பெறும். இக்கோயில் அர்ச்சகர்களாக சைவக்குருமாரே பணியாற்றுகிறார்கள். 21.8.1980ல் இறுதியாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

## கப்பலுடைய பிள்ளையார் கோயில்

வல்வை மக்களால் இக்கோயில் 1800ம் வருடம் கட்டப்பட்டதாக தெரி கிறது.

தினமும் ஒரு வேளை பூசை நடைபெறும் இக்கோயிலில் ஆடி அமாவாசை தினத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் இடம் பெறும். தீர்த்தோற்சவத்துக்கு விநாயகப் பெருமான் கப்பலில் எழுந்தருளிச் சென்று தீர்த்தமாடுவதுடன் அலங்கார உற்சவம் நிறைவு பெறும். இதனையடுத்து உதய சூரியன் கடற்கரை அமைந்த பகுதியில் தெப்பத் திருவிழா இடம் பெறுவதோடு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## தீருவில் முருகன் கோயில்

இக்கோயில் 1800ம் வருடம் சந்திர சேகர முதலியார், சுப்பிரமணியன் என்போரால் கட்டப்பட்டதாக யாழ் கச்சேரிப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. இக் கச்சேரிப்பதிவேடுகள் தயாரிக்கப்பட்ட 1892ம்வருடம் கதிரேசர் வைத்திலிங்கம் என்பவர் தர்மகர்த்தாவாக இருந்துள்ளார். தினசரி ஒரு வேளைப் பூசை நடைபெறும். இக்கோயிலில் வெள்ளிக்கிழமை, கார்த்திகை நடசத்திரத்தன்றும் விசேட அபிஷேகம் பூசை என்பன இடம் பெறுகின்றது. மஹோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த இக்கோயில் பலகாலமாக பூசை, உற்சவம் என்பன இடைநிறுத்தப்பட்டு ஒரு சில வருடங்களுக்கு முன்னர் பாலஸ்தானம் செய்யப்பட்டு தற்சமயம் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திருப்பணி வேலைகள் நிறைவுற்றதைத் தொடர்ந்து முருகப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் 10.06.2005 அன்று வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரமும் இடபலக்கினமும் கூடிய சுபவேளையில் பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் அவர்களினால் மஹா கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பட்டது.

## திருப்பணி செய்தோர் விபரம்:

1. மூலமூர்த்தி
   விநாயகமூர்த்தி சத்தியதேவி
   வல்வெட்டித்துறை

2. வசந்தமண்டபம்
   மகாலிங்கம் குடும்பத்தினர்
   வல்வெட்டித்துறை

3. சண்முகப்பெருமான் உற்சவமூர்த்தி
   மகாலிங்கம் குடும்பத்தினர்
   வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சண்டேஸ்வரர்
சட்டத்தரணி சண்முகநாதன்
குடும்பம்
வல்வெட்டி

5. விநாயகர்
சிதம்பரநாதன் குடும்பம்,வல்வெட்டி

6. வைரவர்
உதயகுமாரன் குடும்பம்
வல்வெட்டித்துறை

7. மணிக்கோபுரம்
க. மயில்வாகனம் குடும்பம்,
வல்வெட்டி

8. தரிசன மண்டபம்
இ. சிவஞானம் குடும்பம்
வல்வெட்டித்துறை

வல்வெட்டியைச் சேர்ந்த க.குமார சாமி முதலியார் (1791-1874) அவர்கள் தீருவில் சுப்பிரமணியர் மீது பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார்.

**தீருவிற் சுப்பிரமணியர் பதிகம்**

பூமேவு வாவிப் பொறிச் சிறகர் வண்டினம்
பொதியிணர் முறுக்கவிழ்த்துப்
புதுமது வருத்தியிசை கூடக் கருங்குயில்கள்
புத்தமிழ் துறழ்ந்துபாட
மாமேவு களிமயில் சிறைப்பறை யடிக்கமட
வஞ்சநட மாடநீடி
மன்னுதண் டலைதலை யசைத்துநணி நாடமிடை
வண்டான நன்று புகழுந்
தேமேவு வளமருத வயல்புடை யுடுத்திலகு
செங்கமலை தங்குவல்வைத்
தீருவிலை நற்றான மாவெண்ணி வள்ளியொடு
தேவகுஞ் சரியுமகிழத்
தூமேவு சத்திகைத் தலமொளிர வெம்மனோர்
துயர்தீர்க்க வந்தமுருகே
சூரநீ லக்கலப மயில்மீ துலாவிவரு
சுப்பிரமணியக்கடவுளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரேசப் பெருமான் கோயில்.

சிதம்பரக்கல்லூரி முகாமையாளராக இருந்த ஞா.தையல்பாகர் அவர்களால் அக்கல்லூரியின் வடகிழக்குப் பகுதியில் ஒரு சிறுகூடமமைக்கப்பட்டு காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு படிகலிங்கம் ஸ்தாபிக்கப் பட்டது. தினமும் மூன்று வேளை சிவலிங்க பூசை நடாத்தி வந்த அன்னார் மேற்படி படிக லிங்கம் அமைக்கப்பட்ட கூடத்திற்கு அருகாமையில் 1950ம் வருடமளவில் அதனை சிவாலயமாக அமைத்து 'சுந்தரப் பெருமான் ஆலயம்' எனப் பெயரிட்டு பூசைகள், உற்சவங்கள் என்பனவற்றை நடாத்தி வந்தார்.

இக்கோயிலின் அண்மையில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டிருந்தமையால் 1985ம் வருடமளவில் பூசைகள் உற்சவங்கள் என்பனவற்றை நடத்த முடியாது போய்விட்டது. 1987ல் மேற்கொள்ளப்பட்ட லிபரேசன் ஒப்பரேசன் போதும் 1991ல் மேற்கொள்ளப்பட்ட தொடர் விமானக்குண்டு வீச்சினாலும் கோவிலுக்கு பாரிய சேதமேற்பட்டது. தற்காலம் ஒரு வேளை பூசை மட்டும் நடைபெறும் இக்கோயிலில் திருப்பணிவேலைகள் மேற்கொள்ளப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடாத்த வேண்டியுள்ளமையால் இச் சுபகாரியத்தில் வல்வை மக்கள் தமது பங்களிப்பை நல்கி மகா கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைக்க முன்வர வேண்டும்.

## வைகுண்டப் பிள்ளையார் கோயில்

இக்கோயில் முதன் முதல் கட்டப் பட்ட வருடம் சரியாகத் தெரிய வில்லையாயினும் 1884ம் வருடம் யாழ் கச்சேரியினால் பேணப்பட்ட பதிவேடு களில் வல்வை சிவன் கோயில் ஸ்தாபகர் தி.வெங்டாசல பிள்ளையவர்களினால் புதுப்பித்துக் கட்டப் பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதே பதி வேட்டில் 1884ல் தாமர் செல்லையா என்பவர் மணியமாக இந்ததாகக் குறிப்பிடப்பட் டுள்ளது. இங்கு குறிப்பிடப்படுள்ள தாமர் செல்லையா என்பவர் இதே காலப்பகுதியில் வேறு மூன்று பொதுக்கோயில்களுக்கு மணியமாக இருந்துள்ளமையாலும் இதற்கு முன்னரும் ஆ.முருகுப்பிள்ளையென்பவரும் இக் கோயில்களுக்கு மணியமாக இருந்துள்ளமையினாலும் வைகுண்டப்பிள்ளையார் கோயிலும் ஒரு பொதுக்கோயிலாகவே இருந் திருக்க வேண்டும். தினசரி ஒரு வேளைப் பூசை மட்டும் நடைபெறும் இக்கோயிலில் கடைசியாக 1.9.2003ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

## நறுவிலடிப்பிள்ளையார் கோயில்

தினசரி ஒருவேளை பூசை மட்டும் நடைபெறும் இக்கோயில் கதிரேசர் விநாயகர் என்பவரால் 1820ம் ஆண்டில் கட்டப்பட்டதாக தெரியவருகிறது.

## சடையாண்டி வைரவர் கோயில்

வல்வை மக்களால் 1805ம் வருடம் கட்டப்பட்ட இக்கோயில் ஒரு வேளைப் பூசை மட்டும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பூசகர்களாக சைவக்குருமாரே பணியாற்று கிறார்கள்.

## தில்லையன் மடத்து ஞான வைரவர் கோயில்.

யாழ் கச்சேரிப் பதிவேடுகள் இக் கோயில் 1800ம் வருடம் வல்வை மக்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டதாக தெரிவிக்கின்றன. தினசரி ஒருவேளைப் பூசை மட்டும் நடைபெறும் இக்கோயிலில் 24.8.2001ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

## ஆசி மடத்து வைரவர் கோயில்

இக்கோயிலும் 1800ல் வேலர் வாத்தியார் என்பரால் கட்டப்பட்டுள்ளது. முத்துமாரி அம்மன் கோயிலுக்கு கிழக்குத் திசையில் கந்தப்பசேகரம் அவர்களுக்குச் சொந்தமான காணியில் அமைந்திருந்த போதும் ஏதோ ஒரு காரணத்தினால் கைவிடப்பட்டு அதில் இருந்த மூலமூர்த்தி முத்துமாரிஅம்மன் கோயில் ஈசான மூலையில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் பிரதிட்டை செய்யப் பட்டது. தினசரி ஒருவேளை பூசை நடை பெறுவதுடன் ஐப்பசி பரணியன்று விசேட அபிஷேகம் பூசை என்பனவும் இடம் பெறும்.

## மீனாட்சி அம்மன் கோயில்

கப்பலோட்டியவர் கோயிலுக்குக் கிழக்குப் பக்கமாக கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் அமைந்துள்ளது. யாழ் கச்சேரிப் பதிவேடுகள் 1830ம் வருடம் வல்வை மக்களால் இக்கோயில் கட்டப்பட்டதாகத் தெரிவிக்கின்றன. தினசரி ஒரு வேளை பூசை நடைபெறும் இக் கோயிலில் 30.6.2004ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

## உலகுடை விநாயகர் கோயில்

தென்இந்தியாவிலிருந்து இவ்விடம் வந்து குடியேறிய இரு சகோதரர்களில் ஒருவர் புனித செபஸ்தியார் கோயிலைக் கட்ட இளைய சகோதரரால் உலகுடை விநாயகர் கோயில் கட்டப்பட்டதாக தெரியவருகிறது. எப்போது இக்கோயில் கட்டப்பட்டதென்ற விபரம் கிடைக்கவில்லை. 1904ம் வருடம் சிவபதமெய்திய ஸ்ரீமான் நா.வேலுப்பிள்ளையென்பவரது இறப்பைப் பற்றிய பரமபதிக் கவிகள் இவ்வாலயம் இவரால் புதுக்குவித்துப் பெரும் பொருள் செலவிட்டுக் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கின்றது. கெச்சுத்தண்டயல் சந்ததியினரால் தற்காலம் இக்கோயில் பராமரிக்கப் பட்டு வருகிறது.

## புனித செபஸ்தியார் றோமன் கத்தோலிக்க தேவாலயம்.

யாழ் கச்சேரிப்பதிவேடுகள் இத் தேவாலயம் சீமர் அந்தோனியார் என்பவரால் 1800ம் வருடம் கட்டப்பட்டதாகத் தெரிவிக்கின்றன. ஆனால் சில அறிக்கைகள் இத் தேவாலயம் 1720ம் வருடம் தென் இந்தியாவிலிருந்து இவ் விடம் வருகை தந்து குடியேறிய இரண்டு சகோதரர்களில் மூத்த சகோதரரால் கட்டப்பட்டதாக தெரிவிக்கின்றன. அடுத்த சகோதரரால் கட்டப்பட்டது உலகுடை விநாயகர் கோயில் இரண்டும் அருகருகாக அமைந்துள்ளன.

கடந்த காலங்களில் மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் இவ்வாலயத்துக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியறிவு ஊட்டிய கல்விக்கூடங்கள்

கல்லூரிகள், பாடசாலைகள் என்பன நிறுவப்படுவதற்கு முன்னர் திண்ணைப்பள்ளிக் கூடங்கள் மூலமாகவே பலரும் கல்வியைப் பெற்றுக் கொண்டனர். இயற்றமிழ்ப் போதகாசிரியர் வைத்திலிங்கபிள்ளை அவர்களின் மூத்த மகனான சங்கரநமச்சிவாயம் எனும் பெயர் கொண்ட செல்வம் உபாத்தியாயர் அவர்களும், வேதவனம் உபாத்தியாயர் அவர் களும் திண்ணைப்பள்ளிக் கூடம் அமைத்து தமிழ் மொழியும், ஆரம்ப கணிதமும் கற்பித்து வந்தார்கள். இலக்கண இலக்கியம் என்பனவற்றை புலவர்களிடத்து மாணாக்கர்களாகச் சேர்ந்து கற்று வந்த முறையும் இருந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் முறையான பாடசாலைகளோ கல்விவசதிகளோ இருந்ததாகத் தெரியவில்லை.

1801ம் வருடம் இலங்கைத் தேசாதிபதியாய் இருந்த பிரடரிக் நோத் என்பவர் காலத் தில் யாழ்ப்பாணத்தில் சுதேசக் கல்வி விருத்திக்காக 47 பாடசாலைகள் நிறுவப்பட்டிருந்தன. 1805ம் வருடம் இலங்கை அரசில் போதிய நிதியின்மையால் இப் பாடசாலைகள் நிறுத்தப் பட்டன. இதற்குப் பின்னர் சுதேசக் கல்வியை விருத்தியாக்க அரசினர் முயற்சிக்கவில்லை. இவ்விடம் வந்த மிஷனரிமாரே சுதேசக் கல்வியையும், ஆங்கில பாஷைக் கல்வியையும் விருத்தியாக்க அதிகம் முயற்சித்தனர். 1814ம் வருடத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வந்த மிஷனரிமார் ஆங்காங்கு சுதேச பாடசாலைகளை நிறுவி மாணவர்களுக்குக் கல்வியறிவூட்ட முயற்சித்தனர். அயல் கிராமமான உடுப்பிட்டியில் அருளம்பலமுதலியாரும், வல்லிபட்டி யிலே குமாரசாமி முதலியாரும் ஒவ்வொரு கல்லூரியை நிறுவி தமிழ்க் கல்வி தழைத்து வளர்ச்சியடைந்து விளங்க முயற்சி செய்தனர். 1823ம்வருடம் மிஷனரிமார் வட்டுக்கோட்டை யில் செமினாரி என்னும் பெயருடன் ஆங்கிலக்கலாசாலை ஒன்றை நிறுவினர். அக்காலத்தில் இக்கலாசாலைக்கு ஒப்பான ஓர் ஆங்கிலக்கூடம் இலங்கை, இந்தியா போன்ற இடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவில்லையென்று தெரியவருவதோடு ஆசியாக் கண்டத்தில் நிறுவப்பட்ட முதலாவது பெரிய கல்லூரி என்றும் அறியமுடிகிறது. இக்கல்லூரி வட்டுக்கோட்டையில் நிறுவப் படுவதற்கு முன்னர் வல்வையில் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதென்றும் ஊர் மக்களின் எதிர்ப்பினால் அந்த யோசனை கைவிடப்பட்டு வட்டுக்கோட்டையில் நிறுவப் பட்டதென்றும் தெரியவருகிறது.

ஆங்கிலக் கல்வியைக் கற்க விரும்பிய வல்வை மாணவர்கள் தற்காலம் ஹாட்லிக் கல்லூரி என அழைக்கப்படும் வெஸ்லியன் மிஷன் ஆண்கள் ஆங்கிலக் கல்லூரியிலே யே கற்றுக் கொள்ள முடிந்தது.

## சிதம்பரக் கல்லூரி

இக்கல்லூரியை நிறுவிய வள்ளல் கு.சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெற வேண்டுமென அவா இருந்தும் வல்வையில் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாது இருந்தமையால் பருத்தித்துறை யில் அமைந்துள்ள வெஸ்லியன் மிஷன் கல்லூரியிலே கற்றுக் கொள்ள முடிந்தது. ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமங்களை வல்வையிலுள்ள மாண வர்கள் முகங்கொடுக்கக் கூடாது என்ற நோக் கோடு சிதம்பரப்பிள்ளையவர்களால் 1896ம் வருடம் கார்த்திகை மாதம் 11ம் திகதி ஆரம் பிக்கப்பட்டது தான் சிதம்பரக்கல்லூரி. சிதம் பர வித்தியாலயம் என்னும் பெயரில் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகாமை யில் உள்ள ஆலடியில் முதன்நிலைக் கல்லூரி யாக ஆரம்பித்த இக்கல்லூரி ஒரு வருடத்தின் பின்னர் கல்வித்திணைக்களத்தினால் நன் கொடை வழங்கும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. மாணவர் தொகை அதிகரிப் பினால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டதை தொடர்ந்து 1912ம் வருடம் ஊரிக்காட்டில் முகாமையாளர் திரு.ஞா.தையல் பாகர் அவர்களின் குடியிருப்புக்கு அருகிலுள்ள தற்போதய நிலையத்துக்கு மாற்றப்பட்டது.

ஆரம்பத்தில் 5ம் வகுப்பு வரையிலே யே நடைபெற்றுவந்த இப்பாடசாலை 1923ம் வருடம் இரண்டாந்தரக் கனிஷ்ட பாடசாலை யாகத் தரமுயர்த்தப்பட்டது. 1928ம் வருடம் மாணவர்கள் கேம்பிரிஜ் சீனியர் பரீடசைக் குத் தோற்றுவதற்கு அனுமதிவழங்கப்பட்டது. கல்லூரி மேலும் வளர்ச்சியடைந் ததைத் தொடர்ந்து 1935ம் வருடம் மாணவர்கள் லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக வகுப்புக்கள் ஆரம் பிக்கப்பட்டன. இவ் வகுப்புக்கள் ஆரம்பிக் கப்பட்ட காலங்களில் ஹாட்லிக் கல்லூரிக்கு அடுத்தபடியாக சிதம்பரக்கல்லூரி தரம் 'B' யைப் பெற்றதும் குறிப்பிடத்ததக்கதாகும். லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சை வகுப்புக் களைத் தொடர்ந்து 1942ம் வருடம் சிரேஷ்ட பாடசாலைத் தராதர வகுப்புக்கள் ஆரம்பிக் கப்பட்டன. சர்வ கலாசாலைப் புகுமுக வகுப் புக்கள் ஆரம்பிப்பதற்குப் போதுமான வசதி கள் 1935ம் வருடத்திலே இருந்த போதிலும் 1958ம் வருடத்தில் தான் இவ்வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்ட பல தரப்பட்ட வேலைகளையும் நடவடிக்கை களையும் கருத்திற் கொண்டு கல்லூரி 1958ம் வருடம் தைமாதம் தரம் IIற்கு உயர்த்தப் பட்டு மறுவருடம் தரம் I ற்கு உயர்த்தப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிதம்பரக் கல்லூரி' என்ற பெயரையும் பெற்று இற்றைவரை இந்தப் பெருமையைக் கொண்டிருக்கிறது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கைகளினாலும் இதனோடு தொடர் புடைய அசம்பாவிதங் களினாலும் கல்லூரிக்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டதுடன் பெறுமதி வாய்ந்த பொருட்கள், ஆவணங்கள், நூல்கள் போன்றவற்றையும் இழக்க நேரிட்டது கல்லூரிக்கு மிக அருகா மையில் இராணுவ முகாம் அமைந்திருந்த காரணத்தினால் மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோர் கல்லூரிக்கு வாசல் வழியாக போக்குவரத்து செய்ய முடியாதநிலை ஏற்பட்டு பின்பக்கமாக தனியாருக்குச் சொந்தமான காணியூடாக போக்குவரத்துக்காக வழி ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டது. ஒரு சந்தர்ப்பத் தில் கல்லூரி தனது சொந்தக் கட்டடத்தில் இயங்க முடியாத நிலை ஏற்பட்டு கொம்மந் தறை தமிழ்க்கலவன் பாடசாலையில் ஒரு பகுதியில் 1985ம் வருடம் வைகாசி மாதம் தொடக்கம் இயங்கி வந்தது. இங்கும் இடப் பற்றாக்குறை காரணமாகவும் வேறுசில கார ணங்களினாலும் தொடர்ந்து இயங்க முடி யாத நிலை ஏற்பட்டு அதே வருடம் ஆனி மாதம் வல்வையிலுள்ள தனியார் கல்வி நிறுவனமான 'வல்வை கல்வி மன்றத்தில்' சில காலம் இயங்கி வந்தது. இதன் பின்னர் 1987ம் வருடம் தை மாதம் வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் ஒரு பகுதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டு இயங்கி வந்தது. இங்கு போதிய வகுப்பறைகள் இல்லாமை யால் எமது மாணவர்கள் ஓலையால் வேயப் பட்ட கொட்டில்களிலேயே தமது கல்வியைத் தொடர்ந்தனர். 1987ம் வருடம் ஆடி மாதம் மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை யின் போது எம்மாணவர்களின் வகுப்பறை களான ஓலைக்கொட்டில்கள் சில விஷமிக ளால் தீக்கிரையாக்கப்பட்டன. 1990ம் வருடம் ஏற்பட்ட சூமுகநிலையைத் தொடர்ந்து வல் வெட்டியில் இயங்கி வந்த கல்லூரி தனது சொந்த இடமான ஊரிக்காட்டுக்கு மாற்றப் பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது.

1896ம் வருடம் இக்கல்லூரி நிறுவப் பட்ட சமயம் பருத்தித்துறையைச் சேர்ந்த திரு.விநாயகமுதலியார், அவர்களும் அவரைத் தொடர்ந்து திருவாளர்கள் ஏ. நாகமுத்து, வீ. அருணாசலம் ஆகியோரும் முகாமையாளர் களாக இருந்து கல்லூரியை வழிநடத்தி வந்தார்கள். 1901ம் வருடம் திரு.ஞா.தையல் பாகர் அவர்கள் முகாமையாளராகப் பொறுப் பேற்று 1960ம் வருடம் அரசினரால் கல்லூரி பொறுப்பேற்றுக் கொள்ளப்படும் வரை தொடர்ச்சியாக 60வருடங்கள் பணியாற்றி வந்துள்ளார்.

கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட சமயம் திரு.எஸ்.சிதம்பரப்பிள்ளையவர்களும் அவரைத் தொடர்ந்து 20 க்கும் மேற்பட்டோர் அதிபர்களாகக் கடமை பார்த்துள்ளார்கள். இவர்களில் இந்தியாவைச் சேர்ந்த திரு.எஸ். வண்ணமாமலை ஐயங்கார் அவர்கள் 30 வருடங்களுக்கு மேல் (1929 - 1960) அதிபர் பதவியை வகித்துள்ளார்.

கல்லூரி மாணவர்கள் கல்வியில் மாத்திரமன்றி சாரணீயம், விளையாட்டுத் துறை, நாடகம் போன்ற பலதுறைகளில் தமது திறமையை வெளிக்கொணர்ந்துள் ளார்கள். 1960, 1961, 1962, 1965 ம் வருடங் களில் யாழ் பழைய பூங்காவில் நடைபெற்ற போட்டிகளில் கல்லூரியின் சாரணர் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு பற்றி யாழ்மாவட்டத்தில் சிறந்த சாரணர் குழு எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு 'ரோட்டரிக் கேடயத்தை' ப் பெற்றுக் கொண்டனர். 1952 தொடக்கம் 1965 வரையும் நடைபெற்ற 14 போட்டிகளில் கல்லூரிக் குழு நான்கு போட்டி களில் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும். 1965, 1968, 1970 ஆகிய வருடங்களில் அகில இலங் கையிலுமே ஆகக் கூடிய இராணிச் சாரணர் களை உருவாக்கி அதற்கான கொடியினைப் பெற்றுக் கொண்ட பெருமையும் கல்லூரிச் சாரணர் குழுவுக்கு உண்டு. இது தவிர 1968, 1969, 1970 ஆகிய வருடங்களில் தொடர்ச்சி யாக அகில இலங்கையிலுமே சிறந்த சாரணர் குழு என்ற ஸ்தானத்தைப் பெற்று 'சேர் அன்றூ கோல்டிக் கொற்' வெற்றிக் கிண்ணத் தையும் பெற்றுக்கொண்டது. இவை சிதம்பர சாரணர் குழு ஏற்படுத்திய சாதனைகளில் ஒரு சில.

விளையாட்டுத் துறையில் 1948ம் வருடம் அகில இலங்கை ரீதியில் நடாத்தப் பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் கல்லூரி வீரர்கள் கலந்து கொண்டு இரண்டாம் இடத் தையும் (Runners up) 1951ம் வருடம் முத லாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். வடம ராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றி 1959, 1961,1962, 1963, 1964, 1965 1966, 1967 ஆகிய வருடங்களில் வெற்றியீட்டியதோடு (Champian) 1964, 1965, 1966 ஆகிய வருடங் களில் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக் கிடையே நடைபெற்ற போட்டிகளிலும் பங்கு பற்றி வெற்றியீட்டினார்கள். 1968ம் வருடம் கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியிலும் கலந்து கொண்டு முதலாமிடத்தைப் பெற்றதோடு நவீன விக் னானி கேடயத்தையும் பெற்றுக் கொண் டனர்.

1956ம் வருடம் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட உதை பந்தாட்ட போட்டியில் முதற் பிரிவினரும் (1st Eleven) 1957ல் 3ம் பிரிவினரும் (3rd Eleven) வெற்றி யீட்டியதுடன் யாழ் உதைபந்தாட்டச் சங்கத் தினரால் 1959, 1967 ஆகிய வருடங்களில் நடாத்தப்பட்ட போட்டிகளில் முதற் பிரிவினரும் (1st Eleven) வெற்றியீட்டியுள்ளார்கள். யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின ரால் 1961ல் நடாத்தப்பட்ட போட்டியிலும் முதற் பிரிவினர் (1st Eleven) கலந்து கொண்டு வெற்றியீட்டியுள்ளார்கள்.

அகில இலங்கை ரீதியிலாக நடாத் தப்பட்ட மெய்வல்லுனர் போட்டிகளிலும் கல்லூரி மாணவர்கள் பங்கு பற்றி முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றதோடு சாதனைகளையும் நிலை நாட்டியுள்ளனர்.

நாடகத்துறையிலும் சிதம்பரா மாண வர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி யுள்ளார்கள். 1957, 1958 காலப்பகுதியில் காலம் சென்ற திரு.எஸ். யோகரத்தினம் அவர்கள் முக்கியபாகம் ஏற்று நடித்த 'சாக்கி ரட்டீஸ்' கட்ட பொம்மன் ஆகிய நாடகங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கதாக அமைந் துள்ளன. வீரபாண்டிய கட்டபொம்மன் என்னும் திரைப்படம் உருவாகுவதற்கு முன் னரேயே கல்லூரி மாணவர்களால் மேடை யேற்றப்பட்டது கட்டபொம்மன் என்னும் நாடகமாகும்.

இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் கல்லூரியை அரசாங்கம் சுவீகரித்த பின்னரும் கூட பெரும்பாலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடங்கள் முகாமையாளரினாலும் நலன் விரும்பிகளினாலும் கட்டிக் கொடுக்கப் பட்டன.



01) இரசாயன பௌதீக ஆய்வு கூடம் - முதலியார் எஸ்.கார்த்திகேசு அவர்களி னால் 1948 அளவில்.

02) கல்லூரி முகப்பு மண்டபம் - வகுப்பறை கள் - திரு.வ.இராமசாமிப்பிள்ளை அவர்களினால்

03) 70 x 10 அடி வகுப்பறை - கல்வித் திணைக்களத்தினால் 1964ல்.

04) தச்சுக்கூடம், சங்கீத வகுப்பறை 60 x 18 அடி பொதுமக்களால் 1964ல்.

05) இரண்டுமாடிக்கட்டடமும், ஆய்வுகூட மேல்மாடியும் - கொழும்பு, திருகோண மலை பழைய மாணவர் சங்கம், பொது மக்கள் இணைந்து 1966ல்.

06) விஞ்ஞான கூடம் - கல்வித்திணைக் களம் 2001ம் வருடம்.

07) கணனி அறை - கல்வித்திணைக்களம் 2002ம் வருடம்.

08) 40 x 20 அடி கட்புல செவிப்புல கூடம் - கல்வித்திணைக்களம் 2003ம் வருடம்.

09) ஆண்கள்,பெண்கள் மலசல கூடம் - (G.T.Z) ஜீ.ரீ.சற் பாடசாலை அபி விருத்திச் சபை இணைந்து 2003ல்.

10) இரண்டு மாடிக்கட்டடம் வகுப்பறைகள் - 80x20 "நிகொட்" அமைப்பு 2004ல்.

## சிவகுரு வித்தியாசாலை.

வல்வை முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் ஆலடியில் இயங்கி வந்த ஆங்கிலப் பாடசாலையாகிய சிதம்பரக் கல்லூரி இடப்பற்றாக்குறை காரணமாக 1912ம் வருடம் ஊரிக்காட்டுக்கு மாற்றப்பட இப் பாடசாலைக் கட்டடத்தில் அதன் முகாமையாளர் திரு.ஞா.தையல்பாகர் அவர்களால் சிவகுரு வித்தியாசாலை என்ற பெயருடன் ஒரு தனித்தமிழ் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. 1926ம் வருடம் வரை ஆரம்பப் பாடசாலையாக இயங்கி வந்த இப் பாடசாலை பின்னர் 6ம் வகுப்பிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வகுப்பாக கூட்டப்பட்டு சிரேஷ்ட பாடசாலைத் தராதர வகுப்பு வரை கல்வி போதிக்கும் பாடசாலையாக இயங்கி வருகிறது. கனிஷ்ட உயர் வித்தியாலயம் என்ற தரத்தினைப் பெற்ற இக்கல்லூரியில் இடைக்காலத்தில் உயர் வகுப்புக்கள் இல்லாதிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. 1904ம் வருடம் திண்ணைப் பள்ளிக் கூடமாக ஆரம்பிக்கப்பட்டு அதன் பின்னரே ஆலடிக்கு இடம் மாற்றப்பட்டது எனவும் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலடியில் இயங்கி வந்த சமயம் இடப்பற்றாக்குறை ஏற்படவே தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கடற்கரையை அண்மித்த பகுதியில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு 1942ம் வருடம் விஜயதசமி தினத்தன்று இயங்க ஆரம்பித்தது. ஆரம்பத்தில் ஓலைக் கூரையாக இருந்த இக்கட்டடம் 1961ம் வருடம் வீசிய புயலினால் ஒரு பகுதி சேதமடைய நேர்ந்தது. திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட சமயம் ஓலைக்கூரைகள் ஓட்டுக்கூரையாக மாற்றப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் பாடசாலையின் தென் பகுதியில் 60 அடி நீளமான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு முந்திய கட்டடத்துடன் இணைக்கப்பட்டது. இது தவிர 110 x 18 அடி கொண்ட கட்டடம் ஒன்று கல்வித் திணைக் களத்தினாலும் விஞ்ஞானகூடம், மனையியல்கூடம், என்பனவும் வடக்குப் பகுதி, கிழக்குப் பகுதி சுற்று மதில்களும் கட்டப்பட்டன.

புற்றளையைச் சேர்ந்த சின்னையா உபாத்தியார் என்பவர் இப்பாடசாலையின் முதல் தலைமையாசிரியராக இருந்த பெருமையைப் பெற்றவர். இவரைத் தொடர்ந்து திருவாளர்கள் T.K. அருணாசலம், வீரகத்தி, வல்வெட்டி க. வல்லிபுரம், அல்வாய் வ. ஆறுமுகம் ஆகியோர் தலைமை ஆசிரியராக இருந்து நடாத்தி வந்தார்கள். இவர்களைத் தொடர்ந்து 1.7.1922ல் கெருடாவிலைச் சேர்ந்த திரு.சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று 1.6.1956ல் அவர் இளைப்பாறியதைத் தொடர்ந்து அல்வாயைச் சேர்ந்த திரு.இ. துரைராசா அவர்கள் தலைமை ஆசிரியர் பெறுப்பை ஏற்றார். இவர் 15.6.1969ல் இளைப்பாற கெருடாவிலைச் சேர்ந்த திரு.சி.அழகதுரை அவர்கள் தலைமை ஆசிரியரானார். இவரது காலத்தில் திரும்பவும் 5ம் வகுப்புகளுக்கு மேல் வகுப்புக்கள் நடைபெறத் தொடங்கின. இவரும் 31.12.1973ல் இளைப்பாறிச் செல்ல அல்வாயைச் சேர்ந்த திரு.சு.கணபதிப்பிள்ளையவர்கள் தலைமையாசிரியரானார். இவரது காலத்தில் 1975ம் வருடம் தொடக்கம் 9ம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1972ம் வருடம் நடைபெற்ற 'ஸ்வர ஜதி' நடனவிழாவில் வட்டாரத் தேர்விலிருந்து மாவட்டத் தேர்வுக்கு யாழ்ப்பாணம் சென்று முதலாமிடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தையும் சான்றிதழையும் சிவகுரு மாணவி பெற்றுக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது. நடனமாடி முதலிடத்தைப் பெற்றுக் கொடுத்தவர் செல்வி சிவகங்கை விஜயரத்தினமாகும்.

## மகளிர் மகா வித்தியாலயம்.

வல்வையில் ஏற்கனவே நான்கு கல்லூரிகள் இயங்கி வந்தாலும் இவை அனைத்துமே கலவன் பாடசாலகளாவே இயங்கி வந்துள்ளன. இதனை நிவர்த்தி செய்து பெண் பிள்ளைகளுக்கு மட்டும் ஒரு பாடசாலையை ஆரம்பிக்க வேண்டுமெனச் சில பெரியோர்கள் முன்வந்தார்கள். நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையிலுள்ள வித்தனையைச் சேர்ந்த துரை வாத்தியாருக்குச் சொந்தமான 16 பரப்புக் கொண்ட வெற்றுக்காணி கொள்வனவு செய்யப்பட்டது. வல்வைப் பிரபல வர்த்தகர் திரு.செல்லத்துரை தண்டயல் அவர்களின் புத்திரர்களான திருவாளர்கள் செ.யோககுரு, செ.மௌனகுரு இருவரும் சேர்ந்து 120x20 அடி கொண்ட எட்டு வகுப்புக்கள் நடத்தக்கூடியதான மண்டபம் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியாலயம் என்பனவற்றை கட்டிக் கொடுத்தனர்.

1972ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரிக்குத் திருமதி கோ.அரியரத்தினம் அவர்கள் முதலாவது தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றார். இவர் 21.3.1973ல் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைக்குச் சென்றதைத் தொடர்ந்து உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி.எம்.இராஜரத்தினம் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றார். இவரும் 5.5.1981ல் இளைப்பாறிச் சென்றதை அடுத்து கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதிபராக இருந்த திருமதி. கோ. அரியரத்தினம் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்று 21.4.1992 வரை கடமையாற்றினார். இவரையடுத்து திருமதி சு.நித்தனசுந்தரம் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்று 25.4.1996 வரை கடமையாற்றினார்.

பாடசாலைக்கு தென்புறத்திலுள்ள 100x20 அடி வகுப்பறைகள் 1972ல் அரசாங்கத்தினாலும் முகப்பிலுள்ள 50x20 அடி பாலர் பகுதி வகுப்பறைகள் 1974ல் அரசாங்கத்தினாலும் கட்டிக் கொடுக்கப்பட்டன. திருவாளர்கள் அ.சி.விஷ்ணுசுந்தரம், அ.துரைராசா, ஐ.காத்தாமுத்து, மு.மா.பாலசிங்கம் ஆகியோர் பாடசாலை வளவின் சுற்று மதிலையும் வடபுறமும் தென் புறமும் ஏற்கனவே கட்டப்பட்டிருந்த கட்டடங்களை இணைக்கும் படியான மாடிக் கட்டத்தையும் 1975 அளவில் கட்டிக் கொடுத்துள்ளார்கள். திரு.றங்கவடிவேல் அவர்கள் 110X20 அடி கொண்ட வகுப்பறையை 1984/86 காலப்பகுதியில் கட்டிக் கொடுத்தனர். உலக வங்கியின் உதவியுடன் நூலகமொன்றும் 20 x 20 அடி கொண்ட கட்புல செவிப்புல அறையொன்றும் அரசினரால் 2003ல் கட்டிக்கொடுக்கப்பட்டது.

லண்டனில் வாழும் வல்வை வாசிகளால் 10 கணணிகளும் திரு. யோகச் சந்திர போஸ் அவர்களினால் பாண்ட் வாத்தியக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

1977ம் வருடம் அநுராதபுரத்தில் நடைபெற்ற கலைவிழாப் போட்டியில் கல்லூரி மாணவர்களின் நடனக்குழு பங்கு கொண்டு தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது எம்மாணவர்களின் திறமைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

## அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை.

அமெரிக்க மிஷனரிமாரின் வருகையுடன் யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கு கல்லூரிகள் நிறுவப்பட்டன. அந்த வகையில் 1880ம் வருடம் கட்டப்பட்டது தான் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையாகும். ஆரம்பத்தில் பெரிய கொட்டகையாக இருந்த இப் பாடசாலையில் உடுப்பிட்டியைச் சேர்ந்த அரியகுட்டி என்பவர் தலைமை ஆசிரியராக வந்ததும் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பல விதமான முயற்சிகள் எடுத்துள்ளார். இவற்றில் பாடசாலைக்குக் காலையில் சமூகமளிக்கத் தவறும் மாணவர்களின் வீடு சென்று அவர்களைப் பாடசாலைக்கு அழைப்பித்து வருவதும் ஒன்றாக இருந்தது. இவர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு எடுத்த முயற்சியினாலேயே இப்பாடசாலை தற்போதைய நிலைக்கு உயர்ந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. இதனை நினைவிற் கொண்டே இப்பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை தற்போதும் அரியகுட்டிப் பள்ளிக் கூடம் என எல்லோராலும் அழைக்கப்படு வதைக் காணலாம்.

தற்காலம் கற்கட்டடமாக அமைந் துள்ள இப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரையிலுமே மாணவர்கள் கல்வி கற்று வரு கிறார்கள். ஐந்தாம் வகுப்பில் சித்தி பெறும் மாணவர்கள் வல்வையில் உள்ள இதர பாட சாலைகளில் தமது கல்வியைத் தொடர்கிறார் கள்.

## றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

இப்பாடசாலை புனித செபஸ்தியார் றோமன் கத்தோலிக்க தேவாலயம் சிறிய அளவில் 1720ம் வருடம் கட்டப்பட்ட போது தேவாலய வளவில் திண்ணைப் பள்ளிக் கூட மாக இருந்ததாக அறியமுடிகிறது. 1889ம் வருடம் இப்பாடசாலை நிறுவப்பட்டதாகச் சில அறிக்கைகள் தெரிவிக்கின்றமையால் தேவாலயம் பெரியளவில் கட்டப்பட்டதன் பின்னர் திண்ணைப் பள்ளிக் கூடத்திலிருந்து மாற்றப்பட்டிருத்தல் கூடும்.

தேவாலயத்துக்கு வெளியே ஒரு நிலையத்துக்கு இப்பாடசாலை மாற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது முன்னர் மத்திய மருந்தகமாக இருந்த கடற்கரையை அண்டிய அரச காணியில் கட்டடங்கள் அமைக்கப்பெற்று 2.12.1979 தொடக்கம் வகுப்புக்கள் நடைபெறத் தொடங்கின. இந் தக் கட்டடங்கள் அமைப்பதற்காக உடுப் பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு த.இராசலிங்கம் அவர்கள் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 50,000 ஒதுக்கியிருந்தார். கட்டடம் அமைப் பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் 2.6.1979 அன்று நடைபெற்றது.

இப்பாடசாலையிலும் ஐந்தாம் வகுப்பு வரையிலான வகுப்புக்களே நடை பெறுகின்றன. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் இப் பாடசாலை அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையுடன் இணைக்கப்பட்டு சிலகாலம் இயங்கி வந்தது. 2004ம் வருட ஆரம்பத்திலிருந்து மீண்டும் இப்பாடசாலை தனது சொந்த இடத்தில் இயங்கி வருகிறது.

**உலகிலேயே அகிம்சை முறையில் வெற்றிபெற்ற நாடு இந்தியாவைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. ஓரளவுக்கு மனிதாபிமானம் உள்ள நாடும் இந்தியாதான். அதனால் தான் எனது உண்ணாவிரதத்திற்கு இங்கே வெற்றி கிடைத்தது.**

**திரு. வே. பிரபாகரன் 1986ல் கல்கி**
**இதழுக்கு அளித்த பேட்டியில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய வசதிகளும் வைத்தியசாலையும்

முற்காலத்தில் ஆங்கில மருத்துவ வசதியைப் பெறமுடியாதவர்கள் தமக்குத் தெரிந்த மூலிகைகளைக் கொண்டும் சித்தவைத்தியர்களைக் கொண்டும் மருந்து வகைகளைப் பெற்று தமது நோய் நொடிகளைக் குணப்படுத்திக் கொண்டார்கள்.

அமெரிக்கன் மிஷனரிமார்கள் வருகையுடன் ஊரிக்காட்டில் பாதிரி பங்களா என்று அழைக்கப்பட்டு பின்னாளில் இராணுவ முகாமாக இயங்கி வந்த கட்டடம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலும் கடமை பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்க மிஷன் பாதிரிமார்கள் சுகயீனமுற்ற வேளையில் இங்கு வந்து தங்கி நின்று சுகம் பெற்றுச் சென்றதாக அறிய முடிகிறது. 1842ம் வருடம் கனம் உவைமன் ஐயர் என்பவரும் 1844ம் வருடம் வரணியில் இருந்து சேவை செய்த கனம் அப்தோப் ஐயர் என்பவரும் இவ்விடம் வந்து தங்கி நின்று சுகம் பெற்றுச் சென்றதாக தெரியவருகிறது. இந்தப் பாதிரி பங்களாவே இப்பகுதியில் 1950 காலப்பகுதியில் ஒரு சிலருக்கு அம்மைநோய் பீடிக்கப்பட்டிருந்தபோது தொற்று நோய்த் தடைமுகாமாக இயங்கியது.

தற்காலம் றோமன் கத்தோலிக்க பாடசாலை இயங்கி வரும் காணியில் சுங்க இலாகாவுக்கு அருகாமையில் மத்திய மருந்தகமொன்று 18ம் நூற்றண்டின் நடுப்பகுதியில் அரசாங்கத்தினரால் நிறுவப் பெற்று இயங்கி வந்தது. இந்நிலையத்தில் வெளி நோயாளர்களைப் பார்வையிட்டு மருந்துகள் கொடுப்பது மட்டுமே இடம் பெற்று வந்தது. இரவு வேளைகளில் நோயாளர்களைப் பார்வையிடுவது இடம் பெறாததுடன் நோயாளர்கள் இங்கு தங்கி இருந்து சிகிச்சை பெறுவதற்கு ஏதுவாக விடுதிகளேதும் இருக்கவில்லை. இப்பகுதியில் அரசினரால் பயிற்றப்பட்ட பிரவசம் பார்க்கும் பெண்கள் இல்லாத காரணத்தால் பிரசவசங்கள் யாவும் அவரவர் வீடுகளிலேயே இடம் பெற்று வந்தன. இச்சந்தர்ப்பங்களில் பிரசவவேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் கைதேர்ந்த பெண் வீடுகளுக்கு அழைக் கப்பட்டு காலங்காலமாக நடந்து வந்த சில்லறை வைத்திய முறைகள் கைக்கொள் ளப்பட்டு பிரசவம் பார்க்கப்பட்டது.

இப்படியான ஒரு கஷ்டமான சூழ் நிலையிலிருந்து எம்மக்களுக்கு ஒரு விமோ சனம் கிட்ட வேணுமென்ற நோக்கோடு திரு இ.அப்புக்குட்டியாபிள்ளை அவர்களால் ரூபா ஒரு லட்சம் அளவில் செலவு செய்யப்பட்டு ஒரு வைத்தியசாலை ஊறணியில் நிறுவப் பட்டது. இந்த வைத்தியசாலை அமைப்பதற் கான செங்கற்கள் கப்பல் மூலமாக இந்தியா விலிருந்து தருவிக்கப்பட்டிருந்தன. இலங்கை யின் தேசாதிபதியாக இருந்த Sir Henry Monk Mason Moore என்பவரால் இக் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் 30.5.1945ல் நாட்டிவைக்கப்பட்டது. திரு.இ.அப்புக்குட்டி யாபிள்ளை அவர்களின் மூத்த புதல்வி இந்தி ராணி அவர்களின் பெயரைக் கொண்டு இந்திராணி வைத்தியசாலை எனப் பெய ருடன் கட்டப்பட்ட இவ் வைத்தியசாலை அப்போதய சுகாதார அமைச்சர் கௌரவ George R.de silva அவர்களால் 1.2.1947ல் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப் பட்டது. இவ் வைத்தியசாலையில் ஆண்கள், பெண்களுக்கான இரண்டு விடுதிகளும். திருமதி அப்புக்குட்டியாபிள்ளையின் பெயரில் 'சாரங்கம்மா' பிரசவ விடுதியும் அமைக்கப் பட்டன.

வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான போதிய படுக்கை வசதிகள் இல்லாது போக வே திரு.அ.சி.விஷ்ணுசுந்தரம் அவர்களி னால் தனது தாயார் திருமதி சிற்றம்பலம் பார்வதிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த மாக பிரசவ விடுதி (maternity Ward) குழந் தைகள் விடுதி என்பனவற்றைக் கொண்ட இருமாடிக் கட்டடம் ஒன்று கட்டிக் கொடுக்கப் பட்டது. இக்கட்டடம் சுகாதார அமைச்சர் கௌரவ M.D.H.Jayawardena அவர் களால் 2.2.1966ல் திறந்து வைக்கப்பட்டது.

ஒரு காலகட்டத்தில் நான்கு வைத்திய அதிகாரிகள் (Medical Officers) இரண்டு உதவி வைத்திய அதிகாரிகளைக் கொண்டு வல்வெட்டித்துறை சுற்றயல் கூறு (Peripheral Unit) எனக் குறிப்பிடப்பட்ட இவ்வைத்தியசாலை இலங்கையில் உள்ள ஏனைய சுற்றயல் கூறுகளிலும் பார்க்க பெரிய தொரு நிலையமாக 86 படுக்கை வசதிகளை யும் கொண்டிருந்தது. நாட்டில் உள்ள ஏனைய சுற்றயல் கூறுகளில் பெரும்பாலானவற்றில் உதவி வைத்திய அதிகாரிகளே பொறுப்பதி காரிகளாக கடமை புரிந்துள்ளார்கள். உள் நோயாளர் வெளி நோயாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கையைக் கொண்டு இவ்வைத்திய சாலையை ஒரு மாவட்ட வைத்தியசாலை யாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் 1989ல் வைத்தியசாலை அபிவிருத்தி சபை யினராலும் நலன் விரும்பிகளினாலும் மேற் கொள்ளப்பட்டன. இதன் பயனாக இந்த சுற்ற யல் கூறு என்னும் இவ்வைத்தியசாலை 1992ம்வருடம் பங்குனி மாதம் மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது.

வெளிநாடுகளில் வாழும் வல்வை அன்பர்களினாலும் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ஆகியவற்றின் உதவியுடன் ஒரு சத்திரசிகிச்சைக் கூடம் அமைக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத் தினரிடம் கையளிக்கப்பட்டது. சத்திர சிகிச் சைக் கூடத்துக்கான உபகரணங்கள் உத்தி யோகத்தர்கள் என்பனவற்றை வழங்க சுகா தாரத் திணைக்களம் உறுதியளித்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படாமையினால் இச் சத்திர சிகிச்சைக் கூடம் திறந்து வைக்கப் பட்டு இயங்க முடியாத நிலையில் உள்ளது.

பிரதேச செயலர் வழங்கிய நிதியைக் கொண்டு சிறிய சத்திரசிகிச்சைக் கூடம் ஒன் றும் U.N.H.C.R. நுண்கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு ஆண்கள் விடுதி புனரமைப்பு (Forut) போரூட் நிறு வனம் வழங்கிய நிதியைக் கொண்டு பெண் கள் விடுதி புனரமைப்பு திணைக்களத்தி னால் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு புதி தாக நோயாளர் வாகனத் தரிப்பிடம் என்பன 2000ம் வருடம் அமைக்கப்பட்டன. 2001ம் வருடம் U.N.H.C.R. அமைப்பினரால் வழங் கப்பட்ட நிதியைக் கொண்டு சிகிச்சை நிலை யம் (Clinic Complex) வைத்திய தொழில் நுட்ப ஆய்வு கூடம் என்பனவற்றை கொண்ட இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப் பட்டது.

U.N.H.C.R. நல்லெண்ணத் தூது வரும் ஹொலிவூட் நடிகையுமான ANGE LINA JOLIE அவர்களால் வழங்கப்பட்ட ரூபா 10 லட்சத்தில் சிறுவர் விடுதி புனரமைப்பு பிரசவ அறை (Labour room) மறுசீர மைப்பு என்பன 2003ல் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரசவ அறைக்கு குளிரூட்டியும் (Air condition) அமைத்துக் கொடுக்கப்பட்டது.

NECORD அமைப்பினரால் வழங் கப்பட்ட நிதியில் சமையல் கூடம் ஒன்று புதி தாக அமைக்கப்பட்டு 7.11.2004 அன்று திறந்து வைக்கப்பட்டது. அவுஸ்திரேலியா வில் வாழும் வல்வை அன்பர்களினால் அதி நவீன இரத்தப் பரிசோதனை நுண்கருவி ஒன்று (Photo meter) வழங்கப்பட்டு இதே தினத்தில் பரிசோதனைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த வகையான நுண் கருவி குடாநாட்டிலே எந்த ஒரு வைத்திய சாலையிலும் பாவனையிலில்லாத கருவி யென்று சொல்லப்படுகிறது. இந்த வகைக் கருவியின் உதவியுடன் பல விதமான இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியுமென்றும் கூறப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபை

1.1.1947ல் வல்வெட்டித்துறையில் பட்டினசபை (Town Council) ஏற்படுத்துவதற்கு முன்னர் சுகாதாரச்சங்கம் (Board of Health) சிறுநகர் சுகாதாரச்சபை (Small Town Sanitary Board) என்னும் உள்ளூராட்சி அமைப்புக்கள் வல்வையின் சுகாதாரம் முதலிய வற்றைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தன.

1853ம் வருடம் யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு சுகாதாரச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னர் 1899ம் வருடம் வல்வெட்டித்துறையிலும் பருத்தித்துறையிலும் சுகாதாரச் சங்கங்கள் அமைக்கப்பட்டு இவற்றினால் நிர்வாகங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதன் பின்னர் 1908ம் வருடம் இந்த சுகாதாரச்சங்கம், சிறுநகர்ச் சுகாதாரச்சபை என மாற்றப்பட்டது. யாழ்ப்பாண அரச அதிபரின் அதிகாரத்தின் கீழ் இயங்கி வந்த இந்தச் சபைகளுக்கு வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற ஊர்களிலிருந்து ஒவ்வொரு அங்கத்தவரை அரச அதிபரே ஏற்படுத்தி இவ்வூர்களின் சுகாதாரத்தினைக் கவனித்து வந்தார். ஊரிலுள்ள குப்பை கூழங்களை அப்புறப்படுத்துதல், பொதுமல கூடங்களை அமைத்தல், பராமரித்தல், வீடுகளில் கட்டப்பட்ட மலகூடங்களைத் துப்பரவு செய்யும் வேலையாட்களை நியமித்து அவர்களது வேலைகளை மேற்பார்வை செய்தல் என்பனவே இச்சபைகளின் முக்கிய வேலையாக இருந்து வந்துள்ளன.

1.1.1947ல் பட்டினசபை ஏற்படுத்தப்பட்ட போது சபையின் எல்லைகள் வகுக்கப்பட்டு கோயில் வட்டாரம், பஜார் வட்டாரம், ரேவு வட்டாரம், வாடி வட்டாரம், வேவில் வட்டாரம் என ஐந்து வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டன. பட்டினசபை ஏற்படுத்தப்பட்ட சமயம் கிழக்கே ஊறணி வைத்தியசாலை வரையும், மேற்கே சிதம்பரக் கல்லூரி அமைந்துள்ள ஊரிக்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும், வடக்கே கடற்பகுதியையும், தெற்கே கம்பர்மலை வல்வெட்டி ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 250 ஏக்கர் விஸ்தீரணமான பட்டினமாக இருந்தது. மேலே கூறப்பட்ட ஐந்து வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ் வொரு அங்கத்தவர்கள் அவ் வட்டார மக்க ளால் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த ஐந்து அங்கத்தவர்களும் தமக்கு ஒருதலைவர், ஒரு உபதலைவர் என தெரிவு செய்து பட்டின சபையின் முக்கிய பணிகளான சுகாதாரம், சந்தை, தெருக்கள், ஒழுங்கைகளைப் பரா மரித்தல் போன்றவற்றுடன் வரிகளை வசூ லித்தல், மின்சாரம் வழங்குதல் பரிபாலித்தல் போன்ற கடமைகளையும் செய்து வந்தார் கள். இந்த ஐந்து அங்கத்தவர்களும் எதுவித கொடுப்பனவுகளையோ பெறாமல் அதனை ஒரு சமூக சேவையாகவே கருதிச் செயற் பட்டார்கள்.

ஆரம்பத்தில் பட்டினசபை எல்லைக் குள்ளான மின் விநியோகம் பருத்தித்துறை நகரசபையினால் மேற்கொள்ளப்பட்ட போதும் பின்னர் நகரசபை இரண்டு மின்பிறப்பாக்கி களைக் கொள்வனவு செய்து மின்சாரத்தை வழங்கி வந்தது. சிறிது காலத்தின் பின் மின் சாரத் திணைக்களத்தினாலும் இத்திணைக் களம் பின்னர் மின்சாரசபை என மாற்றம் பெற்றபின் அச்சபையினாலும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி அமைப்புக் களினால் மின்சாரம் வழங்கப்பட்டு வந்த போது பாவனையாளர்களிடம் மின்கட்டணம் வசூலித்தல், மின் விநியோகத்தில் ஏற்படும் தவறுகளைத் திருத்தம் செய்தல், பெற்றுக் கொண்ட மின்சாரத்துக்கான முழுக் கட்ட ணத்தையும் மின்சார சபைக்குச் செலுத் துதல் போன்றவற்றை பட்டினசபையே மேற் கொண்டு வந்தது. 27.1.1997ல் இப் பொறுப்பு பட்டினசபையிலிருந்து மின்சாரசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அச்சபையினாலேயே எல்லாவிதமான வேலைகளும் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

1.1.1947ல் பட்டினசபையாகத் தர முயர்த்தப்பட்டதன் பின்னர் அதன் முதல் தலைவராகத் திரு.ஐ. திருப்பதி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். அடுத்த தடவையும் தலைவராக இவரே தெரிவு செய்யப்பட்டு 1952 வரை தலைவராகக் கடமையாற்றினார். இவரைத் தொடர்ந்து 1953ல் திரு.ச. நடன சிகாமணி அவர்கள் தலைவர் பொறுப்பை ஏற்றார். இவருக்குப்பின் 1956ல் திரு.சோ. சுந்தரலிங்கம் அவர்களும் 1959ல் திரு.இ. அப்புக்குட்டியாபிள்ளை யவர்களும் அவரைத் தொடர்ந்து 1960ல் திரு. க. சபாரத்தினம் அவர்களும் இவரையடுத்து 1965ல் திரு.க. சு. கதிரிப்பிள்ளை (ஸ்ரீரங்கம்) அவர்களும் இவரை அடுத்து 1967ல் திரு. வி. இரத்தினவடிவேல் அவர்களும் தலைவராகப் பொறுப்பேற்றார் கள் (நகரசபையின் ஆவணங்கள் சேதமாக் கப்பட்டமையால் தலைவராகப் பதவி வகித் தோரது சரியான காலங்கள் பெற்றுக் கொள்ள முடியவில்லை)

பருத்தித்துறைத் தொகுதிப் பாராளு மன்ற உறுப்பினர் திரு.க. துரைரத்தினம் அவர்கள் மேற்கொண்ட முயற்சியினால் பட்டினசபை என்ற அந்தஸ்த் திலிருந்து 1.1.1971ல் நகரசபையாகத் தரமுயர்த்தப் பட்டது. நகரசபையாகத் தரமுயர்த்தப்பட்ட தும் பொலிகண்டி, மயிலியதனை, தொண் டைமானாறு ஆகிய பகுதிகளும் உள்ளடக் கப்பட்டு ஒன்பது வட்டாரங்களாக அதிகரிக் கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் பொலிகண்டிப் பகுதியில் உள்ள ஒரு பகுதி மக்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலியதனைச் சேர்ந்த ஒரு பகுதியினரும் நகரசபையுடன் இணைத்துக் கொள்வதற் கான தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இணைவதனால் கிடைக்கப் போகும் நன்மை களை எடுத்துக் கூறியதற்கு இணங்க தமது எதிர்ப்பைக் கைவிட்டு சம்மதத்தைத் தெரி வித்தனர். இதனையடுத்து நகரசபையின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன.

நகரசபையாகத் தரமுயர்த்தப்பட்ட பின் நடந்த முதலாவது தேர்தலில் திரு.து. நவரத்தினம் அவர்கள் முதலாவது நகரசபை முதல்வரானார். நகரசபையின் எல்லைக்குள் ஏறக்குறைய 4000 குடும்பங்கள் வசித்து வந்த போதும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலை காரணமாகப் பெரும்பாலான குடும் பங்கள் இடம்பெயர்ந்து செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. நகரசபை அந்தஸ்த்தைப் பெற்றபின் கிழக்கெல்லை பொலிகண்டி கந்த வனக் கடவை ஆலயத்திற்கு மேற்குப்புற மாகச் செல்லும் கற்பாதையும் மேற்குப்பகுதி தொண்டைமானாறு ஆலயத்தினை எல்லை யாகவும், வடக்கே பாக்கு நீரிணைக் கடலை யும், தெற்கே பொலிகண்டி மேற்குப்பகுதி, வல்வெட்டிக் குறிச்சி, ஊரிக்காடு, மயிலிய தனைக் குறிச்சி, கெருடாவில் குறிச்சி என்ப வற்றை உள்ளடக்கிய மன்றமாகியது. இதன் விஸ்தீரணம் 7.68 ச.கி மீற்றராகவும் 1999 காலப்பகுதியில் 18000 சனத்தொகையையும் கொண்டிருந்தது. யாழ் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் விஸ்தீரணம் குறைந்த உள்ளூராட்சி மன்றம் வல்வெட்டித் துறை நகராட்சிமன்றமேயாகும். 1977ம் ஆண்டு தொடக்கம் இரண்டு ஆண்டுகள் நகர சபையின் நிர்வாகம் விசேட ஆணையாளர் திரு.கோ.கந்தசாமி அவர்களினால் மேற் கொள்ளப்பட்டது.

1979ம் ஆண்டு முதன்முதலாக நடாத் தப்பட்ட விகிதாசாரத் தேர்தலில் சமாதான நீதவானும், தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவ ர்களுள் ஒருவருமான திரு.ச. ஞானமூர்த்தி அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நகரசபை நிர்வாகத் தைப் பொறுப்பேற்றது. இவர்களது காலத் தில் நவீன சந்தைக் கட்டடம், குழாய் நன்னீர்த்திட்டம், தொண்டைமானாறு, கம்பர் மலை, பொலிகண்டி ஆகிய கிராமங் களுக்கான மின் விநியோக வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன.

1983ம் ஆண்டு ஆனிமாதம் தொடக் கம் நகரசபை நிர்வாகம் மக்கள்பிரதி நிதிகளி டமிருந்து விசேட ஆணையாளரது நிர்வாகத் துக்கு மாற்றப்பட்ட போது திரு.கே. சுப்பிர மணியக்குருக்கள் விசேட ஆணையாளராக நியமனம் பெற்றார். இவரைத் தொடர்ந்து திருவாளர்கள் வ. இராமச்சந்திரன், ந. ஞான வேல், பெ. கனகசபாபதி ஆகியோர் விசேட ஆணையாளர்களாகப் பொறுப்பேற்று நடத்தி வந்தார்கள். 1998ம் ஆண்டு நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் திரு. ம.க. சிவாஜி லிங்கம் அவர்கள் தலைவராகப் பொறுப் பேற்று அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்படும் வரை இப்பதவியை வகித்தார்.

திரு.ச.ஞானமூர்த்தி அவர்கள் தலை வராக இருந்த காலப்பகுதியில் மேற் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளப்பட்ட நன்னீர் விநியோகம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இதற்கென அமைக்கப்பட்டிருந்த பாரிய தண்ணீர்த் தாங்கி, நீர் விநியோகக்குழாய்கள் என்பன சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து நீர்விநி யோகம் தடைப்பட்டிருந்தது. சுமூகநிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜீ. ரீ. சற் நிறுவனத் தின் உதவியுடனும் பொதுமக்களின் பங் களிப்புடனும் திருத்தி அமைக்கப்பட்டு நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1987ம் ஆண்டு அரச படைகளினால் மேற் கொள்ளப்பட்ட லிபரேசன் ஒப்பரேசன் நட வடிக்கையினால் நவீன சந்தைக் கட்டடமும் அதனுள் இயங்கிவந்த நூலகம், நகரசபை அலுவலகம் என்பன முற்றாகச் சேதமாக்கப் பட்டன. குண்டுவீச்சினால் சேதமாக் கப்பட்ட கட்டடத்தில் தொடர்ந்து பெய்த மழையினால் நூலகத்தில் இருந்த 3000க்கு மேற்பட்ட நூல் கள் சேதமாக்கப்பட்டதோடு அவற்றினைப் பாவிக்க முடியாத நிலையும் ஏற்பட்டது. நகர சபைக்குக் கிடைக்கப்பெற்ற நிதி உதவி களைக் கொண்டு சேதமாக்கப்பட்ட கட்ட டங்கள் திருத்தியமைக்கப்பட்டு நகரசபை அலுவலகம் நவீன சந்தையின் மேல் மாடியில் தற்போது இயங்கி வருகிறது. நூல் நிலையம் தனியார் வீடொன்றுக்கு இடமாற் றப்பட்டு புதிதாகப் பெற்றுக் கொண்ட நூல் களைக் கொண்டு இயங்கிவருகிறது.

காங்கேசன்துறை வீதியில் முன்னர் இயங்கி வந்த நகரசபைக்கட்டடம் புதிய கட்டடம் அமைக்கும் நோக்குடன் இடிக்கப் பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உரிய நிதி வசதிகள் கிடைக்கப்பெறாமை யால் கட்டடப் பணிகள் இடைநடுவில் நிறுத் தப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை நகரசபைப் பிரி வினுள் மூன்று பொதுச்சந்தைகளும், ஒரு பொதுநூலகமும், பன்னிரண்டு சனசமூக நிலையங்களும், ஐந்து பாலர் பாடசாலை களும், நான்கு சுடுகாடு, இடுகாடுகளும் அமைந்துள்ளன. 5.65 கி.மீற்றர் தார் போட்ட வீதிகளையும், 5.5 கி.மீற்றர் கிரவல் கல் போட்ட வீதிகளையும் பராமரிக்கும் பொறுப்பு இந்த நகரசபையின் பொறுப்பிலேயே உள்ளன.

**கடலையும், கடற்கரையையும் கட்டி ஆண்டவர்கள் எவரை யும் அடிமைப்படுத்தாமல், யாருக்கும் அடிமைப்படாமல் தன்மானத்தோடு வாழ்ந்தவர்கள் வல்வெட்டித்துறை மக்கள்.**

**ஈ.கே.ராஜகோபால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வைமண் பெற்றெடுத்து மறைந்து விட்ட ஒரு சில அறிஞர்கள், சாதனையாளர்கள், கல்விமான்கள், பிரமுகர்கள்

**1) ஐயம் பெருமாள் வேலாயுதர் :-**

யாழ்ப்பாணப்பகுதியில் வசித்த பிரமுகர்களில் ஒருவரென யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்னும் நூலில் அதன் ஆசிரியரான வசாவிளான் க. வேலுப்பிள்ளை அவர்களினால் குறிப் பிடப்பட்டவர். இவரது சந்ததியினரில் பெரும்பாலானோர் பிற்காலத்தில் பிரபல பிரமுகர்களாக விளங்கியவர்களாகும். இவர்களுள் எமது தமிழீழ தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும் ஒருவராவர். வேலாயுதர் அவர்களின் மகன் திருமேனியார் இவரது மகன் வெங்கடாசலம் இவரது பூட்டன் வேலுப்பிள்ளை. இவரது மகனே தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் ஆவார்.

திரு.ஐ.வேலாயுதர் அவர்கள் இலங்கை அரசாட்சியினரால் 'அடப்பன்' என்னும் பதவிக்கு நியமிக்கப்பட்டவர். 1891ம் வருடம் யாழ்ப்பாணப்பகுதியில் 11 மணியகாரரும், 109 உடையார்களும், 8 அடப்பன்களும், 168 விதானைமார்களும் இருந்ததாக யாழ்ப்பாணச் சரித்திரம் (ஆங்கிலேயர் காலம்) என்னும் நூல் தெரிவிக்கின்றது. பேரூர்களின் தலைவனாக மணியகாரன் என்பவரும் பட்டங்கட்டி, அடப்பன், என்போர் நெய்தற்பகுதி தலைவனாக இருந்ததாகவும் அறியமுடிகிறது. பட்டங்கட்டி, அடப்பன் என்போர் கடற்றொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு தோணிக்கும் அதன் அளவிற்கேற்ப ஒரு பணத்தை அல்லது இரண்டு பணத்தை பெறுவதற்கு உரிமை பெற்றிருந்ததோடு இவர்களின் வாயிலாகவே அரச அதிகாரிகளும் பிற சேவகர்களும் மக்களுடன் தொடர்பு கொண்டார்கள். திரு.ஐ.வேலாயுதர் அவர்கள் 1891ம் வருடத்துக்குப் பல வருடங்கள் முன்னதாகவே அடப்பனாக இருந்துள்ளார். இவரது புத்திரர் களில் ஒருவர் பிரபல வர்த்தகராக இருந்த ஞானமூர்த்தியார். இன்னொருவர் பகுதிப் பராபத்திய மணியமாயிருந்த புண்ணியமூர்த்தியாவார். ஏனையவர்கள் ஆறுமுகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமேனியார் என்போர். திரு.வேலாயுதர் அவர்கள் 1807ம் வருடம் 26 1/4 பரப்புக் கொண்ட வேவிற்புலம் என்னும் காணியை வாங்கி வேவிற்பிள்ளையார் கோவிலைக் கட்ட வழங்கியதோடு கோயிலுக்கருகாமையில் ஒரு மடத்தையும் தாபித்தார்.

**2) வே. புண்ணியமூர்த்தி :-**

அரசாட்சியினரால் வடமராட்சிப் பகுதிக்கு மணியகாரனாக நியமிக்கப்பட்ட வர். பல பாய்க்கப்பல்கள் மூலமாக பிறநாட்டு வாணிபம் செய்தவர். வல்வை அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயிலை ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய 1795ம் வருடம் கட்டியவர்.

**3) வே.ஆறுமுகம் :-**

இவ்வூர் ஊறணியில் சுவாமிகள் தீர்த் தமாடும் இடத்தில் அமைந்துள்ள மடாலயம், கேணி, கூபம் ஆகியவற்றை நிர்மாணித்தவர்.

**4) வே.திருமேனியார் :-**

வல்வை நெடியகாட்டுத் திருச் சிற்றம்பலப்பிள்ளையார் கோயிலுக்குத் தருமகர்த்தாவாக இருந்து அதனை வேறு சில பெரியார்களிடம் ஒப்படைத்து விட்டு வல்வை அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயிலுக்குத் தருமகர்த்தாவாக இருந்த வே.புண்ணியமூர்த்தி அவர்களுக்கு அடுத்து அக்கோயில் தருமகர்த்தாவாகினார். கமத் தொழில், வர்த்தகம் ஆகியவற்றிற் சிறந்து விளங்கியவர் 19ம் நூற்றாண்டின் முற்பகுதி யில் கடல் வணிகம் செய்து பெரும் செல்வம் தேடிக் குவித்தவர்.

**5) திருமேனியார் வெங்கடாசலம்பிள்ளை :-**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள திருமேனி யார் என்பவரின் புதல்வன். நல்லை ஆறுமுக நாவலர் பிறந்த மறுநாள் 19.12.1822ல் பிறந்த இவர் பெரியவர், பெரிய தம்பியார், என்னும் நாமங்களால் அழைக்கப்பட்டவர். பிரித்தானி யருக்குச் சொந்தமான 'அத்திலாந்திக் கிங்' (Atlantic king) என்னும் 'ஸ்கெச் ரக பாரிய கப்பல் திருகோணமலைக்குச் சமீபமாக கடலில் மூழ்கியது. இக்கப்பலை அதன் உரிமையாளர்களால் மீட்க முடியாது போகவே கப்பலை மூழ்கிய நிலையிலேயே விலை கொடுத்து வாங்கி அதனை மீட்டெடுத்து வேண்டிய திருத்தங்கள் செய்து அதன் மூலம் வியாபாரம் செய்து பொருளீட்டி வல்வை வாலாம்பிகாசமேத வைத்தீஸ்வர சுவாமி கோயிலைக் கட்டியவர். இவ்வூரில் சேத மடைந்திருந்த வைகுந்தப்பிள்ளையார், புட்டணிப்பிள்ளையார் என்னும் இரு ஆலயங் களின் திருப்பணிகளை நிறைவேற்றியவர். முல்லைத்தீவில் கடற்கரையோரத்தில் விளங் கும் பெரிய மடாலயமும், வீடுகள். கூபங்கள் என்பனவும் இவர் பொறுப்பிலேயே ஆக்கப் பட்டனவையாகும். வல்வை முத்துமாரி அம்மன் கோயிலுக்குத் தென்புறத்தில் ஒரு மடத்தையும் அருகே ஒரு திருக்குளத்தையும் உண்டு பண்ணியவர். அம்மன் கோயில் தருமகர்த்தாவாக இருந்து சிவன் கோயில் ஸ்தாபிப்பதில் உள்ள வேலையின் காரண மாக அப்பொறுப்பில் இருந்து விலகினார். அம்மன் கோயில் தருமகர்த்தாவாக இருந்த காலங்களில் அக்கோயிலின் சுற்று மதிலை அமைத்தவர். வல்வைச் சிவன் கோயிலில் பத்து வருடங்களாக எஜமானாக இருந்தவர். நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயிலைத் திருத்திக் கட்டுவதற்கும் இவ்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாயத்தின் மகமைகளை வசூலிப்பதற்கும் செலவு செய்வதற்கும் பொறுப்பாயிருந்தவர். கடலோடிகள் எல்லோரையும் விட வல்வை யில் செல்வம் மிகுந்தவராயிருந்தார். ஸ்கெச் என்ற கப்பல் உட்பட 12 கப்பல்களுக்கு அதிபதியாக இருந்தவர். இவர் அக்காலப் பகுதியில் தென் பகுதியில் வாழ்ந்த 'வருச ஹன்னடிகே ஹரமானிஸ் சொய்சா' என்ப வரைப் போல் அவரது செல்வத்துக்கு ஈடானவர் என்றும் சொல்லப்படுகிறது. இவர் சிவபதமடைந்தது 24.10.1892ல் ஆகும். இவரைப்பற்றி உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் அவர்களால் பாடப்பட்ட 'வல்வைக் கலித் துறை' யில் இரண்டு பாடல்கள் வருமாறு.

'நீதி மரபிற்றிருத் தொண்டரோடு நிகரும்
- பத்திச்
சோதிமலர் முகச் சீர்வேங்கடா சலத்துங்
- கவள்ளல்
பாதிமதிச் சடையான் றேவியோடு பயிலத்தந்த
சேதிம மொன்றமையும் வல்வைச் சீரைத்
- தெரிந்திடவே'

'விண்ணியல் செல்வத்தின் மண்ணியல்
- செல்வமிதக்கத் துய்த்த
புண்ணிய சீலத்திருவேங்கடா சலப் பூபன்
- வந்து
நண்ணியவான் குலத்தார் வாழும் வல்வை
- நகரினூங்
கெண்ணியல் போகநகர் வேறிங்கியவாதி
- சைத்திடவே'

**6) திருமேனியார் குழந்தைவேற்பிள்ளை :-**

வல்வை சிவன் கோயில் ஸ்தாபகர் வெங்கடாசலம்பிள்ளையவர்களின் சகோதரர். சிவன்கோயில் ஸ்தாபிப்பதற்குத் தமது பொருளெல்லாவற்றையும் கொடுத்து உதவி யவர். தமையனார் வெங்கடாசலம் பிள்ளைய வர்கள் 1892ல் சிவபதமடைய அவருக்குப்பின் 1905 வரை சிவன்கோயில் எஜமானரானார். இவர் அக்காலத்து இந்துஸ்தான் வங்கியில் சிறாப்பராகவும் பிரபல வியாபாரியாகவும் இருந்து கொழும்பிலுள்ள தமிழ் மக்களுக்கு உறுதுணையாக இருந்தவர். 1859ம் வருடம் கொழும்பிலுள்ள யாழ்ப்பாணத்தார் கதிர் வேலாயுதசுவாமி கோயிலையும் பர்மாவி லுள்ள ரங்கூனில் ஒரு முருகன் கோயிலையும் ஸ்தாபித்தவர். சிவபதமடைந்தது 1905ம் வருடம்.

**7) ஞா. சங்கரப்பிள்ளை :-**

மேலே குறிப்பிட்ட ஐயம்பெருமாள் வேலாயுதரின் மகன் ஞானமூர்த்தியின் மகனாவார். முத்துமாரி அம்மன் கோயில் தருமகர்த்தாவாக இருந்த திருமேனியார் சிவபதமடைய 'சங்கரியார்' எனவும் அழைக் கப்படும் இவர் அதன் தருமகர்த்தாவாகி னார். இச்சங்கரியாரே தற்போதும் பாவனை யிலுள்ள சப்பரத்தைச் செய்வித்தவர். ஏழு கப்பல்களுக்கு அதிபதியாக இருந்ததோடு சங்கு வியாபாரம், கடல் வணிகம் போன்ற வற்றில் ஈடுபட்டுப் பெரும் செல்வம் தேடிக்கு வித்தவர். அந்நாளைய காலனித்துவ அரசுக்கு ஒப்பந்தகாரராகவும் இருந்தவர். இவரின் பூட்டனாகிய ச. ஞானமூர்த்தி அவர்களே தமிழ் அரசியல் தலைவர்களை ஒன்றாக்கு வதற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவராவர்.

**8) க. ஏகாம்பரப்புலவர் :-**

மேலே குறிப்பிட்ட புண்ணியமூர்த்தி மணியகாரன் என்பவரவது மகளை மணந் தவர். அக்காலத்தில் தமிழ்ப்புலமையிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்து விளங்கிய இருபாலைச் சேனாதிராய முதலியாரிடத்தும், திருத்தணிகைச் சரவணப் பெருமாளையரிடத்தும் இலக்கண இலக்கியம் பாடங்கேட்டவர் என்பர். இவர் கந்தரந்தாதிக்கு ஒரு உரை எழுதியதுடன் பற்பல தனிக்கவி களும் பாடினவர் என இந்தியாவின் பாண்டிச் சேரி மாநிலத்தில் 4.10.1934ல் வெளியிடப் பட்ட 'வித்தகம்' என்னும் சஞ்சிகை தெரிவிக் கின்றது. மிஷனரிமாருக்கும் ஆங்கிலேய துரைமாருக்கும் தமிழ் கற்பித்தவர். இரு பாலைச் சேனாதிராய முதலியாருடைய காலம் 1750 - 1840 ஆகையால் இன்றைக்கு 200 வருடங்களுக்கு முற்பட்ட வராதல் கூடும்.

**9) நா. ஏகாம்பரம் :-**

இவர் 1844ம் வருடம் பிறந்தவர். மேலே குறிப்பிட்ட ஏகாம்பரப்புலவர் சகோதரி யின் மகன். தமிழ் பயின்றபின் வட்டுக் கோட்டையில் ஆங்கிலம் கற்றார். சென்னை சென்று பல்கலைக்கழக பிரவேச பரீட்சை யிற் சித்தியெய்திய பின்பு இந்தியாவில் வித்து வான்களாக இருந்த திருவாளர்கள் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, இராஜகோபாலபிள்ளை, இராமலிங்கபிள்ளை என்போரிடம் சில காலம் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். இக் காலத்தில் இவர் அட்டாவதானம் செய்யவும் பழகிக்கொண்டார். யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, ஆகிய இடங்களுக்குச் சென்று அட்டாவதானம் செய்து காண்பித்துப் பல பரிசில்களையும் பெற்றுக் கொண்டார். இவரே இலங்கையில் முதன் முதல் அட்டாவ தானம் செய்தவராவர். இவர் அட்டாவதானி யர் என்றே அழைக்கப்பட்டார். அட்டாவதானத் திலன்றிப்பாடுவதிலும் வல்வரான இவர் தமது 33வது வயதில் 1877ல் சிவபதமெய்தி னார்.

**10) பொன்னம்பலம் :-**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள திரு மேனியார் புண்ணியமூர்த்தி ஆகியோரு டைய தாயாருடைய சகோதரன். இலங்கை யிலும் இந்தியாவிலும் பிரபல வியாபாரியாக விளங்கியவர். ஒல்லாந்தர் இந்த நாட்டை ஆட்சி செய்த சமயம் யாழ்ப்பாணத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்ட போது தமது கப்பல்கள் மூலம் உணவுப்பொருட்களை வரவழைத்துக் கொடுத்தமைக்காக ஒல்லாந்த அரசினால் 'முதலியார்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

**11) ஆ. விஸ்வநாதபிள்ளை :-**

அக்காலத்தில் பிரவுவாக விளங்கி யவர். வல்வை சிவன் கோயில் இயற்றுவிக் கத் தொடங்கிய நாள் முதலாக திரு. வேங் கடாசலம்பிள்ளை அவர்களுக்குத் துணை யாக நின்றதோடு இக்கோயிலின் இலிங்கத் துக்காக காசிவரை சென்று மிகுந்த பொருட் செலவு செய்து இலிங்கத்தையும் ஆவிடை யாரையும் இன்னமும் நடேசர் சந்திரசேகரர் ஆகிய உற்சவமூர்த்திகளையும் கொண்டு வந்தவர். இது பற்றிய குறிப்பு ஒன்று 1884 செப்டம்பர் 'சைவாபிமானி' என்ற பத்திரிகை யில் உள்ளது.

**12)குமாரசாமி முதலியார் கதிரவேற்பிள்ளை**

இவரது தந்தையாரான குமாரசாமி முதலியார் வல்லிபட்டியிலே பிறந்து 1791 - 1874 காலப்பகுதியில் வாழ்ந்தவரெனவும் தீருவிற் சுப்பிரமணியர்பதிகம், கந்தவனநாதர் ஊஞ்சல் போன்றவற்றைப் பாடியுள்ளார் எனவும் ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சி யம் என்னும் நூல் குறிப்பிட்டுள்ளது. இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசாமி முதலியார் தமது வீட்டில் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தை நடத்தியவர். அமெரிக்க மிஷனைச் சேர்ந்த உவைமன் ஐயர் என்பவர் சுகவீனமுற்ற சமயம் 1844ம் வருடமளவில் ஊரிக்காடு பாதிரி பங்களாவில் தங்கியிருந்து இளைப்பாறினார். இந்த உவைமன் என்பவருடைய பெயரை யாழ்ப் பாணத்தில் விளக்குவதற்கே கதிரவேற் பிள்ளையவர்கள் செமினரியில் கற்கும் போது அதை தமக்கிட்டுக் கொண்டார். ஆனால் இவர் வல்வையம்பதியைச் சேர்ந்த வரெனவும் அதேபோல் இவரது புதல்வன் கதிரவேற்பிள்ளை அவர்களும் வல்வையைச் சேர்ந்தவரெனவும் சில நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளன. திரு.கதிரவேற்பிள்ளை அவர் கள் 1904ம் வருடம் தமிழ்ச் சொல்லகராதி 1ம்


C. W. KATIRAVELPILLAI'S
TAMIL DICTIONARY
தமிழ்ச் சொல்லகராதி
முதலாம்பாகம்.
இஃது
யாழ்ப்பாணத்து வல்வையம்பதி
க. குமாரசாமிமுதலியார் குமாரரும்
[illegible]
கதிரைவேற்பிள்ளையால்
இயற்றப்பட்டு,
[illegible]
1904.
[illegible]
Copyright Reserved

பாகம் என்னும் நூலை வெளியிட்டு வைத் தார். இந்த அகராதியில் முன்பக்கத்தில் யாழ்ப்பாணத்து வல்வையம்பதி க. குமாரசாமி முதலியார் குமாரர் கதிரவேற்பிள்ளை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அகராதி 325 பக்கங்களைக் கொண்டதாயும் உயிர் எழுத் தில் 'அ' என்ற எழுத்தில் வரும் சொற்களை மட்டும் உடையதாக அமைந்துள்ளது. இவர் தாம் எழுதத் தொடங்கிய அகராதியை பூரண மாய் முடிக்கு முன்னர் 1904ல் சிவபதமெய்தி னார். திரு.கதிரவேற்பிள்ளையவர்கள் இலங்கை அரச சிவில் சேவை நிரையில் நீதிபதியாக இருந்தவர். இவரது தாயார் சிவகாமி என்பவர் புண்ணியமூர்த்தி (மணிய காரன்) என்பவரது மகளாகும்.

**13) வடிவேலு மேத்திரியார் :-**

நாவாய் சாத்திரம் பயின்று கப்பல் கள் கட்டியவர். இந்திய வர்த்தகர்களும் இவரை இந்தியாவுக்கு அழைப்பித்து கப்பல் கள் கட்டுவித்தனர். 1916ம் வருடம் காங்கேசன் துறைக்கு அருகாமையில் கடலில் மூழ்கிப் போன S.S.St. John என்ற நீராவிக் கப்பலை மீட்டெடுத்து வேண்டிய திருத்தங்கள் செய்து அதன் மூலம் வியாபாரஞ் செய்து பொருளீட்டி அந்தப் பணத்தைக் கொண்டு கீரிமலையில் ஸ்ரீகிருஷ்ணன் கோவிலையும் தெருவோரம் மடாலயம் ஒன்றையும் அமைத்தவர்.

**14) வா. ஆறுமுகம் :-**

இவர் பொன்னுச்சாமி மேத்திரியார் எனவும் அழைக்கப்பட்டவர். ஆங்கிலத்தில் அட்சரம் கூடத் தெரியாதிருந்தும் எல்லாக் கிரகங்களினதும் கதி, வக்கிரம் முதலிய வற்றைக் காட்டவல்ல அதிநூதன கடிகாரத் தைச் செய்து காட்டியதோடு தோட்டங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யந்திரம் மூலம் நீர் பாய்ச்சுவதற்குரிய சூத்திரத்தை முதன் முதலில் செய்தும் காட்டியவர். இதன் மூலம் இவரைச் சூத்திரப் பொன்னுச்சாமி என்றும் அழைத்தனர். மேற்படி நீர் பாய்ச்சும் யந்திரத்தை இவரே யாழ் குடாநாட்டுக்கும் தென் இந்தியாவிற்கும் அறிமுகப்படுத்தியவர். ஆனி உத்தர நாளன்றும் திருவாதிரை நாளன்றும் இவ்வூரின் சிவன் கோயில் நடராஜப்பெருமான் வீதி வலம் வரும்போது நடனமாடி வருவதற்கான கருவியினை உருவாக்கிக் கொடுத்தவர்கள் இவரின் புதல்வர்களாகும். இப்படி நடராஜர் ஆடிவரும் காட்சியை இலங்கையில் வேறு எங்கும் காண்பது அரிது என்று சொல்லப்படுகிறது. இவர் சிவபதமடைந்தது 1930ம் வருடமாகும்.

**15) நா. பொன்னம்பல உபாத்தியாயர் :-**

இவரைப் பொன்னையா உபாத்தியாயர் என்றும் அழைப்பர். இயற் றமிழ்ப் போதகாசிரியர் வைத்தியலிங்கம் பிள்ளையுடன் சேர்ந்து உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் கற்றுப்பண்டிதரானவர். நயங்கள் அமையப்பாடுவதில் வல்லவர். செல்வச் சந்நிதி முருகன் பதிகம், கந்தவனநாதர் பதிகம், குளத்தடி வைரவசுவாமி பதிகம் போன்றவற்றைப் பாடியவர். இவர் சமூக சேவையினை மிகப் போற்றிச் செய்தவர். இவர் மகன் மயிலேறும் பெருமாள் கட்டடக் கலைஞராய் விளங்கியவர்.

**16) சி.வி. அருணாசல உபாத்தியாயர் :-**

இவரும் வயித்தியலிங்கம் பிள்ளையுடன் சேர்ந்து சிவசம்புப்புலவரிடம் கற்றுப் பண்டிதரானவர். வல்வை சிதம்பரக் கல்லூரியின் ஸ்தாபகர் கு.சிதம்பரப்பிள்ளை அவர்களுக்கு மாமன் ஆவார். மு. கந்தசாமி உபாத்தியாயர் முதலியோருக்கு ஆசிரியர். நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் மீது ஊஞ்சல், மங்களம் இயற்றியவர். சிறந்த புராண பிரசங்கியாராகவும் இருந்தவர். மேலே கூறப்பட்ட ஊஞ்சல் தவிர வேறு தனிப்பாக்களும் இயற்றியவர்.

**17) வை. கதிரவேற்பிள்ளை உபாத்தியாயர்:-**

மேலே குறிப்பிடப்பட்ட அருணாசல உபாத்தியாரிடம் கற்றுப்பண்டி தரானவர். கவிபாடுவதிலும் கவி இயற்றுவதிலும் வல்லவர். செல்வச்சந்நிதிப் பதிகம் இயற்றியவர். விரிவுரைகள் செய்தவர்.

**18) நா. சுப்பிரமணியர் :-**

இவர் (சிவலை) நாகமுத்துவுக்கு மகனாவர். இலக்கிய இலக்கண சித்தாந்தம் கற்றவர். கவிபாடும் திறமையுடையவர். இவர் துறவறத்தை மேற்கொண்டவரென்றும் அறியப்படுகிறது. இவராற் பாடப்பட்ட நூல் நெடிய காட்டுப் பிள்ளையார் பஞ்சரத்தினம்.

**19) ஞா. கணேச பண்டிதர் :-**

இவர் எழுதுவினைஞராக இருந்த ஆறுமுகம் என்பவருக்கு சகோதரராவர். இலக்கணம், இலக்கியம், சோதிடம், வைத்தியம் என்பவற்றைக் கற்றவர். திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு என்னும் நூலை எழுதியவர் இந்த நூல் 1921ம் வருடம் சென்னையில் வெளியாகியது என்பது தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20) மு. கந்தசாமி உபாத்தியார் :-**

இவர் மேலே குறிப்பிட்ட சி.வி. அருணாசலம் உபாத்தியாயருக்கு மாணவர். இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம் கற்ற வர். பிற்காலத்தில் வைத்தியலிங்கபிள்ளை முதலிய வேறு புலவர்களிடத்தில் தருக்கம், சமயம் முதலியன கற்றுப் பண்டிதராகத் திகழ்ந்தவர். தனிப்பாடல்கள் சிலவற்றை இயற்றியவர். இவரிடத்தில் கற்ற மாணவர்கள் பலர். இவரிடம் கற்றுப் பண்டிதரானவர் களுள் வல்வை வைத்தியேசர் பதிகமும் நெடியகாட்டு நான்மணி மாலையும் பாடிய இவரது மூத்தமகன் மீனாட்சி சுந்தரமும் ஒருவர். இவரது இன்னொரு மாணவர் சிவன் கோயில் ஓதுவார் க. ஆறுமுகஜயர் என்ப வராகும்.

**21) சாமினாத யோகியார் :-**

மேற்கூறிய வா.ஆறுமுகம் (சூத்திரப் பொன்னுச்சாமி) என்பவரின் இனத்தவரான பொன்னம்மான் என்பவரது மகன் ஆவார். வ. இராமசாமிப்பிள்ளை அவர்களின் மாமி யாரின் தம்பியாவர். இவர் சிறுவயதில் திருவா வடுதுறையாதீனத்துக்குச் சென்று இலக்கண இலக்கியம் சித்தாந்தம் என்பன கற்று திருக் கானப்போரூர், நடராசபுரம் முதலிய தலங் களிலிருந்து பலர்க்கும் சித்தாந்தம் போதித் தவர். இவர் இயற்றிய தனிப்பாடல்கள் சில உள்ளன. இந்தியாவிலேயே சிவபதமெய் தினார்.

**22) கோ. கந்தசாமி :-**

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இவர் மட்டக்களப்பில் உள்ள தெய்வ நாயகி என்பவரை மணந்தார். பல தான தருமஞ் செய்தவர். வல்வெட்டித் துறைக்கு ஒரு சமயம் வந்திருந்தபோது உடுப்பிட்டி சிவ சம்புப்புலவர் இவர் மீது பிரபாவப் பாமாலை ஒன்றைப் பாடிச் சென்று கண்டனர். கந்தசாமி அவர்கள் மட்டக்களப்புக்கு வந்தால் ஆயிரம் ரூபாய் தருவதாக வாக்களித்துவிட்டுச் சிறு பொருளுதவி மட்டும் செய்து அனுப்பி வைத் தார். சில மாதங்கள் சென்றதன் பின்னர் புலவரவர்கள் மட்டக்களப்பு சென்று அவர் வீடு சென்ற சமயம் கந்தசாமி அவர்கள் வெளியில் சென்றிருந்தார். அந்த விபரங் களை மனைவி புலவரவர்களிடம் கூறி கணவர் வருமுன்னரே யாழ்ப்பாணம் திரும்பிச் செல் வதாக இருந்தால் அவரது கணவர் வாக்களித் தபடி ஆயிரம் ரூபாய் தருகிறேனென்று சொல்லிப் பணத்தை வழங்கினார். புலவர வர்கள் கந்தசாமிப்பிள்ளையைப் பற்றிப் பாடிய சில பகுதிகள் வருமாறு.

கந்தசாமிப்பிள்ளையே வல்வை நகராச
கவிஞர்கண் மதித்த தருவே
மந்தகாசத்தினிய தேமொழியி னெவ்வெவர்
மனத்தையு முருக்கு மன்ப!
வடிதமிழ்க் காவிய புராண சோதிடநூல்
வழாத வகை தேர்ந்த நிபுண!
வரமுறுங் கீரிமலை யறுமுகன் கோவிறனை
மாண்புடனமைத்த துங்க!
கோள்திரிந்து மாரிபொய்த்துக் கோரக் கருப்புமந்
நாள்தனினு மீகைவிடா நல்லவனே.

இப்பாடலிலிருந்து கீரிமலை ஆறுமுகன் கோவிலை இவர் தான் அமைந்தாரென்பது தெரியவருகிறது.

ii)
ஐயா வனத்துக்கு வணிகத் துற்றன ரன்பரிங்க
னெய்யாதவர் வரமுன்னர்ப் பயணமிசை
- வுளதேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாதவர் சொன்ன பொன்னீவன்
- யானென்ற பூவைக
மெய்யார் புகழ் கந்தசாமிக்கு வான் செல்வம்
- வேறென்னையே.

இது கணவன் சொன்ன சொல்லைக் காப் பாற்றி ஆயிரம் ரூபாவை அள்ளித்தந்த பெண்ணை என்னென்று அழைப்பது. அச் செல்வி இருக்கும் பொழுது வேறு செல்வமும் வேண்டுமோ. இன்றைக்கு நூறு வருடங் களுக்கு முன்னர் ஆயிரம் ரூபாவை ஒருவர் அள்ளிக் கொடுத்திருப்பின் அதனைக் கொடுத்த கந்தசாமி வள்ளல் எப்படிப்பட்ட வள்ளல் என்பது தெளிவாகும்.

**23) கு. சிதம்பரப்பிள்ளை :-**

இவர் 1861ல் பிறந்தவர். வைத்திய லிங்கம்பிள்ளை முதலியோரிடத்தில் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத்தேறியவர். வல்வையில் ஆங்கிலக் கல்லூரி இல்லாத காரணத்தால் அக்காலத்தில் 'வெஸ்லியன் மிஷன்' எனப்படும் ஹாட்லிக் கல்லூரிக்கு நடந்து சென்று கல்வி கற்று அரசாங்க சேவை யில் சேர்ந்து பணியாற்றினார். தான் ஆங்கிலம் பயில்வதில் ஏற்பட்ட சிரமங்களை இதர மாணவர் முகம் கொடுக்கக் கூடாது என்ற நோக்கோடு 1896ம் வருடம் வல்வையில் ஆங்கிலப்பாடசாலையை (சிதம்பர கல்லூரி) நிறுவியவர். இதன் காரணமாக வல்வை மக்கள் சிறப்புற்றனர். பெருஞ்சாதனைகளை நிலை நாட்டினார். இவர். சி.வி. அருணாசல உபாத்தியாரின் மருமகனும் சிதம்பரக்கல் லூரியினை அறுபது ஆண்டுகள் பாதுகாத்து வளர வைத்த ஞா. தையல்பாகர் அவர் களுக்கு மைத்துனருமாவார். சந்நிதிமுருகன் மீது பதிகம் பாடினவர். 1903ம் வருடம் சிவபத மெய்தினார்.

**24) கந்தசாமி யோகியார் :-**


இவர் மாப்பாணர் பரம்பரையில் வந்த மறைக்காடர் என்பவரின் பூட்டனாவார். இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம் கற்ற வர். கதிர்காமம் முதல் இமயம் வரையுள்ள தலங்களைத் தரிசித்தவர். யோகம் பயின்று பலர்க்கும் யோகாசனங்களைக் கற்பித்தவர். சிறந்த நடிகர். தமிழகத்திலிருந்த எம். ஆர். கோவிந்தசாமியுடன் நாடகங்களில் நடித்து அவரின் பாராட்டைப் பெற்றவர். சிவன் கோயில் வீதியில் வாழ்ந்து 1965ம் வருடம் சிவ பதமெய்தினார். தமிழும் ஆங்கிலமும் கற்று அரச சேவையில் பணிபுரிந்ததுடன் விவே கானந்தா சபையிலும் பணிபுரிந்து 'வைத்தி லிங்கம் நூலகம்' எனப்படும் நூலகத்தை ஆரம்பித்து அரியபல சமயம், தமிழ், இலக் கணம், இலக்கியம், சரித்திரம், ஆங்கிலம் போன்ற நூல்களை யாவருக்கும் பயன் பெறும் வண்ணம் நடைமுறைப்படுத்திய வைத்திலிங்கம் இவரது தம்பியாராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




POST CARD

Thirumakal
R. Vaithialingam
Sivankoilady
Valvettiturai



Kankesanturai
3.4.55



Pandi C. J. BENEDICT
HEAD MASTER.
R. C. Boys School,
POINT PEDRO.
13. 10. 1953

## 25) ஞா. தையல்பாகர் :-

இவர் சிதம்பரக்கல்லூரி நிறுவனர் கு. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் மைத்துனராவார். சிதம்பரக்கல்லூரியின் முகாமையாளராக 1901ம் ஆண்டு பொறுப்பேற்று அரசாங்கத்தினால் 1960ம் வருடம் கல்லூரி சுவீகரிக்கப்படும் வரை தொடர்ச்சியாக அறுபது வருடங்கள் பணியாற்றினார். வல்வை சிவ குரு வித்தியாசாலையினைத் தாபித்ததோடு அதன் முகாமையாளராகவும் பணியாற்றினார். சிதம்பரக்கல்லூரியின் வளவில் ஈசான மூலையில் சிறுகூடமொன்றை அமைத்து காசியிலிருந்து ஒரு ஸ்படிக லிங்கத்தை வரவழைத்து சிவலிங்க பூசை நடாத்தி வந்ததோடு 1950 அளவில் அந்தக் கூடத்தை சிவாலயமாக அமைத்து சுந்தரப்பெருமான் ஆலயம் எனப் பெயரிட்டு நடாத்தி வந்தார்.

## 26) க. தம்பிப்பிள்ளைத் தண்டயல் :-

வல்வெட்டித்துறையில் சுந்தர மேத்திரியார் என்பவரால் 1930ல் கட்டப்பட்ட 89 அடி நீளமான 'அன்னபூரணி' என்னும் பாய்க் கப்பலை இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தும் கூட அதனைப் பாவிப்பதனைத் தவிர்த்து பாய்களின் உதவியுடன் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு 1938ம் வருடம் ஆடி மாதம் கொண்டு சென்று ஒப்படைத்தவர்.

## 27) வித்துவான் மு. கனகசுந்தரம் :-

இலங்கை, இந்தியா, மலேஷியா போன்ற நாடுகளில் பணிபுரிந்து தமிழ்த் தொண்டன் எனப் புகழ் பெற்றவர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும் பணி புரிந்தவர். தள்ளா ஊக்கமும் தளரா ஆர்வமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றியவர் இவரென தமிழகத்திலிருந்து வெளியான 1953ம் வருட 'செந்தமிழ்' என்னும் சஞ்சிகை பாராட்டியுள்ளது. 'தமிழன் மாட்சி' என்னும் நூலை தமிழன்னையின் பாதக்கம லங்களுக்குச் சூட்டியதோடு தமிழகத்திலிருந்து குன்றக்குடி அடிகளார், கி.வா. ஜகன்னாதன், சுப்பிரமணியப்பிள்ளை, நாவலர் நெடுஞ் செழியன், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகியோரை வரவழைத்து தமிழ் விழாவும் கண்டவர். தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலரும் அரசாங்க எழுதுவினைஞர் சங் கத்தை ஆரம்பித்து அதன் தலைவராகவும் இருந்து பிரபல்யமான கோடீஸ்வரன் வழக் கில் முக்கிய பங்கினை ஆற்றியவரும், காவ லூர் வ. நவரெத்தினம் அவர்களினால் ஆரம் பிக்கப்பட்ட தமிழர் சுயாட்சிக் கழக ஸ்தாபகர் களில் ஒருவரும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகராக மேடைகளில் சொற்பொழி வாற்றியவரும் தமிழ் மக்கள் மன்றத் தலை வராக இருந்தவரும் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்தவேளை வல்லை வெளிச் சந்தியில் மாற்று இயக்கத்தினரால் படுகொலை செய்யப்பட்டவருமான க. சிவா னந்தசுந்தரம் அவர்கள் இவரது சிரேஷ்ட புதல்வராவர்.

**28) இ. அப்புக்குட்டியாபிள்ளை :-**

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தி யசாலை எனத் தற்காலம் அழைக்கப்படும் இந்திராணி வைத்தியசாலையை 1947ம் ஆண்டு தனது சொந்தச் செலவில் கட்டி அரசினரிடம் கையளித்தவர். இவரது சேவை யைப் பாராட்டி அரசாட்சியினரால் 'முகாந்திரம்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டவர்.

**29) எஸ். நமசிவாயம்பிள்ளை :-**

பிறப்பு 30.07. 1911 சைவ சித்தாந் தத்தை நன்கு கற்றுத்தேறியவர். கண்டி சைவ மகாசபை, கொழும்பு விவேகானந்தாசபை போன்றவற்றிலும் மற்றும் இலங்கையின் ஏனைய பல பாகங்களிலும் சமயச் சொற் பொழிவுகளை ஆற்றியவர். 1933ம் காலப் பகுதியில் கண்டித் தமிழர் கழகம் என்பதன் செயலாளராகவும் அதே காலப்பகுதியில் மத்திய மாகாண சைவ மகாசபைச் செயலா ளராகவும் 1941 காலப்பகுதியில் கல்கிசை இந்து இளைஞர் கழக அமைப்பாளராகவும் செயற்பட்டவர். மகாத்மா காந்தியின் போத னைகளை மேற்கொண்டதோடு வல்வெட்டித் துறைப் பகுதியிலிருந்து சாராயத் தவறணை யை அகற்றுவதற்கு தீவிர முயற்சிகள் செய் தவர். பகவான் ரமண மகரிஷியின் சீடராக இருந்ததுடன் அவரது ஆசிரமத்திலும் சில காலம் தங்கியிருந்தவர். மகாத்மா காந்தி 1927ல் வல்வைக்கு விஜயம் செய்த போது அவரைச் சந்திக்கும் வாய்ப்பினை பெற்றவர். இந்தச் சந்திப்பின் காரணமாகவும் அவரது போதனைகளை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது எனக் கூறலாம். இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்திலும் இவரது சொற் பொழிவுகளைக் கேட்டதாக 1970ம் வருட ஹாட்லிக் கல்லூரி சஞ்சிகையில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆசிரியராகக் கடமைபுரிந்து ஓய்வு பெற்ற இவர் சிவபதமடைந்தது 20.07.1978ல் ஆகும்.

**30) ச. ஞானமூர்த்தி :-**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஞான மூர்த்தி சங்கரப்பிள்ளை என்பவரின் வழி வந்தவர். இவரது தந்தையார் சண்முகம் பிள்ளையும் சகோதரர் பாலசுப்பிரமணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் நாவாய் சாஸ்திரம் பயின்று பிரபல கப்பல்கள் கட்டும் ஓடாவிமார்களாக இருந்த வர்கள். தபால் திணைக்களத்தில் உதவி அத்தியட்சகராக இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் வல்லை நூற்றல் நெய்தல் ஆலை யின் நிர்வாகச் செயலாளராக இருந்து ஆலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி னார். வல்வை சனசமூக நிலையத்தின் வெள்ளிவிழா ஆண்டுக்கு அதன் தலை வராக இருந்து செயற்பட்டவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கிய ஆதரவாளராக இருந்ததோடு எதிரும் புதிருமாக இருந்து ஏட்டிக்குப்போட்டியாக அரசியல் நடத்தி வந்த அரசியற் தலைவர்களை இந்த யுகத்திலே இணைய முடியாதவர்கள் எனக்கருதப்பட்ட அவர்களை ஒரு நுகத்திலே பிணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்க முன்னின்று உழைத்தவர்களில் முக்கிய மானவர். தமிழர் விடுதலைக்கூட்டணியின் இணைச் செயலாளர் பதவிகளை வகித்த தோடு யாழ் அரசினர் வைத்தியசாலையின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வைக்குழு அங்கத்தவராகவும் இருந்தவர். அரசினரால் சமாதான நீதவான் பதவி வழங்கிக் கௌர விக்கப்பட்டவர். வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவராகப் பதவி வகித்த காலத் தில் நவீன சந்தைக் கட்டடம், நன்னீர் விநி யோகத்திட்டம் என்பன இவரது முயற்சியால் உருவாக்கப்பட்டன. இறப்பு வைகாசி 11ம் நாள் 1994.

### 31) வ. இராமசாமிப்பிள்ளை :-

கப்பலில் ஏறி கடல் கடந்து தந்தை யின் வழி சென்று மாலுமியாகி மரக்கலம் ஓட்டத்தொடங்கியவர். சிலோன் மாஸ்டர் சான்றிதழும் மெற்றியாஸ் இரண்டாவது கப்டன் சான்றிதழும் பெற்றவர். பெரிய பாய்க்கப்பல்களான ஸ்ரீ நரசிம்மசாமி, ஸ்ரீமகா லட்சுமி, திருநிலைநாயகி போன்றவற்றையும் சிறிய கப்பல்களும் தோணிகளுமான ஸ்ரீ ராஜாம்மாள், ஸ்ரீருக்மணிதேவி, ஸ்ரீசத்திய பாமா, ஸ்ரீகலாதேவி, ஸ்ரீ பாக்கியதேவி என்பவற்றையும் வைத்து கடல் வணிகஞ் செய்தவர். ஆர்.வீ.ஜீ.பீடிகளை இந்தியாவி லிருந்து இறக்குமதி செய்ததோடு யாழ்ப் பாணத்திலும் ஆர்.வீ.ஜீ. பீடிக் கம்பனியை ஸ்தாபித்தவர். யாழ்ப்பாணம் திருகோண மலை ஆகிய இடங்களில் வணிக ஸ்தாபனங் களில் பங்குதாரராகவும் இயக்குனராகவும் இருந்துள்ளார். வல்வை முத்துமாரி அம்மன் கோயிலின் தர்மகர்த்தாசபைத் தலைவராகப் பலகாலம் தொடர்ந்திருந்தவர். நயினை நாக பூசணி அம்மன் ஆலயத்தேர் வீதியுலா வரும் சமயம் இவரது தலைமையில் செல்லும் குழுவினரே தேரோட்டியாக (கட்டை வைத்துத் தேரைத் திருப்புவது) பணிபுரிந்துள்ளார்கள். சிதம்பரக்கல்லூரியின் முகப்பு மண்டபத் தையும் சிவகுருவித்தியாசாலை பாலர் வகுப் புக் கட்டடத்தையும் அமைத்துக் கொடுத் தவர். தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஆதர வாளராக இருந்து பின்னர் தமிழரசுக் கட்சி யின் வல்வைக் கிளையின் தலைவராகவும் இருந்தவர். சிவபதமடைந் தது 26 புரட்டாதி 1986.

### 32) நீச்சல் வீரர் மு.நவரத்தினசாமி :-

சேய் நாட்டிலிருந்து தாய் நாட்டிற்கு அலைகடலிலே மிதந்து செல்லக் களம் அமைத்துக் கொடுத்து வழிகாட்டியவர். அது தான் 1954ம் ஆண்டு பங்குனி மாதம் 26 மணி 30 நிமிடத்தில் 32 மைல் அகலமான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து தென் இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் கோடிக்கரைக்கு முதன் முதலில் நீந்திச் சென்றவர் என்ற பெருமையைப் பெறுவதற்குக் காரணமாயிருந்தது. பிரிட்டிஷ் மகாராணியின் சிறப்புக்குரிய விருதை நேரில் பெற்றுக்கொண்ட பெருமையும் பெற்றவர்.

### 33)கப்டன் கா. மோகனதாஸ் :-

நுகேகொடையிலமைந்துள்ள மாலுமிகள் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சியை முடித்து 'கடேற்' ஆக வெளிநாட்டுக் கப்பல் கம்பனியில் பணிபுரிந்து கப்பல் கப்டன் ஆகவும் துறைமுகப் பைலற் ஆகவும் பணி புரிந்தவர். கப்பல் கம்பனியில் பங்குதாரராக இருந்ததுடன் வெலா-6 இஸபெல்லா என்னும் இரு நீராவிக் கப்பல்களுக்கு அதிபதியாக இருந்து வணிகஞ்செய்தவர். 1.9.1984ல் பருத்தித்துறையிலிருந்து சொந்த ஊரான வல்வெட்டித்துறைக்குக் காரில் வந்து கொண்டிருந்த சமயம் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

### 34) ஆழிக்குமரன் ஆனந்தன் :-

25.5.1943ல் பிறந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கல்வி பயின்று அத்துறையில் தொழில் தேடுவதை விடுத்து சாதனைகள் புரிந்து 'கின்னஸ்' புத்தகத்தில் தனது பெயர் இடம் பெறுவதையே குறிக்கோளாக கொண்டிருந்தார். இவர் ஈட்டிய உலக சாதனைகள்.

(அ) 20.3.1963 - 22.3.1963 வல்வெட்டித்துறையிலிருந்து கோடிக்கரைக்கு பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தது. கடந்த தூரம் 38 மைல். எடுத்த நேரம் 42 மணி.

(ஆ) 1975ல் ஏப்ரல் மாதம் 18 - 20 தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி நீந்திச் சென்று நீந்தியே திரும்பி வந்தது. கடந்த தூரம் 40 மைல்.

(இ) 1.1.1979ல் காலிமுகத்திடலில் தொடர்ச்சியாக டுவிடுஸ்ட் டான் (Twist Dance) 180 மணித்தியாலம் இச்சாதனை இடம்பெற்ற சமயம் இலங்கைக் குடியரசுத்தலைவர் கௌரவ ஜே.ஆர்.ஜயவர்தனா அவர்கள் நேரில் சமூகமளித்து பாராட்டினார்.

(ஈ) 1979 மே மாதம் 2 - 10:- 187 மணி 28 நிமிடம் இடைவிடாது 1487 மைல்கள் கொழும்பு விகாரமாதேவி பூங்காவைச் சுற்றி சைக்கிள் ஓடியது.

(உ) 26.12.1979 தொடக்கம் 1.1.1980 வரை தொடர்ச்சியாக 136 மணி நேரம் 'போல்பஞ்சிங்'

(ஊ) 15.5.1980ல் இரு நிமிட நேரத்தில் 165 தடவை இருந்து எழும்பியது. கொழும்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து உடனடியாக

(எ) 1980.5.15 தொடக்கம் 17 வரை ஒற்றைக்காலில் 33மணி நேரம் நின்று கொழும்பில் உலக சாதனை

(ஏ) 31.12.1980 - 1.1.1981ல் High Kicks என்ற உலக சாதனை. கொழும்பு காலி முகத்திடலில் 6மணி 51 நிமிடத்தில் 9100 தடவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐ) 30.6.1981ல் தொடர்ச்சியாக 80 மணி நேரம் சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில் தண்ணீரில் மிதந்து சாதனை.

(ஒ) ஆகஸ்ட் 1981ல் 296 மைல்களை 159 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நடந்து சாதனை.

(ஓ) 31.12.1982ல் 22 அவுன்ஸ் நிறையுள்ள பிலியட்ஸ் தடியை ஒற்றைக் கை யினால் 2520 தடவைகள் மேலும் கீழு மாக உயர்த்தி 2மணி 29 நிமிடங்கள் யாழ் மண்ணில் கடைசியாக நிகழ்த் திய சாதனை.

மேலே குறிப்பிட்டவற்றுள் (அ), (இ), (ஒ), (ஓ) தவிர்ந்த ஏனையவை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இவரால் மேற்கொள்ளப்பட்ட இதர சாதனைகள்.

(1) 1978ல் டுவிஸ்ட் நடனம் 128 மணி நேரம்.

(2) 1980ல் 70 இறாத்தல் எடையுள்ள இரும் பை 26 நிமிடம் 10 செக்கனில் 2000 தடவைகள் கீழிருந்து மேலே தூக்கியது.

இலங்கையில் முதன் முதலில் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற பெருமை யையும் பெற்றவர். ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் சாதனையை மேற்கொள் வதற்காக 1984ஆகஸ்டில் அதே கால்வாயில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் சமயம் எதிர் பாராத விதமாக மரணத்தைத் தழுவிக் கொண்டவர். உலகப் புகழ்பெற்ற நாட்டிய தாரகையும், ஜனாதிபதி விருதினையும் பொற்றுக்கொண்டவரான ரங்கா விவேகா னந்தன் இவரது சகோதரியாவார்.

**35) அரு. அம்பலவாணர் :-**

கப்பல் மாலுமியாகவும் ஆனந்த வல்லி என்ற கப்பலுக்கு அதிபதியாகவும் அதன் தண்டயலாகவும் இருந்தவர். வல்வை இளைஞர்கள் வெளிநாட்டுக் கப்பலில் மாலுமி களாகச் சேர்ந்து கொள்வதற்கு வேண்டிய வழிகளை அரச சேவையில் இருந்த காலத் தில் செய்து கொடுத்தார். அரச சேவையில் இழுவைக் கப்பல் (Tug Master) தளபதி யாக இருந்து ஓய்வு பெற்றபின் வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம் என்ற அமைப் பை உருவாக்கி கப்டன் மோகனதாஸ் அவர் கள் உதவியுடன் நாவாய் பயிற்சிக்கல்லூரி யை வல்வையில் ஆரம்பித்து ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு ஆரம்பப் பயிற்சி அளித்து வெளிநாட்டுக் கப்பலில் அவர்கள் செல்வ தற்கு வழி செய்தார். இவரின் தந்தையார் க.அருளம்பலம் அவர்கள் நெடியகாடு திருச் சிற்றம்பலப்பிள்ளையார் கோயில் மணிய மாகவும் ஜெயலட்சுமி, ஸ்ரீமகாலட்சுமி என்ற கப்பல்களுக்கு அதிபதியாகவும் இருந்தவர்.

**36) க. சோமசுந்தரம் :-**

கப்பலோட்டிய தமிழர் என்ற பெரு மையைப் பெற்ற வல்வெட்டித்துறையில் தேரோட்டிய பெருமையைப் பெற்ற இவர் பயில்வான் சோமு என்றும் அழைக்கப்படு வார். வல்வை ஆலயங்களில் மட்டுமன்றி நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், வல்லிபுர ஸ்ரீ ஆழ்வார் ஆலயம், யாழ்ப் பாணம் பெருமாள் கோயில் என்பவற்றிலும் தேரோடிய பெருமையைப் பெற்றவர். 1967ம் வருடம் வல்வை வைத்தீஸ்வரன் கோவில் புனராவத்தன மகா கும்பாபிஷேகம் நடை பெறுவதற்கு முன்னின்று செயற்பட்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இவரும் ஒருவர். வல்வை முத்துமாரி அம்மன் கோயில் கொடியேற்ற உற்சவம் இவரினால் நடாத்தப்பட்டு வருகின்றது. செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இவரது குடும்பத்தினர் காவடி எடுத்த சமயம் இந்திய நாதஸ்வர மேதைகளான திருவாவடுதுறை இராஜரட்னம்பிள்ளை குளிக்கரைப் பிச்சையப்பா, திருவெண்காடு சுப்பிரமணியம், திருமெருஞானம் நடராஜசுந்தரம் என்போரும் தவில் வித்துவான்களான ராகவன், முத்துவீர் பிள்ளை, சண்முகவடிவேல், கும்பகோணம் தங்கவேலு, ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இசைப் பேரரசு எம்.கே.தியாக ராஜபாகவதர், கே.பி. சுந்தராம்பாள் இலங்கை வந்திருந்த போது இவரிடம் வந்து போயினர். வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் கோயிலில் சரியைத் தொண்டு செய்யும் பெருமகனாகத் திகழ்ந்தவர். மல் யுத்தம், குத்துச்சண்டை, சிலம்பம் போன்ற விளையாட்டுக்களில் அக்காலத்தில் சிறந்து விளங்கியமையால் 'பயில்வான் சோமு' என்று அழைக்கப்பட்டார். மறைவு 27.5.1993.

**37) கு. கந்தசாமி :-**

கெச்சுத்தண்டயல் என்ற கப்பல் மாலுமி வம்சத்தவர். இந்தக் கெச்சுத் தண் டையல் வம்சத்தினரே சிவன் கோயிலின் ஆறாம் நாள் உற்சவத்தையும் முத்தூரி அம்மன் கோவில் ஆறாம் நாள் உற்சவத் தையும் நடாத்தி வருவதோடு சிவன் கோவி லின் மேற்கே அமைந்துள்ள மடத்தையும் கட்டியவர்கள். கந்தசாமி என்பவர் 1939ம் வருடம் நடைபெற்ற லண்டன் மற்றிக் குலேசன் பரீட்சைக்குத் தோற்றி இலங்கையிலேயே முதலாவது மாணவனாகச் சித்தி பெற்று சர்வ கலாசாலையில் இலவசக் கல்வியை பெறும் வாய்ப்பினை பெற்றவர். லண்டன், அமெரிக்கா, போன்ற நாடுகளில் உயர்கல்வியைப் பெற்ற இவர் கொழும்பு மாநகரசபையின் பிரதம பொறியியலாளராகக் கடைமையாற்றி ஓய்வு பெற்றவர். மறைவு 5.6.1996 ஆகும். இவரது முன்னோரான நா. வேலுப்பிள்ளை என்ப வரே உலகுடை பிள்ளயார் கோயிலைப் புதுப் பித்துக் கும்பாபிஷேகம் நடத்தியதோடு நித்திய பூசை நடப்பதற்காக நெற்கொழுவில் வயல் எழுதி விட்டவராவர். இவரது மறைவு 20.1.1904 ஆகும்.

**38) க. துரைரத்தினம் :-**

தொண்டைமானாற்றைப் பிறப்பிட மாக கொண்ட இவர் வல்வை வைத்திலிங்கம் என்பவரின் மகளை மணந்தவர். பொருளா தாரத் துறையில் பட்டம் பெற்று ஆசிரியராகப் பணியாற்றும் காலத்தில் அரசியலில் ஈடுபட்டு உடுப்பிட்டி கிராமசபை அங்கத்தவராகவும் அதன் உபதலைவராகவும் இருந்தவர். இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முக்கிய உறுப்பினராகத் திகழ்ந்த இவர் 1956ம் வருடம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தோல்வி யைத் தழுவினாலும் கூட தொடர்ந்து 1960 பங்குனி, 1960 ஆடி, 1965, 1970, 1977 ஆண்டு களில் நடைபெற்ற தேர்தல்களில் போட்டி யிட்டு 1983ல் பதவி துறக்கும் வரை பாராளு மன்ற உறுப்பினராக இருந்துள்ளார். 1963ம் வருடம் இஸ்ரேல் நாட்டுக்குச் சென்றிருந்த சமயம் அந்நாட்டில் செய்கை பண்ணப்பட்டு வந்த முந்திரிகைச் செடிகளைக் கொண்டு வந்து யாழ் விவசாயிகள் முந்திரிகைச் செய்கையில் ஈடுபட வழிவகுத்தவர். இது தவிர வெள்ளையினக் கோழி வளர்ப்பு மாடு வளர்ப்பு மற்றும் பயிர்ச்செய்கைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டதோடு ஏனைய விவசாயிகளுக்கும் ஆலோசனை வழங்கி ஊக்கமும் அளித்தவர்.

**39) ந.யோகசிகாமணி :-**

இவர் வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவராக 1953 - 1955 காலப் பகுதியில் பதவி வகித்த நடனசிகாமணி அவர்களின் புதல்வராவர். அரச சேவையில் வைத்திய ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளராகக் கடமையாற்றும் காலத்தில் தான் சார்ந்த தொழிற்சங்கத்தின் செயலாளராகப் பதவியிலிருக்கும் காலங்களில் முயற்சிகள் பல செய்து சங்கத்திற்கும் உறுப்பினர்களுக்கும் பலவித நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தவர். அரச சேவையில் இருக்கும் போதே சட்டக் கல்லூரியில் சட்டப்படிப்பைப் பெற்று நீதியரசர் உயர் நீதிமன்ற நீதியரசர் போன்ற பதவிகளை வகித்ததோடு பதவியில் இருக்கும் போதே 2001 செப்டம்பரில் இறைவனடி சேர்ந்தார்.

**39) சங்கீத கதாப்பிரசங்கக் கலைஞர் டாக்டர் இரா. சிவஅன்பு:-**

4.7.1939ல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை சிவகுரு வித்தியாசாலையிலும், உயர்கல்வியை சிதம்பரக் கல்லூரியிலும், யாழ் இந்துக்கல்லூரியிலும் கற்றார். கொழும்பு மருத்துவக் கல்லூரியில் மருத்துவக் கல்வியைக் கற்ற இவர் உதவி வைத்தியராகவும், பதிவு செய்யப்பட்ட வைத்தியராகவும் இலங்கையின் பல பாகங்களில் கடமையாற்றினார்.

சிறுவயது முதல் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றிலும் விற்பன்னராகத் திகழ்ந்ததோடு தனது 13வது வயதிலேயே கதாப்பிரசங்கம் நிகழ்த்தத் தொடங்கினார். திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் சொற்பொழிவுகளினால் கவரப்பட்டு அவரைத் தனது மானசீகக் குருவாக வரித்துக் கொண்டதோடு அவரின் முதன்மைச் சீடராகவும் விளங்கினார்.

இவர் சேவை செய்த இடங்களில் மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களிலும் இந்தியா, லண்டன் போன்ற நாடுகளிலும் கதாப்பிரசங்கம் நிகழ்த்தியுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெள்ளிக் கிழமைகளில் இவரது கதாப்பிரசங்கங்களை ஒலிபரப்பி வந்துள்ளது. இந்து சமய கலாச்சார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு கொழும்பில் 1993ம் ஆண்டு மாசி மாதம் நடத்திய பெருவிழாவில் கிருபானந்த வாரியார் சுவாமிகள் இவருக்கு "அருட் கலைத்திலகம்" என்னும் பட்டமளித்தார். இது தவிர கல்முனையில் "சாயிசாகரம்" என்னும் பட்டமும், அகில இலங்கை சபரி மலை சாஸ்தாபீடம் மூலமாக "ஞானவாரிதி" என்ற பட்டமும், லண்டன் ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயிலில் "சிவநெறிச் செல்வர்" என்ற பட்டமும், பெரியகல்லாறு பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா நிலையம் "சாயிகதாமிர்த பானு" என்னும் பட்டமும், நாச்சிமார்கோவில் தேவஸ்தானத் தினால் "சிவத்திரு" என்னும் பட்டமும், வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம் "கதா பிரசங்கமாமணி" என்னும் பட்டமும், கல்லடி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் "அன்பரசன்" என்னும் பட்ட மும், கலாச்சார அலுவல்கள் திணைக் களத்தினால் "கலாபூஷண" என்னும் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பகவான் சத்தியசாயி சேவா நிலையத்தின் கிழக்கிலங்கை இணைப்புக் குழுவின் தலைவராக இருந்த அன்னார் 27.7.2005 அன்று இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்றமிழ்ப் போதகாசிரியர் வல்வை ச. வயித்தியலிங்கம்பிள்ளை.

வல்வை ச. வயித்தியலிங்கம்பிள்ளை அவர்கள் 1843 ஆம் ஆண்டு மாசி மாதம் பூர நட்சத்திரத்தில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சங்கரநாதர் என்பதாகும். சங்கரநாதர் கடலோடியாகவும், வணிகராகவும் திகழ்ந்தார். ஆறுமுகநாவலரது இருபத்தியோராவது வயதில் வயித்தியலிங்கம்பிள்ளையவர்கள் தோன்றினார். நாவலர் காலமானதின் பின்னர் இருபத்தியொரு வருடங்கள் வாழ்ந்தார். நாவலர் இறக்கும் பொழுது வயித்தியலிங்கம் பிள்ளைக்கு வயது முப்பத்தி ஆறாகும்.

இவர் சிறுவயதிலேயே இந்தியா சென்றிருந்தார். அதன் பின்னர் உடுப்பிட்டி சிவசம்புப்புலவரிடம் சென்று இலக்கண, இலக்கியங்களையும் வடமொழியையும் கற்றுப் பண்டிதராகினார். சிவசம்புப் புலவரிடம் மாணவனாக இருந்தகாலத்தில் அவரது முக்கிய மாணவர்களில் ஒருவராக இருந்ததோடு அவரிடம் மாணவர்களாக இருந்த இதர ஆரம்ப நடுநிலையினருக்கு வயித்தியலிங்கம்பிள்ளை அவர்கள் பாடஞ்சொல்லிக் கொடுத்தாரென்றும் கூறப்படுகிறது.

இவரால் பலதரப்பட்ட நூல்கள் இயற்றப்பட்டனவாயினும் யாவற்றையும் ஒருசேர வைத்துப் பார்க்கும் பொழுது ஐந்து துறையினராக வகுக்கலாமென்று தெரிய வருகிறது.

1) பதிப்புக்களும் உரைகளும்
2) நிகண்டு
3) கடவுளர்மீது பாடியவை
4) கிறிஸ்தவ எதிர்ப்புக்கண்டனப் பிரசுரங்கள்.
5) சமூகம் பற்றியவை.

இவரது நூல்களில் பிரசுர ஆண்டு குறிப்பிடப்படாததோடு முன்னுரையாகவும் குறிப்புகள் இல்லாத காரணத்தினால் நூல்கள் காலவரன் முறைப்படி தொகுத்துக் கூறுவது சிரமமாக உள்ளது.

### 1) பதிப்புக்களும் உரைகளும் :

யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்த வி.சின்னத்தம்பிப்புலவர் (1716 -1780) அவர்கள் எழுதிய கல்வளை அந்தாதிக்கு உரை எழுதி சென்னை ரிப்பன் அச்சுக் கூடத்தில் பதிப்பித்து வெளியிட்டு வைத்தார். சுன்னாகத்தைச் சேர்ந்த வரதபண்டிதர் (1656 - 1716) அவர்கள் இயற்றிய செய்யுள் நூலான சிவராத்திரி புராணத்தையும் இவரே பதிப்பித்தார். சி.வை. தாமோதரம்பிள்ளையவர்கள் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழுக்களைந்து இந்த நூல் சென்னை வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில் ஆவணி மாதம் 1885ம் வருடம் பதிப்பிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. இவர் உரை எழுதி வெளியிட்ட நூல்களில் இன்னொன்று 'நாற்பொருள் கவிராச நம்பியகப் பொருள்' என்பதாகும். நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப்பட்ட இந்த நூலுக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த அம்பலவாணபிள்ளை குமாரசாமிப் புலவர் (1855- 1922) அவர்களினால் 1913ம் வருடம் புதியதாக உரையொன்று சென்னை வித்தியானு பாலன யந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. போதகராசிரியர் வயித்திலிங்கம்பிள்ளையவர்களின் மேற்படி நூலுக்கான புதிய உரை யொன்று 1878ம் வருடம் எழுதி சென்னையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதுவே இவரினால் உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டு முதன் முதலில் வெளியிட்டு வைக்கப்பட்ட நூல் என்று தெரிய வருகிறது. இந்த நூலுக்கு உடுப்பிட்டி சிவசம்புப் புல வரவர்கள் வழங்கிய சிறப்புப் பாயிரத்தில்.

பழைய உரைதழீஇப் பலப்பல சேர்ந்தும்
விழுமிதின் விளங்கிட வேண்டுவ விளக்கியும்
விரித்திட வேண்டுவ விரித்துமாங் காங்குத்
திருத்திடற் பாலன திருத்தியு மியற்றினன்
........................ வைத்திலிங்க நாவலனே

என்று இருப்பதிலிருந்து விளக்க வுரைக்கு வகுத்த உரையில் திருத்தங்கள் செய்தும் சரியானவற்றைச் சேர்த்தும் உரை யியற்றினாரென்பது தெரியவருகிறது. நம்பி யகப் பொருளுக்கு இவரால் வழங்கப்பட்ட விளக்கவுரையை நோக்கும் போது அகப் பொருள் மரபு பற்றி இவரிடத்திருந்த ஆழ்ந்த இலக்கியப் புலமை நன்கு தெரியவரும். நல்லூர் சின்னத்தம்பி புலவர் அவர்களினால் இயற்றப்பட்ட மறசை அந்தாதி என்னும் நூலுக்கும் இவரினால் உரையெழுதி வெளி யிட்டு வைக்கப்பட்டதாகத் தெரியவரினும் இதற்கான ஆதாரம் ஒன்றுமில்லை. இவர் உரையெழுதி வெளியிட்ட நூல்களில் இன் னொன்று அருணகிரிநாதர் அருளிச் செய்த கந்தரலங்காரமாகும். இதன் முதற்பதிப்பு வெளியிடப்பட்ட காலம் 1878ம் வருடமாகும். அதன் இரண்டாம் பதிப்பு 1912ம் வருடம் வயாவிளான் ஜயசிறீ சாரதா பீடேந்திர சாலையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது. வைத்தியலிங்கம் பிள்ளைய வர்களின் அரிய நூல்களைத் தேடிப் பிடித்து பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நோக்கோடு வல்வெட்டித்துறை ஆவணக்காப்பகத்தின் ஸ்தாபகரும் தற்காலம் கனடாவில் வாழ்ந்து வருபவருமான நடனசிகாமணி நகுலசிகாமணி அவர்களினால் மூன்றாம் பதிப்பாக 2001ம் வருடம் மேற்குறித்த நூல் வெளியிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

திரு. வைத்திலிங்கம் பிள்ளையவர் கள் பதிப்பித்து உரை எழுதி வெளியிட்ட நூல்களில் இவரது புகழை நிலை நிறுத்துவ தாக அமைந்தவற்றுள் கந்தபுராணத்தின் சில படலங்களுக்கு எழுதிய உரையே காரண மாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. நாவலர் அச்சுக்கூடப் பதிப்பாக வெளிவந்த ‘தெய்வயானையம்மை வள்ளியம்மை திரு மணப்படலம்’ என்பனவற்றிற்கான உரை, கந்தரோடையைச் சேர்ந்த வி. சிவசுப்பிர மணியஐயர் அவர்கள் எழுதிய கந்தபுராண அண்ட கோசப் படலத்திற்கு எழுதிய உரை யை 1885ம் வருடம் திருத்தி எழுதிய உரை சூரபன்மன் வதைப்படலத்துக்கான உரை என்பன கந்தபுராண சில படலங்களுக்கு இவரால் எழுதப்பட்ட உரைகளாகும். தெய்வ யானையம்மை வள்ளியம்மை திருமணப் படலங்களுக்கான உரைகள் வெளியிடப் பட்ட போது இவ்வுரைப்பதிப்புக்களுக்கு திரு. சே. வெ. ஜம்புலிங்கப்பிள்ளை எழுதிய பதிப்புரையானது இவற்றின் சிறப்பை குறிப் பால் உணர்த்துகிறது.

‘இத்திருமணப்படலத்திற்கு யாழ்ப் பாணத்து வல்வெட்டித்துறை ச. வயித்தி லிங்கபிள்ளை விரிவுரை எழுதியுள்ளார். அது பல ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் சைவாபிமானிப்பத்திராதிபர் பொ. ஞான சபாபதிப்பிள்ளையால் அச்சிடப்பட்டது. அப் பிரதிகள் இப்போது கிடைப்பது அருமையாத லால் உரை நூலை மறையாதபடி காப்பாற்ற வேண்டுமென்ற ஆசையே இப்போது அச் சிடச் செய்தது’ என்று ஜம்புலிங்கப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவர்களினால் அப்பதிப்புரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலே குறிக்கப்பட்டுள்ள திருமணப் படலங்கள் 1888 சைவாபிமானிப் பத்திரிகையில் அத்துடன் சேர்த்து மாதந்தோறும் இரண்டு பாரமாக பதினாறு பக்கமுடையதாக வெளியிடப்பட்டு வந்துள்ளது. இந்த திருமணப் படலங்களுக்கான உரைகள் ஆசிரியரது ஆழ்ந்த இலக்கிய ஞானத்தையும் வெளிப்படுத்துவதோடு அகப்பொருள் மரபை நுண்ணியதாக உணர்ந்து எழுதப்பட்டுள்ளதென்றும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் நாட்டுச் சிறப்புக் கூறும் முதற் பாடலுக்கான உரையே உரைச் சிறப்பினை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பான கோபுர வாயிலாக அமைந்துள்ளது என்று பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள் இவ்வுரைகளின் தன்மையை ஆராய்ந்து கூறியுள்ளார். 122ம் பாடலான "நாற்றமும் தோற்றமும்" எனத் தொடங்கும் பாடலுக்கு 164ம் பாடலான "தாய் துயிலறிந்து" எனும் பாடலுக்கும் எழுதப்பட்டிருக்கும் உரைகள் போதகாசிரியரது ஆழ்ந்த தமிழிலக்கிய அறிவுக்கான "பதச் சோறு"ஆக அமைந்துள்ளதெனவும் அவர் மேலும் கூறியுள்ளார். வள்ளியம்மை தெய்வயானை அம்மை உரைகள் நூல் வடிவில் வருவதற்கு முன்னர் "சைவாபிமானி" சஞ்சிகையில் தொடராக வந்தது போன்றே "சூரபன்மன் வதைப்படலத்திற்கான உரை நூல் வடிவில் வருவதற்கு முன்னர் சைவாபிமானி சஞ்சிகையில் தொடராக அதனுடன் சேர்த்து வெளியிடப்பட்டு வந்தது.

## 2. நிகண்டு

வைத்திலிங்கம் பிள்ளையவர்கள் தனது முப்பத்தி மூன்றாவது வயதிலே (1876-1877) "சிந்தாமணி நிகண்டு" என்னும் நூலினை இயற்றியுள்ளார். ஆழ்ந்த இலக்கியப் பரிச்சயமில்லாத ஒருவரினால் இது போன்ற ஒரு நிகண்டினை இயற்ற முடியாது என்று சொல்லப்படுகிறது. பாரம்பரியமான கல்வி முறையில் நிகண்டுப் பயிற்சி அத்தியாவசியமாகையால் பெரும் பெயர் பெற்ற போதகாசிரியராக விளங்கிய இவர் இத்துறையில் ஆர்வம் காட்டியது இயல்பே என்றும் அறிந்து கொள்ளலாம். இந்த நிகண்டினை இயற்றுவதற்கு திரு. ஞானமூர்த்தி என்பவர் பொருளுதவி வழங்கியுள்ளார் என்பது தெரிய வருகிறது. சூடாமணி நிகண்டின் பதினாறாந் தொகுதியை ஒத்த 400 பாக்கள் கொண்டதாயும் இச் சிந்தாமணி நிகண்டு அமைந்துள்ளது. இதில் ககர முதல் னகர வீறாக எதுகைத் தொடரில் ஒவ்வோரடிக்கும் இவ்விரண்டு சொற்களைச் சேர்த்து இயற்றப்பட்டுள்ளது.

இவரினால் இயற்றப்பட்ட இச் "சிந்தாமணி நிகண்டு" இதற்கு முன்னர் எழுதப்பட்ட "நாதார்த்த தீபிகை" தோன்றி 25 வருடங்களுக்குப் பின்னர் 1874ம் வருடம் யாழ்ப்பாணத்து வைத்திலிங்கம் பிள்ளையவர் அச்சிடுவித்தார் எனவும் தீபிகையைப் போல் வடமொழிச் சொற்களை மிகுதியாக அமைத்த நூலாகும் எனக் குறிப்பிடுவதோடு

"சீர்செறி செஞ்சடைகட் டிகழ்மதிப் பிளவு
- தாங்கும்
ஏர்செறி கரிமுகன்ற னினைமல ரடியை
- யேற்றி
நேர்செறி இளைஞரோர் சொற்கொருபொரு
- ணோராயோரப்
பார்செறி நிகண்டு சிந்தாமணி யெனப் பகர்
- வனொன்றே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஆசிரியர் கூறுதலால் இது ஒரு சொல்லொரு பொருள் கூறும் நூலென்றறிய லாம் என அரும் பொருள் விளக்க நிகண்டு என்னும் நூல் கூறுகிறது. ஈழநாட்டில் நிகண்டு நூல் செய்த புலவர் வயித்திலிங்கம்பிள்ளை யன்றி வேறு யாரும் இலரென்று கூறப்படு கின்றது.

### 3) கடவுளர் மீது பாடியவை

கடவுளர் மீது இவர் பாடியவற்றுள் 1883ம் வருடம் வல்வைச் சிவன் கோயில் ஸ்தாபிக்கப்பட்டு பிரதிட்டை நடைபெற்று கும்பாபிஷேகத்தின் பொழுது இவர் இயற்றிய வல்வை வைத்தியேசர் பதிகம் "ஊஞ்சல்" ஆகியன பாடப்பெற்றன. வைத்தியேசர் பதிகம் ஆகியவற்றுடன் "வைத்தியேசர் பாமணியைந்து" "வாலாம்பிகை பாமணி யைந்து" என்பனவும் இவரினால் பாடப் பெற்றன. செல்வச்சந்நிதி முருகன் மீது அலங்காரம் மாலை என்ற பகுதிகளோடு 460 பாக்களையுடைய "செல்வச் சந்நிதித் திரு முறையும்" இவரினால் பாடப்பட்டு வெளி யிடப்பட்டன. இது தவிர நல்லூர்ப்பதிகம், மாவைப் பதிகம், வல்வை நெடியகாட்டுப் பிள்ளையார் பதிகம் போன்றவையும் இவரி னால் இயற்றப்பட்ட இதர பதிகங்களாகும். இந்தப் பதிகங்கள் யாவும் இவர் தம் பக்திக் கும் கவிநயத்துக்கம் சான்று பகர்கின்றன.

### 4) கிறிஸ்தவ எதிர்ப்புக் கண்டனங்கள்

சைவத்தை இழித்துரைத்த கத்தோ லிக்க மதக்கருத்துக்களுக்கு எதிராகவும் புரட்டஸ்தாந்து மதக்கருத்துக்களுக்கு எதிரா கவும் கண்டன நூல்கள், பிரசுரங்கள் வெளி யிடப்பட்டு வந்தன. நாவலரது கண்டனங்கள் பெரும்பாலும் புரட்டஸ்தாந்து பிரிவினர்க்கு எதிராகவும் வல்வை வைத்தியலிங்கம் பிள்ளையவர்களின் கண்டனங்கள் கத்தோ லிக்க பிரிவினர்க்கு எதிராகவும் அமைந்தன. கத்தோலிக்க மதக் கருத்தை எதிர்த்த வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் "சைவ மகத்துவபானு" என்னும் நூலை மூன்று தனித்தனிப் பாகங்களாகப் பிரித்து வெளி யிட்டார். கத்தோலிக்க மதத்தினர் "சைவ மகத்துவ பானூ பாலம்பனம்" என்னும் நூல் கொண்டு பதிலிறுத்தார். இவர் தொடர்ந்து "சைவ மகத்துவ பானூ பாலம்பன வியா பாதனம்" என்னும் பிரசுரம் மூலம் எதிர்த்தார்.

சி. வை தாமோதரம்பிள்ளையவர் களின் "சைவமகத்துவம்" என்னும் நூல் வெளியிடப்பட்டபோது அதற்கு எதிராக சைவ மகத்துவ ஆபாச விளக்கம் என்னும் பிரசுரம் தோன்றியது. இதற்கு எதிராக வயித்தியலிங்க பிள்ளையவர்கள் "சைவ மகத்துவ ஆபாச விளக்க மறுப்பு" என்பதனை வெளியிட்டு வைத்தார். பிறிதொரு சமயத்தில் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களின் "சைவ மகத் துவம்" என்னும் நூலுக்கு எதிராக அருளப்ப முதலியார் என்பவரும், சூசைப்பிள்ளை என் பவரும் "சைவமகத்துவ திக்காரம்" என்னும் நூலினை வெளியிட்டார்கள். வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் "சைவ மகத்துவதிக்கார நிக்கிரகம்" என்பதினால் மறுத்தார். கிறிஸ் தவ பாதிரிமார்கள் "சைவ மகத்துவதிக்கார நிக்கிரக எதிரேற்றம்" என்ப தனை வெளி யிட்டார்கள். அதற்கு இவர் "சைவ மகத்துவ திக்கார நிக்கிரக எதிரேற்ற மறுப்பு" என்பத னால் மறுத்து வாதத்தை முடித்து வைத்தார். இதனையடுத்து அருளப்ப முதலியார், சூசைப்பிள்ளை ஆகியோர் வாய் அடங்கி இந்தியாவுக்குத் திரும்பினார்கள் எனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவருகிறது. அத்தோடு இவ்விருவரும் வல்வை மாணவன் வயித்தியலிங்கம்பிள்ளை இருக்கும் வரை சைவத்தை இழித்துக் கூற மாட்டோம் என்று "கத்தோலிக்கப் பாது காவலன்" வாயிலாக வெளிப்படுத்தும் வரை இவருடைய கண்டனங்கள் வெளிவந்துள் ளன. "இருண்மதி சுடுசுடர்", "கபடமடநிடு தனம்" என்னும் கண்டனங்களையும் இவர் வெளியிட்டார். இவரது கண்டனங்கள் பெரும் பாலும் வல்வை மாணவன் என்ற பெயரில் இவர் நடாத்திய பாரதீநிலைய முத்திராஷர சாலையில் அச்சிட்ட தனது சஞ்சிகையான சைவாபிமானியிலே வெளியிட்டு வந்தார்.

**5) சமூகம் பற்றியவை**

சமூகம் பற்றி இவர் எழுதியவற்றுள் மூன்று பாகங்களாக எழுதப்பட்ட "கள்ளுக் குடிச்சிந்து" இரண்டு பாகங்களாக எழுதப் பட்ட "மாதரொழுக்கத் தங்கச் சிந்து" மற்றும் "சாதிநிர்ணய புராணம்" என்பன அடங்கும்.

வயித்தியலிங்கபிள்ளை அவர்களி னால் வெளியிடப்பட்ட நூல்களின் உரை களின் சிறப்பைத் தாங்க முடியாதவர்கள் சாதிப்பகுப்பைக் கொண்டு இவரை எதிர்த் தார்கள். அத்தோடு யாழ்ப்பாணத்தில் வேளாளர் மேலாதிக்கம் இருந்த பகுதியில் கரையார்களின் கையோங்கியதற்கு எதிர்ப் பும் ஏற்பட்டது. ஆறுமுகநாவலர் பகிரங்க மாகவே வேளாளர் நலன்களை ஆதரித்தவர். ஆறுமுகநாவலர் கரையார் வழக்கு என்னும் நூலை எழுத வயித்தியலிங்கபிள்ளையவர் கள் "சாதி நிர்ணய புராணம்" என்னும் நூலை எழுதி வெளியிட்டு வைத்தார். ஆறுமுகநாவலர் எழுதிய கரையார் வழக்கு என்னும் நூல் கரையாரைப் பற்றிக் கீழான, தரக்குறைவான கருத்தைப் பரப்புவதற்கே எழுதப்பட்டதாகும். இதன் எதிரொலியாகவே "சாதி நிர்ணய புராணம்" எழுதும்படி வயித் தியலிங்கம்பிள்ளை அவர்களைத் தூண்டியது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் எவ் வெச் சாதிகள் எவ்வெவ் அந்தஸ்தினைப் பெற்றிருந்தன வென்பதை அறிந்து கொள் வதற்கு இந்நூல் உதவுகின்றது என்பது தெரியவருகிறது.

நாவலர் கையாண்ட நடைமுறை யைப் பின்பற்றி தனக்கென அச்சுக் கூடம் ஒன்றினை வயித்தியலிங்கம் பிள்ளைய வர்கள் நிறுவிக் கொண்டார். வல்வைச் சிவன் கோயிலுக்கு அருகேயுள்ள குளத்தடிக்கு அருகாமையில் உள்ள மடத்திலேயே பாரதீ நிலைய முத்திராஷரசாலை என்னும் பெய ருடன் அச்சுக் கூடம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த அச்சகத்திலேயே "சைவபிமானி" என்னும் பத்திரிகை பலகாலமாக அச்சிடப்பட்டு வெளி வந்தது. கிறிஸ்தவ மதம் பரவி வரும் நிலைக்கு எதிராக எழுந்த சைவ எழுச்சிக்கு வல்வெட்டித் துறையைச் சேர்ந்த வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் வெளியிட்ட "சைவ அபி மானி" என்ற பத்திரிகை பெரும் பங்காற்றிய துடன் வல்வெட்டித்துறை வர்த்தகர்கள் இவருக்குப் பின்னணியாக இருந்தார்கள் என ஆறுமுகநாவலர் அவர்கள் வெளியிட்ட "மகிமை" என்னும் சஞ்சிகையில் குறிப்பிட் டுள்ளதாக அறியமுடிகிறது. வடமராட்சிப் பகுதியில் வெளிவந்த பத்திரிகைகளில் "சைவபிமானியே" மூத்த பத்திரிகை என்றும் சமய சமூகப் பணியையே முதன்மையாகக் கொண்டியங்கிய போதும் இலக்கிய இலக் கணங்களுக்கும் போதிய இடமளித்துள்ள தெனப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் வடமராட்சிக்கு வெளியில் உள்ள அறிஞர்களின் ஆக்கங்களும், வாதப்பிரதி வாதங்களும் இடம் பெற்றன. வயித்திலிங்கம் பிள்ளையவர்கள் பல்வேறு புனை பெயர் களில் எழுதிய ஜனரஞ்சகமான படைப்பு களும், சமூக சீர்கேடுகளைச் சுட்டி எழுந்த பாடல் உரைநடை விஷயங்களும் இப்பத்திரி கைகளில் வெளிவந்தன.

யாழ்ப்பாணத்திற் தோன்றிய இலக் கிய விழிப்பினை மட்டக்களப்புக்குப் பரப்பிய வரும் இவரே. இதனையே பேராசியரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் மட்டக்களப் பிற்கும் வடமராட்சிக்கும் இலக்கியப்பாலம் அமைத்தவர் வயித்தியலிங்கம்பிள்ளை எனக் குறிப்பிட்டுள்ளார். மட்டக்களப்பில் பேரறிஞர் எனப் போற்றப்படும் வித்துவான் ச. பூபால பிள்ளையவர்கள் (1855 - 1920) வயித்திய லிங்கம் பிள்ளையவர்களின் மாணவராவார். பூபாலபிள்ளையவர்கள் பாடிய சோமவார விரத மகிமையைக் கூறும் ''சீமந்தனி புராணம்'' வயித்தியலிங்கம்பிள்ளையவர் களினால் திருத்தப்பட்டு சென்னையில் 1894ல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு வைக் கப்பட்டது. இவரினால் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட இன்னொரு நூல் "கஞ்சனம்மானை" என்பதாகும்.

இவர் நடத்திய அச்சகத்துக்கு அருகி லேயே பாடசாலை ஒன்றையும் நடாத்தி வந்தார். தம்மிடத்து வந்த மாணவர்களை அறிஞர்களாக்கி வைத்த பெருமையையும் கொண்டிருந்தார். இவரிடம் பிராமண மாண வர் பலரும் பாடங்கேட்டதாகவும் இவர்களுள் ஐயாமுத்து ஐயர் என்பவர் இவரது இறுதிக் காலத்தில் மிகுந்த விசுவாசத்துடன் குருத் தொண்டு புரிந்தாரெனவும் அறிய முடிகிறது.

வல்வைச் சிவன் கோயிற் கருமங் களை ஆகம விதிகளுக்கமைய நடாத்தும் பணியில் ஈடுபட்டு கோயில் எஜமான் வெங் கடாசலம்பிள்ளையவர்களுக்கு மந்திரிபோல் இருந்து கடமைகளை செய்துள்ளார்.

சமய இலக்கியத்துறையிலல்லாது கணிதத்துறை பூமிசாஸ்திரதுறை, வானசாஸ் திரம், போன்ற துறைகளிலும் சிறந்து விளங் கினார். கணிதத்துறையின் பல்வேறு பகுதி களிலும் உள்ள வாய்பாடுகள் அவற்றின் விளக்கங்கள் அடங்கிய கணிதாதாரம் என்னும் நூலை வெளியிட்டார். இவரது வான சாஸ்திர அறிவைப் பற்றிக் கேள்விப்பட்ட உடுப்பிட்டி வேதபோதகர் வண.ஹௌலந்து அடிகள் இவரை மெச்சியதோடு உடுப்பிட்டி யில் இருந்து குதிரை வண்டியில் வந்து தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டார் என்றும் அறிய முடிகிறது.

புராணபடனங்கள் நிகழ்த்துவதிலும் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டவராயிருந் தார். புராண படனங்கள் வெறுமனே உரை யாக அமையாது பொழிப்புரை விருத்தியுரை இலக்கணக்குறிப்பு கிளைக்கதைகள் மேற் கோள்கள் ஒப்பியல் நோக்கு என்பன உள்ள டக்கிய புராண படனங்களே மேற்கொள்ளப் பட்டன. இவர் ஈழத்தில் மட்டுமல்லாது தமிழ் நாடு சென்றும் புராண படனங்கள் விரிவுரை கள் நிகழ்த்தியுள்ளார். தமிழ் நாட்டினரால் நன்கு மதிக்கப்பட்டதோடு சென்னை நகரத் துப் பேரறிஞர்களே இயற்றமிழ்ப் போதகா சிரியர் என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பி த்தனர். சென்னையில் சி.வை.தாமோதரம் பிள்ளையவர்கள் தலைமையில் நிகழ்ந்த பேரவை இவருக்கு இந்தப் பட்டத்தை சூட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சந்தர்ப்பத்தில் புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கும் நல்லை நாவலர் அவர்களுக்கும் இடையில் வாதப்பிரதி வாதங்களும், கண்டனங்களும், மறுப்புகளும் மும்முரமாக இடம்பெற்றன. தமிழகத்தில் மதப் பணி புரிந்த கத்தோலிக்க பாதிரியார் பாதர் பிறிட்டோ என்பவருக்கு நாவலர் அவர்களால் தக்க பதில் கொடுக்க முடியவில்லை. காரணம் அவர் தர்க்க சாஸ்திரத்தில் வல்லவராக இருக்கவில்லை. நாவலர் விடுத்த எழுத்துருவிலான கோரிக்கையை வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் ஏற்றுக் கொண்டு அதற்கான பதிலை பாதர் பிறிட்டோவுக்கு அனுப்பி வைத்தார். இப்பதிலில் சொல்லற்கரிய உண்மைகளைக் கண்ட பாதர் பிறிட்டோ 'நான் யாழ்ப்பாணத்துப் பனங்காட்டில் நரிகளைத் தான் எதிர்பார்த்தேன் வயித்திய லிங்கம் போன்ற சிங்கம் இருப்பதை தான் தெரிந்து வைத்திருக்கவில்லையென்று கடிதம் அனுப்பியதோடு நாவலருடன் தான் தொடங்கிய தர்க்கவாதங்களை தானாக முடிவுக்குக் கொண்டு வந்தார்.

வயித்தியலிங்கம் பிள்ளையவர்களின் சமகாலத்தவருள் முக்கிமானவர்கள் நல்லை ஆறுமுகநாவலர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர், நீர்வேலி ச. சிவப்பிரகாசபண்டிதர், சுன்னாகம் பூ.முருகேச பண்டிதர், சிறுப்பிட்டி சி.வை.தாமோதரம்பிள்ளை, நல்லூர் வித்துவ சிரோன்மணி, ந.ச. பொன்னம்பலபிள்ளை ஆகியோராகும்.

இத்தகைய பெரியார் 3.9.1900ல் ஆவணி மூலத்தில் இவ்வுலகைவிட்டு இறைவனடி சேர்ந்தார். இவரது மறைவைக் குறித்து சிவப்பிரகாச பண்டிதர், சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர், வயித்தியலிங்கம் பிள்ளையின் முதன் மாணாக்கர் சி.ஆறுமுகப்பிள்ளை (அப்புக்குட்டி உபாத்தியாயர்) ந.ச.பொன்னம்பலபிள்ளை, ஐயாமுத்தையர், கந்தசாமிப்பிள்ளை உபாத்தியாயர், சுன்னாகம் பூ.முருகேச பண்டிதர், சி.வை.தாமோதரம் பிள்ளை ஆகியோர் கையறு நிலைக் கவிகள் பாடியுள்ளனர்.

**பிரித்தானிய அரசிற்கு எதிராக விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திய மகாத்மா காந்தி, சுபாஸ்சந்திரபோஸ், மோதிலால் நேரு, வ.உ. சிதம்பரம், காமராஜர், இராஜகோபாலச் சாரியார் போன்ற 30க்கும் மேற்பட்ட இந்திய விடுதலை வீரர்களின் புகைப்படங்கள் வல்வெட்டித்துறை மக்களின் இல்லங்களை 1935களில் அலங்கரித்தன. சிவன் கோயில் கோபுரத்தில் மனிததெய்வமாகக் கருதப்பட்ட மகாத்மா காந்தியின் உருவம் சுமார் 65 வருடங்களுக்கு முன்பு இருந்தே காணப்படுகிறது. 1987ல் இந்தியப்படையினர் இதனை வந்து பார்த்தனர். அவர்கள் அதே வல்வெட்டித் துறையில் ஆகஸ்ட் 20ம் திகதி 1989ல் செய்த வல்வை படுகொலையை மறக்க முடியுமா?**

**லண்டன் ஐ.அ. சிவானந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியதில் வல்வையரின் பங்களிப்பு.

எதிரும் புதிருமாக இருந்து ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் நடத்தி வந்த தலைவர் களை இந்த யுகத்திலே இணைய முடியாதவர்கள் என்று கருதப்பட்ட அவர்களை ஒரு நுகத்திலே பிணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்கள் வல்வை மக்கள். அதில் அவர்கள் வெற்றியையும் கண்டர்கள்.

இளைஞர் காங்கிரஸ், அதன் பின்னர் தமிழ்க் காங்கிரஸ் அதிலிருந்து பிரிந்து இலங்கைத் தமிழரசுக்கட்சி, செ.சுந்தரலிங்கம் அவர்களின் ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி, காவலூர் வ.நவரெத்தினம் அவர்களின் தமிழர் சுயாட்சிக் கழகம், மலை நாட்டுத் தமிழர் களுக்காக இலங்கை இந்திய காங்கிரஸ் போன்றன ஈழத்தமிழர்களிடையே உருவாக் கப்பட்டன.

இப்படியாகப் பிளவுபட்டுக் கொண்டிருந்த தமிழ்க் கட்சிகளையும் தலைவர்களையும் ஒன்றுபடுத்தும் நோக்கோடு செ.நாகலிங்கம் கியூ.சீ (Q.C) அவர்கள் பாடுபட்டும் கூட எமது தலைவர்களை ஒன்றுபடுத்தமுடியாது போனது துரதிர்ஷ்டமாகும்.

இலங்கையில் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் பல நூற்றாண்டுகளாகத் தனித்தனி அரசு நடாத்தி வந்தனரென்பது சரித்திரக் கூற்றாகும். இந்நிலை அந்நியர்களான போர்த்துக் கீசர், ஒல்லாந்தர் ஆகியோரின் படையெடுப்புக்களினால் மாறினாலும் கூட அவர்களின் ஆட்சிக்காலத்தில் அவ்வப்பிரதேசத் தின் நிர்வாகம் புறம்பாகவே இயங்கிவந்ததென்பதையும் ஈற்றில் நிர்வாக வசதிக்காக ஆங்கிலேயர் இரு பிரதேசத்தினையும் ஒன்றிணைத்து ஆட்சி புரிந்தனரென்பதையும் மறுக்க முடியாது. நிர்வாக வசதிக்காக தங்களின் நலனுக்காக எங்கே யோ இருந்து வந்த ஆங்கிலேயர் எமது தேசத்தை ஒன்றிணைக்க முடியுமானால் தமிழினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மை அரசாங்கங்களினால் இழைக் கப்பட்ட பலதரப்பட்ட அட்டூழியங்கள், இழப் புக்கள் என்பவற்றைச் சகித்துக் கொண்டும் பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் என்பன வற்றை பெற முடியாதிருந்ததும் எமது மக்களிடையேயிருந்து வந்த ஒற்றுமையின் மையே முக்கிய காரணமாகும். இந்நிலை யில் தான் வல்வை மண்ணைச் சேர்ந்த அரு.சபாரத்தினம், ச.ஞானமூர்த்தி, ஆ.வே. வேற்பிள்ளை ஆகியோரும் வேறு சில இளை ஞர்களும் சேர்ந்து தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தமிழரசுக்கட்சி, ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி, தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகிய நான்கு கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் களம் இறங்கினார்கள்.

முதலில் தந்தை செல்வாவிடம் சென்று இது பற்றித் தெரியப்படுத்திய போது இந்த ஒற்றுமை விடயத்தில் பல தடவைகள் பிரயத்தனப்பட்டும் சித்திபெற முடியவில்லை என்று தெரிவித்ததோடு ஈற்றில் தனது சம் மதத்தையும் ஆசியையும் வழங்கினார். அடுத்து தமிழ் காங்கிரஸ் செயலாளர் திரு.மு. சிவசிதம்பரம் அவர்களிடம் சென்று கலந்தாலோசிக்கப்பட்டது. இம்முயற்சியை அவர் வெகுவாகப் பராட்டியதோடு தனது சம்மதத்தையும் தெரிவித்தார். அடுத்து தமிழர் சுயாட்சிக்கழகப் பிரமுகர் திரு.வ.நவரெத் தினம் அவர்களைச் சந்தித்த போது பல்வேறு கருத்துக்களையும் முன்வைத்ததோடு விட்டுக் கொடாத நிலைப்பாட்டையும் தழுவிநின்றார். ஈற்றில் ஒன்றிணைப்பாளரின் கோரிக்கையை ஏற்று சகல தலைவர்களும் கொண்ட கூட்டத் திற்குச் சமூகமளிப்பதாக ஒத்துக் கொண் டார். அடுத்து கெட்டிக்காரன் தான் ஆனால் ஒரு குணம் வந்தால் வெங்கலக்கடையினுள் புகுந்த ஆனைபோல் சகலதையும் போட்டு டைத்து விடுவார் எனக் கருதப்பட்ட ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவர் செ.சுந்தரலிங்கம் அவர்களை ஒன்பது அம்சத் திட்ட நகலுடன் ஒன்றிணைப்பாளர் சந்தித்த போது நகலினைக் கூர்மையாகப் பார்த்த தோடு மட்டும் நின்று விடாமல் பல்வேறு வினாக்களையும் எழுப்பினார். விடைகளைப் பகர்ந்ததும் திருப்தியடைந்தவராய் இந்த முயற்சி வெற்றியளிக்குமென வாழ்த்தியனுப் பினார்.

அடுத்து ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர் களைச் சந்திப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இவர் ஒன்றிணைப்பாளர் களின் யோசனைக்கு இசைவாரோ என்ற சந்தேகமும் ஏற்கனவே ஏற்பட்டிருந்தது. இவ ருடன் தொடர்பு கொண்ட போது தான் யாழ்ப் பாணம் வருவதாயும் அச்சமயம் இணைப்பு பற்றி கலந்தாலோசிக்கலாமெனவும் தெரி வித்திருந்தார். அவரைச் சந்தித்து நகல் திட்டம் பற்றிக் கலந்துரை யாடப்பட்டபோது பல கட்டங்களில் முறிவு நிலை ஏற்பட்டது. இறுதியில் சாந்தமானதொரு நிலை உருவாகி தமிழர்கள் ஒன்றுபட வேண்டியதன் அவசியத் தை ஏற்றுக் கொண்டார். இதே சமயம் கிழக்கு மாகாணத்திலுள்ள பொத்துவிலில் இருந்து திருகோணமலை வரையுமுள்ள பல்வேறுபட்ட அரசியல் பிரமுகர்களும் இதர பிரமுகர்களும் கலந்தாலோசிக்கப்பட்டு அவர்களது ஆதரவும் பெறப்பட்டது.

இறுதியில் சகலரது ஒருமித்த ஆதர வுடன் 7.2.1971 மாலை 4.30 மணிக்கு ஒருங் கிணைப்பு மகாநாட்டுக் கூட்டம் வல்வையில் ஆரம்பமாகியது. இந்த மகாநாட்டினைக் கூட்டுவதற்குத் தமது இல்லத்தைத் தந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிய ஆ.செ. தங்கவடிவேல் அவர்கள் குத்து விளக்கு ஏற்றிய பின் திருமதி அ. மங்கையற் கரசி அவர்களினது தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுடன் கூட்டம் ஆரம்பமாகியது. இக் கூட்டத்திற்கு செ. சுந்தரலிங்கம், மு.சிவசிதம் பரம், சி. கதிரவேல்பிள்ளை, அ. அமிர்த லிங்கம், வ.நவரெத்தினம் ஆகியோர் உட்பட 25 பேரளவில் சமூக மளித்திருந்தார்கள். இக் கூட்டத்தில் ஒவ்வொருவரும் சமர்ப்பிக்கப் பட்ட நகல் திட்டம் பற்றியும் அதன் முக்கியத் துவம் பற்றியும் தமது கருத்துக்களைத் தெரி வித்தார்கள்.

**நகல்திட்டம்**

(1) சிங்களமும் தமிழும் இந்நாட்டின் அர சாங்க மொழிகளாக இருக்க வேண் டும். அவற்றின் திட்ட வட்டமான உப யோகம் பற்றிய விபரங்கள் அரசியல் சாசனத்தில் இடம் பெற வேண்டும்.

(2) சிங்களமும் தமிழும் இந்நாட்டின் நீதி நிர்வாக மொழிகளாக இருக்க வேண் டும். பதிவேடுகள் முதலியவற்றில் அவ் விருமொழிகளின் உபயோகம் பற்றிய விதிகள் அரசியலமைப்பில் சேர்க்கப் படல் வேண்டும்.

(3) இலங்கையின் எப்பாகத்திலும் வாழும் சிங்களவரோ தமிழரோ தங்கள் தாய் மொழியில் அரசாங்கத்துடன் கருமம் ஆற்றும் உரிமை இருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு பிள்ளைக்கும் சிங்களமோ தமிழோ அவரவர் தாய் மொழியே போதனாமொழியாக இருத்தல் வேண் டும். திறமையின் அடிப்படையில் இல வசமாக அக்கல்விக்கு வசதி செய்யக் கூடியது அரசின் கடமையாகும்.

(5) உயர்கல்வி நிலையங்களில் சேர்வ தற்கோ அரசாங்க சேவையில் சேரு வதற்கோ தன் தாய் மொழியில் பரீட்சை எடுத்து தன் தகுதிக்கேற்ப சேரும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

(6) அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை ஒட்டியோ நிர்வாக ஒழுங்கீ னங்களைப் பற்றியோ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அரசியல் சாசனத்தில் அமைய வேண்டும். நீதி நிர்வாகத்தில் அரசியல் தலையீடும் இருத்தல் ஆகாது.

(7) இந்நாட்டு மக்களிடையே நிலவும் சாதி பற்றியும் சமயம் பற்றியும் இந்திய அரசியலமைப்புத் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்கப் படவேண்டும்.

(8) இலங்கை குடியரசு சமயச்சார்பற்ற அர சாக இருக்க வேண்டும். ஆனால் பௌத்த இந்து கிறீஸ்தவ இஸ்லாமிய மதங் களைப் பாதுகாத்துப் பேண வேண்டும்.

(9)

அ) இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் அவரது தந்தை அல்லது தாய் இலங் கையில் பிறந்தவராய் இருப்பின்

ஆ) இலங்கைக்கு வெளியில் பிறந்தவரா யின் அவரது பெற்றோர் இலங்கைக் குடியுரிமைக்குத் தகுதியுடையவரா யின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) 15.11.1948 க்கு முன்னர் இருந்து தொடர் பாக இலங்கையில் வசிப்பவராயும் இலங்கைப் பிரஜையாக இருப்பதற்கு விரும்புவராயும் இருப்பின் :-

அவர்கள் எல்லோரையும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் அரசியலமைப்பில் சேர்க்கப்படவேண்டும். வம்சாவழிப் பிரசைக்கும் பதிவுப் பிரசைக் கும் எவ்வித பாகுபாடும் இருத்தல் ஆகாது. எக்காரணம் கொண்டும் எவருடைய பிரசா உரிமையும் பறிக்கப்படலாகாது.

இதுவே 1972ம் வருடம் புதிதாக அமுல்படுத்தப்படவுள்ள அரசியலமைப்புத் திட்டத்திற்கு தமிழ் அரசியல் கட்சிகள் தமிழி னத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஒருங்கு சேர்ந்து திருத்த விதி களைச் சமர்ப்பிக்கும் பொருட்டு தயாரிக்கப் பட்ட குறைந்தபட்ச கோரிக்கையாகும்.

மேற்படி நகல் திட்டம் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதோடு சமூகமளித்திருந் தவர்களது ஒப்பமும் பெறப்பட்டது. கூட்டம் நிறைவுற்றதும் தலைவர்கள் ஒன்றுபட்ட செய்தியை கூட்டம் நடைபெற்றுக் கொண் டிருந்த வீட்டிற்கு வெளியே திரண்டிருந்த ஆதரவாளர்கள், அபிமானிகள் கேட்டதும் தமது மகிழ்ச்சி ஆரவாரங்களை கோஷ மெழுப்பித் தெரிவித்ததோடு பட்டாசுகளைக் கொழுத்தியும் கொண்டாடினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற இந்த அமைப்பின் நிர்வாக சபையைத் தெரிவு செய்வதற்கான அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் 1972ம் வருடம் வைகாசி மாதம் திருகோணமலையில் நடைபெற்றது. இதன் பின்னர் பொதுச் சபை பலதடவைகள் கூடி ஒரு ஆறு அம்சத் திட்டத்தைத் (மேலே 1 இலிருந்து 6 வரையான) தமிழினத்தின் முன்னோடியான கோரிக்கையை அரசாங்கத் துக்கு அனுப்பி வைத்தது. ஆனால் இந்த ஆறு அம்சத்திட்டம் கிடைக்கப் பெற்றமைக் கான பதில் உரியவர்களினால் அனுப்பி வைக்கப்படவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிர சானது 1976ம் வருடம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து கொண்டது.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி 18 ஆசனங் களைக் கைப்பற்றி பாராளுமன்றத்தில் இரண்டாவது பலமுள்ள உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்ற இடத்தினைப் பெற்ற மைக்காக கூட்டணியை உருவாக்க முன் னின்று உழைத்த வல்வைப் பிரமுகர்களி னாலும் வாலிபர்களினாலும் வரலாறு காணாத பெருவிழா ஒன்று ச.ஞானமூர்த்தி அவர்கள் தலைமையில் 30.07. 1977ல் ரேவடி மைதானத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Telephone: 81677

"GITANJALI"
QUEEN'S ROAD,
COLOMBO 3.

15th October, 1976.

Dear Gnanamoorthy,

I was very happy to see you at the Air Port and again at the temple, although I do not like this kind of demonstration before everything is over. Winning a battle is not winning a war. We must ensure the rights of the community for all time before we can celebrate. Anyhow, I am very grateful for all the very genuine efforts which you have taken to bring about the unity of the Tamil community which I think at last has been achieved, although you must please remember that I am one who has always stood for this and I have been obstructed in achieving this by our friends.

Please remind me to all my friends and well wishers.

With warm regards and best wishes,

Yours very truly,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்ட வரலாற்றில் வல்வையின் மைந்தர்கள்

தமிழீழத் தேசியத் தலைவர் என உலகத் தமிழர்களால் வர்ணிக்கப்படும் தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தமிழர் போராட்ட வரலாற்றில் முக்கியபங்கினை வகிக்கிறார். உலகத் தமிழர் வரலாற்றில் தமிழர்களுக்கென விடுதலை நோக்கிய பயணத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக தமிழ் மரபு வழி இராணுவத்தை தரை, கடல் எனக் கடந்து வான் படையையும் ஸ்தாபிக்குமளவு செயற்பட்டவர். உலகிலுள்ள போராட்ட இயக்கங்களிலே கடற்படையைத் தன்னகத்தே கொண்ட ஒரே அமைப்பு விடுதலைப் புலிகள் மட்டுமே என்று சொல்லப்படுகின்றது.

தலைவர் பிரபாகரன் அவர்கள் சரித்திர நூல்கள், வரலாற்று நாவல்கள், வீரபுருஷர்களின் காவியங்கள் அவர்கள் தம் வரலாறுகள் போன்றவற்றை விரும்பிப் படித்ததோடு இந்திய விடுதலைப் போராட்டம் பற்றியும் மிகவும் விரும்பிப் படித்துள்ளார். இவர் நான்கு வயதுச் சிறுவனாக இருந்த போது 1958 இல் நிகழ்ந்த இனக் கலவரங்களின் போது தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் அவர்கள் மீது ஆழ்ந்த பரிவும் அனுதாபமும் ஏற்படக் காரணமாயிருந்தது. எழுபதுகளின் பின்னர் நடைமுறைக்கு வந்த தரப்படுத்தலினால் தான் மட்டுமன்றி தமிழ் இளைஞர்கள் எல்லோருமே பாதிக்கப்பட்டதை உணர்ந்து கொண்டார். கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதற்கென அந்தக்காலங்களில் வல்வையில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் மேற்கொண்ட அடக்குமுறைகளை நேரில் கண்டார். நல்ல சுபாவம் கொண்ட அவரை இராணுவத்தினரின் அடக்குமுறை மற்றும் இதர சம்பவங்கள் பாதிப்பை ஏற்படுத்தியது. இவற்றை ஆயுதப் போரட்டம் ஒன்றின் மூலமே மேற்கொள்ள முடியும் என்ற கருத்தோடு தனது 16 வது வயதில் 1970ம் வருடம் எழு நண்பர்களுடன் சேர்ந்து பெயரில்லாத இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். தலைமறைவாக தீவிரவாத இயக்கம் ஒன்றை ஆரம்பித்த போது இவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது நண்பர்களும் தேடப்படும் நபர்கள் ஆனார்கள். இவர்களைத் தேடி பாதுகாப்புப் படையினர் பலரது வீடுகளுக்குச் செல்லும் சமயங்களில் இவர்களுடைய புகைப்படங் கள் உள்ளனவா? என்று புகைப்பட அல்பங் களைத் துருவித் துருவி ஆராய்ந்ததை மறந்துவிட முடியாது. இன்று தலைவர் பிரபா கரன் அவர்களின் புகைப்படங்கள் வெளி வராத நாளேடுகள், சஞ்சிகைகள் இல்லை என்றே சொல்லாம்.

1971 இல் வீட்டை விட்டு வெளியேறி தமிழ் மாணவர் பேரவை சத்தியசீலனோடு இணைந்து கொண்டார். ஆனால் தமிழ் மாணவர் பேரவை கொள்கை வழியில் நடந்துகொள்ளத் தவறியதால் அதிருப்தி யுற்றார். இச்சந்தர்ப்பத்தில் சத்தியசீலன் தலைமறைவாகிப் பின்னர் கைதுசெய்யப் பட்டமையால் பொலிசாரின் பார்வையிலிருந்து தப்பி 1973 ல் தமிழகம் சென்றார். அங்கு மிகுந்த உற்சாகத்துடன் ‘புதிய தமிழ்ப் புலிகள்‘ இயக்கத்தை ஆரம்பித்தார். கடந்த காலங்களில் உருவான அமைப்புக்களின் அழிவுக்கான காரணங்களை அறிந்து அதற் கேற்ப உறுதி, ஒழுக்கம், கட்டுப்பாடு என்ப வற்றை கடுமையாக அமுல்படுத்தினார். 1974ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் திகதி யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற தமிழராய்ச்சி மகா நாட்டில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை தமிழ் இளைஞர்கள் மத்தியில் விடுதலைப் போராட்டத்தின் தீவிரத்தை வளர்த்தது.

1976ம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி வவுனியா பூந்தோட்டம் என்னும் இடத்தில் உள்ள முகாமில் வைத்து‘ புதிய தமிழ் புலி கள்‘ என்ற அமைப்பு ‘தமிழீழ விடுதலைப் புலிகள்‘ எனப் பெயர்மாற்றம் பெற்றது. 1977ம் ஆண்டு புலிகள் இயக்கக் கொடியில் இருந்த எழுத்துக்கள் நீக்கப்பட்டன. புல னாய்வில் ஈடுபட்டிருந்த தமிழ்ப் பொலிசார் மீது தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகள் 1981ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13ம்திகதி இராணுவத்தினர் மீது முதலாவது தாக்கு தலை கொடுத்தனர்.

புலிகள் தடைச்சட்டம் பயங்கரவாத தடைச்சட்டம் யாழ் குடாநாட்டில் பயங்கர வாத தடைச்சட்டம் என்பன பிரகடனப்படுத் தப்பட்டு இராணுவ அடக்குமுறைகள் கட்ட விழ்த்து விடப்பட்டன. தலைவர் தனது தோழர்களுடன் வன்னி சென்று இயக்கத் தைப் படிப்படியாக விரிவாக்கம் செய்வதில் தீவிரமாகச் செயற்பட்டார். 1983ம் ஆண்டு கறுப்பு ஜுலையைத் தொடர்ந்து தீவிரவாதத் தினால் இளைஞர் குழாம் ஈர்க்கப்பட்ட போதி லும் ஆளணியைப் பெருக்குவதில் ஆர்வம் காட்டாது இறுக்கமான கட்டுக்கோப்பான இயக்கமாகத் தமது அமைப்பை வழிநடத்தி னார்.

1983ம் ஆண்டினையடுத்து யாழ்குடா நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்கள் படிப் படியாக முடக்கப்பட்டதுடன் இராணுவத் தினரும் முகாம்களை விட்டு வெளியேறாது தடுக்கப்பட்டனர். 1987ல் நடைபெற்ற வடம ராட்சி ஒபரேசன் லிபரேசன் புலிகளுக்குச் சவாலாக அமைந்தாலும் சுதாகரித்துக் கொண்டனர். இந்திய அமைதிகாக்கும் படை யினராலும் பின்னர் பிரேமதாசா அரசாங்கம் சந்திரிக்கா அரசாங்கம் போன்றவற்றினால் கொடுக்கப்பட்ட நெருக்கடிகளிலிருந்து இயக்கத்தை வழிநடத்தி இன்று பலம் மிக்க மரபுப் படையணியாக விடுதலைப்புலிகளை பிரபாகரன் அவர்கள் வழிநடத்தி தமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமபலத்தைப் பேணி இப்போது சமாதான நடவடிக்கை மூலம் அரசியல் தீர்வு காண சிங்கள தேசத்திற்கு வாய்ப்பளித்திருக்கின் றார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்குப் பின் இந்தியாவின் அப்போதைய இலங்கைத் தூதுவர் பூரி அவர்கள் விசேட உலங்கு வானூர்தியில் வந்து தமிழீழத் தேசியத் தலை வரையும் அவரது ஆலோசனைக் குழுவின ரையும் இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்களிடம் அழைத்துச் சென்று இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு சம்மதிக்கும்படி பல வந்தப்படுத்தினார். அதனை மறுத்த தலைவர் பிரபாகரனை தனிமையில் வீட்டுக்காவலில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் வைத்தார். லிபரேசன் ஒப்பரேசன் சமயம் இடம்பெயர்ந்து ஆவரங்கால் புத்தூர் போன்ற பகுதிகளில் வசித்த வடமராட்சி மக்களும் ஏனையோரும் சேர்ந்து பலாலி, யாழ் வீதி, அச்சுவேலி, ராஜவீதி என்பனவற்றை முற்று கையிட்டனர். தலைவர் பிரபாகரனை விடு தலை செய்யாமல் இந்திய இராணுவத் தினரை நகரவிடமாட்டோமென உறுதியாக நின்றனர். உயரதிகாரிகள் வந்து பேச்சு வார்த்தை நடத்தியும் கூட மறியல் செய்தோர் அவ்விடத்தை விட்டு நகரவேயில்லை. இறுதி யில் தலைவர் விடுதலையான செய்தி உறுதியாகக் கிடைக்கப்பெற்ற பின்னரே மக்கள் தமது மறியல் போராட்டத்தைக் கை விட்டுச் சென்றனர்.

இந்திய அமைதிகாக்கும் படையினர் உட்பட சிறிலங்கா புலனாய்வுத் துறையும் முப்படையும் இணைந்து பலவருடங்களாகத் தொடர்ந்து லட்சக் கணக்கான வீரர்களைக் கொண்டும் பலகோடிக்கணக்கான ரூபா பணத்தை விரயம் செய்தும் தமிழீழ தேசியத் தலைவரை அவர்களால் பிடிக்கமுடியவில்லை. மாறாக அவரைப்பிடிக்க முயன்றவர்கள் அழிக்க முயன்றவர்கள் விட்டில் பூச்சிகள் போல் அழிக்கப்பட்டமை விந்தையானது, வரலாறானது.

ஈழத்தமிழர் வாழும் பிரதேசங்களில் வன்னி நாடே இறுதிவரை மண்ணின் சுதந் திரத்தைக் கட்டிக் காத்துள்ளது. வன்னியைச் சில காலம் ஆண்டவர்கள் கூட நிம்மதியாக ஆட்சி புரிந்ததுமில்லை, வன்னியரும் சும்மா அடங்கியிருந்தது மில்லை. வன்னி மன்னன் பண்டாரவன்னியன் ஆட்சிக்குப் பின்னர் இழந்து விட்ட ஆட்சி உரிமையை தமிழ் இனம் பிரபாகரன் ஆட்சிக் காலத்திலேயே மீண்டும் நிலைநாட்டும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்த மன்னனுக்குப் பின்னால் உருவெடுத்த தமிழ்த் தலைவர்களில் பிரபா கரனே எந்த அரசாங்கங்களுக்கும் கட்டுப் படாமல் தனித்துவத்துடன், தன்மானத்துடன் சிற்றரசு நடத்தும் மன்னனாகத் திகழ்கின் றார். ஆயினும் பிரபாகரனை அழித்துவிட்டு வன்னி இராச்சியத்தைக் கைப்பற்ற காலத் துக்கு காலம் வன்னி நிலப்பரப்பு மீது பல பாரிய படையெடுப்புக்கள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் பிரபாகரன் உறுதி குலைய வில்லை. தடம்புரளவில்லை. பலமான தமிழ்ப் படை ஒன்றை உருவாக்கி வன்னியை ஆழ வந்த எதிரிப்படைகளைக் கொன்றொழித்து வன்னி மண் புகழ் காத்து நிற்கின்றார்.

தலைவர் பிரபாகரன் சீராக எந்தவொரு இராணுவ அரசியல் புலனாய்வுக் கல்லூரி களிலாவது கல்வி கற்றதாகத் தகவல் இல்லை. ஆனால் அவர் எடுத்த எந்தவொரு முடிவும், நகர்த்திய காயும், தீட்டிய திட்டமும் பிசு பிசுத்துப் போனதாக வரலாறு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்தில் வெளியான நாளேடு ஒன்று 'அமெரிக்காவுக்கு இலங்கை இராணுவம் ஆசானாகிய பெருமை புலிகளுக்கே' என்கின்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவம் பல வருடங்களாகப் போரிட்டதில் கெரில்லா எதிர்ப்புப் போர் குறித்த பயிற்சி இலங்கை இராணுவத்திற்கு நிறையவே உள்ளபடியால் தமது நாட்டுப் படைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கெரில்லாத் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கு இலங்கை இராணுவத்திடமிருந்து அமெரிக்க இராணுவம் பெறப் போகும் பயிற்சி மிகவும் உதவியாக இருக்குமென இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளாரென அக்கட்டுரையில் விபரிக்கப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தை இன்று இவ்வளவுக்காயினும் பயிற்றுவித்திருப்பது விடுதலைப்புலிகளே. புலிகளின் எதிர்ப்பைச் சமன் செய்யவெனத் தம்மை செப்பனிட்ட இலங்கை இராணுவம் இன்று அமெரிக்காவுக்கு ஆசானாக முன் வந்துள்ளது. இவ்வளவுக்கும் புலிகளை இராணுவ ரீதியில் நெறிப்படுத்தி வளப்படுத்தும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் அவர் படைகளும், தளபதிகளும் என அக்கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆயிரம் இளைஞர்களை வளைத்து எடுத்து துணிவான தேசத்தின் பலமான படை ஒன்றை உருவாக்கி எவருமே புரியாத விதமாகப் பெரும் சாதனை படைத்தவர் பிரபாகரன்.

நாம் சிங்களவர்களின் உரிமையைக் கேட்கவுமில்லை, தட்டிப்பறிக்கவுமில்லை நமது உரிமைகளை மறுத்தாலோ தமிழர்களுக்குத் துரோகம் இழைத்தாலோ அவர்களை அழிப்பதற்கு நாம் தயங்க மாட்டோம். நீதியும், தர்மமும் தமிழர்கள் பக்கமிருப்பதால் வெற்றி நிச்சயம் என்பதில் உறுதியாக நிற்கிறார் பிரபாகரன். தலைவர் பிரபாகரனின் கொள்கைப் பற்று, விடுதலை வேட்கை, தன்னம்பிக்கை, துணிச்சல், புலனாய்வுத் திறன், எதிரிகளையும் நண்பர்களையும் பிரித்தறியும் ஆற்றல், போராளிகளை அரவணைத்துச் செல்லும் பரிவு போன்றன விடுதலைப் புலிகள் மக்களுக்குப் பலம் சேர்க்கும் அணியாக விரிவாக்கம் பெறுவதற்கான காரணங்களாகும்.

போராட்ட வரலாற்றில் வல்வையின் மைந்தர்கள் வரிசையில் தலைவர் பிரபாகரனுக்கு அடுத்து இடம் பெற்றவர்கள் இந்திய அரசின் வஞ்சகச் செயலால் சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் வீரமரபிற்கேற்ப தம்மைத் தாமே அழித்துக் கொண்ட தளபதி கேணல் கிட்டு என அழைக்கப்படும் சதாசிவம் கிருஷ்ணகுமாரும், ஸ்ரீலங்கா அரசினதும் இந்திய அரசினதும் கூட்டுச் சதியால் எமது கடலிலே கைதாகி தமிழர் தம் வீரத்தையும், மானத்தையும் உலகறியச்செய்வதற்காக சயனைற் அருந்தி வீரச்சாவைத் தழுவிய லெப் கேணல் குமரப்பாவும் 1983 ஆடியில் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன், நடேசதாசன் ஆகியோராகும். கேணல் கிட்டு விடுதலைப் புலிகளின் முதுபெரும் தளபதியும், மத்தியகுழு உறுப்பினரும், சர்வதேச தலைமைச் செயலகப் பொறுப்பாளருமாக இருந்தார். யாழ் மாவட்ட தளபதியாகச் செயற்பட்ட காலத்திலேயே யாழ்ப்பாணத்தை முதற் தடவையாக விடுதலைப்புலிகள் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். சிங்களவர் தமிழர் பிரச்சனைக்கு அமைதி வழியில் தீர்வு காணும் நோக்குடன் 'குவேக் கர்' என்ற சர்வதேச நிறுவனம் முன்னெடுத்த சமரச முயற்சி தொடர்பாகத் தலைவர் பிரபாகரனுடன் கலந்து பேசி சமாதான முயற் சியைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காகத் தாயகம் நோக்கி வந்து கொண்டிருந்த போது சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கப்பல்களினால் வழிமறிக்கப்பட்டு சரண டையுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட போது இந்தி யாவின் மிரட்டலுக்கு அடி பணிய மறுத்து தன்னோடு வந்த ஒன்பது தோழர்களுடன் கப்பலைத் தகர்த்து வீரமரணத்தை அணைத் துக் கொண்டவர். 1979 இல் இயக்கத்தில் இணைந்து கொண்ட கிட்டு 1983 சித்திரை மாதம் இயக்கத்தில் தாக்குதல் பிரிவின் இரண்டாவது பொறுப்பாளராகச் சென்றார். அதே ஆண்டு பிற்பகுதியில் இந்திய அரசு வழங்கிய இராணுவப் பயிற்சிக் குழுவுக்கும் இரண்டாவது பொறுப்பாளராகச் சென்றார். 1985ல் யாழ்ப்பாண மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் 1987ல் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்த சமயம் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது தன்னை விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரதம் மேற்கொண்ட வேளை அவரது போராட்டத்திற்கு அடிபணிந்து மதிப் பளித்து இந்திய அரசு விடுதலை செய்தது. கிட்டு விடுதலைப்புலிகளின் சர்வசே விவ காரங்களுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப் பட்ட பின்னர் புலிகளின் ஊடகத்துறையில் பாரிய எழுச்சி ஏற்படத் தொடங்கியது. லண்டனில், பிரான்சில், கனடாவில் நோர்வே யில் வெவ்வேறு பெயர்களில் சஞ்சிகைகள் வெளியிட்டு வைக்கப்பட்டன. ஆங்கிலம், பிரெஞ்சு, லத்தீன், நொரியன் டேனிஷ் போன்ற சர்வதேச மொழிகளில் விடுதலைப் போராட்டம் பற்றிய துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டார். சுவிற்சலாந்து கனடா ஆகிய நாடுகளில் 'ஈழநாதம்' எனும் உள்ளூர் வானொலி சேவையையும் ஆரம்பித்தார். விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல துய ரச் சம்பவங்களைச் சந்தித்தவற்றில் சிகரம் வைத்தாற் போல் கேணல் கிட்டுவின் வீர காவியமான சம்பவம் அமைந்து விட்டது.

**வாஸ்கொடகாமா, கொலம்பஸ் போன்ற மாவீரர்களின் பயணம் அமெரிக்கக் கண்டங்களைக் கண்டுபிடிக்க உதவியது. இன்று அமெரிக்காவில் ராஜாங்கம் நடத்தும் அதிபர்களுக்கு வழி சமைத் தவர்கள் வாஸ்கொடகாமா, கொலம்பஸ் போன்ற தியாகசீலர்கள் - மேதாவிகள். அந்த மேதாவிகளின் நாமங்களை இன்றைய உலகம் மறந்து விட்டது. ஆனால் வரலாறு மறைக்கவில்லை. மறந்து விடவுமில்லை. அதுபோன்று இந்த வல்வெட்டித்துறை மேஸ்திரியார்கள், கப்பலோட்டிகள் வரலாறு மாகும்.**

**ஈ.கே. ராஜகோபால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் கட்டும் கலை

இலங்கையின் கைதேர்ந்த மாலுமிகளையும் கப்பல் கட்டும் மேஸ்திரிமாரையும் வட இலங்கையில் தான் காணலாமென்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு விடய மாகும். இத்துறைகளில் ஏனைய ஊரவர்களைவிட வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை வாசிகளே முன்னணி வகித்தார்கள் என்பது பலரது கூற்றாகும். கலம், மரக்கலம், நாவாய், சலங்கு, வங்கம், உரு என்ற பதங்களை விடக் கப்பல் என்ற பதத்தையே நாம் பெரும்பாலும் பயன்படுத்தி வருகிறோம். ரோமாபுரியுடனான வர்த்தகம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து Sangara, Sangadam எனப்படும் ஆழம் குறைந்த கடல் அமைந்துள்ள துறை முகங் களுடன் போக்குவரத்துச் செய்யும் சிறியரகக் கப்பல்களும் Kolondiphonta எனப்படும் பாரிய கப்பல்களும் இன்றும் வல்வெட்டித்துறையிலும், ஊர்காவற்றுறையிலுமே கட்டப்பட்டு வருகிறதென புராதன யாழ்ப்பாணம்' என்னும் நூலினை எழுதிய முதலியார் சீ. இராசநாயகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மாகடலில் வணிகம் செய்வதற்காகக் கட்டப்பட்ட கப்பல்கள் வட இலங்கைத் துறைமுக நகரங்களில் கட்டப்பட்டன. இத்தொழில் தற்காலம் கைவிடப்பட்டாலும் கூட வல்வெட்டித்துறையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன வருகின்றன என்பதற்கு திரு. S.K. ஞானமுத்து என்பவர் 1946ம் வருடம் Times நாளேட்டில் குறிப் பிட்டுள்ளது அதனை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

எப்பொழுது வடபகுதியில் கப்பல் கட்டும் தொழில் ஆரம்பிக்கப்பட்டது? அத்தொழில் தொடர்ச்சியாக நிலை பெற்று வளர்ந்து வந்ததா? இதன் எதிர்காலம் என்ன? கப்பல் கட்டும் தொழில் செய்பவர் எப்பொழுது இத்தொழில் பயிற்சி, திறமை என்பனவற்றைப் பெற்றனர்? ஒரு பெரும் கப்பலைக் கட்ட எவ்வளவு செலவாகும்? எவ்வளவு காலத்தில் கட்டி முடிக்கப் படும்? எந்த வகையான மரங்கள் கப்பல் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டன? எந்தெந்த தூர தேசத்தில் உள்ள துறைமுகங்களுக்கு அவை பிரயாணம் செய்தன? எவ்வகையான சாமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஏற்றிச் சென்றன என்ற விபரங்களுக்குப் பதில் அறிய நான் வல்வெட்டித்துறைக்குச் சென்றேன் என்று திரு. ஞானமுத்து அவர்கள் குறிப்பிட்டுள்ளார். கப்பல் கட்டும் வாடியை நோக்கிச்சென்ற சமயம் புதிய கப்பல் ஒன்றும் கட்டப்படவில்லை. ஒரு சிறிய கப்பலுக்குத் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுக் கொண்டிருந்தன. அவ்விடம் திருத்த வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்த சின்னத்தம்பி மேத்திரியார் என அழைக்கப் படும் குமாரசாமி மேத்திரியார் என்பவரைச் சந்திக்கச் கூடியதாக இருந்தது. எழுபது வயதுடைய இவர் தான் கப்பல் கட்டும் பரம்பரையில் வந்தவரெனவும் தனது பரம்பரையினர் நூற்றி ஐம்பது ஆண்டுகளாக ஈடுபட்டு வந்திருக்கிறார்களென்றும் கூறியதோடு தான் இத்தொழிலில் ஐம்பது வருடங்களாக ஈடு பட்டு வருவதாகவும் கூறினார். டச்சுக்காரர் காலத்தில் தனது மூதாதையர் ஒருவர் கப்பல் கட்டுவோரை இந்தியாவிலிருந்து வரவழைத்ததாகவும் அவர்களிடமிருந்து தமது மூதாதையர் பயின்று சந்ததி சந்ததியாக தமக்கு அப்பயிற்சி கிடைத்ததாயும் கூறினார். புத்தகங்கள் மூலமாகவோ அல்லது சில விதிகளின் பிரகாரமோ இக்கலையைக் கற்க முடியாது. பயிற்சியாளராகச் சேர்ந்தே இக்கலையைக் கற்க முடியுமெனவும் கூறினார்.

அப் பத்திரிகையில் மேலும் திரு. ஞானமுத்து அவர்கள் குறிப்பிட்டதாவது

கப்பல் கட்டும் பணியிலுள்ளவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும். ஆனால் எப்பொழுதும் வேலை கிடைக்காது. கப்பல் வாணிபம் நலியத் தொடங்கி விட்ட வல்வெட்டித்துறை மட்டுமே கப்பல் கட்டும் தொழிலை இன்னும் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது. யந்திரப்படகுகளின் வருகையால் பாய்மரக் கப்பல்களின் தேவை குறைந்து விட்டது. இப்பழங்கலை அழியக் கூடிய நிலையில் உள்ளது. வல்வெட்டித்துறையின் கப்பல் கட்டும் வர்த்தகம் நூற்றியைம்பது வருட காலம் மட்டும் பழமை வாய்ந்தது என்பதனை அறிந்து நான் ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்தேன். ஊர்காவற்றுறை, பருத்தித் துறை சரித்திரம் மிகவும் பழமையானதாகக் குறிக்கப்படுகின்றது. உண்மையான விபரம் யாதெனில் ஐரோப்பியரின் வருகைக்கு முன்பு பெருமளவில் கப்பல் கட்டும் தொழில் விரிவடைந்திருந்தது. அவர்களின் வருகையால் அழிக்கப்பட்டது. ஆனால் சமீபகாலங்களில் அத்தொழிலுக்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டது. வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் மிகவும் கூர்மையான கிரகிக்கும் தன்மையுள்ளவர்கள். அவர்கள் கட்டிய கப்பல்கள் இயற்கையின் சீற்றங்களுக்கு ஈடு கொடுத்து இந்து சமுத்திரப் பிரதேசத்தில் தமது கடல் வணிகத்தை நடத்தின. நான் வல்வெட்டித்துறையில் நின்ற சமயம் கரையிலிருந்து நூறு யார் தொலைவில் ஒரு நடுத்தரக் கப்பல் நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தது. தூரத்தில் வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட பெரிய கப்பல் ஒன்று மூன்று பாய்களையும் விரித்து வல்வைத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. இவ்வாறு அந் நாளேட்டில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தென் இந்தியாவைச் சேர்ந்த சாத்தான் குளம் அ. இராகவன் என்பவர் எமது கப்பல் கட்டும் மேத்திரிமாரின் கைவண்ணத்தைப் பின்வருமாறு விமர்சிக்கின்றார்.

முற்காலத்தில் தமிழர் கட்டிய கப்பல் ஒன்றைக்கூட இன்று காண முடியவில்லை. பெரிய கப்பல்களைக் கட்டும் கம்மியர் ஓடாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபில் தோன்றிய யாழ்ப்பாணத் தமிழர் ஜி. சண்முகப்பிள்ளை மேத்திரியார் 1936ம் வருடம் கட்டிய 'பர்வதபத்தினி' என்னும் கப்பல் நமக்கு நல்ல எடுத்துக் காட்டாகும். இக் கப்பல் இன்றும் ஆயிரக்கணக்கான கல் தொலைவுக்கு சரக்கு ஏற்றிக்கொண்டு போய் வருகிறது. பண்டைக்காலத்தில் கட்டிய கப்பலைப் போன்று உறுதியும் அழகும் வாய்ந்ததாக உள்ளது எனத் தான் எழுதிய 'நம் நாட்டுக் கப்பற்கலை' என்னும் நூலில் அவர் தெரிவித்திருக்கின்றார். ஏனைய பிற இடங்களில் செய்யப்பட்ட கப்பல்கள் பற்றிய விபரங்கள் ஒன்றையும் அவர் குறிப்பிட வில்லை.

திரு. அ. இராகவன் அவர்கள் குறிப் பிட்ட யாழ்ப்பாணத்தமிழர் ஜி. சண்முகப் பிள்ளை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஞானமூர்த்தி சண்முகம்பிள்ளை என்பவ ராகும். இவர் முந்நாள் நகரபிதா ச. ஞான மூர்த்தி அவர்களின் தந்தையாகும். பர்வத பத்தினி என்னும் கப்பலைப் பற்றி இலங்கை அரசினரால் 1958ம் வருடம் தைமாதம் வெளி யிடப்பட்ட 'ஸ்ரீலங்கா' என்னும் கைநூலில் கப்பலின் புகைப்படம் வெளியிடப்பட்டதோடு பின்வரும் குறிப்புக்களும் தெரிவிக்கப் பட்டுள்ளன. வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சண்முகம்பிள்ளை அவர்களால் ஆரம்பிக் கப்பட்டு அவரது மகன் பாலசுப்பிரமணியம் என்பவரால் கட்டி முடிக்கப்பட்ட 'பர்வத பத்தினி' என்னும் கப்பல் தனது கன்னிப் பயணத்தின் போது' என்பதாகும். இந்த 'பர்வத பத்தினி' என்னும் பாய்க்கப்பலே வல் வெட்டித்துறையில் கடைசியாகக் கட்டப்பட்ட கப்பலாகும்.

இந்திய வர்த்தகம் செய்யும் முதலாளி மார்கள் இவ்வூரிலுள்ள கப்பல் கட்டும் மேத்திரிமார்களை அழைப்பித்து கப்பல் களைக் கட்டுவித்து அவர்களுக்கு சீர் வரிசை களை வழங்கி அனுப்பியுள்ளார்கள். தொண் டைமானாறு மகாவித்தியாலய ஸ்தாபகர் திரு. சி. வீரகத்திப்பிள்ளை அவர்கள் வசம் அமிது. நித்தியானந்த கல்யாணி, சிவசுப்பிர மணிய புரவி, வள்ளிநாயகி, கோக்கநாடா, பேரானந்தவல்லி, ஆதிபூரணி, தெய்வநாயகி போன்ற கப்பல்கள் இருந்தன. இதில் சிவசுப்பிரமணிய புரவி என்ற கப்பலை இக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள சின்னத்தம்பி மேத்திரியார் என அழைக்கப் படும் குமாரசாமி மேத்திரியார் என்பவர் கட்டிக் கொடுத்துள்ளார். இக்கப்பல் 420 தொன் எடையுள்ளதும் 8000 மூடைகளை ஏற்றிச் செல்லக்கூடியதுமாகும். இக் கப்பல் களைப் போன்ற பாரிய கப்பல் இலங்கை யிலோ இந்தியாவிலோ இருந்ததில்லை என்று சொல்லப்படுகின்றது. இந்தச் சின்னத் தம்பி மேத்தியாரால் கட்டப்பட்ட இதர கப்பல்கள் சிவகங்காபுரவி, நாகரிகத்துல்லா, என்பனவாகும். சின்னத்தம்பி மேத்திரியாரின் புதல்வன் ஆறுமுகம் மேத்திரியார், இவரது மகன்களான பழனிவேல், சண்முகவேல், ஆகியோர்களும் கப்பல்கள் கட்டும் மேத்திரி மார்களாக விளங்கியவர்கள். சமீபகாலம் வரை இவர்களினால் வத்தைகளும், சிறிய கப்பல்களும் (யந்திரத்தினால் இயக்கப்படு பவை) கட்டப்பட்டன. சி. வீரகத்திப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான இன்னொரு கப்பலான தெய்வநாயகியைக் கட்டியவர் செல்லத்துரைசாமி என அழைக்கப்படும் ஞா. சண்முகம்பிள்ளை மேத்திரியாராகும். இச் சண்முகம்பிள்ளை மேத்திரியாரால் கட்டப்பட்ட இன்னொரு கப்பல் 'ஆதிலட்சுமி' என்பதாகும். இவை இரண்டும் 1929ம் வருடமளவில் கட்டப்பட்ட கப்பல்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல் கட்டும் தொழிலில் வல்வையில் இருபத்தி நான்கு பேரளவில் கைதேர்ந்த கலைஞர்களாக விளங்கி வந்துள்ளார்கள். அவர்களில் அமெரிக்க வர்த்தகரான றொபின்சன் என்பவரால் விலைக்கு வாங்கப்பட்ட 'அன்னபூரணி' என்ற கப்பலைக் கட்டிய சுந்தரமேத்திரியார் மேலே குறிப்பிடப்பட்ட சண்முகம்பிள்ளை மேத்திரியாரின் புதல்வனான பர்வபத்தினி, சிவகாங்கேயபுரவி திருநிலைநாயகி என்றும் கப்பல்களைக் கட்டிய பாலசுப்பிரமணியம் மேத்திரியார், ஆனந்த பூரணி என்னும் கப்பலைக் கட்டிய வடிவேலு மேத்திரியார், போன்றோர் குறிப்பிடக் கூடியவர்களில் சிலராகும். இவர்களுள் வடிவேலு மேத்திரியார் என்பவர் இந்திய முதலாளிமார்களினால் அழைக்கப்பட்டு கப்பல் கட்டுவித்து சீர்வரிசை வழங்கப்பட்டவர்களில் ஒருவராகும்.

பிரான்ஸ் நாட்டிற்கு அடுத்தபடியாக அகில உலகிலும் கப்பல் கட்டும் கலையில் அதுவும் அந்தக் கலை நுட்பத்தினை வியக்கும் வண்ணம் செய்பவர்கள் வல்வெட்டித்துறை மேத்திரிமார்கள் தான் என்பதனை உணர்ந்து கொண்டதனால் தான் அன்றோ அமெரிக்க கோடீஸ்வரரான றொபின்சன் அவர்கள் வல்வையில் கட்டப்பட்ட 'அன்னபூரணி' யை விலைகொடுத்து வாங்கித் தனது நாட்டுக்குக் கொண்டு சென்றார். அமெரிக்கத்துறை முகமான 'குளோசெஸ்டர்' துறைமுகத்தை இக்கப்பல் சென்றடைந்ததும் அதன் உரிமையாளர் Boston Globe என்ற நாளேட்டுக்கு வழங்கிய செவ்வியில் இக்கப்பல் நூறு வருடமளவில் நீடித்திருக்கக் கூடியதொன்று எனக் குறிப்பட்டதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும். இந்த 'அன்னபூரணி' என்ற கப்பலை எமது நினைவுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கோடு 1.1.1974ல் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் அதன் மாதிரி ஒன்று கட்டப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு சென்றதையும் நினைவு கூரவேண்டும்.

திரு.வெங்கடாசலபிள்ளை அவர்கள் கடலினுள் மூழ்கிய நிலையிலிருந்து மீட்டெடுத்த Atlantic King என்னும் பாய்க் கப்பல் Sketch என அழைக்கப்படும் ரகத்தைச் சேர்ந்தனவாயும் வங்காள விரிகுடாக் கடலில் பயணம் செய்வதற்கு ஏற்றதென் பதையும் கண்டுகொண்டு அந்த வகைக் கப்பல்களையும் வல்வெட்டித்துறை மேத்திரியார்கள் செய்யத் தொடங்கினார்கள். வல்வெட்டித்துறையில் இரண்டு கப்பல் கட்டும் தளங்கள் இருந்தன. ஒன்று சிவன் கோயிலுக்குச் சொந்தமான 'வாடி' என அழைக்கப்படும் இடத்தில் பெரிய கப்பல் கட்டும் தளமும் கொத்தியால் என்னுமிடத்தில் சிறிய கப்பல் கட்டும் தளமும் அமைந்திருந்தன. இவற்றைவிட 1955ம் வருடமளவில் ஊரிக்காட்டில் முந்நாள் நகரசபைத் தலைவர் க. சபாரத்தினம் அவர்களால் கப்பல் கட்டும் தளமொன்று அமைக்கப்பட்டு சிறியரக வள்ளங்கள் கட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

உலகில் எப்பாகத்திலாவது கட்டி முடிக்கப்பட்ட கப்பல்கள் முழு நாடு களாலும் அங்கீகரிக்கப்பட்ட 'லோயிட்ஸ்' எனப்படும் உலக ஸ்தாபனத்தில் தான் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட கப்பல்கள் யாவும் அந்தக் காலத்தில் அப்படியான நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

British Admiralty என்னும் நிறுவனத்தினரால் வெளியிடப்படும் "Bay of Bengal Pilot என்னும் நூலில் வல்வெட்டித் துறையை ஒரு கப்பல் கட்டும் தளமாகவும் விசேட துறைமுகமாகவும் கடலோடிகளின் வதிவிடமாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். இந் நூலின் பிரதிகளை Shipping அலுவலகத் திலும், துறைமுக அதிகார சபையிலும், சுங்க இலாக்காவிலும் காணமுடியும். சுங்க இலாகா வினால் பேணப்படும் பதிவேடுகளில் இலங்கையில் கட்டப்பட்டு யாழ் துறை முகத்தில் பதியப்பட்ட கப்பல்களில் ஐம்பது தொன் எடைக்கு மேற்பட்டவை பெரும்பா லானவை வல்வெட்டித்துறை மேத்திரிமார் களினால் கட்டப்பட்டவை என்றும் தெரிய வருகிறது. இலங்கையில் மட்டுமன்றி இந்தி யத் துறைமுகங்களான காக்கநாடா, மசூலிப் பட்டம், கல்கத்தா, ரங்கூன் போன்றவற்றில் பேணப்பட்டு வரும் பதிவேடுகளில் பதியப் பட்ட கப்பல்களில் ஒரு குறிப்பிடக்கூடியளவு கப்பல்கள் வல்வெட்டித்துறையில் கட்டப் பட்டனவாகும்.

1848ம் வருடம் மார்ச் மாதம் Sir Emerson Tennent என்பவர் வல்வைக்கு விஜயம் செய்த சமயம் எமது கப்பல் கட்டும் மேத்திரிமார்களைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார். "The Tamil Ship Builders of this little place Being amongst the most Successful in Ceylon' என்பதாகும்.

ஒரு கப்பலின் அளவு அதன் கொள் ளளவைப் பொறுத்தே அமையும். 4000 மூடை கள் ஏற்றக்கூடியவை. 5000 மூடைகள் ஏற்றக் கூடியவை, 6000, 7000 ஏற்றக்கூடியவை 8000 மூடைகள் ஏற்றக்கூடியவை எனப் பலதரப் பட்ட கப்பல்கள் கட்டப்பட்டு வந்தன. 8000 மூடைகள் வரை ஏற்றிச் செல்லக் கூடிய பெரும் கப்பல்கள் மூன்று பாய்மரங்களைக் கொண்டதாயுமிருக்கும். சாதாரண காலங் களில் 1935 - 40 களில் அதன் பெறுமானம் ஒரு லட்சம் ரூபாவாகும். சிறிய கப்பல்கள் இரண்டு பாய் மரங்களைக் கொண்டதாக இருக்கும். கப்பல் ஒன்றினைக் கட்டிமுடிக்க ஒருவருடமளவில் செல்லும். ஒரு கப்பலானது இருபத்திஐந்து வருடங்களுக்கு மேல் திறமை யாகச் சேவையாற்றக் கூடியதாக இருக்கும். காலத்துக்கு காலம் தகுந்த திருத்த வேலை களை உரிய நேரத்தில் செய்து வந்தால் கப்பல்களின் சேவைக் காலத்தை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு கப்பலின் கட்டமைப்பானது மனித எலும்புக் கூட்டுக்குச் சமமானது. மனித முதுகெலும்புக்குச் சமமான 'ஏரா' எனப்படும் அடிச்சட்டம் முதலில் ஓடப்படும். இதனை 'ஏரா ஓடுதல்' என்பர். நல்ல நாள் நேரம் என்பன பார்த்து சமயச் சடங்கு களுடன் மேத்திரிமார் ஓதும் சில மந்திரங் களுடன் இந்த நிகழ்வு இடம்பெறும். இந்த ஏரா என்பது இலுப்பை மரத்தில் செய்யப்பட்ட தாகும். இலுப்பை மரமானது உப்புத் தண்ணீ ரினை தாக்குப்பிடிக்க கூடியதொன்றாகும். இந்த ஏராவுடன் மனிதனின் விலா எலும்பை ஒத்த 'வங்கு கால்கள்' என்பன பிணைக்கப் படும். பெரும்பாலும் இந்த வங்குகால்கள் ஒரு யார் இடைவெளி விடப்பட்டு பிணைக்கப் படும். இந்த வங்கு கால்கள் வேம்பு அல்லது இலுப்பை மரத்தினால் ஆனவையாகும். கப்பலின் அணியம் (முன் பக்கம்) தொடக்கம் 'பிறகம்' (பின்பக்கம்) வரையிலான வங்கு கால்கள் பொருத்தப்பட்டு முடிந்ததும் 'மட்டம் சாத்துதல்' என்று சொல்லப்படும் மட்டப் பலகை அடித்துப் பொருத்தப்படும். அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை கப்பலின் மேல் தட்டும் பலகை களால் போடப்படும். இவற்றினைச் செய்து கொள்வதற்கு தேக்கம் பலகைகள் பாவிக்கப் படும். கப்பல் செய்வதற்கான தேக்கமரம் இந்தியா பர்மாவிலிருந்து கொண்டு வரப் பட்டும் சில சந்தர்ப்பங்களில் உள்ளூரில் இருந்தும் பெறப்பட்டும் உபயோகிக்கப் பட்டது. வேப்பமரம் இலுப்பை மரம், என்பன உள் நாட்டிலிருந்தே பெறப்பட்டன. கப்பலின் வெளிப்பகுதியில் நீர்மட்டத்துக்குக் கீழே உள்ள பகுதிக்கு செப்புத் தகடுகள் அடிக் கப்படும். அதன் முன்னர் ஒவ்வொரு பலகை யும் பொருத்தும் இடைவெளிக்கு 'கலப்பத்து' எனப்படும் தும்புகளினால் ஆக்கப்பட்ட கயிறு அடிக்கப்படும். சிறிய கப்பல்களாயின் கலப்பத்துப்புரி அடிப்பதுடன் கலப்பத்து மை அல்லது தார் பூசப்படும். பெரிய கப்பலாயின் மூன்று பாய்மரங்களைக் கொண்டிருக்கும். இந்தப் பாய்மரம் ஒவ்வொன்றும் மூன்று பகுதிகளாக நூறு அடிகள் வரை உயரமான தேக்க மரங்களைக் கொண்டு செய்யப்பட்ட வையாக இருக்கும்.

மூன்று பாய்மரங்களைக் கொண்ட பாரிய கப்பல்களில் முதலாவது மரம் திலிங் கத்து மரமென்றும் இரண்டாவது மரம் வடமர மென்றும் மூன்றாவது மரம் கலிமரமென்றும் சொல்லப்படும். இரண்டு பாய்மரங்களைக் கொண்ட கப்பல்களில் மூன்றாவது மரமான கலிமரம் இருக்கமாட்டாது. முதலாவது திலிங்கத்து மரத்தில் திலிங்கத்து, காவி, சவர், டவர், குவர், என ஐந்து பாய்கள் இருக் கும். இரண்டாவது வடமரத்தில் வடசேர், வடகாவி, வடசவர், வடடவர். வடகுவர் என ஐந்தும், மூன்றாவது கலிமரத்தில் கோசு, டாப்புசேர் என இரண்டு பாய்களும் இருக் கும். முதலாவது திலிங்கத்து மரத்துடன் திலிங்கத்து சவாய், சீப்பு, பிளஞ்சீப்பு, என மேலும் மூன்று பாய்கள் அணியத்துடன் சேர்த்து இணைக்கப்பட்டிருக்கும். நடுமர மான வடமரத்தில் மேலதிகமாக வடசவாய். பாடத்து சவாய் என இரண்டும் மூன்றாவது மரமான கலி மரத்தில் மேலதிகமாக கலிங்ச வாய், கலிஉப்பர்சவாய் என இரண்டு பாய் களும் பிறகத்துடன் இணைக் கப்பட்டி ருக்கும்.

இப்படியான பாய்கள், பாய்களைக் கட்டும் கயிறுகள், கப்பிகள், மற்றும் உபகர ணங்களைச் சேர்த்துக் கொண்டவுடன் கப்பல் உரிமையாளர்களுக்குக் கையளிக் கப்பட்டு ஒரு சுபவேளையில் கப்பல் அலங் கரிக்கப்பட்டு கடலில் இறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கப்பல் கட்டி முடிக்கப்பட்டு கடலில் இறக்கப்படுகின்றது

புதிதாகக் கப்பலொன்று செய்யப்பட்டுக் கடலில் இறக்கப்படும் போது தொழிலாளர்களால் பாடப்படும் கப்பல் பாட்டு.

சீர்பொருந்தும் வல்வைநகர் செல்வம் மிகு
குமரேசர் பொருந்தும் கப்பல் இசை மேனி நன்றாய்
ஆராய்ந்து பார் உலகில் கும்பமுனி பண்ணி தமிழ்
ஓதிடவே பாரமாமுனிதனை ஏடாகச் சேர்த்து
சீர்கொண்ட எழுத்தாணி நேரே பிடித்து செய்த
மாதம் சென்னி மறவோ மோ
வச்சிரத்தால் ஏராவும் ஏலை ஏலோ
வழங்குநாவல் பலகைகளும்
சித்திரத்தால் வாரிகளும்
சிறந்த தட்டுப் பலகைகளும்
உச்சிதமாகவே உலாந்தா மேல்தட்டும்
ஒப்பமாய் பீரங்கி வாசல் நிறுத்தி
பச்சை வைடூரியத்தால் நாற்கோலமிட்டு
பலவரிசைக் கொம்புகள் சின்னம் தொளிக்க ஏலை ஏலோ
அச்சமுள்ள அரம்பைமார் பேரின்ப
முழங்க நடமாட ஏலை ஏலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரி நாயகனார் நாள் முத்தம் கூற
அச்சமில்லா மாணிக்க கெங்கையில்
ஆரவாரத்துடன் ஏலை ஏலோ கப்பலை இறக்கும்
விருது நல்ல கொழுக் கொடியும்
வெண்கடம்பு மாலைகளும்
கருதுடனே வெள் ளை வட்டம் தான் போட்டு
விரைவாகக் கப்பல் தன்னில் அர்த்தமுள்ள
இராசா கோவலவர்களுடைய கப்பலுக்கு
ஆனதொரு நங்கூரம் பாய் மரங்கள்
தான் போட்டு விரைவாக விஸ்தரித்தார் ஏலை ஏலோ

உலக மகாயுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் நீராவிக் கப்பல்கள் மூலம் சரக்குகளைக் கொண்டு வருவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டமையினால் வல்வை வாசிகள் பாய்க்கப்பல் கட்டும் தொழிலைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும் பண்டைக் காலத்தில் கப்பல் கட்டும் தொழிலில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் ஆற்றிய பங்கு குறித்து ஆராய்வதற்காக அப்போதைய தகவல் கலாச்சார அமைச்சர் கௌரவ W. J. M லொக்குபண்டார அவர்கள் 1990 டிசம்பர் மாதமளவில் ஒரு மகாநாடு நடத்த ஏற்பாடு செய்திருந்தார். களனி பல்கலைக் கழக புதைபொருள் சம்பந்தமான பேராசிரியர் திரு. சேனக பண்டாரநாயக்கா அவர்கள் கப்பல் கட்டும் தொழிலில் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தோர் சிறப்பிடம் பெற்றிருந்தனர் எனக் கூறியுள்ளார். அரசாங்கம் வழக்கம் போல் ஒப்பந்தங்களை செய்துவிட்டு அதனை நடைமுறைப்படுத்தாமல் இடைநடுவில் கைவிட்டு விடுதல் போல் மகாநாட்டினைக் கூடிவிட்டு முடிந்த கையோடு கிடப்பில் போட்டு விட்டது எனக் கொள்ளல் வேண்டியுள்ளது. அரசாங்கம் கப்பல் கட்டும் கலையை ஊக்குவிக்க இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாக செய்திகளில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் ஓடிகள் (மாலுமிகள்)

கப்பல் கட்டும் கலையில் எவ்வாறு வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை மேஸ்திரி மார்கள் சிறந்து விளங்கினார்களோ அவ்வாறே கப்பல் ஓட்டுவதிலும் வட இலங்கையில் அதுவும் வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை கடலோடிகள் இலங்கையிலே முன்னணி வகித்த வர்களாகத் திகழ்ந்துள்ளார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

நீராவிக் கப்பல்கள் ஓடுவதற்கான பயிற்சியினைப் பெறுவதற்கு ஒருசில வருடங்களே போதுமானதாக இருப்பினும், பாய்க்கப்பலைச் செலுத்துவதற்கான பயிற்சியைப் பெற்றுத் தண்டயலாக நியமனம் பெற்றுக் கொள்வதற்குக் கூடிய காலம் தேவைப்படுவதோடு பயிற்சியின் சமயம் ஆபத்தான பணிகளை யும் செய்ய வேண்டியதாக இருக்கும். கப்பல்கள் நடுக்கடலில் செல்லும் சமயங்களில் புயலினாலோ, அலைகள் உயர எழுந்து இவ்வலை களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கப்பலை உருட்டி ஆட்டம் காண வைக்கும் சந்தர்ப் பங்களில் நூறு அடிவரை உயரம் கொண்ட பாய்மரத்தின் உச்சிவரை வெறுங்காலுடன் ஏறி பாய்கள் இணைக்கப்பட்டிருக்கும் கயிறுகளைத் துண்டிக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு.

தற்காலம் கப்பல்களைச் செலுத்துவதற்காகப் பாவிக்கப்படும் நவீன கருவிகள் முற்காலத்தில் எம்மவர்கள் பாய்க்கப்பல்கள் ஓடிய காலத்தில் இருக்கவில்லை. உலகின் முக்கிய துறைமுகங்கள் அவற்றின் தூரங்கள் என்பவற்றை அறிந்து கொள்வதற்கான உலகப்படம், திசையை அறிந்து கொள்வதற்கான 'கொம்பாஸ்' எனப்படும் திசையறிகருவி, கடலின் ஆழத்தை அறிந்து கொள்வதற்கான ஈயக்குண்டு, நூல் என்பவற்றுடனேயே எமது மாலுமிகள் தமது கடற் பிரயாணத்தைத் தொடங்குவார்கள். இரவில் நட்சத்திரங்கள் நிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகளையும் நேரத்தையும் கொண்டு தூரத்தை அறிந்து கப்பல்களைச் செலுத்து வதிலும் வல்லவர்களாக இருந்துள்ளர்கள். நடுக்கடலில் கப்பல் எங்கிருக்கிறது என்பதனை 'மாலின்' என்கின்ற அறிவைப் பயன்படுத்தி அறிந்து கொள்ள வேண்டும். வல்வை மாலுமி களும் இந்த 'மாலின்' எனப்படும் முறையை Chitagong என அழைக்கப்படும் இடத்தைச் சேர்ந்த செட்டிகாமத்தாரிடமிருந்து பழகி அதற்கான கருவிகளைப் பயன்படுத்தி கப்ப லைச் செலுத்தி வந்துள்ளார்கள். இயற்கை யின் மாறுதல்களைக் கொண்டு நீரோட்டத் தின் மாறுதல்களையும், புயல், மழை என்பன வற்றின் அசைவுகளையும் அலை அடிக்கப் போகும் திசையையும் அறிந்திருந்தனர்.

பாய்க்கப்பல்களைச் செலுத்திய தண்டயல் இதர மாலுமிகள் போன்றோர் பிற தேசங்களிலும் வல்வையிலும் தற்போதும் ஒருசிலர் இருக்கின்றார்கள். நூற்றியிரண்டு வயதினைக் கடந்த தண்டயல் திரு. அ. தில்லையம்பலம், திரு. வை. கதிர்காமத் தம்பி, ஆகியோர் இவர்களில் ஒருசிலராகும். கடலுள் மூழ்கி மீட்டெடுத்து ஓடவிடப்பட்ட "Atlantic King என்னும் கப்பல் Sketch ரகத்தைச் சார்ந்தது. இதே Sketch ரகக் கப்பல்கள் வல்வையிலும் கட்டப்பட்டு வணி கத்தில் ஈடுபட்டிருந்த போது அவற்றில் வேலைபார்த்த தண்டயல்கள் கெச்சுத் தண்டயல் என அழைக்கப்பட்டனர். வல்வை சிவன் கோவில் முத்துமாரி அம்மன் கோயில் ஆகியவற்றுடன் ஈடுபாடு கொண்ட நா. வேலுப்பிள்ளை என்பவர் இந்தக் கெச்சுத் தண்டயல்களில் ஒருவராவர்.

மிகச் சக்திவாய்ந்த ராட்சதக் கப்பல் கள் நீர்மூழ்கிக் கப்பல்கள், கோடிக் கணக் கான ரூபாய் செலவில் நவீனரக யந்திரங் களைக் கொண்டு பிரமாண்டமாக உருவாக் கப்பட்ட போர்க்கப்பல்கள் போன்றன வங்காள விரிகுடாவில் அபாயங்களில் சிக்குண்டு கடலோடு சங்கமித்து விடுகின்ற நிலையில் உள்ளூர் வேப்ப மரங்களைக் கொண்டு வல்வெட்டித்துறையில் உருவான 'அன்ன பூரணி கண்டம் விட்டுகண்டம் சென்றடைந் திருக்கின்றது என்றால் அதனை அமெரிக்கா வரை கொண்டு சென்று ஒப்படைத்த மாலுமி களின் துணிவையும் திறமையையும் என்ன வென்று சொல்வது. வல்வெட்டித்துறை மாலுமிகள், கடலோடிகள் திறமை உள்ள வர்கள் என்பதற்கு இது ஒன்றே போதாதா? அன்னபூரணியை அமெரிக்கா கொண்டு செல்வதற்கு வல்வை மாலுமிகளை தேர்ந் தெடுத்தமைக்காக அதன் உரிமையாளரான திரு. றொபின்சன் அவர்களை ஒரு பைத்தி யக்காரரென்று ஏனையோர் ஏளனம் செய்த தையும் இங்கு நினைவு கூரவேண்டும். 'அன்னபூரணி'யை அமெரிக்காவரை கொண்டு சென்று ஒப்படைத்த பின்னர் அமெரிக்கத் தூதுவர் (American Consutate) எம்மவர் களுக்கு அனுப்பிய கடிதம் வருமாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IN REPLY REFER TO
FILE NO. 885.3

THE FOREIGN SERVICE
OF THE
UNITED STATES OF AMERICA

DEPARTMENT OF STATE

AMERICAN CONSULATE

Colombo, June 9, 1939.

Mr. V. Sivapragasam,
Honorary Secretary, Valvettiturai
Unemployment Relief Association,
Valvettiturai.

Sir:

I acknowledge the receipt of your letter of June 5, 1939, requesting the Consulate to send you a statement in regard to certain facts in connection with some seamen who were employed by Mr. Robinson on his yacht.

The only knowledge which the Consulate has in this connection is from a letter received from Mr. Robinson in which he makes certain statements in regard to the character and ability of the men who sailed with him. A copy of the pertinent paragraphs from Mr. Robinson's letter appeared in the Times of Ceylon on March 26, 1939, and for your information are quoted below:

> "At one time I had six men from Jaffna, and during the whole trip they were the only crew I had. One of them cooked, the rest were all able-seamen, but far more than that really, for they looked after every comfort of my wife and myself, learned a great deal about navigation, studied English, so that at the end of the trip, with the exception of two, they all spoke it excellently.
>
> "They helped me with the rigging, carpentry, painting, and sail-making. I remember that everyone in Ceylon said that I was mad to take such a crew. I never regretted it. They were all fine characters, and my wife feels the same about them".

It is regretted that the Consulate cannot give you the statements which you desire, but you will appreciate the fact that the only definite information which the Consulate has is that given above.

Very truly yours,

John Ordway
American Vice Consul

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன விஞ்ஞான யுகத்தில் பல பல சாதனைகளை நிலை நாட்டியோரை முழு உலகமுமே பாராட்டுகின்றது. நவீனரக உபகரணங்களோ, சாதனங்களோ அற்ற காலத்தில் அதுவும் இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் 'அன்னபூரணி' அமெரிக்கா கொண்டு செல் லப்பட்டுள்ளது.

வல்வை மாலுமிகள் வல்வெட்டித் துறை முதலாளிமார்களுக்குச் சொந்தமான கப்பல்களில் மட்டுமன்றி பருத்தித்துறை, தொண்டைமானாறு, நல்லூர் போன்ற இடங் களைச் சேர்ந்த முதலாளிமார்களுடைய கப்பல்களிலும் தொழில் புரிந்துள்ளார்கள். இது தவிர இந்திய முதலாளிமார்கான பழ. சோமசுந்தரம் செட்டியார், பி.கு. நாகப்பச் செட்டியார், எர்லக்கட்டர் றங்கசாமி நாயுடு, போன்றோரது கப்பல்களிலும் , ரங்கூன்பாய், பேருவளை முதலாளி, சட்டிகாமம் முதலாளி, வேளாங்கண்ணிகோயில் கப்பல்களிலும் தண்டயல்களாகவும் இதர மாலுமிகளாகவும் பணிபுரிந்துள்ளார்கள்.

ஒரு கப்பலில் ஒரு தண்டயலாக ஒருவர் வரவேண்டுமாயின் ஆபத்தான, கஸ்ட மான பணிகளைச் செய்ய வேண்டியதோடு பலதரப்பட்ட தடைகளையும் தாண்டிவர வேண்டும். கப்பலொன்றில் மாலுமியாகச் சேர்ந்து கொள்ளும் ஒருவர் முதலில் எதுவித கொடுப்பனவும் அற்ற 'பொடியன்' என்று சொல்லப்படுகின்ற வேலை பழகுகின்ற பதவிக்கு அமர்த்தப்படுவார். ஒரு வருடம் அல்லது இரண்டு வருடம் சேவைக்கு பின் 'கிலாசு' எனற பதவிக்கும் அதன் பின்னர் 'சுக்கானி' அதன்பின் உதவித்தண்டயல் இறுதியாக தண்டயல் என்ற பதவியிலும் அமர்த்தப்படுவார். உதவித் தண்டயல் என் னும் பதவிக்கு அமர்த்தப்படும் ஒருவர் ஐந்து வருடங்கள் மாலுமியாக வேலைபார்த்த அனுபவம் கொண்டவராகவும் Mate Certificate என்று சொல்லப்படும் உதவித் தண்டயல் பரீட்சையில் சித்தியெய்தியவரா கவும் இருத்தல் வேண்டும். உதவித் தண்டய லாக ஒரு வருடம் கடமையாற்றிய பின்னர் Master Certificate எனப்படும் தண்டயல் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்த பின்னர் தான் 'தண்டயல்' என்ற பதவிக்கு அவர் தகுதியுடையவராவார். இத்தகுதி களைப் பெற்ற வல்வை மாலுமிகளில் பலர் தண்டயல்களாகவும், உதவித்தண்டயல் களாகவும் பணிபுரிந்துள்ளார்கள். இது தவிர "Captain Certificate பெற்றவர்களும் தண்டயல்களாகப் பணிபுரிந்துள்ளார்கள். இவ்விதம் Captain Certificate பெற்ற வர்கள் Log பார்த்து அதனைக் கொண்டு கப்பல்களைச் செலுத்தும் அதேவேளை Master Certificate உள்ளவர்கள் 'கமான்' அளப்பது மூலம் கப்பலைச் செலுத்து வார்கள். கமான் அளக்கும் கருவியின் மூலம் நண்பகல் 12.00 மணிக்கும் அதிகாலை 6.00 மணிக்கும் வேண்டிய விபரங்களைப் பெற லாம். இதன் மூலம் கப்பல் எந்த ஊருக்கு நேராக உள்ளது என்பதையும் அதன் திசை யையும் அறிந்து கொள்ளலாம்.

தண்டயல்களாக இருந்தவர்களுள் 'அன்னபூரணி' கப்பலை அமெரிக்கா கொண்டு சென்று ஒப்படைத்த க. தம்பிப்பிள்ளை, இதற்கு முன்னர் 'அன்னபூரணி' என்ற பெயர் கொண்டிருந்த கப்பலை யாவா, சுமத்திரா வரை வணிகம் செய்வதற்காக கொண்டு சென்ற மு. இளையபெருமாள், பர்மாகாரரின் கப்பலுக்குத் தண்டயலாக இருந்த நாராயண பிள்ளை, சட்டிகாமத்தாருக்குச் சொந்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஜெயலஷ்மி' கப்பலின் தண்டயல் செ. தில்லையம்பலம் சிவப்புக் கப்பல் என்கின்ற 'நித்தியகல்யாணி'யின் தண்டயல் செ. துரை சாமி அரேபியா போன்ற நாடுகளுக்கு கப்பலோட்டியவரும் நீச்சல் வீரன் ஆனந்தன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சமயம் வழிகாட்டியாகச் சென்ற கப்பலின் Pilot ஆக இருந்தவருமான தி. சிவசுப்பிரமணியம், 1971 காலப்பகுதியில் Ceylon Trawlers Ltdக் குச் சொந்தமாக இருந்து கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் பொருட்களை ஏற்றி இறக் கிய 'ஈஸ்வரி' என்ற கப்பலின் தண்டயல் க. காத்தலிங்கம், 1967 காலப்பகுதியில் வல்வை செ. தங்கவடிவேல் அவர்கள் இங்கிலாந்தில் வாங்கிய மீன்பிடி இழுவைப் படகை இங்கி லாந்திலிருந்து இலங்கை வரை கொண்டு வந்ததோடு அதன் Captain ஆகவும் பணி புரிந்த க. குணசுந்தரம், காங்கேசன்துறை Harbour Pilot ஆகப் பணிபுரிந்து இராணு வத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் காகி மரணமடைந்த கப்டன் கா. மோகன தாஸ், த. செல்வமாணிக்கம், வ.மாணிக்க வாசகம், மு.பொன்னம்பலம், பொ. புண்ணிய மூர்த்தி, இ. சிவகுருமூர்த்தி ஆகியோர் பிரபலமான தண்டயல்களில் ஒரு சிலராவர். இவர்களில் மேலே குறிப்பிட்ட நாராயணப் பிள்ளைத் தண்டயலின் புதல்வன் சேது நவரெத்தினராசா என்பவர் 'அன்னபூரணி' கப்பலை அமெரிக்காவரை கொண்டு சென்ற மாலுமிகளில் ஒருவராவர். அப்போது இவரது வயது 21 ஆகும்.

தண்டயல்களாக இருந்தவர்களுள் பழ. சோமசுந்தரம் செட்டியார் என்னும் இந்திய முதலாளிச்குச் சொந்தமான 'ஜெய லட்சுமி' என்ற கப்பல் 1934ம் வருடம் மல பாரிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த போது சூறாவளியினால் தாக்குண்டு கடலில் மூழ்கடிக்கப்பட்ட சமயம் மேலே கூறப்பட்ட த. செல்வமாணிக்கம் தண்டயல் உட்பட அனைத்து மாலுமிகளும் கடலுடன் சங்கமமானார்கள். மாலுமிகள் அனைவரும் வல்வையைச் சேர்ந்தவர்களா வர். இன்னொரு கப்பல் கப்டனான க. குண சுந்தரம் அவர்கள் கிரேக்க கப்பலொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம் அக் கப்பல் கனடா நாட்டுக்குச் சமீபமாகச் சென்று கொண்டிருக்கையில் இரண்டாகப் பிளந்து கடலினுள் மூழ்கிய போது குணசுந்தரம் உட்பட அனைவரும் கடலுள் மூழ்கி இறந் தனர். ஏர்லக்கட்டு முதலாளிக்குச் சொந்த மான 'வெள்ளைப் பாக்கிய லட்சுமி' என்னும் கப்பல் 1936ம் வருடம் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் சிக்குண்டு அதன் தண்டயல் பொ. அண்ணா மலை உட்பட அனைவரும் கடலுடன் சங்கம மானார்கள். "H.A. காட்டுன்' என்ற கப்பல் பொ. கந்தசாமிப்பிள்ளை, சிவசுப்பிரமணியம் ஆகிய தண்டயல்களுடன் 22 பேர் ஆந்திரா விலுள்ள காக்கநாடாவுக்குச் சென்று கொண் டிருந்த வேளை ஏற்பட்ட சூறாவளியினால் பாய்கள் கிழிந்து சுக்கு நூறாகியது. இதனைத் தொடர்ந்து கப்பலும் நொறுங்குண்டு சின்னா பின்னமாகியது. கப்பலில் இருந்த சிறிய படகொன்றில் மாலுமிகள் அனைவரும் ஏறி மூன்று நாட்களுக்கு மேல் தத்தளித்த பின்னர் சீனக்கப்பலொன்றினால் காப்பாற்றப்பட்ட னர். 'லட்சுமிகோவிந்தா' என்ற கப்பலில் பணிபுரிந்தவர் நீக்கிலாப்பிள்ளைத் தண்ட யல் என்பவர் இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம் 1940/ 41ல் கடலில் பயணம் செய்து கொண்டிருந்த போது யப்பானிய நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கப்பட்டு கப்பல் சிதறடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறுண்ட கப்பலின் துண்டுகளைப் பிடித்துக் கொண்டு உயிர் தப்பிய மாலுமிகளில் வல்வை சாமிக்கண்டு மேத்திரியார், பொ. பாலசுந்தரம், சிவகங்கை ஆகியோர் அடங்குவர். தண்டயல் நீக்கிலாப்பிள்ளை உட்பட இதர மாலுமிகள் கடலுடன் சங்கமமானார்கள். அரு. அம்பலவாணருக்குச் சொந்தமான 'ஆனந்தவல்லி' என்னும் கப்பல் 1952 அளவில் ஓடு ஏற்றிக் கொண்டு வல்வைத் துறைமுகத்துக்குச் சமீபமாக வந்து கொண்டிருக்கையில் கடலுள் மூழ்கியபோது தண்டயல் அம்பலவாணர் உட்பட அனைத்து மாலுமிகளும் நீந்திக் கரையை வந்து சேர்ந்தார்கள்.

நூற்றி நாற்பது பாய்க்கப்பல்கள் வடஇலங்கைத் துறைமுகங்களிலிருந்து தொழில் செய்த போதும் அவற்றில் நூற்றி முப்பத்திஆறு கப்பல்களுக்கு வல்வையைச் சேர்ந்தவரே தண்டயல்களாக இருந்துள்ளனர். அறுபது கப்பல்களுக்கு வல்வையர் அதிபதிகளாயும் இருந்துள்ளனர்.

1925ம் வருடமளவில் 2000 பேருக்கு மேல் வல்வை மாலுமிகள் 125 கப்பல்களில் தொழில் புரிந்துள்ளார்கள். வல்வை மாலுமிகள் கப்பல்களைப் பற்றிய மேற்கத்திய தேசத்து மாலுமிகளுக்குத் தெரிந்த மரபு வழிக் கோட்பாடுகள் சமிக்ஞைகள் போன்றவற்றை நன்றாக அறிந்திருந்தனர். ஒரு பெரிய கப்பலில் 25 பேர் வரை மாலுமிகளாக இருப்பர். இவர்களில் தண்டயல் ஒருவர், உதவித்தண்டயல் இருவர், சுக்கானிகள் இருவர் கிலாசுமார் 12 பேரும் அடங்குவர். கப்பல் போக்குவரத்து தடைப்பட்டதைத் தொடர்ந்து 1954ம் வருடமளவில் கப்பல்களின் தொகை ஐந்தாக குறைந்து விட மாலுமிகளின் தொகையும் 75 ஆக குறைந்தது. வேலையிழந்தவர்களில் 150 பேர் மாத்திரம் கொழும்புத் துறைமுகத்தில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. மீதிப் பேர் கொழும்புத் துறைமுக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட கெடுபிடிகளின் காரணமாக அவ்விடம் தொழில் பெற முடியாநிலை ஏற்பட்டு வாழ்க்கைக்கு வருவாய் தேடிக்கொள்ளும் நோக்கோடு கடத்தற் தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

அரசாங்கம் இவ்வூர் மாலுமிகளின் தொழிலை முடக்கினாலும் கூட 1962, 1963 காலப்பகுதியில் எமது இளைஞர்கள் பலர் வெளிநாட்டுக் கப்பல் களில் மாலுமிகளாகச் சேர்ந்து கொள்ள முற்பட்டு அதில் வெற்றியையும் கண்டார்கள். எம் இளைஞர்களின் இந்த முயற்சிக்கு ஆதரவு நல்கி அவர்கள் வெளிநாட்டுக் கப்பல்களில் மாலுமிகளாகச் சேர்ந்து உயர் பரீட்சைகளில் சித்தியடைந்து கப்பல் Captain, கப்பல் பொறியியலாளர்கள் (Marine Engineers)போன்ற நிலைக்கு உயரச் செய்வதற்கு உதவியவர் தா. மணிவாசகர் ஆவார். இவருடன் 1972ல் வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி ஆரம்பப் பயிற்சியை அளித்ததோடு தான் கொழும்புத் துறைமுகத்தில் இழுவைக் கப்பல் தளபதியாக (Tug Master) இருந்த காலங்களில் அந்தக் கப்பல்களிலும் பயிற்சியை வழங்கி வெளிநாடுகளுக்கு எமது இளைஞர்களை அனுப்பி வைத்தவர் 'அம்பலம் மாஸ்டர்' எனப்படும் அரு. அம்பலவாணர் ஆகும்.

கப்பல்கள் கடலில் செல்லும் சமயங்களில் களைப்பு ஏற்படாமல் இருக்கவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மாலுமிகளுக்கு உற்சாகம் ஊட்டு வதற்கும் பாடல்கள் பாடப்படுவதுண்டு.

கப்பல் ஒன்று Course என்று சொல் லப்படும் பயணம் ஆரம்பமாகி ஓடிக் கொண்டு வரும் போது பாடப்படும் பாட்டு :-

ஐயர் கந்தர் பெரியார் கந்தர் அடுத்ததொரு
மேனிகந்தர் துய்யவரும் உலக கந்தர்
எட்ட வொண்ணா சருமாக் கந்தர்
பையவே வருகின்ற பத்தருடைய கந்தர் ஏலை ஏலோ
பாங்காகவே வரும் துரைசாமி கந்தர் துய்வானம்
முத்துக் குமாரருடைய மைந்தர்
சிவசுப்பிரமணியம் தண்டயல் ஏறினார் கப்பல் ஏலை ஏலோ
கதிரேசன் மனம் மகிழ நங்கூரம் தூக்கி
சடுதியில் உள்ள பாய்கள் எல்லாம் நிரைத்து
நின்ற வள்ளிதெய்வானை மணவாளன் ஏகினார் கப்பல்
வந்த புளியந்தீவு கோட்டைமுனை பின்போய்
வரு புன்னைத் தோப்பு சல்லியா மொந்தல்
சீர் பன்னீச்சங்கேணி கொட்டியாபுரம்
அதுபின்போய் விந்தைசரி
பாதாளமலை கந்தசாமி மலையும் மேலான
கோணேசர் மலையும் பின்போக
வந்ததோர் பிடவைக்கட்டு மலைக்கப்பால்
செம்மலை அலம்பிலும்போய் சிறந்த வொண்ணாமாலைப்
பூண்டி அம்மை முள்ளிவாய்க்காலும்
அம்பலவன் பொக்கணையும் விண்மையுடனே
பூவரசந்தொடுவாய் வடிவான சுண்டிக்குளம்
வெகுசாலை பின்போய் செம்மையுடனே
வண்ணான்குளம் பொன்பிட்டி வாடி
சீரான ஆழியவளை செம்பியன்பற்றும்
செம்மையுடனே உடுத்துறை மருதங்கேணிக் கப்பால்
வர செப்பு செம்பியன்பற்று
மாமுனை பின்னாக செம்மையுடனே
நாகர்கோயில் பின்போக சீராக விருகமுனை
நேராக வரவே அந்தமுள்ள பருத்தித்துறை
ஆனதொரு இன்பருட்டி விழங்கு கந்தவனக் கடவை
விண்ணரிய ஊரணியாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் புகழ் வல்லைநகர் ஊரிக்காடு
அந்தமுடனே வாழ் தொண்டை மண்டலும்
ஆனதொரு தும்பமுனை அதுகும் பின்போக
விந்தைசேரி வழலாய் குடாவும் பின்போக
வேதாச்சி அம்மன் வாழ்முனை பின்னாக
சுந்தரம் மிகுந்த காங்கேசன்துறைக்கு அப்பால்
சொன்னதோர் கீரிமலை நேராக வரவே தந்திரம்
மிகுந்த குமரேசர் தன்கப்பலை சரியாமல்
மாரிசா தன்னிலே இறக்கிப்
பிடியும் காற்று மிக உரக்குதம்மா
கடல் பனைபோல் பரிவு கொள்ள ஆழிக்கடலில்
பாயெடுத்தோம் மிகுந்த வணக்கத்துடன் கப்பல் ஓடுதையா
காற்றிலாக் கோடிமுனை அழவெழி பின்போக
வானவர் புகழும் வேதாரணியம் பின்போக
ஊற்றில்லா நாகபட்டினம் நாகூர் காரைக்கால்
அதுகும் பின்போக விளங்குகின்ற கொள்ளடம்
கடலூர் பறங்கிப்பேட்டை
ஊரரிய புதுச்சேரி வருகுதுபார்
பாயெல்லாம் கட்டு நங்கூரம் போடு
கப்பித்தான் தான் எழுந்து கிலாசுகளை
எச்சரித்து இப்போ வத்தையென
தள்ளுமென் என்றவுடன் எல்லோரும்
சம்மதித்து அப்போது கப்பித்தான் கரைசேர்ந்து
அவ்வூரிலுள்ள செட்டிமார்
எல்லோரும் கண்டுகொண்டார்கள்
இப்போ என்கப்பலுக்கு ஏற்றுங்கள்
என்று சொன்னார் சொன்னவுடன் எல்லோரும்
சம்மதித்து ஏற்ற ஆரபித்தார்கள்.

**சரக்குவகை**

செஞ்சந்தணக்கட்டை சேர்கட்டை வின்னாரி
வீரம் இலத்தாம்பூலம் குங்கிலிய
வாசனைகள் ஏற்றினார்கள்

**அரிசிவகை**

ஈக்குச்சம்பா மிளகுசம்பா குண்டோதனைச்சம்பா
குணமான கடுகுசம்பா வராகினிச்சம்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனையும் ஏற்றினார்கள் ஏற்றினார்கள் கப்பலில்
உப்பாடல் சால்வை நீலக்கம்பி வேட்டி பலமாக
வருகின்ற நீலாணிவேட்டி உச்சிதமாக வருகின்ற
உடல் வெள்ளைவேட்டி வெள்ளரிப்பட்டு
கும்பகோணம்பட்டு குணமாக வருகின்ற
மெத்தைபுரம் பட்டு
நாரணிப்பட்டு நாராக மருகின்ற
முத்துவர்ணப்பட்டு ஒலிமிக்க மேகவர்ணப்பட்டு
இத்தனை வகைப்பட்டு ஏற்றினார்
கப்பல் அவ்வூரில் கிளியறன்ஸ் பதிந்து எடுத்தபின்
சிவனைவேண்டி நங்கூரம் தூக்குங்கள் என்றவுடன்
எல்லோரும் சம்மதித்து ஒரேபிரயாணமாய் வந்து
தொண்டைமானாற்றில் ஆற்றங்கரையில்
நங்கூரம் போட்டார்கள்.

கப்பலொன்று தரித்து நிற்கும் போது நங்கூரத்தை இறக்கும் போது அல்லது நங்கூரமிட்டிருக்கும் கப்பலின் நங்கூரத்தைத் தூக்குவதற்கு பாடப்படும் 'ஓஞ்சி அம்பா' எனப்படும் பாட்டு.

பிள்ளையார் நாலே காவலிலே பேதவங்கள் நாலே வாராமல்
சிவனுடைய நாலே காவலிலே சிந்தனையும் நாலே வாராமல்
அம்மனுடைய நாலே காவலிலே ஆபத்தொன்றும் நாலே வாராமல்
முருகையா நாலே காவலிலே மோசமொன்றும் நாலே வாராமல்
வல்லிபுரச்சாமியரே நாலே வந்துதவி செய்வாயோ
கப்பலுடையவரே கண்கலக்கம் தீர்த்தவரே
எப்பொழுதும் உனை மறவோம் எங்களை நீ கரைசேரும்
தாயே மகமாரி சங்கரியே வாருமம்மா
வந்துதவி நாலே செய்யுமம்மா
பிள்ளை அழுதுவர பெற்றதாய் பின்தொடர
மாதா நல்ல நாலே அழுதுவர மக்கள்நல்ல நாலே அழுதுவர
நாகூரு நாலே ஆண்டவனே நல்ல மீரா
சாய்பு ஒளியே வந்துதவி செய்யுமய்யா
ஏறுவாடி நாலே தனில்வாழும் எங்கள்
மீரா சாய்புவே நல்ல ஆண்டவரே
பள்ளிவாசல் நாலே தனில்வாழும் எங்கள் மீரா சாய்பே
வாசலிது நாலே மாரியம்மன் நாலே வாசலிதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராலே வாசலுண்டு அம்மனுக்கு தாண்டியவே
நாளை மகராசா பெண்டில் பிள்ளைகள் நாலே வாழவேண்டும்
வாழ்வீர் நல்ல நாலே வாழ்ந்திடுவீர்
மக்களை நல்ல நாலே பெற்றிடுவீர்
பெற்றி நல்ல நாலே வளர்த்திடுவீர்
பேரும் நல்ல நாலே இட்டிடுவீர்
மருமக்கள் நல்ல நாலே பின்தொடர
கண்டிக்கு நல்ல நாலே போனவரே
கடுக்கண் நல்ல நாலே விற்றுத்தின்றவரே
மேல்முண்டு நல்ல நாலே போட்டவரே
வீடுவந்து நல்ல நாலே சேராயோ
சேரா நல்ல நாலே பயணங்கண்ணே
திருமுலை நல்ல நாலே வாசலுக்கு
வாராயோ நல்ல நாலே காற்றே நீ
வழம் பெரிய நல்ல நாலே சோழகமே
சோழகமே நல்ல நாலே அடியாயோ
சோறு திண்டு நல்ல நாலே கொழுப்போமோ.

நங்கூரம் தூக்கும் போது அல்லது இறக்கும் போது பாடப்படும் இன்னொரு பாட்டு

| | | |
|---|---|---|
| பிள்ளையார் | நாலே காவலிலே | ஏலை ஏலோ |
| பேதவங்கள் | நாலே வாராமல் | ஏலை ஏலோ |
| அம்மனுடைய | நாலே காவலிலே | ஏலை ஏலோ |
| ஆபத்தொன்றும் | நாலே வாராமல் | ஏலை ஏலோ |
| சிவனுடைய | நாலே காவலிலே | ஏலை ஏலோ |
| சிந்தனைகள் | நாலே வாராமல் | ஏலை ஏலோ |
| முருகையா | நாலே காவலிலே | ஏலை ஏலோ |
| மோசமொன்றும் | நாலே வாராமல் | ஏலை ஏலோ |
| பொங்குகடல் | நாலே ஆழிக்கடல் பொருந்தடியேன் | ஏலை ஏலோ |
| செய்தபி ழை | நாலே வாராமல் | ஏலை ஏலோ |
| காத்தருளும் | நாலே வல்வைநாயகியே | ஏலை ஏலோ |
| அடியார்கள் | நாலே கரைசேர | ஏலை ஏலோ |
| அருள்தாரும் | நாலே ஆண்டவனே | ஏலை ஏலோ |
| நாகூர் | நாலே மீராவே | ஏலை ஏலோ. |
| காத்தருள் | நாலே தந்தனுப்பும் | ஏலை ஏலோ |
| கப்பல் | நாலே உடையவரே | ஏலை ஏலோ |
| கண்கலக்கம் | நாலே தீர்த்தவரே | ஏலை ஏலோ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| எப்பொழுதும் | நாலே உனைமறவோம் | ஏலை ஏலோ |
| எங்களை நீ | நாலே கரைசேரும் | ஏலை ஏலோ |
| கரைதூரம் | நாலே வெகுதூரம் | ஏலை ஏலோ |
| கண்டடியார் | நாலே கலங்குகின்றோம் | ஏலை ஏலோ |
| அருள்தாரும் | நாலே ஆண்டவனே | ஏலை ஏலோ |
| கரைகாண | நாலே உனைப்பாட | ஏலை ஏலோ |
| அனுதினமும் | நாலே ஐயாவே ஆண்டவனே | ஏலை ஏலோ |

கடலினுள் இறக்கப்பட்ட நங்கூரம் சில சந்தர்ப்பங்களில் சேறுகளில் புதையுண்டு அல்லது பாறைகளுள் சிக்குண்டு மேலே வருவதற்கு முடியாது இருக்கும். அச்சந்தர்ப் பங்களில் பாடப்படும் 'ஓஞ்சி அம்பா' எனப்படும் பாட்டு.

ஈசன் உனக்களித்த
ஈரெட்டும் ஆச்சுதடா - என்மகனே பாலா
பரமன் உனக்களித்த
பதினாறும் ஆச்சுதடா - என்மகனே பாலா
நம்பன் உனக்களித்த
நந்நாலும் ஆச்சுதடா - என்மகனே பாலா

**ஓஞ்சி அம்பா முடுக்கு.**

கொண்டாடி சிறுக்கியை
கொண்டையறுக்க
கொண்டையும் மயிரும்
சேர்த்தறுக்க - கொண்டாடி

கப்பல் ஒன்று பயணம் செய்வதற்கு ஆரம்பமாகிப் பாய்களை உயர்த்திக் கட்டும் போது பாடப்படும் 'அம்பா' எனப்படும் தொடர் சொற்களும் பாட்டுக்களும்.

பிள்ளையார் காவலிலே வேதனைகள் வாராமல்
அம்மனுடைய காவலிலே ஆபத்து வாராமல்
சிவனுடைய காவலிலே சீரழிவு வாராமல்
முருகையா காவலிலே மோசமேதும் வாராமல்
வாராமல் காத்தருளும் வல்லிபுர ஆண்டவனே
கப்பலுடையவரே கண்கலக்கம் தீர்த்தவரே
எப்பொழுதும் உமை மறவோம் எங்களைநீ கரைசேரும்
வல்வை வைத்தீஸ்வரரே வழம்பெறவே வாருமையா
மாரித்தாய் வல்லியே மகமாசி வாருமம்மா
காத்தவராய கரைகையுடனே அழைத்திடுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல் ஒன்று தூரதேசங்களுக்குப் புறப்பட்டு ஓடிக்கொண்டிருக்கும் சமயம் பாடப் படும் பாட்டு.

ஏலை ஏலோ தந்தைதாம் ஏலை ஏலோ
அக்காளும் தங்காளும் அஞ்சான் இழுக்க
ஆனதொரு மீனாட்சி சுக்கான் பிடிக்க
பொக்குவாய் சின்னாச்சி பீரங்கி தீட்ட
புளியடிச் சோனகன் மீசை முறுக்க
அடியடா தேங்காயை ஐயனாருக்கு
திருப்படா கப்பலை தெற்கு முன்னாக ஏலை ஏலோ
பாலான் பின்னணியில்மேவியே சென்று
பக்குவமாகவே சுக்கான் பிடித்து
மாலாஞ்சு முக்காவை வளமுடன் பார்த்து
வரிசைபெறு கும்பாசை வைத்து நேரடி
நூலா விழைத்திட்ட சவுதாரிப்பாயை
நுடங்கிடாதே பின்னடங்கிடக கட்டி
காலான் நாற்பொருமுக் காவைக் காட்டி
கடுவேகமாகவே விடுவீர்கள் கப்பல் ஏலை ஏலோ
பாங்கான சோலையிலே பற்பலவிதங்கள்
தெரியுதுபார் சமுத்திர மேடும் பள்ளம்
எல்லையுந்தாண்டி யப்பாவிதோ வந்தோம்
எதிரே யிலங்குது எசித்து மாநகரம்
துல்லி பயதாய் வேகமொடு கப்பல்
சுறுக்காக வோடியே துறைசேருவோமோ ஏலைலோ.

கப்பல் ஓடிக்கொண்டிருக்கும் சமயம் காற்று வீசாமல் விடும் சமயங் களில் காற்று வீசவேண்டியும், மழை பெய்யும் போது மழையை நிற்க வேண்டியும் பாடப்படும் தோணிப் பாட்டு :-

| | | |
|---|---|---|
| சின்னப் | பருவதமே | ஏலேலம் |
| சீக்கிரமாய் | கரைசேர | ஏலேலம் |
| என்னாசைப் | பொன்னியல்லோ | ஏலேலம் |
| என்வரவு | பார்த்திருப்பாள் | ஏலேலம் |
| கண்ணாளன் | வருவாரென்று | ஏலேலம் |
| கறிசமைத்து | வைத்திருப்பாள் | ஏலேலம் |
| பொன்னாடை | கொடுத்திடுவேன் | ஏலேலம் |
| பொன்னிக்கு | யாரழகு | ஏலேலம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாரவிந்தம் பணிவார் தடங்குகள்
ஏதேனும் வாராமல் காத்தருளும் அன்பர் கடலிற்போக
உதவுவார் பிறவிக்கு என்துயர் போக்குகின்ற
வேதாரணியப் பிள்ளையாரே
ஆரூரராகிலும் பரவைதனில் ஓடம் விட்டு
அலறிவரும் வேளை தனிலே அனுக்கிரகம் செய்யும்
மீராசாய்புவே என்று ஆதரிப்போர் தமக்கு
பாரூரர்புகழவே ஓடமது நேர்வரப் பரிவு கூர்ந்து
அருள்புரிவாய் பங்கைய பதத்தனே
இங்கித கரத்தனே பலாபலம் தனை அருள்வாய்
ஓரூராகிலும் உம்மைத் தொழாதபேர்
உலகத்தில் யாருமுண்டோ ஓதுவார் தமக்கு நல்வேத
முறை சொல்லியே உரிமைக்கு ஒப்ப வைத்தாய்
நாகூர் ராவிலே பள்ளியறை மீதிலே
நால்வரும் துதிக்க வருவார்நளின மலைக்கிணையான
அடிகள் யாவரும் நாகூரில் உறை மீராசாய்புவே.

**இரண்டாம் உலகப் போருக்கு முன்னரும் போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்னரும் பல நூற்றாண்டு காலமாகத் தமிழ்ப்பேரரசர்கள் ஆழ்கடலை தங்கள் வலிமையாலும் கடலோடும் மற்றும் கப்பல் கட்டும் திறனாலும் கட்டி ஆண்டிருக்கிறார்கள் சேர சோழ பாண்டியர்கள் கடல் கடந்து கடாரம் சென்று தத்தம் கொடிகளை பறக்கவிட்டனர். தமிழ் நாட்டிலிருந்து பிறநாட்டினரின் ஆதிக்க காலத்திலும் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் வலுவான வாழ்க்கையைப் பார்க்கிறோம். இவற்றை விடக் கடற் கொள்ளைக்காரரிடமிருந்தும் அரோபியரிடமிருந்தும் தம்மை பாதுகாப்பதற்கான ஒரு பாதையை வகுத்து தமிழ்நாட்டிலுள்ள செட்டிமார் வாணிபம் செய்தனர். இவர்கள் கனவான்களாக இருந்த ஒரு பெரும் வணிகசமூகத்தையே உருவாக்கி இருந்தனர். இவர்களில் பெரும் செல்வந்தர்கள் எல்லாம் ஈழத்து வல்வெட்டித்துறையில் வந்து தங்கி அங்குள்ள கப்பல் கட்டும் துறைமுகத்தில் கப்பலை கட்டிவித்து விசாகபட்டிணம் கொச்சின் கல்கத்தா மற்றும் தூரகிழக்கு மத்தியகிழக்கு துறைமுகங்களுக்கு வாசனைத்திரவியங்கள் அரிசி ஓடு தேக்கமரம் போன்றவற்றை ஏற்றியும் அந்தந்த நாட்டிலுள்ள பொருட்களைக் கொண்டுவந்து இறக்கியும்பாரிய வியாபாரத்தில் ஈடுபட்டனர்.**

**நன்றி;- உதயன் 31.7.2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வைத் துறைமுகம்

புராண இதிகாசந்தொட்டு இலங்கையின் பிரக்கியாதி வாய்ந்த துறைமுக நகரங்கள் வடஇலங்கையிலேயே இருந்துள்ளன என்பதற்குப் பல சான்றுகளுண்டு. சிங்கள வம்சத்தின் ஆதிபுருஷனென்று கருதப்படும் இளவரசன் விஜயனும் அவனுடைய சகாக்களும் மரக்கலத்திலே வட இலங்கையின் மாதோட்டத்தில் தான் வந்திறங்கியதாகச் சொல்லப்படுகிறது .

இலங்கையின் தென்பகுதியினை ஆட்சி செய்த வொஹொறக்க திஸ்ஸ (கி. பி. 237 - 245) என்னும் மன்னனுடைய சகோதரனான அபயநாக என்பவன் தனது சகோதரனது (மன்னன்) மனைவியுடன் மேற்கொண்ட தகாத உறவு தெரியவரவே தனது ஊழியர் உதவியாளர் ஆகியோருடன் வடபகுதியிலமைந்துள்ள 'பல்லதித்த' (Bhallathitha) என்னும் துறைமுகத்தில் கப்பல் மூலம் வந்து இறங்கியதாகவும் சரித்திர நூல்களான 'மகாவம்சம்', Ancient Jaffna போன்றவை தெரிவிக்கின்றன.

தேவநம்பியதீஸ்ஸனதும் அவனுக்குப் பின்னர் ஆட்சிசெய்த மன்னர்களினதும் காலத்தில் மகத நாட்டினின்றும் வந்து குடியேறிய புத்த மதத்தவர்கள் சம்புத்துறை என்று அழைக்கப்படும் ஜம்புகோள (Jambukola) துறைமுகத்திலேயே வந்து இறங்கினார்கள். தேவநம்பியதிஸ்ஸ அரசனால் மகத நாட்டை ஆட்சி செய்த அசோக மன்னனுக்கு அனுப்பப்பட்ட தூதுவர்கள் ஜம்புகோள துறைமுகத்திலேயே கப்பல் ஏறிச் சென்றார்கள். அசோக மன்னனினால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட புனித வெள்ளரசுக்கிளை இதே ஜம்புகோள துறைமுகத்திலேயே இறக்கப்பட்டு அனுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறப்பட்ட அபயநாக மன்னன் பல்லதித்த என்னும் துறைமுகத்திலிருந்தே தனது கடற்பயணத்தை ஆரம்பித்ததாகப் பாளி மொழியில் எழுதப்பட்ட நூல்களில் சான்றுகளுள்ளதாகவும் தெரியவருகிறது. கிரேக்கர், உரோமர் முதலானோர் வடக்கு, வடமேற்குத் துறைமுகங்களினூடாகவே தமது வணிகத் தொடர்புகளை மேற்கொண்டதுடன் இந்தத் துறைமுக நகரங்களிலேயே குடியேறியதாகவும் சொல்லப்படுகின்றது. திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகளில் கிடைத்த பழங்கால நாணயங்கள் இலங்கைக்கும் இந்தியா, அரேபியா, எகிப்து, பாரசீகம், கிறீஸ், உரோம ராஜ்யம் போன்றவற்றிற்கும் இடையே ஒரு சமயம் கடல் வர்த்தகம் நடைபெற்று வந்துள்ளதென்பதைக் காட்டுகின்றன. பதினான்காம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் பட்டாடை வகைகள், தானியவகைகள் வாசனைச் சரக்குகள் கற்பூரம் முதலியன நாகபட்டினம் முதலான இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு வட பகுதித்துறை முகங்கள், மாதோட்ட துறைமுகம் ஆகிய இடங்களில்இறக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

கி. பி. 6ம் நூற்றாண்டில் மகாதித்த பட்டினத்தில் (மாதோட்டம்) இந்திய, சீன, பாரசீகக் கப்பல்கள் சந்தித்து அதனைத் தமது வர்த்தகப் பரிவர்த்தனை நிலையமாக மாற்றியுள்ளன. இத்தகைய மாற்றத்தினால் வடபகுதியில் அமைந்திருந்த ஜம்பு கோள பட்டினம், பல்லதித்த போன்றவை செல்வாக்கை இழக்க நேரிட்டது. ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்து ஜம்புகோளத்துறைமுகம் அநுராதபுர ராச்சியத்தில் உள்ளவர்கள் கிழக்கிந்தியாவிற்குச் செல்வதற்காக பயன்படுத்திய பிரதான துறைமுகமாக விளங்கியது.

ஈழத்துப் பூதந்தேவனார் (கி. பி 130) தமிழகத்தின் புலவர்களோடு தமிழாராய்வுக்குச் சென்றதும் வடபகுதிக் கடல் மார்க்கமாகவே. இராஜராஜசோழன் காலத்தில் தஞ்சையில் நடைபெற்ற கலைவிழாவில் பங்குபற்றுவதற்காகச் சென்றவர்கள் வல்வைப் பாய்க்கப்பல் மூலமாகவே இந்தியா சென்றுள்ளனர்.

புத்தர் கி. மு. 5ம் நூற்றாண்டில் தமது பௌத்தமதத்தைப் பரப்பிய காலத்தில் அவரது போதனைகளை ஏற்றுக்கொண்டவர்களில் வட ஈழமான நாக நாட்டில் வாழ்ந்த நாகர்களும் அடங்குவர். புராதன யாழ்ப்பாணத்தின் வடகரையிலிருந்த ஜம்புகோளம், பல்லவத்துறை (பல்லதித்த) காயாத்துறை ஆகிய துறைமுகங்களிலிருந்து புறப்பட்டுச் சென்ற மரக்கலங்கள் வழியாகவே அக்கால நாகர்கள் தொடர்புகளை மேற்கொண்டிருந்தார்கள். இதன் காரணமாக புத்தபிரானின் போதனைகளை நேரே கேட்கும் வாய்ப்புக்கள் கிடைத்ததோடு பௌத்த தலங்களுக்கு யாத்திரையையும் மேற்கொள்ள முடிந்தது. மேலே குறிப்பிட்ட பல்லவத்துறை என்ற துறைமுக நகரத்தை வல்வெட்டித்துறை என்று முதலியார் சீ. இராசநாயகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இன்னும் சில சரித்திர ஆசிரியர்கள் பல்லவத்துறை என்பதனை வல்லிபுரத்துக்கு அணித்ததாயுள்ள பல்லப்பையைக் குறிக்குமெனக் கூறுகின்றார்கள்.

பழைய சரித்திர வரலாறுகளை விட்டு சமீபத்தில் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இந்தியா, பர்மா, மலாயா, போன்ற நாடுகளிலிருந்து அரிசி, ஓடு, வைக்கோல் போன்ற பலவிதமான பொருட்களையும் ஏற்றிவர வட இலங்கைத் துறைமுகங்களையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல் போக்குவரத்திற்காகப் பாவித்து வந்துள்ளனர்.

எமது நாட்டுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் காலத்திலும், அதன் பின்னரும் வல்வெட்டித் துறை ஒரு துறைமுகமாக இருந்தாலும் காங்கேசன்துறை துறைமுகம் 1851ம் வருடத்திலும் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற இடங்களில் அமைந்திருந்த துறைகங்கள் அதற்கு முன்னரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப் பட்ட ஒரு துறைமுகமாகவே இயங்கிவந்துள்ளன. 1857ம் வருடம் பிரிட்டிஷ் அரசாட்சியாரிடம் வல்வெட்டித்துறையை ஒரு அங்கீகரிக்கப்பட்ட துறைமுகமாக்க வேண்டுமென அக்காலத்தில் யாழ்ப்பாணத்தைப் பரிபாலனம் செய்த திரு. டயிக் (P.A. Dyke) ஏசண்டர் அவர்கள் கோரியிருந்தும் அரசாட்சியார் சம் மதம் கொடுக்கவில்லை.

முதலாவது, இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் நீராவிக் கப்பல்கள் ஓடத்தொடங்கி பாய்க்கப்பல்கள் வர்த்தகத்தை அடியோடு நாச மாக்கியமையாலும் பாய்க்கப்பல் போக்குவரத்து வெகுவாக நடைபெற்று வந்த வல்வெட்டித்துறை துறைமுகம் உட்பட இதர துறைமுகங்களையும் மூடி விட்டமையினாலும் கப்பல் வைத்து வியாபாரம் நடத்திவந்த குடும்பங்கள் ஜீவனத்துக்கு வழி இன்றி சில வல்வை வாசிகள் கோணல் வழியில் செல்ல வேண்டிய நிலமை ஏற்பட்டது.

சுபீட்சமாக கப்பல் வர்த்தகம் நடத்தி வந்த வடஇலங்கைத் துறைமுகங்களைத் திடீரென்று மூடியமையினால் இப்பகுதி மக்களின் பொருளாதார நிலைமை சீர் குலைந்து போனதை பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொண்டதோடு வட இலங்கையில் ஒரு துறைமுகத்தைத் திறக்க வேண்டுமென்று வலியுறுத்திவந்தார்கள். காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் 15. 08. 1949 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போது வட இலங்கையில் ஒரு துறைமுகத்தை சாமான் போக்குவரத்துக்கும் பயணிகள் போக்குவரத்திற்குமாகத் திறந்து விட வேண்டுமென்றும் இது தொடர்பாகப் பல தடவைகள் தான் வேண்டுகோள் விடுத்தமை பற்றியும் தெரிவித்தார். வட இலங்கையில் சாமான் போக்குவரத்திற்கும் பயணிகள் போக்குவரத்திற்குமாக ஒரு துறைமுகம் திறந்து விடப்பட வேண்டுமாயின் தொற்று நோய்த் தடைமுகாம் ஒன்று பயணிகள் போக்குவரத்திற்காக அமைக்கப்பட வேண்டுமெனவும் இதற்கென பெருந்தொகைப் பணத்தை அரசாங்கம் செலவிட வேண்டி வருமென போக்குவரத்து மந்திரி சேர்.ஜோன் கொத்தலாவல அவர்கள் தெரிவித்திருந்தார்கள். சாமான் போக்குவரத்திற்காக ஒரு துறைமுகம் திறக்கப்பட வேண்டுமாயின் அதனை ஊர்காவற்றுறையில் அல்லது காங்கேசன்துறையில் திறக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது. உத்தேச துறைமுகம் காங்கேசன்துறையில் அமைவதாயின் அது வருடத்தில் ஆறு மாதங்கள் மட்டும் செயல்படமுடியுமென்றும் கொழும்புத் துறைமுகத்தில் அமைந்துள்ளது போன்று கப்பல்கள் உள்ளே வந்து தங்குவதற்கு ஏற்றவாறு ஒரு கடல் அணை (Break Water) அமைத்தாலும் கூட ஆறு மாதங்களுக்கு மேல் செயல்பட வைக்க முடியாதெனவும் போக்குவரத்து மந்திரி தெரிவித்திருந்தார். ஊர்காவற்றுறை துறைமுகத்தைச் செயற்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதாயின் வருடம் முழுவதும் செயற்பட வைக்க முடியுமென்றும் ஆனால் துறை முகத்துக்கு முன்பாகச் சூழவுள்ள தொடர் பாறைகள் உடைக்கப்பட வேண்டுமெனவும் அப்படி இப்பாறைகளை உடைப்பது என்பது ஒரு எளிதான செயல் அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

மேலே குறிப்பிட்டது போன்ற காரணங் களைக் காட்டி வடபகுதித் துறைமுகங் களைத் திறப்பதனை அரசாங்கம் தட்டிக் கழித்து வந்தமையால் பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா அவர்கள் வடபகுதிக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு வந்திருந்த சமயம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. வட பகுதியில் எந்தத் துறைமுகத்தைத் திறப்ப தென எமது மக்களிடையேயும் தலைவர் களுக்கிடையிலும் அபிப்பிராய பேதம் இருப் பதனைப் பிரதமர் உணர்ந்து கொண்டார். எந்தத் துறைமுகத்தைத் திறக்கவேண்டு மென தமிழ் மக்கள் ஒரு மனதாகத் தெரிவித் தால் அதனைத் திறந்து விடுவதாக வாக் களித்து விட்டுத் திரும்பிச் சென்றார். பிறி தொரு சந்தர்ப்பத்தில் சேர் ஜொன் கொத்த லாவல அவர்கள் 1954 ஒக்டோபர் மாதம் வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்த போது அவரிடமும் வட இலங்கையில் ஒரு துறை முகத்தைத் திறந்துவிட வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டது. கூடிய சீக்கிரம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வ தாக அவர் வாக்களித்திருந்தார். இதன் அடிப்படையில் வடமாகாண அரச அதிபர் வடமராட்சி நீர்முனைத் தொழிலாளர் சம் மேளனத்தின் செயலாளரிடம் வல்வெட்டித் துறை துறைமுகத்தைத் திறப்பதற்கு அங் குள்ள சௌகர்யங்களையும் பூர்வேத்திரங் களையும் பற்றிய விரிவான அறிக்கையை பருத்தித்துறை பெரும்பாக இறைவரி உத்தி யோகத்தருக்கு (D. R. O) அனுப்பி வைக்கும் படி கோரியிருந்தார். நீர்முனைத் தொழிலாளர் சம்மேளனச் செயலாளரும் தனது அறிக்கை யில் 1905ம் வருடத்திலிருந்து இலங்கைக்கும் இந்தியா, பர்மா ஆகிய நாடுகளுக்கும் இடையில் ஒரு சந்தர்ப்பத்தில் 140 பாய்க் கப்பல்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததாயும் இவற்றில் 136 கப்பல்களுக்கு வல்வை மாலுமிகளே தண்டயல்களாக கடமைபுரிந்த தாயும் 59 கப்பல்களுக்கு வல்வையரே அதிபதிகளாக இருந்ததாயும் குறிப்பிட்டிருந் தார். கிட்டத்தட்ட வல்வை வாசிகளில் 1600 பேர் வரை தண்டயல், சுக்கானி, இதர மாலுமி களாக கப்பல்களில் கடமை புரிந்ததாயும் இக் காலப்பகுதியில் 24 கப்பல்கள் கட்டும் மேத்திரிமார்கள் இருந்ததாயும் அவர்களில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட சமயம் ஐந்து பேர்வரை வாழ்ந்து கொண்டிருப்ப தாயும் தெரிவித்தார். கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்கி களஞ்சியப்படுத்து வதற்காக 40 கிட்டங்கிகள் வரை இருந்த தாயும் செயலாளர் மேலும் தெரிவித்தார். இந்த புள்ளி விபரங்கள் மூலம் வல்வெட்டித் துறை எவ்வளவு சிறப்பான துறைமுக பட்டின மாக விளங்கி வருகின்றதென்பதையும் வீரகேசரி தனது 12. 1. 1955 நாளேட்டின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தது. பருத்தித்துறை, காங்கேசன்துறை, வல் வெட்டித்துறை போன்ற ஒரு பழங்காலத் துறைமுகத்தை போதிய வசதிகளற்ற தலை மன்னார் துறைமுகத்தை மூடிவிட்டு பயணி கள் போக்குவரத்திற்காக திறந்து விடலா மென்றும் அந்த ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அரசாங்கம் அரிசி, மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இறக் குமதி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட்ட காரணத்தினாலும் வடபகுதி பாய்க்கப்பல்கள் மூலமாக மேற்படி பொருட் களை இறக்குமதி செய்வதற்கும் மற்றும் இங்கிருந்து பிற தேசங்களுக்கான பொருட் களை ஏற்றுமதி செய்வதற்கும் முன்வராத காரணத்தினாலும் வேலையில்லாத் திண் டாட்டத்தை நிவர்த்தி செய்யும் நோக்குடன் பின்வரும் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

1) தீர்வை செலுத்தக்கூடிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஏதுவாக வல் வெட்டித்துறை அல்லது பருத்தித்துறை துறைமுகங்களிலொன்றை திறப்பது.

2) காப்புறுதி செய்வதற்கு ஏதுவாக மான்ய உதவிகளை அரசாங்கம் வழங்கி உள் ளூர் கப்பல்களையே பர்மா, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து அரிசி முதலான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வாடகைக்கு அமர்த்துவது.

3) கப்பல் கட்டும் தளமொன்றை வல் வெட்டித்துறையில் அமைப்பது

4) வல்வை வாசிகளுக்கு இலங்கைத் துறைமுகங்களில் பொருத்தமான வேலை வாய்ப்பளிப்பது.

5) கப்பல் பொறுப்பாளர் (Pilot), கப்பல் தளபதி அல்லது தண்டயல் (Master) கப்பல் உபதளபதி (Mate) போன்ற பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக பருத்தித்துறை அல்லது வல் வெட்டித்துறையில் பல் தொழில்நுட்பக் கல்லூரியை நிறுவுவது.

பிரதமர் சர். ஜோன் கொத்தலாவல அவர்கள் வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்த சமயம் இப்பகுதி மக்கள் வடபகுதி யில் துறைமுகம் ஒன்றினைத் திறப்பது தொடர்பாக வேண்டுகோள் விடுத்தது போல யாழ்ப்பாணத் தீபகத்திலுள்ள ஏனைய மக்க ளும் தங்கள் தங்கள் பகுதியிலுள்ள துறை முகங்கள் சார்பில் கோரிக்கைகளும் ஏனைய துறைமுகங்களிலுள்ள சாதகமற்ற காரணங் களையும் தெரிவித்தனர். யாழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கை வராமையினாலும் பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்கள் நிலவுவ தினாலும் வட இலங்கையில் துறைமுகம் ஒன்றினை திறப்பதில் தாமதம் ஏற்பட்டிக் கின்றதெனப் பிரதமத் சர் ஜோன் கொத்தலா வல அவர்கள் கூறியிருந்தார்.

காங்கேசன்துறை வாழ் மக்கள் தமது துறைமுகம் திறப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதற்கான பின்வரும் காரணங் களை முன்வைத்திருந்தார்கள்.

1) காங்கேசன்துறையே புகையிரதப் பாதையின் முடிவிடமாக உள்ளமையா லும் விமானத்தளம் அமைந்துள்ளமை யினாலும் குடாநாட்டுக்கான மின் விநியோகம் இங்கிருந்தே மேற்கொள் ளப்படுவதினாலும்,

2) ஏனைய துறைமுகப்பட்டினங்களுக்கும் யாழ்ப்பாண நகரத்துக்கும் இடைப்பட்ட தூரம் மிகவும் அதிகமாக உள்ள படி யாலும் காங்கேசன்துறைக்கும் யாழ் நகருக்கும் இடைப்பட்ட தூரம் அவற்றை விடக் குறைவாக பதினொரு மைல்கள் மாத்திரம் உள்ளபடியாலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) சீமெந்து வியாபாரத்தை விருத்தியடைய செய்யலாமென்பதினாலும் அயல் நாடுகளுக்கு போக்குவரத்து செய்வதற்குச் சௌகரியமுண்டென்பதினாலும் சோரவியாபாரத்தைத் தடுத்துவிடலாமென்பதினாலும்,

4) ஆண்டுக்கொரு முறை வீசும் சோழகத்தினை 'ட' வடிவிலான கடலணையைத் துறைமுகத்திற் கட்டி காற்றின் தாக்கத்திலிருந்து கப்பல்களை பாதுகாத்துக் கொள்ளலாமென்பதினாலும்

காங்கேசன்துறை துறைமுகமே பொருத்தமானதென அப்பகுதி மக்களினால் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை துறைமுகத்தினையே திறக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் பின்வரும் காரணங்களை முன்வைத்திருந்தார்கள்.

1) பௌத்த, இந்து யாத்திரை ஸ்தலமான நயினாதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு வசதியாயிருக்குமென்பதினாலும்

2) இத்துறைமுகம் திறக்கப்பட்டால் சொற்ப செலவிலும் மிகக் குறைந்த நேரத்திலும் இந்தியா செல்ல முடியுமென்பதினாலும்

3) இத்துறைமுகம் வாடை, சோளகம், என்ற பேதமின்றி பாரிய மரக்கலங்களில் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்குச் சாதகமானதாக இருப்பதினாலும்

4) காங்கேசன்துறையில் கடலணை கட்டுவதற்கு ஏற்படும் செலவிலும் பார்க்க ஊர்காவற்றுறை துறைமுகத்தை ஆழமாக்கக் குறைந்த செலவே ஏற்படுமென்பதினாலும்,

5) ஊர்காவற்றுறையில் இறக்கப்படும் சரக்குகள் குறைந்த செலவுடனே யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படலாமென்பதினாலும்,

6) இத்துறைமுகம் ஒரு இயற்கையான துறைமுகமென்பதினாலும்

7) துறைமுகத்தை விஸ்தரிக்கக் கூடிய போதிய இடவசதி இருப்பதி னாலும்

8) பாரிய குதங்கள் அமைக்கப்படுவதற்குப் போதிய வெளிநிலங்கள் துறைமுகத்தின் நாலா பக்கங்களிலும் நிறைந்து கிடப்பதினாலும்,

ஊர்காவற்றுறை துறைமுகமே திறக்கப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென அப்பகுதி மக்களினால் தெரிவிக்கப்பட்டது.

வல்வை சேவா சங்கத்தினர் சார்பில் 27. 04. 1951ல் வல்வெட்டித்துறை துறைமுகம் திறக்கப்பட வேண்டிய காரணங்கள் ஒரு நூல் வடிவில் அதன் செயலாளர் திரு.பூ.க. முத்துக்குமாரசாமி அவர்களினால் வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது. அவை பின்வருமாறு

1) வல்வெட்டித்துறை துறைமுகம் ஒன்று தான் கிழக்கே யானை இறவிலிருந்தும் மேற்கே ஊர்காவற்றுறையிலிருந்தும் சம தூரத்தில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2) யாழ்ப்பாணக் கடலேரித்திட்டம் முடிவடைந்ததும் இந்தத் துறைமுகம் கைத்தொழிலாளிகளுக்கு மிகவும் அனுகூலமளிக்கக் கூடிய துறைமுகமாக விளங்கும்.

3) இத்துறைமுகத்தின் கடல் படுக்கையானது ஆழமாகவும், சேறு நிறைந்ததாகவும் இருப்பதினால் நங்கூரம் பாய்ச்சுவதற்கு மிகவும் சிறந்த இடமாக இருக்கும்

4) மிகச் சிறந்த மாலுமிகளும் கப்பல் கட்டும் மேஸ்திரிகளும் இங்கே வசிக்கிறார்கள்.

5) பெரிய நீராவிக் கப்பல்கள் இங்கு வந்து நங்கூரம் பாய்ச்சியிருக்கின்றன. போதிய குடிநீர் இங்கு கிடைக்கக் கூடியதாக இருக்கிறது.

6) இதனைத் திறந்து வைப்பதற்கு பாறைகளை உடைக்கவோ, அல்லது அலை தாங்கிகள், கடலணைகள் போன்றன கட்ட வேண்டிய தேவை இராது.

7) அரசாங்க ஆதரவின்மையால் மடிந்து கொண்டிருக்கும் சுதேசிக் கப்பல் கட்டும் தொழிலை மீண்டும் புத்துயிர் பெறச் செய்யலாம்.

8) கள்ளத்தனமாக இங்கிருந்து இந்தியாவுக்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் சாமான்கள் கடத்துவதற்கு முற்றுப் புள்ளி வைத்து இதன் பேரால் அரசாங்கம் செலவழிக்கும் கோடிக்கணக்கான ரூபாய்களை மீதப்படுத்தலாம்.

மேற்குறிப்பிட்ட பூகோளரீதியான, மாலுமி சாஸ்திர சம்பந்தமான காரணங்களை சுட்டிக்காட்டியதோடு நில்லாமல் மாலுமி சாஸ்திர நிபுணர்களைக் கூட்டி ஒரு நியாய சபையை ஏற்படுத்தி பொருத்தமான ஒரு துறைமுகத்தைத் திறப்பதற்கு வழிவகைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமெனவும் வல்வை சேவா சங்கத்தினர் கேட்டிருந்தார்கள். வல்வெட்டித்துறை துறைமுகத்தினைத் திறப்பதற்கான சாதகமான அபிப்பிராயங்களைத் தெரிவித்திருந்த வல்வை சேவா சங்கத்தினர் வடபகுதியிலுள்ள ஏனைய துறைமுகங்களைத் திறப்பதில் உள்ள பாதகமான அபிப்பிராயங்களையும் தெரிவித்திருந்தனர். அவை பின்வருமாறு :

## ஊர்காவற்றுறை :

1) இத்துறைமுகத்தில் ஏற்றப்படும் பொருட்களும் இறக்கப்படும் பொருட்களும் ஒரு ஒடுங்கிய பாலத்தினூடாகக் கொண்டு போகப்பட வேண்டும். இந்தப் பாலம் மழைக்கும், காற்றுக்கும் இலக்காகி நிற்கிறது. அத்துடன் இறக்கப்படும் பொருட்கள் சுமார் 500 யார் தூரத்துக்கு ஓடத்தில் அல்லது படகுகளில் ஏற்றப்பட்டு 12 மைல் தொலைவிலுள்ள யாழ்ப்பாணத்துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

2) பொருட்களை ஏற்றும் போதும், இறக்கும் போதும், போக்குவரத்துச் செய்யும் போதும் சேதமடைந்தும், காணாமலும் போகும் பொருட்களின் நட்டமும் சேர்ந்து இத்துறைமுகத்துக்கு வந்து சேரும் பொருட்களின் கொள்முதலானது கொழும்பிலிருந்து ரயில் மார்க்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேரும் பொருட்களின் கொள் முதலிலும் பார்க்க கூடுதலாக முடியும்.

3) ரயில் பாதையுடன் இத்துறைமுகத்தை இணைப்பதற்கு மருதனாமடத்திலிருந்து காரை நகருடன் இணைத்து பாதை போடலாமென்று தெரிவிக்கப்பட்டது. இப்படி ரயில் பாதை போடுவதாயின் இடையில் இரண்டு மைல் தூரத்திற்கு ஒரு ரயில் பாலமும் போடப்பட வேண்டி யிருக்கும். இதற்குப் பல லட்ச ரூபாய் செலவு செய்ய வேண்டிவரும்.

4) உள்ளூரிலுள்ள சிறிய மரக்கலங்கள் கூட தங்கள் சரக்கில் ஒரு பாகத்தை இறக்கிவிட்டுத்தான் துறைமுகத்துக்குள் வரவேண்டும்.

5) இத்துறைமுகத்தின் கடல் படுக்கை யானது பாறைகள் நிரம்பியிருப்பதால் நங்கூரம் பாய்ச்சும்போது அந்தப் பாறையை ஊடுருவிக்கொண்டு நிலத் தில் தாழாமல் விடுவதால் கடுங்காற்று அடிக்கும் சமயங்களில் மரக்கலங்கள் அள்ளுப்பட்டுக்கொண்டு போய் சேத மடைய வாய்ப்புக்களுண்டு.

6) துறைமுகத்துக்கருகிலுள்ள இடைவெளி இருமரக்கலங்கள் ஒன்றையொன்று விலகிக் கொண்டு போகவும், ஒரு மரக் கலம் முன் பின்னாகத் திரும்பிச் செல்ல வும் குறைந்தது 500 அடி அகலமாவது இருக்க வேண்டும். ஆழம் பத்து யாரா வது இருக்கவேண்டும். 500 அடி அகல மும், 30 அடி ஆழமும் நாலு மைல் நீளமுமான இடைவெளி செய்வதானால் பலகோடி ரூபாய்கள் செலவாகும்.

7) இப்பகுதியில் போதிய குடிதண்ணீர் கிடைப்பதில்லை

## யாழ்ப்பாணம்

1) இத்துறைமுகத்திலிருந்து பலமைல் களுக்கு அப்பால் தான் கப்பல்கள் நங் கூரம் பாய்ச்சப்பட வேண்டும்.

2) கப்பலிலிருந்து பொருட்களைப் படகு மூலம் பெரும் அபாயத்துக் குட்பட்டே கொண்டு வரவேண்டும்.

## காங்கேசன்துறை

1) காங்கேசன்துறை தீபகத்தின் கிழக்குத் தொங்கலிலிருந்தும் மேற்குத் தொங்க லிலிருந்தும் அதிக தூரத்திலிருக்கிறது.

2) சீமெந்துத் தொழிற்சாலை அங்கிருப்ப தினால் இத்துறைமுகத்துக்கு விசேட அனுகூலங்கள் இருப்பதாகச் சொல்லப் படுகின்றது. இந்த நியாயம் பொருத்த மானதென்று சொல்லக்கூடியதாயில்லை. இங்கு உற்பத்தியாகும் சீமெந்து உள் நாட்டுத் தேவைக்கே போதாமல் இருப் பதினால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகப்போவதில்லை.

3) இத்துறைமுகத்தின் கடல் படுக்கையும் பாறைகளினால் மூடப்பட்டிருக்கின்றது. இதனால் நங்கூரம் பாய்ச்சுவதற்கு ஏற்ற வழியில்லை. இதன் நிமித்தம் இங்கு நிறுத்தி வைக்கப்பட்ட கப்பல்கள் பல கரைக்கு அடிபட்டு வந்து சேதமுற்றிருக் கின்றன. இங்கு வந்த கப்பல்களில் சில மூன்று மைல்களுக்கு அப்பாலேயே நிறுத்தி வைக்கப்படவேண்டிய நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டிருக்கின்றது. இவ்விதம் தூர மான இடங்களில் நிறுத்தி வைத்து பொருட்களை இறக்கிக் கொண்டு வருவதனால் பெரும் செலவு ஏற்படும்.

4) கடலை மூன்று அல்லது நான்கு மைல்களுக்குத் தோண்டி அலை தாங்கி கட்டுவதென்பது முடியாத காரியம்.

5) இத்துறைமுகம் பருவக்காற்றுக்கு இலக்காகி வருவதினால் வருடத்தில் ஆறு மாதங்களுக்கு மேல் பாவிக்க முடியாத நிலையில் உள்ளது.

## பருத்தித்துறை

1) இப்பகுதி மணலும் பாறையும் கலந்திருப்பதினால் கப்பலை நிறுத்தி வைப்பதற்கு பக்குவமான துறைமுகமாகாது.

2) இது பருவக்காற்றுகளுக்கு இலக்காகக் கூடிய ஒரு துறைமுகமாகும்.

மேற்படி வல்வை சேவா சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட சாதகமான, சாதகமற்ற காரணங்களை ஆராய்ந்த இலங்கை ஒப்சேவர் பத்திரிகை தனது 9. 4. 1951 திகதி நாளேட்டில் வல்வெட்டித்துறை துறைமுகமே திறக்கப்படுவதற்கான எல்லா வழிகளையும் கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

வல்வை சேவா சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்ட மேலதிக விபரங்கள் வருமாறு.

1) இப்பகுதியில் கப்பல்கள் செய்வதற்கும், திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் ஏற்றதுமான வசதிகள் உள்ளன.

2) கப்பல்களைச் செலுத்துவதற்கு அனுபவம் வாய்ந்த மாலுமிகள் உள்ளனர்.

3) ஆபத்து வேளைகளில் கப்பல்களையும், சிப்பந்திகளையும் காப்பாற்ற வல்ல மாலுமிகள் உள்ளனர்.

4) வடஇலங்கையில் ஓடிக்கொண்டிருக்கும் பெரும்பாலான கப்பல்களிலும், தென் இந்தியர்களுக்குச் சொந்தமான கப்பல்களிலும் கூட வல்வை வாசிகளே மாலுமிகளாக உள்ளார்கள்.

5) மாட்சிமை தாங்கிய மகாதேசாதிபதி சேர் ஹென்றி பிளேக் அவர்கள் 1905ல் யாழ் குடாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த சமயம் வல்வைத் துறைமுகத்தில் 30க்கு மேற்பட்ட பாய்க்கப்பல்களைப் பார்த்ததாயும் ஏனையவற்றில் குறைந்தளவு எண்ணிக்கையான கப்பல்களையே கண்டுள்ளதாயும் சுட்டிக் காட்டியுள்ளார்.

6) கடல் படுக்கை நங்கூரம் பாய்ச்சுவதற்கு ஏற்றதாக இருந்தமையால் ஒரு கப்பலாவது சேதமாகவில்லை.

7) பிரித்தானிய கடற்படைத் தலைமையகத்தினால் வெளியிடப்படும் Bay of Bengal Pilot என்னும் வெளியீட்டில் இதர துறைமுகங்களில் மணல் திடர், பாறைகள், தொடர்பாறைகள், என்பன அமைந்துள்ளதாயும் வல்வெட்டித்துறை துறைமுகத்தில் அப்படியானவை இல்லையென்றும் இருக்கின்ற தொடர் பாறைகளில் கூட போதிய இடைவெளிகள் அமைந்துள்ளமையால் கப்பல்கள் இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடை வெளியினூடாக உட்செல்லு வதற்கு ஏதுவாய் அமைந்துள்ளது.

8) யாழ் குடாநாட்டிற்கான வரைபடத்தை அவதானித்தால் தரைப்பகுதியானது ஒரு ஒதுங்குதுறைக்கு ஏற்றவாறு உள் வளைந்திருப்பது புலப்படும். ஏனைய வற்றில் அப்படியல்லாமல் வெளிப் பக்கம் வளைந்து கடலுக்குள் நீண்டு செல்கிறது.

9) பொலிகண்டி சீனித்தொழிற்சாலைக் கான யந்திரங்கள் நீராவிக் கப்பல்கள் மூலம் கொண்டு வரப்பட்ட போது குறு கிய தொலைவிலிருந்தே அவை இறக் கப்பட்டன.

10) பல நூற்றாண்டுகளாக இப்பகுதியில் கப்பல்கள் கட்டும் தளங்கள் அமைந் துள்ளன.

11) இரண்டு மைல் தொலைவில் உள்ள தொண்டைமானறு ஆற்றை ஒரு சிறிய தொகை செலவு செய்து முகத்துவாரம் உட்பகுதி என்பன வற்றை ஆழமாக்கு வதன் மூலம் சூறாவளி, போர் அபாயம் என்பன ஏற்படும் காலங்களில் கப்பல் களை இந்த ஆற்றுக்கு கொண்டு வந்து நங்கூரமிட்டுப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

12) Bay of Bengal Pilot இன் 17. 10. 1941 வெளியீட்டில் வட இலங்கையில் உள்ள ஏனைய துறைமுகங்களின் கப்பல்கள் உட்செல்லும் பகுதியை விட வல்வைத் துறைமுகத்தின் பகுதி திறமையானது எனக் குறிக்கப்பட்டுள்ளது.

13) ஊர்காவற்றுறை துறைமுகத்தை அண்டிய பகுதிகள் நீரோட்டம் அதிகமாக உள்ள மையினால் மண், சேறு என்பனவற்றை அடிக்கடி வாரி எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

14) தென்மேற்கு பருவக்காற்று திடீர்திடீரென மாற்றமடைந்து கச்சான் காற்று வீசும் போது இந்த மாற்றத்தினால் ஊர்காவற் றுறை துறைமுகம் அதிக பாதிப்புக் குள்ளாக வேண்டிவரும்.

வல்வை சேவா சங்கத்தினரால் மட்டுமல்லாது வல்வை நகரசபை போன்ற அமைப்புக்களினாலும் வல்வெட்டித்துறையை ஒரு துறைமுக நகராக்கும் வண்ணம் கோரிக்கைகள் விடப்பட்டிருந்தும் இறுதியில் அரசினரால் காங்கேசன்துறையே துறைமுக மாக்கப்பட்டது. கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் காங்கேசன்துறையை அண்டிய பகுதிகள் ஒரு பாதுகாப்பு வலய மாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இத்துறை முகம் வடபகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு துறைமுகமாக விளங்கி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் வணிகம்

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் நீராவிக்கப்பல்கள் கடற் பிரயாணம் கடல் வணிகம் போன்றவற்றில் ஈடுபடுவதற்கு முன்னதாக பாய்க்கப்பல்களே பாவிக்கப்பட்டு வந்துள்ளன. பாய்க்கப்பல்களை வல்வை முதலாளிமார்களும், இந்தியச் செட்டிமார்களும் தமது கடல் வணிகத்தில் ஈடுபடுத்தினர். இந்தியச் செட்டிமார்கள் தமது கப்பல்களில் சில வற்றை வல்வெட்டித்துறை மேஸ்திரிமாரைக் கொண்டு கட்டுவித்ததோடு வல்வெட்டித்துறை மாலுமிகளையும் அக்கப்பல்களில் பணிக்கமர்த்தினார்கள். இரண்டாவது உலக மகா யுத்தத் திற்கு முன்னர் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சுமார் அறுபது பெரிய பாய்க்கப்பல்கள் கடல் வணிகத்தில் ஈடுபட்டிருந்தன. பெரிய பாய்க்கப்பல்கள் மூன்று பாய்மரங்களைக் கொண்ட தாயும் 12,000 அரிசி மூடைகளை ஏற்றிச் செல்லக்கூடியனவாயும் இருந்தன. இவ்வகைக் கப்பல்கள் பெரும்பாலும் தூர இடங்களுக்குச் சென்று வருவனவாக இருந்ததோடு அவை ஊர்காவற்றுறை துறைமுகத்திலிருந்தே தமது கடற் பிரயாணத்தை ஆரம்பிப்பனவாக இருந்தன. சிறிய ரகப்பாய்க்கப்பல்கள் வல்வையிலிருந்தே பயணத்தை ஆரம்பித்தன.

இலங்கைத் தேசாதிபதியாக இருந்த Sir Henry Blake என்பவர் 1905ம் வருடம் வட பகுதித் துறைமுகங்களைப் பார்வையிட வந்த சமயம் சித்திரா பௌர்ணமி தினத்தன்று வல்வெட்டித்துறைக் கடலில் முப்பதுக்கும் மேற்பட்ட கப்பல்கள் தரித்து நின்றதாகக் கூறினார். கொழும்பு, திருகோணமலைத் துறைமுகங்களைத் தவிர இவ்வளவு பெருந்தொகையான கப்பல்களைத் தான் பார்க்கவில்லையெனவும் அவர் புகழ்ந்துள்ளார்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை சிறியதும், பெரியதுமாக 115 வெளிக்கடலோடும் கப்பல்கள் வல்வெட்டித்துறையிலிருந்து செயல்பட்டுக் கொண்டிருந்தன. இவைகளில் அறுபது கப்பல்கள் வல்வை முதலாளிமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குச் சொந்தமானவையாகும். தன லக்ஷ்மி, தைர்யலக்ஷ்மி, சீதாலக்ஷ்மி போன்ற கப்பல்கள் இராமனாதபுரம் இராஜா குடும்பத்துக்குச் சொந்தமானவையாகும். ஏர்லக் கட்டர் முதலாளிக்குச் சொந்தமான எட்டுக்கப்பல்களும், இந்தியச் செட்டிமார் களின் பதினெட்டுக் கப்பல்களும், நல்லூர் கந்தசாமி கோயிலின் இரண்டு கப்பல்களும், வேளாங்கண்ணி கோயிலின் மூன்று கப்பல் களும், பருத்தித்துறை மு. பொன்னுச்சாமி அவர்களின் நான்கு கப்பல்களும், பர்மிய முதலாளிமார்களின் மூன்று கப்பல்களும் வல்வையிலிருந்து கடல் வணிகத்தினை மேற்கொண்ட ஒரு சில கப்பல்களாகும். இவைதவிர தொண்டைமானாறு சி.வீரகத்திப் பிள்ளை அவர்களின் ஆதிபூரணி, திருப்பதி வெங்கடாசலபதி, சிவசுப்பிரமணியபுரவி, வள்ளிநாயகி, தெய்வநாயகி, கோக்கநாடா, பேரானந்தவல்லி, நித்தியானந்த கல்யாணி என்பனவும், வல்வெட்டித்துறை திருமதி. சின்னத்தங்கம் அவர்களின் மதுரை மீனாட்சி, சுபத்திரையம்மா, விநாயக பாக்கியலட்சுமி, கருங்கடல் வெற்றி வேலாயுதம், சோம சுந்தரம், நாகரிகத்துல்லா, மதுரை சொக்க லிங்க புரவி, காசி அன்னபூரணி, ஐதிறோய் போன்ற கப்பல்களும், வ. இராமசாமிப் பிள்ளை அவர்களின் சிவகாமசுந்தரி, ஆதி லட்சுமி, சண்முகசுந்தரலட்சுமி, திருநிலை நாயகி, நரசிம்மசாமி என்பனவும், கந்தக் குட்டியார் அவர்களின் புதல்வகளான கதிரிப்பிள்ளை, வேலுப்பிள்ளை, பொன்னம் பலம் மற்றும் அருளம்பலம் ஆகியோர் வச மிருந்த ஆனந்தபூரணி, ஜெயலட்சுமி, ஸ்ரீமகாலட்சுமி என்பனவும், தி.வெங்கடாசலம் பிள்ளையவர்களது பன்னிரண்டு கப்பல் களும், ஞா. சங்கரப்பிள்ளையவர்களின் ஏழு கப்பல்களும் கடல் வணிகத்தில் ஈடுபட்டிருந் தன. இவர்களில் தி.வெங்கடாசலம்பிள்ளை யவர்களும், ஞா. சங்கரப்பிள்ளையவர்களும் சங்கு வியாபாரத்தில் முன்னணி வகித்தவர் கள்.

மேலே குறிப்பிடப்பட்ட பாய்க்கப்பல் கள் அனைத்திலுமே வல்வையரே மாலுமி களாக இருந்துள்ளார்கள். இக்கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களான அதிராம் பட்டினம், நாகபட்டினம், காக்கநாடு, கல்கத்தா, விசாகபட்டினம், முத்துப்பேட்டை, பாம்பன், தொண்டி, சிட்டாகொங், மலபார், கொச்சின், கள்ளிக்கோட்டை (கலிக்கற்), திருவனந்தபுரம், வேப்பூர், மங்கலபுரம் (மங்களூர்), காரைக்கால், பறங்கிப்பேட்டை, கடலூர், பாண்டிச்சேரி, மலபார், தூக்குக்குடி போன்றவற்றிற்கும், தூர இடங்களான ரங்கூன், அரக்கன், மோல்மீன், அக்யாப், பினாங்கு, பாகிஸ்தான், மலேஷியா, சிங்கப் பூர், நிக்கோபார், யாவா, சுமத்திரா, அரேபியா, போர்னியோ, சீயம் போன்றவற் றிற்கும், கடல் வணிகத்திற்காகச் சென்று வந்துள்ளன. இவை தவிர இந்தியாவின் ஒரு துறைமுகத்திலிருந்து இன்னொரு துறை முகத்துக்கும் பொருட்களை ஏற்றியிறக்கும் சேவையிலும் ஈடுபட்டிருந்தன.

ஆதியில் இலங்கையிலிருந்து இந்தி யாவுக்கு யானைகள் கொண்டு செல்லப்பட்ட தாக சுவாமி ஞானப்பிரகாசர் தெரிவித் துள்ளார். வல்வையின் கடற்கரையோரமாக உள்ள மீனாட்சி அம்மன் கோவிலுக்கும், சந்தியை அண்மித்துள்ளதாக உள்ள நடராசா வீதிக்கும் இடைப்பட்ட நிலங்கள் "யானை விழுந்தான்" எனப் பெயர் கொண்டு அழைக் கப்படுகின்றது. இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்படவுள்ள யானைகள் இந்தப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டு கட்டி வைக் கப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டதாகத் தெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. யானைகள் இங்கிருந்து இந்தியாவுக்கு ஏற்றிச் செல்லப்பட்டது போல் இந்தியாவின் சீர்காழி, சிதம்பரம், வேதாரணியம் போன்ற இடங்களிலிருந்து வர்த்தகர்களினால் ஆடுமாடுகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. இவைதவிர எமது கப்பல்கள் மூலம் சங்கு, புகையிலை, பனை, சுருட்டு, மீன், கருவாடு, உப்பு, தேங்காய், கராம்பு, கறுவா, ஏலக்காய், ஜாதிக்காய், பாக்கு, கருங்கல் போன்ற பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. புறப்படும் கப்பல்களுக்கு தேவையான பொருட்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் மணல் ஏற்றிக் கொண்டு செல்லப்படும். ஏனென்றால் கப்பலின் அடிப்பாகம் சமனாக இருந்தால் வெளிக் கடலில் பயணம் செய்வது இலகுவாக இருக்கும்.

கப்பல்கள் திரும்பி வரும் சமயம் கச்சான், எள்ளு, கடலை, பருப்பு, பயறு போன்ற தானிய வகைகள் காக்க நாடாவிலிருந்தும், கள்ளிக்கோட்டை (கலிக்கற்), வேப்பூர், மங்கலபுரம் (மங்களூர்) போன்ற இடங்களிலிருந்து ஓடுகளும், அதிராம்பட்டினத்திலிருந்து மாடுகளும், பர்மாவின் ரங்கூன், அக்யாப் ஆகிய இடங்களிலிருந்து அரிசி, நெல், தேக்கமரம் போன்றனவும் கொண்டு வரப்பட்டன. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட இதர பொருட்கள் குரக்கன், கறிச்சரக்கு, தேக்குமரம், தவிடு, மூங்கில், புட்டரிசி, சீமெந்து, சட்டி, பானை, ஆட்டுக்கல், செங்கல் என்பனவாகும். இப்படி கப்பல்கள் சரக்குகளுடன் பிரயாணம் செய்யும் சமயம் புயல் அல்லது சூறாவளி ஏற்பட்டால் சரக்குகள் கடலுக்குள் வீசப்படும். இப்படி வீசப்பட்ட பின்னரும் அபாயம் ஏற்படுமென்று கண்டால் கப்பலின் பாய்மரத்தைத் தறித்த பின்னரே கப்பலின் பயணம் தொடரப்படும்.

வல்வெட்டித்துறையில் காற்றடிக்கின்ற காலங்களிலும் ஏனைய காலங்களிலும் பெரியகப்பல்கள் ஊர்காவற்றுறையில் கட்டப்படுவது உண்டு. இச்சந்தர்ப்பங்களில் இப்பெரிய கப்பல்களில் ஏற்றிவரப்படும் உணவுப் பொருட்களும், இதர பொருட்களும் ஊர்காவற்றுறையில் களஞ்சியப்படுத்தப்பட்டு இதர பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுவது வழக்கம் இதனை மையமாக வைத்து ஒரு நாட்டார்பாடல் தீவுப்பகுதிகளில் வழக்கிலிருந்ததாகவும் தமது பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் கும்மி பயின்ற மாணவிகளுக்கு அதனைச் சொல்லிக் கொடுத்ததாயும் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார். அந்தப்பாடல் வருமாறு:

வல்வெட்டித்துறைப் பாய்மரக் கப்பலில்
வந்து குவியுது பண்டமடி
வாய் நிறையத் திண்டு வெத்திலை போடலாம்
வாருங்கோ கும்மி அடியுங்கடி
வத்தை, சலங்கு, கட்டுமரம், தோணி,
வள்ளங்கள் வந்து குவியுதடி
எத்தனை பண்டங்கள் ஏத்தி வருகுது
எல்லாமே கொள்ளை லாபமடி.

கடல் வாணிபமானது 1935ல் பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு இங்கிலாந்தின் நேரடி ஆட்சியில் வரும்வரை மும்முரமாக நடைபெற்று வந்தது. அது முதல் பர்மிய அரசு தனிக்கொள்கை வகுத்து வணிகத்தொழிலையும் தானே நடாத்தத் தொடங்கியது. இதன் காரணமாக நெல், அரிசி வியாபாரங்களை எமது வணிகர்களால் மேற்கொள்ளமுடியாது போனதுடன் இரண்டாம் உலக மகாயுத்தத்துடன் பர்மாவை யப்பான் கைப்பற்றியதும் எமது கடலோடிகளின் கடல் வணிகத்தை முற்றாக அறுத்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் கப்பல் கட்டி வணிகம் செய்து பலவிதமான பொருட்களை வெளி நாடுகளுக்குக் கொண்டு சென்றதோடு எமக்குத் தேவையான பொருட்களைச் சட்டரீதியாகத் தருவித்துக் கொண்டிருந்த கடல் வணிகத்தை இலங்கை அரசாங்கம் கப்பல் கட்டும் தொழிலை ஊக்குவிக்காமல் எம்மவர்களை வீழ்த்த வேண்டுமென்ற நோக்கோடு அரச கூட்டுத்தாபனங்களை ஆரம்பித்தும் பிற நாட்டுக்கப்பல்கள் மூலம் எம்மவர் செய்து வந்த வணிகத் தொழிலையும் செய்யத்தொடங்கியது. அத்துடன் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு அரசாங்கம் முற்று முழுதாக ஏற்றுமதி இறக்குமதியை மேற்கொள்ள ஆரம்பித்த காரணத்தினால் எம்மவர்கள் சட்டவிரோத தொழிலை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டு இத்தொழிலுக்கு "கள்ளக் கடத்தல்" என்ற நாமமும் சூட்டப்பட்டது. ஆனால் அரசாங்கமோ எம்மவர்களின் தொழிலை ஊக்குவிக்க ஒருவித நடவடிக்கையையும் எடுக்காமல் "கள்ளக் கடத்தலை" எவ்வாறு இல்லாமல் செய்யலாம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டது. இதன் ஒரு கட்டமாக அப்போதைய பொலிஸ்மா அதிபராக இருந்த சேர் றிச்சாட் அலுவிகார அவர்களை 1950 செப்டம்பரில் வல்வைக்கு அனுப்பி வைத்தது. வல்வை பட்டினசபையில் நடைபெற்ற மகாநாட்டில் கடல் வணிகம் மாலுமித் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டிருந்த 2000க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு இலங்கையின் ஏனைய பாகங்களிலுள்ள துறைமுகங்களிலும் கடற்படையிலும் தொழில் வாய்ப்பினை வழங்க முன்வந்தால் இவர்கள் கள்ளக்கடத்தல் தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. இந்த மகாநாட்டில் கலந்து கொண்ட பொலிஸ்மா அதிபர் சேர் றிச்சாட் அலுவிகார அவர்கள் தாம் முன்னர் பருத்தித்துறையில் பொலிஸ் மாஜிஸ்ட்ரேட் ஆகக் கடமையாற்றிய சமயம் வல்வெட்டித்துறை துறைமுகத்திலும் இதரதுறைமுகங்களிலும் அறுபதுக்கு மேற்பட்ட பாய்க்கப்பல்கள் பர்மா, இந்தியா போன்றவற்றுடனான கடல் வணிகத்தில் ஈடுபட்டிருந்ததை அறிந்து கொண்டதாயும் தெரிவித்தார். மேற்படி கப்பல்கள் அனைத்திலுமே வல்வை வாசிகளே மாலுமிகளாக இருந்ததாயும் கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்தோர் அனைவருமே வல்வை வாசிகளாக இருந்துள்ளார்கள் என்பதையும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி மகாநாட்டை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய பொலிஸ்மா அதிபர் உலகமகாயுத்தத்துக்கு முன்னர் வல்வை வாசிகள் கடத்தல் காரர்களாக அல்லாமல் மாலுமிகளாகவே இருந்துள்ளார்கள் என்பதைத் தாம் உணர்ந்து கொண்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஒல்லாந்த அரசினர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்ட போது தனது கப்பல்கள் மூலம் உணவுப் பொருட்களை வரவழைத்துக் கொடுத்தவரும் வல்வை வாசி ஒருவரே. இதற்காக ஒல்லாந்த அரசால் அன்னார் "முதலியார்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இதே போல் 1972 காலப்பகுதியில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசு செய்த போது நாட்டில் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டை நீக்கிக் கொள்வதற்காக பிறநாட்டிலிருந்து உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து வழங்கியவர்களும் வல்வைக் கடலோடிகள் வல்வைக் கடல் வணிகர்கள் ஆகியோர். இதற்காக இலங்கை அரசால் இவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம் "கள்ளக்கடத்தல்காரர்" என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் பதியப்படவேண்டிய முக்கிய சம்பவங்கள்

### 1) அன்னபூரணியின் அமெரிக்க பயணம்.

அன்னபூரணி எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட "அன்னபூரணி' அம்மாள்" என்னும் இரட்டைப் பாய்க்கப்பல் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுந்தர மேத்திரியார் என்பவரால் 1930ம் வருடம் உள்ளூர் வேப்பமரம், இலுப்பைமரம் என்பனவைக் கொண்டு கட்டப்பட்டது. இதன் நீளம் 89 அடியாகும்.

அமெரிக்கக் கோடீஸ்வரரான வில்லியம் அல்பட் றொபின்சன் என்பவர் 1936ம் ஆண்டளவில் வல்வெட்டித்துறை துறைமுகத்துக்கு விஜயம் செய்திருந்த போது அவ்விடம் நங்கூரமிடப்பட்டிருந்த பல கப்பல்களை பார்க்க நேர்ந்தது. அச்சமயம் அங்கு நங்கூர மிட்டிருந்த அன்னபூரணியைப் பார்த்ததும் அதனை விலை கொடுத்து வாங்கிவிட வேண்டு மென்று தீர்மானித்துவிட்டார். இக்கப்பலின் தண்டயல் வல்வையைச் சேர்ந்தவராக இருந்த போதும் அதன் உரிமையாளர் இந்திய நாட்டின் தேவகோட்டை என்னுமிடத்தைச் சேர்ந்த நாகப்பச்செட்டியார் என்பவராகும். றொபின்சன் அவர்கள் அன்னபூரணியை விலை கொடுத்து வாங்கிவிடத் தீர்மானித்ததும் இந்தத்துறையில் சம்பந்தப்பட்ட வல்வையரான கதிரவேலுப் பிள்ளை என்பவரையும் கூட்டிக்கொண்டு தேவ கோட்டைக்குச் சென்று நாகப்பச் செட்டி யாரைச் சந்தித்துப் பேசி ரூபாய் அறுபதினாயிரத்தைச் செலுத்தி அன்னபூரணியைத் தன தாக்கிக் கொண்டு விட்டார்.

அடுத்து அன்னபூரணி அமெரிக்கா புறப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற் கொள்ளப்பட்டன. முன்னர் இக் கப்பலில் தண்டயலாக இருந்த க.தம்பிப்பிள்ளை என்பவரே கப்பலை அமெரிக்கா கொண்டு செல்வதற்காக அமர்த்தப்பட்டார். 27. 2 .1937ல் அன்ன பூரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வையிலிருந்து புறப்பட்டு கொழும்பு சென்றடைந்தது. அவசியமேற்படும் சந்தர்ப் பங்களில் பயன்படுத்துவதற்காக 'வாக்கார்' அன் கொம்பனியில் எஞ்சின் பொருத்தப் பட்டது. சகல வேலைகளும் பூர்த்தியானதும் 4. 3. 1937ல் அன்னபூரணி கொழும்புத்துறை முகத்திலிருந்து க. தம்பிப்பிள்ளைத் தண்டயல் தலைமையில் இதர வல்வைக் கடலோடி களான தா. சபாரெத்தினம், ஐ. இரத்தின சாமி, க. நடராசா, சேது நவரத்தினராசா, சி. சிதம்பரப்பிள்ளை, பூ. சுப்பிரமணியம், ஐ. தில்லையம்பலம், சாண்டோ சங்கரதாஸ் ஆகியோருடன் பயணத்தைத் தொடங்கி னாள். இக்கப்பலில் அதன் புதிய உரிமை யாளரான றொபின்சன் அவர்களும் இங்கி லாந்து நாட்டைச் சார்ந்த 'குக்' என்பவரும் உடன் சென்றார்கள்.

கொழும்பிலிருந்து புறப்பட்ட அன்ன பூரணி 2000 மைல்களைத் தாண்டி ஏடன் துறைமுகத்தில் நங்கூரமிட்டாள். இச்சந்தர்ப் பத்தில் றொபின்சன் அவர்கள் அமெரிக்கா சென்று விட தம்பிப்பிள்ளை தண்டயலுடன் சேது நவரத்தினராசா, நடராசா, சாண்டோ சங்கரதாஸ், ஆகியோர் இலங்கை திரும்பி விட ஏடனிலிருந்து அன்னபூரணி புறப்படுவ தற்கு சில காலம் பொறுத்திருக்க வேண்டி யதாயிற்று. ஆறுமாதங்கள் கழிந்த பின்னர் அமெரிக்கா சென்ற றொபின்சன் அவர்கள் தனது மனைவி புளோரன்சுடன் ஏடன் திரும்பி வந்தார். இதே சமயம் இலங்கை வந்திருந்த தண்டயல் தம்பிப்பிள்ளை அவர்களும் ஏடன் திரும்பியிருந்தார். றொபின்சன் அவர் களுக்கு உதவியாளராக வந்திருந்த 'குக்' என்ப வரும் தனது நாட்டுக்கு திரும்பிவிட அன்னபூரணி தனது பயணத்தைத் தொடங்கி செங்கடல் வழியாக சூடானைச் சென்றடைந் தாள். சூடான் துறைமுகத்தில் நாற்பது நாட்கள் தரித்து நின்று விட்டு அவ்விடமிருந்து புறப்பட்டு 120 மைல் நீளமான சூயெஸ் கால் வாயூடாக எகிப்தின் துறைமுக நகரமான இஸ்மாலியா துறைமுகத்தில் நங்கூரமிட்டாள். இவ்விடம் கப்பல் ஆட்டம் காணாமல் இருக் கும் பொருட்டு மண்மூடைகள் ஏற்றப்பட்டன. இவ்விடமிருந்து புறப்பட்ட அன்னபூரணி சுயெஸ்கால்வாயின் முடிவிடமான 'போட் செயிட்டை' 30.1.1938 சென்றடைந்தாள். போட்செயிட் துறைமுகத்தைச் சென்றடைந்த வேளை அன்னபூரணி அமெரிக்கா வந்தடைந் ததும் அவளை வரவேற்பதற்காக ஒழுங்கு கள் மேற்கொள்ளும் நோக்குடன் றொபின்சன் அவர்கள் தனது மனைவியுடன் அமெரிக்கா பயணமானார். கப்பல் போட்செயிட்டிலிருந்து புறப்பட்ட மூன்றாம் நாள் பயங்கர சூறாவளி ஒன்று கப்பலைத் தாக்கியது. சூறாவளியின் தாக்கம் குறைவடைந்ததை அடுத்து பயணத் தைத் தொடர்ந்த கப்பல் பெய்ரூட் துறை முகத்தைச் சென்றடைந்தது. சூறாவளியின் தாக்கத்தினால் சேதமாக்கப்பட்ட கப்பலின் பாய்கள் இவ்விடம் சீரமைக்கப்பட்டன. வேலைகள் முடிவடைந்து கப்பல் புறப்பட்ட சமயம் காலநிலை சீரற்று இருந்தமையால் திரும்பவும் துறைமுகத்தில் தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பெய்ரூட்டி லிருந்து புறப்பட்டு கிறீஸ் நகரத்துக்குத் தென் பக்கமாக அமைந்துள்ள கிறீட்தீவின் 'கண்டியா' துறைமுகம் சென்றடைந்தது. கிறீட்டில் தங்கி நின்ற சமயம் றொபின்சனின் ஏற்பாட்டின் பிரகாரம் கப்டன் டொனால் ஏ. மத்குயிஷ் என்பவர் அத்திலாந்திக் கடலைக் கடப்பதற்கு உதவி செய்யும் நோக்குடன் அன்னபூரணி யின் பயணத்தில் இணைந்து கொண்டார். அங்கிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்துக் கூடாக 'ஜிப்றோல்டர்' துறைமுகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்ததும் தில்லையம்பலம் அவர்கள் இலங்கை திரும்பிவிட கப்பலில் ஐந்து மாலுமிகளே எஞ்சியிருந்தனர். ஜிப்றோல்டர் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட அன்ன பூரணி போர்மியூடா சென்றடைந்ததும் அமெரிக்கா சென்றடைய இன்னும் 600 மைல் களே எஞ்சியிருந்தன. போர்மியூடாவின் 'ஹமில்டன்' துறைமுகத்திலிருந்து புறப்பட்டு ஒன்றரை வருட நீண்ட பயணத்தின் பின் அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற துறைமுக மான 'குளோசெஸ்டர்' துறைமுகத்தை 1. 8. 1938ல் 'பிரிகன்ரின் புளோரன்ஸ் சீ றொபின் சன்' (Brigantine Florence C. Robinson) என அதன் புதிய உரிமையாளரால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட அன்னபூரணி சென்ற டைந்தாள். இந்து சமுத்திரம், அரபிக் கடல், செங்கடல், சுயெஸ் கால்வாய், மத்தியதரைக் கடல், பயங்கரம் மிக்க அத்திலாந்திக் கடல் என்பவற்றினூடாக பத்தாயிரம் மைல்களைத் தாண்டி 27. 2. 1937ல் வல்வையிலிருந்து புறப் பட்ட அன்னபூரணி 1. 8. 1938ல் அமெரிக்கா சென்று சாதனை படைத்துள்ளாள்.

அவசியமேற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் என்ஜின் பூட்டப்பட்டி ருந்தாலும் அதனை பாவித்த சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதாகவே இருந்தன. இறுதியில் பூட்டப் பட்ட என்ஜின் பழுதடைந்தமையினால் பாய் களின் உதவியுடனேயே அமெரிக்கா சென்ற டைந்தது. வெளிநாட்டவரின் கப்பலை ஆங்கி லேயரிடமிருந்து வாங்கி சுதேச வர்த்தகத் துக்கு வ. உ. சிதம்பரம் அவர்கள் உபயோ கித்த செய்தி எல்லோரும் அறிந்ததொன் றாகும். ஆனால் வல்வை மண்ணில், வல்வை மேத்திரியார் ஒருவரினால் உள்ளூர் வேப்ப மரங்களைக் கொண்டு கட்டப்பட்டு அமெரிக் கர் ஒருவரினால் விலை கொடுத்து வாங்கப் பட்டு வல்வை மாலுமிகளால் அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டுக் கையளிக்கப்பட்ட அன்னபூரணி கப்பலைப் பற்றியும் அதில் வல்வையின் பங்களிப்பும் பலருக்கும் தெரிந் திருக்க வாய்ப்பில்லை.

அன்னபூரணி வல்வையிலிருந்து புறப்பட்ட சமயம் நவீன வசதிகள் கொண்ட கருவிகள் எவையும் இருக்கவில்லை. இருந்ததெல்லாம் உலகப்படம், திசையறி கருவி, கடலின் ஆழத்தை அளக்கும் கருவி, ஒருசிறிய படகு என்பனவே யாகும். இவற்றை யெல்லாம் விட மாலுமிகளிடம் இருந்த துணி வும், இயற்கையின் மாறுதல்களைக் கொண்டு நேரத்தையும் தூரத்தையும் அறிந்து கொள் ளும் சக்தியுமே பேருதவியாக இருந்தன வென்றல் மிகையாகாது.

வல்வையிலிருந்து புறப்பட்ட அன்ன பூரணி அமெரிக்காவின் வடகோடி யிலுள்ள 'மசாசூசெற்ஸ்' மாகாணத்தில் அமைந் துள்ள குளோசெஸ்டர் துறைமுகம் சென்ற டைந்த விபரம் கப்பலின் படம் என்பன அமெரிக்கப் பத்திரிகையான Boston Globe என்னும் நாளேட்டின் 2. 8. 1938 பதிப்பில் அதன் நிரூபர் Nat BARROWS என்பவரால் வெளியிடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 27.02.1937 | வல்வையிலிருந்து கொழும்பு புறப்பாடு |
| 04.03.1937 | கொழும்பிலிருந்து பயணம் ஆரம்பம் |
| 27.03.1937 | ஏடன் துறைமுகம் சென்றடைந்தது |
| 18.10.1937 | ஏடனிலிருந்து புறப்பாடு |
| 01.11.1937 | சூடான் துறைமுகம் சென்றடைந்தது. |
| 13.12.1937 | சூடானிலிருந்து பயணம் |
| 26.12.1937 | சூயெஸ் சென்றடைந்தது |
| 09.01.1938 | சூயெஸ்சிலிருந்து பயணம் |
| 10.01.1938 | இஸ்மாலியா சென்றடைந்தது |
| 30.01.1938 | இஸ்மாலியாவிலிருந்து பயணம் அன்றே போட் செயிட் சென்றடைந்தது |
| 20.02.1938 | போட்செயிட்டிலிருந்து புறப்பாடு |
| 21.03.1938 | கிறீற் தீவின் கன்டியா துறைமுகம் சென்றடைந்தது |
| 29.04.1938 | கன்டியாவிலிருந்து பயணம் |
| 02.06.1938 | ஜிப்றோல்டர் சென்றடைந்தது |
| 09.06.1938 | ஜிப்றோல்டரிலிருந்து புறப்பாடு |
| 21.07.1938 | போர்மியூடாவின் ஹமில்டன் துறைமுகம் சென்றடைந்தது |
| 24.07.1938 | போர்மியூடாவிலிருந்து பயணம் |
| 01.08.1938 | இறுதியாக அமெரிக்காவின் மசாசூசெற்ஸ் மானி லத்தின் குளோசெஸ்டர் துறைமுகத்தை அடைந்து நங்கூரமிட்டது. |

## 2) கடலில் மூழ்கிய கப்பல்களை மீட்டெடுத்தோர்.

இங்கிலாந்து நாட்டில் கட்டப்பட்ட ஆங்கிலேய வர்த்தக நிலையத்துக்குச் சொந்தமான 12000 தொன் நிறையுடைய 'பிறிக் அத்லாந்திக்கிங்' (Brig Atlantic King) என்னும் நான்கு பாய்மரங்களைக் கொண்ட ஸ்கெச் (Sketch) ரகக் கப்பல். இக்கப்பல் 1850ம் வருடமளவில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு திருகோணமலைக்குச் சமீபமாக வந்துகொண்டிருந்த சமயம் எதிர்பாராத வித மாகச் சரக்குகளுடன் கடலில் மூழ்கிவிட்டது. கப்பல் உரிமையாளர்களான ஆங்கிலே யரால் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் கப்பலை மீட்கமுடியாது போய்விட்டது. வல்வை கப்பல் முதலாளிகளில் ஒருவரான திரு. வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் மூழ்கிய நிலையிலேயே கப்பலை ஏலத்தில் எடுத்தார். பர்மாவிலிருந்து கொண்டு வரப் பட்ட தேக்கமரங்கள், சுழிஓடிகள், கடலோடி கள் ஆகியோருடைய உதவியுடன் கப்பலை மீட்டெடுப்பதற்கான வேலைகள் ஆரம்பிக் கப்பட்டன. முதலில் கப்பலில் உள்ள பொருட்கள் மேலே கொண்டு வரப்பட்டன. பின்னர் தேக்கமரங்கள் கப்பலில் மேற்பக்க மாக மிதக்கக் கூடிய நிலையில் வைத்துக் கொள்ளப்பட்டு கயிறு கப்பி என்பவற்றின் உதவியுடன் மூழ்கிய கப்பல் சிறிது சிறிதாக மேலே கொண்டுவரப்பட்டு கடலின் நீர்மட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை உயர்த்தப்பட்டது. நீர்மட்டம் வரை கொண்டுவரப்பட்ட கப்பல் சிறிது சிறிதாக கரைக்கு இழுத்துவரப்பட்டது. கரைக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் வேண்டிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் புதிய உரிமையாளரால் கடல் வணி கத்தில் ஈடுபடுத்தப்பட்டது.

இன்னொரு நீராவிக் கப்பல் s. s. st. John என்பது இது 1916ம் வருடம் காங் கேசன்துறை துறைமுகத்துக்குச் சமீபமாகக் கடலுள் மூழ்கிவிட்டது. இக்கப்பலையும் மீட்டெடுத்தவர் பிரபல கப்பல் கட்டும் மேத் திரியாரும், கப்பல் உரிமையாளரும் வர்த்த கருமான வடிவேலு மேத்திரியார் என்பவ ராகும். இவரும் இக்கப்பலை மீட்டெடுத்த தோடு அதனை விலை கொடுத்து வாங்கி அதன் மூலம் பொருளீட்டிக் கிடைக்கப்பெற்ற வருவாயில் கீரிமலையில் நகுலகிரி நாரா யண சுவாமி கோயிலைக் கட்டினார்.

1965ம் வருட முற்பகுதியில் இந்தியர் களுக்குச் சொந்தமான மீன்பிடி இழுவைப் படகு ஒன்று திருகோணமலைக்குச் சமீபமாக கடலுள் மூழ்கி விட்டது. கப்பலின் உரிமை யாளரான இந்தியர்கள் கப்பல் கட்டும் மேத்திரியாரான ச. பாலசுப்பிரமணியம் என்ப வரை அணுகினார்கள். அச்சமயம் ச. பால சுப்பிரமணியம் மேத்திரியாரால் கட்டப்பட்டு வல்வை வ. இராமசாமிப் பிள்ளைக்குச் சொந்தமான திருநிலைநாயகி என்னும் பாய்க்கப்பல் திருகோணமலையில் நங்கூர மிட்டிருந்தது. பெரிய பனைமரங்கள் தறிக்கப் பட்டுக் கொண்டு செல்லப்பட்டு திருநிலை நாயகி என்னும் கப்பலுடன் சேர்ந்து இணைக் கப்பட்டது. மூழ்கிய கப்பலுக்குச் சமீபமாக கொண்டு செல்லப்பட்ட திருநிலைநாயகி கடல்நீர் மட்டத்துக்குச் சிறிது மேலே இருக் கும் வரை அதனுள் நீர் நிரப்பப்பட்டது. ஏற்க னவே இக்கப்பலுடன் பிணைக்கப்பட்ட பனைக் குற்றிகளுடன் மூழ்கிய கப்பல் பிணைக்கப்பட்டன. அதனையடுத்து திரு நிலைநாயகி கப்பலில் நிரப்பப்பட்டிருந்த நீர் வெளியேற்றப்பட்டது. நீர் வெளியேற்றப்பட்ட சமயம் அக்கப்பல் மேலே வர மூழ்கிய கப்ப லும் சிறிது சிறிதாக நீர் மட்டம் வரை வந்ததும் அதனுள் இருந்த துவாரங்கள் அடைக்கப் பட்டு நீர் வெளியேற்றப்பட்டு மிதக்க விடப் பட்டது.

## 3) தென் இலங்கை அரசியல் வாதி கள் கடல்மார்க்கமாக இந்தியா செல்ல உதவியோர்.

இலங்கை பிரித்தானிய அரசிட மிருந்து 1948ல் சுதந்திரமடைந்தது. இந்தச் சுதந்திரத்தைப் பெறுதவற்காக கிளர்ச்சி செய்தவர்களில் இடது சாரித் தலைவர் களான என்.எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, பிலிப் குணவர்த்தனா, பேர்னாட் சொய்சா போன்றவர்கள் அடங்குவர். இதற் காக அரசினரால் இவர்கள் கைது செய்யப் பட்டு கண்டி சிறையில் அடைக்கப்பட்டிருந் தனர். சிறையில் இருந்து தப்பி ஓடுவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த இவர்கள் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவே தப்பி வந்து எம்மவர்களிடம் உதவியினைக் கோரி னர். அவர்கள் சில நாட்கள் வல்வையில் தங்க வைக்கப்பட்டு அதன் பின்னர் கடல் மார்க்காக இந்தியா கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் ஷெல்கொம்பனி முருகுப்பிள்ளை, செந்திவேல், சிங்கப்பூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறீ, ஏ. என். வேலாயுதம், எஸ். புவனேஸ்வர ராஜா ஆகியோராகும். எம்மவர்களின் உதவி யினால் இடதுசாரித் தலைவர்கள் ஒரு வித இடைஞ்சலுமின்றி இந்தியா கொண்டு செல்லப்பட்டார்கள்.

இவ்விதம் இந்தியா அனுப்பிவைக் கப்பட்ட திரு. பிலிப்குணவர்த்தனா அவர்கள் இலங்கை அரசில் கைத்தொழில், மீன்பிடித் துறை அமைச்சராக இருந்த சமயம் 31. 10. 1965ல் வல்வைக்கு வருகைதந்து வல்வை சனசமூகநிலைய முன்றலில் நடைபெற்ற கூட்டமொன்றில் இதனை நினைவு கூர்ந்த தோடு தனது நன்றியையும் தெரிவித்திருந் தார்.

### 4) கடலில் மிதந்து சாதனை புரிந்தவர்.

வல்வையைச் சேர்ந்த 36 வயதுடைய திரு. து. யோகரெத்தினராசா. இவர் வல்வை ரேவடிக் கடற்கரையிலிருந்து 200 யார் தூரத்தில் 20 அடி ஆழமான கடலில் தனது கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் முகம் மட்டும் மேலே தெரியக்கூடியவாறு 28. 3. 1980 இலிருந்து 31. 3. 1980 வரை தொடர்ச்சியாக 57.5 மணித்தியாலங்கள் கடலில் மிதந்து சாதனை புரிந்துள்ளர்.

### 5) ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை கடல் மார்க்கமாக அமிர் தம் பதியினரின் மட்டக்களப்பு பயணம்.

1958ல் சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் இனக்கலவரம் வெடித்து இலங்கை அரசினரால் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் ஒரேயொரு தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான திரு. செ. இராசதுரை அவர்களுக்கு உதவியாக இருக்கவும் அங்குள்ள நிலவரங்களை அறிந்து அறிக்கை சமர்ப்பிக்கவும் திரு. அ.அமிர்தலிங்கம் அவர்கள் மட்டக்களப்பு செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமையால் அவர் தரைமார்க்கமாக அங்கு செல்ல முடியாது போய்விட்டது. கடல் மார்க்கமாக இவரை அனுப்பி வைப்பதென்று தீர்மானிக் கப்பட்டது. வல்வை பிரபல வர்த்தகரும் யாழ்ப்பாணம் வைர மாளிகையின் ஸ்தாப கருமாகிய திருமதி கனகசுந்தரம் (இளை யாச்சி) அவர்கள் வள்ளம் ஒன்றைக் கொடுத்து உதவ சில இளைஞர்களின் உதவியோடு அமிர்தலிங்கம் தம்பதியினர் மட்டுநகர் புறப் பட்டுச் சென்றனர்.

### 6) இந்திய இராணுவத்தினரால் 1989ல் வல்வையில் மேற்கொள் ளப்பட்ட படுகொலை.

இந்திய இராணுவம் 'அமைதி காக் கும் படை' என்ற போர்வையில் எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த வேளை அது. 1989 ஆகஸ்ட் 2, 3 ம் திகதிகளில் வல்வையில் போராளி களுக்கும் இந்திய இராணுவத்தினருக்கு மிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்துக்குப் பழிவாங்கும் நோக்குடன் இந்திய இராணு வத்தினரால் எடுக்கப்பட்ட பதில் நடவடிக்கை யில் முதியோர்கள், பெண்கள், குழந்தைகள் இடம் பெயர்ந்து வல்வையில் தஞ்சம் புகுந் திருந்த அகதிகள் உட்பட 63பேர் கொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவிக்கப்பட்டதுடன் 34பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையிலும் அனுமதிக் கப்பட்டிருந்தனர். இறந்தவர்களுடைய இறுதிக் கிரியைகள் கூட ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமையால் உரியமுறையில் செய்ய முடியாது போய் விட்டது. சிலரது உடல்கள் வீடுகளின் உள்ளேயே போட்டு எரிக்கப் பட்டன. 123 வீடுகள் எரிக்கப்பட்டு நாசமாக் கப்பட்டன. 43 கடைகள், 176 மீன்பிடி வள்ளங் கள் வலைகள், வல்வைச் சந்தியிலுள்ள சனசமூக நிலையம் என்பன தீயிடப்பட்டன.

இப்படுகொலையானது 'மைலாய்' படுகொலையை விட படுமோசமானது. இந்திய இராணுவத்தினர் மிகவும் திட்டமிட்ட முறை யில் சம்பவத்தில் பலியானவர்களை நிலத் தில் படுக்க வைத்து முதுகுப் பகுதியில் சுட்டுள்ளனர். இவ்வாறு லண்டனிலிருந்து வெளியாகும் "The Sunday Telegraph' என்னும் பத்திரிகை அதன் 13. 8. 1989 ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் லண்டன் தலைமையகத்தினால் 14. 12. 1989 அன்று அறிக்கையொன்று வெளியிடப் பட்டது. இவ்வறிக்கையில் 1989ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வல்வெட்டித்துறையில் இந்தி யப் படையினர் நடத்திய மனித வேட்டை பற்றி விபரிக்கப்பட்டிருந்தது. இவர்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், தீ வைப்புக்கள், என்பன பற்றியும் குறிப்பிட் டிருந்ததுடன் தொடர்ச்சியாக $2^1/_2$ நாட்களாக இவ்வூரைச் சுற்றி வளைத்து மக்கள் வெளி யேறாதபடி தமது கட்டுப்பாட்டில் வைத்திருந் தமையால் காயமடைந்தவர்களுக்கு எவ்வித வைத்திய வசதிகளையும் எவராலும் வழங்க முடியாமற் போனது எனவும் தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் 11ம் திகதி இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில் 24 பொதுமக்கள் கொல்லப்பட்டமையை ஒப்புக் கொண்ட துடன் இவர்கள் இருதரப்பு மோதலில் அகப் பட்டே கொல்லப்பட்டு இறந்ததாயும் தெரி வித்தது. ஆனால் பிரஜைகள் குழுவினர் இந்தியப் படையினர் நன்கு திட்டமிட்டே கொலைகளைப் புரிந்துள்ளனர் என தெரிவித் தனர். இத்தகவல்களின்படி இந்தியப் படை யினர் தமது சகாக்கள் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே எதிர்க்கும் திரணியற்ற பொதுமக்களை வேண்டுமென்றே கொலை செய்தது தெரியவந்துள்ளது எனவும் மன்னிப்புச்சபை அந்த அறிக்கை யில் குறிப்பிட்டிருந்தது.

பிரித்தானிய இராணுவம் மேற் கொண்ட 'ஜாலியன் வாலா பாக்' படுகொலை. இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட 'ஷப்ரா ஷாடில்லா' படுகொலை, சிங்கள அரசு மேற் கொண்ட 'கொக்கட்டிச்சோலை' படுகொலை, அமெரிக்க இராணுவம் வியட்னாமில் மேற்கொண்ட 'மைலாய்' படுகொலை போன்று இந்திய இராணுவம் வல்வெட்டித்துறையில் மேற்கொண்ட படுகொலையும் வரலாற்றில் பதியப்பட வேண்டிய படுகொலையாகும்.

## 7) பொலிசாரின் கண்ணில் மண்ணைத் தூவிய வல்வை மகன்.

வல்வையைச் சேர்ந்தவர் சி. ஞான லிங்கம் என்பவர். இவர் அரச விரோத செயல் களில் ஈடுபட்டமைக்காக இதர இளைஞர்கள் போன்று பொலிசாரால் தேடப்பட்டு வந்தவர். வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சமயம் 1974ல் பொலிசாரால் கைது செய்யப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகர் கொண்டு செல்லும் நோக்குடன் கைளில் விலங்கிட்டு வல்லை வெளியூடாக ஜீப்வண்டி சென்று கொண்டிருந்தது. பொலிசாரின் வாகனம் வல்லைப் பாலத்தில் ஏறமுற்பட்ட சமயம் ஞானலிங்கம் வாகனத்தின் சாரதி, இதர பொலிசார் ஆகியோரையும் தாக்கியதுடன் ஜீப் வண்டியையும் பிரட்டி விட்டுத் தப்பிச் சென்றுவிட்டார். இதற்குப் பொறுப்பாக வந்த பொலிஸ் அதிகாரி தனது காலை இழந்ததோடு பதவியையும் இழக்க நேரிட்டது.

### 8) ஆயுதப் போராட்டத்துக்கு முன்னர் பொலிசாருக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி

தனது மகன் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுத் தாக்கப்படு வதைக் கேள்விப்பட்டதாய் ஒருவர் பொலிஸ் நிலையம் சென்ற போது அவரும் தாக்கப்பட்டார். இதனைக் கேள்விப்பட்ட வல்வை மக்கள் தாம் ஆளாகிவரும் கொடுமைகளைக் கண்டித்தும், இப்படியான கொடுமைகள் நடைபெறா வண்ணம் சுமுகமான தீர்வு ஒன்றைக் காணவேண்டுமென்ற நோக்குடன் 8. 4. 1967 மாலை வல்வை சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் ச. ஞானமூர்த்தி அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இப் பொதுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர், நகர சபைத் தலைவர், ஆகியோர் உட்பட பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அவ்விடம் ஆயுத பாணிகளாக வந்த இராணுவத்தினரும், பொலிசாரும் பொது மக்களைத் தாக்கினார்கள். ஆயுதப் போராட்டமோ. ஈழப் போராட்டமோ நடைபெறாத அக் கால கட்டத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பொலிசாரைத் திருப்பித் தாக்கினார்கள். அச்சமயம் வீதியால் வந்து கொண்டிருந்த திரு. வ. இராமசாமிப்பிள்ளை அவர்களின் மகன் சிவஞானசுந்தரம் பொலிசாரினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு அவ்விடத்திலேயே பலியாகினார். ஆத்திரமடைந்த இளைஞர்கள் சிலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பல பொலிசார் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரால் பல கடைகள் தீயிடப்பட்டன. துவிச்சக்கர வண்டிகள் சேதமாக்கப்பட்டன. இச்சம்பவத்துக்குப் பொறுப்பாக இருந்த இன்ஸ்பெக்டர் பத்திரானா என்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் இன்ஸ்பெக்டர் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தும் பின்னர் ஏதே ஒரு வகையில் தப்பித்துக் கொண்டார்.

### 9) இராணுவத்தினருக்கு எதிரான சாத்வீகப் போராட்டம்

1965ம் ஆண்டு திரு. வேலும்மயிலும் என்னும் வர்த்தகப் பிரமுகர் ஒருவர் வீதியால் சென்று கொண்டிருந்த வேளையில் இராணுவ வாகனமொன்றினால் அடித்துக் கொல்லபட்டார். இதில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் எதுவுமே நடைபெறாதது போல் அலட்சியமாக சென்று விட்டனர். இராணுவத்தினரின் இப்படியான செயலுக்கு நியாயம் கோரியும் இது போன்ற சம்பவம் மீண்டும் நடைபெறுவதற்கு இடமளிக்கப்படாது என்று அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கோரியும் வல்வை சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் நிலைய முன்றிலில் நீச்சல் வீரன் ஆழிக்குமரன் ஆனந்தன் தலைமையில் தொடர்ச்சியாக நான்கு நாட்கள் உண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம் மேற்கொள்ளப்பட்டது. அரச அதிகாரிகள் உண்ணாவிரதம் இருந்தவர்களைச் சந்தித்து நிவாரணம் பெற்றுத்தருவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

## 10) இராணுவத்தினருக்கு எதிரான ஆயுதப்பிரயோகம்.

1961ம் ஆண்டு தமது தொழிலை முடித்துக் கொண்டு சேதமாக்கப்பட்ட தங்கள் வலைகளைத் திருத்தம் செய்து கொண்டிருந்த ஆதிகோயிலடி கடற்றொழிலாளர்கள் மீது அவ்விடம் வந்த இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்ட வேளை இராணுவச் சிப்பாயின் துப்பாக்கியைப் பறித்தெடுத்து விட்டு அச்சிப்பாயினை கத்தியால் குத்திக் காயப்படுத்தி தமது தன்மான உணர்வைக் காட்டிக்கொண்டார்கள் அப்பகுதி மக்கள்.

## 11) சண்டியன் சரவணையை வளைத்துப்பிடித்தது

நீர்வேலியைச் சேர்ந்த சரவணை என்னும் பல கொலை, கொள்ளை களைச் செய்த சண்டியன். அரசாட்சியினரால் வளைத்துப் பிடிக்கவோ, கைது செய்யவோ முடியாதவாறு தலைமறைவாகத் திரிந்த வேளை ஒரு தடவை வல்வைக்கு கத்தி, சுருள் வாள் சகிதம் வந்து சிவன் கோவிலடியில் நின்றதைக் கண்ட ஒருவர் ஊரவர்களுக்கு இதன் விபரங்களைத் தெரிவித்தார். ஊரவர்களான சிவப்பிரகாசம், அவரது தமையனாரான சிதம்பரநாதன் போன்றோரும் இன்னும் சிலரும் சேர்ந்து சரவணையை மடக்கிப் பிடித்துவிட்டு அப்போதைய அரச அதிபருக்கு இது பற்றித் தெரிவித்தனர். அரச அதிபர் சரவணையை யாழ்ப்பாணம் கொண்டு வந்த கையளிக்கும் வண்ணம் கேட்டுக்கொண்டார். இதற்கிணங்க அரசடிச் சின்னத்துரை, இராசமாணிக்கம் என்போர் மாட்டு வண்டியொன்றில் சரவணையை ஏற்றிக்கொண்டு சென்று ஒப்படைத்தனர். சரவணையை மடக்கிப் பிடித்து மாட்டு வண்டியில் கொண்டு செல்வதைக் கேள்விப்பட்ட மக்கள் கொண்டு சென்றவர்களுக்கு வழி நெடுகப் பாராட்டுகளும், பரிசில்களும் வழங்கித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். இராசமாணிக்கம் என்பவரைப் பற்றி ஓய்வு பெற்ற தேசிய நூதன சாலை உதவிப்பணிப்பாளர் 1985ம் வருடம் தான் எழுதிய தொண்டைமானும் செல்வச் சந்நிதியும் என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ‘போர்க் களத்துக்குச் சத்திரியர்கள் செல்லும் போது வீரக்கழல் (இது வீரர்கள் வலக்கையில் அணியும் மணி வடம். இது கொடை யாலும், வீரத்தாலும் கட்டும் கழல்) அணிந்து செல்வது வழக்கம். இந்த வழக்கம் தொண்டைமானாற்றில் இருந்து நெடுங்காலத்துக்கு முன்பே மறைந்து விட்டது. ஆனால் தொண்டைமானாற்றின் அயலூராகிய வல்வெட்டித்துறையில் இந்த வழக்கம் இற்றைக்கு ஏறக்குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன் வரையில் நீடித்து இருந்தது. ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்பு யான் சிறு பையனாக இருந்த போது வல்வெட்டித்துறையிலுள்ள முத்துமாரி அம்மன் கோயிலுக்கு தேர்த்திருவிழாவினைக் காண்பதற்காக வேறு சில இளைஞர்களுடன் போயிருந்தேன். அங்கே வெள்ளியாற் செய்யப்பட்ட வீரக்கழலும், அதற்கேற்ற வெள்ளி உடையும் அணிந்து கோவில் வாசலுக்கு நேராக வெளிவீதியில் நின்ற கம்பீரமான தோற்றமுடைய ஒருவரை எனக்குக் காட்டி அவர்தான் இராசமாணிக்கம் என்று சொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார்கள். இவர் வீரக்கழல் அணிந்து கோயிலுக்கு வந்திருந்தாரென்றால் அங்கே குழுமியிருக்கும் மக்கள் மத்தியில் எவ்வித குழப்பங்களோ, சள்ளுச் சண்டைகளோ நடக்காது. இந்த இராசமாணிக்கம் தான் வல்வெட்டித் துறையில் வீரக்கழல் அணியும் வழக்கத்தைக் கடைசியாகக் கைக்கொண்டு இருந்தவரென நம்புகிறேன். இவ்வாறு அந்த நூலில் தெரிவிக்கப்படுகின்றது.

சண்டியன் சரவணையை மடக்கிப் பிடித்த சம்பவம் அப்போதைய விதானையார் ச. செல்லத்துரை அவர்களது காலத்தில் 1916ம் வருடமளவில் இடம் பெற்றது.

## 12) கறுப்புக் கொடி போராட்டம்.

1973ம் ஆண்டு தைமாதம் வேலணையில் உள்ள பாடசாலையொன்றில் புதிதாக கட்டப்பட்ட கட்டடமொன்றை அப்போதைய தபால் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியார் திறந்து வைக்க ஏற்பாடாகியிருந்தது. வடபகுதிக்கு வருகை தரும் அமைச்சருக்கு கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டத்தில் பங்கு பற்றுவதற்காக தீவுப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.துரைரத்தினம், திரு.ச. ஞானமூர்த்தி, தமிழினத்தின் தலைமையை ஏற்றிருக்கும் திரு. வே. பிரபாகரன் உட்பட பல இளைஞர்கள் வேலணை சென்றிருந்தனர். வேலணை பழைய பேரூந்து நிலையத்தில் நின்று அமைச்சர் குமாரசூரியர் வரும் போது குமாரசூரியரே திரும்பிப்போ எனக் கோஷமிட்டு கறுப்புக்கொடி காட்டி விட்டு அனைவரும் திரும்பினர். இப்போராட்டமே திரு. வே. பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்ட முதல் அறவழிப் போராட்ட மாகும்.

## 13) இந்திர விழா

சித்திரை மாதத்தில் சிறப்பு வாய்ந்த சித்திரை நாள். வானத்தின் கீழ் மூலையில் வெண்மதி முழுநிலா மெல்ல மெல்ல எழுகிறது இந்திரவிழா தொடங்குகிறது. காவிரி கடலோடு கலக்கும் காவிரி வாயிற் சங்கமத் துறையில் தான் எவ்வளவு பெருங்கூட்டம் கடலுக்கு அது கரை. ஆனால் அந்தக் கரைக்குக் கரையே இல்லாதது போல் மக்கள் திரண்டிருக்கின்றனர். எத்தனை விதமான ஒலிகள், எத்தனை விதமான ஒளிகள். எத்தனை வித மணங்கள். ஆடவரும், பெண்டிரும், இளைஞரும், முதியவரும், சிறு வரும், சிறுமியரும் அழகாகவும் நன்றாகவும் அணிந்தும், உடுத்தும் வந்திருந்தனர். நோக்குமிடமெல்லாம் வாத்தியங்களின் இனிமை ஒலி. மக்கள் எல்லோருமே கடற்கரையில் கூடிவிட்டதனால் நகரங்களே வெறுமை பெற்றிருந்தது. ஒரு கோடியில் மற்போர், சிலம்புச் சண்டை, இன்னோரிடத்தில் இசை நிகழ்ச்சி. அன்று காவிரிப்பூம் பட்டினத்தில் 15 நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்று இறுதி நாளன்று நடைபெற்ற 'இந்திரவிழா' பற்றி சரித்திர நூல்கள் இவ்வாறு தெரிவிக்கின்றன.

அதே சித்திரை மாதம் சித்திரை நாள் முழுமதியன்று வல்வை மண்ணிலும் ஒரு இந்திரவிழா. முத்துமாரி அம்மன் கோயில் உற்சவம் ஆரம்பமாகி சித்திரை மாதம் முழுமதி நாளில் அம்மன் தீர்த்த மாடிவிட்டு நெடியகாட்டுப்பிள்ளையார் ஆலயத்தில் தங்கியிருந்து விட்டு இரவு முழு மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலெழுந்து வரும்பொழுது அம்பாள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இந்திர விமானத்தில் எழுந்தருளி வந்து இதற்கென மோர்மடத்துக்கு முன்புறமாக அமைக்கப்பட்டிருக்கும் பந்தலுக்கு வந்ததும் விழா ஆரம்பமாகும். நாதஸ்வரக் கச்சேரி, வில்லுப் பாட்டு, பரதநாட்டியம், என்பன நடைபெறும். இடையிடையே பலவிதமான வாண வேடிக்கைகள் நடைபெறுவதோடு பலவிதமான நிறங் கொண்ட நடுத்தரப் புகைக் கூண்டுகளும் 60 அடிக்கு மேற்பட்ட ராட்சதப் புகைக் கூண்டுகளும் விடப்படும். பிள்ளையார் கோவிலுக்கு மேற்குப்புறமிருக்கும் திருக் குளத்தில் மின்விளக்குகளால் ஆக்கப்பட்ட ராட்டினம் போன்றவை செய்யப்பட்டு சுழன்று கொண்டிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு வருடமும் புதுப்புது விதமாக ராட்சதப் பறவைகள், சுறா மீன், திமிங்கிலம் போன்ற உருவங்கள் செய்யப்பட்டு இக்குளத்தில் ஓடித் திரிவதைப் பார்க்கக் கூடியதாக இருக்கும். இவையாவும் மின்யந்திரம் மூலம் இயங்கி இங்குமங்கும் செல்லக் கூடியவகையில் அமைக்கப்பட்டிருக்கும். தீர்த்தக் கடற்கரையிலிருந்து ஊரிக்காடு வரை (1 1/2 மைல்கள்) எங்கும் பல தரப்பட்ட மின் அலங்காரங்கள், வல்வைக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட அலங்கார வளைவுகள், மின் குமிழ்களாலேயே உருவாக்கப்பட்ட அலங்கார வளைவுகள் போன்றனவும் இரண்டு கோயில் களுக்கும் இடைப்பட்ட பகுதி முழுவதும் கிட்டத்தட்ட 15 அடிக்கொன்றாக குலைகளுடன் கூடிய வாழைகளும் கட்டப்பட்டிருப்பதோடு இதர பகுதிகள் மூங்கில்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். நெடியகாட்டு மோர்மடத்தடியைவிட இதர இடங்களிலும் ஆங்காங்கே மேடைகள் போடப்பட்டு இசை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறும். எம் மூரவர்களால் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பலவிதமான அலங்காரப் பொருட்களும் பாதையின் இரு மருங்கிலும் இடைக்கிடை காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

இந்திர விழாவினைக் காண்பதற்காக வந்திருப்போர் களைப்புறா வண்ணம் இருப்பதற்காக குளிர்பானங்களும், சுடச்சுட கோப்பி, ஐஸ் கோப்பி, என்பனவும் வழிநெடுகிலும் பந்தல்போட்டு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும். விழாவினைக் காணவரும் பெண்களின் பலவிதமான உடையலங்காரங்கள், அவர்களின் கூந்தலில் அணியப் பெற்றிருக்கும் மல்லிகை மாலைகளிலிருந்து புறப்படும் மல்லிகை வாசனை என்பன பூம்புகார் நகரில் அன்று நடைபெற்ற இந்திர விழாவை எம்மனக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன. இந்த விழா வினைக் கண்டு இன்புறுவதற்காக யாழ் குடாநாட்டில் உள்ள சிறுவர், சிறுமியர், ஆடவர், பெண்டிர், முதியோர் அனைவரும் வல்வையில் வந்து திரண்டிருப்பர். இதே போல் யாழ்குடாநாட்டில் உள்ள அனைத்துத் தனியார் மின் இயந்திரங்களும் மின் அலங்காரம் செய்வதற்காக ஆங்காங்கே நிறுத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

## 14) புகைக் கூண்டு

வல்வையில் இந்திரவிழா உட்பட பிற திருவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இடம் பெறும் சமயம் வல்வை இளைஞர்களின் கைவண்ணத்தில் உருவான சிறியரக, நடுத்தரரக, இராட்சதரக புகைக்கூண்டுகள் வரை வானத்தில் விடப்படுவதைக் காணலாம். இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித புகைக் கூண்டுகள் ஆரம்பத்தில் இப் பகுதியிலேயே விடப்பட்டு வந்துள்ளது. யாழ் குடாநாட்டிலோ இலங்கையின் வேறு எந்தப் பகுதியிலோ பறக்க விடப்பட்டதாகத் தெரிய வரவில்லை.

பாய்க்கப்பல்கள் ஓடிய காலங்களில் ஒரு தடவை வல்வைக்கப்பல் ஒன்று பர்மா சென்று அங்குள்ள துறைமுகமொன்றில் நங் கூரமிட்டிருந்தவேளை அப்பகுதி மக்களி னால் விடப்பட்ட புகைக்கூண்டு ஒன்று எம்ம வர்களின் கப்பலில் வந்து விழுந்தது. கப்ப லில் மாலுமிகளாகச் சென்ற எமது மாலுமி கள் அதனை எடுத்து வந்து அது போன்ற புகைக்கூண்டுகளைச் செய்து விட ஆரம்பித் தார்கள்.

இந்திய இராணுவத்தினர் இங்கு ஆக்கிரமித்துக் கொண்டிருந்தவேளை முத்து மாரி அம்மன் தீர்த்த உற்சவம் ஊறணிக் கடலில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை இளைஞர்களால் பாரிய புகைக்கூண்டு ஒன்று பறக்கவிடப்பட்டு வானத்தில் சென்று கொண் டிருந்தவேளை அவ்வழியால் வந்து கொண் டிருந்த இந்திய ஹெலிகொப்டர் ஒன்று இந்தப் புகைக்கூண்டைப் பார்த்து கிலி அடைந்துவிட்டது. வானத்தில் இருந்தபடியே இதனைச் சுற்றி சுற்றி வந்து சுட ஆரம்பித்து விட்டார்கள். புகைக்கூண்டு கிழிந்து பிய்ந்து சுக்கு நூறாகக் கடலில் வீழ்ந்த பின்னரே அவ்விடத்தைவிட்டு இந்திய ஹெலி அகன்று சென்றது.

கடல் வாணிபத்தில் ஈழத்தமிழரும் செட்டிமாரும் மேலோங்கி இருந்தனர் . இந்த வகையில் ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பருத்தித்துறை வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள துறைமுகங்கள் உதவின. இவற்றுள் வல்வெட்டித்துறை துறைமுகம் கப்பல் கட்டுதல் நங்கூரமிடல் பருவகாலங்களில் கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்கல் என்பவற்றிற்குச் சிறந்த இடமாகவும் இருந்தது. அந்தக்கிராமத்தில் வாழையடிவாழையாக மரபு பேணிக் கப்பல் கட்டும் திறனில் வல்லமை படைத்த வல்லாளர்களின் குடும்பங்கள் பல இருந்தன. கடல்பற்றிய பல திறம்பட்ட அறிவும் அனுபவமும் ஆளுமையும் இவர்களிடம் நிரம்ப இருந்தது. படகு செலுத்துவதிலும் பருவகாற்றுக் காலங்களிலும் கப்பற் பாய்களை உரியவாறு பாய்மரங்களில் ஏற்றியும் அலைகளுக்கு ஏற்றவாறு கப்பல்களைக் கையாண்டு சுக்கான் மூலம் திசைமாற்றுவதிலும் கடற்கலை கைவந்த தண்டயல்களும் அங்கிருந் தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர்கள் மகான்களின் வல்வை விஜயம்

## 1) மகாத்மா காந்தி :

உலகம் போற்றும் உத்தமராம் மகாத்மா காந்தி அவர்கள் 1927ம் வருடம் இலங்கை வந்திருந்த சமயம் வல்வைக்கும் விஜயம் செய்திருந்தார். இவருக்கு இலங்கை முழுவதுமாக ரூ. 105,016/= நிதி சேகரித்துக் கொடுக்கப்பட்டது. இதில் எமது ஊரவர்களின் பங்களிப்பாக ரூ. 476/ 25 வழங்கப்பட்டது.

## 2) குன்றக்குடி அடிகளார் :

தெய்வசிகாமணி என்னும் குன்றக்குடி அடிகளார் அவர்கள் 21. 3. 1957ல் வல்வைக்கு வருகை தந்திருந்தார். இச்சந்தர்ப்பத்தில் வல்வை சனசமூக சேவா நிலையத்திற்கும் வருகை தந்து இந்நிலையத்தினால் பேணப்படும் குறிப்புப் பதி வேட்டில்

இன்று இந்நகர் சனசமூக நிலையத்துக்கு
வருகை தரும் சந்தர்ப்பம் கிடைத்தது. மிக்க
மகிழ்ச்சி. இளையோரும் முதியோரும் உற்சாகமாகக்
காணப்படுகின்றார்கள். நல்ல பண்பாடும் சமயப்பற்றும்
இருக்கிறது. சமயச் சடங்குகளை பழமை பிறழாது செய்து
வருகின்றனர். இந் நிலையம் வாழ்க! வளர்க இதன் பணி!!

எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3) கி. வா. ஜகன்னாதன் :

'கலைமகள்' சஞ்சிகையின் ஸ்தாபகரும், அதன் ஆசிரியரும், தமிழ் அறிஞருமான கி. வா. ஜகன்னாதன் அவர்கள் 8. 9. 1959ல் வல்வை சனசமூக சேவா நிலையத்துக்கு விஜயம் செய்திருந்தார். இந்நிலையத்தில் பேணப்படும் குறிப்புப் பதிவேட்டில்

'கல்வெட்டி உருச் செய்து கடவுளெனப்
- பாவித்துக் காதல் செய்தே
அல்வெட்டி அறிவுபெறும் அன்பர்கள் நிறைந்
- துள்ள அரிய ஊராம்
வல்வெட்டி துறைதனில் வளர்ந்த சனசமூக
- நிலையத்தில் வந்தே
நல்வெற்றி வடிவேலன் பேரழகன் திறம்சற்றே
- நவின்றேனம்மா'
எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 4) சுத்தானந்த பாரதியார் :

சுத்தானந்த பாரதியார் அவர்கள் ஒரு தடவை வல்வை வந்திருந்த சமயம் வைத்தீஸ்வரன் கோயிலையும் முத்துமாரி அம்மன் கோயிலையும் தரிசித்தார். இவ்விதம் சிவன் கோயிலும் இடது புறம் அம்மன் கோயிலும் அமைந்திருக்கும் எழிற்கோலத்தைக் காணக் கண்கோடி வேண்டும் என்று குறிப்பிட்டதோடு இவ்வூரை இனிமேல் வல்வெட்டித்துறை என்று அழைப்பதோடு 'சிவபுரம்' என்றும் அழைக்கவேண்டுமென்று மெய்சிலிர்க்கக் கூறிச் சென்றார். பின்னாளில் சிவன் கோயில் முகப்பு வீதி திறக்கப்பட்ட போது அதன் நினைவாக அவ்வீதிக்கு சிவபுர வீதி எனப்பெயர் சூட்டப்பட்டது.

## 5) ம. பொ. சிவஞானம் :

7. 4. 1969ல் உடுவிலில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மகாநாட்டுக்கு ம. பொ. சிவஞானம் அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த சமயம் வல்வைக்கும் விஜயம் செய்திருந்தார். பிரபல வர்த்தகர் சி. விஷ்ணு சுந்தரம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்தின் போது இலக்கியச் சொற்பொழிவொன்றையும் நிகழ்த்திச் சென்றார்.

**வல்வை முத்துமாரி அம்மன் கோயில் 1965ம் ஆண்டு தீர்த்த உற்சவ விழாவன்று நடைபெற்ற இந்திரவிழாவன்று வல்வை அ. சிவானந்தன் அவர்களினால் 41 அடி உயரமான தேவகன்னியின் அலங்காரவளைவு ஒன்று கட்டப்பட்டு அம்பாள் ஊர்வலம்வரும் பாதையில் அலங்கரிக்கப்பட்டது. இதே தேவகன்னியின் அலங்கார வளைவு அதே வருடம் ஆனிமாதம் யாழ்நகரில் நடைபெற்ற தினகரன் விளையாட்டு விழாவில் இடம்பெற்று மூன்று தங்கப் பதக்கங்களைப் பரிசாகப் பெற்றுக் கொண்டது. இதே போன்ற கடதாசியால் செய்யப்படும் அலங்கார வளைவுகளை இன்று எமது மக்கள் தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் செய்து வருகிறார்கள்**

**வல்வை ஒன்றிய கலைப்பெருவிழா**
**2003 வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகள் இதர பிரமுகர்களின் விஜயம்

## 01) பிரதமர் கௌரவ டி. எஸ். சேனநாயக்கா.

பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா அவர்கள் 1950ல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சமயம் வல்வெட்டித்துறைக்கும் விஜயம் செய்தார். வல்வையில் பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட சமயம் வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன. ஊர்வலம் செல்லும் சமயத்தில் இப்படியான வாணவேடிக்கையைக் காண்பது தனது முதல் அனுபவம் என அவர் குறிப்பிட்டதோடு இந்த நிகழ்வு சுதந்திர தினத் தன்று நடைபெறும் நிகழ்வினை ஒத்ததாக இருந்ததெனவும் பொதுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

## 2) பிரதமர் கௌரவ சேர். ஜோன் கொத்தலாவல :

பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் 19. 10. 1954ல் வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்திருந்த சமயம் வல்வை மக்களினால் வரவேற்பளிக்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்.

## 3) தேசாதிபதி சேர் ஹேன்றி பிளேக் :

1903 - 1907 காலப்பகுதியில் இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சேர் ஹென்றி பிளேக் அவர்கள் வட பகுதித்துறை முகங்களைப் பார்வையிடுவதற்காக 1905ல் வந்திருந்தார். அச்சமயம் வல்வெட்டித்துறைக்கும் சித்திரா பௌர்ணமியன்று விஜயம் செய்தார். வல்வெட்டித்துறை துறைமுகத்தில் 30 கப்பல்களுக்கு மேலாக நின்று கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு கொழும்பு, திருகோணமலையைத் தவிர இவ்வளவு பெருந்தொகையான கப்பல்களைப் பார்க்கவில்லையெனக் குறிப்பிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4) மகாதேசாதிபதி சேர். றொபேட் நொக்ஸ் (சேர் றொபேட் பிறவுண்றிக்)

1812 - 1820 காலப்பகுதியில் மகாதேசாதிபதியாக இருந்த இவர் வல்வைக்கு விஜயம் செய்துவிட்டுத் தனது நாட்குறிப்பில் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்.

'நான் இலங்கையின் பல பாகங்களும் சென்றிருக்கிறேன். ஆனால் மற்ற இடத்து மக்களைவிட வல்வெட்டித்துறை மக்கள் நாகரிகத்தில் மேம்பட்ட பவர்களாகவே விளங்குகின்றார்கள். வல்வெட்டித்துறைப் பெண்கள் பள பளக்கும் குடங்களில் நீர் கொண்டு அடக்கமாகவும், அழகாகவும் செல்வதைப் பார்த்தால் இவர்கள் நாகரிகத்தின் சின்னங்கள் தான் என்று சொல்லவேண்டும்.

### 5) சேர் ஹென்றி மொங்க் மேசன்மூர்

இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சேர் ஹென்றி மொங்க் மேசன் மூர் அவர்கள் வல்வை இந்திராணி வைத்திய சாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக 30. 05. 1945ல் வல்வைக்கு வருகை தந்திருந்தார்.

### 6) கௌரவ மகாநாம சமரவீர :

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் உள்ளூராட்சி வீடமைப்புத்துறை அமைச்சராக இருந்த மகாநாமசமரவீர அவர்கள் வல்வைப் பட்டின சபைக்கும், வல்வை சனசமூக சேவா நிலையத்துக்கும் 1.6.1962ல் வருகை தந்திருந்த சமயம் வல்வை மக்களால் வரவேற்பளிக்கப்பட்டார்.

### 7) கௌரவ ஆர். பிறேமதாசா

தேசிய அரசில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த பிறேமதாசா அவர்கள் ஊறணி குடியேற்றத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக வல்வை வந்திருந்த சமயம் வல்வை சனசமூக நிலையத்தினால் வரவேற்களிக் கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

### 8) கௌரவ மு. திருச்செல்வம்

ஐக்கிய தேசியக் கட்சி அரசில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த மு. திருச்செல்வம் (கியூ.சி) அவர்கள் 1967ல் வல்வைக்கு விஜயம் செய்து ஆதி சக்திப் படிப்பகத்தைத் திறந்து வைத்தார்.

### 9) கார்ல் ஏ. கெல்லர்

1974ல் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த சமயம் அன்னபூரணியின் அமெரிக்க பயணம் என்னும் கைநூல் வெளியிடும் வைபவத்தில் கலந்தகொள்வதற்காக வல்வை வந்திருத்தார். வல்வெட்டித்துறை மக்கள் சிரித்த முகத்துடன் விருந்தினரை வரவேற்கின்றனர் இப்படிக் கப்பல் கட்டித் துணிவுடன் பல நாடுகளுக்கும் சென்று புகழ் பரப்பிய மக்களின் ஊருக்கு வந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

### 10) சேர் எமேசன் ரெனன்ற்

சேர் ஏமேசன் ரெனன்ற் (கே. சி. எஸ்) என்பவர் தான் எழுதிய *Ceylon An Account of the Island Physical,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Historical and topographical* என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளதாவது:

குடிசனம் அதிகமாக உள்ள செய லூக்கம் கொண்ட துணிவுள்ள மக்களைத் தன்னகத்தே கொண்ட வல்வெட்டித்துறை என்னும் கிராமத்தை நான் அடைந்தவேளை சுமாரான எடை கொண்ட பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய பாய்க்கப்பலைக் கண் டேன். கப்பல் கட்டும் கலையில் இலங்கை யிலுள்ள மற்ற எல்லாக் கப்பல் கட்டும் மேத்திரிமார்களை விட இவ்வூர் மேத்திரி மார்கள் முன்னணி வகிக்கிறார்கள். மாலை வேளையில் புளிய மரங்கள் சூழ உள்ள கிணறொன்றில் பெண்கள் தண்ணீர் அள்ளிக் கொண்டு செல்வதைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்நூலின் இப்பெண்கள் அணிந் திருந்த பிடவை பற்றியும் தலைகளில் அவர் கள் குடத்தைக் கொண்டு சென்ற அழகையும் விபரித்துள்ளார். மேற்படி நூல் 1860ம் ஆண் டில் எழுதப்பட்டபடியால் இதற்கு ஒரு சில வருடங்களுக்கு முன்னதாக நூலின் ஆசிரி யர் வல்வைக்கு விஜயம் செய்திருக்கலாம்.

**ஆழிக்குமரன் ஆனந்தனின் தங்கை ரங்கா குச்சுப்புடி நடனத்தில் பாண்டித்தியம் பெற்ற மிக உயர்ந்த நாட்டியக்கலைஞர். குச்சுப்புடி நடனத்தை வேம்படி சின்னச்சத்தியத்திடம் (தமிழ்நாடு) கற்றார். குச்சுப்புடி நடனத்தோடு பரத நாட்டியம், மோகினி ஆட்டம், கதக்களி ஆகியனவும் இவருக்குக் கைவந்த கலை. ஜனாதிபதி விருது பெற்ற இவர் மேற்கு நாடுகளிலும் நாட்டியமாடியிருக்கின்றார்.**

**நூலாசிரியர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வையில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச்சங்கம்

வல்வெட்டித்துறை கூட்டுறவுச் சங்கம் என்ற பெயருடன் 1924ம் வருட மளவில்ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்துவக்காத்து குழந்தைவேல் அவர்களை தலைவராகவும், திரு என். கனகசுந்தரம் என்பவரைச் செயலாளராகவும் திரு. செ. தியாகராசா அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு 'வல்வை' இந்து கல்விக் கழகத்துக்குச் சொந்தமான *(Valvettiturai Hindu Educational Society)* கட்டடத்தில் சிறிது காலம் இயங்கிவந்தது. சிறிது காலத்தின் பின்னர் இச்சங்கம் சண்முக வாசா என்ற இல்லத்தில் இயங்கிவந்தது.

இச்சங்கத்திற்கான சட்ட விதிகள் இருந்ததோடு பேராதனையில் இயங்கி வந்த கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் காரியாலயத்திலும் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாக இருந்துள்ளது. அங்கத்தவர்களுக்குப் பங்குகள் வழங்கப்பட்டதோடு கணக்கீட்டுப் புத்தகமும் வழங்கப்பட்டிருந்தது.

பிற்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட வேளை இச்சங்கம் பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் துடன் இணைக்கப்பட்டதா அல்லது இடை நடுவில் நிறுத்தப்பட்டு விட்டதா போன்ற விபரங்கள் தெரியவரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசமூக சேவா நிலையங்கள்

ஒரு நாட்டின் உயர்வு அதன் கலை, அறிவு, பொதுநிலையங்களைச் சிறப்புடன் நடாத்துவது, மற்றும் பலதுறைகளில் மக்கள் ஈடுபடும் பங்கு ஆர்வம் என்பனவற்றைப் பொறுத்ததாகும். வல்வை மக்கள் ஒவ்வொருவரும் ஒற்றுமையாக நல்ல நோக்கங்கொண்டு ஒவ்வொரு சேவையிலும் ஈடுபடுவதினால் தான் இங்குள்ள ஆலயங்கள், பாடசாலைகள், நூல்நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், வைத்தியசாலை என்பன வளர்ச்சியடைந்து வருகின்றன. இவ்விதம் சமூக முன்னேற்றம், நாட்டின் உயர்வு என்பவற்றிற்கு இவ்வூரிலுள்ள நூலகங்கள், சனசமூக நிலையங்கள் என்பன பெரும் பங்காற்றுகின்றன.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளமையினாலும் சனசமூக நிலையக் கட்டடங்கள் சேதமாக்கப்பட்டமையினாலும் இச்சன சமூக நிலையங்கள் முற்காலங்களில் மக்களுக்கு வழங்கி வந்த சேவைகளை தற்போது முழுமையாக வழங்க முடியாது போய் விட்டாலும் கூட ஓரளவு சேவையினையாவது வழங்கி வருகின்றன.

## 1. வல்வை சனசமூக சேவா நிலையம்

**பதிவு இலக்கம்:** J /uc/03/cc/457

வல்வை மக்களின் அறிவுப் பசியைத் தீர்த்து அவர்களை முன்னேற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் தனது முற்போக்கான சிந்தனையால் வாசிகசாலை ஒன்றினை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கோடு ஊர்மக்களால் "ஆனந்த பாகவதர்" என்று அழைக்கப்பட்ட திரு.க. ஆனந்தமயில் என்பவரால் இந்த நாடு ஆங்கிலேயருக்கு அடிமையாயிருந்து பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்த காலப்பகுதியில் 10.01.1943ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த வல்வை சன சமூக சேவா நிலையமாகும். ஆரம்பத்தில் வல்வை இலவச வாசிகசாலை என்ற பெய ருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையம் வாட கைக்குப் பெறப்பட்ட இடத்தில் இயங்கியது. தளபாடங்கள் சிலவற்றுடன் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன வரவழைக்கப்பட்டு வல்வைச் சந்திக்கு வடபகுதியில் இருந்த விஸ்வநாதர் கிட்டங்கியின் மேற்குப் பகுதி யில் சிலகாலம் இயங்கி வந்தது. பின்னர் இதே கிட்டங்கியின் இன்னொரு பகுதிக்கு இடம் மாற்றப்பட்டது.

இந்த வாசிகசாலைக்குச் சொந்த மாக ஒரு கட்டடம் அமைக்க வேண்டுமென்ற நோக்கோடு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் முதற்கட்டமாக 1945ம் ஆண்ட ளவில் “கண்ணகி” என்ற நாடகம் நடாத்தப் பட்டு அதன் மூலம் ரூ 1000/= திரட்டப்பட்டது. இந்த நிதியினைத் திரட்டுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் வாசிகசாலையின் செய லாளரும் ஆசிரியருமான சா.மாசலின்பிள்ளை அவர்களும் பொருளாளரும் ஆசிரியருமான ம.வெங்கடாசலம்பிள்ளை அவர்களும் அடங் குவர். நாடகத்தின் மூலம் வசூலான நிதியு டனும் ஊர்மக்கள் மனமுவந்து அளித்த நிதி உதவியுடனும் 1946ம் ஆண்டளவில் நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம் பித்து வைக்கப்பட்டன. கட்டடம் அமைக்கும் சமயம் நிதிப்பற்றாக்குறை ஏற்படவே அக் காலப்பகுதியில் வல்வைபட்டினசபையின் தலைவராக இருந்த திரு.ஐ.திருப்பதி அவர் கள் பட்டினசபையின் நிதியிலிருந்து ரூ 3000/= ஐ வழங்கியிருந்தார். இதனைத் தொடர்ந்து வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப் பட்டு கட்டடம் பூர்த்தியடைய அப்போதைய உள்ளூராட்சி ஆணையாளாராக இருந்த திரு.யோசப் அவர்களால் சம்பிரதாய பூர்வ மாகத் திறந்து வைக்கப்பட்டது.

வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியரும், பண்டிதருமான திரு.மு.ஏரம்பமூர்த்தி அவர்கள் அன்பளிப்புச் செய்த 200 புத்தகங்கள் வாசகர்களுக்குப் பயன்பெறத்தக்க வகையில் அமைந்திருந்தன. பின்னாளில் ஆயிரக்கணக்கான நூல்களைக் கொண்டு வாசகர்களுக்கு இரவல் வழங்கக் கூடிய வகையில் முன்னேற்றமடைந்திருந் தது. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் அரிய நூல் கள் அழிக்கப்பட்டதோடு கட்டடம் தளபாடம் என்பவற்றிற்கும் சேதமேற்பட்டது.

வல்வை இலவச வாசிகசாலை என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையம் 13.09.1948ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வல்வை சனசமூக நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் ஒரு சில வருமாறு:-

அ. “கலைவாணி” என்ற பெயரிலும் “அலை ஒலி” என்ற பெயரிலும் கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன.

ஆ. 1958ம் வருடம் ஏற்பட்ட வெள்ளப் பெருக் கினால் பல குடும்பங்கள் இடம் பெயர்ந்து அல்லற்பட்டபோது அரசினரிடமிருந்து நிவாரணங்களைப் பெற்று அவர் களுக்கு உதவி புரிந்தது.

இ. பேரறிஞர்களான திருமுருக கிருபானந் தவாரியார், திருவாளர்கள் சுத்தானந்த பாரதியார், கி.வா. ஜகன்னாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8.9.1959), தவத்திரு குன்றக்குடி அடிகளார் (21.3.57) போன்றோர் வரவழைக்கப்பட்டு சொற்பொழிவாற்றியுள்ளனர்.

ஈ. பல விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதுடன் 1959, 1962 வருடங்களில் அகில இலங்கை ரீதியில் மரதன் ஓட்டப் போட்டியும் நடாத்தப்பட்டது.

உ. இயற்றமிழ் போகாசிரியர் ச. வயித்திலிங்கபிள்ளையவர்களின் உருவப்படம் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களினால் எழுதப்பட்ட போதகாசிரியர் வயித்திலிங்கபிள்ளை பற்றிய அறிமுகக் கைநூல் ஒன்றும் 29.08.1975ல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஊ. முதன்முதலாக நடமாடும் இரத்த வங்கிக்கு இந்நிலையத்தைச் சேர்ந்த 25 பேர் இரத்ததானம் வழங்கியுள்ளார்கள்.

இந்நிலையம் 1968ம் வருடம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடிய போது வெள்ளிவிழா மலரொன்றையும் 1993ம் வருடம் பொன்விழாவைக் கொண்டாடிய போது பொன்விழாச் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டு வைத்துள்ளது.

**2. வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையம்**

**பதிவு இலக்கம் :** J/uc/03/cc/477

வல்வையைச் சேர்ந்த திரு.வே. வ. சிவப்பிரகாசம் அவர்கள் தந்துதவிய காணியில் உதயசூரியன் கடற்கரைக்கு முன்பாக 1949ல் இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டது. திருமுருக கிருபானந்தவாரியர் அவர்கள் இந் நிகழ்வுக்கு வருகை தந்திருந்து சிறப்பித்து வைத்தார். இந்நிலையத்தை உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்தவர்கள் திருவாளர் வே.வ. சிவப்பிரகாசம், க. சுந்தரலிங்கம், மா. பாலசுப்பிரமணியம், க. பாலசுப்பிரமணியம், வே.வ.மகாலிங்கம், டாக்டர் பொன்னுச்சாமி ஆகியோர்களாகும். இந் நிலையம் தொடர்ந்து திறம்பட இயங்குவதற்குப் பாடுபட்டவர் திரு.ச. செந்தில்வேல் அவர்களாகும். உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினால் வருடாவருடம் நடாத்தப்படும் ஆண்டுப் பெருவிழாவினை நடாத்துவதற்குப் பெரும் பங்காற்றுவதுடன் பாலர் பாடசாலை ஒன்றையும் நடாத்திவருகிறது.

**3. ஆதிசக்தி படிப்பகம்**

**பதிவு இலக்கம் :** J/uc/cc/477

இப்படிப்பகம் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த கௌரவ மு. திருச்செல்வம் அவர்கள் வழங்கிய நிதியைக் கொண்டு ஆதிவைரவர் கோயிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டது. கௌரவ மு. திருச்செல்வம் அவர்களினால் 1967ல் திறந்து வைக்கப்பட்டது.

பாலர் பாடசாலை ஒன்றை நடாத்தி இப்பகுதி சிறார்களின் கல்வியின் முன்னேற்றத்துக்குப் பெரும் பங்காற்றி வருகிறது.

**4. நேதாஜி சனசமூக நிலையம்**

**பதிவு இலக்கம்:** J/uc/03/cc/926

நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக 19.05.1957ல் ஆரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்து வைக்கப்பட்டது. இது கொத்தியால் கடற்பிரதேசத்தை அண்டிய அரச காணியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் திறம் பட இயங்கி வருவதற்கு முன்னோடியாக விளங்கியவர் திருவாளர் வி. நவரத்தினராசா, அ. சிவானந்தம் ஆகியோராகும். இந்நிலை யத்தை அண்டிய மீன்பிடித்துறைமுகம் வருடாந்தம் ஆழமாக்கப்பட்டு படகுகள் சென்று வர ஏற்ற வசதிகள் செய்து கொடுத் தமை இந்நிலையம் மேற்கொண்ட முக்கிய பணிகளிலொன்றாகும்.

## 5. கணபதி படிப்பகம்

**பதிவு இலக்கம்:** J/uc/03/A. 452

வேம்படி வாசிகசாலை என்ற பெய ருடன் பருத்தித்துறை வீதியில் கடை போன்ற கட்டடத்தில் கொத்தியால் பகுதி துறையில் வேலை செய்த தொழிலாளர்களால் ஆரம் பித்து வைக்கப்பட்டது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றைக் கொண்டு வாடகை செலுத்தி வந்த இந்த வாசிக சாலைக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைக் கும் நோக்குடன் செயல்பட்ட சமயம் நெடிய காடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபையினரால் வழங்கப்பட்ட காணி யில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. கொத்தியால் துறைமுகத்தில் வேலைபார்த்த தொழிலாளர்களால் வழங்கப்பட்ட நிதி, நாடகங்கள் நடாத்தப்பட்டு அதன்மூலம் கிடைக்கப்பட்ட நிதி ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட இந்த நிலையம் அப்போதைய பட்டினசபைத் தலைவர் திரு.மு.வி. இரத்தின வடிவேல் அவர்களினால் 14.9.1967 அன்று திறந்து வைக்கப்பட்டது. நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர் களில் திருவாளர்கள் தே.இலட்சுமி காந்தன், வே. ஆதிஅருணாசலம், சி. சந்திரசிவம், சி. பொன்னம்பலம் ஆகியோர் குறிப்பிடக்கூடிய வர்கள் ஆவார்.

பிள்ளையார் கோயிலின் சுற்றாடலில் அமைந்திருந்தபடியாலும், கணபதியின் நிரந் தர ஆசிவேண்டியுள்ளதாலும் இந்நிலையம் கணபதி படிப்பகம் என்று பெயர் மாற்றப் பட்டது. இப்படிப்பகத்தினால் மேற்கொள்ளப் பட்ட சமூக சேவைகளில் ஒரு சில:-

அ. சிறார்களின் ஆரம்பக்கல்விக்கென கணபதி பாலர் பாடசாலை ஒன்று 1972ம் வருடம் வாடகைக் கட்டடம் ஒன்றில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாராளு மன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் அவர்கள் ஒதுக்கிக் கொடுத்த ரூ15000/= ஐக் கொண்டும் பொது மக்களின் பங்களிப்புடனும் மூன்று வகுப்பறை களையும் ஒரு களஞ்சிய அறையையும் கொண்ட நிரந்தர கட்டடம் ஒன்று படிப்பகத்துக்கு அருகாமையில் 1981ம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது.

ஆ. நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி ஆரம்பித்து வைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

இ. கவிஞன் என்ற கையெழுத்து சஞ்சிகை 1985ம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

ஈ. நகரசபையின் வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் பெற்று செய்து முடித்தது.

உ. 1994ம் வருடம் யாழ்ப்பாணத்தில் உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் ஆதரவில் நடைபெற்ற "தமிழின்பக் கண்காட்சி" யில் பங்கு பற்றிய தோடு குடாநாட்டி லேயே சிறந்த சனசமூக நிலையத்துக் கான விருதும் அத்தாட்சிப் பத்திரமும் பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. 1986ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு விழாவில் இயல்துறையில் சிறந்து விளங்கிய திரு. பூ.க.முத்துக்குமாரசாமி அவர்களுக்கு "மா அறிஞர்" என்ற விருதையும், இசைத்துறையில் சிறந்து விளங்கிய திரு. ஏ.நடராசா அவர்களுக்கு "சங்கீதமாமணி" என்ற பட்டத்தையும், நாடகத்துறையில் சிறந்து விளங்கிய திரு. சா. மாசலின்பிள்ளை அவர்களுக்கு "நாடகமணி" என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது.

எ. பாலர் பாடசாலை சிறார்களுக்கான சிறுவர் பூங்கா ஒன்றை ரூ 40000/= செலவு செய்து பாலர் பாடசாலை முன்பாக அமைத்துக் கொடுத்தது.

## 6. வாணி படிப்பகம்

**பதிவு இலக்கம் :** J/uc/03/cc /456

இப்படிப்பகம் வல்வை ஷைனிங்ஸ் விளையாட்டுக்கழக உறுப்பினர்களினதும், பொதுமக்களினதும் பங்களிப்போடு 19.01.1984ல் உருவாக்கப்பட்டது. பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு.வை. வேலும் மயிலும் அவர்களினால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்ட இப்படிப்பகம் கல்வித்தாயின் பெயர் கொண்டு அழைக்கப்படவேண்டுமென்ற நோக்கோடு "வாணி படிப்பகம்" எனப் பெயர் சூட்டப்பட்டது. இப்படிப்பகத்தை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்களில் திரு. ச. அழகேஸ்வர ராஜா அவர்களும் ஒருவராவர். இப்படிப்பகத்துக்கு முன்பாக சரஸ்வதி கோயில் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு பூசைகள் நடைபெற்று வருகிறது. நூல்கள் இரவல் வழங்கும் பகுதியும் கொண்டுள்ளது.

## 7. றெயின்போஸ் சனசமூக நிலையம்

**பதிவு இலக்கம்:** J/uc/03/cc/ 873

றெயின்போஸ் விளையாட்டுக்கழகத்தினரால் தெணியம்பை என்னுமிடத்தில் நகர சபைக்குச் சொந்தமான காணியில் 15.08.1986ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. றெயின்போஸ் விளையாட்டுக்கழகத்தினர் மின்னொளியில் கரப்பந்தாட்டப் போட்டி போன்ற போட்டிகளை நடாத்தி அதன் மூலம் கிடைக்கப் பெற்ற நிதியிலிருந்தும் பொதுமக்களின் பங்களிப்புடனும் இதற்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. இந்த நிலையத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இருந்தவர்கள் திரு. மகோற்கடம், அருளப்பா ஆகியோராகும். திரு. க. உருத்திராபதி குடும்பத்தினர் இந் நிலையத்துக்கு அருகாமையில் வழங்கிய காணித்துண்டையும் இணைத்துக் கட்டடம் மேலும் விஸ்தரித்துக் கட்டப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு வழக்கின் போது கையாண்ட சொற்கள்

மற்றைய இடங்களைவிட எம்மவர்களால் பேச்சு வழக்கின் போது கையாண்ட சொற்கள் பல பாவிக்கப்பட்டு வந்தன. இச்சொற்கள் முழுவதும் தற்காலம் பேச்சு வழக்கில் இல்லையாயினும் சில சொற்கள் தற்போதும் பாவிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான சொற்கள் இந்தியாவில் பேசப்பட்டவையே இங்கும் பேசப்பட்டு வந்தன. சம்பல் என்ற சொல்லுக்குப் பதிலாக பச்சடி என்ற சொல்லும், மிளகாய்த்தூள் என்பதற்குப் பதிலாக பொரித்தூள் என்ற சொல்லும், வெள்ளைப்பூடு என்பதற்குப் பதிலாக உள்ளி என்ற சொல்லும் பாவனையில் இருந்தன. இவ்வகையான சொற்களில் எம்மால் பேசப்பட்டு வந்த "கூழ் ஞாயம்" என்ற சொல் சற்று வித்தியாசமானது. நாம் சிறுவராக இருந்த காலத்தில் விளையாடும் சமயத்தில் அல்லது பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் வாய்த்தர்க்கம் ஏற்படும் போது ஒருவர் இன்னொருவரை "நீ கூழ் ஞாயம்" பேசுகிறாய் என்று சொல்வதுண்டு. நியாயவாதியாகிய நிக்கொலஸ் கூல்ட் சிறுவனாக இருந்த காலத்தில் கேலிக்கதைகள் சொல்வதிலும், குறும்புப் பேச்சுக்கள் பேசுவதிலும் பேர் போனவராக இருந்தவர். கொழும்பு செக்கடித் தெரு கதிர்வேலாயுத சுவாமி கோயிலைக் கட்டிய திரு.குழந்தைவேற்பிள்ளை அவர்களுடன் கொழும்பில் தங்கியிருந்து கல்வி கற்ற தோடு வல்வைக்கும் வந்து செல்லும் வழக்கத்தையும் கொண்டிருந்தார். இவர் செய்த குறும்புத்தனங்களை அடிப்படையாக வைத்தே "கூழ் ஞாயம்" என்ற சொல் பழக்கத்தில் வந்தது.

1835ம் வருடம் பிறந்த இவர் வட்டுக்கோட்டை செமினாரியிலும் பின்னர் மத்திய கல்லூரியிலும், கொழும்பு றோயல் கல்லூரியிலும் அதன் பின்னர் சட்டம் பயின்று நியாயவாதியாகவும் இருந்தவர். இவர் செய்த குறும்புத்தனங்களில் ஒரு சில வருமாறு:-

வட்டுக்கோட்டை செமினாரியில் கல்வி கற்கும் சமயம் அங்கு விடுதியில் தங்கியிருந்த போது சிரங்கு என்னும் நோயால் வருந்தியமையால் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். வீட்டுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று தான் உண்ட ஒவ்வொரு கோப்பை உணவுக்கும் பதிலாக ஒவ்வொரு கொத்து சிரங்கு கொண்டு வந்திருக்கிறேனென்று சொன்னார். இன்னொரு தடவை பள்ளிக் கூடத் தோட்டத்தில் நின்ற சமயம் ஏனைய மாணவர் விஷேசம் என்னவென்று கேட்க இவர் பூசணியிலே பிஞ்சு இருக்கிறது என்றார். மூன்று நாட்களுக்கு முன்னர் முளைத்த பூசணியிலே பூவேது பிஞ்சேது என்று சொல்லிவிட்டுச் சென்று பிஞ்செங்கே யென்று கேட்க "பூசணியிலை பிய்ந்து இருக் கிறது" என்றல்லவோ கூறினேன் என்றார். ஒருமுறை இவர் தமது உபாத்தியாயரின் மனைவியைக் கட்டியணைப்பேன் எனத் தமது பள்ளித் தோழர்களுடன் பந்தயஞ் செய்து கொண்டு உபாத்தியாயர் வீட்டுக்குச் சென்று அங்கு படுத்திருந்த நாய்க்குக் கல் லால் எறிந்து விட்டு அது குரைத்துக் கொண்டு கலைத் துவர வீட்டுக்குட் சென்று உபாத்தியாயரின் மனைவியைக் கட்டி யணைத்துத் தன் தோழர்கள் வெட்கப்படும் படி செய்தார். பள்ளிக்கூடத்திலிருந்த முந்திரிகைச் செடியிலிருந்து ஒருவரும் பழங்களைப் பறித்துச் சாப்பிடக் கூடாதென விதிக்கப்பட்டிருக்க இவர் பழங்களைக் கைக ளால் பறியாது வாயினால் குலையிலிருந்த படியே சாப்பிட்டதைக் கண்ட ஏனைய மாண வர்கள் உபாத்தியாயரிடம் முறையிட எல்லா மாணவர்களும் இவர் செய்தது தவறெனச் சொன்னால் இவருக்குப் பிரம்படியென உபாத்தியாயர் கூறி மற்றவர்களை வினவ அவர்களும் ஆமோதிக்க "நான் செய்தது தவறென நான் சொல்லவில்லையே" என இவர் கூறித் தப்பித்துக் கொண்டார்.

இன்னொரு தடவை பிரதம உபாத் தியாயர் மாணவர்களுக்கு முன் இவரை நிறுத்தி ஒர் பிரம்பைக்காட்டி "இப்பிரம்பு இவருக்கு அடிக்க அவாவுகின்றது. யாருக் கும் மறுப்பு உண்டோ" எனக் கேட்க இவர் "தான் பிரம்பை அவாவவில்லையே" எனக் கூறித் தப்பித்துக் கொண்டார். இவருக்கு மறுநாள் பிரம்படியென உபாத்தியாயர் கூறியதும் மறுநாள் வாழை மட்டைகளை முதுகிற் கட்டிக் கொண்டு அதன்மேல் சட்டை யணிந்து கொண்டு சென்றார். ஒவ்வொரு அடியும் விழ வாழைமட்டை படார் படார் என வெடித்ததைக் கண்டு உபாத்தியாயர் சிரித்து விட்டு இவரை மேலும் அடியாது விட்டார்.

இவர் படிப்பில் மிகவும் விவேகியாகத் திகழவே கொழும்பு றோயல் கல்லூரிக்கு அழைக்கப்பட்டுத் தனது கல்வியைத் தொடர்ந்தார். கொழும்பு நகர சங்க எல்லைக் குள் மலசல கூடங்களிலல்லாது மறு இடங் களில் மலசலங் கழிக்கக் கூடாது என்ற விதி இருந்த போதும் இவர் வீதியோரம் சலம் விட்டதைக் கண்ட பொலிஸ்காரன் இவரைப் பிடித்துக் கொண்டான். இவர் தமது குற்றத்தை ஒப்புக் கொள்வதைப்போல் பாசாங்கு செய்து கொண்டு தான் அரைவாசிச் சலத்தை இன்னும் விடவில்லையென்றும் அதனையும் விட்டு விட்டுப் பொலிஸ்காரனுடன் வருவதாக வாக்குறுதி செய்யவே அவன் அதற்கு இணங்க முன்னர் சலம் விட்ட இடத்தினை விட்டுப் பிறிதொரு இடத்தில் சலத்தை விட்டு விட்டு அவனுடன் சென்று பொலிஸ்நிலையத்தில் விசாரிக்கப்பட்ட போது பொலிஸ்காரனும் சலம் விட்டமையால் தான் தானும் விட்டே னென்றும் தான் இரு இடங்களையும் காண் பிப்பதாகக் கூறித் தப்பிக் கொண்டார்.

இரவில் பள்ளிக்கூடத்திலிருந்து ஒளித்தோடிச் சென்று நாடகம் பார்ப்பதை வழமையாகக் கொண்டிருந்தவர். ஒரு நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு இவரைப் பிடிப்பதற்காகப் பிரதம ஆசிரியர் வாசலில் நின்றார். பள்ளிக் கூட மல வண்டிக்காரனைச் சற்றுத் தாமதித்து வரும்படி கூறித்தானே மல வண்டியைத் தள்ளிக் கொண்டு போக ஆசிரியர் ஒரு பக்கம் மூக்கைப் பிடித்துக் கொண்டு ஒதுங்க இவர் வெளியேறிவிட்டார். ஒருநாள் இவரது ஆசிரியர் பாடம் படிப்பிக்கும் போது இரண்டு எதிர்மறைகள் சேர்ந்தால் ஒரு உடன்பாடாகும் என சொல்லிக் கொடுத்ததும் இவர் எழுந்து எங்கோ செல்வதற்கு உத்தரவு கேட்க ஆசிரியர் “இல்லை இல்லை” யென இரு முறை கூறினார். இவர் உடனே வெளியே சென்று விட்டார். மறுநாள் ஆசிரியர் விளக்கம் கேட்டபோது இவர் இரு எதிர்மறைகள் சேர்ந்தால் ஒரு உடன்பாடாகுமெனப் படிப் பித்ததையும் “இல்லை இல்லை” என்று தனக்குக் கூறியதையும் கூறினார். அப்போது ஆசிரியர் “உயர்தர நீதிமன்ற நீதாசனத்தில் ஏறுவாய் இல்லையேல் தூக்கு மரத்திலேறு வாய்” என இவரைப் பார்த்துக் கூறினார். இவர் பாடசாலையை விட்டு வெளியேறும் சமயம் தலைமை ஆசிரியரிடம் சென்று நற்சான்றிதழ் வழங்கும்படி கேட்டபோது இவர் குறும்புத்தனம் காரணமாக கொடுக்க மறுத்து விட்டார். இவர் மறுகிழமை தாம் இறந்து விட்டதாகப் பத்திரிகையொன்றில் பிரசுரித்தார். இதனையறிந்த தலைமை ஆசிரியர் இவர் தமது மாணாக்கர்களுள் மிகவும் பிரசித்தி பெற்றவர் திறமையுடைய வரென பத்திரிகைக்கு எழுதினார். மறுநாள் இவர் தலைமை ஆசிரியரிடம் சென்று அப் பத்திரிகைச் செய்தியைக் காட்டி நற்சான்றி தழைப் பெற்றுக் கொண்டார்.

1864ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற அத்துவக்காத்து சோதனையில் சித்தியெய்திய இவர் திருகோணமலையில் 1865ம் ஆண்டு நடை பெற்ற ஒரு வழக்கில் எதிரிகள் தரப்பில் ஆஜாராகினார். ஒரு ஐசுவரியவானின் மகன், ஒரு நொத்தாரிசு, அவரின் இரண்டு வேலைக்காரர்கள் ஆகி யோருடன் சேர்ந்து பெண் ஒருவரைக் கடத்தி யதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். குறுக்கு விசாரணையின் போது இவர் ஓர் ஊசியைத் தாம் வைத்துக் கொண்டு வேறொருவரிடம் நூலைக் கொடுத்து அதனை ஊசிக் கண் ணுள் செலுத்தும்படி வேண்ட அவரினால் செலுத்த முடியாத தன்மையை நீதிபதிக்குக் காண்பித்து பெண்ணொருத்தியின் ஒற்றுமை யின்றிக் கற்பழித்தல் முடியாதென நிரூபித்து குற்றவாளிகளைத் தப்பவைத்துக் கொண் டார்.

யாழ்ப்பாணம் சுப்பிரீம் கோட்டில் வழக்கு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக் கும் சமயம் வழக்கறிஞர் ஒருவர் “கழுதைப் புண்ணுக்குப் புழுதி மருந்து” எனக் கூறிய போது நீதியரசர் குறுக்கிட்டு அதன் ஆங்கில அர்த்தத்தை வினவினார். வழக்கறிஞரினால் திடீரென மொழிபெயர்க்க முடியாது போக அங்குமிங்கும் பார்த்தார். இவர் நகைப்பு உண்டாக்கும் நோக்குடன் "For a Sore in the Ass dust is the Best remedy" என மெதுவாகச் சொன்னதும் வழக்கறிஞர் உரத்துக் கூற கோட்டிற் குழுமியிருந்தோர் அனைவரும் குலுங்க நகைத்தனர். Ass என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஓர் கொச்சைக் கருத்துமிருப்பதே நகைப்புக்கான காரண மாகும்.

ஒருமுறை இவர் வழக்கொன்றுக் காக இந்தியா போயிருந்த சமயம் அங்குள்ள வக்கீல்கள் பட்டதாரிகளையல்லாது மற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பேட்டி காண மாட்டார்களென்பதை யறிந்து தனது பெயருடன் J.C.A.B என்ற பட்டத்தைச் சேர்த்துக் கொண்டதும் சென்ற விடமெல்லாம் மரியாதையுடன் வரவேற்கப் பட்டார். அங்குள்ள வக்கீல்களுக்கு இப்பட்டம் யாதென விளங்காத போதும் இவரைக் கேட்டறியத் தயங்கினர். கடைசியில் யாழ்ப் பாணம் திரும்பும் சமயம் கப்பலில் ஓர் வக்கீல் இப்பட்டத்தின் தாற்பரியத்தைக் கூறுமாறு கேட்டுக் கொள்ள இவர் Junior Advocate of The Ceylon Bar என்று கூறி அவரை வெட்க வைத்தார்.

ஒரு தடவை திருகோணமலைக்கு Governer வர இருப்பதாயும் அவரை வரவேற்பதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ளும்படி தனது நண்பர்களிடமும் இதர பிரமுகர்களிடமும் கூறிவிட்டு இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டியில் ஒருவரை அழைத்துக் கொண்டு வந்தார். இவரால் அழைத்துக் கொண்டு வரப்பட்டவர் Governor அல்ல வல்வை திரு.குழந்தை வேற்பிள்ளையாகும். ஏற்பாட்டாளர் கோபங் கொண்டு Governor எங்கேயென்று இவரிடம் வினாவ தன்னை ஆள்பவர் Governor குதிரை வண்டியில் இருக்கும் திரு. குழந்தை வேற்பிள்ளை என்று சொன்னார். முக்கிய பிரமுகர்கள் மாத்திரம் இரட்டைக் குதிரை வண்டியில் அழைத்து வரும் வழக்கம் இருக் கும் போது எப்படித்தனி நபர் ஒருவர் அழைத்துவரப்படலாம் என்று அவர்கள் கேட்க இவர் வண்டியில் பூட்டப்பட்டிருப்பது குதிரைகள் அல்ல. அவை இரண்டும் கோவேறு கழுதைகள் எனக் கூறித் தப்பிக் கொண்டார்.

மேலே குறிப்பிடப்பட்ட சொற் களைத் தவிர பிளீட்ஸ் என்பதற்குப் பதிலாக "கொய்யகம்" என்ற சொல்லும், அழுக்கு என்பதற்குப் பதிலாக "ஊத்தை" என்ற சொல் லும், அளவுக்கு அதிகமான என்பதைக் குறிக்கும் "கனக்க" என்ற சொல்லும், கடைசிவரை திருந்தாமல் இருப்பவனைக் குறிக்கும் "கடைகெட்ட" என்ற சொல்லும், ஒருவருக்கும் பயன்படாதவன் என்பவனைக் குறிக்கும் "விழலன்" "கூளன்" "கோமாளம்" என்ற சொற்களும், அதட்டு வதனைக் குறிக் கும் "உறுக்கி" என்ற சொல்லும், குறி தவறாமல் என்பதனைக் குறிக்கும் "லெக்கு" என்ற சொல்லும், பாத்திரம் என்பதற்குப் பதிலாக "ஏனம்" என்ற சொல்லும், ஆசௌசம் என்பதற்குப் பதிலாக "துடக்கு" என்ற சொல் லும் பேச்சு வழக்கில் இருந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிட முறைமையும் வீடுகளின் அமைப்பும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இப்பகுதியில் கட்டப்பட்ட பெரும்பாலான வீடுகள் பெரிய நடுமுற்றத்தைக் கொண்ட நாற்சார் வீடுகளாகவே கட்டப்பட்டன. பெரும்பாலான குடும்பங்கள் கூட்டுக் குடும்பமாக இருந்தமையால் பல அறைகளைக் கொண்ட வீடுகளாக இருந்தன. வீடுகளின் வாயில் அமைப்பு சிறியதாயும் குனிந்து கொண்டு போகவேண்டியும் இருந்தன. சுவாமி அறைக் கதவும் குனிந்து வணங்கிப் போக வேண்டுமென்பதற்காக உயரம் குறைந்ததாக அமைக்கப்பட்டது. மற்றைய அறைகளை விட சுவாமி அறைகள் பெரிதாகவே அமைக்கப் பட்டன. பிற்பகுதியில் கூட்டுக் குடும்ப முறை மறைந்து கொண்டு போக தனித்தனி வீடுகளாகவும் நெருக்கமாகவும் அறைகளின் எண்ணிக்கைகள் குறைத்தும் கட்டப்பட்டன. பெரிய தெருவிலிருந்து பக்கங்களுக்கு பிரித்துப் பிரித்து சிறிய தெருக்களும் அமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகளின் முகப்புகள் பிரதான வீதியிலும், சிறிய தெருக்களிலும் ஆரம்பிக்கப்பட்டு சிறிய நடைபாதையூடாகப் பிரதான வீட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. இராணுவ நடவடிக்கையின் காரணமாக ஒருசில வீடுகள், முகப்புக்கள் சேதமாக்கப்பட்டாலும் கூட சில வீடுகள் புனரமைக்கப்பட்டு பழைய பொலி வுடன் திகழ்கின்றன. இக்காலப்பகுதியில் அமைக்கப்பட்ட வீடுகளின் அறை களுக்கு முன்பக்கம் இருமருங்கிலும் பரந்த திண்ணைகள் அமைக்கப்பட்டிருந்த தோடு தூண்கள், சீலிங் பலகை என்பன பர்மா தேக்கமரங்களைக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளன. வீட்டின் முகப்பு மற்றும் வீட்டைச் சுற்றிவர அமைக்கப்பட்டுள்ள Eaves Board, Valance Board என்பன வேலைப்பாடுடன் கூடிய தேக்கமரங்களினால் ஆனவையாகும். பெரும்பாலான வீடுகளின் சுவர்கள் மினுமினுப்புடன் கூடிய பூச்சு பூசப்பட்டு முட்டையின் கோது எவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர சொரப்பில்லாமல் மழமழப்பாக உள்ளதோ அவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சுவர்களுக்கு மை பூச வேண்டிய தேவையே இராது. இதே போன்ற சுவர்களைக் கொண்ட சில வீடுகளைத் தற்போதும் காணமுடியும். அமைக்கப்பட்ட தூண்கள் பெரிதாகவும் வேலைப்பாடுடன் கூடியனவாயும், முகப்புக்கள், கூரை, தரை என்பன அலங்காரம் கொண்டுள்ளனவாயும் உள்ளன. கதவுகள் இடைவெளிகள் என்பன செடிப்பலகை அலங்காரத்தையும் கொண் டுள்ளன. இக்காலப்பகுதி வீடுகள் யாவும் ஒல்லாந்த காலனிய வீடுகளின் செல் வாக்குக்குட்பட்டுள்ளன என்று கூறப்படு கிறது. கூரைகள் இரண்டு அடுக்குக் கொண்டதாயும் பர்மாவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஓடுகளினாலும் வேயப்பட்டிருக் கும். சீலிங் போன்ற உள்பக்கம் அமைக் கப்பட்டுள்ள ஓடு உஷ்ணத்தைத் தவிர்த்து குளிர்மையை அளிப்பதோடு அலங்காரத் துடன் கூடியதாயும் உள்ளது.

வல்வை மண்ணில் பிறந்த பாலேந்திரன் வசந் என்பவர் 2005ம் ஆண்டின் அகில இலங்கை உதைப்பந்தாட்டக் குழுவிற்குத் தெரிவு செய்யப்பட்டு பலநாடுகளுடனான உதைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குகொண்டு தனது திறமைகளைக் காட்டி வருகின்றார். மிகவும் குறைந்த வயதில் (20) அகில இலங்கைக் குழுவில் பங்கேற்கும் இவர் சிவகுரு வித்தியாசாலை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் உதைப்பந்தாட்டக் குழுவில் பங்குபற்றியதோடு கழகங்களுக்கிடையிலான போட்டிகளிலும் பங்குபற்றி வெகு சிறப்பாக விளையாடியதன் மூலம் மாவட்ட, மாகாண மட்டத்திலும் கலந்து கொண்டு பல பரிசில்களையும் தனதாக்கிக் கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தீர்த்தம் ஆடிவரும் வாசல் பாட்டு

1. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது.
2. மேடையிது மேடையிது எங்கள் மெல்லியலாளுடைய மேடையிது.
3. நாங்கள் பூசைபண்ணி அநுதினமும் புகழ்ந்தேற்றும் மாரிவாசலிது.
4. ஆயிரம் மாரி கண்ணுடையாள் எங்கள் அலங்காரி வரும் வாசலிது.
5. பதினாயிரம் மாரி கண்ணுடையாள் எங்கள் பராசக்தி வரும் வாசலிது
6. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது.
7. கங்கையிலேமாரிதலைமுழுகிஎங்கள் கிளிமொழியாள் வரும்வாசலிது.
8. வைகையிலே மாரி தலைமுழுகி எங்கள் வனமயிலாள் வரும் வாசலிது.
9. பொய்கையிலேமாரிதலைமுழுகிஎங்கள் பூங்கொடியாள் வரும்வாசலிது
10. சித்திரையா பறுவத்திலே அம்மன் தீர்த்தமாடி வரும் வாசலிது.
11. வீதிசுத்தி பவனிவரும் எங்கள் மேகவண்ணன் தங்கை வாசலிது.
12. வாசலிது வாசலிது எங்கள் மாரியம்மாளுடைய வாசலிது.
13. உலகளந்தோன் தங்கையராம் அம்மன் உத்தமியாள் வரும்வாசலிது.
14. கோடியா கரையை விட்டு இங்கே குதித்துவந்தாள் வரும் வாசலிது.
15. அரனுடனே வாதாடும் எங்கள் ஆங்கார மாரி வாசலிது.
16. சிவனுடனே வாதாடும் எங்கள் தேவி நல்லாளுடைய வாசலிது.
17. வாசலிது வாசலிது எ கள் மாரியம்மாளுடைய வாசலிது.

தொகுத்தவர்: வல்வை, திரு. அப்பாத்துரை சித்திரவேலாயுதம்.

**சித்திரத்தேர் சிறப்பு மலர் - 09.05.1979**
**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்**
**வல்வெட்டித்துறை எனும் மலரிலிருந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

# வல்வை நிகழ்வுகளின் தரிசனம்

## (பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள்)

## உள்ளே....

ஆழக்கடல் வென்றவர்கள்

ஆன்மீகப் பணியில் வல்வைச்சிவன் ஆலய திருக்கல்யாண மண்டபம்

"கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்" எம்மவரால் 1859ல் ஸ்தாபிக்கப்பட்ட வரலாறு

30 வருடங்களாக ஓடிக்கொண்டு இருக்கிறேன்.

அமெரிக்காவுக்கு "மைலாய்" இந்தியாவுக்கு "வல்வை"

வல்வை மண் மீண்டும் எழும்!

தாய்நாட்டிற்குப் பெருமை தேடித் தந்த நீச்சல்வீரன் நவரத்தினசாமி

**என். சிவரட்ணம்**

*B.A (S.L) A.I.B(S.L) F.I.B(S.L) P.G.Dip-in Pub.Admin*
*Chief Manager, Bank of Ceylon*
*Super Grade Branch, Jaffna*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழக்கடல் வென்றவர்கள்

வல்வெட்டித்துறை சுந்தர மேத்திரியாரால் கட்டப்பட்ட "அன்னபூரணி அம்மாள்" என்னும் இரட்டைப் பாய்மரக் கப்பலை 1938ம் ஆண்டு சூயஸ் கால்வாயூடாக அமெரிக்காவரை ஓட்டிச் சென்ற வல்வை கடலோடிகளில் கடைசியாக வாழ்ந்து மறைந்த அமரர் ஜயாத்துரை இரத்தினசாமி அவர்களுக்கு காணிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டதும், வல்வை ஆதிகோவிலடி ஜெயம் அவர்களால் 10.04.1995ல் எழுதப்பட்டதும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. பேபி சுப்பிரமணியம் அவர் களால் வெளியிட்டு வைக்கப்பட்டதுமான மேற்படி வரலாற்று ஆவணத்திலிருந்து சில பகுதிகள்,

வல்வை நகரில் வித்தனை ஒழுங்கையில் வாழ்ந்து வந்த இவ் ஆவணத்திற்கு காரணகர்த்தாவாக அமைந்த திரு. ஜயாத்துரை இரத்தினசாமி அவர்களைக் கட்டுரையாளர் நேர்காணல் கண்ட இடமானது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும், இந்திய நய வஞ்சகத் தால் மாவீரரான குமரப்பா புலேந்திரன் போன்ற பன்னிரு வேங்கைகளின் நினைவாலயமான தீருவில் மைதானமாகும். அங்கே அன்னபூரணியின் பாய்மரம் போல காட்சி அளித்த தூபி யடியின் கீழ் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்ததும் அந்த இடத்திற்கு காலஞ்சென்ற அரு.அம்பலவாணரும் வந்து சேந்தார். அம்பலவாணர் என்பவர் 20ம் நூற்றாண்டின் முற் பகுதியில் "ஆனந்தவல்லி" கப்பலின் தண்டையலாக இருந்து, பின்னர் கொழும்புத் துறைமுகத்தில் Tug Master ஆகக் கடமை புரிந்தவர். அவர் வல்வையின் இளம் சந்ததியினரை கடல் மாலுமித் தொழில் நுட்பத்தில் ஊக்குவிக்கும் பொருட்டு காலஞ்சென்ற கப்டன் கா. மோகனதாசின் உதவியுடன் வல்வையில் ஒரு நாவாய் பயிற்சிப் பள்ளியை (Navigation Training School) ஆரம்பித்துச் சில காலம் செயல்படுத்தி வந்தவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் உதவியுடன் இது தொடர்பாக சில விபரங்களை சாதனையாளராகக் கௌரவிக்கப்பட்ட திரு. ஐயாத்துரை இரத்தினசாமியிடம் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கப்பலோட்டிய தமிழர் வாழ்ந்த இந்த மண் இன்று புறக்கணிக்கப்பட்ட ஒரு நிலையில் இருப்பதை மாற்றியமைக்க வேண்டுமென்ற உணர்வு தலை தூக்கியது..... "கப்பல் ஓட்டிய தமிழன்'' என்றதும் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றின் உந்து சக்தியாக இருந்த வ. உ. சிதம்பரனாரைத்தான் உலகம் அறியும். ஆனால் அந்தக் கப்பல் ஆங்கிலேயரிடம் இருந்து வாங்கப்பட்டு சுதேச வர்த்தகத்திற்கு உபயோகிக்கப்பட்டது...... ஆனால் எமது "அன்னபூரணி அம்மாள்" கப்பல் எமது மண்ணில் எம்மவரால் கட்டப்பட்டு அமெரிக்கரால் வாங்கப்பட்டு எம்மவராலேயே இரண்டு வருடங்கள் வரை உலகின் ஒவ்வொரு துறைமுகங்களாக கடந்து இறுதியாக அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்ட கதையை..... அந்த வீரதீர சாகசங்களை அந்தக் கப்பல் ஓட்டிகளுள் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வதுடன் அதை வரலாற்று ஆவணமாக்குவது தமிழீழத்தின் வரலாற்றுக்கு நாம் செய்கின்ற ஒரு காணிக்கையாகும்.

ஆம்!.... அன்று அவருடன் இடம் பெற்ற உரையாடலை அப்படியே எவ்வித மாற்றமும் செய்யாது இங்கே உங்கள் நுகர்விற்காக காணிக்கையாக்குகின்றேன். இது நிகழ்ந்தது 1989ம் ஆண்டு.

**கேள்வி :**

நீங்கள் உங்கள் சிறுபராயத்தைப் பற்றியும் கல்வி, தொழில் போன்றவற்றைப் பற்றியும் சுருக்கமாகக் கூறுவீர்களா?

**பதில் :**

நான் 01.02.1909ல் பிறந்து 4ம் வகுப்பு வரை வல்வையிலுள்ள அரியகுட்டி (அமெரிக்கன் மிசன்) பாடசாலையில் படித்தேன். எனது தாய்மாமன் புண்ணியமூர்த்தி தண்டையலுடன் மிகுந்த பாசம் வைத்திருந்த எனக்கு அவருடன் சேர்ந்து கப்பலில் ஊர் சுற்றித்திரியவே ஆர்வம் மிகுந்திருந்தது. வல்வை சிதம்பராவிலும் படிக்க வைத்தார்கள். ஆனால் எனக்கு படிப்பில் ஆர்வம் இருக்கவில்லை.

**கேள்வி :**

உங்கள் கப்பல் வாழ்வில் கன்னிப் பயணம் பற்றி கூறுங்கள்

**பதில் :**

நான் 1919ல் அதாவது எனது 10வது வயதில் இங்கிருந்து மாட்டுவண்டியில் யாழ்ப் பாணம் ஊடாக ஊர்காவற்றுறைக்குப் போய் அங்கிருந்து எனது மாமா புண்ணியமூர்த்தித் தண்டையலுடன் தோணியில் தென்னிந்தியாவிலுள்ள அதிராம்பட்டினத்திற்கு போனேன். அங்கு ஒரு முஸ்லீம் முதலாளிக்கு சொந்தமான "அகமட்குவரஜி" என்ற கப்பலில் நல்ல இன வடக்கன் மாடுகள் பலவற்றை ஏற்றிக் கொண்டு வந்தோம். தொடர்ந்து அக்கப்பல் அரிக்கன், பர்மா போன்ற துறைமுகங்களுக்குப் போய் நெல், அரிசி போன்றவற்றை கொண்டு வந்தது. நான் அக்கப்பலில் சமையல் செய்பவருக்கு எடுபிடி வேலை செய்பவராக வேலை செய்தேன். இதன் பின்னர் தான் மீண்டும் என்னை 1920ல் வல்வை சிதம்பராவில் படிப்பதற்குச் சேர்த்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி :**

நீங்கள் அதன்பின் படிப்பை தொடர வில்லையா?

**பதில் :**

1928ல் S.S.C பரீட்சை எடுத்தேன். ஆனால் சித்தியடையவில்லை. இதன்பின் 3வருடங்கள் சிங்கப்பூரில் வேலைக்காக அலைந்து மீண்டும் 1932ல் ஊருக்கு திரும்பி எமது ஊர்த் தண்டையல் களுடன் சேர்ந்து கப்பலில் கடலோடி யாக எனது திறமையை வளர்த்து வந்தேன்.

**கேள்வி :**

நீங்கள் ஏதாவது சாதனை படைக்க வேண்டும் என நினைக்கவில்லையா?

**பதில் :**

ஏன் இல்லை? கப்பலில் இந்த உலகத் தைச் சுற்றிவர வேண்டும் என்ற ஆசை. ஆனால் அது நிறைவேறுமா என்ற சந்தேகமும் கூடவே இருந்தது. 1936ல் ஜேர்மனியர் ஒருவர் கடற் பிரயாணம் செய்து திருகோணமலையை அடைந்து தனக்கு உதவியாக தனது வள்ளத்தில் என்னையும் கூட்டிச் செல்ல இருந்தார். நான் எல்லையில்லா ஆனந்தம் அடைந் தேன். ஆனால் அது பகற்கனவாகி விட்டது. எனது உறவினர்களின் கடுமை யான எதிர்ப்பினால் அது கைகூடாமல் போய் விட்டது.

**கேள்வி :**

நீங்கள் எப்படி அன்னபூரணியை அமெரிக்காவுக்கு கொண்டு போக நேர்ந் தது?

**பதில் :**

இதற்கு நான் பதில் சொல்ல வேண்டு மானால் வல்வெட்டித்துறையினரது கப்பல் கட்டும் தொழிலையும் அவர் களது கடல் கடந்த வணிகத்தை பற்றியும் சிறிது கூறியாக வேண்டும்.

எமக்குத் தெரிய அதாவது கர்ணபரம் பரையாக ஏறக்குறைய 7, 8 நூற்றாண்டு களாக நாம் இத்தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கிறோம். உலகத்தில் கப்பல் கட்டும் தொழிலில் வல்வெட்டித்துறை மக்கள் வல்லுனர்களாகத் திகழ்ந்த மைக்கு பல சான்றுகள் உள்ளன. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 நூற் றாண்டின் முற்பகுதியிலும் எம்மவர் பல கப்பல்களை வைத்து தொழில் நடத்தி வந்தனர். இவர்கள் அதிராம் பட்டினம், நாகபட்டினம், காக்கிநாடா, கல்கத்தா, சிட்டகொங், ரங்கூன், பினாங்கு, பாகிஸ் தான், மலேசியா, சிங்கப்பூர், நிக்கோ பார், யாவா, சுமத்திரா போன்ற இடங்க ளுக்குச் சென்று 3000 தொன் தொடக்கம் 11 000 தொன் வரை சரக்குகள் ஏற்றக் கூடிய கப்பல்களில் வியாபாரத்தில் சுதந்திரமாக ஈடுபட்டு வந்தனர். இக்கால கட்டங்களில் எமக்கு சொந்தமானதும் இந்திய செட்டியார்களுக்கு சொந்தமானது மான 113 கப்பல்களின் பெயர்கள் "வல்வெட்டித்துறை ஊரின்னிசை" எனும் நூலில் காணப் படுகிறது. கப்பல் கட்டும் தொழிலில் ஒவ்வொரு நுணுக்கங்களை யும் எம்மவர் அறிந்திருந்தனர் என்பதற்கு ஒரு சான்று வருமாறு: 1850ம் ஆண்ட ளவில் இங்கிலாந்திலிருந்து வந்த "King of Atlantic" என்ற நாலு பாய் மரக் கப்பல் திருகோணமலையில் கடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிழ்ந்த போது அதை எடுக்க முடியாமல் அந்தக் கப்பலை அந்த நிலையிலேயே விற்றுவிட நேர்ந்தது. இது 12 ஆயிரம் தொன் எடையுள்ளது. இதை அறிந்த பெரியவராகிய வெங்கடாசலம் பிள்ளை என்பவர் இக்கப்பலை ஏலத்தில் வாங்கி மிதக்கச் செய்து வல்வைக்கு கொண்டு வந்து பழுது பார்த்து அதனைச் சில வருடங்களாக கடல் கடந்த வியாபாரத்திலும் பயன்படுத்தினார். எமது ஊரில் கட்டப்பட்ட கப்பல்கள் உலக ஸ்தாபனமாகிய "லொயிட்ஸ்" இல் பதிவு செய்யப்பட்ட வையாகவே இருந்தன.

29.11.1990இல் உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியை இங்கு குறிப்பிடுவது பொருத்தம்.

**தலைப்பு:** கப்பல் கட்டும் துறை.

**செய்தி** - வல்வெட்டித்துறை பற்றியும் கொழும்பு மகாநாட்டில் ஆராய்வு செய்து பண்டைக் காலத்தில் கப்பல் கட்டும் தொழிலில் வல்வெட்டித் துறையை சேர்ந்தோர் ஆற்றிய பங்கு குறித்தும் கொழும்பில் டிசம்பர் 12, 14ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் மகா நாட்டில் ஆராயப்படவிருக்கிறது. வடக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் சிறப்பிடம் பெற்றிருந்தனர் என்றும் களனி பல்கலைக்கழக புதைபொருள் சம்பந்தமான பேராசிரியர் திரு. சேனக பண்டார நாயக்கா செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார். சுதந்திரமாக கடல் கடந்த வாணிபம் செய்த இவர்கள் சிங்கப்பூர், யாவா, சுமத்திரா ஆகிய இடங்களில் பல சைவக் கோயில்களையும் அமைந்துள்ளனர்.

கப்பல் கட்டும் துறை

# வல்வெட்டித்துறை பற்றியும்

# கொழும்பு மாநாட்டில் ஆராய்வு

கொழும்பு, நவ. 29
பண்டைக்காலத்தில் கப்பல் கட்டும் தொழிலில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் ஆற்றிய பங்கு குறித்தும் கொழும்பில் அடுத்த மாதம் 12ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறும் மாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது.

கலாசார தகவல் துறை அமைச்சர் திரு. டப்ளியூ. ஜே. எம். லொக்குபண்டார இத்தகவலை வெளியிட்டார்.

இந்த மாநாடு சம்பந்தமாக கடந்த வாரம் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் அந்த மாநாடு சம்பந்தமாக மேலும் கூறியதாவது;

"கடல்துறை பட்டொளிப் பாதை" மாநாடு என அழைக்கப்படும்; இதில் வெளிநாட்டு, உள்நாட்டுக் கல்விமான்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

பண்டைக்காலத்தில் வர்த்தகத் தொடர்புகளில் வடக்கு தெற்கு மாகாணங்கள் வகித்த பங்கும், கப்பல் கட்டும் தொழிலில் வடக்கை குறிப்பாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் ஆற்றிய பங்கும் இந்த மாநாட்டில் ஆராயப்படவிருக்கின்றன;

அத்துடன் பண்டைக் காலக் கப்பல்கள், தோணிகள் பொருள்கள் மற்றும் தகவல்கள் கொண்ட கண்காட்சியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

இப்படி அவர் தெரிவித்தார்

பண்டைக்காலத்தில் வர்த்தகத் தொடர்புகளில் வடக்கு மாகாணம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

கப்பல் கட்டும் தொழிலில் இலங்கையர் - குறிப்பாக வடக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தோர் சிறப்பிடம் பெற்றிருந்தனர் என்று களனி பல்கலைக்கழக புதைபொருள் சம்பந்தமான பேராசிரியர் திரு. சேனக பண்டார நாயக்கா இந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பண்டைக்காலத்தில் தெற்கில் பிடிக்கப்பட்ட யானைகள் கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டு யாழ்ப்பாணத்தில் ஏலத்தில் விற்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

(இ-3-5)

**உதயன் பத்திரிகை - 29.11.1990**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி :**

கள்ளக்கடத்தல் கள்ளத் தோணி என்று எம்மை அழைக்கிறார்களே ஏன்?

**பதில் :**

1935ல் பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு இங்கிலாந்தினால் ஆளப்பட்டது. இதனால் தனிப்பட்டவர்களின் வர்த்தகம் அரசாங்க மயமாக்கப்பட்டது. இலங்கையும் அந்த நாடுகளுடன் அரசாங்கம் என்ற ரீதியிலேயே வர்த்தகம் செய்தது. இதனால் நூற்றுக் கணக்கில் எம்மிடம் இருந்த கப்பல்களும் அத் தொழிலில் ஈடுபட்டோரும் கதியற்றவர்களாகக் கைவிடப்பட்டனர். நீராவிக் கப்பல்களில் வர்த்தகம் நடை பெற்றது. அவற்றிற்குக் கொடுக்கும் கேள்வை (வாடகையை) எமது கப்பல்களுக்கு தரும்படி இலங்கை அரசுடன் வாதாடினோம். அவர்களோ பாய்மரக் கப்பல்களுக்கு பாதுகாப்பு இல்லை. காலத்துக்குச் சரக்கு வந்து சேராது. காப்புறுதி செய்யமுடியாது போன்ற பல காரணங்களைக் காட்டி இது சாத்தியப்படாது என கைவிரித்து விட்டனர்.

இலங்கையில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வல்வைத் தொழிலாளர்கள் பலர் தமக்கு வேறு தொழில் தெரியாத காரணத்தால் இச்சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு இரவிரவாக இந்தியக் கரைக்குப் போய் பெருந்தொகையான அரிசி மற்றும் உடு துணிகளை கொண்டுவரத் தொடங்கினார்கள். இப்படியான செயல்களினால் எமது பசியை மட்டுமல்ல தென்னிலங்கை மக்களது பசியையும் நாம் போக்கினோம் என அன்று புகழப்பட்டோம். அதேபோல சேர். பொன் இராமநாதனை அன்று பல்லக்கில் தூக்கிய அதே தென்னிலங்கைச் சிங்கள மக்கள் இன்று எம்மவரை என்னபாடு படுத்துகிறார்கள் என்று எண்ணிப் பார்க்கிறேன். என்றும் வருத்தத்துடன் கூறிக் கொண்டார். அவர் மேலும் தொடர்ந்து கூறுகையில் இதே போன்று இந்தியாவில் தட்டுப்பாடுகளுள்ள பொருட்களை இங்கிருந்து அங்கு கொண்டுபோய் கொடுத்து பண்ட மாற்று முறையில் தொழிலை புரிந்து வந்தனர். இலங்கை அரசாங்கம் இதைத் தடுப்பதற்காக அரச ஊழியர்களையும் கடல் ரோந்தையும் பயன்படுத்தியது. ஆரம்பத்தில் நேர்ப்பாதையால் போய் வந்த எம்மவர்கள் பின்னர் அரச ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுத்து சமாளித்தும், பின்னர் கடல் ரோந்துக்கு ஒழித்தும் இத் தொழிலை செய்து வந்தனர். இதையே கள்ளக் கடத்தல் என்று பெயர் சூட்டி அழைத்தனர். எம்மவரை இந்த அரசாங்கம் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் இன்று எத்தனையோ கப்பல்களைச் சொந்தமாக வைத்திருப்பதுடன் பொருளாதாரத்தில் முன்னேறி பெரும் அந்நிய செலாவணியை சம்பாதித்திருக்கும்.

**கேள்வி :**

"அன்னபூரணி" எத்தனையாம் ஆண்டு யாரால் கட்டப்பட்டது? அதன் விபரங்களைக் கூறுவீர்களா?

**பதில் :**

வல்வையிலுள்ள ஆதிகோவிலடிக் கிராமத்தின் கிழக்குப் புறத்தில் உள்ள ஒரு கப்பல் கட்டுத்தளத்தில் (வாடியில்) இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் இன்றும் வாடியடி என அழைக்கப் படுகின்றது. இதன் கடலோரத்தில் அன் றைய கப்பல்களின் வீரகாவியம் கூறும் சின்னங்களாக பல தொன்கள் எடை யுள்ள இரு நங்கூரங்களை இன்றும் காணலாம். இந் நங்கூரங்களைக் கொண்டே அப்போ கட்டப்பட்ட கப்பல் களின் பருமனை ஊகிக்கக் கூடியதாக இருக்கும். இக்கப்பல் உள்ளூர் வேப்ப மரம் கொண்டு எமது ஊரைச் சேர்ந்த சுந்தரி மேத்திரியாரால் கட்டப்பட்டது. இவர் பொன்னி மேத்திரியின் தந்தையா வார். இந்த இரட்டைப் பாய்மரக் கப்பல் 1930 இல் வெள்ளோட்டம் விடப்பட்டது. இதன் நீளம் அண்ணளவாக 100 அடி யாக இருக்கலாம்.

இவை 70 - 80 வருடங்கள் பாவிக்கக் கூடிய திறன் கொண்டவை. இக்கப்ப லுக்கு உண்மையான பெயர் "அன்ன பூரணி அம்மாள்". இதற்கு முதல் பொன் னுத் தண்டையலின் தந்தை உடையா மணலைச் சேர்ந்த முருகுப்பிள்ளை குமாரசாமித் தண்டையல், அன்னபூரணி என்ற அதிஸ்டமுள்ள ஒரு கப்பல் யாவா, சுமித்திராவரை பல காலம் கடலோடிப் பெரும் பொருள் சேர்த்துத் தந்தமை யால் அதே பெயரில் இந்தக் கப்பல் கட்டப்பட்டது என்பதையும் சொல்லத் தான் வேண்டும்.

இக்கப்பலின் சிறப்பை அறிந்த தமிழ் நாடு தேவக் கோட்டையை சேர்ந்த திரு.பி.கு. நாகப்பச்செட்டியார் இதை விலைக்கு வாங்கித் தொழில் புரிந்து வந்தார். இக் கப்பல் பல துறைகளுக்குச் சென்றாலும் வல்வைத்துறை முகத்தையும் முறைக்கு முறை தரிசிக்கத் தவறுவ தில்லை. இப்படியான காலத்திலேதான் 1936இல் அமெரிக்க செல்வந்தரும் கடலோடியுமாகிய றொபின்சன் என்பவர் எம் ஊர் கப்பற் பெருந்தரகராகிய கதிர வேலுப்பிள்ளையைக் கூட்டிச் சென்று நாகப்பச்செட்டியாரிடம் அன்னபூரணியை விலை கொடுத்து வாங்கினார். அவர், இக்கப்பல் பாய்விரித்து பயணம் செய்த போது அதன் அழகில் மயங்கினார். உலகத்தை ஒரு சின்ன வள்ளத்தில் உல் லாசப் பயணமாக சுற்றி வந்து கொண் டிருந்த அந்த பிரபு இதை ஒரு வினோதப் பொருளாக அமெரிக்காவுக்கு கொண்டு செல்ல ஆசைப்பட்டார். அதை பின்னர் செய்வித்தும் முடித்தார்.

**கேள்வி :**
உங்களுக்கு எப்படி றொபின்சன் பிரபு வின் அறிமுகம் கிடைத்தது?

**பதில் :**
பிரவுவினால் வாங்கப்பட்ட கப்பல் கொழும்புத்துறைமுகத்திற்கு வல்வெட் டித்துறை கடலோடிகளினால் கொண்டு வரப்பட்டது. நான் அப்பொழுது Mate Certificate எடுப்பதற்காகக் கொழும்பு சென்றிருந்தேன். அந்தப் பரீட்சையில் சித்தியடைந்ததும் நேரடியாகவே திரு. றொபின்சனை சந்தித்து என்னையும் அன்னபூரணியம்மாளை அமெரிக்கா வுக்கு கொண்டு போகும் மாலுமிகள் குழுவில் சேர்க்கும்படி விண்ணப்பித்துக் கொண்டேன்.

**கேள்வி :**
அந்தச் சிறிய கப்பலில் பல்லாயிரக் கணக்கான மைல்கள் தொலைவிலுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவுக்கு, அதுவும் முன்பின் அனுபவமில்லாத பயங்கரக் கடல்களை கடந்து செல்லத் துணிந்தது ஒரு கண் மூடித்தனமான செயலல்லவா?

**பதில் :**

அக் கப்பலை வாங்கிய றொபின்சன் அதனை உவாக்கர் (Walkers) கம்பனி மூலம் ஒரு ஆங்கிலக் குடும்பம் வசிக்கக் கூடிய வகையில் குளியல் அறை, சாப் பாட்டறை போன்றன கொண்டதாக ஒரு நவீன கப்பல் போல சில மாறுதல்களை செய்வித்துக் கொண்டார். அத்துடன் காற்றில் பாய் விரித்து பயணம் செய்ய முடியாத சந்தர்ப்பங்களிலும் ஆபத்து நேரங்களிலும் உதவக்கூடியதாக 'என்ஜின்' உம் பூட்டப்பட்டது.

**கேள்வி :**

அக்கப்பலில் படகோட்டிகளாக வந்த வர்களின் விபரங்களைக் கூறமுடியுமா?

**பதில் :**

இந்தக் கப்பலை அமெரிக்காவுக்கு பாய் கள் மூலம் செலுத்திச் செல்லக் கூடிய வர்களாகிய வல்வை வாசிகளையே அவர் சேர்த்துக் கொண்டார். அவர்கள் விபரம் பின்வருமாறு:

1. க. தம்பிப்பிள்ளைத் தண்டையல் (Master) இவர்தான் "அன்னபூரணி அம்மாள்" நாகப்பச் செட்டியாரிடம் இருந்த போதும் கப்பல் தலைவனாக இருந்தவர்.
2. தா. சபாரத்தினம் (Mate No .1)
3. நான் (Mate No .2) அத்துடன்
4. சி. சிதம்பரப்பிள்ளை
5. பூ. சுப்பிரமணியம்
6. சேது. நவரத்தனராசா
7. நடராசா
8. தில்லையம்பலம்
9. சாண்டோ சங்கரதாஸ் என்போரும் மாலுமிகளாக இணைந்து கொண்ட னர்.

கப்பலின் பெயரும் அச்செல்வந்தரின் மனைவி பெயரான "Brigantine Florence C. Robinson" என மாற்றப் பட்டு பதிவு செய்யப்பட்டது. அத்துடன் ஏடன் (Adon) வரை செல்லக் கூடிய வேறு இரண்டு மாலுமிகளையும் றொபின்சன் நியமித்துக் கொண்டார்.

**கேள்வி :**

உங்கள் பயணம் எப்போ ஆரம்பிக்கப் பட்டு எப்போ முடிக்கப்பட்டது என்பது பற்றியும், உங்கள் அனுபவங்கள் பற்றி யும் சுருங்கக் கூறுங்கள்?

**பதில் :**

அந்த உன்னதமான பயணமானது எனது குறிப்பின்படி 3.3.1937ல் ஆரம்பமானது. இதன் அனுபவங்களை ஒவ்வொன்றாக சொன்னால் ஒரு பெரிய புத்தகமே எழுதி விடலாம். எனவே மிக சுருக்கமாகச் சொல்கிறேன்.

கொழும்பை விட்டுப் புறப்பட்ட எமக்கு முதன்முதலில் கடக்கும் துறைமுகமாக அமைந்தது மாலைதீவு ஆகும். எம்முடன் கூடவே செல்வப்பிரபு றொபின்சனும் இருந்தார். சிறிது கொச்சையான தமி ழும் கதைப்பதுடன் எமது உணவுகளை யும் உண்ணப் பழகி இருந்தார். தனியே வள்ளத்தில் உலகத்தைச் சுற்றிய வீரனல்லவா? எமக்கு உற்சாகமூட்டும் வகையில் அந்த ஆழ்கடலில் குதித்து நீந்துவார். 8, 10 மைல் வேகத்தில் பயணம் செய்யும் எமது கப்பலை நீந்தி வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிப்பார். இப்படியான வேலை யில் எம்மவரான சாண்டோ சங்கரதாஸ் என்பவரும் அவருக்குச் சளைக்காமல் பலவித சாகசங்களை கப்பலிலேயே செய்து காண்பித்து எம்மை மகிழ்வித் தார். கப்பலில் 6 மாதங்களுக்குப் போது மான உணவு மற்றும் நீர் சேகரித்து வைத்திருந்தோம்.

ஏறக்குறைய 2000 மைல் தூரம் பயணம் செய்து ஏடன் துறைமுகத்தை வந்த டைந்தோம். எம்மிடம் அப்போ நவீன வசதிகள் கொண்ட கருவிகள் இருக்க வில்லை. எம்மிடம் இருந்ததெல்லாம் உலகப்படம் அதாவது முக்கிய துறை முகங்களையும், திசைகளையும், தூரங் களையும் அறிவதற்கும் அதனைவிட கொம்பாஸ் எனும் திசையறி கருவி, கடலின் ஆழத்தை அளக்க ஒரு கருவி. அதைவிட ஒரு சிறிய படகு இவற்றைக் கொண்டு தான் நாம் பயணத்தை ஆரம் பித்தோம். ஆனால் எமது பயணத்திற்கு முக்கிய ஆயுதமாக இருந்தது எம்மிடம் இருந்த துணிவும் இயற்கையைக் கொண்டு நேரத்தையும், தூரத்தையும் அறியும் சக்தியே. இயற்கையின் மாறு தல்களின் மூலம் அதாவது நிலவு நட்சத் திரங்களின் அசைவுகள் மூலம் திசை களையும் கடலில் ஏற்படப்போகும் நீரோட்ட மாற்றங்களையும் எம்மவர் சரி யாக கூறக்கூடிய திறன் பெற்றவராக இருந்தனர். இது மட்டுமல்ல பெரும் மழை, புயல் என்பவற்றின் அசைவு களையும், அலை வீசப் போகும் திசை யையும், எவ்வளவு நேர காலத்தின் பின் நிகழப்போவது என்பதையும், பருவ காலக் காற்றுக்கள் பற்றியும் அறிந்திருந் ததாலும் முன்னேற்பாடாக பல பாது காப்பு நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய திறன் பெற்றிருந்தனர்.

ஏடன் துறைமுகத்திற்கு வந்தடைந்த நாம் நன்றாக ஓய்வு எடுத்தோம். ஆனால் எம்மவரில் பலருக்கு எமது மண்ணை ஒரு முறை போய் பார்த்துவரும் மண் வாசனை பிடித்துவிட்டது. பல நாட்கள் ஏடன் துறைமுகப்பகுதியைச் சுற்றிப் பார்த்தபின் என்னையும் சபாரத்தினம் மற்றும் சிதம்பரப்பிள்ளை என்போரை யும் கப்பலை பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்கும்படி கூறி, ஏனையோர் ஒரு பிரான்ஸ் நாட்டு உல்லாசப் பயணக் கப்பல் மூலம் திரு. றொபின்சன் அவர் களால் கடலோட்டத்திறமைக்காக நிறைய சன்மானங்கள் வழங்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். இதன் பின்னர் திரு. றொபின்சனும் தனது மனைவியைக் காண அமெரிக்கா போய்விட்டார். நாம் கரைக்குப் போய் அந்த வரட்சியான துறைமுகப் பகுதியை எமது சிறிய படகில் சுற்றிப் பார்ப்பதும் நிறையப் பேரீச்சம்பழம் வாங்கிச் சாப்பிடுவதுமாக பொழுதைக் கழித்து வந்தோம். அங்கு சோமாலியர்கள் வாழ்ந்து வந்தனர். பல தேசத்தவரும் அங்கு வந்து போயினர். நாம் இருவர் கரைக்கு போகும்போது ஒருவர் கப்பலில் காவலுக்கு இருப்பார். இப்படியாக 6 மாதங்கள் கடந்தபின் தம்பிப்பிள்ளை தண்டையலுடன் தில்லை யம்பலமும் சுப்பிரமணியமும் மீண்டும் வந்தார்கள். இதே நேரம் றொபின்சன் பிரபு தனது அன்பு மனைவியை அழைத் துக் கொண்டு வந்து சேர்ந்தார். மீண்டும் பயணத்திற்கு ஆயத்தமானோம்.

இப்போது நம்மவர் அறுவரும் றொபின் சன் தம்பதிகள் இருவருமாக எண்மர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தைத் தொடர்ந்தோம். செங் கடல் வழியாக ஏறக்குறைய ஒன்றரை மாதங்களின் பின் சூடானை அடைந் தோம். அங்கு அரேபியர்கள் வாழ்ந்து வந்தார்கள் அத்துறைமுகத்திலும் சில நாட்களைக் கழித்து சுயஸ்கால்வாயை நோக்கிப் புறப்பட்டோம். அங்குள்ள குளிரான காலநிலை எமக்கு நல்ல இத மாக இருந்தது.

**கேள்வி :**

சுயெஸ்கால்வாயைக் கடக்க எவ்வளவு காலம் சென்றது?

**பதில் :**

சுயெஸ் கால்வாயின் நீளம் 120 மைல் கள் இதை கடக்கும் போது பல சிரமங் கள் ஏற்படும். ஒரே நேரத்தில் ஒரு பெரிய கப்பல்தான் இதனூடாகப் போக்கு வரத்துச் செய்யலாம். எதிர்த்திசையில் வரும் கப்பல் விலகிச் செல்வதற்கு 'ப' வடிவில் இடையிடையே வெட்டப்பட்டி ருக்கும் பகுதிக்குள் செலுத்தப்பட்டு மீண்டும் பிரதான கால்வாய்க்கு கொண்டு வரப்படும். இப்பகுதியில் அங்குள்ள ஒரு கப்பல் தலைவர் எம்முடன் கூடவே இருந்து வழி நடாத்தினார். இப்போது இது நவீனமயமாக்கப்பட்டு ஒரே நேரத் தில் பல கப்பல்கள் போகவும் வரவும் கூடியதாக உள்ளது. அத்துடன் இதனைக் கடக்க 12 மணி நேரம் போதுமானது. நாம் சென்ற போது இருமருங்கிலு முள்ள அரும்பெரும் காட்சிகளை ரசித்த வண்ணம் சென்றோம். சுயேஸ்கால் வாயின் நடுப்பகுதியில் இஸ்மாலியா இருக்கிறது. உலகப்பிரசித்தி பெற்ற நைல்நதியின் கரையோரத்தில் எகிப்தின் துறைமுகமாக இது உள்ளது. திரு. றொபின்சன் எங்களை மகிழ்விக்கும் பொருட்டு அங்கிருந்து 100 மைல்கள் தூரத்தில் உள்ள எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு அனுப்பி வைத்தார். அங்கு தங்குவதற்கு ஹொட்டேல் வசதி களும் சுற்றிப்பார்ப்பதற்குரிய சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார். நாம் பல இடங்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தோம். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல இருந்தது; அந்த நைல் நதிக்கரையில் திரிந்து புரண்டு அதன் அழகை ரசித்தமையே! உலகில் இவ் வளவு அழகான காட்சிகளை ஆண்டவன் படைத்திருக்கிறானே என பிரமிப்படைந் தோம். இதுபற்றி சொல்ல நான் ஒரு கவிஞனாக இல்லையே. இத்துடன் அப்போ எகிப்தை ஆண்ட மன்னர் பாருக்கின் திருமணத்தை நாம் நேரில் பார்க்கும் அரிய சந்தர்ப்பமும் எமக்கு கிடைத்தது.

சுயேஸ்கால்வாயை கடந்து சென்ற போது பயங்கரப் புயலில் சிக்குண்டோம். பாய் மூலமோ என்ஜின் மூலமோ கப்ப லை செலுத்த முடியாத நிலை. பாய் களை இறக்கி வைத்தோம். நங்கூரம் இடவும் முடியவில்லை. எனவே கப்பல் அலைகடலில் அடித்துச் செல்லப்பட்டது. செய்வதறியாது திகைத்து கடவுளை பிரார்த்தித்து ஒரு நாளைக் கழித்தோம். அலைகடல் ஓய்ந்தது. நாம் 'பெய்ரூட்' துறைமுகத்துக்குச் சமீபமாக இருந் ததை அறிந்து அங்கு கப்பலைச் செலுத்தி பாய் முதலியவற்றை செப்ப னிட்டு மீண்டும் பயணத்தை தொடர்ந் தோம். இது ஒரு மறக்க முடியாத பயங் கரமாகும். பெய்ரூட்டில் சில தினங்கள் தங்கிய பொழுது அங்குள்ள இடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சுற்றிப் பார்த்தோம். மாணவர்கள் முதல் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் வரை எம்மைப் பற்றி விசாரித்து எமது துணிவைப் பாராட்டியதுடன் தங்கள் குறிப்புக்களிலும் பதிந்து கொண்டார்கள்.

இதன் பின்னர் (Gibralter) ஜிபிரோல்ரர் ஊடாக அத்திலாந்திச் சமுத்திரத்தைக் கடந்தே அமெரிக்காவுக்கு செல்ல வேண்டியிருந்தது. இப் பெருங்கடலை பாய்மரக்கப்பலில் கடப்பது மிகமிக கடினமான காரியம் என்று எமக்கு தெரியும். ஆனாலும் நாம் முன்வைத்த காலை பின்வைக்காமல் துணிவுடன் தொடர்ந்தோம்.

ஜிபிறோல்ரர் துறைமுகத்தில் றொபின் சனின் அனுமதியுடன் அமெரிக்க தூதரக வேண்டுகோளின்படி ஒரு அமெரிக்க கைதியை எமது கப்பலில் ஏற்றிக் கொண்டோம். பயணம் தொடர்ந்த போது பயங்கரமான ஸ்பெயின் கடற்படைக் கப்பலொன்று எமது கப்பலை நோக்கி பயங்கர ஓசையுடன் தாக்கத் தொடங்கியது. ஆனால் நாம் எமது நிலையை தெரிவிக்கும் வண்ணம் பாய்கள் அனைத்தையும் இறக்கி வெள்ளைக்கொடி அசைத்தோம். கிட்ட வந்த அவர்களுக்கு நாம் எமது பயணத்தின் நோக்கத்தை கூறி அந்த பேராபத்திலிருந்து மயிரிழையால் உயிர் தப்பினோம்.

இவ்வாறாக தொடர்ந்த எமது பயணம் அமெரிக்காவின் வடகோடியிலுள்ள மசாச்சுசெற்றீஸ் (Massasuetts State) மாகாணத்தில் அமைந்துள்ள குளோசெஸ்ரர் (Gloucester) எனும் துறைமுகப் பட்டினத்திற்கு 31.8.1938இல் அதாவது ஏறக்குறைய ஒன்றரை வருடங்களின் பின் சென்றடைந்தது.

பல பொதுமக்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எம்மைச் சூழ்ந்து கொண்டு பெரும் வரவேற்பளித்தனர். வேட்டி கட்டி அரை நிர்வாணமாக இருந்த எம்மையும் தம்பிப்பிள்ளை தண்டையலையும் துருவித் துருவி பல கேள்விகள் கேட்டனர். அங்கு பத்திரிகைகள் உத்தியோகப்பற்றற்ற தூதுவர்களாக தமிழர்கள் இலங்கையிலிருந்து வந்திருப்பதாக தலைப்புச் செய்திகளும் கட்டுரைகளும் வெளியிட்டன. வல்வெட்டித்துறைக் கடலோடிகள் பற்றியும் அவர்கள் கப்பல் கட்டும் திறன் பற்றியும் பல செய்திகள் அமெரிக்க பத்திரிகைகளிலும் இலங்கைப் பத்திரிகைகளிலும் பிரசுரமானது.

எங்களுக்கு அமெரிக்காவின் பல இடங்களையும் சுற்றிப் பார்ப்பதற்கு திரு. றொபின்சனும் மனைவியும் ஏற்பாடு செய்து தந்தனர். சிலகாலம் அங்கு தங்கி இவற்றையெல்லாம் அனுபவித்த நாம் நீராவிக் கப்பல் மூலம் சிங்கப்பூரின் வழியாக வந்து வல்வெட்டித்துறையை அடைந்தோம்.

எமது பயணம் பற்றிய பல விபரங்கள் “வல்வை சேவா சங்கத்தினால்” பிரசுரிக்கப்பட்ட "Re - Opening of a North - Ceylon port என்ற ஆங்கில கையேட்டில் உள்ளன.

இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக பாய்மரக்கப்பலில் உலகம் சுற்றிய ஒரு சாதனையாளனின் நீண்ட அனுபவத்தைச் சில மணி நேரம் பகிர்ந்து கொண்டதில் எனது மனம் நிரம்பி வழிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது உள்ளத்தில் புதைந்து கிடந்த எண்ணங்களையும், சாதனை படைக்கத் தூண்டிய அபிலாசைகளையும் கொட்டித் தீர்த்து விட்டு நிம்மதிப் பெருமூச்சு ஒன்றை விட்டபடியே என்னைப் பார்த்த அந்தப் பெரியவரை ஒருகணம் மீண்டும் உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டேன்.

தனது தோளில் இருந்து துவாயை உதறி முகத்தைத் துடைத்தபடியே அவர்

“தம்பி!........ எங்கடை பயணம் பற்றி எனக்குத் தெரிஞ்ச வரையில் உங்களுக்கு தேவையான அளவு சொல்லி விட்டேன். இப்பகுதியிலே எங்கடை ஊர்ப் பெடியளிட்டை ஏதேனும் சாதனை படைக்க வேண்டும் என்கிற உணர்வு இருக்கிறதைக் காணேல்லை..... மெத்தத் திறமையும், வீரமும் இருக்கிற எங்கடை ஊர் இப்ப கொஞ்சம் சோர்ந்து போன மாதிரிக் கிடக்கு......

என்று கூறியதும், எனக்கும் ஒரு மாதிரியாகத் தான் போய்விட்டது. அவர் கூறுவதும் எனக்குச் சரியாகவேபட்டது. வீரமும் நுண்ணறிவும் ஆற்றலும், படைத்த எம்மவர்கள் ஏன் இப்படிச் சோர்ந்து போக வேண்டும்.......?

‘ஓம்’ ஐயா...... நீங்கள் சொல்லிறதும் சரி தான்....... ஆனால் இந்தத் தேக்கம் நெடுக இப்படி இருக்காது..... வெகு விரைவில் எங்கட ஊர் எல்லாத் துறையிலும், மீண்டும் சாதனை படைக்கத் தான் போகிறது.

உலகமே போற்றும் உன்னதமான எங்கள் தேசியத் தலைவரைப் பெற்றெடுத்த மண் சோர்ந்து போக கூடாது... அந்த மண்ணும், மக்களும் மீண்டும் எழுச்சி பெறுவார்கள் என்ற நம்பிக்கையை அந்தச் சாதனை படைத்த மனிதரிடம் தெரிவித்து விட்டு அவரிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு வெளியேறினேன்.....

ஆமாம்...... அவர் எதிர்பார்த்தபடி “அன்னபூரணி அம்மாளின்” அமெரிக்க பயணத்தின் சாதனைமிக்க வரலாற்றை முழுமையாக ஆவணப்படுத்தா விட்டாலும், ஒரு சிலவற்றையாவது எமது மக்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்ற உறுதியுடன் எனது வீட்டை நோக்கி நடந்தேன்.....



கட்டுரையாளரால் பேட்டி காணப்பட்ட ஐயாத்துரை இரத்தினசாமி



றொபின்சன் பிரபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகப் பணியில் வல்வைச்சிவன் ஆலய திருக்கல்யாண மண்டபம்

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி அமரர் திருமதி நடராஜா வள்ளியம்மாள் அவர்களின் 09.02.2003 தின நினைவு மலரிலிருந்து...

வீரம் செறிந்த வல்வை மண்ணில் ஆதி வைரவரை காவல் தெய்வமாகக் கொண்டு அமைந்த ஆதி கோவிலடியில் இற்றைக்கு ஏறக்குறைய 175 வருடங்களுக்கு முன் சிவலை முருகர் என அழைக்கப்படும் வல்லியப்பர் முருகுப்பிள்ளையின் வழித்தோன்றலில் தோன்றியவரே இந்த அமரரான வள்ளியம்மாள் ஆவர்.

வல்வைச் சிவன் கோவிலில் கந்தசஷ்டி உற்சவ காலத்தில் உபயோகிக்கும் சூரனை மேற்குறித்த வல்லியப்பர் முருகுப்பிள்ளையே கொண்டு வந்தார். இதற்கான குறிப்பும் ஆதாரமும் இன்றும் ஆலயத்தில் உள்ள சூரனின் பீடத்தில் இருப்பதைக் காணலாம். இவருடன் கூட இருந்து தரும காரியத்தில் ஆதிகோவிலடியில் வாழ்ந்த வேறு சில அடியார்களும் பங்கு கொண்டுள்ளனர் என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

சூரனின் பீடத்தில் காணப்படும் குறிப்பு பின்வருமாறு.

சிவன்சூரன்
1.10.1898
இந்த தருமம் வல்வெட்டித்துறை
வல்லியப்பர் முருகுப்பிள்ளை
க. வீரகத்திப்பிள்ளை
மு. இராமலிங்கப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்திற்குரிய சூரனும் வல்லியப்பர் முருகுப்பிள்ளையினால் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாகக் கொண்டுவரப் பட்டதாக அறியக்கூடியதாக உள்ளது. இதனாலேயோ என்னவோ அம்மன் ஆலய சூரன் போர் உற்சவமும் சிவன் கோவில் சூரன் போர் உற்சவமும் இவ் வழித்தோன்றல் களாலும் மற்றைய அடியார்களின் பரம்பரையினாலும் (உபயகாரர்களாக) நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்வல்லியப்பர் முருகுப்பிள்ளை வல்வை நகருடன் மட்டும் ஆலயத் திருத் தொண்டினை மட்டுப்படுத்தவில்லை.

வல்வையை அடுத்துள்ள, கடலாலும் ஆற்றினாலும் சூழ்ந்துள்ள தொண்டைமானாற்றில் எழுந்தருளியிருக்கும் அன்னதானக் கந்தன் என்றும் காவடிக்கந்தன் என்றும் ஆன்றோர்களால் சிறப்பிக்கப்படும் "செல்வச்சந்நிதி முருகன்" ஆலயத்திலும் அமரரின் பேரனார் ஆற்றிய தொண்டினை மிகைப்படுத்த முடியாது.

இவ் ஆலயத்தின் திருக் கதவினையும் அதற்கான சட்ட விளக்கினையும் உபயமாக வழங்கி தனது ஆலயத்திருப்பணியை மேற்கொண்டதுடன் முருகப் பெருமானுக் குரிய தீர்த்தக் கிணற்றினையும் அமைத்து ஆன்மதிருப்தி கொண்டார்.

இதற்குச் சான்று பகர்வதாக அவருடைய நாமம் தீர்த்தக் கிணற்றின் கட்டில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட வல்லையின் பிரசித்தி வாய்ந்த சிவன் அம்மன் ஆலயங்களின் 12ம் திருவிழா உபயகாரர்களாக உள்ள ஊர் மக்களில் அன்னை வள்ளியம்மாள் அவர்களது குடும்பமும் அடங்குவார்கள்.

சிவன் ஆலயத்தின் 12ம் நாள் "திருக் கல்யாண" திருவிழாவாக அமைந்துள்ளது. எனவே சிவன் கோவில் நிர்வாகம் அதற்குரிய திருக்கல்யாண மண்டபம் அமைக்கும் வாய்ப்பை இத்திருவிழா உபயகாரருக்கு வழங்கியிருக்க வேண்டும். இதனால் இவ் வள்ளியம்மாளின் முன்னோரான ஆறப்பா என அறியப்பட்ட செல்லையாவின் மகனாக அதாவது சிவலை முருகர் என அறியப்பட்ட சி. முருகுப்பிள்ளையின் மற்றொரு பேரனான செ. ஆறுமுகம் (சிங்கப்பூர்) மற்ற சகோதரரான செ. துரைசாமி ஆகியோர் சில தசாப் தங்களுக்கு முன் இக்கட்டிடத்திற்கான அடிக் கல்லை நாட்டிய போதும் அப்பணியைத் தொடரமுடியாமல் போனதாக அறிய முடிகிறது.

இப்பணியை எப்படியாவது முடிக்க வேண்டும் என்பது அன்னை வள்ளியம்மாளின் ஏக்கமாக சிறு வயதிலிருந்தே உருவாகி, தன்னுடைய விருப்பத்தை தனது பிள்ளைகளுக்கு கூறி வந்த வண்ணமே வாழ்ந்து வந்தார். ஆயினும் அதற்கான பொருளாதார வசதியின்மையால் அப்பணியை இவராலும் தொடங்க முடியாமல் போயிற்று. கைகூடாத திருப்பணி ஆசையோடு வாழ்ந்து வந்த அன்னாருக்கு நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளால் வேலைவாய்ப்பின்றி இறுதியில் பொருளீட்டும் நோக்குடன் கடல்கடந்து சென்று ஜேர்மனியில் தற்போது வாழ்ந்து வருகின்ற அன்னாரின் கனிஷ்ட புத்திரன் திரு. யோகரத்தினத்தின் மூலம் சிவபெருமான் வழியொன்றைக் காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், சில வருடங்களாக தன் கனிஷ்ட புத்திரனுடன் ஜேர்மன் நாட்டில் வாழும் சந்தர்ப்பம் அன்னாருக்கு கிடைத்தது. இக்கால காட்டத்தில் அந்நாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்கான நன்கொடைப் பணத்தை சிறுகச் சிறுகச் சேமித்தார். அத்துடன் "சீட்டுக் கார வள்ளியம்மாள்" என அறியப்பட்ட அன்னார் அதன் மூலமும் மிச்சப்படுத்திய பணத்தையும் சேர்த்துக் கொண்டார்.

இதன் பின் சிவன் ஆலய நிர்வாகத்திற்கு அப்போது பொறுப்பாக இருந்தவரும் இக்கோவிலின் முதலாவது தர்மகத்தாவாக இருந்த திருமேனியார் (1883) பரம்பரையில் வந்து 6வது தர்மகத்தாவாக இருந்த சபாரத்தினம் இராமசாமி என இயற்பெயர் கொண்ட அப்பண்ணா எஜமானிடம் இப் பணிக்கான தனது விருப்பத்தை வெளிப் படுத்தி அவர்களது அனுமதியையும் பெற்றுக் கொண்டார்.

இவ்வளவு காலமும் அடிக்கடி கனவிலே தன்னை வந்து துரத்திக் கொண்டிருந்த வெள்ளைநிற பசுமாடு அப்போது தன்னைத் துரத்துவதை நிறுத்தியாதாக கூறிக் கொண்டார். காரணம் இப்பணியைத் தொடங்க ஓரளவு பொருள் வளம் தன்னிடம் இருப்பதாக ஏற்பட்ட மன நிம்மதியே!

இச் சூழ்நிலையில் 19.01.1989ல் உரிய சாஸ்திரப்படி அடிக்கல் அன்னாரின் ஒரு மகனான சிவரத்தினத்தின் மகன் சாரூபனால் அவரது 5 ஆவது வயதில் நாட்டப் பட்டது. இந்த வைபவத்தை வல்வை வைத்தீஸ்வர ஆலய பிரதமகுருக்களும் தற்போது சர்வதேச இந்துமத குருபீட தலைவருமான ப. மனோகரக் குருக்கள் நடாத்தி வைத்தார்.

இப்பணிக்கான உதவிகளை அன்னாரது வெளிநாட்டிலிருக்கும் பிள்ளைகள் நல்கி வருகின்றனர்.

இத்திருப்பணியின் கட்டட வேலைகளை வல்வையின் பிரபல மேத்திரியான சிவலிங்கம் மேத்திரியார் பொறுப்பேற்றார். இதற்கான கோப்பிச வேலைகளை மகன் சிவரத்தினத்தினதும் இக் குடும்பத்தின் நண்பருமான உடுப்பிட்டியைச் சேர்ந்த கனகரத்தினம் பாலசுப்பிரமணியம் பொறுப்பேற்றார்.

இவ் அனைவரது முயற்சியாலும் எம் பெருமான் கடாட்சத்தாலும் 18.03.1989ல் புண்ணியதானம் செய்யப்பட்டு சிவன் பார்வதியின் திருக்கல்யாணத்தை இம் மண்டபத்திலேயே நடாத்தக் கூடிய அளவிற்கு கட்டடம் பூர்த்தியாகியது பெரும் பாக்கியமே.

ஆனால் 1990ல் வல்வை நகருக்கு வான் படையால் ஏற்படுத்தப்பட்ட குண்டுத் தாக்குதலினால் சிவன் ஆலயத்துக்கு ஏற்பட்ட பெரும் அனர்த்தத்துடன் இம் மண்டபமும் பெரும் சேதத்திற்கு உள்ளானது.

இருந்தும் இது 1991ம் ஆண்டு திருவிழாவிற்கு முன் மீண்டும் புனரமைக்கப்பட்டு தொடர்ந்து திருவிழா இன்றுவரை வருடாந்தம் இம் மண்டபத்தில் நடாத்தும் அளவிற்கு அருள்பாலிக்கப்பட்டுள்ளது.


இக்கட்டடம் வர்ணம் பூசப்பட்டு பல அலங்காரங்களுடன் திகழ வேண்டும் என்பது இவ் அம்மையாரின் பெரும் விருப்பம். இப் பணியை இவரது பிள்ளைகள் திட்டமிட்டு படிப்படியாக செய்து வருகின்றார்கள். கூடிய சீக்கிரம் அவரது எண்ணப்படி இம்மண்டபம் அமைய இறைவன் அருள்பாலிப்பாராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மண்டபத்தில் முதற்தடவையாக திருக்கல்யாணம் நடந்த 1989ம் ஆண்டிலிருந்து, பெருமானின் திருக்கல்யாணம் முடிந்து வீதி வலம் வருமுன் இம்மண்டபத்திலேயே பெருமான் தம்பதி சமேதராக காட்சி தரும் போது பூரண கும்பம் வைத்து, மாலை அணிவித்து, பட்டுச் சாத்தி வரவேற்கும் பாக்கியத்தினை இக்குடும்பத்தினர் பெற்றுள்ளனர்.

இவ் வருடாந்த திருப்பணிக்கான செலவுகளை அவரது குடும்பத்தினர் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் நிதியம் ஒன்றினையும் அமரர் வள்ளியம்மாள் ஏற்படுத்தியுள்ளார் என்பது நோக்கத்தக்கது.

அன்னையின் விருப்பம் நிறைவேற்றப்பட்டு இப்பணி மேன் மேலும் சிறப்பாக நடைபெற இறைவனைப் பிரத்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்" எம்மவரால் 1859ல் ஸ்தாபிக்கப்பட்ட வரலாறு

வல்வெட்டித்துறை மக்கள் எப்பொழும் தமது தமிழ்ப் பண்பாட்டினையும் சைவ நெறியினையும் தவறாது கடைப்பிடித்து வந்துள்ளனர். இதனால் இவர்கள் தாம் சென்று தொழில் புரிந்த இடங்களிலெல்லாம் சைவநெறியை வளர்க்க தவறவில்லை. அந்த வகையில் கொழும்பு கதிரேசன் தெரு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் எம்மவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றே.

இதற்கு ஆதாரமாக - பராபவ ஆண்டு வைகாசித் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை நடாத்தப்பட்ட மஹாகும்பாபிஷேக மலரில் (08.06.1966) தர்மகர்த்தாசபைக் காரியதரிசி திரு. த.சிவலிங்கம் அவர்களின் முன்னுரையிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறேன்.

இலங்கையின் தலைநகராகிய இக் கொழும்பு மாநகரில் முற்காலந் தொடங்கி நடைபெற்றுவந்த ஏற்றுமதி இறக்குமதித் தொழிலில் ஈடுபட்டு வணிகம் புரிந்து வந்த மக்களுள்ளே யாழ்ப்பாணத்தவரை எப்பொழுதும் முன்னணியில் வைத்துப் பேசலாம். " திரை கடலோடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கிணங்க நெடுங்காலமாகச் சிறந்த கலங்களமைத்துக் கடலோட்டு வணிகத் தொழிலினை மேற்கொண்டு தென்னாட்டிலேயே முன்னோடிகளாக விளங்கியவருள் யாழ்ப்பாணத்தின் வடகோடியிலமைந்த வல்வெட்டித் துறை மக்களைச் சிறப்பாக எடுத்துக் கூறலாம். அவர்கள் அமைத்த கலங்கள் தென்கிழக்கு ஆசியக் கடல்களில் மட்டுமன்றி மேலும் மாகடல் ஓடிச் சென்று அமெரிக்கா வரையும் வணிகம் செய்திருக்கின்றனர். அந்த வகையில் உழைத்த மக்கள் வணிகத்தொழில் காரணமாகச் சென்ற இடங்களிலெல்லாம் தமது தமிழ்ப் பண்பாட்டினையும் சைவநெறியினையும் எப்பொழு தாவது மறந்துவிடவில்லை தாம் வாழ்ந்த இடமெல்லாம் கோயில்கள் எழுப்பித் தமது இறைவழிபாட்டினை நடாத்தி வந்துள்ளனர். கோயில் எழுப்ப இடம் பொருள் ஏவல் ஆகியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தாத நிலமையில் தாம் வாழ்ந்து கொண்டிருந்த இல்லத்தின் ஒரு பகுதியிலா யினும் உரிய வகையில் ஒரு வழிபாட்டறை யினை வகுத்தமைத்து தமது வழிபாட்டினை நடாத்தி வந்தமையைக் காண்கின்றோம் அவ்வகையில் அமைந்ததே யாழ்ப்பாணத் தார் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் ஆகும்.

## தோற்றம்

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் இற்றைக்கு ஒரு நூற்றாண்டு முன்னதாகத் தாபிக்கப்பட்டதென இக்கோயிலில் வழி பாட்டுக்காக வருகின்ற பழம்பெரு முதியோர் கள் கூறுகின்றனர் இதனை உறுதி செய்யும் ஆதாரங்கள் மேலும் உள்ளன மூலமூர்த்தி யின் பீடத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் மகாயந்திரம் 1859-ம் ஆண்டில் வரையப்பட்ட தென அங்கே தெளிவாகக் குறித்துக் காட்டப் பட்டிருக்கிறது.

இக்கோயில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த வல்வெட்டித்துறையினைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட சைவப் பெரியார் ஒருவரால் தாபிக்கப்பட்டதென்று இப்போது அறியக் கிடக்கின்றது. இப்பெரியார் கொழும் பிலிருந்து இந்தியா, பர்மா, இரங்கூன் முதலிய தேசங்களுக்கு இலங்கை பொருள் களை மரக்கலங்கள் மூலமாக ஏற்றுமதி செய்து அத்தேசங்களின் பொருள்களையெல்லாம் இலங்கையில் இறக்குமதி செய்யும் தொழி லில் ஈடுபட்டிருந்தாராம். இவர் முருக பக்தி யிற் சிறந்தவராய் விளங்கிக் கொண்டிருந்த மையால் தமது நித்திய வழிபாட்டுக்கென தாம் வாழ்ந்த வீட்டின் ஒரு பக்கத்தில் ஒரு வேலினைத் தாபித்து வழிபட்டு வந்தார் எனத் தெரிகின்றது. சிலகாலத்தின் பின்னர் பரார்த்த பூசை நோக்கமாகச் சைவ மக்கள் எல்லோரும் முருகப் பெருமானின் ஞான சக்தியாகிய வேலினை வழிபட்டு உய்யும் பொருட்டு வீட்டுக்கு அண்மையில் கோயில் ஒன்று அமைத்து அக்கோயிலின் உள்ளே இவர் தாம் பூஜித்து வந்த வேலினைப் பிரதிஷ்டை செய்வித்துக் கொண்டார் எனக் கூறப்படு கின்றது.

இங்ஙனமாக அமைந்த இத்திருக் கோயிலிலே நித்திய நைமித்திய பூசைகளு டன் உற்சவங்களும் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்தமைக்கப்பட்டன. இவர் இறைவனடி சார்ந்ததும் இவருடைய மகன் இக்கோயிலை சில காலம்வரை பரிபாலித்து வந்ததாகவும் அறியக் கிடக்கின்றது. இவரும் சில காலத்தின் பின்னர் வல்லெட்டித்துறை யிலேயே நிரந்தரமாக வாழவேண்டியதொரு நிலமை ஏற்பட்டமையால் கோயிலையும் கோயிலுக்குரிய பிற சொத்துக்களையும் பொதுச் சொத்துக்களாக வகுத்தமைத்து கோயிற் பரிபாலனப் பொறுப்பினையும் கொழும்பிலுள்ள மக்களிடம் ஒப்படைத்தார்.

இது தொடர்பாக மேலும் பல விட யங்கள் பின்வரும் தகவல்களூடாக அறியக் கிடைத்துள்ளன.

**ஆவணம்:**

மண்டலாபிஷேக பூர்த்தி வெளியீடு ரௌத்திரி ஆண்டு ஐப்பசி 13ம் நாள் 29.10.1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. நா. க. கதிரவேற்பிள்ளை**
**உபசெயலாளர்: தர்மகர்த்தா சபை**
**அவர்களின் அறிக்கைத் தொகுப்பிலிருந்து**

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பல திருப்பணிகள் இயற்றப்பட்டுக் கும்பாபி ஷேகம் செய்யப்பட்ட கோயில் இது. இப்போது மறுகுடமுழுக்கு கண்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தார் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் சிறிதாக ஆரம்பித்துப் பெரி தாக வளர்ந்தது. இதன் வரலாறு சுமார் ஒன்றேகால் நூற்றாண்டுக்கு முந்தியது.

மூல மூர்த்தியின் பீடத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் இயந்திரத்தில் 1859ம் ஆண்டு பொறிக்கப்படடிருக்கிறது.

வேலைப் பூசித்த ஒருவர் வேலைத் தனது பெயரிலும் கொண்ட ஒருவர் வல்வெட் டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒருவர் அவரே இந்தக் கோயிலை ஸ்தாபித் தார் என்று பண்டிதர் சங்கர வைத்திலிங்கம் தெரிவிக்கின்றார்.

**திருமேனியாரின் புதல்வரும் வல் வெட்டிதுறைச் சிவன் கோயில் ஸ்தாபகரான வெங்கடாசலத்தின் தம்பியாருமாகிய குழந்தை வேற்பிள்ளையே யாழ்ப்பாணத்தார் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலின் ஸ்தாபகர் என்கிறார் பண்டிதர் சங்கர வைத்திலிங்கம் பிள்ளை.**

திரு. குழந்தைவேற்பிள்ளை கொழும்பில் இருந்த சென்னை வங்கியில் காசாளராக பணியாற்றியவர். பெரும் வர்த்த கர், செல்வந்தர், சிறந்த முருக பக்தர் செக் கடித் தெருவில் வாழ்ந்தவர். தாம் வீடொன் றில் வைத்துப் பூசித்து வந்த வேலைத்தான் எல்லோரும் வணங்குவதற்கு வசதியாகப் பொது இடத்தில் பிரதிஷ்டை செய்தார்.

இப்படித்தான் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் தோன்றியது.

திரு. குழந்தைவேற்பிள்ளை சொந் தக் காரணங்களால் கொழும்பை விட்டு பிறந் தகம் சென்றதும் அவருடைய மகன் வைத்தி லிங்கனார் ஆலயத்தைப் பரிபாலித்து வந் தார். சிறிது காலத்தில் கோயிலும் கோயில் சொத்துக்களும் பொதுச் சொத்துக்களாக்கப் பட்டன. கோயில் நிர்வாகத்தையும் பொது மக்களிடம் ஒப்படைத்தார் வைத்திலிங்கனார். இப்படித் தனி ஒருவரால் ஆலயம் ஸ்தாபிக் கப்பட்டுப் பொதுச் சொத்தாக்கப்பட்டது என்று விபரம் தெரிவிக்கிறார் பண்டிதர்.

குறிப்பு: **இக்கோவில் வல்வெட்டித்துறையினரால் ஸ்தாபிக்கப்பட்டதன் நினைவாக இன்று வரை வருடாந்த உற்சவத்தின் 5ம்திருவிழா எம்மவரால் நடாத்தப்பட்டு வருகின்றது. இதற்கென "சூரிய பிரபை" எனும் வாகனமும் நம்மவராலேயே வழங்கப்பட்டுள்ளது. வல்வை மக்கள் இத்தொண்டினை தொடரவேண்டும்.**

**தொகுப்பு:**
**ஆதிகோவிலடி ஜெயம்**
**ந. சிவரத்தினம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடங்களாக ஓடிக்கொண்டு இருக்கிறேன்.

கட்டுரையாளரான ஆதிகோவிலடி ஜெயம் தான் பதினொரு வயதாக இருந்த வேளை நேரில் கண்டு அனுபவித்த பயங்கர சம்பவத்தை மூன்று தசாப்தத்தின் பின் 1991.11.25 மாவீரர் நினைவாக வெளியான ஈழநாதம் பத்திரிகையினூடாக வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டார். இதனையே இவ்விணைப்பின் மூலம் சம்பவத்திலிருந்து 45 வருடங்களின் பின் இங்கு தருகிறோம்.....

காக்கி உடையணிந்த இருவரின் அசைவற்ற உடல்களை தனது இரு கைகளாலும் இன்னொரு காக்கி உடையணிந்த உருவம் தன்னால் முடிந்தளவு சிரமத்துடன் இழுத்துக் கொண்டு எமது பெரிய ஒழுங்கையிலிருந்து பிரதான வீதிக்கு சென்று கொண்டிருக்கிறது. மக்கள் அங்கும் இங்கும் செய்வதறியாது ஓடிக்கொண்டிருக்கிறார்கள். சில இளைஞர்கள் மட்டும் தமக்குள் ஏதோ இரகசியமாக பேசிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நேரமோ மதியபோசனம் முடிந்தநேரம். அந்தப் பெரிய ஒழுங்கையின் ஒருபுறம் கடல், மறுபுறம் காங்கேசன்துறை பிரதான வீதி. எல்லோரும் ஓடிஒழித்துக் கொள்கிறார்கள். பருந்தைக் கண்டதும் தாயைத் தேடி ஓடும் கோழிக்குஞ்சு போல நானும் அம்மாவைத் தேடி ஓடித் திரிந்தேன். எனது கால்களுக்கு நேரே வீட்டுக்குப் போகத் தெரியாது. எங்கெங்கோ திரிந்து தான் அம்மாவை சென்று அடைக்கலம் புகுந்தன. மிகவும் சந்தடி மிக்கது எனது கிராமம். அந்தப்பகல் பொழுதில் நடுச்சாமத்தில் காணும் மயான அமைதி நிலவியது. நாய்கள் ஊளை யிடும் சத்தத்தைத் தவிர நிசப்தமே நிலவியது.

நான் அம்மாவை அடைந்த சிறிது நேரத்தில் பாடசாலையில் விளையாட்டுப் போட்டி யில் ஊதும் விசில் சத்தம் பலமாகக் கேட்டது. பெரிய வாகனங்கள் உறுமிக்கொண்டு வந்து எமது கிராமத்தை முற்றுகையிடுவது போன்ற உணர்வு. சற்றே நேரத்தில் கிராமத்தில் உட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்த காக்கி உடைகள் மக்களை இழுத்து அடித்து, உதைத்து சித்திரவதை செய்ய ஆரம்பித்தன. மக்கள் பீதியுற்று சிதறி ஓடினர். தங்கள் ஆவேசம் அடங்கியோ அடங்காம லோ என்னவோ அவர்கள் சிறிது நேரத்தில் யாருடையதோ பணிப்பின் பேரில் நகர்ந்து சென்றனர். அன்று ஊரில் பெரும் பீதி நிலவி யது.

சிங்களச் சிப்பாய்களின் அட்டகாசம் அத்துடன் முடியாது என மக்கள் அன்றே புரிந்திருந்தனர். குடிமக்கள் மூட்டை முடிச்சு களுடன் வீடுகளை விட்டு புறப்பட்டுக் கொண் டிருந்தனர். எனக்கும் என் சகோதரர்களுக் கும் பயம். ஆனால் எங்கள் அம்மாவோ எமக்கு தைரியம் கூறி வைத்துக்கொண்டிருந் தார். அன்று இரவு அந்தச் சிங்களச் சிப்பாய்கள் எமது கிராமத்தையே தீமூட்டி முற்றாக நாசம் செய்வது என திட்டமிட்டிருந் தனராம்.

இருள் கௌவிக்கொண்டு வந்தது. ஒருவர் முகம் ஒருவருக்கு தெரியவில்லை. கடற்கரையில் மாலை நேரத்தில் கூடும் மக்கள் ஒருவரையும் காணவில்லை. சுறு சுறுப்பாக தமது மீன்பிடி உபகரணங்களை எடுத்து வந்து அதிகாலை தொழிலுக்கு போவதற்காக ஆயத்தப்படுத்தும் ஒருவரை யும் அங்கு காணவில்லை. பயம் மிகுதியால் நாம் அழத் தொடங்கினோம். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு அம்மா குரல் கொடுத் துப் பார்த்தார். என்ன பயன்? நாம் மயானத் தின் மத்தியில் தனியே இருப்பதான உணர்வு. அம்மா வீட்டுப் பொருள்களை எங்கெங்கோ ஒழித்து பவுத்திரப்படுத்தி வைப்பது போல உணர்ந்தேன். பயத்தின் மிகுதியால் எதை யும் சரியாகப் புரிய முடியவில்லை.

இரவோடு இரவாக ஆலடியைக் கடந்து கம்பர்மலையில் உள்ள தலைவர் தங்கராசா என அழைக்கப்படும் எனது குடும் பத்திற்கு தெரிந்த ஒருவர் வீட்டிற்கு சென்ற டைந்தோம். மறுநாட்காலை திருமதி தங்க ராசா அகதிகளாகிய எமக்கு அவித்து தந்த புட்டும் மையல் கிழங்குப் பொரியலும் இன் றும் என் நாவில் ஊறுகிறது. காலை நாம் எதிர்பார்த்தது போல் ஊரில் எந்த அசம்பாவி தங்களும் நடக்கவில்லை. ஒன்று மட்டும் புரிந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்ளூர்த் திருடர்கள் அன்றே தமது கை வரிசையைக் காட்டியிருந்தனர். எமது வீட்டி லும் உணவுப் பண்டங்கள் உட்பட துணி மணிகள் காணாமல் போயிருந்தன. அம்மா நான் புறப்படும் பொழுது சில சாமான்களை பாதுகாப்புத் தேடி வைத்ததை அப்போது தான் நினைவு கூர்ந்தேன்.

கடந்த ஒக்டோபர் 16ஆம் திகதி சிறி லங்கா அரசின் வானொலி ஒலிபரப்பினால் வடமராட்சியை விட்டு மக்கள் சாரை சாரை யாக கிளம்பிக் கொண்டிருந்தார்கள். தற் சமயம் மாவீரர் வீதியில் வதியும் நாம் 1961ஆம் ஆண்டிலிருந்து ஓடி ஓடிக் களைத்துப் போய் அன்று ஓடுவதில்லை என்று முடிவெடுத்தி ருந்தோம். அன்று வல்வெட்டித்துறை மக்கள் மட்டுமல்ல முழு வடமராட்சி மக்களுமே வீடு களை விட்டு தென்மராட்சிக்குப் போய்க் கொண்டிருந்தனர். அவசர அவசரமாக மக்கள் குடிபெயர்ந்தமைக்கு முக்கிய காரணம் இவ் வருடம் தை மாதம் 20ஆம் திகதி வல்வையில் நடந்த சம்பவமே. அன்று மக்களை வீடு களை விட்டு வெளியேறுமாறு 24 மணித்தி யால அவகாசம் கொடுத்த சிறிலங்கா விமானப்படை 2 மணி நேரத்திற்குள் தனது மூர்க்கமான தாக்குதலை தொடங்கி தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு நாட்களாக அராஜகம் புரிந்தது. கிஞ்சித்தேனும் அரசபடைகளில் நம்பிக்கையற்ற மக்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட அந்தச் சாமத்தில் எனது வீட்டு வீதியோரத்தால் நடக்க முடியாமல் கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு போன காட்சி அன்று 1961ஆம் ஆண்டு சில குடும்பங்கள் ஓடியதை ஞாபகமூட்டியது..

விடியற்காலை 3.30 மணி. ஊரே வெறிச்சோடிக் கிடந்தது. நான் ஊரைச் சுற்றி ஒரு வலம் வந்து பார்த்தேன். இதுவா வல்வெட்டித்துறை? ஒன்றும் எனக்குப் புரியவில்லை.

அதிகாலையில் நான் பிறந்த குறிச்சியான ஆதிகோவிலடிப் பக்கம் போய் அந்த மண்ணையும் பார்க்க என் உள்ளம் ஏவியது. அந்த மண்ணில்தான் முதல் முதலில் சிறிலங்கா சிப்பாய்களின் கோரக் கொலைகள் நிகழ்ந்தன. அமைதியான அந்த சூழலில் எங்கே, எப்போ குண்டுவீச்சு விமானங்கள் வருமோ என்ற சிந்தனையுடன் உலவி வந்த எனக்கு முப்பது வருடங்களுக்கு முன் நான் கண்ட காட்சி அப்படியே என் கண்முன் தோன்றியது. அந்த ஆதி கோவிலடி மண்ணில் அந்த வேளையில் என்னைப் போல ஒரு சிலர் நடமாட்டத்தை நான் கண்டேன்.

எனக்கு அப்போ வயது பதினொன்று எமது வீடு கடலோரத்தில் இருந்தமையாலும் எமது கிராமத்தின் வறுமை நிலையாலும் எமது வீட்டில் கிணறு இல்லை. வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் காங்கேசன்துறை வீதியில் அமைந்த ஆலடியில் குமர குருவாடி என அழைக்கப்படும் வளவிலுள்ள துலாக் கிணற்றில் பெரியவர்கள் குளிக்கும் போது அவர்களின் தண்ணீரை ஏந்தி நானும் குளிப்பேன்.

நேரம் பகல் பன்னிரெண்டு மணி இருக்கும். காக்கி உடை அணிந்த மூன்று பேர்கள் எமக்குப் புரியாத பாஷையில் ஏதேதோ கூறி தெருவில் நின்ற சனங்களையெல்லாம் துரத்தியவண்ணம் போய்க் கொண்டிருந்தனர். அவர்கள் எங்களைத் தாண்டியதும் நானும் றோட்டிலிருந்து கடற்கரையிலுள்ள எமது வீட்டிற்கு ஓடிச் சென்றேன். அங்கு எனது உடுப்பை மாற்றிக் கொண்டு நான் ஆதி கோவிலடிக் கடற்கரையில் அமைந்துள்ள மீன்பிடிச் சங்கத்தால் அமைக்கப்பட்ட பந்தலுக்குப் போகவும் சிங்களச் சிப்பாய்கள் பிரதான வீதியில் இருந்து பெரிய ஒழுங்கை ஊடாக அங்கு வரவும் சரியாக இருந்தது.

கடற்றொழில் முடிந்து திரும்பியவர்கள் அந்தப் பந்தலில் தமது வலைகளைச் சீர்செய்து கொண்டும் ஒருசிலர் பொழுது போக்காக அன்றைய தொழிலைப் பற்றிப் பேசிக் கொண்டும் இருந்தனர். சிலர் களைப்பைப் போக்க பனையாகாரம் அருந்தி விட்டு வந்து அதில் தங்கி வம்பளத்தனர். இப்படிப் பல விதமான இளையோர், முதியோர் கூடிய கூட்டத்தைச் சுற்றி எம்மைப் போன்ற சிறுவர்களும் விளையாடிக் கொண்டு இருந்த அந்த இடத்திற்கே சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர்.

எமது மண், எமது பந்தல், எமது ஊர் இதில் எவருக்கும் வேறு கருத்து இருக்கவில்லை. தமது வீடுபோலத்தான் சாதாரணமாக அதை எல்லோரும் பாவித்து வந்தனர். சீருடையில் வந்த சிப்பாய்கள் சிங்களத்தில் ஏதோ கூறி அங்குள்ளவர்களை துரத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்து துன்புறுத்தவும் தொடங்கினார்கள். இளங்கன்று பயமறியாது என்பார்களே அந்த நிலையோ? எமது சொந்த மண்ணில் இருந்து எம்மை அடித்துத் துரத்த இவர்கள் யார்? என்ற ஆவசமோ தெரியாது அக் கூட்டத்தில் இருந்த ஒரு சில இளைஞர்களுடைய கண் கள் பேசின. மறுகணம் சிங்களச் சிப்பாய்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பஞ்சலிங்கம் ஒரு சிப்பாயை அப்படியே தூக்கி நிலத்தில் போட்டு அடித்துப் பந்தாடினார். அந்த இடத்தில் அழகையா, இராமசாமி சகோதர்கள் மற்றும் சோதிலிங்கம் ஆகியவர்கள் இச்சண்டையில் ஈடுபட்டதை என்னால் இன்றும் ஞாபகப் படுத்த முடிகிறது.

சண்டை தொடங்கியதும் பாதுகாப் புத் தேடி பெரிய ஒழுங்கையால் ஓடிச்சென்று பாலசிங்கம் என்பவரின் வீட்டிற்குள் புகுந்து வேலியால் பார்த்துக் கொண்டிருந்தேன். மடக்கிப்பிடிக்கப்பட்ட மூன்று சிப்பாய்களுள் ஒருவன் துப்பாக்கியுடன் தப்பி வந்து நான் நின்ற வீட்டு வேலியுடன் நின்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந் தான். அந்த வீட்டிற்கு கிழக்குப் புறமாக இருக்கும் ஒரு சிறு ஒழுங்கையால் வந்த மார்க்கண்டு பெரிய மீன்களைத் தூக்கி வள்ளத்தில் போ டும் கொழுவியால் வேட்டுக்களைத் தீர்க்கும் சிப்பாயின் பின் புறத்தால் வந்து கழுத்துக்குக் குறிவைத்து கொழுவி இழுத்தார். அந்தோ பரிதாபம் அவர் குறி தவறிற்று. சிப்பாயின் குறி தவறவில்லை. அவன் திரும்பி இவரைச் சுட்டு விட்டான். குண்டு அவரது வாய்க்குள் புகுந்து அலகால் வெளியில் வந்தது.

சிப்பாய் திரும்பவும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று குற்றுயிராக இருந்த இரத்தம் தோய்ந்த இரு சிப்பாய்களையும் தனது இருகரங்களாலும் அணைத்தபடி சொர சொர என இழுத்துக் கொண்டு பிரதான வீதிக்கு வந்து விசில் அடித்து தனது அபாயத்தை தூரத்தில் இருக்கும் ஏனைய சிப்பாய்களுக்கு தெரியப்படுத்தினான். சிறிது நேரத்தில் பேரிரைச்சலுடன் வாகனங்கள் நிறைய சிப்பாய்கள் வந்து ஊரைச் சூழ்ந்து கொண்டார்கள்.


நம்மவரிடம் அகப்பட்ட சிப்பாய்களில் ஒருவனை இராமசாமி, ஆட்டுக்கு சீக்காய் சீவிக்கொண்டிருந்த பாளைக் கத்தியால் கண்டபடி வெட்டியதால் அவனுடைய மூக் கும், காதும் அறுக்கப்பட்டு அவன் அந்த இடத்திலேயே இறந்ததாக பின்னர் தான் அறிந்தேன். மற்றைய சிப்பாய் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இறந் தான். இச்சண்டையில் அழகையா என்ப வருக்குப்பட்ட துப்பாக்கிரவை அவரது தோள் பட்டைக்குக் கீழ் கமக்கட்டில் காயத்தை ஏற் படுத்தியது. காயப்பட்ட நம் இருவரும் உயிர் பிழைத்துக் கொண்டனர். மார்க்கண்டு என்ப வர் பின்னர் இயற்கை மரணம் அடைந்தார்.

இதை எழுதி முடிக்கும் தறுவாயில் சோதிலிங்கம் என்பவரை நேரில் கண்டு இது பற்றிக் கேட்டபோது பின்வருமாறு விபரித் தார். "டே மச்சான் அது சத்தியாக்கிரக காலத் திலே நாங்கள் கறுப்புக்கொடி கட்டி எமது எதிர்ப்புக்களை சிங்கள அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தினோம். அப்பொழுது தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் வந்து கறுத்தக் கொடிகளை எங்க ளைக் கொண்டு அறுப்பித்து பின்னர் எங்கடை ஊருக்குள் புகுந்து இங்கு அட்டகாசம் புரிந்த வர்கள். அவன் பஞ்சலிங்கம் கட்டிப் பிடிக்க நான் ஒருவனுக்கு இரண்டு கல்லுகளால் தலையிலும் முகத்திலும் குத்தினேன். அவன் இரத்தம் ஓடிச் செத்துப் போக எனக்கு மனம் ஒரு மாதிரிப் போச்சு செத்தவருடைய துவக்கை இழுத்துப் பார்த்தன். அது நல்லா கொழுவுப்பட்டு இருந்ததால் வரமாட்டன் என்றிருந்தது. ஆனால் இராசாமி பாளைக் கத்தியால் அவனின் பெல்டை வெட்டித் துவக்கை எடுத்து முறித்துப் போட்டு அதுக் குரிய குண்டுகளையும் கொண்டுபோய் கடலுக்குள் எறிந்து விட்டார். மச்சான் இவர் கள் இப்ப வந்தாலும் நான் எதிர்த்துப் போ ராடத் தயார்" என்று அன்று நடந்த சம்பவத் தை ஞாபகப்படுத்தினார்.

**சிறிலங்கா ஆதிக்க வெறியர் முதன் முதலில் எம் மண்ணில் காலடி எடுத்து வைத்த அன்றே தகுந்த பாடம் படிப்பித்த இந்த மண்ணின் அந்த மைந்தர்களும் இம்மாவீரர் வாரத்தில் நினைவு கூறப்பட வேண்டியவர் களே.**



1961ம் ஆண்டு சம்பவம் நடைபெற்ற ஆதிகோவிலடிப் பிரதேசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு "மைலாய்" இந்தியாவுக்கு "வல்வை"

இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் தற்போது முகாமையாளராகப் பணியாற்றுபவரும் இந்தப் படுகொலைகளால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவருமான திரு.என். சிவரத்தினம், அன்று நடந்த அவலங்கள் குறித்தும் அதன் பின்னர் இந்திய இராணுவ அதிகாரிகள் நடந்து கொண்ட விதம் குறித்தும் தனது அனுபவங்களை 2.08.2002 யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையில் விவரிக்கின்றார்.

1989 ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி, நடக்கப்போகும் அனர்த்தம் குறித்து எந்த முன்னறிவிப்பும் இன்றி வல்வெட்டித்துறை நகரம் அமைதியாக விழித்தது. காலைச் சுறுசுறுப்பில் மக்கள் அனைவரும் மூழ்கியிருந்தனர். அவரவர்களுக்கு தங்கள் தங்கள் அவசரம்.

ஆனால், திடீரென அந்த அமைதியைக் குலைத்தன துப்பாக்கி வேட்டொலிகள் அவை! ஒரு ஜாலியன் வாலாபாக் படுகொலைகள், மைலாய் படுகொலைகள் போன்று வல்வெட்டித்துறையிலும் ஒரு வரலாற்றுப் படுகொலைகள் இடம் பெற அச்சாரம் இட்டன.

'இந்திய இராணுவத்தினரை போராளிகள் சுட்டுவிட்டனராம்' – செய்தி வேகமாகப் பரவியது. சுற்று வட்டாரத்தின் அமைதி குலைந்தது; பதற்றமும் பீதியும் தொற்றிக் கொண்டன.

தாக்குதலுக்கு பழிதீர்க்க கங்கணம் கட்டிக்கொண்ட இந்திய இராணுவத்தால் முடிந்ததெல்லாம் அப்பாவிகளைக் கொன்று குவித்ததும் அவர்களின் சொத்துக்களை நாசமாக்கியதும் தான்.

மிக நன்றாகத் திட்டமிட்டு மூன்று நாள்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து தன் இரத்தப் பசியை வல்வெட்டித்துறை அப்பாவிகளிடம் தீர்த்துக் கொண்டது உலகின் நான்காவது பெரிய இராணுவம் என்று பெருமை பேசிய இந்திய இராணுவம்.

இங்கு அமைதிகாக்க வந்தவர்கள் வல்வெட்டித்துறையின் அமைதியைக் குலைத்து அதனை இரத்தத்தால் குளிப்பாட்டி புகைமண்டலத்தால் மூடினார்கள்.

இந்தியாவை நம்பிய மக்களின் எதிர்பார்ப்புகளை மீண்டும் ஒரு தடவை தன் இராணுவ பூட்சுகளால் நசுக்கியது இந்திய அமைதிப்படை.

1989ஓகஸ்ட் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் இந்திய இராணுவம் நிகழ்த்திய படுகொலைகளின் ஞாபகார்த்த தினங்களின் ஆரம்பம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கு யாராவது வல்வை குடி மகன் இருக்கிறாரா? *(Is there any body from Valvettiturai?)* நான், இதுவரை நேரமும் வல்வெட்டித்துறையில் புலிகள் நடத்திய தாக்குதலில் உங்களைப் பாதுகாக்க வந்த இந்தியப் படைவீரர்கள் படுகொலை செய்யப் பட்டதையும் அவர்களால் ஏற்பட்ட அனர்த் தங்களையும் பற்றி கூறிக் கொண்டிருக்கி றேன். இதுபற்றி ஏன் ஒரு வரும் கேள்வி கேட்கவில்லை? ஆம், நீங்கள் கேட்க வேண் டிய அவசியம் இல்லை. காரணம் நான் இப் பகுதி முழுவதற்குமே பொறுப்பான இந்திய நன்நாட்டின் குடிமகனான ஒரு கட்டளைத் தளபதி". (You have to believe what I relate because I am a Brigadier of I.P.K.F)

ஆம், இவ்வார்த்தைகளை ஆணவத் துடன் கூறியவர். இந்தியப் படை வடமராட்சி யை ஆக்கிரமித்து இருந்த காலப்பகுதியில் அப்பகுதிக் கட்டளை அதிகாரியாகப் பணி யாற்றிய பிரிகேடியர் சங்கர் பிரசாத் *(Brigadier Sankar Prasad)* மந்திகை வைத்தியசாலை யை அண்டி அதன் பின் புறத்தில் அமைக்கப் பட்டிருந்த அப்பகுதி இந்திய அமைதிப்படை *(I.P.K.F)* அதிகாரியின் இடத்திலே வலுக் கட் டாயமாக அழைத்துச் செல்லப்பட்டு கட்டளை அதிகாரியால் வாராந்தம் நடத்தப்பட்ட பொது மக்கள் சந்திப்பிற்கான கூட்டத்தில் ஓகஸ்ட் 7ஆம் திகதி 1989ஆம் ஆண்டில் இவை கூறப் பட்டன.

அந்த பிரிகேடியர் அக்கூட்டத்தில் மேலும் பேசியதாவது:-

ஓகஸ்ட் 2ஆம் திகதி காலையில் வல்வெட்டித்துறை சிவபுர வீதியில் உள்ள பெற்றோல் நிலையத்தினருகே எமது வீரர் கள் பலர் புலிகளால் படுகொலை செய்யப் பட்டதை அறிந்த நான், காலை 11 மணியள வில் அங்கு சென்று பார்த்தபோது புலிகளின் தாக்குதலில் எமது படைவீரர்கள் மட்டுமல்ல பல பொதுமக்களும் கொலை செய்யப்பட்டி ருந்தனர். இதனால் ஆத்திரமடைந்த ஏனைய வீரர்கள் புலிகளைத்தேடி வேட்டை நடத்தி யதில் சில அனர்த்தங்கள் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. ஆனால், நான் அங்கு சென்ற சில நிமிடங்களில் நிலைமையைக் கட்டுப் படுத்தி பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளித்து, எனது கடமையை நிறைவேற்றினேன். எனது செயற்பாடுகளும் கட்டளைகளும் இன்றேல் எத்தனையோ பெரிய அனர்த்தங்கள் நடந்தி ருக்கும் என்றார்.

தன்னைப் பற்றியும் தன் பதவியைப் பற்றியும் அதனைத் தனக்குத்தந்த இந்திய நாட்டைப் பற்றியும் பெருமையுடன் கூறிக் கொண்டிருக்க பெட்டிக்குள் அகப்பட்ட நாகம் போல கூட்டத்தில் உள்ள அனைவரும் அவர் சொல்வதை கேட்பதில் மகுடிக் கடங்கிய பாம்புகளாகவே இருந்தனர்.

இச்சந்தர்ப்பத்திலே தான் "இங்கே யாராவது வல்வெட்டித்துறையைச் சேர்ந் தோர் இருக்கின்றனரா? என்ற கேள்வி கேட்கப்பட்டது. அக்கூட்டத்தில் ஒருவராக - வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவராக - நான் இருந்தேன். நான் பணியாற்றும் இலங்கை வங்கி கிளையின் முகாமையாளரான எஸ். மகாலிங்கம் சைகையினால் இதுவரை நேரமும் என் மனக்குமுறலை அடக்கியிருந் தார் எனினும், பின்னர் எனக்கு அவராகவே ஒரு சந்தர்ப்பத்தைத் தந்தார். அந்த பிரிகேரி யரிடம், எனக்கு கிடைத்த நம்பகமான தகவல் களின்படி காலை 11மணிக்குப் பின்பே படு மோசமாக கொலைகள் அங்கு நடந்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. வீடுகளில் இருந்தவர்களை வெளியே இழுத்துவந்து சுட்டுக் கொலை செய்தும், மீனவர்களை அவர்களின் வள்ளங்களுக்குள் போட்டு உயிருடன் எரித்தும், கடையினுள் வியாபாரிகளை வைத்துக் கடையைப் பூட்டி அதைத் தீ மூட்டி எரித்தும் அட்டுழியம் புரிந்ததாக அறிகிறேன்.

எனவே, தயவுசெய்து நீங்கள் ஒரு நேர்மையான - மதிப்புள்ள - கட்டளை அதிகாரி என்ற வகையில் காலை 11மணிக்குப் பின், அதாவது நீங்கள் சம்பவ இடத்துக்குப் போன பின்னர் எந்தப் படுகொலையும் நடக்கவில்லை என்னும் கூற்றை இச்சபையில் மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்த முடியுமா? என்று திரு. மகாலிங்கம் கேட்டார்.

"நிச்சயமாக, நான் ஒரு பொறுப்பு வாய்ந்த கட்டளை அதிகாரி. எனது அலுவலகம் யாக்கரையில் உள்ளது. மாதாந்தம் நடக்கும் பொதுமக்கள் கூட்டத்திலும் நான் இந்திய இராணுவத்தின் கட்டுப்பாடு பற்றியும் பொது மக்கள் மீது எமக்குள்ள அபிமானத்தைப் பற்றியும் கூறிவருவதை நீங்கள் அறியாமலிருக்க முடியாதே" என்றார் பிரிகேடியர். இச்சந்தர்ப்பத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திய நான் பின்வருமாறு கூறினேன்.

தயவுசெய்து எனக்கு இச்சபையில் இருந்து கதைப்பதற்கு அனுமதி தாருங்கள். ஏனெனில் உங்களையோ அன்றி எந்த இந்திய சிப்பாயைக் கண்டாலும் எனது உடல் நடுங்குகிறது. இதைக் கேட்ட பிரிகேடியர் பயப்பட வேண்டாம். நீங்கள் இருந்தே கதைக்கலாம் என்றார். எனது முகாமையாளர் கேட்ட அதே கேள்வியைக் கேட்டு மீண்டும் அவர் வாயினால் "தான் போன பின் எந்த அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை" என்ற உறுதிப்பாட்டை நானும் பெற்றுக் கொண்டேன்.

தொடர்ந்து நான் சபையைப் பார்த்து இவ்வாறு கூறினேன். "இலங்கைத்தீவில் வல்வெட்டித்துறையில் வாழும் ஒரு சாதாரண குடிமகன் கூறுவது உண்மையா? அல்லது இந்தியப் பெரு நாட்டின் - உலகின் 4ஆவது பெரிய இராணுவ பலம் கொண்ட இராணுவத்தின் கட்டளைத் தளபதியாகக் கடமை புரியும் ஒரு பிரிகேடியர் கூறுவது உண்மையா என்பதை இப்போ பார்ப்போம்".

நான் அங்கு மேலும் இவ்வாறு கூறினேன். "நான் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குடிமகன். எனது சொந்த வீடே எரிக்கப்பட்டுள்ளது. அங்கு மாமா, மாமியார் வசித்து வந்தனர். எனது மோட்டார் கார் உட்பட சகல சொத்துக்களும் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன. இவைதான் போகட்டும்; எங்கள் வீட்டில் அடைக்கலம் தேடி வந்த எமது உறவினர்கள் நாம் வசித்து வந்த மைத்துனியின் வீட்டினுள்ளேயே கையெடுத்துக் கும்பிட கும்பிட மனைவி பிள்ளைகள் மற்றும் அவர்களது உறவினர் முன்னிலையில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவை யாவும் 02.08.1989 அன்று பி.ப 2.00 மணிக்குப் பின்னரே. அதுமட்டுமா இந்திய அமைதிப் படையினர் தொடர்ந்து 3 நாட்கள் ஊரடங்கு உத்தரவினைப் பிறப்பித்து ஏராளமான உயிர்களை மிகவும் நாகரிகமற்ற முறையில் காட்டு மிராண்டித்தனமாக கொலை செய்ததுடன் கோடிக்கணக்கான சொத்துக்களையும், உடைமைகளையும் எரித்து நாசப்படுத்தி உள்ளனர்" என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராது இவற்றைக் கேட்ட பிரிகேடியர் சங்கர் பிரசாத், நீ வல்வெட்டித்துறையா எனக்கேட்டதுடன் ஏன் முதலில் நான் கேட்டபோது அதுபற்றி தெரிவிக்கவில்லை எனவும் அதட்டலாக வினாவினார்.

"எனது முகாமையாளரின் வேண்டுதலின் காரணமாக நான் வி.வி.ரி யைச் சேர்ந்தவர் என்பதைக் கூறவில்லை" என்று கூறினேன்.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இந்த பிரிகேடியர் முன் சமூகமளித்திருந்த பிரஜைகள் குழு உறுப்பினர்களுக்கு அவர் பின்வருமாறு கூறியதாகவும் நான் அறிந்திருந்தேன்.

"இந்திய இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டால் வடமராட்சியின் முழுக் கிராமங்களையும் எரிப்பேன்... நூற்றுக் கணக்கில் சுட்டுத் தள்ளுவேன்... இராம - இராவண யுத்தத்தால் இலங்கை எரிந்தது போல மீண்டும் இலங்கை எரியும்.... எங்களை எவரும் எதுவும் செய்துவிட முடியாது... நாங்கள் உலகின் நான்காவது பெரிய இராணுவம்..." என்று அவர் கூறியிருந்தார்.

பிரிகேடியரின் அனுமதிக்காகக் காத்திருக்காமல் அச்சபையில் நான் தொடர்ந்து உரக்கக் கூறினேன். "பருத்தித் துறையிலிருந்து வந்து அடைக்கலம் தேடி எம்முடன் வாழ்ந்து வந்த என் மனைவியின் பெரிய தந்தையானவரும், இளைப்பாறிய தபால திபருமான 62வயது இராசமாணிக்கம் நடராசா மற்றும் அவரது சகோதரியின் மகனான இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் 28வயதான வி.அருட்சோதி என்பவரையும் உறவினர்களின் முன்னிலையிலேயே துடிக்கத் துடிக்கச் சுட்டுகொன்றுள்ளார்கள். அத்துடன் விட்டார்களா எனது வீட்டையே நெருப்பு வைத்து எரித்தார்கள். அத்தீயை அணைக்க முற்பட்ட என் மனைவியைத் துரத்தியடித்தார்கள். சம்பவம் நடந்த இடம் (இத்தனையும் நடந்தது இன்று தீருவிலில் குமரப்பா, புலேந்திரன் போன்ற வீரவேங்கைகளின் நினைவுத் தூபி அமைந்திருக்கும் இடத்தில்) புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் சண்டை நடந்த வல்வைச் சந்தியில் இருந்து எத்தனையோ ஒழுங்கைகள் கடந்து அமைந்துள்ளது. அதுமட்டுமல்ல இச்சம்பவம் 02.08.1989 பிற்பகல் 2 மணிக்கு பின்பே நடைபெற்றுள்ளது.

"3 நாட்கள் தொடர்ந்து ஊரடங்கு அமுலில் இருந்ததால் என்னால் வீட்டிற்குப் போக முடியவில்லை. நான் 4ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் முதலாவது ஆளாக அங்கு சென்றதும் என் மனைவி, பிள்ளைகள் உட்பட உறவினர்கள் மரண ஓலமிட்டனர். அந்த நேரத்திலும் இந்தியப் படையினர் வல்வையிலிருந்து விலகிச் சென்றிருக்கவில்லை.

"3 தினங்களாகக் கிடந்து, அழுகிய நிலையில் இருந்த இரு சடலங்களை மனைவி, பிள்ளைகளின் உதவியுடன் நானே எடுத்து வீதியோரத்தில் போட்டு எரித்தேன். விறகு இல்லாமையால் வீட்டிலிருந்த வாங்கு மற்றும் தளபாடங்களையும் போட்டு சடலங்களுக்குத் தீ மூட்டினேன். இந்நிலையில் சடலங்களை எரிக்க வாகன ரயர் இருந்தால் நல்லது என அடுத்த ஒழுங்கைக்குத் தேடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன போது ஆங்காங்கே சடலங்கள் அழுகிய நிலையில் கிடந்தன. எனவே வேறு சிலரின் உதவியுடன் வேறு நான்கு சடலங் களைக் கொணர்ந்து நான் ஏற்கனவே எரித்த சடலங்களுடன் போட்டு எரித்தேன். (கட்டுரை யாளரால் எடுக்கப்பட்ட ஆவண புகைப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

"இந்நிலையில் மீண்டும் 'டுமீல்..... டுமீல்..' எனச் சத்தம் கேட்டது. பீதியிலிருந்த குடும்பத்தினர் என்னைக் கட்டிப்பிடித்து அழுதனர். அதனால் அவர்கள் அனைவரை யும் அழைத்துச் சென்று வேவில் பிள்ளை யார் கோவிலில் நிறுத்தி விட்டு மீண்டும் சடலங்களை எரிப்பதில் ஈடுபட்டேன்.

"நான் வரும் போது ஒரு சடலம் நிமிர்ந்து இருந்ததைக் கண்டு துணுக்குற் றேன். தைரியத்துடன் கிட்ட சென்று பார்த்த போது அது தீருவில் ஒழுங்கையில் வசித்து வந்த பெரியசாந்தன் எனும் பொ. சண்முக லிங்கத்தினுடையது என அடையாளம் கண்டு கொண்டேன். அதுமட்டுமல்ல இடியப்பம் பிழியும் போது அதிலுள்ள மா வெளியே வந்து வளைந்து வளைந்து விழுவது போல துப்பாக்கிச் சன்னங்களால் ஏற்பட்ட பல துவாரங்களினூடாக அவரது சிவந்த வயிற் றுப் பகுதியிலிருந்து குடல்கள் வெப்பத்தி னூடாக வெளியே வந்து நெளிந்து நெளிந்து விழுந்து கொண்டிருந்தன. இவை யாவும் அத்தனை சடலங்களையும் எரிக்கப் போதிய விறகு இன்மையாலேயே".. என்று எனது அனுபவத்தின் ஒரு பகுதியை அந்த பிரிகேடி யர் முன்னிலையில் ஆவேசத்துடன் கூறி முடித்தேன்.

மந்திகை முகாமில் பொதுமக்கள் முன்னிலையில் என் வார்த்தைகளைக் கேட்ட பிரிகேடியர் உம்முடைய வீடு எங்கே எனக் குறிப்பாக சொல்லும்படி கேட்டார். நான் தூபியின் அடையாளத்தை குறித்துக் கூறிய போது 'ஓ! அந்த வீடா! அந்த வீட்டில் புலிகள் இருந்தார்களே. அவர்கள் அங்கிருந்து பக்கத் திலிருந்த இராணுவத்தினரை நோக்கி துப் பாக்கி பிரயோகம் செய்தார்கள். அதனால் தான் வீட்டிற்குள் இராணுவத்தினர் புகுந் தார்கள்" என்றார்.

அப்படியானால் 62 வயது தபாலதி பரும், அவரது மருமகன் சீமெந்து கூட்டுத் தாபனத் தொழிலாளியும் தான் அந்தப் புலி களா? என நான் திருப்பிக் கேட்டேன். அதற்கு பதில் சொல்லாத பிரிகேடியர், வல்வெட்டித் துறையில் உள்ள உரமுள்ளவர்கள் போலத் தான் மராட்டியர்கள் என்றும், அங்கு நிலை கொண்டிருந்ததும் மராட்டியர்கள்தான் என் றும், இதுவரையில் நீங்கள் தப்பியதே பெரிய காரியம் என்பது போலவும் கூறினார்.

அதன் பின்னர் இந்த விடயத்தில் இருந்து நழுவிய தளபதியோ, நான் இங்கு வல்வை விடயங்களை மட்டும் பற்றி கதைக்க வரவில்லை எனக்கு வேறு பல விடயங்கள் பற்றியும் இங்கு பேச உள்ளது என நாசூக் காகத் தப்பி விட்டார்.

அக்கூட்டம் ஒருவாறு முடித்தபின் அந்த குறித்த முகாமின் அதிகாரி என்னை தனியே அழைத்து "அந்த பிரிகேடியர் முன் அப்படிக் கதைப்பதை தவிர்த்திருக்கலாம் என்னவெல்லாம் பின் விளைவுகள் ஏற்படப் போகிறதோ நான் அறியேன்" என்றார். உண்மையில் அவர் கூறியது போல பாரதூர மான உயிராபத்தான பின்விளைவுகளை நான் அனுபவித்தது பிறிதொரு கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அநீதிகளினால் எமது குடும்பத்தில் என் மனைவி, பிள்ளைகள் தவிர ஏனையவர்கள் வல்வையை விட்டு கொழும்புக்கும், ஏனைய பிற இடங்களுக்கும் சென்றுவிட்டனர். இத்தாக்கத்தினால் என் 11 மாதக் குழந்தைக்கு பாலூட்டும் சக்தியை அன்றிலிருந்தே என் மனைவி இழந்துவிட்டாள்.

இவைகள் என் சொந்த அனுபவங்கள். இப்படியாக வல்வையை மட்டுமல்ல அதனை சூழவுள்ள கிராமங்களான கம்பர் மலை, வல்வெட்டி, பொலிகண்டி, உடுப்பிட்டி போன்ற பல கிராமங்களை சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டு தமக்கென பல திகிலூட்டும் சோக கதைகளை திரு. ந. அனந்தராஜ் எழுதிய "வல்வைப் படுகொலைகள்" நூலில் காணலாம்.

அன்று சேகரித்த தகவல்களின்படி ஏற்பட்ட சேதங்கள் வருமாறு. ஆனால் கணக்கில் சேர்த்து கொள்ளப் படாமை எத்தனையோ உண்டு.

1. படுகொலைகள் - 63
2. வீடு எரிப்புக்கள் - 123
3. கடை எரிப்புக்கள் - 45
4. கடற்றொழில் படகுகளும் மீன்பிடி வலைகளும் நாசமாக்கப்பட்டவை. - 176

**இந்தப் படுகொலைகள் குறித்து வெளியுலகப் பத்திரிகைகள் சிலவற்றின் பார்வை....**

**'தி கார்டியன்'**

லண்டனில் இருந்து வெளியாகும் 'தி கார்டியன்' என்ற பத்திரிகையில் அதன் கொழும்பு நிருபரான கிறிஸ்நற்றோல் பின் வருமாறு எழுதியுள்ளார்.

ஸ்ரீலங்காவின் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு வருடங்களாக நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப்படையினரின் மிகவும் மோசமான ஒரு நடவடிக்கையில் 51 தமிழ் பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளனர்.

மூன்று நாள்களாக ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து இந்தப் படுகொலைகள் பற்றிய விவரங்கள் வெளியே தெரியாதவாறு இந்தியப் படையினர் மூடி மறைத்துள்ளனர். இந்தத் தாக்குதலில் அந்தக் கிராமத்தையே அழிப்பதற்கு முயற்சி செய்துள்ளதுடன், வைத்தியர் குழுவைக் கூட அங்கு செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

வல்வெட்டித்துறையே, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்த ஊராக இருப்பதாலும், பல விடுதலைப்புலிகளின் போராளிகள் இங்கிருந்தே உருவாக்கப் படுவதாலும் பழிவாங்கும் ஒரு செயலாகவே இத்தாக்குதல் அமைந்துள்ளது.

இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 51 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பெரும்பாலானவர்கள் தமது கையையோ, காலையோ இழந்த நிலையில் படுகாயமடைந்துள்ளனர். இந்நகரத்தில் பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதால் இப்பொழுது பாலைவனம் போல் காட்சியளிக்கின்றது. 5000 இற்கும் மேற்பட்ட மக்கள் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ள வர்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் (UNHCR), செஞ் சிலுவைச் சங்கம் ஆகியவற்றிற்கு நிவாரண உதவி கோரி விண்ணப்பித்துள்ளனர்.

"இலங்கையில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இந்தியா படை விலகலைச் செய்யும் என்று இன்றும் கூறிக் கொண்டிருப்பதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக இந்தியா தனது படைகளை மேலும் அங்கு வைத்திருப்பதற்கு நியாயம் கற்பிக்க முயல்கின்றது."

**'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்'**

இந்திய அமைதிப்படையினர், தமது வீரர்கள் 6 பேர் விடுதலைப்புலிகளினால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து எதிர் நட வடிக்கைகளில் ஈடுபட்டதில் நிராயுதபாணி களான ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டும், 12 பேர் காணாமற் போயும், 123 வீடுகளும், மீன்பிடி உபகரணங் களும் சைக்கிள்கள் உட்பட 50 மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டும் உள்ளன. வல் வெட்டித்துறை பாலைவனமாக காட்சியளிக் கிறது. சனத்தொகைகளில் அரைவாசிப் பேர் இடம் பெயர்ந்து அயல் கிராமங்களுக்கு சென்று விட்டனர்.

**எரிக்கப்பட்ட வீடுகளில் காந்தி, நேரு, சுபாஸ், சந்திரபோஸ் போன்ற இந்தி யாவின் தலைசிறந்த தலைவர்களின் படங் கள் கூட எரித்து நொருக்கப்பட்டுள்ளன.**

இந்திய இராணுவத்தினர் தம்மை எதிர்ப்பவர்களை அழிக்காது அப்பாவி மக்க ளை எதிர்த்து அழிக்கும் கொலைகாரப் படை யாகத் தான் அங்கு இப்பொழுது இருக் கின்றது. 1989 செப்ரெம்பர் 3ஆம் திகதி வெளி யான இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் அதன் நிருபரான றீற்றா செபஸ்ரியன் இவ்வாறு விசேட அறிக்கையாகக் குறிப்பிட் டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை மண் மீண்டும் எழும்!

01.06.2003இல் "உதயன்" பத்திரிகையில் மேற்படி தலைப்பில் வெளியான ஆவணத் தொகுப்பில் கட்டுரையாளர் ஆதி கோவிலடி ஜெயம் அவர்கள் 1987இல் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்த போது யாழ்ப்பாணத்தில் "சயனைட்" அருந்தி வீரச்சாவடைந்த குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் ஞாபகார்த்த நினைவுத் தூபி கடந்த 1996ஆம் ஆண்டு ஸ்ரீலங்காப் படைகளால் துவம்சம் செய்யப்பட்ட சம்பவத்தை நினைவு கூர்கிறார். இக்கட்டுரையில் போராளிகளின் எழுச்சிச் சிலையும் கேணல் கிட்டுவினதும் சக போராளிகளினதும் கப்பல் வடிவில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னமும் அடங்கும். மேற்படி கட்டுரையில் இருந்து ஒரு பகுதி.....

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் போரின் தாக்கங்களைப் புதைத்து வைக்காத தமிழீழத்தின் ஒரு பகுதி கூட இன்றில்லை. துல்லியமாகக் கூறின் வங்கக் கடலே வாய் திறந்து நீ கூறு. ஈழமண்ணை அலையலையாக நித்தம் நீ முத்தமிட்டுச் செல்வாயே! சப்தமிட்டுக்கூறு.

நீலிவிழிக்கண்ணீரால் ஈழத்தமிழர் நெஞ்சங்களை கழுவிவிடலாம் எனப் பசுத்தோல் போர்த்து வந்த பாரதமே படிக்கவில்லையா நீ! எம் தலைவர் சுதுமலையிற் கூறிய வார்த்தைகளை.

"ஈழதமிழரை இனிப் பாரதத்தின் கைகளில் ஒப்படைக்கிறேன்" என்று மனமின்றிக் கூறிய அந்தச் செய்தி பத்திரிகைக்குப் போய் ஈரமை காய்வதற்குள் ஈவிரக்கமற்ற நரிவேடம் போட்ட அந்த ஜே.ஆர் கதை கேட்டு நம் பன்னிருவரைப் பறித்தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலேந்தி அம் மான் என்றால் எங்கும் புகுந்து வீரத்துடன் விளையாடும் வீரன் அல்லவா? குமரப்பா என்றால் குடல் கலங்குமே? இவர்களைக் குறிவைக்க இதுவா நீ போட்ட ஒப்பந்தவரிகள். அவர்களுடன் அந்தப் பன்னிருவரைப் பறித்ததனால் போராட்டப் பாதையை மாற்றமுடிந்ததா? சங்கத் தமிழும் தமிழீழ மண்ணும் தங்கள் இரு விழிகள் என இலட்சியப் பற்றைக் காட்டினார்களே இன் னுமா புரியவில்லை.!

வரலாறு உள்ளவரை இதனை வாய் விட்டுச் சொல்லுவதற்காகவே வல்வையில் ஓங்கி உயர்ந்ததுதான் தீருவில் நினைவுத் தூபி.

காலம் உருண்டோடியது. வரலாறு வாசலைத் தட்டியது. பதினைந்து ஆண்டுகள் கழிந்து வந்தது நினைவு நாள். அன்று 05.10.2002 எம்மனம் அதிகாலையிலேயே அவசரப்படுத்திக் கொண்டிருந்தது. வங்கி அலுவல்கள் எவ்வாறு சீக்கிரமே நிறைவு பெற்றதை யான் அறியேன். பதிலொன்றே ஒன்று தான். ஆவல், ஆம், எமது வீட்டின் அருகே நடக்கும் நிகழ்வுக்காக ஆவல் கொண்டதில் ஆச்சரியமென்ன? அதுவும் அந்த விலை மதிக்க முடியாத வீர புருஷர்களுக்காக தூபி அமைந்துள்ள எல்லையே எங்கள் வீட்டு மதில்தானே. நானும் எனது மனைவியும் எமது வீட்டைச் சென்றடைந்த போது மாலை ஏழு மணியாகியது. புலிகளின் ஏற்பாட்டில் நடந்த அந்த நிகழ்வில் அப்போது வல்வை...... வல்வை...... மண்....... மண்...... மண்...... மீண்டும்...... மீண்டும்..... மீண்டும்... எழும்.... எழும்... என எதிரொலி.

கூட்டத்தில் நானிருந்தேன். கூடவே வந்த ஆவலைத் துறந்தேன். கூடியிருந்தோரை மறந்தேன். அந்த நாள் அதே நாள் எனது நினைவுக்கு வந்தது. மறக்கமுடியாத அந்த நாள் என் நினைவுத் திரையில் நிழல் படமாக ஓடியது.

1987இல் இந்திய இராணுவம் இலங்கை வந்ததும் அமைதிப்புறா ஒன்று அதன் சிறகை ஒடித்ததும் முடிந்த கதையல்லவே. தீருவில் நினைவுத்தூபி அதனால் உருவாகியதன்றோ, பொதுமக்கள் பலர் தம் காணிகளைப் பகிர்ந்தளிக்க விஸ்தீரமான அந்த வடிவம் பெற்று ஓடிக்கொண்டிருந்தது.

பின்னாளில் போராளிகளின் ஒன்று கூடல் நிகழ்வுகளுக்குரிய இடமாகிய அதன் சுற்றுப்புறச் சூழலில் அமைக்கப்பட்ட பூங்கா சுற்றுலா மையமானது.

அந்தப் புனிதமான இடம் பொழுது போக்கிற்காகக் கட்டப்பட்டதல்ல. காதலுக்காக எழுந்த தாஜ்மஹாலுமல்ல. இதனையறியாதோர் ஏதோ சுடுகாடு எனும் போதெல்லாம் என்னைச் சல்லடை போட்டுத் துழைப்பது போல் இதயம் குமுறிடும் வேளையில் அனலிடை மெழுகாவேன்.

இங்கு தானே... அந்தத் தியாகச் செம்மல்கள்... தலைவன் காட்டிய வழியில் நின்றவர்கள்.. தமிழீழமே எங்கள் மூச்சென்று கட்டுண்டவர் வெற்றுடல்கள் காற்றுடன் சங்கமமாகிய போது கரைபுரண்டோடியது கண்ணீர் வெள்ளம். தமிழன் சாதனைக்கு வரையறை போட்டு வரம்பு கட்டமுடியுமா? ஒரு முறைதான் வாழ்வு என்று உலகம் அறியும். ஆனால், ஈழத்தமிழன் என்றால் அந்த முடிவிலும் உலகின் கண்களை உயர்த்த வைப்பான். கருவறையே கல்லறையானாலும் காவியம் படைப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் உயர்ந்ததுதான் தீருவில் நினைவுத்தூபி. மக்கள் மனங்கள் இணைந்தன. வல்லுநர்கள் திரண்டார்கள். செய்வதைச் செவ்வனே செய்யும் அந்நாள் பிரஜைகள் குழுத் தலைவரான திரு.செல்வேந்திரா அவர் கள் நெறிப்படுத்தினார். பொறியியல் வல்லுநர் திரு. இராஜேந்திரன் தலைமையில் வடிவமைத் தார்கள். 1938இல் அமெரிக்கா சென்ற அன்ன பூரணிக் கப்பலின் பாய்மரத்தை அன்போடு நினைவு கூர்ந்தார்கள். அன்று தமிழன் வரலாறு படைத்தான் கடலிலே. ஆனால், இன்றோ அதே வழி வந்தவர்கள் கடலுக்குள் செல்வ தற்குத் தடை விதிப்பா? காற்றுக்கும் வேலி போடுவார்களா? நேற்றுவரை தமிழன் எத்தனை தடை தாண்டிவிட்டான். இலங்கை இராணுவம் ஓய்வெடுக்க ஏற்படுத்திய ஒப்பந் தமாக இலங்கை - இந்திய ஒப்பந்தம். 1987 இல் அமைதிப்படை என்ற பேரில் ஆக்கிரமிப் புப் படையொன்று காலடி எடுத்து வைத்தது.

மஹாத்மா காந்தி சிலைக்கு முன் னாலே மனித உயிர்கள் பறிக்கப்பட்டன எந்த நாட்டிலுமில்லா கொடூரம், வைத்தியசாலைக் குள்ளேயே மனித உயிர்கள் பறிக்கப்பட்டன. காட்டுமிராண்டித்தனம் அரங்கேறியது. அப் பாவி மனித உயிர்கள் அநியாயமாக அழிக் கப்பட்டன.

அவர்களுக்காக அந்த இனத்திற் காகப் பசியை மறந்தவர், வீட்டை மறந்தவர் வீரமுழக்கமிட்டு சாதனை படைத்தவர் சரித் திரத்தை முடிக்கலாமென்று தப்புக்கணக்குப் போட்டு வந்த அமைதிப்படை அமைதி கொல்லும் படையாகினர்.

கடலிலே சென்ற எம் வீரப்புதல் வர்கள் பன்னிருவரைக் கைதியாக்கினர். கைகளில் ஆயுதமில்லை. ஆனாலும் அவர் கள் கைகளுக்கு விலங்கிட்டனர். தலைநகர் கொழும்புக்கு அனுப்ப முயற்சித்தவேளை தடுத்துக் கூறினர். அனுப்ப வேண்டாம் என் றும், எங்களுக்கு என்ன நடக்கும் என்பதை நாம் அறிவோமென்று எடுத்துக் கூறினர். கேட்டார்களா? நாடகத்தை நடத்திப் பார்க் கலாமென்று நடவடிக்கையில் இறங்கினர். எண்ணம் - சொல் - செயல் மூன்றும் ஒன்றா கவே வாழும் வீரமறவர்கள் அல்லவா "சயனைட்" அருந்தினர். இந்தியாவையே சம் மட்டி, சாட்டையால் அடித்தனர். பன்னிரு வரும் தம்முயிரை மாய்த்தனர். அவர்களுக் காக ஓங்கி உயர்ந்து நின்றது தான் "தீருவில் நினைவுத் தூபி".

1988இல் அமைக்கப்பட்டு அதன் முதலாவது நினைவஞ்சலி அனுசரிக்கப்பட் டது. ஒக்ரோபர் 5 என்றால் எல்லாத்திக்கிலும் இருந்து திரண்டு வரும் போராளிகளை அங்கு காணலாம். இதயத்தைத் தொடும் அந்த நிகழ்வே எல்லோரையும் ஈர்ந்தது. மக்கள் திரண்டிடும் அந்நாள் வல்வை முத்துமாரியம் மன் கோயில் இந்திரவிழாவை எமக்கு நினை வூட்டியது. காலையில் வந்திருந்தவர் கூட மாலை வருவதை மறந்தனர்.

வண்ணத்தமிழ் காவலருக்கு வடிவ மைத்த எழுச்சிச் சிலை அங்கு தூபியுடன் திரு. றமணி அவர்களால் வடிவமைக்கப் பட்டு ஆண் - பெண் போராளிகள் இணைந்து வெற்றிக் கொடியாம் புலிக்கொடியை ஏற்றுவ தாகவும் சமரிலே "சயனைட்" கடித்து வீர மரணம் அடைந்த சக போராளி ஒரு வரை கையில் தாங்கும் போராளியை அந்த எழுச்சிச் சிலை தன்னகத்தே கொண்டு வீர காவியத்தை எல்லோருக்கும் எடுத்துக் கூறி நினைவூட்டுவ தாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் குடாநாட்டையே ஒரு குறிப்பிட்ட காலம்வரை தன்கட்டுப்பாட்டில் கட்டுக்கோப்பான வாழ்க்கை முறையுடன் வைத்திருந்த கேணல் கிட்டுவினதும் அவருடன் கடலிலே காவியமான சக போராளிகளதும் ஞாபகார்த்த சிலையும் அவர்கள் மரணித்த 'எம். வி. அகத்' (M.V Ahad) கப்பலின் முன் அணியம் அங்குள்ள குளத்தில் நங்கூரமிட்ட வடிவிலும் எல்லோருக்கும் நினைவூட்டுவதாக அமைந்தது.

பல வீரகாவியங்கள் ஒன்றாக நினைவு படுத்தப்பட்டு குமரப்பா, புலேந்திரன் போன்ற பன்னிருவருக்காகவும் வடிவமைக்கப்பட்ட நினைவுத் தூபி இந்தியா, இலங்கைத் தமிழர் மீது காட்டிய கயமைத்தனத்தை உரத்துக் கூறுவதற்காக உயர்ந்து நின்றது. அங்கு அமைக்கப்பட்ட பூங்கா அந்த வீர மறவர்களுக்கு மலர் அஞ்சலி நிரந்தரமாகவே செலுத்துவது போல் அமைக்கப்பட்டது. வீதியும் மாவீரர் வீதியென உரத்துக்கூறிக் கொண்டது. வரலாறு படைத்தவர் இல்லத்துக்கு வழிவிட்டு நின்றது.

காலதேவன் கைவிரித்தான். ஞாலத்தில் நமக்கோர் இடம் வேண்டுமென்று தானே கேட்டோம். அந்த இடத்தையே ஆக்கிரமித்தது சிங்கள அரசு. வரலாறு கண்டிராத யாழ் குடாநாட்டு மக்களின் ஒட்டு மொத்த இடப்பெயர்வும் அதனைத் தொடர்ந்து 1996 மே மாதம் ஸ்ரீலங்கா இராணுவம் வடமராட்சியில் காலடி எடுத்து வைத்தது. அப்போது எமது குடும்பம் தற்காலிகமாகக் கரவெட்டியில் வாழ்ந்து வந்தபோதும் நாம் பிறந்து தவழ்ந்து விளையாடிய மண்ணாம் வல்வெட்டித்துறைக்குப் போய்வருவதுண்டு.

வல்வெட்டித்துறைக்குச் சென்று வரும் நாளில் தான் எனது 12 வயது மகனுடன் ஒரு நாள் எமது வீட்டை நெருங்கிய போது எமது வீடு சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

அங்குள்ள இராணுவத்துடன் சிங்களத்தில் உரையாடியபோது கப்டன் தரத்திலுள்ள (கருணரட்ணா என நினைக்கிறேன்) ஓர் அதிகாரி என்னிடத்தில் முன்வந்து தன்னை அறிமுகம் செய்ததுடன் "உங்கள் வீட்டை எந்தவித சேதமுமின்றி வைத்திருக்கிறோம், உள்ளே வந்து பாருங்கள் எனக் கூறி அழைத்துச் சென்றார்.

"அந்த வீடு இருந்த கோலத்தையோ வீட்டின் சுவர்களும் சுற்று மதில்களும் பாரிய துவாரங்கள் போடப்பட்டு காவலரணாகக் காட்சியளித்தமையையோ நான் இங்கு கூற வரவில்லை. அதன்பின்பு நடந்த சோக நிகழ்வையும் வக்கிர செயலையும் தான் இங்கு மனங்குமுற நினைவு கூர விளைகின்றேன்.

மிகவும் நாகரிகமாகவும், பவ்வியமாகவும் கதைத்த அந்தக் கப்டன் சிறிது நேரத்தில் என் மகனையும் அழைத்துக் கொண்டு எமது வீட்டின் முன்னால் அமைந்துள்ள என் மைத்துனியின் வீட்டுக்குள் போகும்படி பணித்தார்.

கண்மூடித் திறப்பதற்குள் பாரிய வெடிச்சத்தம் கேட்டது. நாம் இருந்த வீட்டுக் கூரைத்தகடுகள் மீது பொல பொலவென மழைபோல் கற்சிதறல்கள் வந்து வீழ்ந்ததை உணர்ந்தோம். வீட்டு மதிலால் தூபிப் பக்கம் பார்த்த போது தூபி 5 பாகையளவில் சரிந்து காணப்பட்டது. மீண்டும் பாரிய சத்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே வந்த நான் உள்ளே போகுமாறு பணிக்கப்பட்டேன். எமது வீட்டில் இருந்து அதாவது, அவர்கள் போட்ட காவலரணி ருக்கும் எமது வீட்டில் இருந்து நீளமான மின் காந்த வயர்கள் தூபியின் அடிப்பாகம் வரை நீட்டிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. மீண்டும் பாரிய சத்தம். அதைத் தொடர்ந்து கற்சிதறல்கள் அப்போது பூஜிக்கப்பட வேண் டிய தூபியை நாம் பார்த்த போது அது மேலும் வல்வை சிவன் கோவில் பக்கமாகச் சரிந்து காணப்பட்டது. எல்லாம் வல்ல பரம் பொருளே என்று வணங்குவது போல் நின்றது. இப்போது 15 பாகை அளவில் சரிந்தது. சரித்திரம் படைத்தவர் சரீரம் சங்கமமான இடமல்லவா. தலைசாய சங்கடப்பட்டது. மீண்டும் பாரிய சத்தம். பொறுமையிழந்தேன் வெளியில் வந்தேன். வீட்டு வாசலில் நின்ற சிங்களச் சிப்பாய் தடுத்து நிறுத்தினான் என்னை. என் உணர்வுகளை அல்ல. வீட்டுக்குள் முடக்கப் பட்டேன். மீண்டும் 3, 4 தடவை பாரிய வெடிச் சத்தம். நீரோ மன்னன் பிடில் வாசித்து மகிழ்ந்ததில் தவறில்லை அத்தனை மகிழ்ச்சி யில் ஆர்ப்பரித்தார்கள். உயிருடன் அந்த வீர மறவர் இருந்த காலத்தில் ஸ்ரீலங்கா இராணு வத்திற்கும் சிம்ம சொப்பனமாக இருந்தவர் சின்னம் வீழ்ந்தது. அந்த நீண்ட நெடிய தூபி சரிந்தது. சிவன் - பார்வதி கோவிலின் பக்க மாக மட்டுமல்ல இந்தியாவையும் நோக்கி அதன் அநீதியைச் சுட்டிக் காட்டுவதாகவும் சரிந்தது. அந்த மகிழ்ச்சி அடங்க அதிக நேரம் எடுத்தது அவர்களுக்கு.

மதிலால் நான் பார்த்தபோது அந்தோ தூபியைக் காணவில்லை. என் ஆவேசமும் துடிப்பும் இன்றும் எழுத்தில் வடிக்க முடியா மல் வருந்துகிறேன். என்ன செய்வேன். போர் நெறி தவறிய, சர்வதேச மரபுகளை யுத்தத் தில் கடைப்பிடிக்கத் தெரியாதவர்கள் மகிழ்ந் தார்கள். ஆனால், எனக்குள்ளே ஒரு தீக் குளிப்பே நடந்து கொண்டிருந்தது. இனவாத அரசே இதற்கு ஒரு முடிவு காலம் நிச்சயம் வரும் என்று வாய்விட்டுத் திட்டினேன். வல்ல மையற்று வேறு ஒன்றும் செய்யமுடியாமல் தவிர்த்தேன்.

ஒரு சிப்பாய் எம் வீட்டை நோக்கி ஓடிவந்தார். என்னிடம் மண்வெட்டி அல்லது அலவாங்கு இருக்கிறதா என்று கேட்டான். ம்... அவருக்கு உதவி செய்யும் நிலையிலா இருந்தேன். இல்லை என்று கூறினேன். நான் கூறிய விதத்தில் என் மனநிலையைப் புரிந்து கொண்டானோ என்னவோ அவன் விட வில்லை. எமது வீட்டுக்குள் புகுந்து எப்படி யோ ஒரு மண்வெட்டிப் பிடியை எடுத்து வந் தான். என்ன செய்யப்போகிறான் என எண் ணினேன். இல்லை என்றதற்காக என்னைத் தாக்குவானோ என நினைத்த நான் இப்படி யே என்னை அடித்துக் கொன்றான் என்றால் எவ்வளவு உதவியாக இருக்கும். இனி நான் உயிருடன் இருக்க வேண்டுமா? மானங் கெட்ட தமிழனாக வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா. அதுவும் இந்த வல்வை மண்ணில்.

என்னே ஈனச்செயல் எழுச்சிச் சிலை யில் இருந்து வெடித்துச் சிதறிய ஒரு போராளி யின் சிமெந்தினாலான ஒரு முன் கைப் பகுதி யை அந்தப் பிடியால் அடித்து அடித்து அவை சிறு துண்டுகளாகப் போகும் வரை தன் வக்கிரகத்தைத் தீர்த்துக் கொண்டான். சிலுவையில் மரித்த கிறிஸ்துபிரானின் உயிரற்ற உடலை ஒரு யூதன் ஈட்டிகொண்டு துளைத்தானே அதுபோல் இருந்தது. நெஞ் சைப் பிளக்கும், குருதியை உறைய வைக் கும் அந்தச் செயல் உலகில் எந்த மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாலும் மன்னிக்க முடியாதது. சிலைக்கே இந்த நிலை என்றால் இவர் களிடம் போராளி கள் உயிருடன் அகப்பட்டால் - எண்ணிப் பார்க்கவே முடியாமல் தவித்தேன். அந்தப் பன்னிருவரும் "சயனைட்" அருந்திய ஒப்பற்ற அந்த நிலையை ஒரு முறை நினைத்தபோது என் ஓர விழிகள் அப்போது கண்ணீர் வடித் துக் காய்ந்திருந்தது.

வீரகாவியம் படைத்த வல்வை மண் ணிலே சரித்திரச் சின்னங்களாக அமைந்த குமரப்பா, புலேந்திரன் போன்ற பன்னிருவர் நினைவுத்தூபி, போராளிகளின் எழுச்சிச் சிலை, கேணல் கிட்டுவினதும் சக போராளி களினதும் நினைவுச் சின்னமான கப்பல்... அழிக்கப்பட்டு தீருவில் மைதானம் 05.10.2002 இல் கொண்டாடப்பட்டு அதில் வீரமுழக்க மிட்ட வடமராட்சி மீனவர் சமாச தலைவர் திரு. சூரியமூர்த்தி பேசிய வல்வை மண் மீண்டும் எழும் என்பதில் சந்தேகமில்லை. அது தூரத்திலுமில்லை என்றும் பொய்க்கப் போவதும் இல்லை.

மண்ணின் மகிமை அன்னபூரணி யுடன் சென்றுவிடவில்லை. ஆக்கிரமிப்புப் படைகளால் அழிக்கப்பட்டாலும் அது தன்ன கத்தே கொண்டுள்ள தனிச்சிறப்பை தரணி அறியும் நாள் வெகுதூரத்திலும் இல்லை. அதன் பெருமையை நாட்டின் தென்பகுதி யினர் உணர்ந்துதான் எம் தலைவர் வீட்டுக்கு அதனைப் பார்வையிடச் சென்றவர்கள் கூட ஒரு பிடி மண்ணும் எடுத்துச் செல்லு கின்றனர்.

எனவே வல்வை மண் மீண்டும் எழும். இதே தீருவில் மைதானத்தில் சரித் திரச் சின்னங்கள் உருவாகும். இதற்கு மானம் உள்ள தமிழன் உழைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்நாட்டிற்குப் பெருமை தேடித் தந்த நீச்சல்வீரன் நவரத்தினசாமி

வல்வெட்டித்துறைக்கு மட்டுமல்லாது முழு இலங்கைக்குமே பெருமை தேடித்தந்து தீரச் செயல் புரிந்த நீச்சல் வீரன் நவரத்தினசாமி அவர்களைப் பற்றி கட்டுரையாளர் ஆதிகோவிலடி ஜெயம் அவர்கள் வலம்புரி பத்திரிகையில் சாதனையின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு 26.03.2004ல் பிரசுரித்த ஆவணக் குறிப்பிலிருந்து........

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான பாக்கு நீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்து சாதனை படைத்த பெருமை யாழ்ப்பாணத்து முருகுப்பிள்ளை நவரத்தினசாமியையே சாரும்.

யாழ் குடாநாட்டின் தென்பாகத்து தொண்டைமானாறு மண் தந்த இந் நீச்சல் வீரனின் சாதனையும், புகழும் உலகறியும். எல்லோராலும் நன்கு மதிக்கப் பெற்ற சைவப் பெரியார் முருகுப்பிள்ளை தம்பதியருக்கு செல்வப் புதல்வனாய் 1909ஆம் ஆண்டு ஆவணிமாதம் 16ஆம் திகதி இப்பூமியில் ஜனனித்தார் இச்சாதனையாளன்.

## மாணவப் பருவம்

சீரும் சிறப்புமாய் வளர்ந்த இவர் ஆரம்பக் கல்வியைத் தொண்டமானாறிலும், மேற்படிப்பைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் மேற்கொண்டார். “வாழும் பிள்ளையை மண்விளையாட்டிலும், விளையும் பயிரை முளையிலும் தெரியும்” என்ற பழமொழிக்கு ஒப்ப கூரிய மதியும், வீரிய திறனும், நேரிய சிந் தையும் கொண்ட சீரிய மாணவனாய் இவர் மாணவப் பருவத்திலேயே சிறந்து விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் ஆர்வம் மிகக் கொண்ட இவர் முன்னெவராலும் கடந்திராத ஆங்கிலக்கால்வாயை வெள்ளைக்காரவீரன் ஒருவர் நீந்திக் கடந்த அதிசயச் செயலை ஆசான் வாயிலாகக் கேட்டறிந்ததிலிருந்தே, தானும் தம் பக்கத்திலிருக்கும் பாக்கு நீரிணையை என்றொரு நாளாவது நீந்திக் கடந்து சாதனை படைக்கவேண்டும் என்ற வைராக்கியமும், ஆர்வமும் கொண்டார். அத்துடன், தீராத முயற்சிகளையும், நீச்சல் பயிற்சிகளையும் நாளாந்தம் இவர் தொடர்ச்சியாக மேற்கொண்டார்.

"தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" என்னும் திருவள்ளுவர் வாக்கை தம் மனதில் பதிய வைத்து 44வயது நிரம்பப் பெற்றவராயிருந்தும், வீரமுறுக்கேறிய வாலிபனை போன்று காலையிலும், மாலையிலும் சளைக்காது கடலிலே காலத்தைக் கடத்திப் பயிற்சி செய்தார்.

## முதலாவது முயற்சி

தமிழ் அன்னையின் தவப்புதல்வன், ஈழநாட்டுச் சிங்கம், சாகரக்குமரன், நவயுக மாருதி நவரத்தினசாமி 31 1 /2 மையில் நீளமுள்ள பாக்குநீரிணையை நீந்திக் கடப்பதற்காக 1954ஆம் ஆண்டு பங்குனி மாதம் 16ஆம் திகதி முதன் முறையாக ஆழியில் குதிக்கலானார். இவர் வீர தீர செயலை, ஒப்பற்ற சாதனையைப் பார்ப்பதற்கும், வீர மகனை ஆசீர்வதித்து வழியனுப்புவதற்கும் நாற்திக்கில் இருந்தும் மக்கள் கும்பல் கும்பலாக வல்வெட்டித்துறை துறைமுகத்தில் வந்து குவியலானார்கள். தாயுள்ளம் படைத்த தமிழ் மக்கள் தங்களின் வீர மகன் வெற்றி விருதுடன் வீடு திரும்ப வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்தனர்.

இவ்வீரமகன் தமது 3 புத்திரர்களையும் மார்புறத் தழுவி முத்தமிட்டு பிரியா விடை கூற மக்களும் முதியோரும் ஆசியியம்ப அன்றைய இலங்கைப் பிரதமரின் பிரதிநிதியாகச் சமூகம் கொடுத்திருந்த கௌரவ வி.நல்லையா எம்.பி வழியனுப்பி வைக்க பிற்பகல் 2.30 மணிக்கு நவயுக மாருதி நவரட்ணசாமி தமது வீரப்பாதம் ஆழியில் தோய்த்து நீச்சலை ஆரம்பிக்கலானார்.

## இயற்கையின் சீற்றம்

நீச்சலை ஆரம்பித்த நேரம் இருந்து எவ்வித களைப்பும் சோர்வும் இன்றி சாகரத்தை ஊடறுத்து நவயுகமாருதி நீந்தினார். நீந்திக் கொண்டே போனார். ஆனால் குறிக்கப்பட்ட இலக்கை அதாவது கோடிக் கரையை அடைவதற்கு இன்னும் 7மைல் தூரமே இருந்த நிலையில் இயற்கை கொடுத்த பெரும் போரினாலும், எதிர்ப்பினாலும் தமது நீச்சலை இடை நிறுத்திக் கட்டுமரம் ஏறலானார்.

ஆயினும் ஆழியில் பாதம் இட்டு நீச்சலை ஆரம்பித்த நேரம் தொடக்கம் நீச்சலைக் கைவிட்ட நேரம் வரைக்கும் 23 1/2 மணித்தியாலம் அலைகடலில் மிதந்து நீரோட்டம் அள்ளிக் கொண்டு போன தூரம் வரைக்கும் உண்மைக் கணக்கின்படி 35 மைல் வரை நீந்திக் கடந்துள்ளார். எனவே முதல் தடவையிலேயே ஆகக் கூடிய நேரம் கடலில் நீந்தி முன் இருந்த உலக சாதனையை உடைத்தெறிந்த வீரரென இவரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுதல் உண்மையிலேயே பொருத்த மானதாகும்.

## சாதனை

பாக்குநீரிணையைக் கடந்தே தீரு வேன் எனத் தான் கூறிய வாக்கை நிறை வேற்ற வேண்டும் என்றும் "முன்வைத்த காலை பின் வைக்கமாட்டான் தமிழன் என்ற நற்பேரை நிலைநாட்ட வேண்டும் என்றும் தணியாத ஆசை கொண்டு 1954ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25ஆம் திகதி வியாழக் கிழமை பி.ப 4.10 மணிக்கு மீண்டும் கடலில் குதிக்கலானார்.

இலங்கை மாதா தன் மைந்தனின் நீச்சலை இமை கொட்டாது பார்த்துக் கொண் டிருந்தாள். தமிழ்த் தாய் வெள்ளைக் கமலத் தில் வீற்றிருந்து உள்ளம் மகிழ்ந்தாள். பாரதமாதா தனது உடன்பிறந்த தங்கை மகனை வரவேற்க புன்னகை பூத்த முகத் துடனும் புதுமலருடன் கோடிக் கரையை அண்டி வந்தாள்.

நீச்சலை ஆரம்பித்த நேரத்தில் இருந்து சொற்ப நேரமும் இளைப்பாறாது தொடர்ந்து நீந்திச் சென்று, தாய் நாடும் தமிழ கமும், ஏன் ஆசியா கண்டமுமே ஆனந்தத் தால் கரைபுரண்டோட உலகமே கேட்டிராத ஒப்பற்ற சாதனையை வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ் மகன் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி நிறைவேற்றி கோடிக்கரையேறி கொடியேற்றி வைத்தார்.

## வரவேற்பும், வாழ்த்தும்

இவ் வீரசிகாமணி பாக்குநீரிணை யைத் தாண்டிக் கோடிக்கரையேறி வீரக் கொடி நாட்டிய செய்தி இலங்கை வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது. இலங்கை மற்றும் இந்திய மக்களும் குறிப்பாக யாழ்ப்பாண மக்களும் ஆழ்கடலின்றி ஆனந்தக் கடலில் நீந்தலானார்கள். இலங்கை - இந்தியப் பத்திரிகைகள் யாவும் பெரிய எழுத்துக்களால் தலையங்கம் இட்டு இவ்வீரசிகாமணியின் வீரப் பிரதாபத்தை அகில உலகமும் விளங்க வைத்தன. இலங்கை பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலை முதலான பிரமுகர்களிடம் இருந்து வாழ்த்தோலைகள் இவருக்குக் கிடைக்கப் பெற்றன.

நம் வீரருக்கு வரவேற்பளிக்கும் முத லாவது பாக்கியம் இந்தியாவுக்கே கிடைத் தது. இவ்வரவேற்பில் பங்குபற்றிய பின்பு வாகை சூட்டிய நவரத்தினசாமி தம் தாயக மண்ணிற்கு வருகையில் இவ்வீரரை வரவேற்க வல்வெட்டித்துறை துறைமுகத்தில் சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் குழுமி யிருந்ததுடன் பல பிரமுகர்களால் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார்.

அத்துடன், யாழ்ப்பாண நகர மேய ரால் தங்கப்பதக்கம் மற்றும் சங்கிலியும் பிரதமர் கொத்தலாவலையால் ஓர் வெள்ளிக் கேடயமும் இவருக்குப் பரிசளிக்கப்பட்டது. ஈற்றில் இவ் வீரனை இலங்கை அரசாங்கம், மாட்சிமை தங்கிய மகாராணியாருக்கும் கோமகனுக்கும் அறிமுகம் செய்து பெரு மைப்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இத் திருமுகதரிசனம் தமிழ் வீரனுக்குக் கிடைத்தமை. தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் பாக்கியமும் கௌரவமும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

01. யாழ்ப்பாணச்சரித்திரம் (ஆங்கிலேயர் காலம்) - முதலியார் செ. இராமநாயகம் - 1934
02. யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு - கலாநிதி சி. க. சிற்றம்பலம் - 1993
03. யாழ்ப்பாண இராச்சியம் - கலாநிதி சி. க. சிற்றம்பலம்
04. யாழ்ப்பாண வைபவ கௌமுதி - க. வேலுப்பிள்ளை - 1918
05. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - தமிழரசர் உகம் - சுவாமி ஞானப்பிரகாசர் - 1928
06. யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை - 1915
07. யாழ்ப்பாணச் சரித்திரம் - செ. இராசநாயகம்
08. யாழ்ப்பாண அரசர் பரம்பரை - கலாநிதி க. குணராசா - 2000
09. நல்லை நகர் நூல் - கலாநிதி க. குணராசா - 1987
10. தமிழர் வரலாறும் இலங்கையின் இடப்பெயர்ஆய்வும் - கதிர் தணிகாசலம் - 1992
11. இலங்கை இடப்பெயர்வு ஆய்வு - கலாநிதி இ. பாலசுந்தரம் - 1988
12. யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும் - பொ. ஜெகன்நாதன் - 1987
13. சிவநெறி - சித்திரை - ஆனி 1993
14. வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் - ந. நகுலசிகாமணி - 1997
15. ஊரின்னிசை - வல்வெட்டித்துறை - பூ.க. முத்துக்குமாரசாமி செ. வயித்திலிங்கபிள்ளை - 1982
16. வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள் - ஈ.கே. ராஜ கோபால் - 1991
17. ஆழக்கடல் வென்றவர்கள் - ஆதிகோவிலடி ஜெயம் - 1995
18. வையா பாடல் - வையாபுரி ஐயர் - 1980
19. தண்டிகைக் கனகராயன் பள்ளு - மாவை சின்னக்குட்டிப் புலவர் - 1932
20. சீர்பாத குல வரலாறு - அருள் செல்வநாயகம் - 1982
21. வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் - எஸ். சிவலிங்கராசா - 1984
22. இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும் - மு. இளையதம்பி - 1967
23. வட இலங்கையில் சிங்கை நகர் - ப. புஸ்பரத்தினம் - 1993
24. அரும்பொருள் விளக்க நிகண்டு - அருமருந்தைய தேசிகர் - 1931
25. தமிழ்ப் புலவர் சரித்திரம் - அ. குமாரசாமிப்புலவர் - 1917
26. ஆழிக்குமரன் ஆனந்தன் - E.K. ராஜகோபால் - 1993
27. வல்வை வாலாம்பிகாசமேத வைத்தீஸ்வரப் பெருமான் கோயில் குடமுழுக்கு விழா மலர் - 1967, 2004
28. யாழ்ப்பாணத்தார் கதிர்வேலாயுத சுவாமி கோயில் கும்பாபிஷேக மலர் - 1966
29. வல்வை முத்துமாரி அம்மன் கோயில் சித்திரத்தேர் சிறப்புமலர் - 1979
30. முத்துமாரி அம்மன் கோயில் சரித்திரம் - வே. வ. சிவப்பிரகாசம் உபாத்தியாயர் - 1963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. முத்துமாரி அம்மன் கோயில் சரித்திரமும், ஊஞ்சல் பாடல்களும் - ச. சுந்தரமூர்த்தி
32. ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் சரித்திரம் - வ.வ இராமசாமிப்பிள்ளை - 1984
33. அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருளாட்சி - கவிஞர். ஆ. கதிர்காமத்தம்பி - 2002
34. ச. வயித்திலிங்கம்பிள்ளை - பேராசிரியர் கா. சிவத்தம்பி - 1975
35. சிதம்பரக்கல்லூரி நூற்றாண்டு மலர் - 2000
36. சிவகுரு வித்தியாசாலை வைரவ விழா மலர் - 1974
37. Ancient Jaffna - C. Rasanayagam - 1926
38. Mahawamse - Whilham Geiger - 1950
39. Re - opening of North Ceylon ports - K.Muthukumarasamy - 1951
40. With Ghandiji in Ceylon - Mahadev Desai - 1928
41. Early Settlements in Jaffna - P. Ragupathy
42. நாளேடுகள்:

அ. வீரகேசரி - 07.04.1951, 06.01.1951, 12.01.1955, 09.04.1951, 06.01.1951, 19.01.1951, 09.01.1951, 03.06.1951, 06.08.1950, 30.07.1950

ஆ. சஞ்சீவி - 04.10.1986, 01.11.1986, 04.04.1987

இ. தினகரன் - 03.09.1975

ஈ. சைவாபிமானி - 08.09.1884, 05.06.1884

உ. இந்துசாதனம் - 30.01.1951

ஊ. செந்தமிழ் - 1953 மார்கழி

எ. Times of Ceylon - 10.01.1955, 31.01.1950, 10.04.1951

ஏ. Observer - 09.04.1951

ஐ. Island - 18.12.1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னுரை

வரலாற்றில் வல்வெட்டித்துறை என்னும் இச் சிறுநூலில் தேடுதலுக்கு எட்டப்பட்ட விபரங்கள் யாவும் ஆசிரியரினால் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. எமக்கு தெரியவராத விபரங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கக்கூடும். இதைவிட வல்வெட்டித்துறை பற்றியும், வல்வெட்டித்துறையில் வாழ்ந்த முக்கியமான பிரமுகர்கள் பற்றியும், எமது ஊரவர்கள் குறிப்பிட்டனவற்றை விட ஏனைய பிற ஊர்களில் வாழ்ந்த அறிஞர்கள் கூறியனவற்றை வெளிக்கொணரவேண்டுமென்பது எமது அபிலாசைகளில் ஒன்றாகும். இந்த வகையில் நீர்வேலியைச் சேர்ந்த ச. சிவப்பிரகாச பண்டிதர் அவர்களின் “கலிவெண்பா” உடுப்பிட்டி அ.சிவசம்புப்புலவர் அவர்களின் (1829-1910) வல்வைக் கலித்துறை வல்வைக் கந்தசாமிப் பிள்ளை பிரபாவப்பாமாலைவல்வைச் சிவன் கோயில் ஸ்தாபகர் திரு.வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் மீது பாடிக் கொடுத்த சரமகவி ஆகியன பெற்றுக் கொள்ளப்பட்டு அவற்றிற்கான உரைகள் வகுக்கப்பட்டு நூல்வடிலில் கொண்டுவருவதற்கு எம்மால் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர வல்வெட்டிதுறையின் கலை கலாச்சாரம் பண்பாடு என்பவற்றைப் பிரதிபலிக்கக் கூடிய பொருட்கள் புகைப்படங்கள் போன்றனவற்றையும் வரலாற்றுடன் தொடர்புடைய ஆவணங்களையும் திரட்டுவதில் வல்வெட்டித்துறை அரும்பொருள் காப்பகத் தாராகிய நாம் ஈடுபட்டுள்ளோம்.இவற்றை கீழ்க்காணும் முகவரியிலுள்ளோருடன் தொடர்பு கொண்டு அனுப்பிவைப்பின் நன்றியுடையவர்களாக இருப்போம்.

(1) திரு.ந.சிவரத்தினம் முருகையன் கோவிலடி, வல்வெட்டித்துறை.
(2) திரு.பா.மீனாட்சிசுந்தரம் சிவன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

நன்றி

**அரும்பொருள் காப்பகம்**
**வல்வெட்டித்துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவன் கோயில் வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்லை முத்துமாரி அம்மன் கோவிலின் ஆரம்பகாலத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்லை முத்துமாரி அம்மன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்திரவிழாவன்று முத்துமாரியம்மன் வீதியுலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோவில் பூங்காவன உற்சவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவன் கோவில் 7ம் நாள் உற்சவத்தின் போது....




திருக்கல்யாணக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வல்வை முத்துமாரி அம்மன் தீர்த்தோற்சவத்தின் போது தெருவீதிகளில் காட்சியளிக்கும் கட்டவுட்டுக்களில் ஒன்றும், மின்குமிழ்களாலான அம்மனின் தோற்றமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் தேவஸ்தான மோர் மடத்தின் அழகிய தோற்றம்




அம்மன் கோவிலடியில் காட்சியளிக்கும் மற்றொரு மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தீர்த்தமாடச் செல்லும் அம்மனை நெடியகாட்டில் வரவேற்று
வானில் பறக்கவிடப்படும் பிரமாண்டமான புகைக்குண்டு



ஊறணியில் அமைந்துள்ள இயற்கையான ஊற்றுக் கேணியின்
இன்றைய தோற்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தொன்மையை எடுத்தியம்பும் வல்வெட்டித்துறை வீட்டுவாசல்களின் அழகிய தோற்றங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வையில் கடைசியாகக் கட்டப்பட்ட பர்வதபத்தினி என்னும் கப்பல் பொருட்களை ஏற்றிக் கொண்டு
வல்வை நோக்கி வந்து கொண்டிருக்கையில்



வல்வை ச. பாலசுப்பிரமணியம் மேஸ்திரியாரால் கட்டப்பட்டு வல்வை சி. குமாரசாமி வசமிருந்த
பர்வதபத்தினி என்னும் பாய்க்கப்பல் (கட்டப்பட்ட வருடம் 1943) 2700 மூடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்கா சென்ற அன்னபூரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்பல் அமெரிக்க கரையொன்றில் நங்கூரமிடப்பட்டு இருந்தவேளை இரவுபகல் என்று பாராது அமெரிக்கர்கள் கப்பலை பார்வையிட அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு பார்வையிட்டுக் கொண்டிருக்கையில் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் எம்மவரில் ஒருவரை அவரது அனுமதியின்றி தத்துருபமாக ஆங்கிலேயர் ஒருவர் தமது புகைப்படக்கருவிக்குள் அடக்கிக் கொண்டார். பின்னாளில் அதனை அந்த ஆங்கிலேயர் தமது மன்னிப்பு கோரலுடனான கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்ட புகைப்படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வை மண்மீண்டும் எழும் கட்டுரையில் இடம்பெறும் சிறிலங்கா அரச இயந்திரங்களால் துவம்சம் செய்யப்பட்ட குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 11 மாவீரர்களின் நினைவாய் எழுந்த மாவீரர் எழுச்சிச் சிலை



வல்வை மண்ணில் மீண்டும் எழும் தீருவில் நினைவுத்தூபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓவியர் ரமணி வடிவமைப்பில் கம்பீரமாகத் தீருவிலில் காணப்படும்
எழுச்சிச்சிலையின் தோற்றம்



வல்வை மண்மீண்டும் எழும் கட்டுரையில் இடம்பெறும் சிறிலங்கா அரச
இயந்திரங்களால் துவம்சம் செய்யப்பட்ட எழுச்சிச் சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமெரிக்காவிற்கு மைலாய் இந்தியாவிற்கு வல்வை என்ற கட்டுரையில் 3 தினங்களாகக் கிடந்து அழுகிய சடலம் கிடந்த இடமும் எரியூட்டப்படும் காட்சியும் (கட்டுரையாளரே சடலத்தை எரியூட்டி புகைப்படம் எடுத்தமையும் குறிப்பிடத்தக்கது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வல்வெட்டித்துறையில் துறைமுகத்தில் தனது சாதனையை ஆரம்பிக்கும் போது சூரிய நமஸ்காரம் செய்து தனது புதல்வர்களிடமிருந்து விடைபெறும் காட்சி



திரு. நவரத்தினசாமி அவர்கள் இந்தியக் கரையை அடைந்து எழுந்து நடந்த போது




நவரத்தினசாமியின் புதல்வர்களில் ஒருவரான பாலச்சந்திரன் தனது கைகளையும் கால்களையும் இறுகப்பிணைத்தவாறு ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடைப்பட்ட கடற்பரப்பை நீந்திக்கடந்து சாதனை புரிந்தார். அவர் தனது நண்பர்களால் வழியனுப்பப்பட்ட காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOSTON GLOBE AUGUST 2, 1938

# Reviving the Old Days at Gloucester



BRIGANTINE FLORENCE C. ROBINSON
After she ended two-year voyage from Ceylon. The trip from Crete took 23 days.

## Brigantine—

Continued from the First Page

arrival in its day, turned out, skippers, dorymen, tourists, for a sight that had not been seen in a hundred years, if then. Coast Guard lookouts flashed the word to town even as the vessel stood in the offing, her Hindus climbing the yards with a bare-footed agility that left the old-timers gasping in admiration.

### Roots Greet Arrival

As she worked past Ten-Pound Island and stood up for the inner harbor, a score of boats raced out in greeting. From his home at Ipswich, her owner, William Albert Robinson, famed author, explorer and sea rover, hurried down with his wife, the former Florence Crane. A steady slant on the quarter had sent the brigantine scudding up from Bermuda nearly a week ahead of the expected time.

She has been two years reaching here from Ceylon, where she was built eight years ago on the lines of a British brig of war of the 1840 period. Robinson himself took her leisurely through the Indian Ocean and the Red Sea as far as Crete.

Six Ceylonese, from the seafaring town of Valvettiturai, in Northern Ceylon, came out with her and only one has returned home.

In March, Capt. Donald A. McCuish of 5 Lookout st., one of Gloucester's saltiest and best-known skippers, went over to Crete to bring her across the Atlantic.

### Bad Storm Near Crete

"I've had 42 years at sea, man and boy, but that storm we hit in the [illegible] honest workmanship and good hardwood, or we'd not be here to tell the tale. There we were, running under bare poles, with the seas breaking Canda (in Crete) was one of the worst I've ever pulled through," Capt. Dan said today as he took his leisure on the poop deck, amid a salvo of greetings from shore and harbor.

"She's a tidy little vessel, built of



WILLIAM A. ROBINSON
Brigantine's owner

while over the bow and the day inky black like night.

"We were driven 250 miles off our course."

With him at that time were the six Ceylonese—"and a fine lot of men, too, if you treated them right and respected their religious be-

They could see the towering masts and even the sides of the big liner and there was little they could do in the absence of wind.

She cleared the brigantines by yards and went her way without a sign of recognition.

### Dosler Glad to Be Back

Dosler was the first ashore today as the headlines caught on the bollards.

"What a glorious feeling, what a sensation, to get my feet on American soil again," he exclaimed. "I've been all over Europe, and in Asia and the Near East, and this is the best thing I've seen in two years—a bit of the United States."

The Ceylonese, first of their race to touch Gloucester in many years, glanced casually at the shore. They were more interested in making the brigantine ship-shape—and in seeing their old friend and skipper, Robinson.

When he appeared, they greeted him with the exultant excitement of children, shouting greetings long before he was aboard. Robinson took them ashore to see a lobster pound and they stared in fascination. But they were eager to get back aboard their vessel.

Robinson said the brigantine will "stay for a while" here, while she is being repainted and overhauled. He was not certain just when he will make a cruise in her, he said.

Contd on 3rd Column on previous page.

அன்னபூரணி அமெரிக்காவை அடைந்ததும் அதுபற்றி அமெரிக்கப் பத்திரிகையான The Boston Globe பத்திரிகையில் August 2.1938 ஆம் ஆண்டு பிரசுரமான மூலப்பிரதி இங்கு Scan பண்ணி பிரசுரிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VOYAGE ENDED BY BRIGANTINE

## Rare Spectacle Provided by Arrival From Ceylon

By NAT A. BARROWS

GLOUCESTER, Aug. 1—Like a chapter straight from one of the Malay sea stories of Joseph Conrad, a picturesque crew of square-rigger sailors came reaching into port before a quartering breeze today aboard the 89-foot brigantine Florence C. Robinson—last windship of her kind, in all probability, that will ever cross the Western Ocean under canvas alone.

Bringing a tale of storms, doldrums, thirst, short rations and near collision, the trim little brigantine's company of seven—a grizzled old Gloucesterman, five turbaned, beskirted Ceylonese Hindus and a youthful, bearded American adventurer—tied up alongside a waterfront dock at noon, 50 days out of Gibraltar via Bermuda.

This famous old fishing port, which has seen many a colorful

Brigantine

Continued on Page 20

i.e. 1st Column on next page.



ALEX DOSTER JR.
Worked his way home

rope and the Near East for two years. At the instigation of the American Consul, Capt. Dan signed young Doster on as a workaway.

### *Becalmed at Gibraltar*

Doster told of the difficulty in getting away from Gibraltar.

"We couldn't get a spot of wind," he related, "and there we were, becalmed. The vessel's 'kicker' was out of order and we had to depend entirely on our sails.

"The skipper of a big American freighter agreed to give us a tow, but when some of the seamen saw our crew and saw we were flying the Stars and Stripes they shouted down vile remarks about a union crew. We got the tow, all right, but we had not cleared the harbor when the hawser broke suddenly—close to the freighter's after deck. It my opinion that this hawser w. cut.

"We were four days drifting about the harbor before we could get a slant of wind to carry us out."

Out in the Atlantic, Capt. Dan tried to stay with the trade winds and, for a while, made a good passage, although the brigantine never reached the 18-knot speed Robinson found one day in the Red Sea when he was coming out from Ceylon.

The wind failed them in mid-ocean and for days on end they idled about.

### *Coleridge Paraphrased*

"We were a painted brigantine on a painted ocean," said one of the Ceylonese, Sobaratnam, who with two others in the native crew speaks English fluently.

The water became too rusty for drinking. The food became low.

Capt. Dan headed for Bermuda, carrying every inch of sail to catch the whispers of wind. After 41 days, the Florence C. Robinson—which the owner named for his wife, and sailing companion—reached Hamilton, amid a reception that Capt. Dan will never forget.

They got underway for Gloucester nine days ago and picked up a wind that did much to make up for the black days in the doldrums. Making up for Nantucket Light, with a soupy fog clinging low, the brigantine had a narrow escape from being cut down by a transatlantic liner.

Capt. Dan blew stentorian blasts on his mouth foghorn and the crew, in the yards, shouted vigorously.

Contd from 3rd Column on next page.

### *Old Salts Amazed*

Until the vessel hauled out int the stream, a steady line of ol Gloucester salts stood in wonder gazing at the lines and exclaimin at her ironwood planking—teak and a native Ceylonese wood known a Margosa.

"She is built to last 100 years, if not longer," said Robinson, with a touch of pride.

When he bought her two years ago, she was named "Amapoor-anyamal," after a Hindu temple in Benares. This name is still indented on her side. She was originally schooner-rigged, but Robinson, whose epic trip alone around the world in the Ketch Svaap stamps him as an authority, had her changed over to the brigantine—along the lines of the old British brigs of war.


Doster, heavily bearded and bronzed by many Suns, hastened to Boston for a meeting with his parents.

His luggage bore legends that revealed he had been recently in Spain, in the Franco territory. But he dismissed that phase of his adventures.

"I'm back in the states now, and there is nothing like it—nothing can mean more to an American."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அனுபந்தம் I




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அனுபந்தம் II




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை




| | | | |
|---|---|---|---|
| ▲1 – புட்டணிப்பிள்ளையார் கோயில் | ▲11 – தில்லையன் மடத்து வைரவர் கோயில் | S 5 – அ.மி. தமிழ் கலவன் பாடசாலை | ■3 – ப.நோ. கூ. சங்கம் கிளை இல. 16 |
| ▲2 – வைத்தீஸ்வர சுவாமி கோயில் | ▲12 – திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயில் | C 1 – ஆதிசக்தி படிப்பகம் | ■4 – ப.நோ. கூ. சங்கம் கிளை இல. 7 |
| ▲3 – முத்துமாரி அம்மன் கோயில் | ▲13 – உலகுடைய பிள்ளையார் கோயில் | C 2 – விக்னேஸ்வரா சனசமூக நிலையம் | |
| ▲4 – சுந்தரப்பெருமான் கோயில் | ▲14 – சடையாண்டி வைரவர் கோயில் | C 3 – வாணி படிப்பகம் | † – புனித செபஸ்தியார் தேவாலயம் |
| ▲5 – ஆதி வைரவர் கோயில் | ▲15 – வைகுண்டப் பிள்ளையார் கோயில் | C 4 – நேதாஜி சனசமூக நிலையம் | ⊕ – மாவட்ட வைத்தியசாலை |
| ▲6 – இராக்கிச்சி அம்மன் கோயில் | ▲16 – தீருவில் முருகன் கோயில் | C 5 – கணபதி படிப்பகம் | ●1 – அஞ்சல் அலுவலகம் |
| ▲7 – கப்பலுடையவர் கோயில் | S1 – சிதம்பரக் கல்லூரி | C 6 – ஹெயின்போஸ் சனசமூக நிலையம் | ●2 – இராணுவ முகாம் |
| ▲8 – மீனாட்சி அம்மன் கோயில் | S2 – சிவகுரு வித்தியாசாலை | C 7 – வல்வை சனசமூக சேவா நிலையம் | ●3 – நவீன சந்தையும் நகரசபை அலுவலகமும் |
| ▲9 – நறுவிலடிப் பிள்ளையார் கோயில் | S3 – றோ. க. தமிழ் கலவன் பாடசாலை | ■1 – ப.நோ. கூ. சங்கம் கிளை இல. 22 | ●4 – காவல் நிலையம் |
| ▲10 – கொத்தியால் வைரவர் கோயில் | S 4 – மகளிர் மகா வித்தியாலயம் | ■2 – ப.நோ. கூ. சங்கம் கிளை இல. 13 | ●5 – மீன் சந்தை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர்கள் பற்றி.....



வல்வை பா. மீனாட்சி சுந்தரம் கப்பல் கட்டுமானத்தில் புகழ்பெற்ற வேலாயுதர் வழித்தோன்றல். புகழ்மிகு சிதம்பராக் கல்லூரியில் ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் பயின்று உயர்கல்வியை கட்டுப்பெத்தை செயன்முறைத் தொழில் நுட்ப நிறுவனத்தில் மூன்று வருட காலக் கட்டுமான டிப்ளோமாக் கல்வியைப் பயின்றார். இக்காலத்தில் சுகாதாரத் திணைக்களகத்தில் எழுதுவினைஞராக இணைந்து, கணக்காய்வு அதிகாரியாக உயர்வு பெற்று இறுதியில் வவுனியா சுகாதாரத் திணைக்களகத்தில் பிரதம இலிகிதராய் கடமை புரிந்து ஓய்வு பெற்றார்.

இளமைக் காலத்திலிருந்தே வாசிப்பதில் ஆர்வமும், முக்கியமானவற்றை ஆவணப்படுத்துவதிலும் ஆர்வம் கொண்ட இவர் விடுதலைப் போராட்டம் முனைப்புற்றிருந்த காலகட்டத்தில் தேசியத் தலைவரிற்குப் பலம் சேர்த்த வல்வை மண்,திட்டமிட்டு அரச இயந்திரங்களாலும், அன்னிய சக்திகளாலும் சிதைத்துச் சின்னாபின்னமாக்கப்பட்ட வேளை இம்மண்ணின் பொருளாதார , சமூக , சமய , கல்வி , அரசியல் இடர்பாடுகளுக்கு மத்தியில் ஆவணப்படுத்தி இன்று இந்நூலாகப் பிரசவித்திருக்கிறார்.

வல்வெட்டித்துறையின் சமூக நிறுவனங்கள் பலவற்றின் செயற்பாடுகளுடன் தன்னைத் தீவிரமாக இணைத்துக் கொண்ட இவர் வல்வை சிதம்பராப் பழைய மாணவர் சங்கம், வல்வை முத்துமாரி அம்மன் பரிபாலனசபை, வல்வை வைத்தியசாலை அபிவிருத்திச்சபை என்பனவற்றின் செயலாளராய் இருந்து அரும்பணி புரிந்தவர். இவரது முயற்சிகள் இம்மண்ணில் தொடர வாழ்த்துகின்றேன்.

**ஆ. சிவசுவாமி**
**மேலதிக அரச அதிபர்**
**யாழ்ப்பாணம்.**



ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராஜா சிவரத்தினத்தின் கட்டுரைகள் இந்நூலில் பின்னிணைப்பாக இடம்பெறுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை சமகால நிகழ்வுகளின் தரிசனமாக அமைந்துள்ளன. வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும், தொண்டைமானாறு மகாவித்தியாலயம், வல்வை சிதம்பரக்கல்லூரி ஆகியவற்றில் இடைநிலைக் கல்வியையும் பயின்று தனது இருபதாவது வயதில் இலங்கை வங்கியில் எழுதுவினைஞராக இணைந்து மிகக் குறுகிய காலத்தில் படிப்படியாக பதவி உயர்வுகள் பெற்று இன்று இலங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளராகக் கடமை புரிகிறார்.

இலங்கை வங்கியாளர் நிறுவகத்தால் நடாத்தப்படும் வங்கியியல் டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்து AIB பட்டத்தைப் பெற்ற இவர் வங்கியியலில் தொடர்ந்தும் மேற்கொண்ட தேடல்களினால் FIB எனும் கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரிக் கலைமாணிப் (B.A) பட்டதாரியான இவர் அங்கு பொது நிர்வாகத் துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார்.

வல்வெட்டித்துறையின் பாரம்பரிய நிகழ்வுகளையும் சமகால நிகழ்வுகளையும் ஆவணப்படுத்துவதில் மிக ஆர்வம் கொண்ட இவரது முதலாவது ஆவண நூல் "ஆழக்கடல் வென்றவர்கள்" என்ற அன்னபூரணி பற்றியதாகும்.

தனது தொழில் வளர்ச்சியில் வேகமாக முன்னேற்றமடைந்தது மாத்திரமல்லாது சமூகப் பணியிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருவதையிட்டு நாம் பெருமைப்படத்தக்கதாக இருக்கிறது.

**ச.செல்வேந்திரா** B.Sc, F.C.A,
Charterd Accountant.
**முன்னாள் வல்வைப் பிரஜைகள்**
**குழுத்தலைவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Smart Printers, 717, K.K.S Road, Jaffna. T.P: 0214590876